

# விளைநிலம்

## கலாசார விழா சிறப்பு மலர்

2011 / 2012

கலாசார பேரவை - பிரதேச செயலகம், திருக்கோவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைநிலம்

## சிறப்பு மலர் 2011 / 2012

கலாசார பேரவை
பிரதேச செயலகம் – திருக்கோவில்

- 2012 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைநிலம்

## கலாசார விழா

## சிறப்பு மலர் - 2011 / 2012

### மலர்க் குழு:

01. திரு. V. நவீரதன்
02. செல்வி. தி. ராதிகா
03. திரு. S. செல்லத்துரை
04. திரு. M. கந்தப்பன்
05. திருமதி. யோகா யோகேந்திரன்
06. திரு. V. ஜயந்தன்
07. திரு. கண. இராஜரெத்தினம்
08. திருமதி. ஜெகதீஸ்வரி நாதன்
09. திரு. A. சசீந்திரன்
10. திரு. T. பிரபு
11. திரு. C.V.P. மாணிக்கம்
12. திரு. கா. வீரக்குட்டி

வெளியீடு:
கலாசார பேரவை
பிரதேச செயலகம், திருக்கோவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்:

| | | |
|---|---|---|
| பெயர் | : | **விளை நிலம்** |
| வெளியீடு | : | **கலாசார பேரவை** |
| முகவரி | : | **பிரதேச செயலகம், திருக்கோவில்.** |
| அட்டைப்படம் | : | **திரு.பொ.கமலேஸ்வரன்** |
| முதற்பதிவு | : | **2012** |
| பக்கங்கள் | : | **222 + 35** |
| அச்சுப்பதிப்பு | : | **கோல்டன் அச்சகம் – கல்முனை. 067-2223939** |

## Book Detail

| | | |
|---|---|---|
| Title | : | **VILAINILAM** |
| Publication | : | **Cultural Association** |
| Address | : | **Divisional Secretariat, Thirukovil** |

| | | |
|---|---|---|
| *First Edition* | : | **2012** |
| *Pages* | : | **222 + 35** |
| *Printer* | : | **Golden Offset Printers, Kalmunai.** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR DIVISIONAL SECRETARY - THIRUKKOVIL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கௌரவ இராமகிருஷ்ணமிஷன் சுவாமி அவர்களின்



# ஆசிச் செய்தி

ஈழத் திருநாட்டில், பாடும் மீன்களின் நாடு என்று அழைக்கப்படும் மட்டக்களப்புத் தமிழகத்தின் தென்பால் அமைந்துள்ள திருக்கோவில் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளும், சுவடுகளும் பதித்துள்ள முதிர்ந்த பிரதேசமாகும்.

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினால், இவ்வருடம் நடைபெறும் கலாசார விழாவும், அதனையொட்டி, முதல் தடவையாக **"விளைநிலம்"** எனும் சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறுவது பாராட்டுதலுக்குரியதாகும்.

ஒரு சமுதாயத்தின் பெருமையை எடுத்துக்கூறும் முக்கிய அடையாளங்களாக விளங்குவது அச்சமுதாயத்தின் கலாசார விழுமியங்களாகும். சமயம், அரசியல், கலைகள், புராண, இதிகாசங்கள், இலக்கியங்கள், ஆசாரங்கள், மற்றும் வாழ்க்கை நடைமுறைகள் ஆகியனவும் ஒரு சமுதாயத்தின் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் ஊடகங்களாகும்.

நமது இனத்தின் கலை, மற்றும் கலாசாரம் போன்றவை உறுதியான ஆன்மீக விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டவை. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்கள் மனித வாழ்வின் உயர் விழுமியங்களாகப் போற்றப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களும், கலைகளும் இதற்குச் சான்று பகர்கின்றன.

அந்த வகையில் திருக்கோவில் பிரதேசத்தில் ஆங்காங்கே இலைமறைகாயாக இருக்கும் கலைகளையும், கலாசார விழுமியங்களையும் ஆவணப்படுத்தும் நோக்கோடும், கலைஞர்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் கௌரவிக்கும் நோக்கம் கொண்டும் வெளியிடப்படும் இச்சிறப்பு மலர் ஆண்டுதோறும் தவறாமல் வெளிவரவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

திருக்கோவில் பிரதேச கலாசார பேரவையும் பிரதேச செயலாளர் திரு.Dr.M.கோபாலரெத்தினமும் இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்வதன் மூலம் அப்பகுதித் தமிழர்களின் கலாசார விழுமியங்கள் புதிய உத்வேகம் பெறும் என்பதில் ஐயமில்லை.

மேற்படிப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார விழாவும், சிறப்பு மலர் வெளியீடும் வெற்றிகரமாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இந்நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும் இறைவன் மேலும் அர்ப்பணிப்போடு கூடிய ஆர்வத்தை வழங்க வேண்டுமென பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரார்த்திக்கின்றேன்.

*இறைபணியில்,*
**சுவாமி கபாலீசானந்தர்**
Swami-in-Charge
Ramakrishna Mission
Ramakrishnapuram, Batticaloa, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ சுவாமி நித்தியானந்தா அவர்களின்



# ஆசிச் செய்தி

ஓம் ஸ்ரீ சரவணபவாய நம:

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினால் இவ்வருடம் கலாசார விழாவும், அதனையொட்டி முதல் தடவையாக **"விளைநிலம்"** என்னும் சிறப்பு மலரும் வெளியாவது பாராட்டிற்குரியது. மேற்கே இருந்த வேல் தானாகவே கிழக்கே திரும்பிய முருகன் ஆலயத்தை மையமாகக் கொண்ட இப்பிரதேசம், பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட மக்கள் கூட்டத்தைக் கொண்டது. சமயம், அரசியல், புராண இதிகாசங்கள், இலக்கியம், ஆசாரங்கள் மற்றும் வாழ்க்கை நடைமுறைகள், ஆன்மீகப் பண்புகள் என்பவற்றை உள்ளடக்கிய இம்மலர் உலகளாவிய ரீதியில் இப்பிரதேசத்தின் சிறப்பை வலியுறுத்துகின்றது.

அத்தோடு கலைஞர்கள், எழுத்தாளர்கள் போன்றோர்களின் திறமைகள் வெளிக்கொணரப்படுவதோடு, அவர்களின் கலை ஆர்வத்தினை மேலும் ஊக்குவிக்கும் இச்செயற்பாடு போற்றத்தக்கதொரு நிகழ்வாகும்.

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையின் கலாசார விழாவும், மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெறவும்; இந்நிகழ்வோடு தொடர்புடைய அனைவருக்கும் சகல நலன்களும் பெருகவும் இறைவன் அருள் கிடைக்க கங்கைத்தாயின் கரையிலிருந்து பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**

அன்பன்
சுவாமி நித்தியானந்தா ரிஷிகேஷ்
இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலாளரின்

## இதயம் திறந்து...

திருக்கோவில் பிரதேசமானது தனித்துவமானதும், கலை கலாசார விழுமியங்களைக் கொண்டதுமான மொழி, மதம், நடை, உடை, பாவனை, உணவுப்பழக்கவழக்கங்கள் என்பன அவர்களின் தமிழ் கலாசார பாரம்பரிய பண்புகளை மையமாகக் கொண்டு விளங்கும் சிறப்புடையதாகும். இக்கலாசார விழாவினூடாக மக்களின் சிறப்புத் தேர்ச்சி, ஆளுமை, திறமை என்பவற்றை விருத்தி செய்வதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பதோடு பிரதேச மக்களிடையே வலுக்கொண்டு வாழும் கலை, இலக்கியம், பண்பாடு வைத்தியம், பாரம்பரிய தொழில்கள் (விவசாயம்), பாடல்கள், இசை, வழிபாடுகள் மற்றும் கல்விச் செல்வம் ஏனைய பாரம்பரிய கலாசார செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்கு உரித்தான கலைஞர்களைப் பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

மேலும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வருகின்ற பல்துறைக் கலைஞர்கள், பிரமுகர்களைப் பாராட்டி இறந்தோரை வாழ்த்தும் இந்தக் கலாசார விழா நிகழ்வானது 30வருடகாலத்தின் பின் எமது செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவோடு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இவ் விழாவில் நானும் ஒருவனாக இணைந்து கொள்வதையிட்டு பேருவகை அடைகின்றேன். இவ்விழா சிறப்புற மனதார வாழ்த்தி வாயாரப் பாராட்டுகின்றேன். இவ்வாறான விழா எங்கெல்லாம் நடக்கின்றதோ அங்கெல்லாம் பிரகாசித்து நிலைத்திருக்கும் கலைப்பீடாதிபதிகளுக்கு அளிக்கப்படும் இக் கௌரவத்தை பெருமனதோடு ஏற்று மனதார வாழ்த்தி என் மனம் சுகம்காணும் விழா சிறக்க வாழ்த்தி

இவ் "விளை நிலம் சிறப்பு மலருக்குப்" பின்னணியில் நாம் பயணித்த பாதை நீண்டது. 2011ம் ஆண்டு தொடங்கி 2012ம் ஆண்டு தரிசிக்கக் கிடைக்கின்ற பாதை கரடு முரடானதாகும். பணிமுன்னெடுப்புக்களுக்கு பாரிய சவாலாக அமைந்திருந்து மிகவும் உச்சமாக கலாசார பேரவை உலாவந்தபோதும் நிதிப்பிரச்சினை மற்றும் மலருக்கான ஆக்கங்களை உள்வாங்கி அதனை ஒழுங்குபடுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினை, கலைஞர் தெரிவு என்பன தர்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் பல்வேறு உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கிய கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் அபிவிருத்தி சங்கம், பொதுமக்கள், திணைக்களத் தலைவர்கள், எமது அலுவலக உத்தியோகத்தர்கள் புலம்பெயர் எழுத்தாளர், S.P. கனகசபாபதி (கனடா) மற்றும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு உதவி புரிந்த கலாசார உத்தியோகத்தர் செல்வி T.ராதிகா அவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களான கணக்காளர் திரு. மு.கேசவன், திட்டமிடல் பணிப்பாளர் திரு. ஏ.நவீரதன், நிர்வாக உத்தியோகத்தர் கமலா பிறேமாங்கதன், கிராம உத்தியோகத்தர் நிர்வாக உத்தியோகத்தர் திரு.கண.இராஜரெத்தினம், சமுர்த்தி தலைமை முகாமையாளர் திரு.ஏ.அரசரெத்தினம்,கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பிரதம விருந்தினர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், காலாசார பேரவை வெளி அங்கத்தவர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றிப் பூக்கள் உதிர்க்கின்றேன்.

அத்துடன் "விளைநிலம் சிறப்பு" வெளியீட்டுக்கு அக்கறையுடன் ஆலோசனைகளையும் அற்பணிப்புகளையும் வழங்கிய அன்புள்ளங்களை நினைவில் கொண்டவனாக திருக்கோவில் பிரதேசத்தின் புவியியல் சார்பு செயற்பாடுகள் மற்றும் எல்லைப் பிரச்சினைகள் போன்றவற்றில் கரிசனையுடன் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கிய திருக்கோவில் பிரதேசத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் என்றென்றும் நினைவிற் கொள்ள வேண்டியவர்களே.

இப்புத்தகத்தினை அழகுற வெளியிட அச்சுப் பதிப்பு செய்துதந்த கோல்டன் அச்சக உரிமையாளரும் மலர் வெளியீட்டுக்கு உதவிய ஏனைய நெஞ்சங்களுக்கும் இதய பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் என்னால் முடிந்தவரை மனித சக்திக்கு உட்பட்டதால் ஒரு பெரும் பணியை செய்து முடித்திருப்பதையிட்டு நாம் அனைவரும் சந்தோசம் அடைகின்றோம். பிரதேச செயலகம் என்பது வெறுமனே அரசாங்கத்தின் பதிவேடுகளை மாத்திரம் பேணும் நிறுவனமே என்ற எண்ணக்கருவில் இருந்து சற்றுவிலகி பிரதேசத்தின் பௌதீக அபிவிருத்தி மற்றும் சமூகத்தின் மானிடவியல் பண்புகளையும் விருத்திசெய்யும் ஒரு நிலையமாக உருபெற்று இருப்பது இந்த சாகித்திய விழாவின் நினைவுப் பேழையான "விளைநிலம் சிறப்பு" மூலம் கோடிட்டுக் காட்டப்படுகின்றது. எனவே இம்மலரானது என்றென்றும் மலர்ந்து இப்பிரதேசத்தின் நறுமணம் எதிர்காலத்திலும் உலகெல்லாம் பரவ இறை ஆசி வேண்டி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**கலாநிதி மு. கோபாலரெத்தினம்**
இலங்கை நிர்வாக சேவை - I),
முது கலைமாணி (பொது நிர்வாகம் வகுப்பு - II),
பிரதேச செயலாளரும், கலாசார பேரவை தலைவரும்,
திருக்கோவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

நிலத்தை உழுது நல்ல பயிர் வளர்த்தால் அறுவடையின் போது நாம் பெரும்பயனை அடையலாம். அதுபோல் எமது உள்ளங்கள் என்றும் நிலத்தினை நல்லறிவென்றும் கலப்பை கொண்டுழுது, அன்பென்னும் நீரூற்றி வளர்த்தால் இன்ப வாழ்வினை நாம் அறுவடை செய்யலாம்.

"விளைநிலம்" என்னும் நூலினை நான் கண்ணுற்றதும் மேற்படி கருத்துக்களே என் உள்ளத்தில் பரவி வந்தது. திருக்கோவில் கலாசார பேரவை வெளியிடும் கலாசார மலரான "விளைநிலம்" வெளிவருவதையிட்டு நான் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விளை நிலத்திலே கவிதைகள் என்னும் விதைகள் நடப்படும். சிறுகதை, செய்தித் துணுக்குகள், விஞ்ஞான, மெய்ஞ்ஞான ஆன்மிகக் கருத்துகள் என்னும் பயிர்களுடன் இன்னும் பல வாழ்வினை வளப்படுத்தும் பயிர்களும் நடப்பட்டு , தற்பொழுது அறுவடைக்காய் தயாராகிக் கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் நாம் அறுவடை செய்யும் பொழுது, உண்மையிலே தமிழின் பெருமையையும் இலக்கியச் சுவைகளையும் நாம் உணர்ந்தவர்களோவோம் என்பது திண்ணம்.

ஆதலால் இவ்விளைநிலம் என்னும் மலர் வெளிவர முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர் ஜுக.மூ.கோபாலரெத்தினம் அவர்களையும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களையும், கலாசார பேரவையினரையும் எனது நெஞ்சுள் நிறுத்தி வாழ்த்துவதில் நான் மனநிறைவு கொள்கின்றேன்.

அன்புடன்,
**திரு. பொ. பியசேன**
பா.ம.உறுப்பினர்
திகாமடுல்ல மாவட்டம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோவில் பிரதேச கலாசார விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தினை பிரதிபலிக்கின்ற கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் பிரதேச செயலகங்களினால் நடைபெறுகின்ற பிரதேச கலாசார விழாக்கள் அமைகின்றன. அவ்வகையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கலாசார விழா **"சிறப்பு மலர்"** வெளியீடானது இங்கு வாழ்கின்ற மக்களின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். எனவே இக்கலாசார விழா நிகழ்வில் வெளிவரும் **"விளைநிலம்"** சிறப்பு மலரானது பல விடயங்களை தாங்கி வரும் என எதிர்பார்க்கின்றேன்.

அத்தோடு இக்கலாசார முயற்சிக்கு முழுமையாக தன்னை ஈடுபடுத்தி செயற்படுகின்ற பிரதேச செயலாளர் திரு.Dr.மூ.கோபாலரெத்தினம். அவரோடு இணைந்து செயற்படுகின்ற பிரதேச கலாசார உத்தியோகத்தர், மற்றும் கலாசார பேரவையினர் அனைவரையும் பாராட்டி வாழ்த்துக் கூறி விழா சிறப்பாக நடைபெற இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு. நீல் த அல்விஸ்**
திரு. நீல் த அல்விஸ்
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
அம்பாறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக அரசாங்க அதிபர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் இவ்வருடம் முதன் முறையாக நடைபெறவிருக்கின்ற **"விளைநிலம்"** கலாசார விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

தமிழர்கள் பெரும்பான்மையினர் செறிந்து வாழ்கின்ற திருக்கோவில் பிரதேசமானது பாரம்பரிய கலை கலாசாரப் பண்புகளைப் பேணி வருகின்ற தனித்தமிழ் பிரதேசமாகும். இங்குள்ள மக்களின் கலை, இலக்கிய, கலாசார தேடல்களுக்கு ஒரு களமாக இக்கலாசார விழா சிறப்பு மலர் வெளிவர இருப்பது வரவேற்கத்தக்கது.

அந்த வகையில் இவ்விழாவின் முக்கியத்துவத்தினை உணர்ந்து செயற்பட்டு வருகின்ற பிரதேச செயலாளர் Dr.மூ. கோபலரெத்தினம் அவரோடு இணைந்து செயற்படுகின்ற பிரதேச கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார குழுக்கள் இலக்கிய ஆர்வங்கள் அனைவரையும் பாராட்டுவதோடு இவ்விழா சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.

**திரு.ஜே.எஸ்.டி.எம். அசங்க அபேவர்த்தன**
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
அம்பாறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

சமூக மயமாக்கலில் கலை இலக்கியங்களே முக்கிய பங்கினை வகிக்கின்றன. ஆரோக்கியமான சமூக வாழ்க்கைக்கு கலை இலக்கியங்களின் பயன்பாடே காரணமாய் அமைகின்றது. திருக்கோவில் பிரதேசம் நீர்வளம், நிலவளம், சாலைகள், சோலைகள் போன்ற அனைத்து வளங்களும் கொண்ட ஒரு பிரதேசமாகும். திருக்கோவிலில் அமைந்துள்ள சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம் இந்தியாவிலுள்ள அறுபடைக் கோவில்கள் போல் வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயமாகும். இப்பிரதேசத்தின் சிறப்பிற்கு இவ்வாலயமும் ஒன்றாகத் திகழ்கின்றது.

மீன்பிடி, விவசாயம், பயிர்ச்செய்கை போன்ற தொழில்களோடு கல்விமான்கள், கலைஞர்கள் முதலானவர்களைக் கொண்ட செழுமைமிக்க பிரதேசமாக திருக்கோவில் பிரதேசம் விளங்குகின்றது.

கலை இலக்கிய மேம்பாட்டின் பொருட்டு நடாத்தப்படுகின்ற இலக்கியவிழா மக்களின் கலை ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமையவேண்டும் எனவும், இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக முதல் முறையாக வெளியிடப்படவுள்ள **"விளைநிலம்"** எனும் சிறப்பு மலரும் நல்ல விடயங்களைத் தாங்கி வர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்வதோடு, இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்விழாவை முன்னின்று செயல்படுத்துகின்ற பிரதேச செயலாளர், திரு. Dr.மூ.கோபாலரெத்தினம், கலாசார உத்தியோகத்தர் செல்வி. T.ராதிகா, மற்றும் பிரதேச கலாசார சபையினர் அனைவருக்கும் எனது நன்றியினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. D.W.U.வெலிக்கல**
*பணிப்பாளர்,*
*பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,*
*கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்,*
*திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாரை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

"விளைநிலம்" என்ற பெயரில் வெளிவரும் திருக்கோவில் பிரதேச கலாசார விழா 2011 / 2012 சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அக்கரைப்பற்று தென்பகுதியில் அமைந்துள்ள திருக்கோவில், மிகப் பழமை வாய்ந்ததொரு ஊராகும். இங்குள்ள மக்கள் சமயப்பற்றும் சமூகப் பற்றும் மிகுந்தவர்கள். குறிப்பாக, இவர்கள் பாரம்பரிய கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் முன்மாதிரியானவர்கள். திருக்கோவில் என்ற பிரதேசம் பெரிய பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் தாங்கி நிற்கும் அடையாளமாகும். எமது பிரதேசத்தில் கலை இலக்கியம் சார்பாகவும் திருக்கோவில் பிரதேசம் காத்திரமான பங்களிப்புகளைச் செய்து வந்துள்ளது.

முல்லை வீரக்குட்டி, தம்பிலுவில் தயா, தம்பிலுவில் ஜெகா, யோகா, யோகேந்திரன் இவர்களோடு திருக்கோவில் கவியுவன் முதலானவர்களது கலை இலக்கியப் பங்களிப்புக்கள் இப்பிரதேசத்துக்குப் புகழை ஈட்டிக்கொடுத்துள்ளன. மலையகத்திலிருந்து வந்து இப்பிரதேசவாசியாகத் தன்னைப் பதிவு செய்து கொண்ட கவிஞர் குறிஞ்சிவாணனையும் இந்த இடத்தில் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

இவைகள் எல்லாவற்றையும் நினைவுபடுத்தும் வகையிலும் கலை இலக்கியத் துறையினை மேலும் வளர்த்தெடுக்கும் நோக்கத்திலும் நடாத்தப்படும் 2011/2012ஆம் ஆண்டுக்குரிய திருக்கோவில் பிரதேச கலாசார விழாவினை நடாத்தி முடிப்பதில் தன்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் திருக்கோவில் பிரதேச செயலாளர் திரு.Dr.M.கோபாலரட்ணம் அவரோடு இணைந்து செயலாற்றும் எமது திணைக்கள கலாசார உத்தியோகத்தர் செல்வி.T.ராதிகா மற்றும் இப்பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் என்பதுடன், இக்கலாசார விழா சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜனாப். ஏ. எல். தௌபீக்**
*மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்,*
*கச்சேரி - அம்பாரை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முன்னாள் பிரதேச செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் மிக நீண்ட காலத்திற்கு பின்னர் கலாசார விழா நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

விளைநிலம் என்னும் பெயரில் வெளிவரவிருக்கும் கலாசார மலர் காத்திரமாகவும் பயன்தரத்தக்க மலராகவும் வெளிவருவதாக அறிகிறேன். தமிழ்மணம், கமழும் தமிழும், சைவமும் மணக்கும் இப்பகுதியில் பிரதேச செயலாளராக கடமைபுரிந்தவன் என்றவகையில் பெருமை அடைகின்றேன்.

இவ்விழாவினை முன் எடுத்துச் செல்லும் கலாநிதி திரு.மூ.கோபாலரெத்தினம் மற்றும் கலாசார அலுவலர் செல்வி தி.ராதிகா அலுவலகப் பணியாளர்கள், கலாசார பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் இப்பணியை செய்து முடிக்க இறையருள் வேண்டிப் பிரார்த்தித்து. இவ் வாழ்த்துரையை வழங்க வாய்ப்பளித்த விழாக்குழுவினருக்கு நன்றி கூறி வாழ்த்துகிறேன்.

**திரு.வி. அழகரெத்தினம்**
(ஓய்வு பெற்ற பிரதேச செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாண இந்து ஒன்றியத்தின் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான

## கௌரவ சீ. யோகேஸ்வரன் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணத்தின் தனித்துவமிக்க தமிழும், சமயமும் சிறப்புற்று விளங்கும் பிரதேசமான திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் “விளைநிலம்” எனும் பெயரில் முதன்முறையாக வெளிவரும் கலாசார விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம் அவர்களும் அவரோடு இணைந்து செயற்படும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலாசாரப் பேரவையினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இம்மலரின் மூலம் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை எதிர்கால சந்ததியினருக்கு ஒரு ஆவணமாக வழங்க இருப்பது பெரும் மகிழ்ச்சிக்குரியது. இவ்விழாவானது சிறப்பாக நடைபெறவேண்டுமென வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. சீ.யோகேஸ்வரன்**
மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,
கிழக்கு மாகாண இந்து ஒன்றியத்தின் தலைவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

எமது திருக்கோவில் பிரதேச மக்களின் கலை கலாசாரம் மற்றும் விழுமியங்களை தன் விளைநிலத்தில் விதைத்து பின் அதன் அறுவடைகளை உலகுக்கு பயன்படும் வகையில் வெளிக்கொணரும் இவ் விளைநிலத்திற்காக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பண்டைய காலப்பகுதியில் வாழ்ந்த மக்களால் கடைப்பிடிக்கப்பட்ட கலை கலாசார விழுமியங்களைக் கொண்ட புராதன பிரதேசம் எமது பகுதியாகும். இதற்கு எடுத்துக்காட்டாக சோழ காலத்திலிருந்து இன்றுவரை தேசத்தின் வழிபாட்டுத் தலங்களாக விளங்கும் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயமும், இப்பிரதேச பெண்களின் கற்புக்கு இலக்கணமாய் நற்பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயமும் இம் மக்களால் போற்றி வழிபடப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு மான்மியத்தில் இவ்வாலயங்களின் சிறப்புப்பற்றி சொல்லப்படாத தொண்டுதொட்டு வரும் கதையாக மதுரையை எரித்த கண்ணகி முதன் முதல் வந்து மகிழ்ச்சியாக அமர்ந்த பிரதேசம் இதுவென இப்பிரதேச மூதாதைகளால் சொல்லப்பட்டு வருகின்றது. இதன்மூலம் மதுரைக்கும் நமது பிரதேசத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஆகவே இப்பிரதேசம் பழமைவாய்ந்த கலாசாரப் பண்புகளை எடுத்துக் காட்டுகின்ற மறத்தமிழர்கள் வாழ்கின்ற பிரதேசமாகும்.

இப்படிப்பட்ட எங்களது புராதன கலாசாரப் பண்புகளை எங்கள் பிரதேசத்திற்குள் மட்டும் முடக்கிவிடாமல் உலகிற்கு எடுத்துக்காட்டி பிற சமூகங்களும் இதைப் பின்பற்றுவதற்கு வித்திடும் விளைநிலமாக மிளிருமென எமது பிரதேச மக்கள் சார்பாக மனமுவந்து வாழ்த்துவதோடு அனைத்தும் சிறப்புற நடந்தேற பிரார்த்திக்கின்றேன்.

**திரு. பா.வி. புவிதராஜன்**
(தவிசாளர்)
திருக்கோவில் பிரதேச சபை தம்பிலுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் இவ்வருடம் முதன்முறையாக நடைபெறுகின்ற கலாசார விழா "விளைநிலம்" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருக்கோவில் பிரதேசமானது மிகப்பழமை வாய்ந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட பாரம்பரிய கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வருகின்ற ஒரு தனித்தமிழ்ப் பிரதேசமாகும். இங்குள்ள மக்களின் பாரம்பரியங்களுக்கு எடுத்துக்காட்டாக இங்குள்ள ஆலயங்கள் அமைகின்றன. இங்கு வாழுகின்ற மக்கள் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்களை உள்வாங்கி புதுமையைப் புகுத்தி பழமையைப் பேணி வளர்த்து வரும் பெரிய பாரம்பரிய கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்குச் சான்றாக இங்குள்ள பல்துறைசார் சிறந்த எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் காணமுடிகின்றது.

பாரம்பரிய கிராமியக் கலைகளான கோலாட்டம், கும்மி, நாட்டுக்கூத்து, வசந்தனாடல், கொம்புமுறி, காவடி, ஊஞ்சலாட்டம், ஊஞ்சல்ப்பாட்டு போன்ற கலை வடிவங்கள் ஊற்றெடுத்த பிரதேசம் இத் திருக்கோவில் பிரதேசமாகும். இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்ற இப்பிரதேசத்தில் முதன்முறையாக கலாசார விழா நடைபெறுவது வரவேற்கத்தக்கது.

இங்குள்ள கலைஞர்கள், எழுத்தாளர்களை கௌரவிக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழாவானது ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்பது எனது அவா. இதற்கு முன்னோடியாக இவ்வருட கலாசார விழா அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன். அத்துடன் இவ்விழாவினை முன்னின்று நடாத்துகின்ற பிரதேச செயலாளர் திரு. கலாநிதி. மூ. கோபாலரெத்தினம் மற்றும் அவரோடு இணைந்து செயற்படுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியினைக் கூறிக் கொள்கின்றேன்.

**திரு. S.அமலநாதன்**
கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளார்,
முதலமைச்சு செயலகம் கிழக்குமாகாணம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ அம்பாரை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோவில் பிரதேச கலாசார விழா சிறப்பு மலர் அகவை ஒன்றிற்கு அத்திவாரமாக அடித்தளமிடுவதில் அகம் மகிழ்கின்றேன். இது எமது பிரதேச மக்களின் சிதைந்து போன பாரம்பரிய கலை கலாசாரா விழுமியங்களை ஆவணப்படுத்தும் நோக்குடனும், கலைஞர்கள், எழுத்தாளர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து நினைவுபடுத்தும் முகமாக வெளியிடும் "விளைநிலம்" எனும் சஞ்சிகைக்கு, வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கலை மழை பொழிந்து எமது பிரதேச மக்களின் வாழ்வு மலர மகிழ்ச்சிகரமான நிவாரணமாக இது அமைய வேண்டும். எமது மண்சுமந்து வாழும் மக்கள் கலை கலாசாரம் என்பவற்றில் முதன்மை பெற வேண்டும். கலை எழுத்தாற்றல் என்பது இறைவன் கொடுத்த வரமாக நான் நினைக்கின்றேன்.

பெரும் பெரும் சாதனை படைத்தவர்கள் எல்லாம், முடியும் என்ற நம்பிக்கையுடன்தான் தமது பணிகளை ஆரம்பித்து வெற்றிகண்டனர். வளர்ந்து வரும் சமுதாயங்களுக்கு நாம் ஒரு வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் வாழ்ந்து காட்டி எமது பிரதேச மக்களின் உள்ளத்தில் கலை உணர்வைக் கருக்கட்ட வைத்தால்தான் அது உருப்பெற்று உயர்வடையும்.

**"விளைநிலம்"** இதழ் எமது கலை கலாசாரத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சியின் முதற்படியாகும். வருடாவருடம் இது புதிய பரிணாமம் பெற்று புத்தொளி பெறவேண்டும். என்பதே எனது நோக்கமாகும். நீண்ட நெடு நாட்களாக எனது ஆழ் மனதில் வேரூன்றியிருந்த பல நோக்கங்களில் இதுவும் ஒன்று என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இப்பணி மென்மேலும், தொடர இதய சுத்தியுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். **"விளைநிலம்"** வெளியீட்டு மலருக்கு ஒத்துழைப்பும் பங்களிப்பும் நல்கிய அத்தனை நலன்விரும்பிகளுக்கும், குறிப்பாக இப்புத்தக வெளியீட்டுக் குழுவினருக்கும் விஷேட நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மன ஆறுதல் அடைந்து எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**"வெள்ளை மனதுடன் நல்லன புரிவோம்**
**எல்லா மக்களும் இன்புற உழைப்போம்"**
**எல்லா மக்களும் இன்புற உழைப்போம்"**

**தேசமான்ய கலாநிதி கு.புஸ்பகுமார்**
ஜனாதிபதி இணைப்பாளர்,
அம்பாரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

2011 /2012ஆம் ஆண்டிற்கான திருக்கோவில் பிரதேச கலாசார விழா **"விளைநிலம்"** சிறப்புமலர் வெளியீட்டினை வெளியீடு செய்வதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன், இவ்வகையான விழாக்கள் பிரதேச கலாசார வெளிப்பாட்டை மேலும் மேம்படுத்துவதுடன், மக்களிடம் உள்ள திறமைகளையும் வெளிக்கொணர வைக்கும் என்பதில் ஐயமில்லை. **"விளைநிலம்"** சிறப்பு மலர் வெளியீட்டை வரவேற்று, வாழ்த்துக் கூறுவதுடன்; மேலும் தொடரான கலாசார விழுமியங்கள் மக்கள் மத்தியில் மேலோங்க வைக்கும் ஆக்கத்திற்கு ஊக்கம் தருவதுடன்; வெளியீட்டாளர்களையும் நன்றி உணர்வுடன் வாழ்க வாழ்கவென மனமார வாழ்த்துகிறேன்.

**திரு. சீ. செல்வராசா**
மாகாண சபை உறுப்பினர்,
கிழக்கு மாகாண சபை,
அம்பாறை மாவட்டம், திருக்கோவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே

*- மகாகவி சுப்பிரமணிய பாரதியார் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோவில் பிரதேச கலாசார கீதம்

எங்கள் திருக்கோவில் எழில் கொஞ்சும் பிரதேசம்
என்றென்றும் வாழியவே
மங்காப்புகழுடன் மாநிலந்தன்னில்
மாண்புற வாழியவே

நானில வளமும் நற்றமிழ்க் கலைகளும்
நலம் பெறும் பிரதேசம்
இந்து கிறிஸ்தவம் இணைந்து வாழும்
இத்தலம் வாழியவே

வங்கக்கடலின் வளங்கள் சேரும்
வனப்புறு கிழக்கினிலே
தெங்கு நிறை சோலை திக்கெலாம் திகழும்
திருத்தலம் வாழியவே (எங்கள்....)

குறிஞ்சி முல்லை மருதம் தருகின்ற
குறைவற்ற செல்வங்களும்
நிறைந்து குவியும் தனித்தமிழ்ப் பிரதேசம்
நிலைபெற்று வாழியவே

காவடி சிந்து கரகம் பள்ளு
கலாசாரமரபுடனே
பாவடிவான ஊஞ்சல் குளிர்த்தி
பண்பாடும் வாழியவே

(எங்கள்....)

நாட்டுக்கூத்துடன் நாடகம் கும்மி
நடன இசைக்கலைகள்
பாட்டுடன் கவிகள் பழந்தமிழ்க்கதைகள்
பரந்தெங்கும் வாழியவே

விளை நில மலரெங்கள் கலைவளங்காட்டும்
வியத்தகு பெட்டகமாம்
பலதுறை அரச ஊழியர் பணியால்
பயன்பெற்று வாழியவே!

(எங்கள்....)

ஆக்கம்: **திருமதி. ஜெகதீஸ்வரி நாதன்**
(தம்பிலுவில் ஜெகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார பேரவை:

| | |
|---|---|
| 1. தலைவர்:- | திரு. Dr. மூ. கோபாலரெத்தினம் (பிரதேசசெயலாளர்) |
| 2. உபதலைவர்:- | திரு. எம். கந்தப்பன் (ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்) |
| 3. செயலாளர்:- | செல்வி. ரி. ராதிகா (கலாசார உத்தியோகத்தர்) |
| 4. உபசெயலாளர்:- | திருமதி. ஜெகதீஸ்வரி நாதன் (ஆசிரியை) |
| 5. பொருளாளர்:- | திரு. கே. கேசகன் (கணக்காளர்) |
| 6. உப பொருளாளர்:- | திரு. ஆர். ஆனந்தராசா |

## உறுப்பினர்கள்:

1. திரு. வி. நவீரதன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர்)
2. திரு. எஸ். சண்முகம் (சமூக சேவை உத்தியோகத்தர்)
3. திரு. பி. கோபிகாந் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
4. திருமதி. பிறேமாங்கதன் கமலாவதி (நிருவாக உத்தியோகத்தர்)
5. திரு. வி. அரசரெட்ணம் (சமூர்த்தி தலைமை முகாமையாளர்)
6. திரு. ஏ. எல். ரஞ்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
7. திரு. கண. இராஜரெட்ணம் (கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர்)
8. திரு. பி. சந்திரேஸ்வரன் (அதிபர்)
9. கலாநிதி எஸ்.குணபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர் தெ.கி.ப)
10. திரு. எஸ். துஸ்யந்தராஜா (ஓய்வு பெற்ற நிருவாக உத்தியோகத்தர்)
11. திரு. வி. வீரமணி (கிராமசேவை உத்தியோகத்தர்)
12. திரு. எஸ். பார்த்தீபன் (கிராம சேவை உத்தியோகத்தர்)
13. திரு. எஸ். சுயாந்தன் (குடியேற்ற உத்தியோகத்தர்)
14. திரு. என். எஸ். தியாகராஜா (ஓய்வுபெற்ற இந்து கலாசார உத்தியோகத்தர்)
15. திரு.ந. தயானந்தம் (முகாமைத்துவ உதவியாளர் பி.தே.ச)

## மலர் வெளியீட்டுக்குழு:

1. திரு. வி. நவீரதன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர்)
2. செல்வி. ரி. ராதிகா (கலாசார உத்தியோகத்தர்)
3. திரு. எஸ். செல்லத்துரை (ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்)
4. திரு. வி. ஜயந்தன் (கோட்டக்கல்விப் பணிப்பாளர்)
5. திருமதி. யோகா யோகேந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர்)
6. திரு. எம். கந்தப்பன் (ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர்)
7. திருமதி. ஜெகதீஸ்வரி நாதன் (ஆசிரியை)
8. திரு. கண. இராஜரெத்தினம் (கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர்)
9. திரு. சி. வி. பி. மாணிக்கம் (கவிஞர்)
10. திரு. கா. வீரக்குட்டி (கவிஞர்)
11. திரு. ஏ. சசீந்திரன் (முகாமைத்துவ உதவியாளர்)
12. திரு. ரி. பிரபு (முகாமைத்துவ உதவியாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாக்குழு:

1. திரு. வி. அரசரெட்ணம் (சமுர்த்தி தலைமை முகாமையாளர்)
2. திருமதி. இராஜகுமாரி சிதம்பரம் (ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்)
3. திருமதி. கஜனி பேரின்பம் (முகாமைத்துவ உதவியாளர்)
4. திரு. எம். கே. விநாயகமூர்த்தி (முகாமைத்துவ உதவியாளர்)
5. திரு. எல். சந்திரபவன் (மனிதவள அபிவிருத்தி உதவியாளர்)
6. திரு. எஸ். சாந்தகுமார் (உளவள துணை உதவியாளர்)
7. திரு. ரி. இராசரெட்ணம் (முகாமைத்துவ உதவியாளர்)
8. திரு. எஸ். உதயகுமார் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)
9. செல்வி.ஆ. பரமேஸ்வரி (ஆசிரிய ஆலோசகர்)
10. திரு. எஸ். கனகரெட்ணம்
11. திருமதி. தேவமலர் தங்கமாணிக்கம் (ஆசிரியை)
12. திருமதி. சிவகாமிதேவி முருகமூர்த்தி (ஆசிரியை)
13. திருமதி. புஸ்பலதா மோகனராஜா (ஆசிரியை)

## நிதிக்குழு:

1. திரு. கே. கேசகன் (கணக்காளர்)
2. திரு. பி. கோபிகாந்த் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)
3. திரு. ஆர். ஆனந்தராசா
4. திரு. எஸ். பி. கனகசபாபதி
5. திரு. ஆ. கணேசமூர்த்தி (ஓய்வு பெற்ற கணக்காளர்)
6. திரு. எஸ். ரவீந்திரன் (அதிபர்)
7. திரு. என். எஸ். சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற அதிபர்)
8. திரு. எஸ். கார்த்திகேசு (பட்டதாரி பயிலுனர்)
9. திரு. சு. மகேஸ்வரராஜா (வெளிக்கள போதனாசிரியர்)
10. திரு. ரி. மோகனராஜா (பிரதம முகாமைத்துவ உதவியாளர்)
11. திரு. எஸ். நடேசன் (முகாமைத்துவ உதவியாளர்)
12. திரு. யு. உதயகுமார் (கிராம சேவை உத்தியோகத்தர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார பேரவை




1வது வரிசை இடமிருந்து வலம்: செல்வி.T.ராதிகா (கலாசார உத்தியோகத்தர்), திருமதி.கமலாவதி பிரேமாங்கதன் (நிர்வாக உத்தியோகத்தர்), திருமதி.ஜெகதீஸ்வரி நாதன் (ஆசிரியை), திரு.V.நவரதன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர்), திரு.Dr.ந்ரு.கோபாலரெத்தினம் (பிரதேச செயலாளர்), திரு.V.அரசரெட்ணம் (சமுர்த்தி தலைமை முகாமையாளர்), திரு.Dr.S.குணபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர் தெ.கி.ப.க.), திரு.K.கேசகன் (கணக்காளர்), திரு.V.வீரமணி (கிராம சேவை உத்தியோகத்தர்)


2வது வரிசை இடமிருந்து வலம்: திரு.P.கோபிகாந்த், (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.N.S.தியாகராஜா (ஓய்வு பெற்ற இந்து கலாசார உத்தியோகத்தர்), திரு.R.ஆனந்தராசா, திரு.S.துஸ்யந்தராசா (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்), திரு.S.சுயாந்தன் (குடியேற்ற உத்தியோகத்தர்), திரு.S.சண்முகம் (சமூக சேவை உத்தியோகத்தர்), திரு.A.L.றஞ்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.கண. இராஜரெட்ணம், (கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர்) திரு.S.பார்த்திபன் (கிராம சேவை உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Administrative Map

Thirukkovil DS Division




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோவில் பிரதேசம் ஓர் சமூகக் கண்ணோட்டம்

இயற்கை எழில் கொஞ்சும் திருக்கோவில் பிரதேசமானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப்பகுதியில் அமைந்துள்ள ஒரு தமிழ்ப் பிரதேசமாகும். இப்பிரதேசம் கல்முனையிலிருந்து 37 கிலோமீற்றர் தூரத்திலும் அம்பாறையிலிருந்து 40 கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. வடக்கே அக்கரைப்பற்று, ஆலையடிவேம்புப் பிரதேசங்களையும், தெற்கே பொத்துவில் பிரதேசத்தையும் கிழக்கே வங்காள விரிகுடாவையும், மேற்கே லகுகலை, தமண பிரதேசங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

திருக்கோவில் பிரதேசமானது 78.1 சதுரமைல் பரப்பளவினை உள்ளடக்கிய தமிழர்கள் செறிந்து வாழுகின்ற கரையோரப் பிரதேசமாகும். இங்கு விசேடமாக இல்மனைற் கனியவளப் படிவுகள் புதையுண்டு இருப்பது சிறப்பம்சமாகும்.

வேளாண்மை, குடிசைக் கைத்தொழில், கால்நடை வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், சிறு வியாபாரம், மீன்பிடி போன்ற பொருளாதார தொழில்களில் இப் பிரதேச மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இப்பிரதேசமானது இலங்கையின் தரைத்தோற்ற அமைப்பினில் கரையோரம் என்ற பகுதிக்குள்ளே உள்ளடக்கப்படுகின்றது. இதனால் தரமான மண்ணையும், அதிகளவு குளங்களையும், ஆறுகளையும் கொண்டுள்ளமையால் நன்நீர், உவர்நீர், மீன்பிடித் தொழிலுக்கு சாதகமாகவுள்ளது எனலாம். திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவு எனும் பெயர் பெற்ற இப் பிரதேசம், 22 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாக அமைந்துள்ளது. இவை திருக்கோவில் பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகிறது. 22 பிரிவுகளையும் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| தொடர் இல. | கிராம உத்தியோகத்தர் பிரிவு இலக்கமும் - பெயர் விபரமும் | | சனத்தொகை |
|---|---|---|---|
| 01 | TK/12A/1 | தம்பட்டை - 02 | 662 |
| 02 | TK/12A | தம்பட்டை - 01 | 793 |
| 03 | TK/12 | தம்பிலுவில் - 01 மேற்கு | 1531 |
| 04 | TK/12C | தம்பிலுவில் - 01 கிழக்கு | 1926 |
| 05 | TK/12B | தம்பிலுவில் - 01 தெற்கு | 1498 |
| 06 | TK/11 | தம்பிலுவில் - 02 வடக்கு | 1330 |
| 07 | TK/11A | தம்பிலுவில் - 02 கிழக்கு | 1209 |
| 08 | TK/11B | தம்பிலுவில் - 02 மேற்கு | 1563 |
| 09 | TK/10/2 | திருக்கோவில் - 03 | 1754 |
| 10 | TK/10 | திருக்கோவில் - 01 | 1329 |
| 11 | TK/10/1 | திருக்கோவில் - 02 | 1334 |
| 12 | TK/10A/3 | விநாயகபுரம் - 04 | 1669 |
| 13 | TK/10/A | விநாயகபுரம் - 01 | 1161 |
| 14 | TK/10A/1 | விநாயகபுரம் - 02 | 1477 |
| 15 | TK/10A/2 | விநாயகபுரம் - 03 | 2471 |
| 16 | TK/10E/1 | திருக்கோவில் - 04 | 4022 |
| 17 | TK/11/C | சாகாமம் | 1026 |
| 18 | TK/10D/1 | காஞ்சுரங்குடா | 769 |
| 19 | TK/10/B | கஞ்சிகுடியாறு | 1458 |
| 20 | TK/10/E | தங்கவேலாயுதபுரம் | 1452 |
| 21 | TK/10/C | தாண்டியடி | 605 |
| 22 | TK/10D | சங்கமன் கிராமம் | 1047 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரதேசத்தில் வலயக்கல்வி அலுவலகம் அமைந்துள்ளது. இதில் திருக்கோவில் கோட்டத்தின் கீழ் இயங்கிவரும் தற்போதய பாடசாலைகளின் விபரமும் மாணவர் தொகையும் பின்வரும் அட்டவணையின் மூலம் தெளிவாகின்றது.

**திருக்கோவில் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள்**

| இல | பாடசாலைகள் | மாணவர்கள் தொகை |
|---|---|---|
| 01 | திகோ / தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம் I AB | 1692 |
| 02 | திகோ / திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம் I C | 740 |
| 03 | திகோ / விநாயகபுரம் மகா வித்தியாலயம் I C | 1053 |
| 04 | திகோ / தாண்டியடி விக்னேஸ்வரா வித்தியாலயம் I C | 406 |
| 05 | திகோ / தம்பட்டை மகா வித்தியாலயம் II | 266 |
| 06 | திகோ / கோரைக்களப்பு சக்தி வித்தியாலயம் II | 775 |
| 07 | திகோ / தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம் II | 357 |
| 08 | திகோ / தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயம் III | 300 |
| 09 | திகோ / அருனோதயா வித்தியாலயம் III | 57 |
| 10 | திகோ / கனகரெத்தினம் வித்தியாலயம் III | 99 |
| 11 | திகோ / கள்ளியந்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை III | 60 |
| 12 | திகோ / காஞ்சிக்குடியாறு கணேசா வித்தியாலயம் III | 58 |
| 13 | திகோ / காஞ்சிரங்குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை III | 142 |
| 14 | திகோ / முனையக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை III | 90 |
| 15 | திகோ / பாலவிநாயகர் வித்தியாலயம் III | 101 |
| 16 | திகோ / பரமேஸ்வரா வித்தியாலயம் III | 148 |
| 17 | திகோ / செம்மண்புளை கணேஷா வித்தியாலயம் III | 58 |
| 18 | திகோ / தங்கவேலாயுதபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை III | 34 |
| 19 | திகோ / திருப்பதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை III | 71 |
| 20 | திகோ / திருக்கோவில் குமர வித்தியாலயம் III | 133 |
| 21 | திகோ / சாகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை III | 19 |

இப் பிரதேசத்தில் ஒரேயொரு ஆதார வைத்தியசாலை மட்டுமே உண்டு. ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றும் உள்ளது.

சுகாதாரத்தைப் பேணி வாழ்வதற்கு இப்பகுதிகளுக்கு போதிய சுகாதாரக் கல்வி இல்லாததால் சுகாதாரத் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியான டாக்டர் திருமதி சுலோசனாதேவி இராஜேந்திரா அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப் பிரதேசத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சியளித்து, அதன் மூலம் அவர்கள் சுய தொழில் நடவடிக்கையில் ஈடுபட வழிவகை செய்யப்படுகின்றன. இந்தவகையில் நெசவுக்கைத்தொழில், மேசன், தச்சுத்தொழில், தையற்பயிற்சி, மோட்டார் சைக்கிள் திருத்துதல், தட்டச்சு, கணனி இயந்திர பயிற்சி, தும்புத் தொழிற்பயிற்சி போன்றன வழங்கப்பட்டு வருகின்றன. மத ரீதியாகப் பார்க்கும் போது, ஆரம்பத்தில் முழு இந்துக்களைக் கொண்ட பிரதேசமாக இருந்தபோதிலும் தற்போது கிறிஸ்தவ மதத்தினையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இருப்பினும், இரு மதத்தினரும் எந்தவித பேதமுமின்றி, ஒற்றுமையாக வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு, இங்குள்ள சில இந்து ஆலயங்களில் குடிகள் வழிகளில் பூசைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இப் பிரதேசம் பூர்வீக காலம் முதல் விவசாயத்திற்கும், கால்நடைக்குமே பிரசித்தி பெற்றதாகக் காணப்படுகிறது. விவசாயப் பயிர்ச் செய்கையை எடுத்துக் கொண்டால், 2007ல் பின்வரும் அட்டவணையின் மூலம் எத்தனை ஏக்கரில் என்னென்ன பயிர்வகைகள் பயிரிடப்பட்டன என்பதை அறியலாம்.

| *பயிர்வகை* | *ஏக்கர்* |
|---|---|
| நெல் | 8944 |
| தென்னை | 2195 |
| பழங்கள் | 337 |
| மரக்கறிவகை | 586 |
| சோளம் | 1090 |
| நிலக்கடலை | 1443 |
| கௌபி | 296 |
| ஏனையவை | 116 |

திருக்கோவில் பிரதேசத்தில் விவசாயத்தையடுத்து தொழில் வழங்கும் துறையாக மீன்பிடித் தொழில் காணப்படுகின்றது. இப் பிரதேசத்தில் வாழ்கின்ற 40 வீதமானோர் இத் தொழிலையே செய்து வருகின்றனர். 2003ஆம் ஆண்டு மாவட்டக் கணக்கின்படி மீனவர் குடும்பங்கள் 15189ஆக இருந்தது மாசிமாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரை மீன் பிடித்தொழில் உச்சநிலையில் காணப்படும். இப் பிரதேசத்தில் கிராமிய பொருளாதாரத்தில் ஆரம்பகாலம் முதல் கால்நடை முக்கிய பங்கினை வகிக்கின்றது. இங்கு பசு, எருமை, ஆடு, கோழி, தாறா போன்றவை வீட்டு விலங்குகளாக வளர்க்கப்படுகின்றன. எவ்வாறாயினும் தொழில் முன்னேற்றத்திற்கான சில தடைகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு இந்து ஆலயங்களில் வருடாந்த உற்சவங்கள் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பிரசித்திபெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம், தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம் என்பவற்றைக் குறிப்பிடலாம். வைகாசி மாதத்தில் கண்ணகை அம்மன் குளிர்த்தியும், ஆடி அமாவாசையில் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலய தீர்த்தோற்சவமும் நடைபெறும் இங்குள்ள மக்கள் பக்தியில் உச்சக் கட்டத்தை நாடி நிற்பதனால், மலைபோல வந்த துன்பங்கள் பனிபோல கரைந்தோடுவதும் உண்மை.

இப்பிரதேசம் தொடர்ந்தும் இயற்கை வனப்புடையதாகவும், வளங்கொண்டதாகவும் அமைய இப்பிரதேச மக்களாகிய நாம் ஒன்றுபட்டு காத்தல் வேண்டும். அதனைக் காத்துவரின் எல்லோர் வாழ்விலும் சாந்தியும் சமாதானமும் வளம்பெறும் என்பதில் ஐயமில்லை.

**- கலை இளவல் தம்பிலுவில் தயா -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலகத்தின் தோற்றமும் அதன் செயற்பாடுகளும்

காரியாதிகாரி கந்தோர் என அழைக்கப்பட்ட அலுவலகம் நிதிப் பொறுப்புக்களையும் உள்ளடக்க வேண்டியுள்ளதால் பிரிவு, இறைவரி அலுவலகமாக மாற்றம் பெற்றது. ஆரம்ப காலத்தில் இப்பிரிவுகள் எல்லாம் மட்டக்களப்பு மாவட்டத்தோடு இணைக்கப்பட்டு இருந்தது. இப்பிரதேசம் மிகவும் விரிந்து பரந்து காணப்பட்டது. கச்சேரி என்று அழைக்கப்படும் கோட்டைக்குள் இருந்தே சகல நிர்வாகங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. சில காலம் சென்றபின், பட்டிப்பளை என அழைக்கப்பட்டு வந்த பெயர் மாற்றம் பெற்று, அம்பாரை மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு உகணை எனும் கிராமத்தில் பிரதான அலுவலகமாக இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனுடைய விஸ்தீரணம் மிகவும் விஷாலமாக இருந்த காரணத்தால் அக்கரைப்பற்று கிராமத்தில் ஒருபிரிவுக் காரியாதிகாரி கந்தோர் நடைபெற்று வந்தது. இதில் திருக்கோவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு போன்ற பிரதேச செயலகங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், பெரியதோர் காரியாலயமாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பின் சனப் பெருக்கத்தின் அதிகரிப்பாலும், நிலப்பரப்பின் அதிகரிப்பாலும் வேலைகளை மக்களுக்கு இலகுவாக்க வேண்டிய காரணத்தினாலும் மேற்குறிப்பிட்ட கந்தோர்கள் பிரிக்கப்பட்டன. அக்கரைப்பற்று காரியாலயத்தில் அவ்வேளையில் கடமையாற்றியவர் பற்றிக் காரியாதாரி (DRO) என்பவராவார். அவரின் ஆதரவுடன் திருக்கோவிலுக்கென்று தனியான சுற்றுலா பிரிவுக்காரியாதிகாரி கந்தோர் ஒன்று தம்பிலுவில் கிராமாட்சி மன்ற கட்டடத்தில் 1968ல் ஆரம்பமானது.

அவ்வேளை இத் திருக்கோவில் பிரதேச காரியாதிகாரி கந்தோரில் மூன்று கிராம சேவக பிரிவுகளே பிரிக்கப்பட்டிருந்தது. தம்பிலுவில் வடக்கு, தம்பிலுவில் கிழக்கு, திருக்கோவில் போன்றவை அவையாகும். பின்னர் விநாயகபுரம் கிராம சேவையாளர் பிரிவு 1-2-1977ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டு, நிர்வாகம் நடைபெற்று வந்தது. அதன் பிற்பாடு பல அரசியல் தலையீடுகள் காரணமாக திருக்கோவிலுக்கு எனத் தனியானதோர், காரியாலயம் உருவாக்கப்பட்டது. திருக்கோவிலில் அரச கட்டடங்கள் இல்லாத காரணத்தால், தனியார் கட்டடம் ஒன்றில் நடாத்தப்பட்டது. மறைந்த மாமனிதரும் பாராளுமன்ற உறுப்பினரும் அரசியல் அதிகாரியுமான எம்.கனகரெத்தினம் அவர்களின் அயராத உழைப்பால் தனியான கட்டடம் ஒன்று 1978ஆம் ஆண்டு கட்டப்பட்டதுடன் அதன் பெயரும் மாற்றம் பெற்று, உதவி அரசாங்க அலுவலகமாகவும் பின்னர் பிரதேச செயலகமாகவும் நடைபெற்று வந்தது. இதில் முதன் முதலாக மறைந்த திரு. S.V.R. வேதநாயகம் அவர்கள் உதவி அரசாங்க அதிபராக பல வருடங்களாக கடமையாற்றியுள்ளார். 1983இல் தனியான புதியதோர் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு செயற்பட்டு வந்தது. 1989ஆம் ஆண்டு ஜனசக்தி நிகழ்ச்சித்திட்டம் செயற்பாட்டிற்கு வந்தபோது, 04 கிராம சேவையாளர் பிரிவுகளும் 22 கிராம சேவையாளர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இத்திட்டம் செயற்பட ஆரம்பித்தது. 1993.10.02ஆம் ஆண்டு பிரதேச செயலகம் உருவாக்கம் பெற்று திரு. மே. இராஜசெல்வகுமார் S.L.A.S. அவர்கள் பிரதேச செயலாளராக நியமனம் பெற்று கடமையாற்றினார்.

பின்வரும் காலப்பகுதிகளில் உதவி அரசாங்க அதிபராகவும் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியோரின் விபரங்கள் வருமாறு.

*01.* திரு. *எஸ்.வி.ஆர்.* வேதநாயகம் SLAS உதவி *அரசாங்க அதிபர் 1978.08.19-1990.09.01*
*02.* திரு. *சி.ரி. சச்சிதானந்தம்* உதவி *அரசாங்க அதிபர் 1990.10.02-1991.08.03*
*03.* திரு. *பி.* இராஜசெல்வகுமார் SLAS *பிரதேசசெயலாளர் 1991.09.04-1996.07.24*
*04.* திரு. எஸ். *அமலநாதன்* SLAS *பிரதேசசெயலாளர் 1996.12.25-2002.01.22*
*05.* திரு. *எ.கே.* தவராசா SLAS *பிரதேசசெயலாளர் 2002.02.15-2005.04.15*
*06.* திரு. எஸ். கரன் SLAS *பிரதேசசெயலாளர் 2005.04.16-2006.01.29*
*07.* திரு. வி. *அழகரெத்தினம்* SLAS *பிரதேசசெயலாளர் 2006.01.30-2011.12.31*
*08.* திரு. *கலாநிதி.* எம். கோபாலரெத்தினம் SLAS - (1) இன்றுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதவிப் பிரதேச செயலாளர்களாக கடமையாற்றியோரின் விபரங்கள்**

*01.* *திரு. எ.கே. தவராசா* SLAS

*02.* *திரு. எஸ். கரன்* SLAS

*03.* *திரு. கே. லவநாதன்* SLAS

*04.* *திரு. பி. பரசுராமன்* SLAS

**பிரதேச செயலகத்தின் பெயர்:- திருக்கோவில் பிரதேச செயலகம்**

கிராம சேவையாளர் பிரிவு - 22

மொத்த குடும்பங்கள் - 9275

மொத்த சனத்தொகை - 32095

பிரதேச செயலகப் பிரிவின் பரப்பளவு - 78.1சதுர மைல்

இப்பிரதேச மக்களின் முக்கிய வாழ்வாதார வருமானம் பெறும்வழிகளாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, ஆழ்கடல் மீன்பிடி, நன்னீர் மீன்பிடி, மேட்டுநில பயிர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், சிறு கைத்தொழில்கள், அரச மற்றும் தனியார் கூட்டுத் தாபனங்களிலும் தொழில் புரிவதன் மூலமும் வாழ்வாதார வருமானத்தை ஈட்டுகின்றனர்.

**எமது தொலை நோக்கு** (Our Vision)

"சிறந்த செயற்பாட்டுத் தன்மை கொண்டதும் வினைத் திறனான பொதுச் சேவையை வழங்குவதுமான ஒரு நிகரற்ற தாபனமாகத் திகழ்தல்"

**எமது குறிக்கோள்** (Our Mission)

"பொது மக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு, வள ஒருங்கிணைப்பு மற்றும் சிறப்பான செயற்பாட்டுத் தன்மை கொண்ட பிரதேச மட்ட நிர்வாகத்துடன் கூடிய வகையில் வினைத் திறனானதும் நிலைத்திருக்கத் தக்கதும் நன்கு திட்டமிட்டதுமான அபிவிருத்தி செயன்முறையூடாக இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரித்தல்.

செயலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கான சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு பின்வரும் பிரிவுகள் செயற்படுகின்றன;

01. நிர்வாகப்பிரிவு
02. நிதிப்பிரிவு
03. அடையாள அட்டைப்பிரிவு
04. பதிவாளர் பிரிவு
05. சமூக சேவை நலனோம்பல் பிரிவு
06. காணிப் பிரிவு
07. திட்டமிடல் பிரிவு
08. சமுர்த்திப் பிரிவு

இப்பிரிவுகளினால் மத்திய மற்றும் மாகாண சபைக்குரிய வேலைகள் நிறைவேற்றப்படுகின்றன. இனி இப்பிரிவுகளினால் மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றிப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. நிர்வாகப்பிரிவு:-

இப்பிரிவினால் ஜனாதிபதி நிதி உதவிக்கான பொதுமக்களின் விண்ணப்பங்களை சிபாரிசு செய்து அனுப்புதல், ஆளுனரின் நிதி உதவிக்கான விண்ணப்பங்களை சிபாரிசு செய்தல், புனர்வாழ்வுக் கொடுப்பனவுக்கான சகல விண்ணப்பங்களையும் சிபாரிசு செய்து அனுப்புதல், கிராம சேவையாளர்களினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு மேலொப்பமிடல், புலமைப்பரிசில் பெறுவதற்கான விண்ணப்பங்களை சிபாரிசு செய்தல், வருமான அத்தாட்சிப்பத்திரம் வழங்கல், சகல நாடுகளுக்குமான கடவுச் சீட்டு விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

## 02. நிதிப்பிரிவு

இப்பிரிவினால் மாதாந்த ஓய்வூதியம் தயாரித்து வழங்குதல், ஓய்வூதிய நிலுவைக் கொடுப்பனவுகள் தயாரித்தலும் வழங்குதலும், ஓய்வூதியம் பெறுதலுக்கான புகையிரத ஆணைச்சீட்டுக்கள் வழங்கல், வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல், வாகன உரிமை மாற்றம் செய்தலுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல், வியாபாரநிலையப் பதிவுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளலும், பதிவு செய்தலும் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

## 03. அடையாள அட்டைப் பிரிவு:

அடையாள அட்டை என்பது அத்தியாவசியமான ஒன்றாகும். குறித்த வயதுவந்ததும் அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒருவர் முதன் முறையாக அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்வதாயின் 16வயதினைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும். தமது பிரிவு கிராமசேவை அலுவலகரிடம் குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். 50 வயதுக்குட்பட்டவராயின் பிறப்புச் சான்றிதழ் (இரண்டு) அல்லது உத்தேச வயதுச் சான்றிதழ் (ஒன்றும்) (மூலப்பிரதி) இணைத்தல் வேண்டும். 50வயதுக்கு மேற்பட்டவராயின் பிறப்பு சான்றிதழ் இல்லாதவிடத்து அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களை ஒப்படைத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தாரி விவாகமானவராயின் தன்பெயரை கணவரின் பெயருடன் சேர்க்க வேண்டுமாயின் விவாகச்சான்று பத்திரத்தின் மூலப் பிரதியை இணைத்தல் வேண்டும். இவைகளுடன் பொதுவாக 1 3/8 x 7/8 அங்குல வர்ண புகைப்படங்கள் ஐந்தினையும் 17வயதுக்கு குறைந்த விண்ணப்பதாரியாயின் 3/- முத்திரையும் 30/- முத்திரையும், சுயவிலாசமிடப்பட்ட கடித உறையையும், 17வயதுக்கு மேற்பட்டவராயின் 13/- முத்திரையும்,30/- பெறுமதியான முத்திரையும் ஒட்டி சுய விலாசமிடப்பட்ட கடித உறையையும், தொழில் புரிபவராயின் அதனை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் இணைத்து கிராமசேவையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

இவ்வாறு கிராம சேவையாளரினால் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் அடையாள அட்டை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல், தொலைந்த அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல். (தொலைந்த அடையாள அட்டையினை ஒருவர் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்ட அறிக்கை, தொலைந்த அடையாள அட்டையின் இலக்கம் பாவித்தது தொடர்பில் உறுதிப்படுத்தும் வேறு ஆவணங்கள் 15/- முத்திரை, 30/- முத்திரை, போன்றவற்றுடன் சுய விலாசமிடப்பட்ட கடித உறை, பெறுவதற்குரிய மற்றும் ஏனைய ஆவணங்களையும் கிராம சேவையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.) போன்றன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள் அடையாள அட்டையில் திருத்தம் / பழுதடைந்த காரணத்திற்காக புதிய அடையாள அட்டையினைப் பெற வேண்டுமாயின் விண்ணப்பதாரி தற்போது பாவனையிலுள்ள அடையாள அட்டை, தற்போது பாவிக்கும் அடையாள அட்டையின் இலக்கங்கள் பாவித்தமையை உறுதிப்படுத்தும் ஆவணம் 15/-முத்திரை, 30/- முத்திரை ஒட்டிய சுய விலாசமிடப்பட்ட கடித உறை ஒன்றையும், ஏனைய ஆவணங்களுடன் கிராம அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

இவ்வாறு அனுப்பப்படுகின்ற அடையாள அட்டை உரிய திணைக்களத்துக்குப் போய்ச் சேர்ந்துள்ளதா இல்லையா என்பதை அறிய வேண்டுமாயின் RPD (space) STS space விண்ணப்ப இலக்கம் என பதிவு செய்து, 1919க்கு அனுப்புவதன் மூலம் விண்ணப்பம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அவசர தேவைக்காக ஒருநாள் சேவை நடைமுறையிலுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் அடையாள அட்டைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

## 04. பதிவாளர் பிரிவு:

இப்பிரிவினால் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை சற்று சுருக்கமாகப் பார்ப்போம்.

### 4:1 பிறப்புப் பதிவுகள்:

ஒரு குழந்தை பிறந்தவுடன் எமது நாட்டின் பிறப்பு, இறப்பு சட்டத்தின்படி பெற்றோர் அக்குழந்தையினை பதிவுசெய்தல் கட்டாயமானது. பிறப்பு என்பது வீட்டிலோ அல்லது வைத்தியசாலையிலோ நிகழலாம். ஆனால் இந் நிகழ்வை உரிய பகுதிக்கான பிரதேச பதிவாளரிடம் பதிவு செய்தல் வேண்டும். இதற்கான கால அவகாசமாக மூன்று மாதங்களாக எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே போன்று திருமணச்சட்டமும்,இறப்புச் சட்டமும் உரிய நிகழ்வுகளை உடனுக்குடன் பதிவு செய்வதை வலியுறுத்துகிறது.

வைத்தியசாலையில் குழந்தைகள் பிறந்தால் வைத்திய அதிகாரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட படிவமும், வீட்டில் குழந்தைகள் பிறந்தால் கிராம அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட படிவமும் பதிவுக்குரிய ஆவணமாக கருதப்படும். பிறப்பு நிகழ்ந்து மூன்று மாதத்திற்கு உட்பட்டால், குறித்த ஆவணங்களுடன் பிரதேச பதிவாளரினால் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. மூன்று மாதத்திற்கு மேற்பட்டால் குறித்த ஆவணங்களுடன் மாவட்ட பதிவாளர் அல்லது மேலதிக மாவட்ட பதிவாளரின் அனுமதியுடன் பிரதேச பதிவாளரினால் பிரிவு 24ன் கீழ் பதியப்படுகிறது. ஒரு வருடத்திற்கு மேற்படுமாயின், அக் குழந்தையின் பிறப்பு காலங்கடந்த பிறப்பாகக் கருதப்பட்டு அதற்கான ஆவணங்களுடன், பிரதேச செயலாளர் ஊடாக உதவிப்பதிவாளர் நாயகம் கிழக்கு வலயம் மட்டக்களப்பு அவர்களதும், மாவட்ட காணிப் பதிவாளர், அம்பாறை அவர்களதும் அனுமதியுடன் பிரதேச பதிவாளரினால் பதியப்படுகிறது.

பிறப்புக்கள் சாதாரண பதிவுக்குட்பட்டு அல்லது காலங்கடந்த பதிவுக்குட்பட்டும் அடங்காது, ஆவணங்கள் பற்றாக்குறையாக காணப்படுமிடத்து, உரிய நபருக்கு உத்தேச வயது அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொடுக்க பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் இப்பதிவால் திகதி, மாதங்கள் என்பன குறிப்பிடப்படமாட்டாது. ஆண்டுமட்டும் உத்தேசமாக குறிப்பிடப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4:2 திருமணப் பதிவுகள்

திருமண நிகழ்வுகள் 14 நாட்கள் முன்னறிவித்தலுடன் இருதரப்பினரின் சம்மதத்துடன், உரிய பதிவாளரினால் பதியப்படல் வேண்டும். பதிவுகள் மாவட்டப்பதிவாளர், மேலதிகமாவட்டபதிவாளர், பிறப்பு, இறப்பு விவாகப் பதிவுகாரர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

### 4:3 இறப்புப் பதிவுகள்:

ஒருவர் திடீரென மரணித்தால் திடீர் மரண விசாரணை அதிகாரியின் அறிக்கையும், நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அல்லது வீட்டில் மரணித்தால் வைத்திய அதிகாரியின் அறிக்கை அல்லது கிராம அலுவலரின் அறிக்கை பதிவுக்குரிய ஆவணங்களாகக் கருதப்படுகிறது.

பிறப்பு பதிவு போலவே இறப்பு பதிவுகளும் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் உத்தேச இறப்பு பதிவு இல்லை. தற்போது எமது அரசினால் 2010ஆம் ஆண்டு 19ஆம் இலக்க இறப்புக்களின் பிரிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் காணாமற்போன நபர்களது இறப்பினைக் காட்ட பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. (பதிவாளர் நாயக சுற்றறிக்கை இலக்கம் 02/2011)

இம் மூன்று நிகழ்வுகளையும் உரிய காலத்தில் பதிவு செய்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் பல பிரச்சினைகளை எதிர் நோக்க நேரிடும். இப்பிறப்பு, இறப்பு , திருமணப் பதிவுகளை ஒருவர் பெறவேண்டுமாயின், பிறப்பு பதிவினை பெறுவதற்கு பிறந்த திகதி, பதிவு இலக்கம், பதிவு திகதியுடன், விண்ணப்ப இலக்கம் பதிதல் (ஆ)63இனூடாக விண்ணப்பித்து ஒரு பிரதி பெறுவதாயின் ரூ.25/- முத்திரை ஒட்டல் வேண்டும். இவ்விடயங்களில் ஒன்று தெரியாதவிடத்து, குறித்த விண்ணப்பத்தினூடாக, 50/- முத்திரை ஒட்டல் வேண்டும். இறப்பு பதிவை விண்ணப்ப இலக்கம் பதிதல் (ஆ)63 (அ)வினூடாகவும் திருமணப் பதிவை விண்ணப்ப இலக்கம் பதிதல் (ஆ)121இன் ஊடாகவும் விண்ணப்பித்துப் பெறலாம். பிறப்புப் பதிவு பெறுவதில் கொடுக்கப்பட்ட நிபந்தனைகள் இவற்றுக்கும் பொருந்தும்.

## 05. சமூக சேவைகள் பிரிவு

எமது பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள சமூகப் பராமரிப்பு நிலையமானது குடும்பத்தின் மீது கவனஞ் செலுத்தி பாதுகாப்பு தேவைப்படும் பிள்ளைகள், சட்டத்துடன் முரண்பட்டிருக்கும் பிள்ளைகள் அபாயத்தை எதிர்நோக்கும் பருவத்தினர், இல்ல வன்முறைக்கும் பால்ரீதியான துன்புறுத்தலுக்கும் ஆளாகியிருக்கும் பெண்கள், தனியொரு பெற்றோரை தலைவனாக/தலைவியாக கொண்டிருக்கும் குடும்பங்கள், விசேட தேவையுடையோர் சிரேஷ்ட பிரஜைகள் குடிப்பழக்கத்துக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையானோர், மன அதிர்ச்சிகளுக்கு உள்ளானோர் போன்ற மேலதிக உதவிகள் தேவைப்படுவோர் மீது கவனஞ் செலுத்தி உதவுவதோடு, உளவியல் நலன்களையும் விருத்தி செய்கிறது. இதற்கமைய பல சமூக சேவை திணைக்கள செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருகிறது.

### 5:1 மாதாந்த பொதுசன உதவி வழங்கல்:-

சமுதாயத்தில் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள அன்றாட வாழ்க்கையில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத வறுமைக் கோட்டின் கீழ் எதுவித வருமானமும் இன்றி வாடுகின்ற மக்களுக்காக இவ்வுதவி வழங்கப்படுகிறது.

### 5:2 நோய் நிவாரணக் கொடுப்பனவு:-

புற்றுநோய், காசநோய், தொழுநோய் மற்றும் தலசீமியா போன்ற நோய்களினால் பாதிக்கப்படுகின்ற குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5:3 தற்செயல் நிவாரண உதவி:-

சிறியளவிலான சேதங்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகிறது. தற்செயலாக வீடு தீப்பற்றல், காற்றினால் வீடுகளுக்கு ஏற்படும் சேதம் மற்றும் காட்டு யானைகளால் ஏற்படும் பயிரழிவு போன்ற சிறிய அனர்த்தங்களுக்காக இவ்வுதவி வழங்கப்படுகிறது.

### 5:4 சுயதொழில் உதவிக் கொடுப்பனவு:-

5000/-ற்கு குறைந்த வருமானம் பெறும் பெண்கள் தலைமை தாங்கும் விதவைக் குடும்பங்களுக்கும், விசேட தேவையுடையோர் உள்ள குடும்பங்களுக்கும் இவ்வுதவி வழங்கப்படுகிறது.

### 5:5 விசேட தேவையுடையோர்களுக்கான உபகரணங்கள் வழங்கல்:-

மாதவருமானம் 3000/-ஐ பெறுகின்ற குடும்பங்களிலுள்ள விசேட தேவையுடையோர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படுகிறது. முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி, ஊன்றுகோல், வெள்ளைப் பிரம்பு, மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் கருவி, செயற்கைக் கால், கண் வில்லை போன்றன வழங்கப்படுகின்றது.

### 5:6 சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட அடையாள அட்டை வழங்கல்:-

60 வயதுக்கு மேற்பட்டோருக்கு இவ் அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

### 5:7 வலிந்துதவு சங்கங்களைப் பதிவுசெய்தல்:-

சமுதாய மட்டத்தில் விசேட தேவையுடையோர்கள், பணியாளர்கள், ஆதரவு அற்றோர்கள் போன்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை பிரதான நோக்காகக் கொண்ட மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்களிப்பு வழங்கும் வலிந்துதவு சங்கங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் இவ்வாறான செயற்பாடுகள் சமூக சேவைகள் பிரிவினால் மேற் கொள்ளப்படுகின்றன.

## 06. காணிப்பிரிவு

பொதுமக்களின் காணிகளுக்கான பெறுமதிச் சான்றிதழ் வழங்குதல், காணி உத்தரவுப் பத்திரம் வழங்குதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல், காணிகளுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கல், மரங்களை வெட்டுவதற்கான அனுமதி வழங்குதல் மரம் ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் கால் நடைகளை கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கல், அளிப்புப் பத்திரம் தயாரித்தலும், வழங்குதலும், சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நஷ்டஈடு வழங்குதல், நில அளவைக் கட்டளைகளைத் தயாரித்தல், அரசாங்க திணைக்களங்களுக்கு காணிகளை பாராதீனம் செய்தல், நீண்டகால குத்தகைக்கு காணிகளை வழங்குதல், ஆற்றுமணல், கருங்கல் போன்றவற்றுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல், காணிக் கச்சேரிகளை நடாத்தி காணி அற்றவர்களுக்கு காணி வழங்கல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

## 07. திட்டமிடல் பிரிவு:

பொதுமக்களுக்கான கமநெகும, திவிநெகும திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தல், வரவு செலவுத் திட்டநிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப்படுத்தல். கிராமங்களுக்கான மின்சார இணைப்புத் திட்டங்களைச் செயற்படுத்துதல், நீர்விநியோகத்திட்டங்களை செயற்படுத்துதல், பெண்கள், சிறுவர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து செயற்படுத்துதல், வீடமைப்புத் திட்டம், மீள்குடியேற்றம் போன்றவற்றை சீரான முறையில் செயற்படுத்துதல், பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், விவசாய ஆரம்பக்கூட்டம் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடாத்துதல் போன்ற செயற்பாடுகள் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. சமுர்த்திப் பிரிவு:

இப்பிரிவினால் வறிய மக்களை இனங் கண்டு, அவர்களுக்கான சமுர்த்தி முத்திரை விநியோகித்தல், சமுர்த்தி போசாக்கு முத்திரை விநியோகித்தல், மற்றும் சமுர்த்தி பெறுவோரின் வைத்திய சிகிச்சை, குழந்தைகளின் பிறப்பிற்கான கொடுப்பனவு, திருமணத்திற்கான கொடுப்பனவு போன்றவற்றை வழங்குதல், மாணவர்களுக்கான சிப்தொற புலமைப் பரிசில் வழங்கல், வாழ்வாதார உதவிகளை வழங்குதல், கட்டாய சேமிப்புக் கொடுப்பனவு வழங்கல், சிசு திரிய புலமைப்பரிசில் வழங்கல் மற்றும் நிலையான வைப்பில் முதலீடு செய்தல், கூட்டுக் காப்பீடு நிதியத்திலிருந்தும் கடன்காப்பீடு நிதியத்திலிருந்தும் இழப்பீடு வழங்கல், மண்ணெண்ணெய் முத்திரை வழங்கல் போன்றவை இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பிரிவு செயற்பாடுகளைத் தவிர, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம், சிரமதான வேலைகள், கிராம அபிவிருத்தி மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களை ஸ்தாபித்தல், சுழற்சி கடன்வழங்கல், தையல் பயிற்சி, பெண்களுக்கான பயிற்சி வழங்கல் தோட்ட வேலைகள் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றது.

சுற்றாடல் உத்தியோகத்தர் மூலம் பிரதேச சபையுடன் இணைந்து சூழலைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள், சூழல் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றது.

கலாசார உத்தியோகத்தர் மூலம் பாரம்பரிய கலைகளை மேம்படுத்துதல், துறைசார் கலைஞர்களை ஊக்குவித்தல், கலை மன்றங்கள், ஆலயங்களைப் பதிவு செய்தல், கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், பொருட்களை இனங்கண்டு அவற்றைப் பாதுகாத்தல், கலை கலாசார விழாக்களை நடாத்துதல், வயது முதிர்ந்த கலைஞர்களுக்கான கலைஞர் ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது.

விளையாட்டு உத்தியோகத்தர் மூலம் விளையாட்டுக் கழகங்கள் பதிவு செய்தல், விளையாட்டு உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல், விளையாட்டு போட்டிகள் நடாத்துதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் மூலம் இளைஞர் கழகங்களை ஸ்தாபித்தல், சிரமதான பணிகள் மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

புள்ளி விபர உத்தியோகத்தர் மூலம் எமது பிரிவிலுள்ள அனைத்துத் தரவுகளும் சேகரிக்கப்படுகிறது.

சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் மூலம் சிறுவர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

விதாதா நிறுவனத்தினை ஸ்தாபித்து, அதன் மூலம் புதிய விஞ்ஞான தொழினுட்பப் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. "நனசல" நிலையங்களை ஸ்தாபித்து அதன்மூலம் தொலைத்தொடர்புத் துறை விரிவுபடுத்தப்படுகிறது.

இவ்வாறு கிராமிய, சுற்றாடல், கலாசார, விளையாட்டு, இளைஞர், சிறுவர், விஞ்ஞான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஒவ்வொரு துறைக்குமுரிய உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே பொது மக்களுக்காக அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் அமுலாக்கப்படும் திட்டங்களைச் செயல்படுத்தி, அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதில் பிரதேசசெயலகம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

தொகுப்பு: **S.துஸ்யந்தராஜா**
*ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக் குழு




1வது வரிசை இடமிருந்து வலம்: திருமதி.S.செல்லத்துரை (ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்), திரு.கன இராஜரெட்னம் (கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர்), திரு.V. நவீர்தன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர்), திரு.Dr.டு. கோபாலரெத்தினம் (பிரதேச செயலாளர்), திரு.V.அரசரெட்னம் (சமுர்த்தி தலைமை முகாமையாளர்), திருமதி.ஜெகதீஸ்வரி நாதன் (ஆசிரியை)

2வது வரிசை இடமிருந்து வலம்: செல்வி.T.ராதிகா (கலாசார உத்தியோகத்தர்), கலாபூசணம் C.V.P. மாணிக்கம், திரு.T.பிரபு (முகாமைத்துவ உதவியாளர்), திரு.A. சசீந்திரன் (முகாமைத்துவ உதவியாளர்), கலாபூசணம் கா.வீரக்குட்டி, திருமதி. யோகா யோகேந்திரன் (ஓய்வு பெற்ற அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேச கல்வி அபிவிருத்தி பற்றிய ஒரு பார்வை

ஈழத்தின் தென்பகுதியில் திருக்கோவில் எனும் பிரதேசம் (செயலகப்பிரிவு) அமைந்துள்ளது. தமிழர்கள் தனிப் பெரும்பான்மை இனமாக வாழ்ந்துவரும் இப்பிரதேசம் 1977ஆம் ஆண்டு வரையும் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செயலகப் பிரிவுடன் இணைந்திருந்தது. இன்று இப்பிரதேசம் தனியான தொரு செயலகப்பிரிவாக இயங்கிவருவதன் காரணமாக இங்கு வாழ்ந்துவரும் மக்கள், சமூக, பொருளாதார, வளர்ச்சியில், மட்டுமன்றிப் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். இப்பிரதேசத்தில் பழமை வாய்ந்த கிராமங்களாகத் தம்பிலுவில், திருக்கோவில் ஆகிய கிராமங்கள் விளங்குகின்றன.

தம்பிலுவில், திருக்கோவில் உள்ளிட்ட பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகளின் வரலாற்றுப் பின்னணியை ஆய்வு செய்வதன் மூலமே கல்வி அபிவிருத்தி பற்றி அறியமுடியும். எமது பிரதேசத்திலுள்ள பாடசாலைகள் அனைத்தும் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்டிருந்தது. பின் அக்கரைப்பற்று வலயத்திலும் 24/12/2009இல் இருந்து திருக்கோவில் வலயத்துள் அடங்கியது.

தற்போது பாடசாலைகள் திருக்கோவில் கோட்டத்தில் காணப்படுகிறது. அவற்றுள் 1AB பாடசாலையாக தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயமும், 1C பாடசாலையாக விநாயகபுர மகாவித்தியாலயமும், ஏனைய திகோ/மெ.மி.த.ம. வித்தியாலயம், திகோ/தம்பட்டை மகா வித்தியாலயம் திகோ/ தாண்டியடி விக்னேஸ்வரா வித்தியாலயம் என்பவற்றிலும் கலைப்பிரிவு உ/த வகுப்புக்கள் நடை பெறுகின்றன. ஏனைய பாடசாலைகளில் தரம் 1-9ஆம் ஆண்டு வரையில் சரஸ்வதி வித்தியாலயமும், தரம் 1-5ஆம் ஆண்டு வரையில் கலைமகள் பாடசாலையும் விளங்குகின்றது. இவற்றின் வரலாற்றுப் பின்னணியை அறிவதன் மூலம் ஓரளவு வளர்ச்சிப் போக்கினை அறிய முடியும்.

பாடசாலைகளின் வகையீட்டின் அடிப்படையில் கலைமகள் வித்தியாலயத்தின் வரலாற்றினை பின்னோக்கிப் பார்க்கும் போது 1945.1.15ஆம் திகதி மட்டக்களப்பு பிரதேசத்தில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

ஓலைகளால் வேயப்பட்ட குடிசை ஒன்றே கற்றல் செயற்பாடுகளின் களமாக அமைந்திருந்தது தலைமை ஆசிரியராக திரு. சௌந்தரராஜா கடமையாற்றினார். இவரைத் தொடர்ந்து 1946-04-29 தொடக்கம் 1965-05-29 வரை திரு. பா. பரநிருபசிங்கம் அதிபராக கடமையாற்றிய வேளை 05 ஆசிரியர்களும் 265 மாணவர்களும் காணப்பட்டனர். ஒரு கட்டடமும் கட்டப்பட்டது. 1955இலும் ஒரு கட்டடம் கட்டப்பட்டது.

இவரைத் தொடர்ந்து திரு. சி.தெய்வநாயகம், திரு. கனகசபை, என்போர் தலைமை ஆசிரியராக குறுகிய கால கட்டங்களில் சேவை செய்தனர். 01.01.1970 இல் திரு.நா. வடிவேல் அவர்கள் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று 31-08-1978 வரை சேவை செய்துள்ளார். இவரின் காலத்திலே மேற்கு அரசினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07-03-1994இல் திரு. பா. நவரெத்தினம் என்பவர் அதிபராக செயற்பட்டார் பாடசாலையை சூழவுள்ள முட்கம்பி வேலிக்குப் பதிலாக மதில்கட்டப்பட்டது. இவர் சிறந்த ஆளுமைமிக்க அதிபராக செயற்பட்டார். அவருக்கு பின் திரு. சு. வேல்நாயகம் அவர்கள் 20.01.1997தொடக்கம் 01.01.1998 வரை கடமையாற்றியுள்ளார். அவரைத் தொடர்ந்து 20.01.1998இல் திருமதி.தி.நவரெத்தினம் அவர்கள் அதிபராக பதவியேற்றார். இவர் காலப்பகுதியில் அதிகசாதனைகள் இடம்பெற்று பாரிய அபிவிருத்தி கண்டுள்ளது. அதாவது தமிழ் மொழிதினம், ஆங்கிலமொழிதினப் போட்டிகளில் பல வெற்றிகள் பெறப்பட்டன வாசிகசாலையும் அமைக்கப்பட்டது.

புதிய உலகிற்கு வழியமைக்கும் மாணவர் திறன் கண்காட்சி நடைபெற்றது. 2001ஆம் ஆண்டிலே 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 16 மாணவர்கள் சித்தி பெற்றமை இவர்களில் 09 மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றனர். இவர் காலத்தில் கலைமகள் வித்தியாலயம் பாரியளவில் அறிவுத்துறையிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் விருத்தி அடைந்துள்ளது.

2002.05.29முதல் திரு A.D. ஜேம்ஸ் அதிபராக பொறுப்பேற்ற காலத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 8மாணவர்கள் சித்தியடைந்தனர். அதில் ஒரு மாணவன் 169புள்ளிகளைப் பெற்று அம்பாரை மாவட்டத்தில் முதன் நிலைபெற்றான். அத்துடன் "பிரியமான பாடசாலையை சிறார்களுக்கு வழங்குவோம்" என்ற வேலைத்திட்டம் கலைமகள் வித்தியாலய மாணவர்களின் பெற்றார்கள், நலன்விரும்பிகள், பழையமாணவர்கள் ஆகியோர் ஒத்துழைப்புடன் ஆரம்பமானது. கணனிக்கூடம் இத்தாலிய சிவில்புரடெக்ஷன்மிசன் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டது. பல்வேறு உதவிகள் அரசசார்பற்ற நிறுவனங்களால் இவர் காலத்தில் பெறப்பட்டது.

2008இல் திரு.S.சுந்தரமூர்த்தி அதிபராக பதவியேற்ற காலத்தில் "நாணயங்களின் கண்காட்சி" நடத்தப்பட்டது. வாசிப்புத்திறனை கண்டறிவதற்காக ஓர் பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது.

அவர் ஓய்வு பெற்ற பின் திரு B. சந்திரேஸ்வரன் அவர்கள் அதிபராகப் பதவியேற்ற காலத்தில் இவ் வித்தியாலய மாணவி மாலவன் சுபதா புலமைப்பரிசில் பரீட்சையில் 193 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கைரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கும், தம்பிலுவில் கிராமத்துக்கும் பெருமையைப் பெற்றுக் கொடுத்தார். அவ்வேளையில் பாடசாலையே விழாக்கோலம் பூண்டது. இலங்கை முழுவதும் வித்தியாலயத்தின் பெயரை பிரசித்தம் அடையச் செய்தது. தற்போது 12ஆசிரியர்களும் 313 மாணவர்களும் காணப்படுகின்றனர். இப்பாடசாலை அபிவிருத்திப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

**TypeII** பாடசாலையாகக் காணப்படும் திகோ/தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயத்தின் வரலாற்றுப் பின்னணியை நோக்கின் 1880ஆம் ஆண்டில் மேலைத்தேய மிசனரியினால் ஆரம்பிக்கப்பட்டு 1925இல் குரு குலக்கல்விமுறையாக தொடரப்பட்டது. அப்போது அதிபராக திரு. மு. வைரப்பிள்ளையும் 04 ஆசிரியர்களும் 10 மாணவர்களும் காணப்பட்டனர். கற்றல், கற்பித்தல் நுட்பமுறைகளாக கலந்துரையாடல், மணலில் எழுதும் முறை என்பன மேற்கொள்ளப்பட்டன கல்விக்கூடம் ஓலையினால் வேயப்பட்ட குடிசையாகக் காணப்பட்டது. பின்னர் 1945ஆம் ஆண்டளவில் அரசினால் இப்பாடசாலை கிழக்கு பெண்கள் பாடசாலை என்ற பெயருடன் இயங்கியது. அதிபராக திரு.வ. சிவநிருபசிங்கம் கடமையாற்றினார் 1946இல் திரு. வி. பரநிருபசிங்கம் அதிபரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250மாணவர்களும் 07 ஆசிரியர்களும் பாடசாலையில் காணப்பட்டனர். இக்காலத்தில் பிரித்தானிய மன்னனின் பிறந்த தின விழா 1947-06-12ஆம் திகதி வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.1948ஆம் ஆண்டளவில் சூரிய கடிகாரம் பாவிக்கப்பட்டமை சிறப்பம்சம் ஆகும். திரு. நா. தங்கராசா 1949 இல் அதிபரானார். பாலர் வகுப்பிலிருந்து 05ஆம் வகுப்புவரை நீண்ட காலமாக பாடசாலை இயங்கி வந்துள்ளது. அக்காலத்தில் 280 மாணவர்களும், 10ஆசிரியர்களும் காணப்பட்டனர். 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டுள்ளது. 1951 இல் பல திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 1953.12.03 ஆம் திகதி பாடசாலையில் பெற்றார்தினவிழா நடைபெற்றது. 1969ஆம் ஆண்டில் 05ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக ஒரு மாணவன் சித்தியடைந்ததையிட்டு பாடசாலை விழாக்கோலம் பூண்டது. 1969இல் 06ஆம், 07ஆம், 08ஆம் வகுப்புக்கள் என தரம் உயர்த்தப்பட்டது. 330 மாணவர்களும் 12 ஆசிரியர்களும் அக்காலகட்டத்தில் இருந்துள்ளனர்.

1969ஆம் ஆண்டிலேயே சரஸ்வதி வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்டது. 1971ஆம் ஆண்டில் இப்பாடசாலை பாலர் வகுப்பு தொடக்கம் 05ஆம் வகுப்பு வரையில் நடைபெற 06ஆம், 07ஆம், 08ஆம் வகுப்புக்கள், திகோ/ தம்பிலுவில் ம.ம. வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டது. 1989ஆம் ஆண்டுவரைக்கும் தொடர்ந்து 05ஆம் ஆண்டு வரையுள்ள பாடசாலையாகவே இயங்கியது. கல்வி நடவடிக்கைகளில் முன்னேற்றம் கண்டதனால் 1992இல் 09ஆம் வகுப்பிற்கு அனுமதிவழங்கப்பட்டு இயங்க ஆரம்பித்து 1994இல் அதிபராக இருந்த திருமதி. T. நவரெத்தினம் காலத்தில் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு முதல் முறையாக மாணவர்கள் தோற்றினர். பின் 2000ஆம் ஆண்டு புதிய சீர்திருத்தத்தின்கீழ் தரம் 1-9வரை பாடசாலை தரங்கள் குறைக்கப்பட்டன. தற்போது இப்பாடசாலை கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டு வருகிறது. அதாவது உயர் வகுப்புகளுக்கு கல்வி கற்பிக்கக் கூடிய ஆசிரிய ஆளணிகளையும், கணனி வசதிகளையும், ஏனைய பௌதிக வளங்களையும் கொண்டுள்ளதால் க.பொ (சா/த) வகுப்புக்களை ஆரம்பித்து உயர்கல்விபெறும் வாய்ப்பினை வழங்க முடியும்.

கலைப்பிரிவு (உ/த) கற்பிக்கப்படும் பாடசாலையான திகோ/மெ.மி.ம.வி. இன் வரலாற்றுப் பின்னணியை அவதானிப்பின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையாச் செட்டியார் என்பவர் இன்றுள்ள மெதடிஸ்த தேவாலயத்தின் மதகுருமார்களின் உதவியுடன் தேவாலயத்திற்குச் சொந்தமான காணியில் ஓலைக் கொட்டகை ஒன்றை அமைத்து 1881இல் திண்ணைப்பாடசாலை ஒன்றை அமைத்தார். அதில் கந்தையாச் செட்டியாரே அதிபராகவும், ஆசிரியராகவும் இருந்து கல்விகற்பித்தார். 1945இல் ஓலைக் கொட்டகை ஒன்றுகட்டப்பட்டு 90 பிள்ளைகள் கல்வி கற்றனர். 23வருடங்களாக இக் கட்டடத்திலேயே மாணவர்கள் கல்விகற்றனர். 1961ஆம் ஆண்டுக்கு முன்பு அரச உதவிபெறும் ஒரு பாடசாலையாக இது இருந்தது. மெதடிஸ்த திருச்சபையே நிர்வாகம் செய்தது. இதன் முகாமையாளரான திரு. S.A. செல்வநாயகம் அவர்கள் சிறந்த கல்விப்பணி புரிந்துள்ளார். 1961இல் இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்று மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயருடனே இயங்கிவருகின்றது. தற்போது இப்பாடசாலை பல்வேறுதுறைகளில் அபிவிருத்தி அடைந்து கொண்டு வந்தது. அரச/அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் அறிவியல்துறை, இணைப்பாடவிதான செயற்பாடுகள், கலைத்துறை உ/த வகுப்புக்கள் என்பன அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகோ/ தம்பட்டை மகாவித்தியாலயத்தின் வரலாற்றுப் பின்னனியை நோக்கின் ஆரம்பகாலத்தில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்னும் பெயரிலேயே திரு. K. சண்முகம் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. 12 மாணவர்கள் கல்வி கற்றனர். 2004.12.26இல் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பின்பு புதிய பாடசாலைக்கு திகோ/ தம்பட்டை மகாவித்தியாலயம் எனப் புதிய பெயர் சூட்டப்பட்டது. இதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் திரு. S. இரவீந்திரன் ஆவார். 05ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் கடந்த வருடங்களிலிருந்து இன்று வரையும் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. க.பொ. (சா/த) பரீட்சைகளிலும் மாணவர்களின் சித்தியடையும் வீதம் 55% ஆக உள்ளது. பெற்றோர்களின் ஊக்கமின்மையும் மாணவர்களின் அலட்சியமும், வறுமையுமே காரணமாகும். மேலும் க.பொ.த (உ/த) 2009இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தம்பட்டை பாடசாலையில் கல்வி அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. அங்குள்ள மக்களில் பெரும்பகுதியினர் மீன் பிடி நடவடிக்கையிலும், விவசாய நடவடிக்கையிலும் பூசாரிகள் பரம்பரை எனக் காணப்படுவதால் பெற்றார் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பும் சீராக இருப்பதன் மூலம் மாணவர்களின் கல்வித்தரம் எதிர்காலத்தில் அபிவிருத்தி அடைய சந்தர்ப்பம் உண்டு.

திருக்கோவில் பிரதேச கல்வி அபிவிருத்தி பற்றிய பார்வையில் இப்பிரதேசத்தில் ஒரேயொரு 1AB பாடசாலையாக திகோ/ தம்பிலுவில் ம.ம.வித்தியாலயம் விளங்குகிறது. இப்பாடசாலையின் வரலாற்றுப் பின்னணியை அவதானிப்பின் தம்பிலுவில் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்த பலருள் முதன்மையானவர், மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதர் குஞ்சித்தம்பி ஆவார். அவரின் மாணவராகிய அமரர்களாகிய திரு. ஆ. நடராசா, திரு. ஐ. பேரம்பலம், திரு. உ. நவரெத்தினம் என்பவர்களும், திரு. ஜோன் நடராசா, திரு. வ. சிவநிருபசிங்கம், திரு. வீ. பரநிருபசிங்கம் திரு. அ. கனகரெட்ணம், திரு. ச. வன்னியசிங்கம் (தமிழ்ச்சான்றோன்), திரு. நா. வடிவேல் ஆகிய அமரர்கள் தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் ஆரம்பகர்த்தாக்களாக விளங்கினார்கள். இப்பாடசாலையின் வரலாற்றினை நோக்கின் 1945ஆம் ஆண்டு தொடக்கம் எமது நாட்டில் மிசனறியினர் கல்வித்துறையில் மாபெரும் மாற்றத்தினை ஏற்படுத்தினர். அதன் வெளிப்பாடு தம்பிலுவில் கிராமத்திலும் ஏற்பட்டது. அதாவது கிறிஸ்தவர்கள் இரு பாடசாலைகளை நிறுவினர். இந்தச் செயற்பாடு இந்துக்களின் கலாசாரத்துடன் கூடிய தமிழ்ப்பாடசாலைக்கான ஒரு தேவையை ஏற்படுத்தியது. ஏனெனில் தம்பிலுவில் பிரதேசமானது இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டமைந்ததேயாகும்.

1958இல் கனிஷ்ட பாடசாலை (Junior School) எனும் பெயரில் ஒரு பாடசாலை தம்பிலுவில் 02ஆம் பிரிவில் நிறுவப்பட்ட போது. அதில் 05ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றார்கள். இதில் திரு. K. சோமசுந்தரமும், திரு.S.செபமாலையும் அதிபர்களாகக் கடமையாற்றினர். இப்பாடசாலையில் நிலவிய இடநெருக்கடியால் தம்பிலுவில் மகாவித்தியாலயம் ஒன்று அமைக்கப்பட்டது. இப்பாடசாலை கனிஷ்ட பாடசாலையின் தொடராகும். இந்தப்பாடசாலைக்குரிய காணியை தருமரெட்ணம் வன்னிமை வழங்கினார். தம்பிலுவில் கிழக்கு, மேற்கு பாடசாலைகளிலிருந்தும், திருக்கோவில் மெதடிஸ்தமிசன் பாடசாலையிலிருந்தும் 05ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்ந்து க.பொ.த (சா/த) வரையும் கல்வி பயின்றனர். ஒரேயொரு கட்டடத்தையும் (வள்ளுவர் மண்டபம்) 05உதவி ஆசிரியர்களையும் 200 மாணவர்களையும் கொண்டதாக இப்பாடசாலை விளங்கியது. க.பொ.த. (சா/த) வரையும் கல்விபயின்றனர். கலைப்பாடங்களே கற்பிக்கப்பட்டன. 1961இல் திரு. S.M. லீனா அதிபராக இருந்த காலத்தில் கல்வி அதிகாரி ஜனாப் கடாட் அவர்களின் உதவியினால் மேலும் ஒரு கட்டடம்கிடைத்தது அமரர் திரு. கணபதிப்பிள்ளை (சங்கீதபூசனம்) அவர்களால் "திருநிறை உலகுயிர் பணிசெய்யும் இறையே..." என ஆரம்பிக்கும் பாடசாலைக் கீதமும் இயற்றப்பட்டது.அத்தோடு 10ஆம் வகுப்பு விஞ்ஞானப்பிரிவும், கலை 12ஆம் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரகலைப் பிரிவில் திரு.சாமித்தம்பி பொன்னுத்துரை எனும் மாணவன் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி சாதனை படைத்தான். 1969இல் திரு. S.பரராசசிங்கம் அதிபரானார். இவர் குறுகியகாலம் பணியாற்றினார். 1970இல் திரு. சச்சிதானந்தசிவம் அதிபரானார். இவர் காலத்தில் வித்தியாலயத்தின் கல்வி கலாசார, விளையாட்டுப் போன்ற அனைத்துத் துறையின் வளர்ச்சிக்கும் அளப்பெரிய சேவையாற்றியுள்ளார். ஒரு வித்தியாலயத்தின் வளர்ச்சியை க.பொ.த. (சா/த) பெறுபேறுகள், க.பொ (உ/த) பெறுபேறுகள், பல்கலைக்கழக அனுமதிகள், இணைப்பாடவிதான செயற்பாட்டின் சாதனைகள் என்பன எடுத்துக்காட்டும். இவ்வித்தியாலயத்தில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை அவதானிக்கும் போது 1964ஆம் ஆண்டிலிருந்து 2000ஆம் ஆண்டுவரையும் க.பொ. (சா/த), க.பொ (உ/த) பெறுபேறுகள் படிப்படியான வளர்ச்சியும், 2000ஆம் ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டுவரையில் தோற்றியோர் தொகையும் அதிகம் சித்தியடைந்தவீதமும் அதிகம், 2010ஆம் ஆண்டிற்குப் பின் சித்தியடைந்த வீதம் குறைவடைந்து செல்கிறது. பல்கலைக்கழக அனுமதிவீதமும் குறைவடைந்து செல்கிறது.

1958இல் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை தனது அரை நூற்றாண்டைக் கடந்து வீறுநடை போடுகிறது. ஒரு பாடசாலைக்கு இன்றியமையாத வளம் பௌதீகவளங்களும், மனிதவளங்களும் ஆகும். பௌதீகவளங்கள் எனும்போது பாடசாலை அமைந்துள்ள சூழல், கட்டடங்கள், அதன் உட்கட்டமைப்பு வசதிகள், நீர்வசதி, மின்மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களின் வசதிகள் என்பன இவை இப்பாடசாலையில் காணப்படுகின்றன.

1989-12-04இல் மத்திய மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்ட இப்பாடசாலையானது 05ஏக்கர் நிலப்பரப்பினில் தற்போது 1AB, பாடசாலையாகத் திகழ்கின்றது. 11 கட்டடங்களைக் கொண்டுள்ளது அதிலே இருமாடிக் கட்டடங்கள் 05 காணப்படுகின்றது. மாணவர்களின் கற்றல், கற்பித்தல், செயற்பாடுகளுக்கு 40 வகுப்பறைகள் காணப்படுகிறது. இவைகளில் ஆங்கிலப் பிரிவுக்கு ஒரு தனியான இருமாடிக் கட்டடம் ஒதுக்கப்பட்டுள்ளது. 06-11ஆம் தரம்வரை ஆங்கில மூலக்கல்வி கற்பிக்கப்படுகிறது. "A" எனும் எழுத்தினால் குறிக்கப்படும் வகுப்புக்களனைத்தும் ஆங்கிலப்பிரிவுக்கு உரியவை. கற்றல் செயற்பாடுகள் சரியானமுறையில் அமைவதற்கு தளபாடங்கள் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றது. இப் பாடசாலையில் தளபாடங்கள் பற்றாக்குறைவாகவே காணப்படுகிறது.

இப் பாடசாலையில் கணனிக் கற்கை நிலையமானது ஆசிய, அபிவிருத்தி வங்கியின் அனுசரணையின் கீழ் கிடைக்கப் பெற்றது. Interned, E.mail தொடர்பு சாதனங்களின் துணை கொண்டு மாணவர் சமுதாயம் எதிர்காலம் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும். பாடசாலையை பிரசித்தம் அடையச் செய்யும் வளங்களில் ஒன்றாக விடுதி காணப்படுகிறது. இப்பாடசாலையில் விடுதி ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பதை தீர்க்கதரிசனமாக நினைத்து செயற்பட்டவர் முன்னாள் அதிபர் திரு. மு. சச்சிதானந்தசிவம் ஆவார். அதனை நடை முறைப்படுத்தியவர் முன்னாள் அதிபர் திரு.V. ஜயந்தன் அவர்கள். இவருடைய காலத்தில் இப்பாடசாலையில் பொன்விழா கொண்டாடப்பட்டு சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

இப்பாடசாலையில் சேவையாற்றிய அதிபர் பெருஞ்தகைகளில் முதல் அதிபராக திருவாளர். K.சோமசுந்தரம் அவர்கள் விளங்குகிறார். 1958ஆம் ஆண்டிற்கும் 2000ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சேவையாற்றிய அதிபர்களில் திருவாளர் எஸ்.எம். லீனா அவர்களதும், திருவாளர்.எம். சச்சிதானந்தசிவம் அவர்களதும் சேவைக்கு உட்பட்ட காலப்பகுதியில் பாடசாலை பல துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட்டதை இன்றும் கூட அவர்கள் காலத்தில் கற்ற மாணவர்களின் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளனர். கல்வியும், ஒழுக்கமும் இரு கண்களாக மதிக்கப்பட்டு சீரிய வளர்ச்சி கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையும் இவ்வித்தியாலயம் பன்முகப்பட்ட வளர்ச்சியைக் கண்டது. கலைத்துறை, வர்த்தகத்துறை, மருத்துவத்துறை, பொறியியல்த்துறை என விரிவுபட்டு மாணவர்கள் உயர் கல்வியைப் பெற்றகாலம். இதற்கு கர்த்தாவாக விளங்கியவர் திருவாளர் V. ஜயந்தன் அவர்கள் 2010ஆம் ஆண்டுக்கு பின் கல்வி, ஒழுக்கம் இரண்டிலும் இப்பாடசாலை பின்னடைந்து காணப்படுகிறது.

நிர்வாகத்தில் அரசியல் அழுத்தம், நிர்ப்பந்தம் காரணமாக நிர்வாகக் கட்டமைப்பில் செயல்திறன் அற்ற ஆளணியினால் கல்வி, ஒழுக்கம் என்பன எதிர்க் கணியமாகச் சென்று கொண்டிருப்பதைஅவதானிக்கமுடிகிறது. அத்துடன் பௌதீக வளங்கள், திறமையான ஆசிரியர் வளங்கள் இருந்தும் கல்வியின் குறித்த இலக்கை அடைய முடியாத நிலையில் மாணவ சமூகம் காணப்படுகிறது.

இப் பிரதேசத்திலுள்ள ஒரு 1AB பாடசாலையும் அத்துடன் 2011ஆம் ஆண்டு 1000 பாடசாலைகள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழும் உள்வாங்கப்பட்ட பாடசாலையுமாகும். இவ் உள்வாங்கல் பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டும் இவ்வித்தியாலயம் ஒழுக்கம், அறிவியல் துறையிலும் வளர்ச்சியடைய வேண்டுமெனில், வினைத்திறன் உள்ள நிர்வாக கட்டமைப்பு அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் தவிர திகோ/விநாயகபுர வித்தியாலயமும் படிப்படியாகத் தரம் உயர்த்தப்பட்ட பாடசாலையாகும். 1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்ட பாடசாலை ஆதலால் கலைத்துறை, விஞ்ஞானத்துறை என்பன ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இப்பாடசாலையின் வரலாற்று பின்னணியை நோக்கும் போது, 1962இல் குடியேற்றக் கிராமமாக தோற்றம் பெற்ற விநாயகபுரத்தில் குடியேறிய மக்களின் பிள்ளைகளுக்காக தம்பிலுவில், திருக்கோவில் கிராமத்தில் கல்விகற்ற இளைஞர், யுவதிகளின் உதவியுடன் கிராமமுன்னேற்றச் சங்க உறுப்பினர்களின் உதவியினால் பாடசாலை ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் 13 தொண்டர் ஆசிரியர்களும் 200 மாணவர்களும் கலந்து கொண்டனர். 1965வரை இப்பாடசாலை பதியப்படாமல் இயங்கிவந்தது.

பின்பு பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் M.A. அப்துல் மஜித் அவர்களினதும், கிராமாட்சிமன்றத் தலைவர் நடராஜா தர்மலிங்கம் அவர்களினதும் பெரு முயற்சியினால் 11-01-1965 இல் "விநாயகபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என கல்வியமைச்சில் பதியப்பட்டது". இப்பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியராக திரு.க.சுப்பிரமணியம்கடமையாற்றினார்.

01.09.1966இல் தொடர்ந்து தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்கள் அரசாங்க ஆசிரியர்களாகப் பதியப்பட்டனர். 1981இல் 06ஆம் வகுப்பு தொடங்கப்பட்டது. 1986இல் கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்காக தோற்றிய 17 மாணவர்களில் 11 பேர் சித்தி அடைந்தனர். இப் பாடசாலையின் ஸ்தாபகர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு.வேல்மணி ஆவார். 1992இல் க.பொ.த (உ/த) கலைப் பிரிவுக்கான அனுமதி கிடைத்தது.

இப்பாடசாலை அதிபர் திரு. வி. சதாசிவம் அவர்கள் 1986இல் கடமையேற்று 14வருடம் அதிபராக கடமையாற்றி இப்பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தி அளப்பரிய சேவையாற்றியதுடன் சிறந்த சமூகத் தொடர்பை ஏற்படுத்தினார். ஆனால் அவரும் சேவைக்கான காலம் இருந்தும் முன்னதாகவே ஓய்வு பெற்றார். அதன் பின் இப்பாடசாலையை பொறுப்பேற்ற அதிபர்கள் தொடர்ச்சியாக கடமையாற்ற முடியாமல் வெளியேறினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையான மாணவர்களை உள்ளடக்கிய இப் பாடசாலையின் நிலையை அச் சமூகம் கருத்திற் கொள்ள வேண்டும். இப்பாடசாலையின் வளர்ச்சிப் படிநிலை வலயத்தின் பார்வையிலே தங்கியுள்ளது.

1996இல் முதன்முதலாக 05ஆம் ஆண்டு புலமைப் பரிசில் 25 வருடங்களுக்குபின் செல்வன் முருகமூர்த்தி விஜயாலயன் என்ற மாணவன் சித்தியடைந்தான் 2000ஆம் ஆண்டில் ச. ஜெயசீலன் பல்கலைக் கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டார். 2002இல் முதன் முதலாக மூன்றுபாடங்களில் செல்வன் யோ. யோகநேசன் அதி விசேட சித்தியடைந்ததுடன், அம்பாரை மாவட்டத்தில் முதலாம் நிலையினையும் அடைந்தார்.

தாண்டியடி பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள பிரதேசத்தில் 30.05.1955இல் தாண்டியடி அரச தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்பமாகியது. இதன் முதலாவது அதிபர் திரு சோமசுந்தரம் ஆவார். 2000ஆம் ஆண்டு கா.பொ.த. சா/த பரீட்சைக்கு மாணவர்கள் முதன் முதல் தோற்றிய பின் 2009/5இல் இப்பாடசாலைக்கு திரு சோ. பரஞ்சோதி அதிபர் காலத்தில் க.பொ.த. உ/த கலை வகுப்புக்கான அனுமதி கிடைத்தது. இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் விளையாட்டுத் துறையில் இப்பாடசாலை சிறந்து விளங்கியது. மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு கூடிய பங்கு அளித்தவர் முன்னாள் அதிபர் திரு. சோ. சுந்தரமூர்த்தி ஆவார்.

K. அனித்தா, K. தர்சன், K. சிறிதரன், N. தியாகராஜா போன்ற மாணவர்கள் 2010,2011ஆம் ஆண்டுகள் அகில இலங்கை ரீதியிலான விளையாட்டுப் போட்டியில் 400m, 1000m, 1500m போட்டிகளில் பங்குபற்றினர். இதில் K. தர்சன் ஜனாதிபதியின் ஊக்குவிப்பு திட்டத்தில் 100000 ரூபாய் பணப்பரிசினையும் பெற்றுக் கொண்டார்.

04.05.1959இல் மணற்காடு அரச தமிழ் கலவன் பாடசாலை ஆரம்பமானது. இப்பாடசாலையின் அதிக காலம் தலைமை ஆசிரியராக கடமையாற்றியவர் திரு ஐ. பேரம்பலம் ஆவார். இவருடைய காலங்களில் இப்பாடசாலை மிகச் சிறப்பாக இயங்கியது. இங்கு 1-7ஆம் வகுப்புவரை இருந்தது. இப்பாடசாலை சுனாமியின் தாக்கத்திற்குப் பின் அழகான ஓர் பாடசாலையாக காட்சியளிக்கிறது. தற்போது இப்பாடசாலையின் பெயர் திகோ/அருனோதயா வித்தியாலயமாக மாற்றப்பட்டுள்ளது. அதே ஆண்டு (1959) முனையக்காடு அரச தமிழ் கலவன் பாடசாலை, திகோ/குமர வித்தியாலயம், திகோ/பரமேஸ்வரா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை போன்ற பாடசாலைகள் இதே ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கோரைக்களப்பு சக்தி வித்தியாலயம் 01.01.92ஆம் ஆண்டு 52மாணவர்களுடன் ஆரம்பமாகியது. இதன் முதலாவது அதிபர் திரு சு. தவராஜா இன்று இப்பாடசாலை பாரிய வளர்ச்சியுடன் க.பொ.த. சா/த வகுப்புக்கள் வரை மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பணியாற்றியவர் முன்னாள் அதிபர் திரு. ச. பீதாம்பரம் ஆவார்.

விநாயகபுரம் மங்கைமாரியம்மன் தோட்டத்தில் ஓர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இயங்கிவந்தது. அங்கு திருக்கோவிலைச் சேர்ந்த செல்லத்தம்பி ஆசிரியர் அதிபராக கடமையாற்றினார். தோட்டத்திலிருந்தவர்கள் விநாயகபுத்தில் குடியேறியமையால் இப்பாடசாலை காலப்போக்கில் மூடப்பட்டது. பொதுவாக நோக்குமிடத்து இப்பாடசாலைகள் அனைத்தும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையிலுள்ளது. உலகிலுள்ள பிரதேசங்களின் அபிவிருத்திப் பின்னணியை நோக்குங்கால் அவற்றிற்கான அடித்தளங்கள் கல்வியின் ஊடான வளர்ச்சியின் விளைவுகளாகத் தானிருக்கின்றது. அந்த வகையில் 16ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது ஐரோப்பாக் கண்டத்தையே அபிவிருத்தியடையச் செய்தது. எமது நாட்டிலும் பாரம்பரிய கல்வி மரபுகள் பலபரிமாணங்களில் வளர்ந்து வரும் போது ஐரோப்பியரது ஊடுருவல்கள் மேலைத்தேய கல்வியை வலிந்து புகட்டும் நிலைமைகளை ஏற்படுத்தவறவில்லை அவற்றின் விளைவுகள் இன்று எம்மை உலக மயமாக்கலுக்குள் விரைவாக நுழைவதற்கு வழிகோலின என்றே கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிசனரிகள் இலங்கையில் சமயப் போதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து கல்வியை வழங்கும் நிலைமைகளை ஏற்படுத்தின. அதிலும் இலங்கையின் வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தை போர்த்துக்கேயர் கைப்பற்றியது முதல் ஆங்கிலேயர் வசமானது வரை அறிவைத்தேடும் முயற்சிகளில் அப்பிரதேசத்து மக்கள் தம்மை இணைத்துக் கொண்டனர். அதற்கான சூழ்நிலைகளை ஆறுமுகநாவலர் ஏற்படுத்தியது யாழ்ப்பாணம் கல்வியில் ஏனைய பிரதேசங்களை விட முன்னணியில் திகழ்வதற்கு காரணமாயிருந்தது. மட்டக்களப்பு பிரதேசம் ஒரு நூற்றாண்டுகளையும் கடந்துதான் கல்வியினூடான தேடல்களை ஆரம்பித்தது எனலாம். குறிப்பாக சுவாமி விபுலானந்தரது காலத்துக்குப்பின் ஏற்பட்ட அறிவு ரீதியான சிந்தனைகளே இங்குள்ள மக்களை தூண்டியது. மட்டக்களப்பை மையமாகக் கொண்டு கிழக்கிலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் கல்வியினூடான தேடல்களில் ஈடுபட்டது.

திருக்கோவில் பிரதேசத்திற்கு கி.பி.1880ஆம் ஆண்டுகளின் பின்னர்தான் பாடசாலைகள் அறிமுகமாயின. அப்பாடசாலைகளிலிருந்து வெளியேறிய மாணவர்களில் மிகக்குறைந்த வீதமானோரே துறை தேர்ந்தவர்களாக முடிந்தது. கால வோட்டத்தில் கல்வி என்பது அடிப்படைவிடயம் என்பதனை இப்பிரதேசத்து மக்கள் உணரத் தொடங்கினர். அதன் விளைவாகத் தம்பிலுவில், திருக்கோவில் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளில் கற்று வெளியேறிய மாணவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் பல்கலைக்கழகம் வரை செல்வதற்கான வாய்ப்புக்கள் கிட்டின.

அவ்வாறான பட்டதாரிகள் காலத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதாயிருக்கவில்லை. ஆனால், திருக்கோவில் பிரதேசத்தில் 1880இற்குப் பின் ஒரு நூற்றாண்டு காலம் கழிந்தநிலையில் கல்விகற்ற சமூகம் ஒன்றின் அசைவு ரீதியான மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. எனினும், 1980களின் பின் ஏற்பட்ட பிரதேச இனமத, மொழி ரீதியிலான போராட்டங்கள் கல்வியின் மீதான தடைகளை விதித்திருந்தும் கற்றுணர்ந்த சமூகத்தின் எதிர்நீச்சல்களால் பிரதேசத்தின் அடிப்படை வளங்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துக் கொண்டிருந்தன. இதற்கான களமாக தம்பிலுவில் மகாவித்தியாலயமும் வலுவூட்டிகளாக யாழ்ப்பாணத்து ஆசிரியர் பரம்பரையும் முனைப்பாகச் செயற்பட்டமை காரணமாகும்.

அந்நிலைமைகளை தக்கவைத்துக் கொள்வதற்கு நடுத்தரக் கல்விகற்ற சமூகத்தைச் சேர்ந்த பெற்றார் ஒத்துழைத்தனர். அவ்வாறான ஒன்றித்த செயற்பாடுகளின் பெறுபேறாக திருக்கோவில் பிரதேசத்தில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கலைத்துறை, விஞ்ஞானத்துறை பட்டதாரிகளின் தொகை கணிசமான அளவில் உயர்ந்தது. வர்த்தகத் துறையானது மந்தகதியில் நகர்ந்து செல்லும் நிலையை அவதானிக்க முடிந்தது. விஞ்ஞானம் கற்ற மாணவர்கள் அத்துறைசார்ந்த தொழில்களில் தம்மை இணைத்துக் கொண்டனர். கலைப்பிரிவினரில் 90%ற்கும் மேற்பட்டோர் ஆசிரியத் தொழிலில் பிரவேசித்துள்ளனர்.

இன்றைய நிலையில் இப் பிரதேசத்தைப் பொறுத்த வரை காலத்தின் தேவையாகவுள்ள விடயங்களில் வணிகத்துறை அபிவிருத்தியடைய வேண்டிய நிலையிலுள்ளது. சட்டத்துறையில் மிகச் சொற்பமானவர்களே உள்ளனர். இங்குள்ள மக்கள் தங்களை ஆள்வதற்குரிய நிர்வாகத் திறமைமிக்க அதிகாரிகளை உருவாக்க வேண்டிய அவசியமுள்ளது. க.பொ.த. (உ/தரம், (சா/தரம்வரை கற்றுவிட்டு, அதனையே உயர்ந்த தகைமையாகக் கருதிக் கொண்டிருந்தால் இந்நிலைமைகளை எட்டமுடியாது. விழிப்புணர்வுடன் செயற்படவேண்டிய தருணமிது. திட்டமிடல்கள் நல்ல தீர்வைக் கொண்டுவரும். அத்திட்டங்களை வகுப்பதற்கான ஆற்றல்களுடன் மாணவர்சமூகம் துலங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவில் பிரதேசத்திலிருந்து கல்விமான்கள் சர்வதேசரீதியில் தங்களை இனங்காட்டக் கூடியவர்களாக வேண்டும். ஒரு சிலர் வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் இருந்தாலும் அவ்வாறானவர்களை சமூகம் யாரென்று அறிந்திராத நிலையே உள்ளது. அவர்கள் இங்கு வாரிசுகளை வளர்க்க ஆலோசனைகளையும் வழி காட்டல்களையும் வழங்க முன்வர வேண்டியுள்ளது. சர்வ தேச ரீதியிலான பல்கலைக்கழகப் பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்வது இன்றியமையாதது.

உயர்தரம் கற்று பட்டம் முடித்து விட்டால் கல்விக்கு எல்லைக்கோடு கீறும் சிந்தனை வட்டத்தையும் மீறிச் செல்லும் சமுதாயம் இப்பிரதேசத்திற்கு இன்றைய தேவையாகவுள்ளது. இடைநிலைக்கல்விகற்கும் மாணவர்களிலிருந்து சர்வதேச தொழிற்பாட்டிற்குள் ஊடுருவக் கூடிய தகுதி வாய்ந்த தொழிநுட்பத்திறன் கொண்டவர்களை எமது சமூகம் எதிர்பார்க்கின்றது. பட்டம் முடித்துவிட்டு தொழிலுக்காக காத்திருந்து காலத்தை வீணடிக்கும் நிலை எமக்கு அவசியமில்லை. (சா/ தரம் வரை தான் கற்றாலும் சாதிக்கும் வளமான சமூகமே இன்றைய தேவை.

விவசாயம், கைவினை உற்பத்திகள், சரித்திரவியலாளர்கள், சோதிடவியலாளர்கள், புராண விற்பன்னர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், மாலுமிகள், விமானிகள் என பல துறைகளிலும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தடம் பதிக்கக் கூடிய சமூகம் ஒன்றை எதிர்பார்க்கின்றது. திருக்கோவில் பிரதேசம் "ஓட்டப் போட்டியென்றால் தேசிய மட்டத்தில் ஓடு அல்லது சர்வதேச ரீதியில் ஓடு" வலயத்தில் ஓடி பதக்கம் பெற்ற சரித்திரங்கள் பதிவாகமுடியாது நோபல் பரிசுக்கு விண்ணப்பிப்பதற்கு முயற்சிசெய்யும் பிள்ளைகளால் தான் சர்வதேச விருதுகளைப் பெறமுடியும்.

**V. ஜயந்தன்**
*கோட்டக்கல்விப் பணிப்பாளர்.*

**தன்நம்பிக்கை என்பது மனிதனுக்கு தங்க புஸ்பம்**
**அதுமட்டும் இருந்தால் ஆரோக்கியம்**
**எனும் ஆனந்தம் கிட்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைநிலம்



✦ விடைதந்து வழிநிற்கும் சிவலிங்கப்பிள்ளையார் - வடக்கே
படைசூழ்ந்து வாகூரமலை பிளந்து வேலமர்ந்த சித்திரவேலாயுதர் - கிழக்கே
தடையறுத்து வளம் தரும் சங்கமன்கண்டி நாயகன் - தெற்கே
குடைதந்து நற்குடி காக்கும் சகலகலை அம்மன் - மேற்கே

✦ வங்கக்கடலோசை வாழைமடல் அலைபுரண்டு அழகு கூட்டும்
தெங்கு மரச்சோலை இசைகேட்டு தலை அசைக்கும்
சங்கத்தமிழோசை திசை எட்டும் கலை மணக்கும்
தங்க வேலன் அம்மன் அருள்மழையில் தளைக்கின்ற திருக்கோட்டம்

✦ வலை விரித்து மனைநிறைக்கும் நன்மக்கள் ஒரு கூட்டம்
களை பிரித்து நெல் அறுக்கும் பண்மக்கள் ஒரு கூட்டம்
பிழை எரித்து கண் திறக்கும் விண்மக்கள் ஒரு கூட்டம்
தலை நரைத்தும் குலம் பெருக்கும் தண்மக்கள் ஒரு கூட்டம்.

✦ பொங்கு கலைப் பண்பாட்டு விழுமியத் தமிழ்க்கோட்டம்
தெங்குவாழை மாபூத்து மணம் வீசும் பசுமைக்கோட்டம்
தொங்கு நெல்வளம் நீர் இல்மனைட் தந்துயரும் இயற்கைக்கோட்டம்
தங்கு கண்ணகி முருகன் விழாக்காணும் பக்திமிகு இறைக்கோட்டம்.

✦ கலை, வணிகம், மருத்துவம், பொறியியல் பறைசாற்றும் கல்விக்கோட்டம்
இயலிசை நாடக சிற்பஓவியம் தொல்லியல் வரலாறு சொல்லும் கலைக்கோட்டம்
நெஞ்சுக்கும் புஞ்சைக்கும் பஞ்சமில்லா நல்லூர்கோட்டம்
தஞ்சமென்றுவருவோர்க்கு வாழ்வளிக்கும் விளைநில(க்) கோட்டமே!

- மனோ கார்த்திக் -
திருக்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் திரு. H.E. கமலேஷ் சர்மா
திருக்கோவில் பிரதேச பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட
வருகை தந்த போது பிரதேச செயலாளர் திரு.டி.கோபாலரெத்தினமும், அலுவலக
உத்தியோகத்தர்களினாலும் வரவேற்கப்படும் போது (12-09-2012)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் திரு. H.E. கமலேஷ் சர்மா அவர்களின் வருகையின் போது



திருக்கோவில் இளைஞர் பயிற்சி நிலையத்தில் தென்னங்கன்று நடும் போது



திரு. H.E. கமலேஷ் சர்மா (பொதுநலவாய நாடுகளின் செயலாளர்) பிரதேச செயலாளருக்கு ஆசீர்வாதம் வழங்கி விடைபெறும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென் இலங்காபுரியும் - இராவணன் ஆட்சியும்

*முன்னுரை:*

இராவணன் பற்றிய வரலாறு எம்மக்களிடையே நின்று நிலைத்த ஒன்றாகும். மரபுக்கதைகள் மூலமும், புராண இதிகாசங்கள் மூலமும் இராவணன் பற்றி அறிய முடிகிறது. அதைவிடப் பல அறிஞர்கள், ஆய்வாளர்களும், இராவணன் பற்றிய விடயங்களை ஆராய்ந்துள்ளனர். பன்னிரண்டு விதமான இராமாயணங்கள் இராவணன் பற்றிப் பேசுகின்றன. இலங்கையில் மட்டுமல்ல, வேறு பல தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், இராவணன் பற்றி வரலாறுகள் நிலவுகின்றன. எனினும், தென் இலங்காபுரி என்பது இராவணனது தலைநகரம் என்பது பெரும்பாலானோர் முடிவு, தென்னிலங்காபுரி, தெட்சணாபதி எனப்படுவது திருக்கோவில் – திருகோணமலை உள்ளடக்கிய பிரதேசமாகும். இப்பிரதேசம் இராவணனது ஆட்சிப்பிரதேசம் என்பதற்கு சாட்சியங்கள் நிறையக் காணப்படுகின்றன. [1]

## இராவணன் கோட்டையும் தலைநகரமும்:

இராவணன் இலங்கையை ஆட்சி செய்த பண்டைய திராவிட மன்னன் என்பது பல சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. இவனுடைய தலைநகரமும் கோட்டையும் திருக்கோவிலுக்கு தெற்கே சில காத தூரத்தில் இருந்தது. இராம – இராவண யுத்தம் முடிவடைந்த பின், அக்கோட்டை கடலில் மூழ்கிவிட்டது எனப்படுகிறது. இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருக்கோவில் பிரதேசமாகும். இது பழம் பெரும் முருக தலமுமாகும். திருக்கோவில் பிரதேசத்தை அண்மிய தென்கிழக்கு கடற்கரைப் பகுதியில் காணப்படும் இரண்டு பாரிய கற்பாறைகள் இராவணன் கோட்டையின் எஞ்சிய பகுதிகளாக நம்பப்படுகிறது. கடல் மட்டத்துடன் தெரியும் இந்த இரண்டு பாறைகளும் இராவணனின் பெரிய, சிறிய கோட்டைகள் எனப்படும். தென்னிலங்காபுரியில் இருந்த இராவணன் தென்னிந்தியா வரையும் ஆட்சி செய்தான்.

இந்த இரண்டு பாறைகளிலும் கலங்கரை வெளிச்ச வீடுகள் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டன.அலெக்சாந்தர் கோர்டன், சேர் நிக்கலஸ் டக்லஸ் எனப்படும் இருவரினதும் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி 1973ஆம் ஆண்டு இந்தக் கலங்கரை வெளிச்சவீடுகள் கட்டப்பட்டன. யால வனவிலங்கு சரணாலய காட்டுப் பகுதியை ஒட்டிய கடற்கரையிலிருந்து சுமார் பதின்மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இப்பாறைகள் காணப்படுகின்றன. கதிர்காமத் தலத்தின் (ஏழு மலை) மீது ஏறிநின்று தென்கிழக்குப் பகுதியை நோக்கினால், கடலில் இரண்டு வெளிச்ச வீடுகளும் தென்படும். இது போன்று இலங்கையின் தென்கிழக்கு குறிப்பாக திருக்கோவில் பிரதேசத்தில் இராவணனுடன் தொடர்புறும் விடயங்கள் அதிகம் காணப்படுகின்றன. [2] இவை அனைத்தும் கடற்கோளில் மூழ்கி விட்டன.

## திருக்கோவில் பிரதேசமும் இராவணனும்:

திருக்கோவில் பிரதேசம் இராவணனது முக்கிய அரசு இருந்த இடமாகும். மேற்குறிப்பிட்ட பாறைகள் இரண்டும் இராவணனது கோட்டைகள் எனவும் முன்னரே கூறப்பட்டது. திருக்கோவில் பிரதேச கோட்டையில் இருந்த இராவணன் மாமாங்கேஸ்வரம், கோணேஸ்வரம் ஆகிய சிவதலங்களுடன் தொடர்புடையவனாக இருந்தான் என்பது ஐதீகம். திருக்கோவில் தொடக்கம் கடற்கரை ஓரமாக கிழக்கு கரையோரப் பாதை இருந்தது எனவும் இது கடலில் மூழ்கிவிட்டது எனவும் அறிய முடிகிறது. இராவணன் ஆடி அமாவாசையின் போது மாமாங்கேஸ்வரரைத் தரிசனை செய்து தீர்த்தமாடி செல்வான் எனவும் புராணக்கதைகள் கூறுகின்றன. [3] இந்தப் பாதை மூலமே இராவணன் மாமாங்கேஸ்வரம் வந்து போவது என்பதும் புராணங்களில் அறிய முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் இலங்கையில் இராவணனுடன் தொடர்புறும் வேறு பிரதேசங்கள்

இலங்கையில் இராவணனுடன் தொடர்புறும் பிரதேசங்கள் நிறைய இருந்தாலும், அவை தொல்பொருளியல் ரீதியில் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், திருக்கோவிலும் அதற்கு தெற்கே உள்ள பிரதேசமுமே இராவணனுடன் அதிகம் தொடர்புபடுத்தப்படுகிறது. கதிர்காமம் - மாத்தளை வீதியில் அம்பாந்தோட்டையில் நோனாகம சந்தியில் வலது பக்கமாகச் செல்லும் வீதியில் கடற்கரையில் சென்றால் இங்குள்ள கடற்கரை மண் செந்நிறமானது, இடது பக்கமாக 300மீற்றர் தூரத்திலும் வலதுபுறமாக 500 மீற்றர் தூரம் வரையும் செம்மண்ணாகவே காணப்படுகிறது. அனுமானின் வாலில் மூட்டப்பட்ட தீயின் மூலமாக இலங்கையை எரித்ததாக இராமாயணம் கூறுகிறது. சுந்தர காண்டம் பின்வருமாறு கூறும். [4]

> **"நிரையின் முந்து உலகு உண்ணும் ஒலி அதால்**
> **வரை நிவந்தன பல் மணி மாளிகை**
> **நிரையும் நீள்நெடுஞ் சோலையும் நிற்குமோ?**
> **தரையும் வெந்தது பொன் எனும் தன்மையால்"**

தரை பொன்போல வெந்தது எனக் கூறப்படும் பாடல் அடியினை நோக்கினால் இப்பிரதேச மண்ணுக்குப் பொருத்தமானது. இதே போன்று இடது பக்கமும் காணப்படும் மிகப்பெரும் வெளி சுமார் 460 ஏக்கர் நிலப்பரப்பானது செந்தணல் நிறத்திலே உள்ளது. இங்கு மரங்களோ செடிகளோ முளைப்பதில்லை. அம்பாந்தோட்டையை அண்மிய உசன்கொட எனப்படும் இவ்விடம் இராவணனுடைய அரன்மனையும் ஆயுதக் கிடங்கும் இருந்து எரியுண்ட இடம் எனப்படும். சுந்தர காண்டத்தில் இன்னோர் பாடலும் இதனைக் கூறுகிறது. [5]

> **"வில்லும் வேலும் வெங்குந்தமும் முதலிய விறகாய்**
> **என்னுடைச் சுடர் என புகர் எஃகு எலாம் உருகி**
> **தொல்லை நல்நிலை தொடர்ந்த பேர் உணர்வு அன்னைதொழிலாய்**
> **சில்லி உண்டையின் திரண்டன படைக்கலத் திரல்கள்"**

மேற்குறித்த அம்பாந்தோட்டையை அண்மிய உசன்கொட என்னுமிடம் அனுமன் வாலினால் எரியூட்டப்பட்ட இடம் எனவும், இங்குள்ள மண் செந்நிறமாக காணப்படுவதாகவும் உணரமுடிகிறது. மேலும் அயலில் உள்ள மேடான இடத்தில் இராவணனது ஆயுதக் களஞ்சியசாலை இருந்தது எனவும், அனுமானால் எரியூட்டப்பட்ட இப்பகுதியில் தாவரங்கள் எதுவும் முளைப்பதில்லை எனவும் நம்பப்படுகிறது. இவ்விடம் விசேஷம் வாய்ந்த இடம் எனவும், இயற்கை எழிலும் மருத்துவ குணமும் உடைய இடம் எனவும் அறிய முடிகிறது.

### திருகோணமலை - திருக்கோவில் - இராவணன் தொடர்பு

இராவணன் திருக்கோவில் பிரதேசத்தில் கோட்டைகள் அமைத்து ஆட்சி செய்தவன் என நம்பப்படினும் திருகோணமலையுடன் தொடர்பு கொண்டவன். தெட்சனாபதி - தென்னிலங்காபுரி எனப்படும் இப்பிரதேசத்தின் முக்கியமான சிவ வழிபாட்டுத்தலம் திருகோணமலையாகும். இங்குள்ள பாறையில் காணப்படும் வெட்டு, இன்றும் "இராவணன் வெட்டு" என்றே வழங்கப்படுகிறது. இப்பாறையை பிளக்க இராவணன் வாளினால் வெட்டிய பகுதி இதுவென ஐதீகங்கள் கூறுகின்றன. [6]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணனுடைய தாயார் சிவவழிபாடு உடையவள். இராவணனுடைய தந்தையான விச்சிரவசு. களனி எனப்படும் கல்யாணி நகரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன். தாய் கைகேசி சிவ வழிபாட்டின் நிமித்தம் தினமும் ஆயிரத்தெட்டு மாவிலான லிங்கங்களைப் பிடித்து வழிபட்டு மகாவலி கங்கையில் கரைத்து விடுவாள் எனவும் கூறப்படுகின்றது. இதனை அறிந்த இராவணன் தாய்க்கு லிங்கம் கொண்டுவர கைலயங்கிரி போய் லிங்கம் கொண்டு வரும் வழியில் தேவர்கள் சதி செய்து லிங்கத்தை பூமியில் வைக்கும்படி ஆயிற்று. அவ்விடம் காசிக்கு அப்பால் உள்ள வைத்தியநாதம் ஆகும். இரண்டாவது முறையாகவும் இராவணன் லிங்கத்தை பெற்றுக்கொண்டு வரும்போது மீண்டும் இவ்விதமே துருவநாட்டிலுள்ள "கோகர்ணம்" என்ற இடத்தில் பூமியில் வைக்கும்படியாகி விட்டது.

மூன்றாவது முறையாக இராவணன் லிங்கம் பெற கைலயங்கிரி போய் இலங்கையில் தட்ஷண கைலாயம் எனப்படும் திருகோணமலையில் புண்ணிய லிங்கம் உள்ளது பெற்றுக்கொள் என பணிக்கப்பட்டதன் பேரில், இராவணன் கோணேஸ்வரம் வந்து பிரார்த்தனை செய்தான். இறைவனை வேண்டிருந்து இறைவன் காட்சி அளிக்காமையால் இராவணன் கோபமுற்று, கோணேசர் மலையை பெயர்க்க முற்பட்ட போது, முடியாமல் போகவே மலையின் தெற்கு பகுதியில் வெட்டினான். இதுவே இராவணன் வெட்டு எனப்படுகிறது. மலையின் கீழ் நசுங்குண்ட இராவணன் சாமகீதம் பாடியபோது இறைவன் காட்சி அளித்தார் எனவும் வரலாறு ஒன்று உள்ளது. [7]

## இராவணனும் கன்னியா வெந்நீரூற்றும்

திருகோணமலையில் தொடர்பு உள்ளது போல இராவணன் கன்னியா வெந்நீருற்றுடனும் சம்பந்தப்படுகிறான். தனது தாயார் மரணமடைந்த பின் அவரது நீர்க்கடன் (கருமாதி) கழிக்க இந்நீருற்று உருவாக்கப்பட்டது எனப்படுகிறது. வருடா வருடம் தனது, தாயாரின் கிரியைகளை கன்னியாவிலே இராவணன் செய்தான் எனவும் கூறப்படுகிறது. இதே போன்று திருகோணமலை சாம்பல் தீவு எனப்படும் பிரதேசமும் அனுமன் எரித்தபோது உருவாகிய சாம்பல் மேடு எனப்படும். சல்லியில் உள்ள வெள்ளைமலையில் இராமன் வாடிவீடமைந்த இடம் இது எனவும் மக்கள் கூறுகின்றனர். இவ்விதம் கிழக்கிலே பிரபலம் பெற்ற இராவணன் இலங்கையின் மேலும் பல இடங்களிலும் தொடர்புபடுத்தப்படுகிறான். சீதாஎலிய, உசன்கொட, இராவண எல்ல, ஸ்தீரிமலை, வாரியப்பொல இப்படி பல்வேறு இடங்களுடன் இராவணன் கதை பேசப்படுகிறது.

## பண்டாரவளை பிரதேச இராவணன் குகை

பண்டாரவளையில் இராவணன் குகை எனப்படும் குகை உள்ளது. பண்டாரவளை - எல்ல வீதியில் காணப்படும் கிளை வீதி ஊடாக இராவணன் புராண விகாரையை அடைய முடிகிறது. சுமார் 200 படிக்கட்டுக்கள் ஏறிச் செல்லும் போது மேற்குறிப்பிட்ட குகையை காணமுடியும். இது இராவணன் குகை எனப்படும். 45 அடி உயரம் 25 அடி அகலமுடைய இக்குகையின் உள்ளே மருந்து மூலிகையின் வாசமும் அபூர்வமும் நிறைந்தது எனப்படும். இவ்விடம் இராவணபுரம் எனவும் அழைக்கப்படுவதாகவும் சீதையை சிறை வைத்த குகை எனவும் மக்களால் வழங்கப்படுகிறது. இராவண எல்ல - வெள்ளவாய செல்லும் வீதியில் காணப்படும் "பம்பரகல" நீர்வீழ்ச்சியில் சீதை நீராடியதாகவும் கருதப்படுகிறது. இராவணனது அரண்மனை இருந்த இடம் இராவணபுரம் எனப்படுகிறது. தென்கிழக்கிலே இராவணனைத் தொடர்புபடுத்தும் கதைகள் போலவே இங்கும் உள்ளன. [8]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணனும் இஸ்தீரிபுரி மலையும்

அனுமன் சீதையைத் தேடும் விடயத்தை அறிந்த இராவணன் சீதையைப் பல இடங்களில் ஒழித்து வைத்ததாகவும், இடங்களை மாற்றி மாற்றி வைத்தான் எனவும் அதில் ஒரு இடமே மேற்படி இஸ்திரிமலை என்பதாகும். இஸ்தீரிபுரமலை எனப்படுவது இம்மலையின் பெயர். ஜனநடமாட்டம் அற்ற இப்பிரதேசத்து மக்கள் இம்மலையில் பெண் ஒருத்தி நடமாடுவதையும், உலா வருவதையும் கண்டுள்ளனர். இது சீதை என்பது இவர்களது அபிப்பிராயம் எங்குமே கிடைக்காத ஊதா நிறமான மலர்கள் இங்கு காணப்படுகின்றன. அம்மலரை இம்மக்கள் சீதாமலர் என வழங்குவர். வலப்பனை, உடப்பலாத் கோரளையில் உள்ள ராகலை மலைக்குள் இராவணன் ஆட்சி செய்தான் என அறிய முடிகிறது.

## இராவணனும் அகஸ்தியர் ஸ்தாபனமும்

திருகோணமலையில் மகாவலி கங்கைக் கரையில் அமைந்துள்ளது பழமை வாய்ந்த அகஸ்தியர் ஸ்தாபனம். இது அகத்திய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும். அகத்தியர் இங்கு பதினெண் சித்தர்களுடன் வாழ்ந்தார். சித்த வைத்தியத்தை பரப்பினார். பல மருத்துவ நூல்கள் எழுதினார் என வரலாறுகள் மூலம் அறிய முடிகிறது.[9] இராவணனும் சித்த வைத்தியத்தில் சிறந்தவன். இவன் அகத்தியரிடம் போட்டி இட்டதாகவும் அறிய முடிகிறது. இராவணன் மணி மந்திர, அவிழ்த்தம் மூன்றிலும் சிறப்பான தேர்ச்சி பெற்றவன். இதனால் அகத்தியர் அகன்று வேறு இடங்களில் தொண்டு செய்ததாயும் இதிகாசங்கள் கூறுகின்றன. சஞ்சீவி மூலிகை பற்றி அறிந்தவனும் இராவணனும் அவனது இலங்கை மக்களுமேயாம்.

## இலங்கைத் தீவின் திராவிட மன்னன் இராவணன்

பண்டு இலங்கைத் தீவின் தென்பகுதி நிலம் மேற்கே மடகாஸ்கர் வரையும் கிழக்கே அவுஸ்திரேலியா வரையும் நீண்டு பரந்து இருந்தது. அது குமரிக்கண்டம் என வழங்கப்பட்டது. கடற்கோள்களால் அழிவுற்ற இந்நிலப் பகுதியே ஈழம் போன்றதாவும் இணைந்து இருந்தன. அக்காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் பரதர், நாகர், இயக்கர், இராட்சதர், பூதர், அசுரர், அவுணர் எனப்படுகிறது. இராவணனும் அவனைச் சேர்ந்தவர்களும் இராட்சதர் எனப்பட்டனர். இவர்கள் அறிவில் சிறந்தவர்கள். இவர்களுடைய முக்கிய இடங்கள் திருகோணமலை, இலங்காபுரம், சிங்கநகர், மணிபுரம், திருக்கோவில், முருகன்துறை, கல்யாணி என்பனவாம். இதில் திருக்கோவில் இராவணன் கோட்டை இருந்த இடம் என்பது தெளிவாகிறது. அது மட்டுமல்ல. இராவணன் திராவிட மன்னன் என்பதும் தென்பகுதியிலே இராவணனது முக்கிய நடமாட்டம் இருந்துள்ளது என்பதும் தெளிவாகிறது. இலங்கையின் கீழ்ப்பகுதியில் ஜாவா, சுமத்திரா இருந்ததாகவும் வானிலை அறிஞர்கள் கூறுவர்.

## இராவணன் பற்றிய இதிகாச புராணங்கள்

இராவணன் பற்றி தட்ஷண கைலாய புராணம், கோணாசல வைபவம், மட்டக்களப்பு மான்மியம் போன்ற புராண இதிகாசங்களும் பன்னிரெண்டு இராமாயணங்களும் கூறுகின்றன திருக்கரைசைப் புராணம், சிவராத்திரி புராணம், பார்க்கத்துப்புராணம் போன்றவை இராவணன் கோணேசர் ஆலயத் தொடர்பு பற்றிக் கூறுகின்றன. வால்மீகி இராமாயணம், அத்யாதீம இராமாயணம், போதாயண இராமாயணம், கம்பராமாயணம், துளசி இராமாயணம், ரகுவம்சம், இராமாயண வெண்பா எனப் பல்வேறு நூல்கள் இராவணன் பற்றிக் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணன் விமானவியல் அறிந்தவன்

இராவணன் விமானவியல், சாத்திரவியல் அறிந்தவன். குருநாகல் வாரியப்பொல என்னுமிடத்தில் இராவணனுடைய விமானம் தரிக்குமிடம் இருந்தது எனக்கூறப்படுகிறது. இராவணனது வானோடும் கலம் இறங்குமிடம் எனக்கருதப்படும் இடம், விமானம் இறங்குவதற்கு ஏற்ற சூழல் போன்ற எல்லாமே இங்கு அமைந்துள்ளது. இராவணன் பத்துவிதமான கற்கை நெறிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தான். வைத்திய நிபுணன், ஆவி உலகத்தில் பேசுபவன், சங்கீத வித்துவான், ஓவியன், வானில் பறப்பவன், வானசாஸ்திரி, நிலவியலாளன், தேசியவாதி, கட்டடக்கலை வல்லுனன் ஆகிய பத்துத்துறைகளில் வல்லவன் என்பதாலே பத்துத்தலை இராவணன் எனப்பட்டான் எனவும் அறிய முடிகிறது.

"இலங்கேசன்" எனப்பட்ட இராவணன் நாடு நகரை சுத்தமாக ஒழுங்குப்படி வைத்திருந்தான் என்பதை அனுமன், "களிக்கின்றார் அல்லால் கவர்கின்றவர் ஒருவரை யான் காணேன்" எனக் கூறுகின்றான். வெவ்வேறு சூடுகொண்ட கன்னியா வெந்நீருற்றுக்கள் அரன்மனைப் பெண்களின் குளிப்பிடமோ எனவும் ஐயுற வேண்டியுள்ளது. எப்படி எனினும், இராவணன் தென்கிழக்குப் பகுதியுடனே கூடிய தொடர்பு வைத்து இருந்துள்ளதை சான்றுகள் காட்டுகின்றன.

## இராவணனது காலம்

இராமாயண காலம், இராவணன் காலம் பற்றியெல்லாம் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பல அறிஞர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

பர்கிரர் என்ற அறிஞர் கி.மு.1100இல் பாரதப்போர் நிகழ்ந்தது. இதற்கு 500 ஆண்டுகளுக்கு முன் இராமன் ஆட்சி செய்தான். எனவே கி.மு. 1600 ஆண்டுக்கு முன் எனலாம். இதேபோன்று S.N.Vyas என்பவர், ஐகோபி என்பவரும் கி.மு.800 கி.மு. 600ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டது என்கின்றனர். [10] வேதர், P.L. தர்ம போன்றோரும் ஆராய்ச்சி செய்து தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

பொதுவாக கி.மு. 6000 ஆண்டளவில் இராவணன் இலங்கையை ஆண்டான் எனப்படுகிறது. கி.மு. 3.544இல் ஏற்பட்ட கடற்கோளில் இலங்கையின் பெரும்பாகமும் கோணேசர் கோயிலும் அழிவுற்றது என்பர். இராமாயன காலத்திற்குப் பின்னர் பெருங்கடற்கோள் ஏற்பட்டு இலங்கையின் பெரும் பகுதி அழிவுற்றது எனப்படுகிறது. இது பற்றி ராஜாவலிய கூறும். மேலும் கி.மு. 12000 ஆம் ஆண்டுக்கு முன், 7000, ஒரு கடற்கோளும் 5000 ஆண்டுக்கு முன் கடற்கோள்கள் ஏற்பட்டன என அறிய முடிகிறது. [11] மேலும் முதலாவது கடற்கோள் 2378 எனவும் இரண்டாவது கடற்கோள் கி.மு. 504 எனவும் மூன்றாவது கடற்கோள் கி.மு. 306 எனவும், அறியப்படுகின்றது. மூன்றாவது கடற்கோளின் போதே கோணேசர் ஆலயம் அழிவுற்றது என்பர். [12] பல்வேறு விதமாக அறிஞர்கள் ஆராய்ந்தாலும் இராவணன் ஆதித்திராவிட மன்னன் என்பது தெளிவாகிறது மட்டுமல்ல, இவனது ஆட்சிப்பிரதேசமும் தென்கிழக்குப் பகுதியாகிய தென்னிலங்கையாகும். தெற்கே அம்பாந்தோட்டை தொடக்கம் திருக்கோவில், திருகோணமலை வரையுமுள்ள பிரதேசமே முக்கியமான இராவணன் சம்பந்தப்படும் பிரதேசங்களுமாகும்.



**செல்வி. க. தங்கேஸ்வரி**

*முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு.*

தேசிய இணைப்பாளர், பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்குறிப்புகள்


01. Discovery of Ceylon - PP - 2,6 by Prohiew
வான்மீகி இராமாயணம் - சுந்தரகாண்டம் சுருக்கம் - 2, பக் - 8.
History of Ceylon - H.W. Cordingtion - PP.5

02. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பு - FXC நடராசா
வான்மீகி இராமாயணம் - சுந்தரகாண்டம் சுருக்கம் - 2, பக் - 8.
History of Ceylon - H.W. Cordingtion - PP.5

03. மட்டக்களப்பு மான்மியம் - FXC நடராசா பதிப்பு - பக் 5

04. கம்பராமாயணம் கம்பர் - சுந்தரகாண்டம் - இலங்கை கலியூட்டு படலம்

05. கம்பராமாயணம் கம்பர் - சுந்தரகாண்டம் - இலங்கை கலியூட்டு படலம்

06. தட்ஷண புராணம் - கவிராச வரோதயர் தொகுப்பு. அ. அழகக்கோர்
திருக்கோணசாலை வைபவம் - அ. அதிலேசபிள்ளை. தொகுப்பு: அ. அழகக்கோர் 1950
மட்டக்களப்பு மான்மியம் - FXC நடராசா தொகுப்பு: மட்டக்களப்பு

07. சிவராத்திரி புராணம் - பிரமோத்திர காண்டம் சிவதானமகிமை பாடல் - 49 - 60

08. மட்டக்களப்பு மான்மியம் - FXC நடராசா தொகுப்பு: மட்டக்களப்பு
திருக்கோணசாலை வைபவம் -தொகுப்பு: அ. அழகக்கோர் 1950
தெட்சணா கைலாயபுராணம் - தொகுப்பாசிரியர்: அ. அழகக்கோர் 1950

09. S.N. Vyas - India In the Ramayana age - Delhi - 1967

10. S.N. Vyas - India In the Ramayana age - Delhi - 1967 PP.7

11. குளக்கோட்டன் தரிசனம் - க.தங்கேஸ்வரி 1993 - பக் 10 - 16

12. குளக்கோட்டன் தரிசனம் - க.தங்கேஸ்வரி 1993 - பக் 10 - 16





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோவில் பிரதேசத்தில் உள்ளக இடப்பெயர்வும், மீள் குடியேற்றமும்

## ஓர் நோக்கு:-

கடந்த கால நூற்றாண்டுக்கும் மேலாக இடம் பெற்ற இன விடுதலைக்கான யுத்தம் இம் மண்ணில் ஏற்டுத்திய தாக்கம் இலகுவில் மறந்துவிட முடியாத ஒன்றாகும். இந்த வகையில் 1983 ஜூலை மாதம் ஏற்பட்ட இனக்கலவரத்திற்குப் பின்னர் விடுதலை என்ற பெயரில் பல்வேறு அமைப்புக்கள் உருவாக்கம் பெற்று வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தன.

குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அடர்ந்த காடுகளைக் கொண்ட இடங்களை தமது முன்தளமாகக் கொண்டு செயற்பட்டு வந்தனர். அந்த வகையில் அம்பாரை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தின் தெற்கு மற்றும் மேற்குப் பிரதேசங்கள் அடர்ந்த காடுகளையும் நீர் நிலைகளையும், மலைகள் மற்றும் வயல் நிலங்களையும் கொண்டு விளங்கியமையினால் அவ் அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளுக்கு அப் பிரதேசங்களை வாய்ப்பான ஒரு பிரதேசமாக தேர்ந்தெடுத்தனர்.

திருக்கோவில் மத்தியிலிருந்து தெற்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களாக சாகாமம், காஞ்சிரங்குடா, கஞ்சிக்குடியாறு, தங்கவேலாயுதபுரம், தாண்டியடி போன்ற கிராமங்கள் எல்லைக் கிராமங்களாக கொண்டமைந்துள்ளன. குறிப்பாக இவ்வமைப்புக்கள் தங்கவேலாயுதபுரம், கஞ்சிக்குடியாறு போன்ற பிரதேசங்களைத் தமது பாதுகாப்பான இடங்களாகத் தேர்ந்தெடுத்து செயற்பட்டு வந்தன. இக் கிராமங்களின் காடுகளிலுள்ள மலைகளை அவதானிக்கும் போது பண்டைய மன்னர்கள் தமது எதிரிகளுக்கு அஞ்சி ஒழிந்து வாழ்ந்திருப்பார்கள் என்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இம் மன்னர்கள் சிறிய சிறிய அணைக்கட்டுக்களை அமைத்து நீரைத்தேக்கி வைத்து தமக்குத் தேவையான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பர் என்பதனை இன்றும் பல இடங்களில் அழிவடைந்து தூர்ந்து போன நிலையில் காணப்படும் சான்றுகள் சாட்சி பகர்கின்றன.

குறிப்பாக அம்பாரை மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் குளங்களை அதிகமாகக் கொண்ட ஒரு பிரதேசமாக திருக்கோவில் பிரதேசம் காணப்படுகின்றது. இந்த திருக்கோவில் பிரதேசத்தில் அதிகமான நீர்ப்பாசனக் குளங்களைக் கொண்ட பிரதேசங்களாக இப் பகுதி காணப்படுகின்றன. திருக்கோவில் பிரதேசத்தின் முதுகெலும்பு என இப்பகுதி அழைக்கப்படும் அளவிற்கு அதிகமான வளங்களைக் கொண்டமைந்த பகுதிகளாக இவை காணப்படுகின்றன. நிலவளம், நீர்வளம், காடுகள், மலைகள் போன்ற வளங்கள் அதிகமாக இருப்பதால் திருக்கோவில் பிரதேசத்தின் பொருளாதாரத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தும் பிரதேசங்களாக இவை காணப்படுகின்றன.

இப் பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு உணவுப் பஞ்சமே ஏற்பட்டதில்லை என அன்றையகால விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இங்குள்ள மக்கள் வேளாண்மை, சேனைப் பயிர், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, காட்டுத்தொழில் போன்ற சொந்தத் தொழில்களால் மிகவும் செழிப்பான வாழ்க்கை வாழ்ந்ததாக தெரிவிக்கின்றனர். பாலும், தேனும், பாகும், பருப்பும் கொண்ட நால்வகை உணவுகளையும் பெற்று நல்ல தேக ஆரோக்கியத்துடன் வாழ்ந்ததாக இன்றும் பெருமையுடன் பேசுகின்றனர். இவ்வாறு தமது வாழ்க்கையை சந்தோசமாகக் கழித்துவந்த மக்களுக்கு 1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் வருகையின் பின்னர் ஏற்பட்ட தொடர் இழப்புக்களை கிராமங்களின் சிறிய வரலாற்றோடு ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தங்கவேலாயுதபுரம் கிராமம்:-**

திருக்கோவில் மத்தியிலிருந்து சுமார் 15கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இப்பகுதி காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் பயிர்ச் செய்கைகளுக்கு காடுகளை அழிக்க அனுமதி வழங்கப்பட்டு "மரவாடி அல்லது மரக்கூப்பு" வைத்து தொழில் புரியும் நிமித்தம் சுமார் 07 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சொறிக்கல்முனை எனும் பகுதியிலிருந்து 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு வந்து தொழில் செய்து கொண்டிருந்த காலப்பகுதியில் அருகில் அமைந்திருந்த ஒரு "சோலையன் கட்டு" எனப்படும் அணை ஒன்றினால் ஏற்படுத்தப்பட்டிருந்த நீர் நிலையினை அடிப்படையாகக் கொண்டு (தற்போதைய தாமரைக் கேணி குளம்) அதன் அருகில் அமைந்திருந்த காடுகளை வெட்டி துப்பரவு செய்து தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தனர். அதனைத் தொடர்ந்து அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் இங்குவந்து குடியேறினர். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் சொறிக்கல்முனை, வீரமுனை, காரைதீவு, தம்பட்டை, கோளாவில், சேனைக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் இருந்தும் மட்டக்களப்பு மாவட்டம் துறைநீலாவணை மற்றும் மண்டூர் போன்ற கிராமங்களிலிருந்தும் இங்கு வந்து குடியேறினர்.

இவ்வாறு பல்வேறுபட்ட இடங்களிலிருந்தும் வந்து குடியேறிய மக்களால் இப்பிரதேசம் ஒரு கிராமமாக மாறியது. 1974ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி 125 குடும்பங்கள் வரை வாழ்ந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மக்கள் ஒரு கூட்டமாக வாழ்வதனால் கிராமத்திற்கு ஒரு பெயர் வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. 1979ஆம் ஆண்டில் பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மறைந்த M.C.கனகரெட்ணம் அவர்களால் மக்களின் விருப்பத்திற்கமைய விளைதிறன் மிக்க மண்ணை தங்கத்தோடு ஒப்பிட்டும் முருகக் கடவுளின் ஆயுதமான வேலாயுதத்தை முதன்மைப் படுத்தியும் மக்கள் கூட்டமாக வாழ்வதனைப்புரம் எனக் கொண்டும் தங்கவேலாயுதபுரம் என்ற பெயர் வரலாற்றில் பதிவாகியது.

**கஞ்சிக்குடியாறு கிராமம்:-**

இப்பிரதேசத்திலும் துறைநீலாவணை, சேனைக்குடியிருப்பு, மண்டூர், திருக்கோவில், தம்பிலுவில், விநாயகபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களே குடியேறியுள்ளனர். திருக்கோவில் மையப்பகுதியிலிருந்து சுமார் 20 கி.மீற்றர் தொலைவில் இக் கிராமம் அமைந்துள்ளது. 1950ஆம் ஆண்டுக்கு முன்னர் இப் பகுதிக்கு காடழித்து விவசாயம் செய்யும் நோக்கோடு சென்றவர்கள் தமது உணவுக்காக கொண்டு சென்ற கஞ்சிப் பானையை காடுகள் வழியாக ஓடிக்கொண்டிருந்த அருவி அடித்துச் சென்றதனால் கஞ்சிகுடிச்ச ஆறு எனப் பெயரிட்டதாக கூறப்படுகின்றது. இருந்தும் இப் பகுதியில் காணப்படும் மலைகள், அடர்ந்த காடுகள், குளங்கள் என்பனவற்றில் காணப்படும் சான்றுகள், எச்சங்கள் என்பன பண்டைய மன்னர்கள் தமது மறைவான வாழ்க்கையை இப் பகுதிகளில் வாழ்ந்திருப்பார்கள் என்பதனை பறைசாற்றுவதாக காணப்படுகின்றது.

இக் கிராமம் ஒரு தனித்துவம் வாய்ந்த விவசாய கிராமம் என்பதற்கு அங்குள்ள பாவட்டா, றூபஸ் மற்றும் கஞ்சிகுடியாறு குளங்கள் சான்று பகர்வனவாகவுள்ளன. இவற்றுடன் மேலும் பல சிறிய குளங்களும் காணப்படுகின்றன. கால்நடை வளர்ப்பிற்கும் பொருத்தமான இடமாகவும், சேனைப்பயிர்ச் செய்கைக்கு ஏற்ற பகுதியாகவும் காணப்படும், அதேவேளை பல குளங்கள் காணப்படுவதால் நன்னீர் மீன்பிடிப்பும் சிறப்பாக நடைபெறுகின்றது. இன்றும் பல குடும்பங்கள் இக் குளங்களை நம்பியே வாழ்க்கை நடத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காஞ்சிரங்குடா கிராமம்:-**

திருக்கோவில் மையப்பகுதியிலிருந்து சுமார் 06கி.மீற்றர் தூரத்தில் அமைந்து காணப்படும் ஒரு பிரதேசம் ஆகும். இக் கிராமம் திருக்கோவில், விநாயகபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்களையும் வனக்குறவர்களையும் உள்ளடக்கிய மக்கள் கூட்டத்தைக் கொண்ட இரு கிராமங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது இந்தியாவின் கேரளா மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்ட வனக்குறவர் இனத்தைச் சேர்ந்த சாதியினர் இலங்கையின் அநுராதபுரம் மற்றும் கலாவ பகுதிகளில் இருந்து சுமார் 80 வருடங்களுக்கு முன்பு ஆலயடி வேம்பு பிரதேசத்தில் உள்ள அலிகம்பை எனும் இடத்தில் வந்து குடியேறினர். முருகப் பெருமானின் மனைவியருள் ஒருவரான வள்ளி தங்களது இனத்தைச் சேர்ந்தவர் என்பதனால் வள்ளியை தமது குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். இதனால் அவர்கள் குடியேறிய பகுதியில் காஞ்சுரம் மரங்கள் அதிகமாகக் காணப்பட்டதனால் காஞ்சிரங்குடா எனப்பெயர் பெற்றதாக கூறப்படுகிறது.

**சாகாமம் கிராமம்:-**

கி.மு. 2ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இப் பகுதி பிரசித்தி பெற்ற நகரமாக விளங்கியதாக வரலாறு கூறுகிறது. இந்த நகரத்தை புவனேயகஜபாகு என்ற மன்னனின் மகனான மேகவர்ணன் என்ற குறுநில மன்னன் ஆட்சி செய்ததாகவும் இம் மன்னனாலேயே சாகாமம் குளம் மற்றும் அங்குள்ள சிறிய குளங்கள் என்பன உருவாக்கம் பெற்றன. அக்காலத்தில் நகரப்பகுதியைச் சேர்ந்த தாடகிரிவரை நீர்ப்பாசனத் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இப் பகுதிகளில் நாகரிகம் நிலவி வந்தமைக்கும், மக்கள் செறிவாக வாழ்ந்தமைக்கும் இப்பகுதிகளில் காணப்படும் தொல் பொருள் எச்சங்களே ஆதாரங்களாகும்.

இவ்வாறு செழிப்புடன் காணப்பட்ட இக்கிராமங்களும் இன்புற்று வாழ்ந்த அம்மக்களும் இன விடுதலைக்கான போராட்டம் உச்ச நிலையினை அடைந்து கொண்டுவரும் போதெல்லாம் பல்வேறுபட்ட வடுக்களையும், துன்பங்களையும் சந்திக்கத் தொடங்கினர். குறிப்பாக 19.02.1986இல் தங்கவேலாயுதபுரம் உடும்பன்குளத்தில் வயல்வேளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவி தொழிலாளர்கள் சுமார் 126பேர் வரையில் மிகக் கொடூரமான முறையில் நெருப்பில் கொல்லப்பட்ட சம்பவம் இன்னும் அந்த மக்களின் மனங்களை விட்டகலாத துன்பியல் சம்பவமாக நோக்கப்படுகிறது.

1987இல் முன்னாள் பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தியும் அப்போதைய இலங்கை அதிபர் அமரர் J.R.ஜெயவர்த்தனாவும் செய்து கொண்ட இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பயனாக இந்திய அமைதி காக்கும் படை இம் மண்ணில் நிலை கொண்டது மட்டுமன்றி அசாதாரண சூழ் நிலைக்கும் வழிவகுத்தது. இதன் காரணமாக இந்திய அமைதி காக்கும் படை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் விளைவு அப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு காலங்காலமாக வாழ்ந்த வாழ்விடங்களை விட்டு கையில் அகப்பட்டவற்றுடன் தங்களது முதலாவது இடப் பெயர்வினை சந்தித்தனர்.

இந்த இடப் பெயர்வின் போது பல குடும்பங்கள் தங்களது பூர்வீக இடங்களுக்கு திரும்பிச் சென்றனர். மீண்டும் ஓரளவு யுத்தம் தணிந்த பின்னர் படிப்படியாக வந்து குடியேறத் தொடங்கினர். ஆனால் ஏற்கனவே இருந்த பல குடும்பங்கள் மீண்டும் வந்து குடியேறத் தயங்கிய நிலையில் தமது நிலங்களை கைவிட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து மீளத் திரும்பிய மக்களும், புதிதாகக் காணிகளை வாங்கி குடியேறிய மக்களும் புதிதாக தமது வாழ்க்கையை ஆரம்பித்திருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த கால கட்டங்களில் பல கட்டடங்கள் தகர்க்கப்பட்டன. குறிப்பாக காஞ்சிரங்குடா சந்தியில் அக் கிராமத்தை வளப்படுத்திக் கொண்டிருந்த பால் சேகரிக்கும் நிலையம், உரம் மற்றும் நெற்களஞ்சிய நிலையம் என்பன உடைக்கப்பட்டன. அதே போன்று சாகாமம் கிராமத்தில் பாரிய அளவில் அமைக்கப்பட்டிருந்த நெற்களஞ்சிய சாலையும் உடைக்கப்பட்டது. அதன் அழிந்து கிடக்கும் சான்றுகளிலிருந்தே அக்களஞ்சியசாலையின் கொள்ளளவை மதிப்பிட முடியும். யுத்தம் ஒரு புறம் முனைப்புப் பெற மறுபுறம் தமிழர்களது பொருளாதாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் தமிழர்களாகிய நாமும் நமது பொருளாதாரத்தை அழித்துக் கொண்டோம் என்பதற்கு இவ்வாறான சம்பவங்கள் எடுத்துக் காட்டுக்களாகும்.

1990 ஆம் ஆண்டு யூன் மாதம் மீண்டும் வடகிழக்குப் பகுதியெங்கும் அசாதாரண நிலைமை ஏற்பட்டது. இதுவே இலங்கையின் போரியல் வரலாற்றில் அன்றைய காலகட்டத்தில் அதிக உயிரழிவுகளையும், சொத்து இழப்புக்களையும், குறிப்பாக பல்வேறு பகுதிகளின் இடப்பெயர்வுக்கும் வித்திட்டது. மக்கள் எங்கு சென்றால் உயிர்தப்பலாம் என்று அங்கலாய்த்துக் கொண்டு அலைந்து திரிந்த காலம், இந்தக் காலகட்டத்தில் தான் இந்த ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்களும் தமது இரண்டாவது இடப்பெயர்வினைச் சந்தித்தனர்.

தங்கவேலாயுதபுரம், தாண்டியடி சந்தியில் ஞானமுத்தர் என்பவரும் அவரது குடும்ப உறவினர்களும் என 12 குடும்பங்கள் வரை குடியிருந்தனர். அச் சந்தியில் பாரிய தென்னை மரங்களுடன் கூடிய வீடுகளும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றும், பஸ்தரிப்பு நிலையம் ஒன்றும், அப்போது இருந்தன. இன்று அப்பகுதி அழிவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இங்கு வாழ்ந்த மக்கள் தாண்டியடி பிரதான இடத்திலும், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு மற்றும் காஞ்சிரங்குடா மக்கள் திருக்கோவில் பகுதியில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களிலும், சாகாமம் பகுதி மக்கள் தம்பிலுவில் பகுதியில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களிலும் தஞ்சமடைந்தனர். ஸ்ரீ வள்ளிபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு அலிக்கம்பையில் இருந்து வந்த அவர்களுடைய இனத்தவரோடு கள்ளியந்தீவு என்னுமிடத்தில் முகாம் அமைக்கப்பட்டது.

| கி.சே.உத்.பிரிவு | இடம் பெயர்ந்த குடும்பங்களின் தொகை |
|---|---|
| கஞ்சிக்குடியாறு | 230 |
| தங்கவேலாயுதபுரம் | 329 |
| சாகாமம் | 118 |
| காஞ்சிரங்குடா | 97 |
| தாண்டியடி | 154 |

இவ்வாறு அகதி முகாம்களுக்குள் முடக்கப்பட்டு அரசினால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தைக் கொண்டு இம் மக்கள் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் சுமார் 12 வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இக்காலப் பகுதிக்குள் தம்மால் முடிந்த தொழில்களைச் செய்து அவர்களது வாழ்க்கைச் செலவு போக தம்மால் எஞ்சிய சேமிப்பினைக் கொண்டு சொத்துக்களை உருவாக்கியிருக்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் தங்களது உழைப்பின் திறமையினை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

குறிப்பாக இம் மக்களில் கூடுதலானோர் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்றும், சுயமாக உழைத்தும் நிலங்களை வாங்கி வீடுகளை அமைத்திருக்கிறார்கள். திருக்கோவில் 01ஆம், 02ஆம், 03ஆம், 04ஆம் மற்றும் விநாயகபுரம் 01ஆம், 02ஆம், 03ஆம், 04ஆம் பகுதிகளில் இவர்கள் நிரந்தரமாக வசிக்கக் கூடிய ஒரு நிலைமையினைக் கொண்டிருக்கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 2002 ஆம் ஆண்டில் மீளவும் மீளக்குடியேற்றம் இப்பகுதிகளில் நடைபெற்று மீள் குடியேற்றத்திற்கான கொடுப்பனவும் அவற்றோடு சிறிய உதவிகளும் வழங்கப்பட்டு தமக்கு ஏற்பட்ட இழப்புக்களையும் சுமந்தவர்களாக தமது இருப்பிடங்களில் காணப்பட்ட காடுகளை அழித்து துப்பரவு செய்து குடியேறினர். இக் காலகட்டத்திலும் தங்கவேலாயுதபுரம், கஞ்சிக்குடியாறு பகுதிகளில் விடுதலை அமைப்பினர் சுதந்திரமாக தமது செயற்பாடுகளில் ஈடுபட்ட வண்ணமே இருந்தனர். சாகாமம், காஞ்சிரங்குடா, தாண்டியடி போன்ற இடங்களில் விசேட அதிரடிப்படையினர் முகாமிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தனர்.

**மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் தொடர்பான விபரங்கள்**

| | |
|---|---|
| கஞ்சிக்குடியாறு | 336 குடும்பங்கள் |
| தங்கவேலாயுதபுரம் | 434 குடும்பங்கள் |
| சாகாமம் | 158 குடும்பங்கள் |
| காஞ்சிரங்குடா | 170 குடும்பங்கள் |
| தாண்டியடி | 175 குடும்பங்கள் |

இக் காலப்பகுதிகளில் இப் பகுதிகளில் சிறு சிறு அசம்பாவிதங்கள், தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணமே இருந்தன. ஆனால் அவை குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கவில்லையாயினும் சாகாமம் பகுதி மக்கள் முழுமையாக குடியேறி வாழக் கூடிய சூழ்நிலை அங்கு காணப்பட்டிருக்கவில்லை. சாகாமம் பிரதான வீதி போக்குவரத்து மேற்கொள்ள முடியாத அளவிற்கு பற்றைக் காடுகள் நிறைந்து வீதி குன்றும் குழியுமாக காட்சியளித்தது. மனித நடமாட்டமே இல்லாத ஒரு சூனியப் பிரதேசமான 10ஆம் கட்டை எனப்படும் பகுதி காணப்பட்டது. சுனாமிக்குப் பின்னரான அபிவிருத்திச் செயற்பாட்டின் மூலமே அவ்வீதி புனரமைப்புச் செய்யப்பட்டது. மீளக் குடியேற்றப்பட்ட இப்பகுதிகளில் உள்ளூர் வெளியூர் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தற்காலிக கொட்டில்கள், குடிநீர்க் கிணறுகள், மலசல கூடங்கள், சமையல் பாத்திரங்கள், வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்பட்டன.

இதே வேளை 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் (NEHRP) போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அழிவடைந்த வீடுகளை புணரமைப்பு செய்யும் நோக்கோடு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. அதன் முதற்கட்டமாக மிகவும் கூடுதலாக பாதிக்கப்பட்ட கிராமங்களை தெரிவு செய்ய வேண்டிய நிலைமை மாவட்ட செயலகத்தினூடாக நடைபெற்றது. இதற்கு பாதிப்பின் தகவல் மதிப்பீட்டு படிவங்கள் நிரப்பப்பட்டு அதில் தெரிவிக்கப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே கிராமங்கள் தெரிவு செய்யப்படும். கிராமங்களின் குடும்ப எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டே வீடுகளின் எண்ணிக்கையானது போட்டிகளுக்கு மத்தியில் தீர்மானிக்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் என்னால் மிகவும் புத்தி சாதூரியமாகவும், தந்திரோபாயமாகவும் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய 2005இல் தங்கவேலாயுதபுரம் கிராமம் தெரிவு செய்யப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் எவருமே பெற்றுக் கொள்ளாத அளவிற்கு 93 வீடுகளை அக்கிராமத்தில் வெற்றிகரமாக அமைக்கக் கூடியதாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வருடத்தில் அப் பணிக்கு வேறு ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார். 2006இல் கஞ்சிக்குடியாறு கிராமத்திற்கு 20வீடுகளும், 2007இல் சாகாமம் கிராமத்திற்கு 17வீடுகளும், 2008இல் காஞ்சிரங்குடா கிராமத்திற்கு 10வீடுகளும் அமைக்கப்பட்டன.

2006 காலப்பகுதியில் தங்கவேலாயுதபுரம், கஞ்சிக்குடியாறு பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக அங்கிருந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி தமது மூன்றாவது இடப்பெயர்வை சந்தித்தனர். பாடசாலைகள் தற்காலிகமாக திருக்கோவில் பிரதேசத்தில் இயங்கத் தொடங்கின. மக்கள் மீளவும் அப்பகுதிக்குச் செல்ல அச்சப்பட்டனர். பாதுகாப்பற்ற ஒரு நிலைமை அப்பிரதேசங்களில் நிலவியதால் மக்கள் அங்கு சென்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை. இதனால் மீண்டும் அப்பகுதி விளைநிலங்கள் தரிசு நிலங்களாக மாற்றப்பட்டன. தமது பயிர்செய்யப்பட்டிருந்த நிலையிலேயே தமது விளை நிலங்களை கைவிட்டு இடம்பெயர்ந்திருந்தனர்.

2009இல் புலிகள் அமைப்பிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின் மூலம் அவர்களது செயற்பாடுகள் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது. படிப்படியாக இயல்பு நிலைமை வழமைக்குத் திரும்பியது. அப்பிரதேசங்களில் காணப்பட்ட கண்ணிவெடிகள், பொறிவெடிகள் அகற்றப்பட்டு விட்டன. மக்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்றுவரக் கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் சுயமாக அப்பகுதிகளில் குடியேறி தமது ஜீவனோபாயத்தை நடத்துகின்றனர். இருந்தும் உரிய முறையிலாக மக்கள் குடியமர்த்தப்படவில்லை. அவர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் இருப்பிட வசதிகள் எதுவும் இதுவரை எவராலும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பாடசாலைகள் இன்றுவரை அங்கு கொண்டு செல்லப்படாமல் தற்காலிகமாக இயங்கிய திருக்கோவில் பிரதேசத்திலேயே இயங்கிவருகிறது. தமது இழந்த பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்காக அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைகளின் தொல்லைகளுக்கு மத்தியில் அம்மக்கள் நடாத்தும் ஜீவனோபாய மரணப் போராட்டம் எம் நெஞ்சை நெகிழவைக்கிறது.

- முற்றும் -

ஆக்கம்:
A.L. றஞ்சன் (B.com)
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
திட்டமிடல் பிரிவு.


> வாழ்வின் மேடுபள்ளங்களைக் கண்டு கலங்காமல் அவை கற்பிக்கும் பாடங்களில் கவனமாகக் கற்றுத் தேறுவதே சிறப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் திருமணம்

பூ என்ற ஒரு எழுத்தை
நார் என்ற இரண்டு எழுத்தை
சேர்த்து
பூமாலை என்ற மூன்று
எழுத்தாக்கி
திருமணம் என்ற ஐந்து எழுத்தில்
நிச்சயித்து
முதல் இரவு என்ற ஆறு எழுத்தில்
அறிமுகமாகி
குடும்பவாழ்வு என்ற ஏழு எழுத்தில்
புகுந்து
என்றும் இன்பம என்ற எட்டு எழுத்தில்
வாழ்ந்து
தாய் சேய் தகப்பன் என்ற ஒன்பது
எழுத்தில்
உறவாகி
பல்லாண்டு காலம் வாழ என்ற பத்து
எழுத்தில்
நிலைப்பதே தமிழர் திருமணமாகும்.

- எஸ்.எஸ்.ஓ.சண் -





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேச அபிவிருத்தியில் அமரர். மயில்வாகனம் கனகரெத்தினம் அவர்களின் பங்களிப்பு



திருக்கோவில் பிரதேசத்தில் ஆன்மீக, கலாசார கால்நடை வளர்ப்பு உட்பட பிரதேசத்தின் அபிவிருத்தியில் முன்னாள் பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சருமான அமரர்.மயில்வாகனம் கனகரெத்தினம் அவர்கள் ஆற்றிய பணியும், அவரதுபங்களிப்பும் பராட்டுக்குரியதும், மறக்க முடியாததுமாகும்.

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு தனியான பிரதேச செயலகப் பிரிவுகளும், உள்ளூராட்சிப் பிரிவுகளும் அவசியம் என்பதை உணர்ந்து கொண்ட அமரர் கனகரெத்தினம் அவர்கள் முதலில் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை (பிரதேச செயலாளர் பிரிவு) ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கினார். முதலாவதாக அம்பாறை மாவட்டத்தின் பெரிய உதவி அரசாங்க பிரிவான திருக்கோவில் உதவி அரசாங்க பிரிவை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கி 1977 ஆம் ஆண்டில் இதில் வெற்றியும் பெற்றார். திருக்கோவில் உதவி அரசாங்க பிரிவைத் தொடர்ந்து ஆலையடிவேம்பு, காரைதீவு, கல்முனை தமிழ் பிரிவு போன்ற இடங்களிலும் தனியான தமிழ் உதவி அரசாங்க பிரிவுகளை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கினார். இவரது முயற்சியை இவரைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக வந்த திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் தொடர்ந்து முன்னெடுத்து நிறைவு காண உழைத்தார். நாவிதன்வெளி, கல்முனை, பொத்துவில் தமிழ் பிரிவுகளும் உருவாகின. வீடில்லா மக்களுக்காக சங்கமன் கண்டியில் 50 வீட்டுத்திட்டத்தை ஏற்படுத்தி வீடமைத்துக் கொடுக்க உதவி செய்தார். இதில் ஒரு வீடு சங்கமன் கண்டி உள் ஆலய பூசகருக்கும் வழங்கப்பட்டது.

மேலும் தம்பிலுவிலில் முப்பதேக்கர் எனும் காணியில் வீடமைப்புத் திட்டத்தை ஏற்படுத்தி வீடில்லா மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார். இத்திட்டம் கனகநகர் (வீட்டுத்திட்டம்) என அழைக்கப்படுகிறது. பொத்துவிலுக்கு அருகிலுள்ள ஊறணிக் கிராமத்தில் கனகர் கிராமம் எனும் வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டு வீடில்லா மக்களுக்கு வழங்கப்பட்டது.

இன வன்செயல் காரணமாக திஸ்ஸ மொனறாகலைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுக்காக சங்கமன் கண்டியில் "சங்கமான் கிராமம்"எனும் வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு வீடுகள் வழங்கப்பட்டன. இதேபோல் அளிகம்பை பகுதியில் வீட்டு வசதியின்றி அல்லற்பட்டு வாழ்ந்த வனக் குறவர்களுக்காக "தேவ கிராமம்" என்ற வீடமைப்புத் திட்டம் அமரர் கனகரெத்தினம் அவர்களால் ஏற்படுத்தப்பட்டு வழங்கப்பட்டது. இவ் வீட்டுத்திட்டங்களை அப்போதைய பிரதமர் அமரர் ஆர். பிறேமதாஸ அவர்கள் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழு




*1வது வரிசை இடமிருந்து வலம்:* திருமதி.இராஜகுமாரி சிதம்பரம் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்), திரு.கன.இராஜரெட்ணம் (கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர்), திரு.V.நவரதன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர்), திரு.Dr.மு.கோபாலரெத்தினம் (பிரதேச செயலாளர்), திரு.V.அரசரெட்ணம் (சமுர்த்தி தலைமை முகாமையாளர்), செல்வி.M.பரமேஸ்வரி (ஆசிரிய ஆலோசகர்)

*2வது வரிசை இடமிருந்து வலம்:* செல்வி.T.ராதிகா (கலாசார உத்தியோகத்தர்), திரு.S.உதயகுமார் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்), திரு.L.சந்திரபவன் (மனிதவள அபிவிருத்தி உதவியாளர்), திரு.M.K.விநாயகமூர்த்தி (முகாமைத்துவ உதவியாளர்), திரு.K.சாந்தகுமார் (உளவளத் துணை உதவியாளர்), திருமதி.கஜனி பேரின்பம் (முகாமைத்துவ உதவியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சார வசதியின்றி இருந்த அக்கரைப்பற்றுத் தென்பகுதி கிராமங்கள் பலவற்றுக்கு அமரர் கனகரெத்தினம் அவர்களின் முயற்சியினால் மின்சாரம் வழங்கப்பட்டு இருளில் மூழ்கியிருந்த பகுதிகளுக்கு மின்னொளி ஊட்டப்பட்டது.

மேலும் திருக்கோவில் பிரதேசத்தில் பல்வேறு பாடசாலைகளுக்கு கட்டடங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் ஆசிரியர்கள் குறைவான பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு விளையாட்டுத் துறை ஊக்குவிக்கப்பட்டது.

ஆன்மீக கலாசாரத் துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்த அமரர் கனகரெத்தினம் அவர்கள் பொத்துவில் இந்து இளைஞர் மன்றத் தலைவராக இருந்ததுடன் உகந்தை முருகன் ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும் பணியாற்றினார்.இவரது காலத்தில் உகந்தை முருகன் ஆலயத்திற்காக சுமார் 30 ஏக்கர் காணிவரை கொடுக்க அரசாங்கம் ஒப்புதல் அளித்திருந்ததாகக் கூறப்பட்ட போதும் அவரது மறைவின் பின் யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து இக்காணியின் அளவு குறைக்கப்பட்டுவிட்டது.

திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலய வளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருந்த அமரர் கனகரெத்தினம் அவர்கள் திருவிழா, தீர்த்தோற்சவம் என்பன சிறப்பாக நடக்க உதவிகள் புரிந்ததுடன் திருக்கோவில் முருகனுக்கு தேரோட வேண்டுமென்று அடிக்கடி ஆலயக் கூட்டங்களில் கலந்து கொண்டு வலியுறுத்தி வந்தார். மேலும் கதிர்காமக் கந்தனின் உற்சவத்தை முன்னிட்டுச் செல்லும் யாத்திரிகர்களுக்கு பொத்துவிலுள்ள தனது இல்லத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்வை நீண்டகாலமாகச் செய்து வந்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் தம்பட்டை முதல் தாண்டியடி வரை அமரர் கனகரெத்தினம் அவர்களின் முயற்சியினால் விளையாட்டுப் போட்டிகளும் விழாக்களும் ஏற்படுத்தப்பட்டு இளைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள். விவசாய அபிவிருத்திக்காக குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. பாதைகள் போடப்பட்டன. கால்நடை அபிவிருத்திக்கான உதவிகள் ஊக்குவிக்கப்பட்டதுடன் மீன்பிடித் தொழிலும் ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இறுதியாக அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தியிலும் குறிப்பாக திருக்கோவில் பிரதேச அபிவிருத்தியிலும் கலை, கலாசார வளர்ச்சியிலும் இப்போது காணப்படும் வளர்ச்சிக்கு அமரர் கனகரெத்தினம் அவர்களின் ஆரம்ப முயற்சியே காரணம் எனில் மிகையாகாது. அன்னாரின் பூதவுடல் பூவுலகைவிட்டு மறைந்துவிட்டாலும் அவரது புகழ் இவ்வுலகை விட்டு மறைந்து விடாது. அவரது செயல்களால் உருவான அழியாத நினைவுகள் என்றென்றும் அவரது நினைவை நெஞ்சங்களில் நிலைத்து நிற்கச் செய்யும். திருக்கோவில் பிரதேச அபிவிருத்தியில் அமரர் மயில்வாகனம் கனகரெத்தினம் அவர்களின் பங்களிப்பு மறக்கமுடியாதது, மகத்தானது.

**திரு. என். எஸ் தியாகராசா**
அம்பாறை மாவட்ட முன்னாள் கலாசார உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலகவளர்ச்சியில் திருக்கோவில் பிரதேசம்

சமுதாயத்தின் அறிவு மையமாக நூலகம் விளங்குகின்றது. நூல்+அகம்=நூலகம் ஆகும். நுவல் என்ற வினை அடியிலிருந்தே நூல் என்ற சொல் தோன்றியது. நுவல்தல் அல்லது நுவலப்பட்டது நூல் ஆயிற்று. நுவலுதல், சொல்லுதல் என்பன ஒரே பொருளுடையன. நூல் ஏதாவது ஒன்றை எமக்குச் சொல்கிறது அல்லது நுவல்கிறது.

சிந்தனையாளர்கள் அல்லது எழுத்தாளர்கள் தாம் சிந்தித்தவற்றை நூலாக வடிவமைக்கின்றனர். நூல் என்ற சொல் பண்டைக் காலத்தில் "இலக்கணம்" என்ற பொருளிலும், "பருத்திநூல் நூற்கப்படுதல்" என்ற பொருளிலும் பயன்பட்டது. ஆயினும், தற்காலத்தில் புத்தகம் என்ற பொருளிலேயே அதிகம் பயன்படுகிறது.

அறிஞர்கள் தாம் சிந்தித்தவற்றை தாம் வாழ்ந்தகாலத்திலேயே கிடைத்த எழுது பொருள்களான களிமண்தட்டு, செங்கல், கருங்கல், மரப்பட்டை, ஓலை, தோல், தகடு, காகிதம் முதலியவற்றில் பொறித்து வைத்தனர். இதை மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக, பாதுகாக்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. இது ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என மாறும்போது ஒழுங்கு முறையும் தேவைப்படுகிறது. அதாவது, பலவற்றைப் பலரும் பயன்படுத்துமாறு பாதுகாப்பதற்கு இடம் தேவைப்படுகிறது. இதன் பெயர்தான் நூலகம்.

## நூலகம் என்றால் என்ன?

நூல்கள், காலமுறை இதழ்கள், நிலப்படங்கள், சுவடிகள், நிழற்படங்கள், நாளிதழ்கள், ஒலி, ஒளிநாடாக்கள், இறுவெட்டுக்கள் முதலியன ஒன்றாகத் தொகுத்து மக்கள் பயன்கொள்ளும் வகையில் வைக்கப்பட்டுள்ள இடம் நூலகம் எனப்படும்.

இன்று அதிநவீன வசதிகளுடன் நூலகங்கள் இயங்கி வருகின்றன. கணனி, இணையம் முதலான தொடர்பு ஊடகங்கள் மாத்திரமன்றி, அதி நவீன உபகரணங்களும், தளபாடங்களும் நூலக சேவைக்காகப் பயன் படுத்தப்படுகின்றன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளின்றி, நூலகங்கள் இல்லை எனலாம்.

## நூலக வகை

உலகில் பல்லாயிரக்கணக்கான நூலகங்கள் பணியாற்றி வருகின்றன. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, இந்தியா, யப்பான் முதலான நாடுகளில் மிகப் பிரமாண்டமான, அதிசயிக்கத்தக்க நூலகங்கள் உள்ளன. குளிரூட்டப்பட்ட அதி நவீன வசதிகளுடன் இவை சேவையாற்றி வருகின்றன.

இலங்கையைப் பொறுத்த வரையில் நான்கு வகைகளில் நூலகங்கள் யாவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

01. தேசிய நூலகம் - National Library
02. கல்வியியல் நூலகம் - Academical Library


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) பிரிவெனா நூலகம் - Prevena Library

(ஆ) பாடசாலை நூலகம் - School Library

(இ) பல்கலைக்கழக நூலகம் - University Library

03. பொது நூலகம் - Public Library

04. விசேட நூலகம் - Special Library

பாடசாலை நூலகங்களிலே மேலும் பின்வரும் வகைகளை நாம் அவதானிக்கலாம்.

01. ஆரம்பப் பாடசாலை நூலகம் - Primary School Library

02. சிரேஸ்ட்ட பாடசாலை நூலகம் - Senior School Library

(அ) இடை நிலைப் பாடசாலை நூலகம் - Middle School Library

(ஆ) சிரேஸ்ட இடை நிலைப் பாடசாலை நூலகம் - Senior Secondary School Library

(இ) தேசிய பாடசாலை நூலகம் - National School Library

மேற் கூறிய நூலக வகைகளில் தேசிய நூலகம் இலங்கையின் நூலகங்கள் அனைத்திலும் உயர்ந்ததாய் விளங்குகின்றது. மிக உயர்ந்ததும், பரந்ததுமான சேவைகளை தேசிய நூலகம் வழங்குகின்றது.

உலகில் உள்ள பிரபலமான நூலகங்களுடன் இணையத்தளத்தின் மூலம் தொடர்பு கொண்டு, ஒரு சில நிமிடங்களிலேயே வாசகர்களுக்கு தகவல்களைப் பெற்றுத்தரக் கூடிய உயர்ந்த சேவையை இந்நூலகம் வழங்குகின்றது. அச்சுப் பிரதிகளாகவோ, இலத்திரனியல் சாதனங்களாகவோ, வாசகர்கள் இவற்றைப் பெற முடியும்.
(Information Technology Activities) தகவல் தொழில் நுட்ப செயற்பாடுகள் என்ற பகுதியினூடாக இவற்றை வாசகர்கள் பெற்றுப் பயன்பெற முடியும்.

இவற்றோடு வாசகர்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் 'Reader Services' என்னும் பகுதி இயங்குகிறது. மிக முக்கியமாக இலங்கையில் வெளியாகும் நூல்கள், நாளிதழ்கள், பருவகால வெளியீடுகளின் பட்டியலாக்கம் Bibliographic Sevices பயனுறுதிவாய்ந்த சேவையாக விளங்குகிறது. இலங்கையில் எந்த நூல், யாரால், எப்போது வெளியிடப்பட்டது என்ற முழு விபரத்தையும் பெறக் கூடிய ஒரே ஒரு இடம் என்றால் அது தேசிய நூலகம் மாத்திரமே ஆகும்.

இதே போல் ஆவணமாக்கல் சேவைப்பிரிவு (Documentation Services) இலங்கையின் பூர்வீகக்கால சுவடிகள் முதல் எழுத்தாவணங்கள் ஊடாக இறுவெட்டுக்கள் வரை கிடைத்தற்கரிய பொக்கிசங்களைப் பேணிப் பாதுகாப்பதோடு, வாசகரின் பயன்பாட்டுக்காகவும் வழங்குகிறது.

இன்னும் நூல்களைப் பேணிப்பாதுகாத்தல், மட்டைகட்டுதல், இரவல் வழங்குதல், நூலீட்டல் முதலான பல சேவைகளை இந்நூலகம் வழங்கிவருகிறது. இலங்கையிலுள்ள நூலகங்களுக்கெல்லாம் தாய்போன்று இது விளங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகத்துடன் ஒப்பிடும் போது, ஏனைய நூலகங்களின் பணி குறைந்தவையே. குறுகிய எல்லையினுள்ளே அவை பணியாற்றுகின்றன. பெரும்பாலான நூலகங்கள் நவீன வசதிகளை எட்டாத நூலகங்களாகவும், நூலக நிருவாக முறைகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தப்படாத நூலகங்களாகவுமே காணப்படுகின்றன. பல நூலகங்கள் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றன. இன்னும் சில நூலகங்கள் வசதிகளோடு இருந்தும், பயன்படுத்துவோர் இன்றிக் கிடக்கின்றன. இதே போல் நூலகங்களை நூலகத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் வேறு வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துகின்ற நிலைகளும் உள்ளன. சில நூலகங்கள் பூட்டிவைக்கப்படும் நூலகங்களாக உள்ளன. இவற்றில் புத்தகங்கள் ஏனைய ஆவணங்கள் அழகாக அடுக்கப்பட்டும், தூசு துடைக்கப்பட்டும் இருக்கும். இது ஒரு வகையில் புத்தகங்களை ஒழித்து வைக்கும் இடம் போல் தோற்றம் அளிக்கும்.

இவையெல்லாம் நூலகங்கள் தொடர்பாக எழும்குற்றச் சாட்டுக்களாகும். இவை உண்மையில் நூலகங்களே அல்ல. நூலகம் என்பது விரைவாகவும், இலகுவாகவும் நுகர்வோனின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். கடற்பரப்புப் போல் நூல் பரந்திருந்தாலும் மிகமிகக் குறுகிய நேரத்தில் புத்தகத்தையோ, தகவல்களையோ பெற்று நுகர்வோன் திருப்தி அடைய வேண்டும். அனைத்துத் தகவல்களையும் பெறும் மையமாக நூலகம் திகழ வேண்டும்.

பெயரளவில் நூலகங்கள் இருக்கக்கூடாது. உயிரோட்டமுள்ளதாக செயற்படுதன்மை கூடியதாக நூலகங்கள் திகழவேண்டும். கருத்துப் பேழைகளாய் செய்திக் களஞ்சியங்களாய் நூலகங்கள் திகழும்போதே அறிவு, ஆற்றல் மிக்க சமுதாயமும் உதயமாகும்.

## திருக்கோவில் பிரதேச நூலகங்கள்

திருக்கோவில் பிரதேசத்தில் நூலகங்கள் பற்றிப் பார்க்கின்றபோது இங்கு பொது நூலகம், படிப்பகங்கள் அல்லது வாசிகசாலை, பாடசாலை நூலகங்கள் என்ற வகைகளை அவதானிக்கலாம். பொது நூலகம் ஒன்று மாத்திரமே பிரதேசசபையின் கீழ் செயற்பட்டு வருகின்றது. சுமார் 40 வருடங்களாக இந்நூலகம் இயங்கி வருகின்றது. ஆரம்ப காலத்தில் தம்பிலுவில் கிராமசபை இதனை நிருவகித்து வந்தது. ஓரளவு நூலக ஒழுங்குமுறைகளைக் கொண்டு இயங்கிவரும் இந்நூலகத்தில், அங்கத்தவர்கள் நூல்களைப் பெற்றுச் செல்லும் வகையில் வசதிகள் ஆரம்பகாலத்திலிருந்தே செய்துகொடுக்கப்பட்டன. நூல் கொள்வனவு, இலக்கமிடுதல், வகைப்படுத்தல், இரவல்வழங்கல், நூல்நீக்கம், பருவவெளியீடு, நாளிதழ்களைப் பெற்றுக்கொடுத்தல் முதலான பணிகள் சிறப்பாக நடைபெற்றன. இன்று இந்நூலகம் தம்பிலுவில் மத்திய சந்தைக்குப்பின்னால் அமைந்திருக்கின்றது.

எனினும், ஏனைய பொது நூலகங்களோடு ஒப்பிடும்போது இதன் வளர்ச்சி பல மடங்கு உயர வேண்டியுள்ளது. குறிப்பாக, எமக்கு அண்மையிலுள்ள ஆலையடிவேம்பு பிரதேசத்தில் இயங்குகின்ற பொது நூலகத்தோடு ஒப்பிடும் போது, மிகவும் தாழ்ந்த நிலையிலேயே தம்பிலுவில் பொது நூலகத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இதனைவிடவும் எத்தனையோ மடங்கு உயர்ந்த நிலையில் பொது நூலகங்கள் பல இயங்குகின்றன. ஆனால் பாரம்பரிய முறையிலான செயற்பாடுகளைக் கொண்டதாகவே இந்நூலகம் இயங்குகின்றது. நவீன வசதிகள் எதனையும் இந்நூலகம் எட்டவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனி, இணையம் என்பவற்றின் வசதிகள் இங்கு ஏற்படுத்தப்படவில்லை. இலக்கமிடுதல், வகைப்படுத்தல் என்பனவும் பழையமுறையிலேயே பின்பற்றப்படுகின்றன. புத்தகங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான வசதிகளும் இல்லை. காலங்கடந்த அல்லது காலாவதியான புத்தகங்களையே பார்க்கக் கூடியதாக உள்ளது. பொது நூலகம் ஒன்று இந்நிலையில் இருப்பது வேதனைக்குரியது.

எனினும், இப்பிரதேசத்தில் நூலகம் என்ற எண்ணக் கருவை மக்கள் மத்தியில் பதியவைத்த பெருமையும் வாசகர்களுடைய தேவைகளை இப்பிரதேசத்தில் பூர்த்தி செய்த பெருமையும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குக் கணிசமான பங்களிப்பினைச் செய்த பெருமையும் இந்நூலகத்தைச் சாரும். பல நூற்றுக் கணக்கானோர் இதில் அங்கத்துவம் பெற்றுப் பயன்பெற்று வந்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் பொது நூலகத்தைத் தவிர படிப்பகம், அல்லது வாசிகசாலை என்ற நிலையில் ஊர் தோறும் சிறிய அறிவூட்டும் மையங்களும் இயங்கி வருவதைக் காணலாம். இவற்றில் நாளிதழ்கள், பருவவெளியீடுகள், சஞ்சிகைகள் போன்றனவே வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சேகரிக்கப்பட்டிருக்கும். குறிப்பாக, தம்பட்டை, தாண்டியடி, விநாயகபுரம் போன்ற ஊர்களில் இவை இயங்கிவருகின்றன. வாசிப்புத் தேவையை மாத்திரம் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் இவற்றின் செயற்பாடுகள் அமைந்திருக்கும். பாரிய சேவைகளை இவற்றால் வழங்க முடியாது.

இவைதவிர அரசசார்பற்ற நிறுவனங்கள் அல்லது தன்னார்வக் குழுக்களின் அனுசரணையோடு சில சிறிய நூலகங்களும் இயங்கி வருகின்றன. குறிப்பாக 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலைத்தாக்கத்தின் பின் இத்தகைய நூலகங்களை எமது பிரதேசத்தில் அவதானிக்கலாம். உதாரணமாக "வேள்விஷன்" அமைப்பின் அனுசரணையில் விநாயகபுரம், தாண்டியடி போன்ற இடங்களில் இயங்கிவரும் நூலகங்களைக் குறிப்பிடலாம்.

இவைதவிர, பாடசாலை நூலகங்கள் பல திருக்கோவில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் இயங்குவதை அவதானிக்கலாம். சுமார் 22 பாடசாலைகள் இப்பிரதேசத்தில் உள்ளன. இவற்றில் இரண்டு பாடசாலைகளில் மாத்திரம் நூலகத்திற்கென்று தனியான கட்டிட வசதி உண்டு. ஏனையவற்றில் பாடசாலையினால் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்ட அறைகளில் நூலகம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அதாவது தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயம் திருக்கோவில் மெ.மி.த.மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தனியான கட்டடம் நூலகத்திற்கென அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகளில் எல்லாம் குறித்த ஓர் அறையிலேயே நூலகங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

எனினும், நூல்களின் எண்ணிக்கையிலும் அங்கத்தவர் தொகையிலும் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலய நூலகமே முதலிடம் பெறுகிறது. இதற்கு அடுத்த நிலையில் விநாயகபுரம் மகாவித்தியாலயம், தம்பட்டை மகாவித்தியாலயம், திருக்கோவில் மெ.மி.த.மகாவித்தியாலயம் என்பன காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


இப்பாடசாலை நூலகங்களிலேயே மாணவர்கள் நூலகத்தில் அங்கத்தவராகி, நூல்களைப் பெற்று வாசித்துப் பயன்பெறும் வசதிகள் உள்ளன. ஏனையவற்றில் மாணவர்கள் புத்தகங்களைப் பெற்று வாசித்த பின், ஒப்படைக்கும் நிலைகளே உள்ளன.

சில பாடசாலைகளில் பெட்டிகளில் புத்தகங்கள் அடைக்கப்பட்டு முடங்கிக்கிடக்கின்றன. போதியளவில் கட்டடவசதி, ஆசிரிய வளம் இல்லாத பாடசாலைகளிலேயே இந்நிலைகளை அவதானிக்கலாம். திருக்கோவில் பிரதேச பாடசாலை நூலகங்களை, நகர்ப்புறப் பாடசாலைகளோடு ஒப்பிடும்போது மிகமிக வளர்ச்சி குறைந்த நிலையிலேயே இவை இயங்குகின்றன. நகர்ப்புறப் பாடசாலை நூலகங்களில் கணனி, இணையம் என்பவற்றுடன் நூலகத்திற்குரிய இறாக்கை, மேசை, பருவ வெளியீடுகளுக்குரிய தளபாடம், இறுவெட்டுக்கள் சேகரிக்கும் களஞ்சியம், நிலப்படங்கள், தேசப்படம் என ஒவ்வொருவகைக்கும் உரிய தளபாடங்கள் அமைந்திருக்கும்.

நூல்கள் ஓர் பொதுவான ஒழுங்குமுறையில் இலக்கமிட்டு வகைப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், எமது பிரதேசப் பாடசாலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையான இலக்கங்களையும், வகையீடுகளையும் தாங்களாகவே உருவாக்கிக் கொண்ட முறைகளிலே செய்து வருவதை அவதானிக்கலாம். நூலகம் பற்றிய போதிய அறிவின்மையே இதற்குக் காரணம்.

இது தவிர நூலகத்திலேயே எல்லா செயற்பாடுகளையும் ஒழுங்கு செய்து அதனை ஓர் பல்தேவைக் கட்டடம் போல் பாவிக்கின்ற நிலைகளையும் அவதானிக்கலாம். நூலகம் பாடசாலை ஆரம்பித்து முடியும் வரை உயிர்த்துடிப்புடையதாய் இயங்க வேண்டும். அது பல தரப்பட்ட சேவைகளை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும். கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளின் அத்திவாரமே நூலகம்தான்.

வாசிப்புத்தேவையை மாத்திரம் வழங்குவது நூலகமல்ல, மாணவர்களது அனைத்துப் பாடங்களுக்குமுரிய அறிவையும், உபகரணங்களையும் நூலகம் வழங்க வேண்டும். அதேபோல் ஆசிரியர்களுக்குரிய பாடத்திட்டம், பாடக்குறிப்பு, முன்னாயத்தம், உபகரணம், உசாத்துணைகளையும் நூலகம் வழங்க வேண்டும். எந்தளவுக்கு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் கூடுதலான சேவைகளை பாடசாலை நூலகம் வழங்கமுடியுமோ, அந்தளவுக்கு வழங்கவேண்டும்.



எனவே, சமுதாயத்தின் அறிவுக்கண்களாகத்திகழும் நூலகங்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றமடைய வேண்டியதும், அதன் சேவைகள் விரிவடைய வேண்டியதும் அவசியமாகும். கோவில்களைப் போன்று புனிதமானவையாக அவை பேணிப்பாதுகாக்க வேண்டியவையும் ஆகும்.

**சி. விநாயகமூர்த்தி**
B.A. (Dip.in.Ed. Merit)
Teacher Librarian Thambiluvil.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில அவதானிப்புக்கள்:**

படைப்பாளிகள் பற்றிய விபரங்கள் தொகுக்கப்படாமை, நூல்கள் பற்றிய விபரங்களை தொகுக்கப்படாமை. நூல்கள் கிடைப்பது அரிதாகவுள்ளமை, சிறந்த நூலக வசதிகளின்மை, படைப்புக்கள் நூலுருப்பெறாமை, அனர்த்தங்களால் ஏற்பட்ட இழப்பு, பிரதேசங்களுக்கிடையிலான தொடர்புகள் குன்றியுள்ளமை முதலிய காரணங்களால் ஈழத்து நவீன இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் முழுமையடையாத நிலையிலே நடந்து வருவது கண்கூடு. மாவட்ட, பிரதேச மட்ட ஆய்வுகளுக்கும் இவ்வுண்மை பொருந்துவதே. இத்தகைய அவப்பேறான நிலையில் திருக்கோவில் பிரதேச நவீன இலக்கியப் படைப்பாளிகள் பற்றிய இவ்வாய்வும் பரவலாக அறியப்பட்ட நூலுருவில் வெளிவந்த தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைகின்றது. இவ்வகையில் குறிஞ்சிவாணன், முல்லை வீரக்குட்டி, தம்பிலுவில் தயா, SP. கனகசபாபதி, யோகா யோகேந்திரன், M.கந்த ப்பன், தம்பிலுவில் ஜெகா, கோவிலூர் செல்வராஜன், திருக்கோவில் “கவியுவன்” ஆகியோரது படைப்புக்கள் கவனத்திற்குரியவை.

மேற்கூறியோருள் முல்லைவீரக்குட்டி, தம்பிலுவில் ஜெகா, குறிஞ்சிவாணன், தம்பிலுவில் தயா, S.P.கனகசபாபதி ஆகியோர் கவிஞர்கள் வரிசையைச் சேர்ந்தவர்கள். எழுபதுகளளவிலே கவிதையுலகில் பிரவேசித்த முல்லை வீரக்குட்டி, நீலாவணனின் கவிதைப் பண்ணையில் ‘முளைவிட்ட தளிர்’ என்ற சிறப்பிற்குரியவர். பொதுவுடைமைக் கொள்கையில் நாட்டம் கொண்டவர். இவ்விதத்தில் அன்னாரின் ‘சருகுகள்’ என்ற பின்வரும் கவிதை பலராலும் பாராட்டப்பட்ட தொன்று;

**நாங்கள்...**
**கீழே விழுந்து கிடக்கின்றோம்**
**அநேக காலம் கிடந்து விட்டோம்!**
**நீங்கள்...**
**எங்களைக் குனந்து பார்க்கவில்லை**
**எங்கள் அழுகுரலை ஏனென்று கேட்கவில்லை**
**எங்களை**
**ஆடுகள் மாடுகள்...**
**..............................**

தொழிலாளர் எழுச்சி, சமூக மாற்றங்கள், அன்றாட அனுபவங்கள், வாழ்க்கை பற்றிய தேடல் முதலான விடயங்கள் பற்றி எழுதி வந்துள்ள இவர் மரபுக் கவிதை, புதுக்கவிதை ஆகிய இருவடிவங்களையும் திறம்படக் கையாளக் கூடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தம்பிலுவில் ஜெகா, எண்பதுகளளவிலே கவிதையுலகில் காலடி எடுத்து வைத்தவர். ஆரம்பத்திலே இயற்கை, ஊர், சான்றோர், போர்க்காலம் முதலான விடயங்களைப் பாடுபொருளாகக் கொண்ட இவர், பெண் நிலைவாதச் சிந்தனை நோக்கில் அண்மைக் காலமாக எழுதிவரும் கவிதைகளால் விசேட கவனத்திற்குரியவராகிறார். போக்குவரத்து வேளைகளின் போது பெண்கள் படும் துயரங்கள் பற்றிய ‘உரசல்’ என்ற கவிதை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கது.

**கந்தோரில் வேலை செய்யும் காரிகை நான்**
**ஓடி வந்து பஸ்சில் ஏறுகின்றேன்**
**ஒரு கையில் வேக் மறுகையில் காகிதக் கோவை**
**கம்பியையும் பிடிக்க முடியாது நிற்கிறேன்**
**எனது கைச் சுமைகளை கைமாற்ற மனமின்றி ...**

இவரும் புதுக்கவிதை மட்டுமன்றி மரபுக் கவிதை எழுதுகின்ற ஆற்றலும் கைவரப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர் குறிஞ்சிவாணன் அறுபதுகளளவிலே இலக்கியத் துறையில் நுழைந்தவர். எழுபதுகள் தொடக்கம் சாகாமத்தில் வாழ்ந்து வருகிறார். மலையகத் தொழிலாளர் வாழ்வில் பன்முக அலங்கோலங்களையும் (வீடில்லாமை, சுரண்டல், கடின உழைப்பு, பெண்களது உழைப்பு, கடன் பளு முதலியன) கோலங்களாகவும், கோடுகளாகவும், கீதங்களாகவும், கவிதைகளாகவும் வழங்கி பிறந்த மண்ணிற்கும், புகுந்த மண்ணிற்கும் பெருமை சேர்ப்பவர். இவரது கவிதை ஒன்றில் வரும்.

**"துண்டு நிலம் வேண்டும் - எங்களுக்குத்**
**துண்டு நிலம் வேண்டும் - அந்தத்**
**துண்டு நிலத்தினிலே - காய்கறித்**
**தோட்டந் செய்ய வேண்டும்"**

என்ற பகுதியும் பிறிதொரு கவிதையில் இடம்பெற்றுள்ள

**காட்டில் வாழ் கொடுங்கரடி புலியைக் கூடக்**
**கண்ணெதிரே கண்டாலும் கலக்கம் இல்லை.**
**...................................................................**

என்ற பகுதியும் மலையகத் தொழிலாளரது வாழ்நிலையை யதார்த்தமாக படம் பிடிப்பவையாக வெளிப்பட்டு, இவரது கவியாற்றலுக்குச் சிறந்த சான்றுகளாகின்றன.

திருக்கோவிலைச் சேர்ந்த S.P. கனகசபாபதி 1970களளவில் "கல்கிதாசன்" எனும் புனைபெயரில் கவிதைகள் எழுதி வருவதாக அறியப்படுகிறது. கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இவர், தனது கவிதைகளைத் தொகுத்து 'கல்கிதாசன் கவிதைகள்' எனும் பெயரில் 2011இல் ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டதாக அறியமுடிகிறது.

தம்பிலுவில் தயா என்பவரும் தனது பாடசாலைக் காலம் முதல் கவிதைகள் எழுதி வருவதாக அறியப்படுகிறது. இவரது கவிதைகள் வீரகேசரி, தினகரன், பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவரது கவிதைகள் ஓர் தொகுதியாக வெளிவரவேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

திருக்கோவிலைச் சேர்ந்த M. கந்தப்பன் அவர்களும் கவிதை, கட்டுரை, நாடகம் போன்ற துறைகளில் ஆர்வமுடையவராக சிறந்த கட்டுரை கவிதைகளை எழுதி வருவதாகவும் அறியப்படுகிறது. இலங்கை இந்துமாமன்றம், இலங்கை மெதடிஸ்த திருச்சபை நடாத்திய கட்டுரைப் போட்டிகளில் உலகளாவிய ரீதியில் 1ஆம் இடம் பெற்றவர் என்பதை பத்திரிகை வாயிலாக அறிய முடிகிறது.

திருக்கோவில் பிரதேச சிறுகதை எழுத்தாளர்களுள் யோகா யோகேந்திரன், திருக்கோவில் கவியுவன், கோவிலூர் செல்வராஜன் ஆகியோர் பற்றி இங்கு கவனிக்க முடிகின்றது.

எழுபதுகளளவிலே சிறுகதை எழுதத் தொடங்கிய திருமதி யோகா யோகேந்திரன் வறுமை, மனிதநேயம், போர்க்கால அவலங்கள், ஆசிரிய மாணவ உறவு, (சாதி, மத, இன, பிரதேச பேதங்கடந்த) காதல் முதலான பல்வேறு விடயங்கள் பற்றியும் எழுதி வருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை, பணக்காரர், படித்தவர், பாமரர், தமிழர், சிங்களவர், முஸ்லிம் என பல்வகைப்பட்ட பாத்திரங்களும் இவரது சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளன. போர்க்காலச் சூழலையும் பாடசாலைச் சூழலையும் களமாகக் கொண்டு அதிகளவு சிறுகதை எழுதிய கிழக்கிலங்கை பெண் எழுத்தாளர் இவர் மட்டுமே என்று துணிந்து கூறமுடியும். சிறுகதையின் உருவச் செழுமையிலும் பாத்திரங்களின் அகப் போராட்டங்களை வெளிப்படுத்துவதிலும், சிறுகதை ஒருமைப்பாட்டிலும் மென்மேலும் கவனம் செலுத்துவாராயின், இவர் குறிப்பிடத்தக்க சிறுகதை ஆசிரியராக பரிணமிக்கக் கூடிய வாய்ப்புள்ளது.

தொண்ணூறுகளளவிலே உருவான முக்கியமான எழுத்தாளரென்ற விதத்தில் ஈழத்து விமர்சகர்களை திருக்கோவில் நோக்கித் திருப்பிய சிறப்பு திருக்கோவில் கவியுவனுக்குள்ளது. சிறுகதை என்றால் கதை கூறுவது, என்ற நிலைமையை 80களளவில் மாற்றிய ஈழத்து எழுத்தாளருள் கிழக்கிலங்கை உமாவரதராஜனுக்கு முக்கியமானதொரு இடமுள்ளது. அத்தகைய இடம் கிழக்கிலங்கையில் 90களளவில் திருக்கோவில் கவியுவனுக்கு கிடைத்தது. தகப்பன்-தாய்-மகன்-மகள்-சகோதரர்-நண்பர்-காதலர் முதலானோருக்கிடையிலான உறவுகளின் நெருக்கங்களை, விரிசல்களை, ஏக்கங்களை, அகநிலைப்பட்ட முறையில் தன் சில அனுபவங்களாக கலை நேர்த்தியுடன் வெளிப்படுத்துபவையாக அமைந்தவை திருக்கோவில் கவியுவனின் சிறுகதைகள்! சமகால விடுதலைப் போராட்டச் செயற்பாடுகளை சிறப்பாக வெளிப்படுத்துகின்ற சில சிறுகதைகளை 90களளவில் எழுதிய கிழக்கிலங்கை எழுத்தாளர் என்ற விதத்திலும் திருக்கோவில் கவியுவன் முக்கியமானவர். பேரினவாதிகளின் சமாதான முயற்சியினை, வாய்மொழிகளை மரபு உத்தியில் எடுத்துரைக்கும் 'காற்றுக்கனக்கும் தீவும்' முக்கியமானதொரு சிறுகதையே.

கோவிலூர் செல்வராஜன் புலம்பெயர்ந்த குறைந்த எண்ணிக்கையினரான கிழக்கிலங்கை சிறுகதை எழுத்தாளர் என்ற விதத்தில் முக்கியமானதொருவர் புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் சமகால ஈழத்துப் பிரச்சினைகளை புகலிட நாட்டிலிருந்து எழுதுவதனூடாக ஈழத்து இலக்கிய வளர்சசியை அகலப்படுத்தி வருபவர்கள். கோவிலூர் செல்வராஜனின் சிறுகதைகளுள் ஒருசில ஈழத்து விடுதலைப் போராட்டம், பேரினவாத ஒடுக்கு முறைகள் சார்ந்தவை. இவ்வழி ஈழத்து போர்க்காலச் சிறுகதை வளர்ச்சிக்கு கிழக்கிலங்கையின் முக்கியமான பங்களிப்பாக அமைபவை புலம்பெயர் வாழ்க்கைச் சித்திரிப்பு என்ற விதத்தில் இவரால் எழுதப்பட்ட சிறுகதைகள் கூட ஈழப் போராட்ட எதிரொலி சார்ந்தனவாயுள்ளன. ஒருசில சிறுகதைகள் மட்டும் புகலிட வாழ்க்கைப் பிரச்சினைகள் சார்ந்தவை. புதிய தலைமுறை அவ்விதத்தில் முக்கியமானதொன்று. தகப்பனிடம் அடிவாங்கிய மகள், இறுதியில் பொலிசுக்கு அறிவிக்க, பொலிஸ் தகப்பனை ஸ்ரேசனுக்கு அழைத்துச் செல்வது பற்றியது அது!

முல்லை வீரக்குட்டி, தம்பிலுவில் ஜெகா ஆகியோர் சிறுகதைகள் எழுதியிருப்பதாக அறியப்படுகின்றதாயினும், அவை எவையும் நூலுருப் பெற்றதாகத் தெரியவில்லை.

சிறுவர் இலக்கியமும் நவீன இலக்கிய வடிவங்களுளொன்றே. திருமதி.யோகா யோகேந்திரன் சிறுவர் பாடல்களும் சிறுவர் கதைகளும் எழுதி வருகிறார். சிறுவர்களுக்கு பயன்படுகின்ற விருப்பமான, அவசியமான விடயங்கள் சுவைபட எழுதப்பட்டுள்ளன.
(உதாரணம்):

**கீரைகள் உண்போம்**
**கீரை வகையைத் தினம் உணவில்**
**சீராய்ச் சேர்த்து நாமுண்போம்**
**விரும்பி நாமும் கீரையுண்டால்**
**இரும்புச் சத்து கிடைத்திடுமே**
**............................**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுவர் இலக்கியத் துறையில் பெண் எழுத்தாளர்கள் ஈடுபடுவது அரிதான சூழலில் இவரது இத்துறை பங்களிப்பு முக்கியமானது.

திருக்கோவில் பிரதேசம் சமகாலத்தில் நாவலாசிரியர்கள் எவரையும் வெளிக்காட்டியிருப்பதாகத் தெரியவில்லை.

தற்போது நாவல்கள் எதுவும் வெளிவராவிடினும், 30களளவில் (1930) தம்பிலுவில் உவில்லியம்பிள்ளை 'இந்திராபுரி இரகசியம்' 'மஞ்சள் பூசும் அல்லது இழந்த நிலை' ஆகிய இரு நாவல்கள் எழுதியிருந்தாரென்றும், அவை அச்சில் வெளிவரவில்லையென்றும் பண்டிதர் வீ.சி. கந்தையா குறிப்பிட்டிருப்பது இலக்கிய ஆர்வலர் அறிய வேண்டிய விடயமாகும்.

பிரதேச மட்டத்திலான கிழக்கிலங்கை நவீன இலக்கிய வளரச்சி பற்றி அவதானிக்கின்ற போது சுவாரஸ்யமான சில அவதானிப்புக்களை அறிய முடிகிறது. எழுபதுகளிலே கிழக்கிலங்கை எழுத்தாளர் உருவாக்கத்தில் சிந்தாமணி, தினபதி, ராதா, குமரன் ஆகிய ஏடுகளுக்கு முக்கிய பங்கு இருந்துள்ளன என்பதும் பெண் எழுத்தாளர்களது உருவாக்கத்தில் இலங்கை வானொலியின் பங்கு அதிகமென்பதும், பெண் எழுத்தாளர்களுள் கணிசமானோர் அரச பணியாளர்களாகவிருகின்றார்களென்பதும் அவற்றுள் சில; 90களளவில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் உருவானதில் சரிநிகர் இதழின் பங்களிப்பும், ஆரியர் அமைப்பின் பங்களிப்பும், இளந்தலை முறையினர் சிலரின் பல்கலைக்கழகத் தொடர்பும் காரணமாக விளங்கியுள்ளன என்பன வேறு சில; நூல் வெளியீட்டு முயற்சியில் மணிமேகலைப் பிரசுரம் அதிக ஈடுபாடு காட்டுகிறது. 90கள் தொடக்கம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பிரதேச சபைகள் கலை இலக்கிய முயற்சிகளில் துடிப்புடன் செயற்பட ஆரம்பித்தமையையும் மறந்து விடுவதற்கில்லை! இப் பின் புலத்தில் திருக்கோவில் பிரதேச எழுத்தாளரது புத்தெழுச்சியில் திருக்கோவில் பிரதேச சபைக்கு முக்கியமானதொரு கடப்பாடு உண்டென்பதை வற்புறுத்த வேண்டியதில்லை!

ஆதார நூல்கள்:

கவிதை:

'இன்னும் விடியவில்லை' - குறிஞ்சிவாணன், முல்லை வீரக்குட்டி, தம்பிலுவில் ஜெகா - 1998

'துயரம் சுமக்கும் தோழர்களாய்' - குறிஞ்சிவாணன் 2011

சிறுகதை:

'இன்னார்க்கு இன்னாரென்று' - யோகா யோகேந்திரன் 2002

'அவள் காத்திருக்கிறாள்' - யோகா யோகேந்திரன் 2004

'வாழ்தல் என்பது - திருக்கோவில் கவியுவன்

'விடியாத இரவுகள் - கோவிலூர்' செல்வராஜன்

சிறுவர் இலக்கியம்:

'மாணவர்க்கு மணிக்கவிதைகள்' - யோகா யோகேந்திரன்

'வாருங்கள் கதை படிப்போம்' - யோகா யோகேந்திரன்

*பேராசிரியர்:* **செ. யோகராஜா**

*கிழக்குப் பல்கலைக்கழகம்*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலி



நினைவு கூரத்தக்க நாள்வரை
வாழ்வை மீட்டிப் பார்க்கின்றேன்
வேலிக்கம்பியில் மாட்டித் தவிக்கும்
சொப்பிங் வேக்காய் தவிக்கிறது மனசு.

கோழியின் சிறகிடுக்கின் கதகதப்பில்
குளிரும் வெயிலுமற்று சுகம் காணும் குஞ்சுகளாய்
உறவுகளின் அரவணைப்பில்
கடைசிப் பிள்ளை என்ற செல்ல மமதையுடன்
உலா வந்த நாட்கள்...

அறுத்த வயற்பரப்புத் தரும் ஏக்கத்தைப்போல்
அவர்கள் விடுத்துச் சென்ற நினைவுகளின் தாக்கங்கள்
உறக்கத்தின் முன்னான கடைசி நிமிடங்களில் ஒவ்வொரு நாளுமே
ஏக்கப் பெருமூச்சாய் எனக்குள்ளே...

நத்தார் அடைமழையின் பின்
இறுகிப்போன முற்றத்து மண்ணில்
குச்சி கொண்டு பூ வரைவேன் நான்
கூரிய நகத்துடன் கொடும் மிருகமொன்று
வரைவான் என் நண்பன்
அப்பா சொல்வார்
"உன்னை மிதித்துச் செல்வார்கள்,
உன் நண்பன் மற்றவரை மிதித்துச் செல்வான்"
மூன்று தசாப்தங்கள் முழுதாய்க் கடந்தது
அப்பா சொன்னதன் அர்த்தத்தைப் புரிய

சிறு வெள்மணலை கூட துள்ளியெழாக்
கோரக்களப்பாற்றின் பேரமைதியையொத்த
மகோன்னத தருணங்கள் நிறைந்த என் வாழ்வுக்குளத்தில்
வந்து விழுந்த முதற்கல்லாய் அப்பாவின் மரணம்.

நீருக்குள் அணையாமல் நெருப்புக் கொண்டு செல்லும்
தந்திரங்கள் நிறைந்த மானுடக் கூட்டத்தினுள்ளே
நேர்கோட்டில் வாழ்வதன் கடினத்தைப்
புரிய வைக்காமலே அப்பா சென்று விட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்
ஒலிம்பிக் போட்டி நடப்பது போல
நான்காண்டுக்கொரு முறை
ஒவ்வொரு உறவு ஒவ்வொரு காரணமாய்
ஒவ்வொரு பாடத்தையும் ஒவ்வொரு வலியையும்
எனக்குள்
நிரந்தரமாய் இறக்கிவிட்டு
நீங்கிச் சென்றார்கள்...

ஒரு காலத்தில்
என் வலிகளையும் மறந்து விட்டு,
இருப்பு கேள்வியாகிப்போன வாழ்வின்
அவலத்தை வெளிப்படுத்த
என் பேனா குனிந்தபோதெல்லாம்
நான் நிமிர்ந்து நின்றேன்
அப்பாவின் தெளிவுடனும்
அண்ணாவின் உறுதியுடனும்...

இன்றோ,
ஊழித்தாண்டவம் ஆடிய
ஆழிப்பேரலையை விஞ்சும் வகையில்
மானுடம் நசுக்கப்பட்ட போதும்
உள்ளிருந்தே அரிக்கும் கறையான்போல
கொஞ்சம் கொஞ்சமாய் சுயம் மறுக்கப்பட்ட போதும்
ஏழு கடல்களுக்கப்பால் ஏதோ ஒரு சிறு மீனின் உடலில்
உயிரைத்தங்கவிட்டு வேறெங்கோ வாழும் அரக்கன் போல
உணர்வைத் தோண்டிப் புதைத்து விட்டு
ஊமையாய் வாழும் இந்த வாழ்வின் வலி
எல்லா வலியையும் விட மிகக் கொடுமையானது.

மன்னியுங்கள்
நானும் பழகிக் கொண்டேன்
வலியுடன் வாழ்வதற்கு

- திருக்கோவில் கவியுவன் -




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேச மக்களின் வாழ்வியலைக் கட்டமைப்பதில் குடிவழி மரபின் செல்வாக்கு

## திருக்கோவில் பிரதேசம் அறிமுகம்:

வடக்கே அக்கரைப்பற்று எனும் குடியிருப்புப் பிரதேசத்தையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும், மேற்கு எல்லைகயாக ஆறுகள், காடுகள், வயல்கள் போன்றவற்றாலும் தெற்கே பொத்துவில் பிரதேசத்தையும் கொண்டமைந்த இயற்கை எழிலும் வளமும் நிறைந்து முல்லையும், மருதமும், நெய்தலும் கைகோர்த்து ஒன்று கலந்து மகிழ்கின்ற இயற்கையின் விந்தைகளை வரமாகப் பெற்றுக் கொண்ட ஓர் அழகிய தொன்மைமிகு பிரதேசமே திருக்கோவில் பிரதேசமாகும். இப்பிரதேச சனத்தொகையில் தமிழர் 99.9 வீதமாகவும், சிங்களவர் 0.1 வீதமாகவும் காணப்படுகின்றனர். இதன்படி தமிழ் மக்கள் தனித்துவமாக வாழும் ஒரு பிரதேசமாக திருக்கோவில் பிரதேசம் அமைந்துள்ளது. சமூக, பொருளாதார, கல்வி சார்ந்த துறைகளிலே காலந்தோறும் பல அபிவிருத்தியினைக் கண்டு வரும் பிரதேசமாகவும், எமது நாட்டில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்ததும், அண்மையில் முடிவுக்கு வந்துள்ளதுமான கடந்தகால உள்நாட்டு யுத்தம் மற்றும் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் திருக்கோவில் பிரதேசம் விளங்குகிறது.

அவ்வகையில் குடிவழி மரபானது இங்குள்ள மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவையாக உள்ளது. திருமணமுறைமை, இறப்புச் சடங்கு, ஆலயச் சடங்கு, மந்தை வளர்ப்பு போன்ற பல நிகழ்வுகளிலும் குடிவழி மரபின் செல்வாக்கைக் காண முடிகின்றது.

## திருமண முறையில் குடிவழிமரபு:

"குடும்பத்தின் தலைமைப் பொறுப்பானது பெரும்பாலும் குடிவழி மரபுரிமை போன்ற இன்றிமையாத கூறுகளால் நிர்ணயிக்கப்படுவதால், தந்தை வழியில் அமையும் குடும்பம், தந்தைவழிக் குடும்பம் என்றும், தாய்வழியில் அமையும் குடும்பம் தாய்வழிக்குடும்பம் என்றும் கூறப்படும்"

திருக்கோவில் பிரதேச சமுதாயத்திலும் தாய்வழிக் குடிமரபின் அடிப்படையிலேயே அனைத்து வாழ்வியல் சடங்குகளும் இடம்பெறுகின்றன. "ஒவ்வொரு தனிமனிதருக்கும் பிறப்பின்வழி இரத்த உறவு அமையும். திருமணம் வரை இந்த இரத்த உறவினர்களுடன் வாழ்வர். திருமணம் என்பது மனைவியைச் சார்ந்தவர்களுடன் புது உறவை (மணவழிஉறவு) ஏற்படுத்துகின்றது. மணவழியில் ஒருவர் யாருடன் எவ்வாறான உறவு கொண்டாடுகிறார் என்பது அந்தந்தச் சமூகத்தின் திருமண முறையைப் பொறுத்து வேறுபடுகிறது". இதன்படி, இப்பிரதேச மக்கள் தாய்வழிக் குடிமரபு அடிப்படையில் இரத்த உறவினை உடையோரிடையே மண உறவினைத் தவிர்க்கின்றனர். ஒரே குடியினைச் சேர்ந்தவர்களிடையே திருமண இணைவு இடம்பெற முடியாது. கண்டன் குடியினைச் சேர்ந்த ஒரு பெண் பிள்ளைக்கு மணத்துணையைத் தேடும்போது கட்டப்பத்தான் குடியிலோ, சருகு பில்லி, குடியிலோ, கோரைக்களப்புக் குடியிலோ தான் தேடவேண்டும். கண்டன் குடியினைச் சேர்ந்த தாயின் அக்கா அல்லது தங்கையின் பிள்ளைகள் எல்லோருமே சகோதர உறவினையே கொண்டு விளங்குவர். இதனால் தந்தையின் சகோதரியின் மகனையோ, தாயின் சகோதரனின் மகனையோ, கண்டன்குடி தவிர்ந்த பிற குடிகளிடையேதான் மணம் முடிக்க முடியும். இதனால் தான் இரத்த உறவுடையோரிடையே அல்லது ஒரே குடிக்குள்ளே திருமண பந்தம் இப்பிரதேசத்தில் இடம்பெறுவது இல்லை.

## இறப்புச் சடங்கில் குடிவழிமரபு:

திருக்கோவில் பிரதேச திருமண மற்றும் பூப்புனித நீராட்டுச் சடங்குகளிலே தாய்வழிக்குடிமரபு பின்பற்றப்படுவது போலவே, இறப்புச் சடங்குகளிலும் குடிவழிமரபு பின்பற்றப்படுவதனைக் காணலாம். ஏனைய பிரதேசங்களில் காணப்படும் சடங்குகள் சம்பிரதாயங்களையும், இப்பிரதேசத்திற்கேயென சில தனித்துவமான அம்சங்களையும் கொண்டு விளங்குகின்றதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தவர் வீட்டில் இறந்த நாள்முதல் எட்டு நாட்களுக்கு உணவு சமைப்பது இல்லை. இதனைப் பேச்சுவழக்கில் கூறுவதாயின், "இழவு வீட்டில் எட்டு நாளைக்கு அடுப்புகளிலே நெருப்பு எரியக்கூடாது" என்பது வழக்காகும். அக்காலத்தில் அவர்களது உறவினர்களே உணவு சமைத்துக் கொடுப்பர். அதிலும் குறிப்பாக தலைமுறை தலைமுறையாக இறந்தவர் குடும்பத்திலிருந்து மாப்பிள்ளை பெற்ற குடும்பங்களே தனித்தனி முறைப்படி குடும்பம் குடும்பமாக இணைந்து, சமைத்துக் கொண்டு வந்து கொடுப்பர். எட்டாம் நாள் அன்று எல்லோரும் முழுகிக் கொண்டு உறவினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இறப்பு வீட்டிலே சமைத்துச் சாப்பிட்டு துக்கம் கழிப்பர். இதனை எட்டுச் சோறு (அமுதுச் சோறு) என்றழைப்பர்.

அத்தோடு, சாவீட்டு (இறந்த வீடு) நிகழ்ச்சிகளைச் சரிவரக் கவனிப்போராக அக்குடும்பத்திலிருந்து மாப்பிள்ளை பெற்றாரும், பெற இருப்போரும் இருப்பது மரபாகும். அதாவது இறந்த உடலை சுடலைக்குக் கொண்டு சென்ற பின்னர், அவ்வீட்டைக் கழுவி சுத்தம் செய்தல், முற்றத்தைக் கூட்டுதல் போன்ற நிகழ்வுகளைச் செய்வர். குறிப்பாக, மச்சாள் உறவு முறைமையுடையவர்கள் முக்கியத்துவம் பெறுவர்.

### மந்தை வளர்ப்பில் குடிவழி முறைமையின் செல்வாக்கு:

இப்பிரதேசத்தில் பல ஏக்கர் நிலத்துக்கு (வயற்காணிகளுக்குச்) சொந்தக்காரராக இருக்கின்ற மக்கள் பசு, எருமை போன்ற மந்தைச் செல்வங்களையும் வைத்துப் பேணிப் பாதுகாத்து வந்தனர். தத்தமது மந்தைகளைப் பாதுகாக்கும் நோக்கில் தத்தமது குலக் குறியீட்டையிட்டு வருவது வழமையாகும்.

"பசு, எருமை மாடுகள் உழவர் செல்வங்களாதலால், அவைகளை மிகுதியும் பேணிக்காத்தல் மன்னர்க்கும் நிலைமைப் போடிகளுக்கும் கடமையாயிற்று. அதனால், குடிமரபினர் ஒவ்வொருவரும் தமக்கென வழங்கப்பெற்ற குலவிருதுகளை மாடுகளுக்குக் குறியாகச் சுட்டுக் கொள்ளுவராயினர். குறித்த விலங்கின் இடதுபுற உடற்பகுதியிலே தோற்பட்டையில் மட்டும் பதியுமாறு பின், முன் காற்சந்துகள், கன்னம், முதுகை ஒட்டிய விலாப்புறம் முதலான இடங்களிலே பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோலாற் தத்தமக்குரிய அடையாளங்களை எழுதுவது "குறிசுடுதல்" எனப்படும். இந்நாட்டு மக்களிடையே மந்தைகளைப் பாதுகாப்பதற்காக இருந்த இவ்வழக்கினை முறைப்படி பதிவு செய்து பாதுகாத்த ஒல்லாந்தர் தமது பதிவுக்கு "மாட்டுத் தோம்பு" என்ற பெயரும், அமைப்புச் சட்டமும் வேறாக வகுத்து வைப்பாராயினர். குலவிருதுகளின் படியான அவ்வடையாளத்திற் சிலவற்றைப் பின்வரும் பாடல் சித்திரிக்கிறது;

**"தோணி கரையார்க்குத், தொப்பி துலுக்கருக்கு,**
**காணியுழு மேழிசுளி காராளர்க்கு - நானுடைய**
**வில்லம்பு நாட்டில் உள்ள வேடர்க், கெழுத்தாணி**
**குகர்க்குக், கமலமலர் கோயிலார்க்கு"**

இப்பாடலால் அந்தந்தக் குடிக்குரிய குலவிருதுச் சின்னங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்குறியீட்டை இப்பிரதேச பசு, எருமை மாடுகளில் காணலாம். அத்தோடு, மாட்டுக்குரியவரது பெயரின் முதலெழுத்தும், அவர் வாழும் ஊர்ப்பகுதியின் பெயரின் முதலெழுத்தும் எழுதப்படும். இவ்வாறு தமது குடிக்கான குலவிருதுக் குறியீடு, தமது பெயர் முதலெழுத்துக்களைக் கொண்டு மாடுகளை இலகுவாக அடையாளங் கண்டு கொள்ள முடியும்.

அண்மைக் காலங்களில் இக்குறியீடு வைப்பது மிருகச் சித்திரவதைச் சட்டத்தின் கீழ் குற்றமாக உள்ளதனால், இவ்வழக்கு அருகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு மாற்று வழியாக பசு, எருமை மாடுகளின் காதில் இறப்பர் வளையமொன்றில் மாட்டுக்குரியவரது பெயரின் முதல் எழுத்து, ஊர்ப் பெயரின் முதலெழுத்துப் பொறித்து தோடாகக் கொழுவி விடுவதனையும் காணலாம். பழமையான மரபிலே ஊறித்திழைத்தோர் இதனை விரும்பி ஏற்பதில் தயக்கம் காட்டுவதனையும் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களும் குடிமுறைமையும்:

பொதுவாகக் கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்களில் பூசை செய்வோராக குருக்கள் குடியினரே காணப்படுகின்றனர். இக்குருக்கள் குடிப் பரம்பரையினர் கலிங்க தேசத்தில் இருந்து மாகோனால் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்களாவர். வீரசைவ மரபினைச் சேர்ந்தவனான மாகோன், கலிங்க தேசத்திலிருந்து கிழக்கிலங்கையில் வீரசைவ நெறியைப் பரப்பும் பொருட்டும் ஏனைய சமயங்களின் கெடுபிடிகளில் இருந்து சைவத்தைக் காக்கும் பொருட்டும், "சங்கமக் குருக்கள்" பரம்பரையைக் கொண்டு வந்தான். "தம்பட்டார்" என்ற ஒரு வகையினரான லிங்கதாரிகளான இக்குருக்கள் பரம்பரையினரைச் சேர்ந்த பதினெட்டு குடும்பங்களை "தம்பட்டை" எனும் கிராமத்தினை உருவாக்கி, குடியமர்த்தியுள்ளான் என்பது மூதாதையரின் கருத்தாக உள்ளது. இவர்களே கிழக்கிலுள்ள சைவ ஆலயங்களில் மாகோன் காலத்திலிருந்து இன்றுவரை பூசை செய்து வருகின்றனர்.

இவ்வாறு சிறு எண்ணிக்கையினரான சங்கமக் குருக்கள்மார், காலப்போக்கில் பிறகுடிகளைச் சேர்ந்தோரையே திருமணம் முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏனெனில் தாய்வழிச் சமுதாய அமைப்பிலே இரத்த உறவுடையோரிடையே திருமணம் முடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாகவும் தொழில் நிலையில் ஏற்பட்ட வளர்ச்சியும் குருக்கள் குடிகளைச் சேர்ந்தவர்களும் உயர் கல்வி கற்கின்ற நிலையும் ஏற்பட்ட வேளையில், குருக்கள் குடிகளைச் சேர்ந்த குடும்பங்கள் சொற்ப அளவிலே காணப்பட்டதால் பிற குடியிலிருந்தே வாழ்க்கைத் துணையைப் பெற வேண்டிய நிலையும் காலப்போக்கில் ஏற்பட்டது. இதனால் குருக்கள் குடியினைச் சேர்ந்தோர் கண்டங்குடி, கட்டப்பத்தான் குடி, சருகுபில்லி குடி போன்ற பிற வேளாளர் குலத்தவர்களையோ வேடக்குடி போன்றோரையோ திருமணம் செய்து கொள்ளலாயினர். குறிப்பிட்ட குடும்பங்களே குருக்கள் குடியினராகக் காணப்பட்டதனால் அதன் குலவழி மரபின் தனித்துவத்தைப் பேண முடியாமல் போயிற்று.

இதுபற்றி எவருமே விரிவாக ஆராயவில்லை. ஆனாலும் சி. பத்மநாதன் தனது ஆய்வில் சில விடயங்களில் சங்கமக் குருக்கள் பற்றி சில குறிப்புக்களைத் தந்துள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்தில் காணப்படுகின்ற குடிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். குருக்கள் குடி, கண்டங்குடி, கட்டப்பத்தான் குடி, சருகுபில்லி குடி, சிங்களக் குடி, வேடக்குடி, மழவரசன் குடி / மழவராயங்குடி, கோரக்களப்புக் குடி, முக்குகர் குடி, அறுபது முன்னங்கைச்சவரிகுடி, வைத்தினா குடி, முல்லைக்குடி, தண்டைக்குடி, செட்டிக்குடி போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

திருக்கோவில் என்னும் ஊரில் உள்ள சித்திரவேலாயுதர் சுவாமி கோவிலே மட்டக்களப்பில் உள்ள முதலாவது திருப்படைக் கோவிலாகும். இதனைத் "தேசத்துக் கோவில்" என்று பொதுவாகக் கூறுவர். மட்டக்களப்பாகிய தேசம் முழுவதற்கும் சொந்தமானது மட்டுமன்றி, கோவில் என்ற பெயரால் இங்கு அழைக்கப்படும் ஒரேயொரு கோவிலாகவும் உள்ளது. இது வேலாயுதனால் இச்சிறப்புப் பெயர். இக்கோவிலுக்கு உரித்தாயிற்று. இத்தகைய சிறப்பு மிக்க திருக்கோவிலை அடிப்படையாகக் கொண்டே மாகோன் குடிவகை வகுத்துள்ளான்.

## தூண் கல்வெட்டு:

திருக்கோவில் சித்திரவேலாயுதர் சுவாமி மற்றும் தம்பிலுவில் கண்ணகை அம்மன் கோயில் போன்ற திருக்கோவில் பிரதேச ஆலயங்கள் எல்லாம் இன்றுவரை மாகோன் வகுத்த குடிமுறையைக் கடைப்பிடித்து வருகின்றமை குலமரபுக் குழுக்களின் தனித்துவத்தையும் சமுதாய ஒற்றுமையையுமே புலப்படுத்துகின்றன. சிற்சில மாறுதல்கள் காணப்படுகின்ற போதும், பொதுவாக நிர்வாகக் கட்டமைப்பு, பூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு குலமும் ஏழேழு குடிகளைக் கொண்டு காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பாத வரன்முறைக் கல்வெட்டு பதினான்கு குலங்களையும், அக்குலங்களுக்குரிய குடிகளையும் கூறுகின்றது. அத்தோடு, ஒவ்வொரு குலத்திற்கும் ஏழேழு குடிகள் காணப்பட்டதாகவும் கூறுகிறது. இவ்வாறு பல்வேறு குடிகளும், குலங்களும் திருக்கோவில் பிரதேசத்தில் காணப்படுகின்றன.

தொகுத்து நோக்கும் போது, திருக்கோவில் பிரதேச மக்களின் வாழ்வியலில் ஆலய நிர்வாகம் மற்றும் பராமரிப்பு முதல் பிறப்பு, இறப்பு, பூப்புனித, திருமணச் சடங்குகள் ஈறாக அனைத்துச் செயற்பாடுகளிலும் குடிவழிமரபின் செல்வாக்கு மாகோன் காலம் முதல் இன்றுவரைக்கும் அவரவர் குலத்திற்கும், குடிக்கும் ஏற்ப கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் சிற்சில அம்சங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டும், பழைய இறுக்கமான சில செயல்கள் தளர்க்கப்பட்டும் வருவது கண்கூடு.

குறிப்பாக, ஆலயங்களில் சுவாமி உள்வீதி வருகையிலே சுவாமியின் திருவுருவச் சிலையை ஏந்திச் செல்வதில் குடிகளுக்கிடையே சில சண்டைகள் ஏற்பட்டமை பசு, எருதுகளின் உடலில் நெருப்பால் சுட்டுக் குறி வைப்பது மிருகச் சித்திரவதையாகக் கருதப்பட்டு தற்போது வேறு அடையாளக் குறிவைத்தல் நிகழ்வு, கண்ணகி அம்மன் வருடாந்தத் திருவிழாவின் போது இடம்பெறுகின்ற கொம்புமுறி விளையாட்டில் கடந்த காலத்தில் ஊர்களுக்கிடையில் சில மோதல்கள் ஏற்பட்டமை போன்ற நிகழ்வுகளால் குடிவழிமரபின் இறுக்கமானது சற்று தளர்ச்சி நிலையை அடைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

பல்வேறு குடிமுறை வேறுபாடு காணப்படுகின்றபோதும், சாதிப் பிரிவினைகள் இப்பிரதேச மக்கள் மத்தியிலே குறைவு என்றே கூறவேண்டும். நவீன கல்வியறிவு வளர்ச்சிக்கேற்பவே அனைவரும் கல்விகற்றல், தொழில்நிலை மாறுதல்கள், காதல் திருமணம் அதிகரிப்பு போன்றவற்றால் சமுதாயத்தில் அனைவருமே சமமாக மதிக்கப்பட்டு வருவதனையும் காணலாம். ஆலய நிர்வாகம் மற்றும் திருமணச் செயற்பாடு போன்ற நிகழ்வுகளிலே இன்று இக்குடிவழி மரபின் செல்வாக்கை ஓரளவு காணலாம்.

ஏனெனில் "வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது" என்ற வகையில், மூதாதையர் மரபை இன்றுவரை பின்பற்றுபவர்களாகவே இப்பிரதேச மக்கள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## உசாத்துணை நூல்கள்:


01. கந்தையா வீ.சி. 1964 **மட்டக்களப்புத் தமிழகம்**
சுன்னாகம் ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்.
02. தங்கேஸ்வரி க. (2005) **தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு**
சென்னை மணிமேகலைப் பிரசுரம்.
03. தங்கேஸ்வரி க. (2007) **கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு,** சென்னை: மணிமேகலைப் பிரசுரம்.
04. பத்மநாதன் சி. (2002) **இலங்கைத்தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும்**
கொழும்பு குமரன் புத்தக இல்லம்.
05. பத்மநாதன் சி. (2004) **ஈழத்து இலக்கியமும் வரலாறும்,** கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
06. பக்தவத்சல் பாரதி (1999) **இரண்டாம் பதிப்பு** பண்பாட்டு மானிடவியல்
07. மட்டக்களப்பு மான்மியம் (1962) பதிப்பாசிரியர் வித்துவான் F.X.C நடராசா: கொழும்பு.
08. றமீஸ் அப்துல்லாஹ் (2001) **கிழக்கிலங்கை கிராமியம் - சமூகப்பண்பாட்டியல் ஆய்வு**
மல்லிகைப் பந்தல்.



*ஆக்கம்:* **யோகராஜா கலைவாணி**
(B.A(Hons) M.phil, Reading)
உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிக்குழு




1வது வரிசை இடமிருந்து வலம்: திரு.K.கேசகன் (கணக்காளர்), திரு.M.கணேசமூர்த்தி (ஓய்வு பெற்ற கணக்காளர்), திரு.V. நவீதரன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர்), திரு.Dr.மு.கோபாலரெத்தினம் (பிரதேச செயலாளர்), திரு.R ஆனந்தராசா, திரு.N.S. சுந்தரமூர்த்தி (ஓய்வு பெற்ற அதிபர்)

2வது வரிசை இடமிருந்து வலம்: திரு.R.மகேஸ்வரராஜா (வெளிக்கள போதனாசிரியர்), திரு.சா.நடேசன் (முகாமைத்துவ உதவியாளர்), திரு.A.மனோகரன் (கிராமசேவை உத்தியோகத்தர்), திரு.T.மோகனராஜா (பிரதம முகாமைத்துவ உதவியாளர்), திரு.U.உதயகுமார் (கிராம சேவை உத்தியோகத்தர்), திரு.P.கோபிகாந்த் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.சு.கார்த்திகேசு (பட்டதாரிப் பயிலுனர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவிலும் நாங்களும்



அலைகடலும் வெண்மணலும் திரும்பிய பக்கமெல்லாம் விரும்பி வழிபடக் கோவில்களும், ஊரின் செழிப்பைப் பறைசாற்றும் தென்னஞ் சோலைகளும், வளமான வயல் நிலங்களும், சேனைப் பயிர்களும், எந்தக் கோடையிலும் வற்றாத நன்னீர்க் கிணறுகளுமாய் திருக்கோவில் என்ற அழகுப் பெயர் கொண்டு அழைக்கப்படும் கிராமமே எமது ஊராகும்.

இவ்வூர் கிழக்கிலங்கையின் தென்புறமாக அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள கடலோரக்கிராமமாகும். சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி கோவில் கொண்டிருப்பதால் இவ்வூரும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. இந்த ஊரைத்துயிலெழுப்புவது கோவில் ஒலிபெருக்கியினூடாக அதிகாலை வேளையில் வந்து காதில் மோதும் பக்திக் கீதங்களே.

பொதுவாக "திருக்கோவில்" என அழைப்பது இறைவன் குடிகொண்டுள்ள கோவில்களேயாகும். ஆனால் இங்கு கோவிலும் திருக்கோவில். ஊரும் திருக்கோவில்! எமதூர்க் கோவிலுக்கு நெடுங்கால வரலாறு உள்ளது. "திருப்படைக்கோவில்", "தேசத்துக்கோவில்" ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் இக்கோவிலுக்கு கட்டடப்பணியாற்றிய அரசர்கள் பலர். தென்னிந்திய சிற்ப சாஸ்திர முறைப்படி வடிவமைக்கப்பட்ட இக்கோவில் பல கல் வெட்டுக்களையும், சாசனங்களையும், பட்டயங்களையும், பதிகங்கள் பாடல்களையும் கொண்டது மட்டுமன்றி, கிழக்கிலங்கையில் பல சொத்துக்களையும் சொந்தங்களையும் கொண்டது. ஆம்! இக்கோவிலுக்கு பல இடங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் உள்ளதோடு, வடக்கே பாண்டிருப்புத் தொடக்கம் தெற்கே பாணமை வரையுள்ள பல ஊர் மக்களுக்கு வருடாந்தம் நடக்கும் திருவிழாவொன்றை ஏற்று நடாத்தும் பாக்கியமும் உண்டு.

ஊரின் வடபுறத்தில் காவியநாயகி கண்ணகி, கோவில் கொண்டருளி அருள் பாலிக்கும் பேறு பெற்ற தம்பிலுவில் கிராமம் அமைந்துள்ளது. மேற்குப் புறமாக வயற்பிரதேசங்கள் பெருவாரியாக உள்ளது. தென்பக்கத்தில் "விநாயகபுரம்" என்னும் கிராமமும், கிழக்குத் திசையில் வங்கக்கடலும் உள்ளது.

திருக்கோவில் கடற்கரையை அண்மித்த பிரதேசம். ஏராளமான தென்னை மரங்களைக் கொண்டுள்ள பகுதியாகும். ஊரை அண்மித்த தோட்டம், "மங்கைமாரியம்மன் தோட்டம்" என அழைக்கப்படுகிறது. தமிழகத்தின் கன்னியாகுமரியம்மனை நினைவூட்டும் ஆலயமொன்று இத்தோட்டத்தின் மத்தியில் "மங்கைமாரியம்மன் கோவில்" என்னும் பெயரில் அமைந்துள்ளது. வருடம் முழுவதும் அமைதியாக இருக்கும் இத் தென்னந்தோட்டம், உற்சவ காலத்தில் அதிரும்! ஆயிரக்கணக்கில் வாகனங்களும், பல்லாயிரம் மக்களும், மின்னொளி ஜொலிப்புக்களும், கடைகண்ணிகளுமாக அந்தப் பிரதேசமே கலகலக்கும்.

மங்கைமாரியம்மன் தோட்டத்தையடுத்து வேறுபல தோட்டங்களும் கடற்கரையையொட்டி அமைந்துள்ளன. ஆங்கிலேயர் காலத்தில் மிகக் கரிசனையாக இத் தோட்டங்கள் பராமரிக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தில் தொழில் செய்யவென கிழக்கிலங்கையின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் இப்பகுதியில் குடியேறினர். தோட்டங்களில் கடற்கரை ஓரமாக ஆங்கிலேயரால் சில பங்களாக்களும் அமைக்கப்பட்டன. தோட்டத்துரைமாரும் அவர்களது குடும்பத்தினரும் வந்து தங்கிச் செல்ல அவை பயன்பட்டன. ஊர் மக்கள் அவற்றை "மெத்தைப் பங்களா" என அழைப்பர். கால வோட்டத்தில் அவை அழிபட்டுப் போனதாகத் தெரிகிறது. அக்காலத்தில் தோட்டத்தின் ஒரு அந்தத்திலிருந்து பறிக்கப்பட்ட தேங்காய்களை ஓரிடத்தில் கொண்டு வந்து சேர்க்க யானை வண்டிகளே உபயோகப் படுத்தப்பட்டதாக அறிய முடிகிறது. இந்தத் தகவல்

**"மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று**
**யானைகட்டிப் போரடித்தநம் தமிழர் வரலாறு"**

என்னும் பாடலை நினைவூட்டுகிறதல்லவா? அங்கே யானை கட்டிப் போரடித்தார்கள். இங்கே யானைகட்டி தேங்காய் ஏற்றினார்கள்.

சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முன் தென்னந்தோட்டங்களில் கொப்பரா போடுவது வெகு பிரபலம். விற்காமல் தேங்கிக்கிடக்கும் தேங்காய்கள் பல மாதங்களாகக் குவிந்து மலைபோல் கிடக்கும். நல்ல வெயில் காலத்தில் கூலியாட்கள் அத்தேங்காய்களைச் சிறுகோடரியால் வெட்டிப் பிளந்து வெயிலில் காயவைப்பார்கள். அப்படி வெட்டும் போது முளை விட்ட தேங்காய்களின் உள்ளே காணப்படும் "பூரான்" என அழைக்கப்படும் பந்து போன்ற உள்ளீடு வேறாக்கப்பட்டு, பச்சை ஈர்க்கில் கோர்க்கப்பட்டு வியாபாரிகளால் தெருக்கள் தோறும் "பூரான்.... பூரான்... தேங்காய்ப்பூரான்" எனக்கூவி விற்கப்படும். மிகவும் சுவையும், மென்மையும், குளிர்ச்சியும் கொண்ட அவற்றை சிறியோர், பெரியோர் அனைவருமே விருப்புடன் வாங்கியுண்பர். கோடைவெயிலுக்கு இதமானதாக அது இருக்கும். அந்நாட்களில் பல வறிய குடும்பங்களின் பகல்நேர உணவாகவும் அது பயன்பட்டது.

கிராமத்தின் மேற்குப் புறமாக பச்சைப்பசேல் எனக் காட்சிதரும் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் எங்களூர் வளத்திற்கான இன்னுமொரு சான்று! சேனைகள் வீட்டுத் தோட்டங்களில் சோளம், நிலக்கடலை, பயறு, குரக்கன், கௌபி, மரவள்ளி, மரக்கறிவகைகள் என்பன பொன்னாய் விளையும். ஊர் மக்களின் தேவை போக, மேலதிகமானவை வெளியூர்களுக்கு அனுப்பப்படும்.

கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, சேனைப்பயிர்ச்செய்கை, அரச உத்தியோகம், வியாபாரம், தச்சுத்தொழில், மேசன் வேலை, மரமேறித் தேங்காய் பறித்தல், கூலித்தொழில் என ஒவ்வொரு மக்களும் ஏதாவது தொழில் புரிந்தபோதும், விவசாயமே எமது பிரதான தொழில். இங்கு குறிப்பிடப்பட்ட தொழில்களைச் செய்பவர்கள் விவசாயம் செய்பவர்களாகவே இருப்பர். உத்தியோகம் புருஷலட்சணம் என்று கூறுவர். ஆயினும், இங்குள்ள ஆண்கள் அதிகம் நேசிப்பது விவசாயத்தையே. பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலைகளில் உயர்தரம்/சாதாரணதரம் கற்கும் மாணவர்கள் கூட வயலில் இறங்கி வேலை செய்யத் தயங்குவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி மாதத்தில் நெல் அறுவடை ஆரம்பித்து விடும். பாதைகளில் - வயல்களில் விவசாயிகளும் வாகனங்களும் போவதும் வருவதுமாக ஒரே கலகலப்பு. வியாபாரிகள் நெல் கொள்வனவு செய்வதற்காக வந்து போய்க்கொண்டிருப்பர். லொறிகள், டிப்பர்கள், உழவு இயந்திரங்கள் என்பன நெல் மூடைகளை ஏற்றிச் செல்லும். இக்கால கட்டத்தில் நிலக்கடலை, சோளம் ஆகியவற்றின் வியாபாரமும் களைகட்டும்!

கோவில் வீதியைச் சுற்றி நெடிதுயர்ந்து நிற்கும் வம்மி மரங்கள், அழகுப் பூக்களை அள்ளிச் சொரிந்து ஊருக்கே வாசமூட்டும்! அந்த வம்மி மரக்கிளைகளில் எங்களூர் சிறுவர், சிறுமியர்க்காக ஊர் மக்களால் ஊஞ்சல்கள் கட்டிக் கொடுக்கப்படும். காலங்காலமாக சிறுவர், சிறுமிகளுக்குக் கிடைக்கும் புத்தாண்டுப் பரிசு இந்த ஊஞ்சல்கள்!

ஆடி மாதத்தில் ஊரின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமான ஸ்ரீ சித்திர வேலாயுதனுக்கு திருவிழா ஆரம்பிக்கும். ஆடிப்பூரணைக்கு கதிர்காமம் செல்லக் கால் நடையாகவும், வாகனங்களிலும் செல்லும் பக்தர்களினால் கோவில் வீதி நிறைந்திருக்கும். ஒரு நாள் இவ்வீதியில் சமைத்து, உணவருந்தி வீதியிலே படுத்துறங்கி, மறுநாள் பயணத்தை மேற்கொள்வர் கால்நடைப் பக்தர்கள்.

திருவிழாக் காலங்களில் வெளியூர்களில் திருமணம் செய்து வசிப்போர். தொழில் நிமித்தம் வேறிடங்களில் வசிப்போர், ஊர்வந்து சேர்வர். வெளிநாடுகளில் வாழ்பவர்கள் கூட தமது தாய்நாட்டுப் பயணத்தை தீர்த்தோற்சவக்காலத்தை மையப்படுத்தி ஊர் வந்து சேர்வர். பதினெட்டுத்தினங்கள் திருவிழா நடைபெறும். பத்தொன்பதாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ வங்கக்கடலில் முருகப்பெருமானின் திருவேல் திருமுழுக்காடலைத் தொடர்ந்து அடியார்களும் தீர்த்தமாடி தத்தமது சமயக்கிரியைகளை நிறைவு செய்து, கோவில் சுற்றுப்புறமெங்கும் பாரிய அளவில் நடைபெறும் அன்னதான நிகழ்வில் உணவருந்தி கடைகளில் கொள்வனவு செய்த வீட்டுப்பாவனைப் பொருட்கள், தின்பண்டங்களோடு வீடு செல்வர்.

எங்கள் கிராமத்தில் சங்கீத பூசணம் திரு.சி.கணபதிப்பிள்ளை ஆசிரியரும் அவரது சகோதரர் திரு.சி.குழந்தைவேல் அவர்களும் அக்காலகட்ட இளைஞர் யுவதிகளை ஒருங்கிணைத்து அறுபதுகளில் ஆரம்பிக்கப்பட்ட "திருஞானவாணி முத்தமிழ் இசைமன்றம்" ஆற்றிய சமய, சமூகப் பணிகள் ஏராளம். வெள்ளி தோறும் முருகன் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை, திருவெம்பா பூஜைக்குரிய திருப்பள்ளியெழுச்சி, சிரமதானங்கள், அன்னதான நிகழ்வுகள், சமயச்சுற்றுலா, இந்து சமயம் சார்ந்த கலைவிழாக்கள், சமூகப்பெரியவர்களை, கதாப்பிரசங்கிகளை, பாடகர்களை வருவித்து சமயப் பேருரைகள் என்பன மிகப்பாரிய அளவில் செய்யப்பட்டன.

கடந்த கால யுத்த சூழ்நிலைகளால் இம்மன்றத்தின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட போதும், தொடர்ந்து கூட்டுப் பிரார்த்தனை, திருப்பள்ளி யெழுச்சி, சிரமதானம் என்பன நடைபெற்று வருகின்றன. அடுத்து, எங்களூர் வாலிபர்கள் ஒருங்கிணைந்து "உதய சூரியன் விளையாட்டுக்கழகம்" எனும் பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி விளையாட்டை - விளையாட்டுப்போட்டிகளை நடாத்தியதோடு, "உதயசூரியன் கலாமன்றம்" என்னும் பெயரில் யுவதிகளையும் சேர்த்து கலை நிகழ்ச்சிகள், சிரமதானங்கள், சமூகப்பணிகள் எனச் செய்து வந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சூரியன் கலாமன்றமும் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினாலும், இதன் உறுப்பினர்கள் பலர் நாட்டைவிட்டுச் சென்றதாலும் செயலிழந்து போனமை வருத்தமான விடயம். ஆயினும் உதய சூரியன் விளையாட்டுக்கழகம் தற்போதைய அதன் உறுப்பினர்களோடு விளையாட்டையும் கவனித்து, ஊரில் நடக்கும் பொது நிகழ்வுகள், மரணச்சடங்குகள், திருமண நிகழ்வுகள் ஆகியவற்றிற்கு உதவிகள் புரிவதோடு, பலசிரமதானங்களையும் செய்து வருகிறார்கள்.

எமது ஊரில் பாம்பு விஷமிறக்கும் கல்லொன்றும் உள்ளது. "விஷக்கல்" என அதனை அழைக்கிறார்கள். ஆங்கில வைத்தியம் பாம்புக்கடிக்குச் சிகிச்சையளித்தபோதும், அநேகமானோர் ஒரு தடவை "விஷக்கல்" வைத்தியமும் செய்யத் தவறுவதில்லை. கிழக்கிலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இங்கு வந்து அநேகமானோர் சிகிச்சை பெற்றுச் செல்வதுண்டு. இக்கல்லை "மௌலானா" என்னும் முஸ்லிம் பெரியவர் கொண்டுவந்து நட்டதாகக் கூறப்படுகிறது.

எங்களூரில் கணிசமான அளவு மெதடிஸ்த கிறிஸ்தவர்களும், கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் வாழ்கிறார்கள். இவர்களின் வழிபாட்டிற்காக பழமையான ஆலயங்கள் உள்ளன. அவைதவிர "ஏ.ஓ.ஜீ" பெண்டிக்கொஸ்ட்" எனப்படும் பிரிவுகளைக் கொண்ட கிறிஸ்தவர்களும் வாழ்கிறார்கள். அவர்களுக்கும் வழிபாட்டிடங்கள் உள்ளன. இங்கு ஒரு போதும் சமயங்களுக்குள் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. இந்துக்கோவில்களுக்கு வந்து பிரார்த்தனை செய்யும் கிறிஸ்தவர்களும் உள்ளனர். கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்யும் இந்துக்களும் உள்ளனர்.

எமது இந்தத் திருக்கோவில் கிராமம் கிராமத்திற்குரிய பண்புகளோடு இருந்த போதும், நகரமொன்றிற்கான வசதிவாய்ப்புக்களோடும் உள்ளதெனக் கூறலாம். பிரதேசத்தை நிர்வகிக்கும் பிரதேச செயலகம் பெரிதும், சிறிதுமான சுமார் நாற்பது பாடசாலைகளுக்குப் பொறுப்பான வலயக்கல்விப் பணிமனை, விரைவில் ஆதாரவைத்தியசாலையாகத் தரமுயரக் காத்திருக்கும் மாவட்ட வைத்தியசாலை, மாவட்ட சுகாதாரப்பணிமனை, தபாலகம், பொலீஸ் நிலையம், பாடசாலைகள், பலதரப்பட்ட வங்கிகள், பால் சேகரிப்பு நிலையம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், பொதுச்சந்தை, தொலைத்தொடர்பு நிலையம், உப மின்சாரசபை அலுவலகம், விளையாட்டு மைதானம், மணிக்கூட்டுக் கோபுரம், நெல் கொள்வனவு நிலையம், பல அரசசார்பற்ற நிறுவனங்கள் என மக்களுக்குத் தேவையான அம்சங்கள் யாவும் இவ்வூரில் அமைந்துள்ளது. பாதைகளும் சீர் செய்யப்பட்டு வெளிச்சமும் விசாலிப்புமாக புதுப் பொலிவுடன் காணப்படுகிறது.

தனித்தமிழ் கிராமமான எம்மூரை ஊர் மக்கள் மிகவும் நேசிக்கிறார்கள். சித்திரவேலாயுதன் கோவில் கொண்டுள்ள இவ்வூரில், வாழக்கிடைத்ததைப் பேறாக நினைக்கிறார்கள். வெளிநாடுகளில் வசிக்கும் எமதூர் வாரிசுகள் "நாங்கள் நாடு கடந்து சென்றாலும், எங்கள் உடல் தான் வெளிநாட்டில், உயிர் எம்மூரில் தான்" என்கிறார்கள், மனசார!

**திருமதி. யோகா யோகேந்திரன்**
*(திருக்கோவில் யோகா)*

கட்டளை
இட வேண்டிய பதவி வேண்டுமென்றால்
முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஊரின் மண்வாசம்

வாசம் மண்வாசம் – எங்கள்
ஊரின் மண்வாசம்....
நேசம் நெஞ்சில் நேசம் – எங்கள்
தேச மண்ணின் நேசம்

மாரிகாலத்தில் ஒரு வாசம் – அந்தக்
கோடை காலமும் ஒரு வாசம்
மழைத்துளி விழுதல் புது வாசம்
பனித்துளி நனைப்பதும் புது வாசம்

காட்டைக் கழுவிவரும் நதி வாசம் – எங்கள்
பாட்டில் கேட்பதுவும் தமிழ்வாசம்
(வாசம்... வாசம்...)

நீலக் கடலிலே நீர்வாசம் – அதில்
நீந்தும் அலைகளின் நுரைவாசம்

இளம்பயிர் வளர்வதும் ஒருவாசம்
விளைந்தவை கவிழ்வதும் ஒரு வாசம்

பாலும் தயிரும் நெய் வாசம்
தேனும் தினையும் சுவை வாசம்
(வாசம்.... வாசம்....)

திருக்கோவில் எங்கணும் திருவாசம்
தங்கவேலனின் புகழ் வாசம்

இந்து கிறிஸ்தவர் சுக வாசம்
இறையவர் முன்னால் சமவாசம்
(வாசம்... வாசம்...)

பல்லின மக்களும் சுக வாசம்

**- கோவிலூர் செல்வராஜன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் பிரதேசத்திலிருந்து புலம்பெயர்ந்த நம்மவரின்

# வாழ்வும் வளமும்

தனது சொந்த மண்ணை நேசிக்கும் ஒரு தேசப்பற்றாளனது மனக்குமுறலைச் சித்தரிக்கும் பாணியில் பாலஸ்தீனியக் கவிஞரான "பத்வா துக்வான்" பாடிய பின் வருகின்ற கவிதை வரிகளைப் பார்ப்போம்...

**"எனது தேசத்தின்**
**புனித முற்றத்தில்**
**ஒரு கைப்பிடியளவு புழுதியாய்**
**ஒரு புல்லின் இதழாய்**
**ஒரு பூவாய் இருப்பினும்**
**எனக்குப் போதும்"**

பார்த்தீர்களா? இதுபோல தென்னையிளங்கீற்றும் செங்கரும்புச்சாறும்; திருக்கோவிலும் தேவாரப் பதிகமும் புன்னை மர நிழலும் புனித தேவாலயமும் புஸ்பராகப்பட்டும் பூத்த வெண்மணலும் அன்னையவள் தாலாட்டும் அலங்காரப் பந்தலும் அடியவர்கள் வருகையும் எமதீழ மண்ணை நினைத்தே..." வாடும் வேறோர் கவிஞனைப் போலவே புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற ஒவ்வோர் ஈழத்தமிழர் சிந்தனையில் நிலை கொண்டிருக்கும் மனநிலையைத்தான் இங்கு படம் பிடித்துக் காட்ட முடியும். தாயை இழந்த கன்றுகளாய் அவர்கள் வெளிநாட்டு வீதிகளில் நடமாடும் போதெல்லாம் வாழ்வை நிச்சயப்படுத்தி அதில் அர்த்தம் காணத் தேடுகின்ற தேடல்கள் தொடர்வது ஒரு பெருங் கதையே. நம்மவர் வாழ்வும் வளமும் இதே கதையின் கருப்பொருள் தான். இக்கதையில் தான் எத்தனை காட்சிகள், காலங்கள், கோலங்கள், சோதனைகள், வேதனைகள், உணர்வுகள், உணர்ச்சிகள் இன்னும் எத்தனை எத்தனையோ!

இதனால் தான் திருக்கோவில் பிரதேச புலம்பெயர் மக்களின் வாழ்வும் வளமும் பற்றிப் பேசுவது முழு ஈழத்தின் புலம்பெயர் மக்களின் வாழ்வும் வளமும் பற்றிய சிந்தனையில் ஒரு சிறுதுளிபோலக் காணப்படுவதை உணர முடிகிறது.

ஈழத்தின் இனப்பிரச்சினை சிறிது சிறிதாகக் கூர்ப்புப் பெற ஆரம்பித்ததும் எழுபதுகளின் இறுதி ஆண்டுகளிலும் எண்பதுகளின் தொடக்க ஆண்டுகளிலும் ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் பெல்ஜியம், நெதர்லாந்து, சுவிற்சலாந்து, சுவீடன், நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளிலும் குடியேறினர்.

ஆரம்ப காலங்களில் ஜேர்மனியே ஈழத்தமிழர் குடியேறிய இடமாக அமைந்தது. அது ஒரு நுழைவாயில் என்றே கொள்ள வேண்டும். பின்னர் படிப்படியாக புதிய உலகை (அமெரிக்கா, கனடா) நோக்கி ஈழத்தமிழர் புலம்பெயரத் தொடங்கினர். இருப்பினும் இக்கால கட்டத்திற்கு முன்பே மிக நீண்ட இடைவெளியில் ஈழத்தவர் இங்கிலாந்திற்கு உயர்கல்வி பெறச் சென்றிருந்தனர். இருந்த போதும் அங்கு அநேகம் பேருக்கு அந்நாட்டுக் குடியுரிமை பெற முடியவில்லை. தமிழருக்கு கூடுதலான அளவுக்கு நிரந்தர வதிவுரிமையும், குடியுரிமையும் கிடைத்த இடம் கனடா தான்.

இன்று நாம் பார்போமேயானால் கூடுதலான அளவில் ஈழத்தமிழர் புலம் பெயர்ந்திருப்பதையும் இன்னமும் இடைவிடாது புலம் பெயர்ந்து கொண்டிருப்பதையும் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து மாணவர்கள் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, டொமினிக்கா போன்ற இடங்களுக்கெல்லாம் படிப்பைக் காரணம் காட்டிச் சென்று குடியுரிமை பெறாமலேயே காலத்தைக் கடத்துகின்றனர்.

ஆயினும் கனடாவைப் பொறுத்தவரை புதிதாகக் குடியேறும் ஈழத்தமிழரின் அளவு மிக முக்கியத்துவம் பெறக்காரணம் 'குடும்பத்துடன் இணைதல்' என்னும் (Family Re. Unification) ஒழுங்கமைப்பேயாகும். இது மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது.

இனி சுனாமி என்ற ஆழிப்பேரலை காரணமாகத்தான் இலங்கையின் கிழக்குக் கரையிலிருந்து அதிகமானோர் கனடாவுக்கு புலம் பெயரலாயினர். எமது பிரதேசத்திலிருந்து நோர்வேயில் சிலரும், இங்கிலாந்தில் சிலரும், அவுஸ்திரேலியாவில் சிலரும் கனடாவில் பலரும் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். ஏனைய நாடுகளில் விரல் விட்டெண்ணக்கூடிய ஒரு சிலரே உள்ளனர். இவர்களில் பிரதேசத்தை மறவாமல் கல்விக்கும், ஆலயங்களுக்கும் உதவிகள் செய்து அடிக்கடி வந்து போய்க் கொண்டு இருப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இன்னும் சிலர் ஊடகங்களூடாக இப்பிரதேசத்துடன் மானசீகமாக வாழ்கிறார்கள். இலக்கியங்கள் மூலம் மண்ணுக்கு வளம் சேர்க்கிறார்கள்.

ஆனாலும் கூட புலம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரை நமது பிரதேசத்திற்கு நாம் நீட்டும் உதவிக்கரங்கள் போதாது. கூடிய வரை திருக்கோவிலை நோக்கி நமது இதயக் கதவுகள் அகலத் திறக்கப்பட வேண்டும். இக்கட்டுரையாசிரியன் என்ற வகையில் நான் உங்களிடம் விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் வளமுடனும் வசதியுடனும் வாழும் புலம்பெயர்ந்தவர்களாகிய நாம் நமது பிரதேசத்திற்கு இயன்ற வரை உதவவேண்டும் என்பதே.

திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய இராஜகோபுரம் கட்டும் பணி தொடங்கப்பட்டு எவ்வளவோ காலமாகி விட்டது. சரித்திரப்புகழ் பேசும் இவ்வாலய இராஜகோபுரப் பணிக்கு உதவுங்கள்.

நாம் கல்வி கற்றபோது கண்ட வறுமை நிலையையும் மக்களின் அவலங்களையும் நினைத்துப் பாருங்கள். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுங்கள். "திருக்கோவில் தம்பிலுவில் சுற்றுப்புறங்களின் அபிவிருத்திக்கான உலகளாவிய அமைப்பு" Development organization of Thirukkovil Thambiluvil and Suburf International" ("DOTTS") என்றொரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதும் அதன் நோக்கம், குறிக்கோள் என்பன பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். உதவமுன் வருபவர்கள் அந்த அமைப்பினூடாக உதவ முடியும். அவ்வமைப்பைப்பற்றி அறியாதவர்கள் அறிந்து கொள்ள முயலுங்கள். உதவ முயற்சி செய்யுங்கள்.

இவ்வமைப்பு முற்றுமுழுதாக ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதையே நோக்காகக் கொண்டது. அந்த அமைப்பின் நோக்கத்தை நம் எல்லோரது நோக்கமாக ஏற்று உதவுங்கள். நம் மக்களுக்கு நாம் உதவாவிட்டால் வேறு யார் உதவுவார்கள்?

அக்கரைப்பற்றிற்கும் பொத்துவிலுக்கும் இடையில் அகப்பட்டுக்கிடக்கும் பலம் பொருந்திய தமிழ்ப்பிரதேசமே நம் திருக்கோவில் பிரதேசம். அதற்கு மேலும் வலுச்சேர்க்க ஒற்றுமையுடன் செயற்பட எல்லோரும் முன்வாருங்கள். இப்பிரதேசத்தையும் இப்பிரதேசத்தில் வாழும் எதிர்காலச் சந்ததியினரையும் உயர வைக்க வேண்டியது இப்பிரதேச மக்களின் தலையாய கடமையாகும். குறிப்பாகப் புலம்பெயர்ந்த நம்மவரின் முக்கிய கடமையும் பொறுப்புமாகும்.

**கல்கிதாசன்**

**S.P. கனகசபாபதி B.A.** (Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இசையும் கலையும் வளர்த்த இணையற்ற கலைஞர், சங்கீத பூஷணம் சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

கிழக்கிலங்கையின் தென்பகுதியில் திருக்கோவில் பிரதேசம் (செயலகப்பிவிவு) அமைந்துள்ளது. திருக்கோவில், தம்பிலுவில், தம்பட்டை ஆகிய பழந்தமிழ் கிராமங்களுடன் மற்றும் விநாயகபுரம், தாண்டியடி, (சங்கமண் கிராமம்) சாகாமம், கஞ்சிகுடியாறு, தங்க-வேலாயுதபுரம் ஆகிய கிராமங்களையும் அடங்கியுள்ள இப்பிரதேசம் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட பெரும் பிரதேசமாகும். பண்டைக்காலம் தொட்டுத் தமிழும், சைவமும் செழிப்புடன் விளங்கி வரும் திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்து இசையும், கலையும் வளர அரும்பணி புரிந்து, மறைந்த கலைஞர்களில் சங்கீத பூஷணம், திரு.சி.கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார்.

இப்பெரியார் தான் வாழ்ந்திருந்த காலத்தில் இப்பிரதேசக் கலை வளர்ச்சிக்கு, ஆற்றி வந்த பன்முகப்பட்ட கலைத் தொண்டு போற்றுதற்குரியதெனலாம். இசை, நாடகம், நடனம், நாட்டுக்கூத்து எனப் பல்வேறு துறைகளில் இவரது கலைப்பணி மிளிர்ந்தது. இது இறைவன் இவருக்கு அளித்திருந்த கொடை என்றே எண்ணத் தோன்றுகின்றது. 1919ஆம் ஆண்டு பிறந்த இவர் திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் மாணவனாகக் கல்வி பயின்று வந்த காலத்தில் தனது பதினான்காவது வயதில் (1933) கலைத்துறையில் கால் பதித்தார். அக்காலந்தொட்டுத் தனது இறுதிக்காலம் வரையும், தனது வாழ்வில் பெரும் பகுதியைக் கலைப்பணிக்கே அர்ப்பணித்து, வாழ்ந்து மறைந்த அற்புதக் கலைஞர் இவர் என்றே கூறலாம்.

ஒழுக்கம், பண்பு நிறைந்த தூய பிரமச்சாரியாகவும், ஞானியாகவும் விளங்கி வந்த இவர் தனது காலத்தில் திருக்கோவில் பிரதேசக்கலை வளர்ச்சிக்கு ஆற்றி வந்த பணி மகத்தானது எனலாம். திரு. கணபதிப்பிள்ளையவர்கள பாடசாலையில் கல்வி பயின்று வந்த காலத்திலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். அக்காலத்தில் இவரது தமையனாரான திரு.ஆறுமுகம் வைத்தியர் (சித்தவைத்தியம், மாந்திரீகம்) அவர்கள் இசைக்கல்வி பயின்று, இசையில் தேர்ச்சியும் பெற்றிருந்ததால் அவரிடம் இசை பயின்று வந்த திரு. கணபதிப்பிள்ளையவர்கள் அக்காலத்தில் கீர்த்தனைகள், சிறுஇசை நாடகங்கள். என்பனவற்றையும் எழுத ஆரம்பித்தார். இவ்வாறு தனது பதினாலாவது வயதில், பாடசாலைமாணவனாகவிருந்த காலத்திலேயே கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்த இவரை, அக்காலத்தில், இவர் கல்வி கற்று வந்த திருக்கோவில் மெ.மிஷன் பாடசாலையில் அதிபர்களாகக் கடமை புரிந்த திரு.கே. சௌந்தரராசா, திரு.வி.பரநிருபசிங்கம் ஆகியோர் பெரிதும் பாராட்டினர்.

இவ்வேளையில் 1933, 1934களில் தென்னிந்திய நாடகக் குழுவினர், தம்பிலுவில், திருக்கோவில் ஆகிய கிராமங்களில், கொட்டகை அமைத்து இசை நாடகங்களை மேடையேற்றி வந்தனர். இந்நாடகங்களில் சிலவற்றில் நடிக்கும் சந்தர்ப்பம் திரு.கணபதிப்பிள்ளை அவர்களுக்குக் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து அக்காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் (திருக்கோவில், தம்பிலுவில்) புகழ்பெற்றிருந்த நாடகத் தயாரிப்பாளரான, திரு.சற்குணம் செட்டியார் மேடையேற்றி வந்த இசை நாடகங்கள் பலவற்றில் நடித்துத் தனது கலைத்திறமையை வெளிப்படுத்திப் புகழ் பெற்றார். இவ்வாறு அக்காலத்தில், இசை நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றிருந்த இவர், இசை நாடகங்களை எழுதத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1939ஆம் ஆண்டில் திரு. கணபதிப்பிள்ளையவர்கள் இப்பிரதேச இளைஞர்கள் பலரைச் சேர்த்து "ஸ்ரீ பாலகணேசானந்த சபா" என்ற நாடக மன்றத்தை தொடங்கினார். இந்நாடக மன்றத்தின் மூலமாகத் தான் இயற்றிய "பாமா விஜயம்" என்ற இசை நாடகத்தைப் பயிற்றுவித்து அதே ஆண்டில் மேடை ஏற்றினார். இந்நாடகம் இப்பிரதேச மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், சிறந்த நாடக ஆசிரியர் என்ற தகுதியினையும் இவருக்குப் பெற்றுக் கொடுத்ததெனலாம். இதனைத் தொடர்ந்து 1949ஆம் ஆண்டு வரையும், ஏராளமான இசை நாடகங்களை இவர் எழுதிப் பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளார். இவற்றில் மனோகரன், பாக்கியலெட்சுமி, பவளக்கொடி, பூலோகரம்பை, அல்லி அர்ஜுனா, கிருஷ்ணலீலா, சத்தியவான், சாவித்திரி முதலிய இசை நாடகங்கள் புகழ்பெற்றவையாகும். இந்நாடகங்கள் அக்காலத்தில் ஏறாவூர், மட்டக்களப்பு, களுதாவளை, கல்முனை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய இடங்களிலும் மேடையேற்றப்பட்டதாக அறிய முடிகின்றது.

1949ஆம் ஆண்டு தொடக்கம் 1954ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், இசைக்கல்லூரியில் இசைபயின்று, சங்கீத பூஷணம், பட்டம் பெற்ற இவர் வாய்ப்பாட்டு வயலின், வீணை ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில், இசைத்துறையில் இவர் கல்வி பயின்று வந்த காலத்தில், இசைக்கல்லூரியில் இசை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த வயலின் வித்துவான், திரு.கே.எஸ்.சிவ வடிவேற்பிள்ளை, இசைப்பேராசிரியராகவிருந்த இசை மன்னர், சித்தூர் சங்கீத கலாநிதி திரு.கா.சுப்பிரமணியம் பிள்ளை ஆகியோரின் அன்புக்குரிய மாணாக்கர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இதனை இவரது வாழ்க்கைக் குறிப்பேடு மூலமாக அறிய முடிகின்றது.

திரு.சி.கணபதிப்பிள்ளையவர்கள், 1954ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் இறுதி ஆண்டில் பயின்று வந்த வேளையில் சங்கீத கலாநிதி சித்தூர் கா.சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இதனையொட்டிப் பல்கலைக்கழகத்தில் அவருக்குப் பிரிவுபசாரம் ஒன்று நடைபெற்றது. இவ்வைபவம் பெரிய விழாவாகக் கொண்டாடப்பட்டதென்றே கூறலாம். இவ்விழாவில் ஆரம்ப நிகழ்ச்சியாக, ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் இசைக்கச்சேரி நடைபெற்றது. இவ்வைபவத்தில், புதிய இசைப்பேராசிரியராக நியமனம் பெற்றிருந்த இசையரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர் அவர்கள் வரவேற்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். இந்த இசை மேதையிடம் மூன்று மாதங்கள் இசைபயிலும் பேற்றினைக் கணபதிப்பிள்ளையவர் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மூன்று மாத காலத்தில் இசையரசரின் இதயத்தில் இவர் இடம் பிடித்துக் கொண்டார். இதனைத் தொடர்ந்து இவர் தாயகம் திரும்பிய போதும், தனது குருநாதரின் அன்பைத் தன் நினைவில் வைத்திருந்தார் எனலாம். 1966, 1968களில் இவர் தமிழகம் சென்றிருந்த வேளைகளில், தனது குருநாதரான இசையரசு, எம்.எம்.தண்டபாணி தேசிகரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சந்தித்து, தனது அன்பையும், பாசத்தையும் அவரிடம் தெரிவித்து உளம் பூரித்தார். இதனைத் தனது சுயசரிதைக் குறிப்பேட்டில் இவர் குறிப்பிடுகின்றார். 1955இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைக் கல்வியை முடித்துச் சங்கீத பூஷணம் பட்டம் பெற்று நாடு திரும்பிய திரு. கணபதிப்பிள்ளையவர்கள், 1959 ஆம் ஆண்டு வரையும் திருக்கோவில் பிரதேசக் கலை வளர்ச்சியில் அதிக ஆர்வங் கொண்டவராக விளங்கி வந்தார் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் (1955-1959) பலஇசை நாடகங்கள் எழுதிப்பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளார். ஸ்ரீபாலகணேசானந்த சபா நாடக மன்றத்தின் மூலமாக மேடையேற்றப்பட்ட இந்நாடகங்களில், சதாரம் என்ற நாடகம் பெரும் புகழ் பெற்றதாகும்.

அக்காலத்தில் இவரால் இயற்றப்பட்டு அரங்கேற்றப்பட்ட 'காமதேனு பர்வதம்' என்ற நாட்டுக்கூத்தும் இப்பிரதேச மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றுப் பல தடவைகள் ஆடப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். வடமோடியில் அமைந்த இந்நாட்டுக்கூத்தை அண்ணாவியார் திரு.மா.சின்னத்தம்பி அவர்கள் பயிற்றுவித்து, முதன் முதலாக அரங்கேற்றம் செய்தவேளையில், இக்கூத்துக் கலைஞர்களால், சங்கீதபூஷணம் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். இதனை இந்நாட்டுக் கூத்தில் துரியோதனனாகப் பாத்திரம் ஏற்று அக்காலத்தில் ஆடியவரும் எனது தந்தையும், பழம்பெரும் நாட்டுக்கூத்துக் கலைஞருமான, திரு.மா.நாகமுத்து (சயிந்தவன்) அவர்கள், ஒரு சமயம் என்னிடம் குறிப்பிட்டுள்ளார்.

1959ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரையும், திரு.கணபதிப்பிள்ளையவர்கள், தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் இசை ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். இக்காலகட்டத்தில், திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் தனித்துவமான இசைப்பாரம்பரியமொன்றை தோற்றுவித்து நிலை பெறச் செய்த பெருமை இவரையே சாரும். கர்நாடக இசை, பண்ணிசை, தமிழிசை, எனப்பல்வேறு வடிவங்களில், இப்பிரதேசத்தில் இசைக்கலை பரிணமித்த தெனலாம். அக்காலத்தில் (1959 - 1977) இவரிடம் இசை பயின்ற மாணவர்களில் பெரும் பாலானோர், இன்று கலைத் துறையில், பிரதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் புகழ்பெற்று விளங்கி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வானொலி, தொலைக்காட்சி, கலைஞர்களான, இரா.நீதிராஜசர்மா, (இசையமைப்பாளர், பாடகர்) பாடகர், பாடலாசிரியர் கோவிலூர் செல்வராஜன் பாடகர்களான, இரா.சுந்தரமூர்த்தி சர்மா, டபிள்யூ. கமலராஜன், பாடலாசிரியர்களான தம்பிலுவில், தயா, கவிஞர், நா.நவநாயகமூர்த்தி ஆகியோரும், திருக்கோவில் பிரதேசத்தில், இசை ஆசிரியைகளாகப் பணிபுரிந்து வரும் சங்கீத பூஷணம், த.விஸ்வநாதன், சங்கீத பூஷணம், த.மங்களேஸ்வரி, சங்கீத பூஷணம் ஆ.பரமேஸ்வரி போன்றோரும், அக்காலத்தில் திரு.கணபதிப்பிள்ளையவர்களிடம் இசைபயின்ற மாணவர்களாவர். இதே போன்று புகழ்பெற்ற மேடைப் பாடகர்களாக விளங்கும் திரு.க.சண்முகராசா, திரு.த. மனோகரராசா (ஆசிரியர்) இரா.தேவராஜா ஆகியோரும், இவரிடம் இசைபயின்ற மாணவர்களேயாவர்.

திரு.சி.கணபதிப்பிள்ளையவர்கள், தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில், இசை ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் (1959-1977) இப்பிரதேச நடனக்கலை வளர்ச்சியிலும் பெரும் பங்கினை வகித்து வந்துள்ளார். இதற்கு முந்திய காலத்தில் இப்பிரதேசத்தில், பழம்பதிகளாக விளங்கி வந்த தம்பிலுவில், திருக்கோவில், கிராமங்களில் பாரம்பரியக் கலைகளான, நாட்டுக்கூத்து, வசந்தன், கும்மி போன்ற ஆடற்கலைகளே, நிலவி வந்தன. தமிழர் கலைகளிலொன்றான 'பரதக்கலை' இங்கு அறிமுகமாகியிருக்கவில்லை. 1958, 1959 களில் இப்பிரதேச மக்கள் பரத நாட்டியத்தைச் சினிமா மூலமாகவே கண்டு களித்து வந்தனர். பரதக்கலையை, இப்பிரதேச மக்களிடையே அறிமுகம் செய்து வைத்த பெருமை திரு.கணபதிப்பிள்ளையவர்களையே சாரும் எனலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில், தான் முறைப்படி கற்றுக்கொண்ட பரதக்கலையை, தனது மாணவிகளுக்குப் பயிற்றுவித்துக் கல்லூரியில் இடம் பெற்று வந்த கலை நிகழ்வுகளிலும், இப்பிரதேச சைவ ஆலயங்களில் இடம்பெற்று வந்த சமய விழாக்களிலும் இவர் மேடையேற்றி வந்தார். ஆதிகாலம் தொட்டுக் கூத்துக்கலையாகத் தமிழகத்தில் விளங்கி வந்த பரதக்கலையானது, பத்தொன்பதாம் நூற்றாண்டளவில், அரங்கக் கலையாக மாற்றம் பெற்றுத் தமிழகத்தில் செழித்திருந்தது. இக்கலையைத் திருக்கோவில் பிரதேச மக்களிடையே பிரபல்யம் பெறச்செய்த பெருமை திரு.கணபதிப்பிள்ளையவர்களை சாரும் எனலாம். அக்காலத்தில் இவருக்கு நடனப்பயிற்சிக்கூடம் ஒன்றை இப்பிரதேசத்தில் நிறுவவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

இறைபக்தியும், சத்திய வேட்கை மிகுந்தவராகவும் வாழ்ந்து வந்த சங்கீத பூஷணம் கணபதிப்பிள்ளை அவர்களது இதயத்தில் அக்காலத்தில் தோன்றிய இந்த எண்ணக் கனவானது, பிற்காலத்தில் நனவாக நிறைவேறியது. இது இறை செயலேயாகும். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, இப்பிரதேசத்தில் நடனக் கலை வளர்ச்சியில் முழுமையான பங்களிப்பை நல்கிவரும் நடராஜ நர்த்தனாலயம் என்ற நடனப் பயிற்சிக்கூடம் இவரது சிந்தனையில் (1989) உருவானதாகும். இக்கலைக்கூடத்தை நடாத்தி வரும், பரதக்கலைமாமணி, திருமதி. இராஜகுமாரி சிதம்பரம் (பரதச்செல்வி) அவர்கள் அக்காலத்தில் திரு.கணபதிப்பிள்ளையவர்களிடம் பரதம் பயின்ற மாணவியர்களுள் ஒருவராவர்.

திரு. கணபதிப்பிள்ளையவர்கள், தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில், பணியாற்றி வந்த காலத்தில் (1959-1977) மாணவர்களிடையே சமூக, சமய தத்துவங்களையும், ஒழுக்க நெறிகளையும், புகுத்த வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்ததுடன் இவற்றை நாடகங்கள் மூலமாகக் கற்றுக் கொடுக்கவும் முனைந்தார்.

இதன் அடிப்படையில் சிறிய இசை நாடகங்களை எழுதி, அவற்றை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து, அவ்வப்போது கல்லூரியில் நடைபெற்று வந்த கலை நிகழ்வுகளில் மேடையேற்றி வந்துள்ளார். கண்ணகி, சாவித்திரி, தாண்டவர், அரிச்சந்திரன், ஹரிதாஸ், கண்ணனின் பாதம், கிருஸ்ணலீலா, புவனேந்திரன், அப்பர், கிருஷ்ணன் தூது, மணிவாசகர், சாரதாதேவி, இராமகிருஷ்ணர் என்பன இவற்றில் சிலவாகும்.

நெடுங்காலமாகத் தொட்டு, பாரம்பரியக் கலைகளின் உறைவிடமாக மிளிர்ந்து வந்த திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில், 1962, 1963 களில் சினிமாச் செல்வாக்கு அதிகரித்திருந்ததுடன், வசனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட மேடை நாடகங்களும், பிரபல்யம் பெற்றிருந்தன. மூன்று அல்லது நாலு மணித்தியாலங்கள் இடம் பெற்று வந்த இந்நாடகங்களுக்கு, இப்பிரதேச மக்களிடையே நல்ல வரவேற்பும் இருந்து வந்தது. இக்காலத்தில் திரு.கணபதிப் பிள்ளையவர்கள் எழுதிய பல நாடகங்கள் மேடையேறியுள்ளன.

சமூக நலனில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவர், மக்களுக்கு படிப்பினையூட்டக் கூடிய நல்ல சமூகச்சீர் திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நாடகக் கதைகளை எழுதி வந்ததுடன் வலுவான பாத்திரப் படைப்புக்கள் வாயிலாகத் தனது எண்ணக் கருத்துக்களையும் வெளிப்படுத்தி வந்தார். கருத்தாழம் மிக்க இவரது வசனங்கள் அர்த்தமுள்ள பாடல்கள், அக்கால இளந்தலைமுறையினரிடையே பெரும், மனமாற்றத்தை ஏற்படுத்தி வந்ததெனலாம். இவர் கதை, வசனம், பாடல்கள், எழுதி மேடையேறிய நீதிபதியின் மகள் (1963) ராஜதிலகமணி (1964) போன்ற நாடகங்கள், பெரும் புகழினைப் பெற்றவைகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற திரு.கணபதிப்பிள்ளையவர்கள், அக்காலந் தொட்டு 1984ஆம் ஆண்டு வரையும் கலைப் பணிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார் எனலாம். இக்காலத்தில் தனது இல்லத்தில் வீணை, வாய்ப்பாட்டு, வயலின் வகுப்புக்களை நடத்தி வந்தார். இதன் பொருட்டு மாணவர்களிடமிருந்து பிரதியுபகாரமாக, இவர் எதனையும் பெற்று வரவில்லை. இலவசமாகவே இவ்வகுப்புக்களை நடாத்தி வந்தார். 1980, 1981களில் வாரமொரு தடவை மட்டுநகர் சென்று சிவானந்த வித்தியாலயத்தில் பண்ணிசை வகுப்புக்களையும் நடாத்தி வந்துள்ளார். இக்கால கட்டத்தில் (1977-1984) ஓய்வு நேரங்களில் இசைப்பாடல்கள் எழுதுவதிலும் தனது இசை நாடகங்களை நூல் வடிவாக மாற்றியமைக்கும் பணிகளிலும் இவர் ஈடுபட்டு வந்துள்ளார்.

1984ஆம் ஆண்டு தொடக்கம் 1988ஆம் ஆண்டு வரையும் தமிழக்கத்தில் வாழ்ந்திருந்த சங்கீத பூஷணம் கணபதிப்பிள்ளையவர்கள், இக்காலத்தில் திருச்சி, மதுரை, சிதம்பரம், சென்னை ஆகிய இடங்களில் தங்கியிருந்தார் என அறிய முடிகின்றது. இவ்வேளையில் தமிழகத்தில், இசைத்துறை சார்ந்த புகழ்பெற்ற கலைஞர்களிடையே பிரபல்யம் பெற்றிருந்தார். 1985இல் இவருக்கு இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களது நட்புக் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து, இசைமணியின் குடும்பர்களிலொருவராக இவரும் இருந்து வரலானார். இதே ஆண்டில் (1985) திரு.கணபதிப்பிள்ளையவர்கள் எழுதிய "அன்னை மீனாட்சியின் பாடல்கள் என்ற நூல்கள் தமிழகத்தில் வெளியிடப்பட்டது. மதுரை, மீனாட்சி கல்யாண மண்டபத்தில் நடந்த இந்நூல் வெளியீட்டு விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த இசைப் பேரறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றிய திருமுருககிருபானந்தவாரியார் அவர்கள் இவரது, சமூக, சமய, கலைப் பணிகளைப் புகழ்ந்துரைத்தார். இந்நூலுக்குத் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சாற்றுகவி வழங்கியிருந்ததும் குறிப்பிடத் தக்கதாகும். 1987இல் வயலின் குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களைக் கலை விழா ஒன்றில் சந்தித்து உரையாடினார். இதனைத் தொடர்ந்து, இருவரும் நண்பர்களாகவிருந்து வந்தனர். இதே ஆண்டில், ஒரு சமயம், இசைமணி, சீர்காழி கோவிந்தராஜன் அவர்களும், சங்கீத பூஷணம் அவர்களும் கலை விழாவொன்றில் சந்தித்து நட்புரிமையுடன் உரையாடிய சமயத்தில் இசைமணியவர்கள், திரு. கணபதிப்பிள்ளையவர்களிடம் அன்னை மீனாட்சியின் பாடல்களை வானொலியில் தான் பாடுவதற்கு அனுமதி கேட்டார். இவரும் பெரு மகிழ்ச்சியுடன் அனுமதியளித்தார். இதனை இவரது நாட்குறிப்பேடு குறிப்பிடுகின்றது.

தமிழகத்தில் இவர் வாழ்ந்து வந்த காலத்தில் (1984-1988) கலைமாமணி வஜ்ரவேலு முதலியார் (இசைப் பேராசிரியர்) டாக்டர்.ஆனந்த நடராஜ தீட்சிதர், (சிதம்பரம்) டாக்டர்.சரஸ்வதி ராமநாதன் (தமிழறிஞர்) மௌன மகாலிங்க தம்பிரான் (மலைக்கோட்டை, திருச்சி) ஆகியோரது பேரன்பையும், ஆதரவையும், பெற்றிருந்தார். 1988இல் தமிழகத்திலிருந்து நாடு திரும்பிய திரு.கணபதிப்பிள்ளை அவர்கள் தான் உயிருடன் வாழ்ந்திருந்த காலம் வரையும் கலைப் பணிக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். தனது வயதான காலத்தில் உடல் நலம் குன்றியிருந்ததையும், பொருட் படுத்தாது. இசைக்கலை வளர்ச்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வீணை, வயலின், வாய்ப்பாட்டு, வகுப்புக்களைத் தடையின்றித் தனது இல்லத்தில் 1992ஆம் ஆண்டு வரை இவர் நடாத்தி வந்தமை இதற்குச் சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989இல் இவரது பக்திப் பாடல்கள் அடங்கிய 'ஒலிப்பேழை' ஒன்றை முருகன் பாமாலை என்ற பெயரில் வானொலிக் கலைஞரான கோவிலூர் செல்வராஜன் வெளியிட்டார். கோவிலூர் செல்வராஜன் தனது குருநாதராகிய திரு.கணபதிப்பிள்ளை அவர்களுக்குச் செய்த நன்றிக் காணிக்கை என்றே இதனைக் குறிப்பிடலாம். இதே ஆண்டில் (1989) இவர் தொடங்கியிருந்த "நடராஜர் நர்த்தனாலயம்' என்ற நடனப் பயிற்சிக் கூடம் பற்றியும், இவர் ஆற்றி வரும் கலைப்பணிகள் பற்றியும், எழுத்தாளர் திரு.ஜோன்ராஜன் எழுதிய கட்டுரையொன்று வீரகேசரியில் பிரசுரமாகியிருந்தது. இவ்வேளையில் திரு. கணபதிப்பிள்ளையவர்கள் பற்றிய கருத்துத் தெரிவித்த எனது நண்பரான கவிஞர் த.பேரின்பம் அவர்கள். ஒரு கலைக்களஞ்சியம் இலங்கையின் ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கின்றது என்று என்னிடம் குறிப்பிட்டார். இது இன்றும் என் நினைவில் உள்ளது.

1991ஆம் ஆண்டில் வானொலிக் கலைஞர் கோவிலூர் செல்வராஜன், பாடகர் இரா.தேவராசா இருவரும் இணைந்து இவர் இயற்றிய பக்திப் பாடல்கள், அடங்கிய ஒலிப்பேழையொன்றை முருகன் பாடல்கள் என்ற பெயரில் வெளியிட்டனர். திரு.கணபதிப்பிள்ளையவர்கள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசைப் பாடல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய ஏராளமான நூல்கள், கையெழுத்துப் பிரதிகளாக இன்று காணக் கிடைக்கின்றன. தனது வாழ்நாள் முழுவதும், இசையும், கலையும் போற்றி வந்த இணையற்ற கலைஞரான திரு. சி.கணபதிப்பிள்ளையவர்கள் 1992ஆம் ஆண்டு மார்கழி மாதம் பதினெட்டாம் திகதியன்று இவ்வுலகை விட்டு மறைந்த போதும் இவரால் தோற்றுவிக்கப்பட்டு நிலைபெற்ற இசைப் பாரம்பரியம், திருக்கோவில் பிரதேசத்தில் என்றும் நிலைத்திருக்கும். இதில் ஐயமில்லை எனலாம்.

- முற்றும் -

**கலாபூசணம் நா.நவநாயகமூர்த்தி**
*தொல்லியல் ஆய்வாளர்*



**மனதிற்கு ஒவ்வாதனவற்றை**
**உரைக்க வேண்டிய இடத்திலும் உரைக்காமல் விடுவதே மேல்**

**தனது எண்ணத்தை மாற்றாத மனிதன் சிந்தனையிள்**
**விஷ ஜந்துக்கள் வாழும் ஒரு குட்டை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கூட்டும் திருக்கோவில் பிரதேசம்



இளம்பரிதி எழுந்தே எழிலாகக் காட்சிதரும்
வங்கக்கடலின் மீன்வளமும், களப்பும், குளங்களும்,
உழவுக்கும் ஏற்றதான விளைநிலமும் மலிந்தே
வளங்கூட்டும் திருக்கோவில் பிரதேசம் வாழியவே!

தம்பட்டைப் பிள்ளையாருடன் காயத்ரீ பீடம்
சாகாமம் பிள்ளையார் சங்கமன் கண்டியான்
தம்பிலுவில் கண்ணகை மங்கமாரி யுடன்சகல
கலையாள் சூழ இருந்தருள் புரியும் திருமுருகன்!

ஓவியம் வரைவோர் சிற்பமும் செய்வோர்
உயரிய நாட்டுக் கூத்துக் கலைஞரும்
காவியம் படைத்திடும் கவிஞர் குழாமுடன்
கட்டடக் கலைஞரும் வாழுமிப் பூமியே!

கல்வியிற் சிறந்த வைத்தியர் பலருடன்
கல்வியைப் புகட்டிடும் ஆசிரியப் பெருந்தகை
செல்வமே குவிக்கும் கால்நடை வளர்ப்போர்
செந்நெல் விதைத்து அன்னமளிப் போரு (மு) ண்டே!

ஊரக்கை மண்ணில் செந்நெல் விளையுமே!
உழைப்பவர் வீட்டினில் செல்வம் பெருகுமே!
கோரைக் களப்பினில் நண்டிறால் விளையுமே!
வீசியே பிழைப்போர் வீட்டில்பொன் நிறையுமே!

தென்னந் தோட்டமும் நீள்வளர் பனையுடன்
உயர்வினை யடையும் மக்கள்வாழ் பிரதேசமே!
என்றும் விளைந்தே நல்வளஞ் சேர்த்திடும்
திருக்கோ வில்பிரதேசம் வாழ்க! வாழ்கவே!

கண்ணகி அம்மன் காட்டிடும் கருணையும்
நெல்வகை யுடன் கச்சான், சோளன், குரக்கனும்
கதிர்வே லாயுதன் நல்கிடும் அருளுடன்
முன்னவன் பிள்ளையார் அடியை வணங்கியே

**கலாபூசணம் குறிஞ்சிவாணன்,**
சாகாமம், திருக்கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுக்கு உரமூட்டும் உந்து சக்திகள்



பெறுவதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவர்களுக்கு இறைவனால் அருளப்பட்ட பெரும் பாக்கியம் சிந்தனா சக்தியாகும். சிந்தனையைத் தோற்றுவிக்கும் சிந்தை தூய்மையாக, வலிமை கொண்டதாக இருந்தால் தான் மனிதன் ஆரோக்கியமாக, மகிழ்ச்சிகரமாக வாழமுடியும் என்பதில் ஐயமில்லை.

மனிதன் மனவலிமை பெறுவதற்கு ஐயம், பதட்டம், தாழ்வு மனப்பாங்கு, கவலை, கோபம் ஆகியவற்றை நீக்கி வாழும் போதுதான் மனவலிமை அடைய முடியும். இத்தகைய உணர்வுகளுக்கு உட்படாமல் அதன் பிடியிலிருந்து விடுபட்டவர்கள்தான் இன்று உலகம் போற்றும் உத்தமர்களாகவும், அறிவுசார் பெருமக்களாகவும் மிளிர்கின்றனர்.

"எண்ணம் உடலை வன்மையுடன் ஆட்சி செய்கின்றது" எனக் கவிஞர் கேதே கூறியுள்ளார். தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். நீ எதையும் சாதிக்க முடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்த போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாத போதுதான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ ஒரு நாடோ தன்னம்பிக்கை இழந்தவுடனேயே அழிவு வருகிறது. இதனைத்தான் மாவீரன் நெப்போலியனும் "இயலாது, முடியாது" என்ற சொற்களை அகராதியிலிருந்து நீக்கிவிட வேண்டும் என கூறியுள்ளார். இக்கருத்துக்கள் மனித மனத்திற்கு உரமாகவும் மனவலிமையை ஊட்டக் கூடியனவாகவும் உள்ளது. "மகிழ்ச்சி நிரம்பிய இருதயம் மருந்து போன்று நன்மை பயக்கிறது"

**"முடியும் என்றால் முடியும்"**

உன் முயற்சிகள் தொடர்ந்தால் வெற்றியின் விடியல் தெரியும் இதற்குச் சிறந்த உதாரணமாக,

கோபர்னிக்ஸ் தம் ஆராய்ச்சி நூலை எழுதி முடிப்பதற்கு 30 ஆண்டுகள் ஆயின் அதேபோல் அடம்ஸ்மித் தம்முடைய "நாடுகளின் செல்வம்" எனும் நூலை எழுதி முடிப்பதற்கு 17 ஆண்டுகள் ஆயின.

இவ்வாறு தங்களின் தொடர் முயற்சியாலும், மனவலிமையினாலும் ஆராய்ந்ததன் விளைவாகவே உலகம் போற்றக் கூடியவர்களாகவும், பெரு நன்மைகளையும் சமூகத்திற்கு இட்டுச் சென்றுள்ளனர்.

* ஒவ்வொரு மனிதனும் நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்தினால் நாமும் வெற்றியடைந்து சமுதாயத்தையும் வெற்றியடையச் செய்யலாம். துன்பத்தைக் கண்டு அஞ்சக்கூடாது. கவலைகள், பிரச்சினைகளை மனவலிமையுடனும், உணர்ச்சிவசப்படாமலும் தொடர் முயற்சியுடன் அணுகி, அதற்கோர் முடிவும் கண்டு வாழ்வில் வெற்றிபெற வேண்டும்.

* உலக வரலாறு என்பது சாதனைகள் பல சாதித்த மனிதர்களின் வாழ்க்கை வரலாறு ஆகும். நீங்கள் ஒவ்வொருவரும் நினைத்தால், துணிந்தால் வரலாறு படைக்கலாம். அதற்கு தன்னம்பிக்கையுடனான மனவலிமையும் திட்டமிட்ட உழைப்பும் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது இரு கைகளையும் இயக்குகின்ற மூன்றாவது கையாகிய "தன்னம்பிக்கை" இருந்தால்தான் நாம் சாதிக்க முடியும். தன்னம்பிக்கை இல்லாதவன் எதையும் பொறுப்பெடுத்து செய்ய முன் வரமாட்டான். அவன் தன்னையும் நம்ப மாட்டான். பிறரையும் நம்பமாட்டான்.

பிறக்கும் போது யாரும் சாதனையாளர்களாகப் பிறப்பதில்லை. இடைவிடாத முயற்சியும், பயிற்சியுமே ஒருவரை சாதனையாளராக மாற்றுகின்றது.

வெற்றிக்கு முயற்சிதான் மூலதனம். எதுவரை ஒருவர் முயற்சிக்க வேண்டுமெனில் நாம் வெற்றி அடையும் வரை முயற்சிக்க வேண்டும். முயற்சிக்கு அடிப்படை தன்னம்பிக்கை எப்போதும் உற்சாகத்தோடு திட்டமிட்டு செயல்படுங்கள். தவறு நேர்ந்து விடுமோ என்ற ஐயத்தில் செயல்படக்கூடாது. "தொட்டதெல்லாம் துலங்க வேண்டும்" என்கின்ற மனோநிலையைவிட்டு

**வென்றால்** ⟶ **பரிசு**
**தோற்றால்** ⟶ **அனுபவம்** என்ற மனநிலையோடு ஒவ்வொருவரும் வாழ்வில் செயற்பட வேண்டும். அத்தோடு, தோல்வி என்பது பிற்போடப்பட்ட வெற்றி என்பதை ஒருவரும் மறந்து விடக்கூடாது.

* வெற்றியும், தோல்வியும் வாழ்க்கை என்ற நாணயத்தின் இருபக்கங்கள். ஆகவே முடிவு எதுவாயினும் ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

* தோல்வி என்பது ஒரு முடிவல்ல. அது ஒரு திருப்புமுனை. வெற்றி நம்மை வெளி உலகிற்குக் காட்டுகிறது. ஆனால் தோல்வி தான் நம்மை நமக்கே அடையாளம் காட்டுகிறது. மேலும் வெற்றியின் மூலம் கிடைக்கும் பரிசில்களை விட, தோல்வியின் மூலம் கற்றுக்கொள்ளும் பாடங்களின் மதிப்பு அதிகம்.

எடுக்கின்ற முயற்சிகள் அத்தனையும் வெற்றியடைய வேண்டும் என்று எப்போதும் நாம் எதிர்பார்க்கக் கூடாது. ஏனெனில், சில முயற்சிகள் வெற்றியடையலாம். பல முயற்சிகள் வெற்றி கிட்டாமலும் போய்விடும் அதுதான் இயற்கை.

* மனவலிமை இல்லாதவர்கள் சந்தர்ப்பத்தைக் காத்திருக்கிறார்கள். ஆனால் மனவலிமை உள்ளவர்கள் சந்தர்ப்பத்தை உருவாக்கி, வெற்றி கொள்கிறார்கள்.

* கஷ்டப்படாதவனுக்கு எதிலும் உரிமை, உறவு கிடையாது என நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். உடலிலும் மனதிலும் வலிமை இல்லாமல் போனால், ஆன்மாவை அடைய முடியாது.

* "நான் தாழ்ந்தவன்", "நான் தாழ்ந்தவன்" என்று திரும்பத் திரும்ப நினைப்பதும் "என்னால் இயலாது" என நினைப்பதும் ஒருவனை இழிவுபடுத்தி, நாசமாக்கி விடுகிறது. நீ உன்னை பலவீனமானவன் என்று ஒருபோதும் எண்ணாதே, சொல்லாதே விழுந்த போதெல்லாம் தைரியமாக எழுந்துநில். மனவலிமையுடனும் தொடர் முயற்சியுடனும் வீறுநடைபோட்டு இலக்கு நோக்கி உன் பயணத்தைத் தொடர்ந்தால் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இரவில் இருக்கும் கும்மிருட்டு சூரியன் உதயமானதும், மறைந்து போகும் அதுபோல் "தன்னம்பிக்கை" எனும் சூரியன் நலிந்து கிடக்கும் இதயத்திற்குள் நுழையும் போது எல்லாமே எளிதாகிவிடும்.

* நாம் சந்திக்கும் ஒவ்வொரு தோல்வியும் நமக்கு மூலதனம். அது நமது இலக்கை நோக்கி செல்ல உதவும் வாகனம். அங்கு முயற்சியே எரிபொருளாகும்.

* எமது உடம்பு நமக்கு இறைவன் கொடுத்த வாடகை வண்டி. இதில் ஏறி நாம் பிரயாணம் செய்கின்றோம். ஒரு குறிப்பிட்ட காலத்தை கடவுள் நமக்கு அளவிட்டுக் கொடுத்துள்ளார். அக்கால எல்லைக்குள் நாம் செய்ய வேண்டிய தர்மங்கள், சாதனைகளைப் புரிந்து, வரலாறு போற்றும் நற்பிரஜையாக வாழ வேண்டும்.


* "வலியின்றி வளமில்லை" (No Pain No Gain) என உணர்ந்து கடின உழைப்பை புரிந்து எமது இலக்கை அடைய எமது பலம் (Strenght) என்ன?

பலவீனம் (Weakness) என்ன?
வாய்ப்புக்கள் (Opportunities) என்ன?
அச்சுறுத்தல் (Threats) என்ன?

என்பவற்றைக் கருத்திலெடுத்து மனித தத்துவத்துடன் அதாவது நல்லதைச் சிந்தித்து, சிந்தித்ததைப் பேசி, பேசியபடியும் அதே வேளை பொறாமை நீக்கி அதாவது, தன்னால் அடைய முடியாததை மற்றவர் அடைந்தால் அதைக்கண்டு சகிக்காத மனநிலையைத் தவிர்த்து, நமது இலக்கு நோக்கி பயணிப்போமாயின், இளைஞனே உன் வெற்றிக்கனவு நனவாகி விடுவதுடன் உலகம் உனைப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

**திரு. குழந்தைவேல் சுரேஷ்குமார்**
(B.Com, Hon.M.A.)
*திட்டமிடல் பிரிவு*

**இனிய இளைஞனே!**
**வெற்றிக்கு முயற்சியே - மூலதனம்**
**வெற்றிபெறின் - பரிசு**
**தோல்வியுறின் - அனுபவம்**
**என்ற மனோ நிலையை**
**எமக்குள் உருவாக்கி செயற்படுங்கள்**
**விதி ஒரு கதவை மூடினால்**
**நம்பிக்கை இன்னொரு கதவை திறக்க வேண்டும்**
**வறுமையோடு பிறப்பது உன் தவறு அல்ல**
**வறுமையோடு இறப்பதுதான் உன் தவறு**
**இன்று உனை சமூகம் தெரியாமல் இருக்கலாம்**
**கவலையை விடு தன்னம்பிக்கையோடு**
**தொடர் முயற்சிசெய்**
**வெற்றி உன் முகவரி தேடி வரும்**
**அப்போது சமூகத்திற்கு - நீ**
**பூதக் கண்ணாடியாகத் தெரிவாய்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்கள் கணக்கெடுக்கப்படுவதில்லை...
## சிறுகதை

காலை நேரத்து இளம்பரிதி கடல் குளித்துப் பூபாளம்பாடி மேலெழுந்து பல நாளிகை கடந்து விட்டது. அந்தப் பிரதேசம் முழுவதையும், தவழ்ந்து வரும் இனிய இளங்கடற்காற்று தாலாட்டிக் கொண்டிருந்தது, முன்னால் வங்காள வாருதியாள்.., நிலமடந்தையின் பட்டுத்தளிர் மண்குவியல் மீது அலை எறிந்து விளையாடிக்கொண்டிருந்தாள்.

நான் எனது மோட்டார் சைக்கிளை அக்கிறவல் றோட்டில் ஓரமாக வழக்கம்போல் நிறுத்திவிட்டு நிமிருகிறேன். அடிக்கடி காலை வேளைகளில் கடல்மீன் வாங்குவதற்காக இதே இடத்திற்கு வருவது எனது வழக்கம். அங்குள்ள ஆழ்கடல் தோணி ஒன்றின் சொந்தக்காரனான கோகுலன் எனது பிரியமான நண்பன். அவனது வேண்டுதலான "கணேஸ்... நீ கடல் மீன் வாங்கவேணுமென்றால்... அங்க இஞ்ச போய் நஷ்டப்படாமல் என்னிட்ட வா..., நல்ல மீன்... மலிவாக எடுத்துப்போ..." என்ற அவனது அன்புக்காக அடிக்கடி காலைப்பொழுதுகளில் வந்து..., கடற்காற்றின் சுகனுபவத்தை நுகர்வதுடன் மீனும் வாங்கிப் போவது வழக்கமாகி விட்டது.

வங்காளக் கடலுக்கு முகம் காட்டியபடி உயர்ந்து, நிமிர்ந்து நிற்கும் வரலாற்றுப் புகழ் தோய்ந்த முருகன் ஆலயப்பூசை வேளைக்கான மணி பெரும் ஓசையுடன் முழங்கி ஓய்கிறது. இந்தப் பிரதேசம் மட்டுமல்ல, வெளி ஊர்களிலிருந்து வருகின்ற பக்தர்களும், தினம் தினம் கரை புரண்டோடும் வெள்ளமெனத் திரண்டு வந்து போகின்ற இந்தச் சித்திர வேலாயுதன் ஆலயப்புகழ் மிக.. மிகப் பெரிது...!

இரும்படிக்கும் இடத்தில் ஈக்கென்ன வேலை...? என்ற ஒரு குரல் எனக்குப் பின் புறமிருந்து கேட்டது. சட்டெனத் திரும்புகிறேன்..., ஒரு பெரியவர் தன் குறும்பு வார்த்தைகளால் அலை வாய்க்கரை ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்த மூன்று பெண்பிள்ளைகளையும் கிண்டல் பண்ணினார். அவர்கள் "இந்த... வயதில... தேவையாடி... கிழவனுக்கு...? என்ற படி தோணிகள் கரை ஏறும் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

நானும் எனக்குள் ஒருமுறை கேட்டுப்பார்க்கிறேன். காலை நேரப் பூசைக்காகக் கோயிலுக்கு வந்த குமர்ப்பிள்ளைகளுக்கு..., கடற்கரையில் தோணி வலைப்பக்கம் என்ன வேலை...? ம்...ம்... புரியவில்லையே...! அந்தப் பிள்ளைகளும் தொலைவில் எங்களது வீட்டுச் சுற்றாடலில் வசிப்பவர்கள் தான்...!

தூரத்தே கோகுலனின் தோணி கரையை அண்மித்துக் கொண்டிருந்தது. அந்தப் பெண்பிள்ளைகள் மூவரும் அவனுடைய தோணியை நோக்கியபடியே போய்க் கொண்டிருந்தார்கள். என் மனசுக்குள் ஏதோ நடந்து விட்டது போல் ஒரு உறுத்தல் நானும் என் கண்களைக் கூர்மையாக்கியபடி அசையாமல் அவ்விடத்திலே நின்றேன். தோணி கரையை அடைந்ததோ இல்லையோ...? அந்தப் பிள்ளைகளைக் கண்டு விட்ட கோகுலன் வேகமாகத் துள்ளிப் பாய்ந்து கடல் நீரில் நனைந்தபடி ஓடி வந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நிமிடங்கள் அந்தப் பிள்ளைகளும் கோகுலனும் ஏதோ ஒரு பாரதூரமான விசயம் பற்றிப் பேசுகிறார்கள் என்பதை மட்டும் என்னால் ஊகிக்க முடிந்தது. கடைசியில் கோகுலன் அவர்களைக் கைகாட்டிக் கோவில் பக்கமாக அனுப்பிவிட்டுத் தன் தோணியை நோக்கிப் போனான்.

என்ன நடந்தது...? என்ன சங்கதிக்காக இந்தப் பெண்பிள்ளைகள் இந்த நேரத்தில் கோகுலனிடம் வந்து போகிறார்கள்...? நான் குழம்பியபடி... கோகுலனின் தோணியை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். அந்த மூன்று பெண் பிள்ளைகளும் முருகன் ஆலய முன்றலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். கோகுலன் தோணியின் கொல்லாவைப் பிடித்தபடி வங்காளவிரிகுடாவைப் பார்த்தபடி நின்றான். அதனால் நான் சென்றதை அவன் கவனிக்கவில்லை. அருகில் சென்று தோளில் கையை வைத்துக் "கோகுலன்..." என்றேன். "ஆ... ஆ..." என்றபடி தடுமாறித் திரும்பினான்....! "ஆர்..., கணேஸ்..., வா... உனக்கு நீண்ட ஆயுசு... இப்பத்தான் உன்னை நினைத்தேன்..." என்றான்.

"என்ன விசேடம்...? ஏன் வந்து போகின்றார்கள். அந்தப் பெட்டைகள்...? நானும் பார்த்தபடி நின்றன்...!" என்று பல கேள்விகளை அடுக்கினேன். "நீ என்ன அவசரப்படுகிறாய்... கொஞ்சம் பொறன்... உனக்குச் சொல்லாமலா...? முதல்ல... நல்ல மீன்பட்டுக் கிடக்கு அதப்பார்.. பிறகு பேசுவம்..." என்றான் கோகுலன் வெகு நிதானமாக.

"இல்லடா கோகுலன்... அந்த ... மூன்று பேரும் வந்த வேகமும்... போகிற போக்கும் எனக்கு ஏதோ பெரிதாக நடந்திருக்க வேணுமென்று தான் தோணுது... முதல்ல அதைச் சொல்லு... பிறகு மீனப்பாப்பம்..." என்றேன் நான்.

இரண்டு தொழிலாளர்கள் தோணியினுள் கிடந்த மீன் குவியலை வெளியே அள்ளிக்கொண்டு போய் மீன் பெட்டிகளில் நிறைத்தார்கள். அறுக்குளா, பாரை, சூரை... என்று பல்லின மீன்களும் பட்டுக்கிடந்தன. பல மீன் வியாபாரிகள் அங்கே மொய்த்துக் கொண்டு நின்றார்கள்.

அந்த மீன் குவியலுள் நல்ல அளவான அறுக்குளா ஒன்றினைக் குனிந்து எடுத்த கோகுலன் மறுகையால் என் கையைப் பிடித்தபடி சற்றுத் தூரம் தனியாக வந்தான். நானும் மிக்க ஆதங்கத்துடன் நடந்தது என்னவென்று அறிகின்ற வேட்கை மீதுர அவனுடன் நடந்தேன்.

ஓங்கி உயர்ந்து... பரந்து விரிந்து நின்ற அந்தப் பூவரசு மரநிழலில் கோகுலனை நிறுத்தி, இவ்விடத்தில் நின்று "பேசுவோமே..." என்றேன். அவனும் நின்றான். நான் தான் தொடங்கினேன்...!

"என்ன கோகுலன்... அந்தப் பெண்பிள்ளைகளெல்லாம் பரபரப்பாக வந்து உன்னுடன் பேசிவிட்டுப் போறாங்க..., நானும் பார்த்துக்கொண்டு தான் நினறன்..." என்று ஆரம்பித்தேன். ஓ அதுவா...? நம்மட சுந்தரவேணிக்கு இன்று கல்முனையில் ஒரு கல்யாண மண்டபத்தில்... மிக்க விமரிசையான கல்யாணமாம், அதத்தான் சொல்லிற்றுப்போக வந்தாளுகள்... என்றான். "என்ன... உன்ன விட்டிற்று... ஏன் மாறினாள்...?" சட்டென்று கேட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்குத் தெரியாததா கணேஸ்...? வெளிநாட்டு மாப்பிள்ளை..., அதுவும் சொந்தக்காரப் பையன்..., இனசனங்களின் நெருக்கு வாரங்கள்..., பையனின் குடும்பமே கனடாவில்..., மிக விரைவில் சுந்தரவேணியும் கனடாவுக்கு பறந்து விடுவாள்..., இத்தனை விடயங்களுக்கு முன்னால் காதல் என்பது தாக்குப் பிடிக்குமா...? என்று நிறுத்தினான் கோகுலன். "அப்ப... சுந்தரவேணியும் மாறிற்றாளா...?" நான் கேட்டேன். "ஆமாம்... நானும் சுந்தரவேணியும் டெலிபோனில் பேசித்தான் முடிவு செய்தோம். எவருக்கும் தெரியாமல்" "அது மட்டுமல்ல" என் பக்கத்திலயும் பிரச்சினைதான். எனது தங்கை பட்டதாரி ஆசிரியை... ஒரு வருடமாக ஒருவனை காதலிக்கிறாள். இருந்தும்... அவனுக்கு வசதியான வீடும், பத்து லட்சம் சீதனமும்..., பத்துப்பவுண்ல தாலிக்கொடியும் நாங்க கொடுத்தா... தங்கை கழுத்தில தாலி கட்டுவான்..." என்றான் கோகுலன்.

நான் நினைத்துப் பார்க்கிறேன்...! கேட்பவை கொடுக்காவிட்டால்... ஒரு வருடக் காதலும்... அம்போ...! இவ்வளவுதான் காதல் என்பதன் வலிமை...! ..ம்.. என்ன கோகுலன் கவலையாயிருக்கா...? என்றேன். அவன் மிக்க நிதானத்துடன் சொன்னான்... "...இப்படித்தான் நடக்கும் என்று நான் எதிர்பார்த்தது தான் கணேஸ். இடைநடுவில் மறக்க முடியாத நினைவுகளுடன் காதலிப்பவர்களிருவரும் பிரிந்து போனால் மறக்க முடியாத நினைவுகள் ஆயுள்வரை இருவருக்கும் இனிமைதரும். இது ஒன்று தான் இளமைக் காதலின் இனிய பரிணாமம்" என்று நிறுத்தினான் கோகுலன்.

உண்மைதான்..., கோகுலன் - சுந்தரவேணி அறிமுகம் ஏற்பட்டது இந்தக் கோயிலில் தான். கடந்து போன தீர்த்தத்திற்கு முன்பு ஏற்பட்ட உறவுதான் கடந்த தீர்த்தத் திருவிழாக்காலங்களில் மனம் ஒத்த காதலாக மாறியது. அவள் நல்ல அழகானவள்... என்று அவன் ஆசைப்பட்டான். இது பருவக்கோளாறு..., பாலுணர்வின் உந்துதல், இது காதலா...?

அவளும் தவறு செய்யவில்லை...! நல்ல வசதி படைத்தவன்..., கட்டுக்கோப்பான உடலழகு கொண்ட இளைஞன்..., பின் தொடர்ந்து பல தடவை சம்மதம் கேட்டான்...! அவள் பெண்..., பல தடவைகள் புறக்கணித்தாள்...! ஈற்றில் பருவ வயது... ஆசை வயப்பட்டது... சம்மதித்தான்...! இதுவும் பாலுணர்வின் தாக்கமே...!

இறுதியில் சேர்ந்து வாழத்துடித்த இரண்டு உள்ளங்களையும் வெட்டிப் பிரித்து வீசி எறிந்தது சமூகம். இங்கே காதல் கணக்கெடுக்கப்படவில்லை. பொருள்வளம், சொந்தம், சுகவாழ்வு போன்ற பல... சுயநலத் தேவைகள் வென்று விட்டன...! இங்கும் காதலென்பது தோல்வியே கண்டுள்ளது.

நான் எனது பாடசாலை நாட்களில் கார்ல்மாக்ஸ், ஏங்கெல்ஸ் நூல்களை தேடிப்படித்தவன். சிக்மன்பிராய்ட்டின் கோட்பாடுகளையும் நெட்டுருப் போட்டவன். ஆனால், இங்கு... சிக்மன்பிராய்டின் கோட்பாடுகள் மார்க்ஸின் காலடித் தடங்களுள் மறைந்து போகின்றன.

**- கலாபூசணம் முல்லை வீரக்குட்டி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்வாகப் பிரிவு உத்தியோகத்தர்கள்



கணக்குப்பிரிவு உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்று தொட்டு இன்று வரை கிரியை வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சடங்கு முறைகளையே கடைப்பிடிக்கின்றனர். வீட்டில் பொதுவாக சக்கரை அமுது என்னும் அம்மன் வழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது. குழந்தை வயிற்றில் உருவானவுடன் அந்தத் தாய் சுகப்பிரசவமாக வேண்டும் என்பதற்காக அந்த வீட்டில் உள்ளவர்கள் அதற்கான ஆயத்தங்களைச் செய்கின்றனர்.

வளவினைச் சுத்தமாக்குதல், வீட்டைச் சுத்தமாக்குதல் என அம்மன் சடங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனர். இவை எல்லாம் முடிந்த பின்னர், சடங்கிற்கான நாளைத் தீர்மானிக்கின்றனர். குறிப்பாக வெள்ளி, திங்கள் நாட்களிலே இது நடைபெறும்.

இனிச் சடங்கு முறையை நோக்கும்போது, "துர்க்கா, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியர்கள் என்ற நோக்கில், பல் விழாத மூன்று சிறுமியர்களையும் பிள்ளையாரை வழிபடும் பொருட்டு ஒரு சிறுவனையும் தெய்வங்களாகப் பாவனை செய்கின்றனர்.

அதற்கு முன் அந்தக் கர்ப்பினித்தாய் மடிப்பிச்சை எடுப்பதற்கு மிகவும் ஆசாரத்துடன் கொண்டையில் வேப்பம் இலையையும் சேர்த்து கொண்டை முடிந்து சேலை உடுத்தி, சேலையின் முந்தானையில் பிச்சை எடுக்கச் செல்கின்றாள். பிச்சை எடுப்பது முந்தானையில் நெல் போடுவதாகும். கடவுளுக்கு முன் சகலரும் சமம் என்பதை உணர்த்தும் பொருட்டு உறவினர் தவிர்ந்த வீடுகளுக்குச் சென்று மடிப்பிச்சை எடுக்கும் வழக்கம் காணப்படுகின்றது.

சடங்கு செய்பவர் பூசாரியார் என அழைக்கப்படுவர். மடிப்பிச்சை எடுத்த நெல் மணியையும் இன்னும் நெல்லையும் சேர்த்து இரண்டு மூன்று உரல்களில் நெல்லைக் குற்றுவர். அந்த அரிசியே பொங்கலுக்கு உரியதாகும். பூசாரியார் வீட்டுக்கு வரும் போது நெல் குற்றுதல் முடிய வேண்டும்.

இவர் மூன்று கும்பங்களை முப்பெரும் தேவிகளை மன்றாடி வேப்பம் பத்திரமும் மூன்று குடங்களிலே நீரும், தேங்காயும் வைத்து காவியம் பாடி குடங்களை மேடை மீது வைப்பார். அவ்வேளை மூன்று தேவியராக பாவனை பண்ணிய சிறுமியரை மஞ்சளால் கால் கழுவி கண்ணுக்கு மையிட்டு விசேட இருக்கையில் பிள்ளையாராக பாவனை பண்ணிய சிறுவனையும் சேர்த்து இருத்துவர்.

பூசாரியார் மடை வைத்து முடித்தவுடன் பொங்கல் பானைகளை அடுப்பில் ஏற்றுவர். பொதுவாக மூன்று பானைகள் பொங்குவர். பொங்கல் முடிந்தவுடன் வழிபாடு ஆரம்பமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கும்பங்களுக்கு பிரசாதம் வைத்து பின்னர் கொலுவிருக்கும் நால்வருக்கும் முன்னால் வாழை இலை இட்டு அதில் பொங்கல் படைப்பர். படையல்கள் முடிந்தவுடன் வழிபாடு ஆரம்பமாகும். வழிபாடு நிகழும் போது அந்தத் தாய் மடியேந்தி நால்வரிடமும் பிச்சை கேட்பார். அதாவது பொங்கலை அவர்களின் பிஞ்சுக்கரங்களால் அந்தத் தாயின் முந்தானையில் இடுவதாகும். இந்த நிகழ்வு மிகவும் பக்தி பூர்வமானதாக இருக்கும்.

தெய்வங்களே தனக்குப் பிரசாதம் அளிப்பதாகவும், அதனைத் தான் சாப்பிடும் போது சுகப்பிரசவம் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். அது மட்டுமல்ல, குழந்தைகள் வழங்கிய பிரசாதத்தை மற்றவர்களுக்கும் அந்த வழிபாட்டுக்கு வந்த ஏனையோருக்கும் அத்தாய் அவ்வேளை வழங்குவார். அவர்களும் அதனைப் பய பக்தியுடன் பெற்றுக்கொள்வார்கள்.

இச்சடங்கு முடிந்து வீடு செல்லும் போது அந்த நால்வரையும் வீட்டில் இருந்து மேலுக்கு வெள்ளைச்சேலை பிடித்து அதன் கீழ் நிறக வைத்து குரவை, வெடியுடன் வழி அனுப்பும் வைபவமும் பார்ப்பவர் பரவசமடையும் நிலையை ஏற்படுத்தும்.

இச்சடங்கை வருடம் ஒருமுறை தவறாமல் செய்யும் வழக்கமும் உண்டு. பகலில் இச்சடங்கு முடிந்தபின், இரவில் வைரவர் சடங்கு செய்யப்படும். இச்சடங்கு பத்தாசி முறைப்படி, நடைபெறும். முக்கியமாக இளநீர் வைத்து வைரவர் வழிபாடு காவியத்துடன் நடைபெறும். மொந்தன் வாழைப்பழம், ரொட்டி. சிவமூலிகை கலந்த ரொட்டியும் வைத்து வழிபடும் வழக்கம் வழக்கிலுள்ளது.

வைரவர் மடையில் உள்ள இளநீர் கும்பத்தை வெளியில் மேடை (பந்தல்) அமைத்து மேடையின் மீது அடுத்த வருட சடங்கு செய்யும் வரை வைப்பது வழமையாகும். இம்மேடையில் உள்ள கும்பத்தை வைரவக் கடவுளே தம்மைப் பரிபாலித்துக் கொண்டு இருப்பதாகக் கருதுகின்றனர். எனவே வைரவக் கடவுளுக்குரிய சடங்கும் சக்கரை அமுது எனும் சடங்கு முறையும் இப்பிரதேச மக்களின் சடங்கு முறையில் இருக்கும் அசையாத நம்பிக்கையைக் காட்டுகின்றது.


*கலாபூஷணம்* **சிவஸ்ரீ சோ.கணேசமூர்த்தி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்களின் வெற்றியின் இரகசியம் (முகாமைத்திறன் முகாமை)



## திருக்கோவில் பிரதேசம் பற்றிய விசேட பார்வை

### அறிமுகம்:-

முகாமைத்துவமானது நிறுவனங்களின் அனைத்து செயற்பாடுகளிலும் இடம்பெற வேண்டிய அவசியமான தொன்றாகும். நிறுவனங்கள் தங்கள் வினைத்திறன் தன்மையினை மேம்படுத்திக் கொள்வதற்கான ஓர் கருவியாக முகாமைத்துவத்தினை கையாளுகின்றன.

முகாமையானது "சரியானதை சரியாகச் செய்தல்" என்பதன் ஊடாக தனது வினைத்திறனை வெளிப்படுத்துகின்றது. நிறுவனங்கள் தங்கள் இலக்கினை உரியவாறு அடைந்து கொள்வதற்கு தங்களிடமுள்ள மனித மற்றும் பௌதீகவளங்களை முறையே திட்டமிட்டு, தீர்மானமெடுத்து ஒழுங்கமைத்து, வழிநடாத்தி, கட்டுப்படுத்துவதன் ஊடாக சரியான இலக்கினை அடைந்து கொள்ள வழிவகுக்கின்றது.

### பிரதேசம் பற்றிய அறிமுகம்:-

திருக்கோவில் பிரதேசமானது மிகவும் பாரம்பரியமிக்க தமிழ்மக்கள் செறிந்து வாழும் தனித்துவம் வாய்ந்த பிரதேசமாகும். இப்பிரதேசமானது இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 350கிலோமீற்றர் கிழக்கே அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் 190.6சதுர கிலோமீற்றர் பரப்பினையும் 8609 (கச்சேரி) குடும்பங்களை தம்பட்டை தொடக்கம் தாண்டியடி வரையிலான கிராமசேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

மேலும் இங்கு பிரதேச செயலகம், பிரதேசசபை, கல்விவலயம், மாவட்ட வைத்தியசாலை, சுகாதார அலுவலகம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கமநல சேவை நிலையம், பொலீஸ்நிலையம் ஆகிய முக்கிய நிறுவனங்கள் காணப்படுகின்றன.

### பிரச்சினை:-

சரியான முகாமையானது வேலைகளை சரியாகச் செய்ய முற்படுகின்றது. இதற்காக சரியான ஆள், சரியான நேரம், சரியான தரம், சரியான ஒழுங்கமைப்பு, சரியான நியமங்கள் என்பன வேண்டப்படுன்றன. இவ்வாய்வானது திருக்கோவில் பிரதேசத்தில் பல்வேறுபட்ட அமைப்புக்கள் காணப்பட்ட போதிலும் ஒப்பீட்டு ரீதியில் இத்தகைய நிறுவனங்களில் இடம் பெறும் சேவைகள் சரியான நேரத்தில் சரியானவரை சென்றடைகின்றதா என்பதை அறிவதும் பிரச்சினையாகவே உள்ளன. எனவே இவ்வாய்வின் ஊடாக அத்தகைய பிரச்சினைகளுக்கான காரணங்களை கண்டறிந்து தீர்வினை பெற்றுக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### நோக்கம்:-

இக்கட்டுரையானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டது.

1. நிறுவன வெற்றிக்கு அவசியமான அடிப்படை முகாமைத்துவ கொள்கைகளை அறிதல்.
2. திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள நிறுவனங்களுக்கு வேண்டிய முகாமைத்துவ அணுகு முறையினை அடையாளங் காணல்.

### ஆய்வு முறை:-

இவ் ஆய்வானது திருக்கோவில் பிரதேசத்தில் காணப்படுகின்ற பிரதானமான நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இக் கட்டுரைக்கு வேண்டிய தகவல்கள் முதன்மை, துணைத்தரவுகள் மூலம் திரட்டப்பட்டுள்ளன. பிரதான தகவல்கருவியாக முதன்மை தரவு நோக்கத்திற்காக வசதித்தரவு மாதிரி நேரடி கலந்துரையாடல் அவதானிப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**வரைவிலக்கணம்:-**

நடைமுறையில் நிறுவனங்களின் வெற்றி அவற்றினை முகாமை செய்யும் முகாமையாளரது திறனில் தங்கியுள்ளது. முகாமையாளர்கள் தங்கள் கடமையினை திறம்பட ஆற்றுவதற்கு மானிடத்திறன், தொழில்நுட்பத்திறன், கருத்து தொடர்பான திறன், தகவல் தொழில்நுட்பத்திறன் என்பவற்றுடன் நீர்மானம் எடுக்கும் நுட்பத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

மேரிபார்க்கர் வொலற் கூறும் போது முகாமையாளர் திட்டமிட்ட வழியில் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான உண்மையான வழிமுறையை காட்டுவதே முகாமை என்றின்றார்.

இ.எவ்.எல்.பிறிச் என்ற முகாமை அறிஞரது கருத்தின்படி முகாமை என்பது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கான பொதுச் சொல்லாகும்.

ஹென்றி பயேல் என்ற அறிஞர் தொழில்நுட்பம், வணிகம், நிதி, கணக்கீடு, பாதுகாப்பு, முகாமை ஆகிய செயற்பாடுகளை ஓர் நிறுவனம் ஆற்றுவதாக கூறியுள்ளார்.

எவ்.டயிள்யு ரெய்லர் கூறும்போது பிறருடைய உழைப்பின் மூலம் காரியங்களை செய்து முடித்துக் கொள்ளும் செயல்முறையாக முகாமைத்துவத்தினை கருதினார்.

இதன்படி முகாமை என்பது தனித்த ஒரு கருமம் அல்ல. அது பல கருமங்களின் சேர்க்கை.

அதை சுயமாகக் கட்டியெழுப்பப்பட்ட ஒரு கலையாகவே நோக்க வேண்டும். பொதுவாக முகாமையினது.

- **திட்டமிடல்**
- **தீர்மானமெடுத்தல்**
- **ஒருங்கமைத்தல்**
- **ஊழியரிடல்**
- **வழிநடாத்தல்**
- **ஊக்குவித்தல்**
- **கட்டுப்படுத்தல்**

ஆகிய தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது. அத்துடன் இக்கருமங்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் செயற்படுத்தப்படும் விடயங்கள் அல்ல. அவை ஒரு தொடர் செயற்பாடாகும். நிறுவன கருமங்கள் அனைத்துடனும் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டவை. உண்மையில் நிறுவன முகாமை என்பது நிறுவனம் உருவாக்கப்பட முன்னரே செயற்படத்தொடங்கிவிடும். அதாவது நிறுவனத்தினை உருவாக்குவதற்கான எண்ணமே முகாமைக் கருமங்களின் செயற்பாட்டின் செல்வாக்கே ஆகும்.

**நிர்வாகிகளுக்கு ஏன் முகாமை அவசியம்:**

1. நோக்கங்களை இனங்காணவும் அவற்றினை வினைத்திறனான முறையில் அடைந்துகொள்வதற்கும்
2. வளங்களை உத்தமமான முறையில் பயன்படுத்துவதற்கு
3. சமூகக் கடமைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு
4. பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு
5. மனித வளங்களை வளர்த்துக் கொள்வதற்கு
6. மாற்றங்களை எதிர்கொள்வதற்கு
7. சூழலை அறிவதற்கும், அதில் நிலைத்து நிற்பதற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவீன நூற்றாண்டில் முகாமை மிகவும் வேண்டப்படுகின்றதொன்றாக காணப்படுவதற்கான காரணங்கள்:**

1. நிறுவனங்களின் சிக்கல் தன்மையும் மற்றும் வளர்ச்சியும்
2. தொழில்நுட்பங்களில் ஏற்படுகின்ற முன்னேற்றம்
3. வேகமாக வளர்ந்து செல்லும் போட்டித்தன்மை
4. நிச்சயமற்ற தொழில்சூழல்
5. வளங்களை உத்தமமாக பயன்படுத்த வேண்டிய அவசியத்தன்மை
6. பல்வேறு ஆர்வமுள்ளவர்களை இணைத்து குழு ஒற்றுமையினை ஏற்படுத்தல்
7. புதிது புனைதலின் அவசியம்
8. தொழில் ஒழுக்கத்தினை பேணவேண்டியிருத்தல்
9. சமூகப் பொறுப்பின் தேவைப்பாடு
10. அதிகரித்துவரும் சட்டதிட்டங்களும் சர்வதேச அழுத்தங்களும்

**நிறுவன ஆளுமை:**

தனிநபர்களுக்கு ஆளுமை இருப்பதைப்போல் நிறுவனங்களுக்கும் ஆளுமை காணப்படுகின்றது. அத்தகைய ஆளுமை பலவீனமானதாக காணப்படும் போது மக்களிடம் அதன் மதிப்புக் குறைவானதாகக் காணப்படும். தற்காலத்தில் நிறுவனங்கள் தமது ஆளுமையினை மேம்படுத்திக் கொள்வதற்கு பல்வேறு யுத்திகளையும், செலவுகளையும் செய்கின்றன. இதன்மூலம் நிறுவன கலாசாரம் மேம்படுவதுடன் மக்கள் மத்தியில் குறித்த நிறுவனம் பற்றிய நல்ல எண்ணம் ஏற்பட முடியும். குறிப்பாக வாடிக்கயையாளர், உபசரிப்பு, நிறுவன வடிவம், ஆடை, கலர் தோற்றப்பாடு, நிகழ்வுகள், சட்டம், நேர முகாமை, முகாமை போன்ற அம்சங்கள் ஊடாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது. நூறு ஆண்டுகளைக் கடந்து விட்ட திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலை, முப்பத்தி ஐந்து ஆண்டுகளைத் தொட்டு விட்ட பிரதேச செயலகம் போன்ற நிறுவனங்கள் தற்பொழுது இப்பிரதேசத்தில் நிறுவன கலாசாரத்தினை உணர்ந்து செயற்பட தொடங்கியுள்ளன. அதற்கு அவற்றின் தற்போதைய முகாமைத்துவமே காரணம் எனலாம். எனினும் பல மாற்றங்கள் வேண்டப்படுகின்றன.

சில நிறுவனங்கள் நிறுவன கலாசாரம் பற்றிய நுட்பங்கள் அற்றதாகவே காணப்படுகின்றன. குறிப்பாக இப்பிரதேசத்தில் உள்ள ஒரு சில நிறுவனங்களிடம் நிறுவன ஆளுமை பற்றிய எண்ணம் காணப்படவில்லை. அத்துடன் சில நிறுவனம் பற்றிய நல்ல எண்ணம் மக்களிடம் காணப்படவில்லை. எனவே அத்தகைய நிறுவனங்கள் தாங்களும் சூழலில் ஓர் அங்கம் என்பதனை உணர்ந்து கொள்வதன் மூலம் நிறுவன ஆளுமையினையும் சமூக பொறுப்பினையும் நிறைவேற்ற முடியும்.

திருக்கோவில் பிரதேசத்தில் காணப்படுகின்ற நிறுவனங்கள் தங்களிடம் உள்ள வளங்களை உத்தமமாக பயன்படுத்த முற்பட்ட போதிலும் அவற்றுக்கிடையே பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவை நிறுவனங்களுக்கு நிறுவனம் வேறுபடுகின்றது எனினும் ஆய்வினால் தொகுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பொதுவாக பின்வரும் பிரச்சினைகள் பெற்றுக் கொண்ட தரவின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முகாமைத்துவ பிரச்சினைகள் | வரிசை |
|---|---|
| 1. திட்டங்களை சரியாக விளங்கிக்கொள்ளாமை | 1 |
| 2. சரியாக அமுல்படுத்தாமல் விடல் | 2 |
| 3. சரியான வேலைக்கு சரியான ஆள் இன்மை | 3 |
| 4. சுயமதிப்பீடு இன்மை | 4 |
| 5. பக்கச்சார்புத்தன்மை | 5 |
| 6. முகாமைநுட்பங்கள் பயன்படுத்தாமல்விடல் | 6 |
| 7. பங்குபற்றலின்மை | 7 |
| 8. சரியான தீர்மானம் எடுத்தல் பிரச்சனை | 8 |
| 9. கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமை | 9 |
| 10. முரண்பாடான கட்டளை | 10 |
| 11. அதிகார முறைமை தெளிவின்மை | 11 |
| 12. வினைத்திறன் அற்ற தொடர்பாடல் | 12 |
| 13. முகாமை பற்றிய அறிவு | 13 |
| 14. சரியான ஊக்குவிப்பு இன்மை | 14 |
| 15. வாய்ப்புக்களை பயன்படுத்தாமல் விடல் | 15 |
| 16. பதில் சொல்லும் பொறுப்பு இல்லை | 16 |
| 17. கொள்கைகள் தெளிவின்மை | 17 |
| 18. தட்டிக்கழித்தல் | 18 |
| 19. சூழல் பற்றிய தெளிவின்மை | 19 |
| 20. மனிதவள பயிற்சியின்மை | 20 |

**தீர்வுகள்:-**

முகாமைத்துவப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக திருக்கோவில் பிரதேச நிறுவனங்கள் பின்வரும் முகாமைத்துவ செயல் முறையினை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

1. உடனடியாகச் செய்து முடிக்கும் ஆற்றலினை வளர்த்துக் கொள்ளுதல். அதாவது வேலைகளை காலம் தாழ்த்தாது விடல்
2. மிகவும் பொருத்தமானவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு பொருத்தமான வேலைகளை பகிர்ந்து கொடுத்தல். இதன் மூலம் வினைத்திறனை மேம்படுத்தமுடியும்.
3. ஊழியர்களை தூண்டக்கூடிய வழிமுறைகளை அடையாளம் கண்டு கையாளுதல்.
4. வேலைகளை இலக்குகளின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தல்.
5. கொள்கைகளுக்கு அமைய நடக்கவேண்டும் என்பதை கட்டாயப்படுத்தல்
6. குழுப்பங்குபற்றலை தூண்டி அர்ப்பணிப்புடன் செயற்படல்
7. முரண்பாட்டுத் தீர்வு நுட்பங்களை அமுல்ப்படுத்தல்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

8. அறிவு முக்கிய வளம் என்பதனை ஊழியர்களுக்கு தெரியப்படுத்தி தொடர்ச்சியான கற்றலுக்கு வழி செய்து கொடுத்தல்

9. முகாமையாளர் முக்கிய அணி அங்கத்தவராக செயற்படல்.

10. மனித நுட்பங்களை வளர்த்துக் கொள்ளுதல்

11. நமது நோக்கம் மக்கள் சேவை என்பதனை உணர்ந்து மக்களை அரசனாகக் கருதி சேவையாற்றுதல் சேவையாற்றத் தூண்டுதல்.

12. நிறுவன பக்கச்சார்புத் தன்மையினை இல்லாது செய்தல்

13. முகாமை நுட்பங்களைத் தொடர்ச்சியான கற்றலின் மூலம் வளர்த்துக் கொள்ளுதல், புதிது புனைதலை தூண்டுதல்.

14. தனிநபர் ஆளுமை, நிறுவன ஆளுமை என்பவற்றை வளர்த்தலின் ஊடாக நிறுவனங்களில் உயர் ஆளுமை மிக்க கலாசாரத்தினை கட்டியெழுப்புதல்.

15. பதில் கூறும் கடமைப்பாட்டினை வளர்த்துக் கொள்ளுதல், தங்களது நிறுவன தூரநோக்கு பணிநோக்கு இலக்குக்கு அமைவாக செயற்படல் சுய ஊக்குவிப்பு, சுய மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல், நேரான மனப்பாங்கினை வளர்த்தல், பிறரிடம் அதனை வெளிப்படுத்தல், சுய மற்றும் தொழில் ஒழுக்கத்தினை கடைப்பிடித்தல்.

**முடிவுரை:-**

நிறுவனங்களின் வெற்றி தலைவரிலும், அவரின் முகாமைத்துவத்திலும் தங்கியுள்ளது. என்ற அடிப்படையில் முகாமையாளன் முகாமை மற்றும் நிர்வாக தந்திர நுட்பங்களை, வழிமுறைகளை கற்பதுடன் அவற்றை அமுல்படுத்தல் ஊழியர் அழுத்தங்களை குறைப்பதுடன் அவர்களின் கடுத்துக்களுக்கு செவிமடுத்தல் என்பன அவசியமாகும். இத்தகைய தீர்வு நுட்பங்களை உரியவாறு செயற்படுத்துவதன் மூலம் நிறுவனங்கள் தமது வினைத்திறனை அதிகரிக்கமுடிவதுடன் வெற்றிகரமாகவும் செயற்பட்டு நிலைத்து நிற்கமுடியும்

**உசாத்துணை நூல்கள்**


1. செ. குணபாலன் (1999)
   "சிறு வியாபார முகாமைத்துவம்"
2. வ. கனகசிங்கம் (2000)
   "சமகால முகாமைத்துவம்
3. Ramasamy (2005)
   "Principle of management"
4. Stephen P. Robins
   "Organigation behaviar"



**கலாநிதி செ. குணபாலன்** PhD, MBA, M.com
BBA (Hons), CTHE
*தலைவர் முகாமைத்துவத்துறை*
*தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமுறும் கலாசாரமும் அருகிவரும் நடைமுறைகளும்

ஒரு சமூகத்தின் அடையாளமாகக் கலாசாரம் காணப்படுகிறது. நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம், அதேபோல் வேறுபட்ட குழுக்களிடையே அது வேறுபடுவதனைக் காணலாம். கற்காலத்திலிருந்து மனிதன் தன்வாழ்க்கை முறைகளை நாகரிக வளர்ச்சி என்ற பெயரில் மாற்றிக்கொண்டே வந்துள்ளான். எந்தவொரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், இருப்புக்கும் அச்சமுதாயம் சார்ந்துள்ள மக்களின் நெறிமுறைகளும், பண்பாடும் மிகவும் அவசியம். கலாசாரம் என்பது ஒரு ஒழுங்குமுறை. மனிதனின் மனமும் குணமும் அவன் வாழும் சூழலை ஒத்து தீர்மானிக்கப்படுகிறது. நாம் விரும்பி இவ்வுலகத்திற்கு வரவுமில்லை விரும்பிய நாட்டில் பிறக்கவுமில்லை. அதாவது ஒவ்வொரு இனத்திற்கும், நாட்டிற்குமான பண்பாடு, கலாசாரம் அவர்கள் வசதிற்கேற்ப, சக மனிதனுக்கு தொந்தரவு செய்யாமல் வாழ ஏற்படுத்தப்பட்டது. இருந்தபோதிலும் மேல்நாட்டுக் கலாசார மோகமும் அதன் ஈடுபாடும் இன்று எமது தனித்துவ பண்பாடுகளை இழப்பதற்கு வழிகோரியுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. இக்கட்டுரையின் நோக்கம் மாற்றமுறும் கலாசாரத்தால் எமது சமூகத்தில் அருகிவரும் நடைமுறை வாழ்வின் உண்மைகளை எடுத்தியம்புவதாக அமையும்.

உலகமயமாதல், நவீனத்துவம், தாராளமயமாக்கல் போன்ற வெளியகக் காரணிகளால் மோதுண்டு மாற்றமுற்றுவரும் எமது கலாசாரம் அதன் தனித்துவத்தை இழக்க முற்படுவது தவிர்க்கமுடியாததாகிறது. வெளியகக் கலாசார அதிர்வுகள் எமது கலாசாரத்தின் மீதும் பின்வரும் விடயங்கள் மீதும் தாக்கம் செலுத்திவருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

**உணவுப்பழக்க வழக்கங்கள் மீதான மாற்றங்கள்.**
**கல்வி நடைமுறை மீதான மாற்றங்கள்.**
**கிராமியக் கூட்டு வாழ்க்கை வழக்கொழிதலும் நகர்ப்புற இடப் பெயர்வும்.**
**ஆடை அணிகலன் மீதான மாற்றமுறு தன்மை.**
**கிராமிய விளையாட்டுக்கள் அருகிவரல்.**
**கிராமியக் கலைகள் செல்வாக்கிழந்து தென்னிந்தியச் சினிமா பிரபல்யம் பெற்றுவரல்.**

மேனாட்டார் வருகை, புலம்பெயர்வும் மீள்வருகையும் அதேபோல் மேலைத்தேய தொடர்புகள் காரணமாக எமது உணவுப்பழக்க வழக்கங்கள் மாறுதல் அடைந்து வருவதனைக் காணலாம். எமது பண்டைய உணவுகள், சிற்றுண்டிகள் வழக்கொழிந்து புதிய புதிய உணவு வகைகள் பிரபல்யமடைந்துவருகின்றன. நோய் நொடிகளைப் போக்கி தேகாரோக்கிய தன்மையை ஏற்படுத்தக்கூடிய மரபுவழி உணவுகள் இல்லாதுபோய் உடனடி உணவுகளும், பொதியிடப்பட்ட உணவுகளும் நடைமுறையில் வருவதனைக் காணலாம். இலைக்கஞ்சி போன்ற நோய் நிவாரண உணவுகள் தற்போதைய இளைஞர் கூட்டத்திற்கு புரியாத புதிராக இருக்க புறியாணி, கோழி வறட்டல் போன்ற எண்ணெய் கலந்து நோயை ஏற்படுத்தக்கூடிய உணவுவகைகள் பிரபல்யம் அடைந்து வருவதனைக் காணலாம்.

கடந்த மூன்று தசாப்தங்களாக பொருளாதார, அரசியல் மற்றும் சமூக அடிப்படையில் முழு உலகிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அமைப்பு மாற்றங்கள் ஏராளம். அவை கல்வித்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருந்தன. தொழினுட்பப் புரட்சி கல்வித் துறையில் குறிப்பாக உயர்கல்வி, தொலைக்கல்வி என்பவற்றில் மாறுதல்களை கொண்டு வருவது, அதேவேளை கையடக்க தொலைபேசி பாவனை (Mobile Phone), இணையப்பாவனை, சமூக இணையத்தளங்களான பேஸ்புக் போன்றவற்றின் அதிக ஈடுபாடு காரணமாக இன்றைய வளரும் சமூகத்தில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்துவருவதனைக் காணலாம். இதனால் வாசிப்பதனால் மனிதன் பூரணத்துவமடையும் நிலமை மாறி கட்டிளம் பருவ இளைஞர் யுவதிகள் உட்பட வளர்ந்து வரும் சமூகம் மேற்கூறியவற்றிற்கு அடிமையாகிவரும் நிலமையை காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார மாற்றம் ஏற்படுத்திய இன்னுமொரு விளைவு கூட்டு வாழ்க்கை முறை வழக்கொழிந்துவிட வழிஅமைத்தமையாகும். நகர மோகம் அதனால் இடப்பெயர்வு மற்றும் பிரிந்து வாழமுடியும் என்ற மனோபாவம் என்பன குடும்ப பந்த இணைப்பை தவிடுபொடியாக்கியுள்ளது என்றால் மிகையாகாது. ஆனால் மரபு வழியாக எமது சமூகக் கூட்டுவாழ்க்கை மூலம் வாழப்பழகி இருந்தமையும் அங்கு அந்த உறவுவாழ்வின் பலம் பொருந்திய இணைப்புத் தன்மையும் இங்கு நினைவு கூறத்தக்கது. அதேபோல் மேனாட்டுக் கலாசார மோகம் காரணமாக ஆடை அணிகலன்களின் மீதும் எமது சமூகம் பித்துக் கொண்டு அவற்றை பின்பற்றிவருவதனைக் காணலாம். இன்றைய ஆள்பாதி ஆடைபாதி வாழ்வுமுறையை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும். உண்மையில் குளிர்ப்பிரதேசத்திலுள்ளவன் கோர்ட் போட்டால் அதை வெயில் பிரதேசத்திலுள்ளவனும் பின்பற்றுவது எத்தனை முட்டாள்த்தனமோ அத்தனை முட்டாள்த்தனம் வேறொரு கலாசாரத்தை கண்மூடித்தனமாக அப்படியே பின்பற்றுவது.

மனித குலம் என்று தோன்றியதோ அன்று தொட்டே நாட்டார் விளையாட்டுக்களும் தோன்றிவிட்டன. இவை வெறுமனே விளையாட்டாக மட்டுமல்லாது பாடல்களுடன் ஒன்றிணைந்தவையாகவும் அமைந்துள்ளன. இப்போது இவை அருகி வருவதனைக் காணலாம். பெருமளவு இவை வளர்ந்துவரும் வயதுப் பிரிவினருடன் சம்பந்தப்பட்டிருப்பதனால் இன்றைய இவ் வயதுப்பிரிவினர் இதில் அதிக அக்கறை கொள்வதில்லை. உதாரணமாக கிட்டிப்புள்ளு விளையாட்டு, பாட்டன் குத்து விளையாட்டு, உச்சரிப்பு விளையாட்டு, தேங்காய் அடித்தல் விளையாட்டு, எவடம் எவடம் விளையாட்டு, ஆலப்பறத்தல் விளையாட்டு, ஊஞ்சல் விளையாட்டு, சடுகுடு விளையாட்டு என்பவற்றைக் கூறலாம். கிட்டிப்புள்ளு விளையாட்டின் போது பாடப்படும் பின்வரும் பாடலைப் பார்ப்போம்.

**"ஆலையிலே சோலையிலே**
**ஆலங்காடிச் சந்தியிலே**
**கிட்டிப்புள்ளும் பம்பரமும்**
**கிறுக்கியடிக்கப் பாலாறு, பாலாறு, பாலாறு....**" *என்பதாகும்.*

அதே போன்று இன்று கிராமியக் கலைகளாக கரகம், கும்மி, கோலாட்டம், நாட்டுக் கூத்து என்பன அருகிக் கொண்டு வருவதனையும் தென்னிந்தியச் சினிமா குறிப்பாக நாடகம், திரைப்படம், நகைச்சுவைக் காட்சிகள் என்பன அதிகமாக ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டவையாகவும், பிரபல்யம் பெற்றவையாக இருப்பதனையும் உணரக்கூடியதாக உள்ளது.

எது எப்படி இருந்தாலும் மேல்நாட்டுக் கலாசாரம் என்றால் தவறுடையது, மோசமானது என்று நினைக்கின்றோம். ஆனால் நமது கலாசாரத்தில் உள்ள அழுக்குகளான வரதட்சனை, சாதிபேதம், மதவெறி, நிறபேதங்கள் அங்கு இல்லை அல்லது குறைவு என்றே கூற வேண்டும். எனவே எமது சமூக அமைப்பு முறையில் காணப்படும் வேண்டத்தகாத அம்சங்கள் களைந்தெடுக்கப்படல் வேண்டும். அதே வேளை ஏற்றுக் கொள்ளக் கூடிய புதிய அம்சங்கள் எமது தேசிய மரபு வழி கலாசாரத்தை பாதிக்காத வகையில் வெளியிலிருந்து உள்வாங்கப்படுவதில் தவறில்லை என்றே கூறத்தோன்றுகிறது. இதனடிப்படையில் பழையன கழிதலும் புதியன புகுதலும் தவறில்லை மட்டுமல்ல காலகட்டத்திலும் நவீனமாற்றத்திலும் தவிர்க்கவோ தடுக்கவோ முடியாதவை என்பதை நாம் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். இதனை ஏற்றுக் கொள்ளாத மானிடன் கற்காலத்தில் இருந்திருந்தால் இன்றைய சமூக வளர்ச்சியை நாம் அனுபவித்திருக்க முடியாது என்பதே உண்மையானது.

*ஆக்கம்:*
**திரு.வேலாயுதபிள்ளை நவீரதன்** *(ச.நீ/அ.இ)*
B.Econ (Hons), M.A. (Ecom), SLPS,
*உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# திருக்கோவில் பிரதேச மக்களின் கலாசாரப் பாரம்பரியங்கள்

நாகரிக வளர்ச்சிக்கும், பழமைகளை மறந்து கலாசார பாரம்பரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காது வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகங்களை காணக் கூடியதாக இருக்கிறது. திருக்கோவில் பிரதேசத்தில் எவ்வளவோ கலாசார எடுத்துக் காட்டுகள் மறைந்து கொண்டிருக்கிறது. இந்த விளைநில மலர் மூலமாக எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளத்தக்கதாக பல சரித்திரப் புகழ் பெற்ற கலாசார விழுமியங்களை வெளிப்படுத்திக் காட்ட விளைகிறேன்.

தம்பட்டைக் கிராமம் தொடங்கி சங்கமன் கண்டிப் பிள்ளையார் கோவில் ஈறாக கடற்கரை பிரதேசமாக அமைந்துள்ள இப்பிரதேச நிலத்திலே பல சரித்திரப் புகழ் பெற்ற சான்றுகளும் பாரம்பரிய நடைமுறை பழக்கவழக்கங்களும் மறைந்து கொண்டே செல்வதை அவதானிக்கலாம். இப்பிரதேசத்தில் காணப்படும் சமயத்தலங்களே இப்பிரதேச மண்ணின் மகிமையை வெளிப்படுத்திக் காட்டுகிறது. தம்பட்டைக் கிராமம் பழந்தமிழரின் பெருமையைப் பறைசாற்றும் கிராமமாகும். குருக்கள் குடிக்கு பெயர் பெற்ற கிராமமாகும். இக் கிராமத்தில் இருந்தே இப்பிரதேசத்தின் இறுதிவரைக்கும் ஆறுமுக சுவாமி ஆலயம், கண்ணகியம்மன் ஆலயம், ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம், சங்கமன் கண்டி ஆலயம் போன்ற ஆலயங்கள் மூலமாக பல கலாசாரப் பண்புகளைக் காணக் கூடியதாக இருக்கிறது.

சங்கத்தமிழின் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் தம்பிலுவில் கிராமமானது பிரசித்தி பெற்ற கண்ணகியம்மன் ஆலயத்தைத் தன்னுள்ளே அடக்கி, பல பக்திப் பரவசங்களை வெளிப்படுத்திக் காட்டுகிறது. வருடா வருடம் இவ் ஆலயத்தின் திருவிழாக்கள் நடை பெற்று முடிவுறும் தறுவாயில், பக்தர்கள் அனைவரும் ஒன்று கூடி பொங்கிப் படைத்து, குளிர்த்தி பாடி முடிப்பது இப்பூசைகளின் சிறப்பம்சமாகும்.

வெப்ப காலத்தில் திறக்கப்பட்ட கண்ணகியம்மன் ஆலயக் கதவு வெப்பங்களையெல்லாம் தணித்து, குளிர்ச்சியான காலம் உருவாக வேண்டும், மழை எமது பகுதி எங்கும் பெய்து நல்ல குளிர்ச்சித் தன்மையை ஏற்படுத்தி மக்களுக்கு விளைச்சல்களை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று குளிர்த்தி பாடி முடிப்பது இவ் ஆலயத்தின் இறுதியம்சமாகும். அத்துடன், கண்ணகி தன் மார்பகத்தை, அறுத்தெறிந்து மதுரையை எரித்து வானுலகு செல்வதற்கு முன், வானுலகில் இருந்து ஏழு பெண்கள் கண்ணகியிடம் வந்து வளைத்து நின்று அவளின் கற்புத்தன்மையை வெளிப்படுத்திக் காட்டிய காட்சியும் குளிர்த்தி பாடுவதற்கு ஒரு ஐதீக சம்பவமாக இன்றைக்கும் மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

கண்ணகியம்மன் கோவிலில் கல்யாணக்கால் நாட்டுவது என்பதும் குளிர்த்தி பாடுவது என்பதும் மேற்கூறப்பட்ட சம்பவங்களினால் ஏற்பட்ட நிகழ்ச்சியேயாகும். இற்றை வரைக்கும் இவ்ஐதீக சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் பக்திப் பரவசத்தையும், மதிப்பு மரியாதையையும் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

தம்பட்டைக் கிராமத்தில் அமைந்திருக்கும் ஆறுமுக சுவாமி ஆலயம் பல சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாக பல சிறப்பான கலை, கலாசார நிகழ்வுகள் இவ்வாலயத்தில் நடந்தாலும் எண்ணெய்ச் சிந்துபாடுவது ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்ந்தது. இவ் எண்ணெய்ச் சிந்து இவ் ஆலயங்களின் பக்திப் பரவசத்தையும் சரித்திர சான்றுகளையும் சுட்டிக் காட்டுகிறது. எண்ணெய்ச் சிந்து பாடுவதற்கு தனியான ஒரு இராகம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீரார் சனியெண்ணெய்ச் சிந்துதனை யான்பாடக்
காரானை மேனிக் கணபதியே முன்னடவாய்
அந்தி மதிசூடும் அரனர் திருமகனே
கந்தருக்கு முன் பிறந்த கணபதியே காப்பாயே"

போன்ற எண்ணெய்ச் சிந்து, நடைச்சிந்து போன்ற எத்தனையோ பாடல்கள் பாடி மகிழ்ந்த மரபுதனைப் பெற்ற சிறப்பான ஆலயமே இந்த ஆறுமுக சுவாமி ஆலயமாகும்.

திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தை நோக்கும்கால் பல சரித்திரச் சான்றுகள் நிறைந்த ஆலயமாகக் காணப்படுகிறது. பல விழாக்கள் நடந்தேறினாலும் முக்கியமான சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன். சரித்திரகால புருஷர்களாயிருந்த சில மன்னர்கள் இக் கோவில் வரலாற்றை ஆரம்பித்து வைத்திருந்திருக்கிறார்கள். பல கல்வெட்டுகள் மூலமாகவும் இதனைப் புரிந்து கொள்ளலாம். இவ் ஆலயத்தின் ஆரம்ப காலத்தில் பூசகர்கள் ஆலயத்தினுள் இருந்த கற்களை எடுத்து கடலில் வீசினால் ஓரிரு தினங்களுக்குள் மழை பெய்யும் என்பது ஐதீகக் கொள்கையாகும். இப்போது இவைகள் இல்லாவிட்டாலும் மக்கள் மத்தியில் அந்த நம்பிக்கை இருந்து கொண்டிருக்கிறது. மற்றும் சூரசம்காரம், போர்த்தேங்காய் உடைத்தல் போன்ற விடயங்களும் இப்பகுதி மக்களின் கலாசாரப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

திருக்கோவில் பிரதேசத்தின் பழங்கால ஆலயமாகத் தென்படுவது சங்கமன் கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயமாகும். பல சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த அரசர்களும், அரசிகளும் இருந்து வாழ்ந்த ஆலயப் பகுதியாகும். இப்பகுதியை ஆய்வுக் கண் நோக்கிப் பார்த்தால் பல கோயில்களின் கட்டடங்கள் அழிக்கப்பட்டு இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. அத்துடன், பிள்ளையார் சிலையை தூய்மைபடுத்தி நீராட்டி மீண்டும் ஸ்தானத்தில் வைத்தால் நாட்டில் நல்ல மழை பெய்யும் என்றும் தானியவகைகள் நல்ல பிரியோசனம் தரும் என்றும் அக்கால மக்களின் ஐதீக நம்பிக்கையாகும்.

ஆலயங்கள் தவிர்ந்த ஏனைய சான்றுகளை நோக்கும் போது கோலாட்டம், கும்மி, கொம்பு விளையாட்டு, வசந்தன், கரகாட்டம், நாட்டுக்கூத்து, காவடியாட்டம், தேங்காய் உடைத்தல், ஊஞ்சலாட்டம், வட்டக்காவடி, ஆடுவிளையாட்டு, கிட்டிப்பொல், கிளித்தட்டு, பிறப்பு, இறப்பு, சாணக்குறிபோட்டு விவாகம் செய்து வைத்தல், பூப்புனித நீராட்டு விழா, திருமணம் போன்ற ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எமது பிரதேசத்தின் பாரம்பரியங்கள் தென்படுவதை காணமுடிகிறது.

பண்பாட்டுப் பாரம்பரியங்கள் என்று கூறும் போது, ஆதிகாலம் தொடக்கம் நம் இனமக்கள் மத்தியில் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த நிகழ்வுகளைக் கூறலாம். இந்நிகழ்வுகள் பல வகைகளில் வரலாம். ஆலய வழிபாடுகள், வாழ்வியல் சடங்குகளின் மூலம் வரலாம், அடுத்து ஒருவரின் பிறப்பை எடுத்தால் கணவன், மனைவி இருவரின் உறவில் ஏற்படும் சொத்தே இந்தப்பிள்ளைப் பிறப்பாகும். கொளுக்கட்டை அவித்துப் பிள்ளை பிறக்கும் முன் பரிமாறல் இதில் முக்கிய அம்சமாகும். இந்த நிகழ்வு எமது இனத்தின் பாரம்பரிய பழக்கமாகும். கர்ப்பம் உண்டாகிய பெண்ணை கவலைப்படுத்தாது, சந்தோஷமாக வைத்திருப்பதற்காக செய்யப்படும் நிகழ்வாகும். ஆண்பிள்ளை பிறந்தால் பாலை உலக்கையையும், பெண்பிள்ளையாயின் ஈர்க்கில் தடியை கூரைக்கு மேலால் எறிவதும் நம் பிரதேசத்தின் தொன்மை மரபுகளாகும்.

இதைப் போன்று பூப்புனித நீராட்டு விழாவில் மஞ்சள் குளித்து விளையாடுதல் மிக முக்கியமானதாகும். கட்டி மஞ்சள் அரைத்து பூப்பருவமடைந்த பெண்ணை நீராட்டி எடுப்பார்கள். இதில் மச்சாள், அத்தான் முறையானவர்கள் ஆள்மாறி மஞ்சள் நீரை வீசிவீசி நனைத்து விளையாடுவதும் எமது பிரதேசத்தின் பாரம்பரியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் போன்று திருமண வீடுகளிலும் பல சம்பிரதாய முறைகளைக் காணலாம். அவற்றுள் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்கு பெண் கேட்டுவரும் சம்பவங்கள் மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் உணர்வு சம்பந்தமானதாகவும் பல விடயங்களைக் காட்டுகிறது. பலகார வகைகள், மாப்பிள்ளைக்கு தேவையான முக்கிய பொருட்கள் அனைத்தையும் கொண்டுவந்து சேரும் இடத்தில், இரு தரப்பினர் இருந்தும் பலவிதமான கேள்விகள் கேட்கப்பட்டு, இறுதியில் இருபக்க மேல் விரிப்புக்களையும் மாற்றி சமரசப்பட்டு வருவது இப்பிரதேசத்தின் பாரம்பரிய நிகழ்வாகிறது. இவை அனைத்திலும் முக்கிய நிகழ்வு என்னவென்றால் பெண்கள் குரவை இடுதலேயாகும்.

எமது பிரதேசத்தின் பலவிதமான சம்பிரதாய நிகழ்வுகளிலும் கலாசார நிகழ்வுகளிலும் முக்கியமாக பெண்கள் குரவையிட்டு சம்பவங்களை வெளியிடுவது பெரும் சம்பரதாய நிகழ்வாகக் கருதப்படுகிறது. வெடிகளைக் கொளுத்தி சத்தங்களை எழுப்பி நிகழ்வுகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு முன்பே இந்தக் குரவையிடும் நிகழ்வு தோன்றியிருக்கிறது. தொன்மைக் காலம் தொட்டு பூப்புனித நீராட்டு விழாவிற்கோ, திருமண வைபவங்களுக்கோ பெண்கள் குரவையிட்டு நிகழ்வை அடையாளப்படுத்திக் காட்டுவது எமது பிரதேசத்தின் தொன்மைத் தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவதாக அமைகிறது. எவ்வித செலவுகளுமின்றி இந்தக் குரவையானது அத்தாட்சிப் படுத்தி காட்டப்படுகிறது. குரவையிடும்போது அனைத்துப் பெண்களும் குரவையின் ஒலி பல திசைகளுக்கும் திரும்பாது வாயுடன் கையை வைத்து ஒலியெழுப்பும் போது அதிக தூரத்திற்கு கேட்கக் கூடிய தன்மையை ஏற்படுத்துகிறது.

அடுத்து, எமது பாரம்பரியக்கலை நிகழ்வுகளில் கோலாட்டம் தமிழர்களின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகும். வரவேற்புக்களை அலங்கரிக்கும் நிகழ்வே இக் கோலாட்டமாகும். தமிழ் அரசர்கள் அரண்மனைக்குச் செல்லுகின்ற வழியிலே கோலாட்டப்பாடல்களைப்பாடி நாதம் எழுப்புகின்ற இரு தடிகளினால் அடித்து ஆடிப்பாடி, அரசரைச் சிம்மாசனத்தில் இருக்கவைப்பது இக்கோலாட்டத்தின் சிறப்பம்சமாகும். எனவே எமது பிரதேசத்தின் பாரம்பரியத்தை வெளிப்படுத்திக் காட்டுவதில் கோலாட்டமும் கும்மியும் முக்கியம் பெறுகிறது, ஆனால் இப்போது இந்த நாகரிகங்கள் எல்லாம் மறைந்து கொண்டே செல்கிறது.

கொம்பு விளையாட்டு ஆலய உற்சவ காலங்களில் நடை பெற்றுக் கொண்டிருந்தது. இதில் இரு பிரிவினர் பங்குபற்றி விளையாடும் போது அருகில் உள்ள மக்கள் அனைவரும் அரோகரா போட்டு விளையாட்டை ஊக்கப்படுத்தும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைகிறது. ஒரு பகுதியினர் வெற்றியடையும் வரை இவ் விளையாட்டு நடைபெற்றுக் கொண்டேயிருக்கும் இதைப் போன்று காவடி ஆட்டம் பலர் தங்களது நேர்த்திக் கடன்களை முடிப்பதற்காக காவடி ஏந்தி ஆடுவதைக் காணலாம். ஏனைய ஆட்டங்களைப் போன்று இவற்றை நாம் எடுத்துக் கொள்ளமுடியாது. இது எங்கள் பிரதேசத்தின் பாரம்பரியங்களை வெளிப்படுத்திக் காட்டுபவையாக இருக்கிறது. காவடியாடுபவர், காவடி எடுப்பதற்கு முன் சில நாட்களுக்கு சில சம்பிரதாயங்களை கடைப்பிடிப்பவராக இருக்கிறார். மச்சம் உண்ணாதிருத்தல், காலையிலும் மாலையிலும் ஆலயம் சென்று தனது எண்ணக்கருவை வெளிப்படுத்தி வருதல், குடும்ப உறவினர்களுடன் பக்தித் தன்மையை அதிகரிக்கச் செய்தல், காவடி எடுக்கும் சந்தர்ப்பத்தில் எடுப்பவர்க்கு உரு ஏற்றுவதற்குரியவரைத் தேடி எடுத்தல், காவடி எடுப்பதற்கான உடைகளைத் தேடி எடுத்தல் போன்ற விடயங்களை முன் கூட்டியே செய்ய வேண்டியுள்ளது.

எனவே, காவடி எடுத்தல் பல மந்திர உபாயங்களையும் பக்திப்பரவசங்களையும் சிறப்பு நிகழ்ச்சியாக ஏற்று இருக்கிறது. இந்நிகழ்வானது ஆரம்பகாலம் தொட்டு இற்றைவரை உயர்ந்து கொண்டே செல்வதை அவதானிக்கும் போது, எமது பிரதேசத்தினுடைய பாரம்பரியங்கள் அழிந்து ஒழிந்து போகாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருவது எமது பிரதேசத்தின் சிறப்பம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக எமது பிரதேசத்தின் பாரம்பரிய கலாசார நிகழ்வை வெளிப்படுத்தும் நிகழ்வுகளில் ஊஞ்சல் ஆட்டம் முக்கிய பங்கை வகிக்கிறது. இந்த ஊஞ்சலாட்டம் அநேகமாக சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டே தொடங்குகிறது. இந்நிகழ்வானது கிராமப்புற மக்களிடையே பெரும் உற்சாகத்தையும், ஆர்வத்தையும் ஊக்குவிக்கும் கலாசாரமாக விளங்குகிறது. சித்திரை வருடத்திலே, புத்தாடை புனைந்து, பொது ஊஞ்சல் ஆடுகின்ற வேளை பாடுகின்ற பாடல்கள் மிக உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. இந்த ஊஞ்சலாட்டமானது தமிழர்களின் பாரம்பரிய கலாசாரங்களை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

**"பீர்க்கங்காய் மாங்காய் பிலாக்காய் அரிசி**
**பிராமணச் சோறாக்கி - தந்தனதானா"**

எனும் பாடல் ஊஞ்சல் ஆட்டத்தையும் எமது சமயத்தின் சம்பிரதாயத்தையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. இந்த தமிழர்களின் பண்புகளையும் பாரம்பரியங்களையும் இப்போது உள்ள நமது மூதாதையர்களிடம் கேட்டால் மிக அழகுபடக் கூறுவார்கள். இதில் முக்கியத்துவம் என்னவென்றால் பெண்களும் ஊஞ்சலாடுவதேயாகும்.

**"கடற்கரை மணற்பரவி நடக்கமுடியாதோ**
**கன்னிமார் போட்ட ஊஞ்சல் ஆடி முடியாதோ"**

எனும் பாடலில் இருந்து எமது கலாசார நாகரிகங்களில் பெண்களும் எவ்வளவு அக்கறை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

அடுத்து, நாட்டுக்கூத்து என்பது மக்களின் உண்மைத் திறமைகளை வெளிப்படுத்திக் காட்டுவதாகும். கூத்தாடுகின்ற வேளையில் ஒவ்வொரு மனிதனுடைய அங்க அசைவுகள் அனைத்தும் தாளங்களுக்கேற்ற விதமாக ஆடி அசைவது கூத்தாடுபவர்களின் சிறப்புத்தன்மையையும் உடல்நலத் தன்மையையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. எமது பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் இந்நாட்டுக் கூத்து நடைபெற்று இருக்கிறது. இது வடமோடி, தென்மோடி என இரு பெரும் கூறுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் அண்ணாவியாரே முதன்மை வகிக்கிறார். எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை ஆறுமுகம், கிருஷ்ணப்பிள்ளை, கோவிந்தர் போன்ற அண்ணாவியார்கள் கூத்துக்கலையை மேன்மைப்படுத்தியவர்கள் இவர்கள் மூலம் எத்தனையோ நாடகங்கள் கூத்துக்கலையாக அரங்கேற்றப்பட்டிருப்பது எமது பிரதேசத்தை மேன்மைப்படுத்திக் கொண்டிருக்கிறது. கூத்துக்களரியை நோக்கும் போது, திறந்த வெளியரங்கக் களரியாகவே இது அமைந்துள்ளது. இதனால் இக்கூத்தை பல பக்கங்களில் இருந்தும் பார்த்துக் கொள்ளலாம். இன்னும் எத்தனையோ அண்ணாவி மார்களும் கூத்துப்பிரியர்களும் இப்பிரதேசத்தில் இருந்தும், தமிழர்களின் தாயகச் சொத்தான இக்கூத்துக் கலையை மங்கவிட்டுக் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாக இருக்கிறது.

இறுதியாக, இன்னும் சில தொழிற்பாடுகள் மூலமாகவும் பல விழுமியங்களை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. முதல் ஏர்பூட்டல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களிலும் ஆரம்ப நாட்களை கடவுளை முன் நிறுத்தி பல சடங்காசாரங்களுடன் செய்வதும், சூரிய பகவானுக்கு பொங்கிப் படைப்பதும், நிலமடந்தைக்கு வணக்கம் செலுத்துவதும் எங்களுடைய பாரம்பரியங்களாகத் தென்படுகிறது. எனவே, மிகத் தொன்மைவாய்ந்த கலாசார சரித்திரச் சான்றுகள் நிறைந்த பிரதேசங்களில் எமது பிரதேசமும் ஒன்றாகும்.

*- நன்றி -*



**செல்வி மகாலிங்கம் துஷாயினி**
திகோ/திருக்கோவில் மெ.மி.த.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்துக்கலையும் தம்பிலுவில் மண்ணும்!
## - ஓர் இரைமீட்டல் -

**அறிமுகம்:**

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்புத் தமிழகம் (இன்றைய மட்டு-அம்பாரை மாவட்டங்கள்), நாட்டுக்கூத்துக்கு புகழ்பெற்ற பூமி! இம்மண்ணில் பன்னெடுங்காலமாக, கூத்துக்கலை பயின்றுவந்த ஊர்கள் பல உண்டு! அத்தகைய ஊர்களில் பிரதானமானது தம்பிலுவில் கிராமம்.

இன்று முற்றாக அருகிப் போய் நிற்கும் இக்கலையாடல், அரை நூற்றாண்டுக்கு முன்வரை, எத்தகைய புகழோடு இங்கு வழங்கிவந்திருக்கிறது என்பதனை, இவ்வூர் முதியோரின் பெருமூச்சினூடு இழையோடும் ஏக்கத்தின் மூலம் உணர்ந்துகொள்ளலாம்.

நாட்டுக்கூத்து பற்றி வாய்மொழித் தகவல்களையே சேகரிக்கமுடிகிறது அன்றி, அதன் சுய வடிவங்களையோ, ஏனைய சான்றுகளையோ சிறிதேனும் காணமுடியவில்லை. கூத்தின் அருமை பெருமை என்ன? அது எப்படியெல்லாம் ஆடப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் மட்டுமன்று காலத்தின் தேவையுமாகும்.

கூத்துக்கலைக்கென பல சிறப்பியல்புகள் உண்டு. இன்றைய பரதநாட்டியத்திற்கும் நாட்டுக்கூத்துக்குமிடையே பல இடங்களில் ஒற்றுமையை அவதானிக்கலாம். சொல்லப்போனால், சங்க இலக்கியங்களில் வரும் குரவைக்கூத்து முதலான பழந்தமிழர் கலையாடல்களுடன், நாட்டுக்கூத்தின் சில அம்சங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைக் காணமுடியும். இன்று நாட்டுக்கூத்து என்று அழைக்கப்படும் இக்கலை, முத்தமிழில் ஒன்றான நாடகத்தமிழின் ஒரு அங்கமாகவே மதிக்கப்பட்டதை, பழைய கூத்துகள் சில "நாடகம்" எனப்படுவதிலிருந்து நம்மால் உணரமுடிகிறது.

**தென்மோடியும் வடமோடியும்:**

மட்டக்களப்பு நாட்டுக்கூத்து, பொதுவாக இரு வகைப்படும். வடமோடி என்பது ஒன்று தென்மோடி என்பது இன்னொன்று! ஏன் இந்தப் பெயர்கள்? "மோடி" என்றால் பாணி (Style) என்று பொருள். தமிழரின் பாரம்பரியக்கூத்தே தென்மோடி, வடநாட்டு ஆரியரின் கூத்தே வடமோடி என்று ஒரு கருத்து வழங்குகிறது. (மட்டக்களப்புத் தமிழகம் - வீ.சீ. கந்தையா, 1964, பக்.49)

மட்டக்களப்பின் தென்கோடி ஊர்களில் முதலில் பிறந்ததே தென்மோடி, அதுவே இலகுபடுத்தப்பட்டு, மட்டக்களப்பு வடபகுதியூர்களில், வடமோடியாக அறிமுகப்படுத்தப்பட்டது என்று இன்னொரு கருத்து நிலவுகின்றது. (கூத்துக்கலை, கட்டுரை - மூனாக்கானா, "ஆரையூர்க்கந்தன்" கும்பாபிஷேக மலர், 1999 பக்.83)

தம்பிலுவிலில், இருமோடிக் கூத்துகளும் ஆடப்பட்டுவந்தாலும், குறிப்பாக, தென்மோடிக்கூத்தில் சிறந்து விளங்கிய ஊர்களாக, தம்பிலுவில், கோளாவில், அக்கரைப்பற்று போன்றன குறிப்பிடப்படுவதிலிருந்து இதில், இரண்டாம் கருத்தின் உண்மைத் தன்மையை நாம் ஆராய வேண்டிய கடப்பாடுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, தென்மோடி, வடமோடி இடையே அலங்காரம், ஆட்டமுறை போன்றவற்றில் சில வித்தியாசங்கள் உண்டு. கூத்தில், ஆண்களே பெண்வேடமேற்று ஆடுவது வழக்கமாகும். பெண்பாத்திரங்கள் மலர்ச்செண்டு, வட்டவிசிறி, சவுக்கம் (கைக்குட்டை) என்பவற்றை ஏந்திவருவர். இரண்டுக்குமிடையிலான சில வேற்றுமைகளை இனிக் காண்போம்.

| | தென்மோடி | வடமோடி |
|---|---|---|
| ஆட்டமுறை | கடினமான ஆட்டநுணுக்கங்களையும், ஆழமான ஆட்ட அசைவுகளையும் கொண்டது. | இலகுவான நுணுக்கங்களைக் கொண்டதாகும். |
| ஆடை | பொதுவாக இலேசானதாகவும் மென்மையானதாகவும் இருக்கும். வேட்டி, சேலை, பட்டாடை போன்றன. | பாரமானதாக இருக்கும். கரப்புடுப்பு (கூம்பு போன்ற ஆடை) இடையில் அணியப்படும். |
| அலங்காரம் | பாத்திரங்களின் தலையில் பூமுடி, பொதுவாக கையில் வீச்சுவாள் | தலையில் கெருடம் (கிரீடம்), பொதுவாக கையில் கட்டாரி (சிறு குத்துவாள்) |
| விசேடம் | தரு பாடுதல் உண்டு, (கூத்துப் பாட்டு பாடி, பாட்டிற்கேற்ப ஒரு இசைச்சொற்கோப்பைப் பாடல்), காலமேற்றுதல் இல்லை. | காலமேற்றுதல் உண்டு. (நடிகர், அரங்கை விட்டுச் செல்லமுன்பு ஒரு துரிதமான ஆட்டம் ஆடுதல்), தரு பாடுதல் இல்லை. |
| வசனங்கள், பாடல்கள், விருத்தம் | நீண்ட ஓசையாக அசைத்துப்பாடுவர். | சாதாரணமாகப் பாடப்படும். |

## தம்பிலுவிலில் கூத்துக்கலை:

இவ்வூரைப் பொறுத்தவரை கூத்தானது, கண்ணகி வழிபாட்டுடன் இணைந்ததாகவே இருந்துவந்தது. கண்ணகிக்கு விழா எடுக்கும் வைகாசிப்பொங்கல் வேளைகளிலும், சித்திரைப் புதுவருடத்தின் போதும், இது பெருவாரியாக இடம்பெற்றது. பொதுவாக, தம்பிலுவில் அம்மன் கோயிலுக்கு அருகேயுள்ள கொம்புச்சந்தியிலேயே கூத்துகள் இடம்பெறுவது வழக்கம்.

ஆரம்பகாலத்தில் கூத்து, 12 மணித்தியாலங்கள் கூட ஆடப்பட்டிருக்கிறது. வேறு பொழுதுபோக்குகள் அற்ற அக்காலத்தில், மக்களும் அதை விரும்பி நோக்கினர். இவ்வூர்ப் பெரியார்களிற் பலர், கூத்து பழக்குவதில் மட்டுமன்றி, கூத்துகளை இயற்றுவதிலும் புகழ்பெற்று விளங்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூத்து தொடர்பான கலைச்சொற்கள்:

ஓர் ஒழுங்குமுறைப்படியே கூத்து நிகழ்வது வழக்கமாகும். கூத்தின் அங்கங்கள். கூத்து இடம்பெறமுன் நிகழும் மரபுகள், அதற்கென தனித்துவமான மண்வாசனைச் சொற்கள் என்பவற்றை மிகச் சுருக்கமாக கீழே காணலாம்:

**அண்ணாவியார்** - கூத்தைப் பயிற்றுவிப்பவர் இவ்வாறு அழைக்கப்படுவார். இவர் பழைய கூத்து நடிகராகவும், தமிழறிவு, இசையறிவு என்பவற்றில் வல்லவராகவும் விளங்குவார்.

**மத்தளக்காரர்** (மத்தள அண்ணாவியார்) - கூத்தின் உயிர்நாடி, மத்தள ஓசை ஆகும். இவர் கூத்தின் பாடல் மற்றும் காட்சிகளுக்கேற்ப, மத்தளம் வாசிப்பவர் இவ்வாறு அழைக்கப்படுவார்.

**சபையோர்** - நடிகர், அண்ணாவியாருடன் சேர்ந்துபாடுவோர்.

**வட்டக்களரி** - கூத்துக்கென பிரத்தியேகமாக அமைக்கப்படும் கூத்துமேடை. வட்டக்களரியில் நிகழும் கூத்தை சுற்றிவர நான்கு திசையில் இருப்பவர்களும் காணமுடியும் என்பது இதன் சிறப்பம்சம். ஆரம்பத்தில், அரிக்கன்லாம்புகள், பெற்றோல்மெக்சு விளக்குகளின் பிரகாசத்திலும் இறுதியாக வண்ண வண்ண மின்விளக்குகளின் வெளிச்சத்திலும் நிகழ்ந்தது என அறியமுடிகிறது. மண்ணைக் குவித்து மேடையாக்கி, சுற்றிவர வட்டமாகக் கம்பு நட்டு, மேலே கூரையாகப் பந்தல் வேய்ந்து அழகாக வட்டக்களரி அமைக்கப்படும்.

**சட்டங்கொடுத்தல்** - கூத்தின் பிரதியை, மனனம் செய்ய நடிகருக்கு வழங்கல்.

**சலங்கை கட்டல்** - கூத்தாடும் சலங்கையை முதலில் அணியும் சடங்கு. சலங்கையை அமைப்பதில் திரு. வேலுப்பிள்ளை அவர்கள் வெகு பிரசித்தம்.

**அடுக்குப்பார்த்தல்** - இறுதி ஒத்திகை.

**கூத்து ஆரம்பமான பின் நிகழ்வன**

கொலு வருகை - கூத்தின் கதைக்கேற்ப, நாடகப்பாத்திரங்கள் குழுக்களாக வந்து ஆடுவர். பாரதக்கதையெனில் "தருமர்கொலு", இராமாயணமெனில் "இராமர்கொலு"

**வரவு** - ஒவ்வொரு பாத்திரமும், முதன்முறையாக களரியுள் நுழையும் போது ஆடும் நடனம்.

**தாளக்கட்டு** - கூத்தில் ஆடும் நடிகரின் பாத்திரத்துக்கேற்ப இசைக்கப்படும் சொற்கோப்பு, ஏற்ற இறக்கத்துக்கேற்ப, இனிமையான சொற்கோப்புகள், இரட்டைக்கிளவி, சுரங்கள் போன்றவற்றால் இது அமைக்கப்படும். வீரமான பாத்திரங்களுக்கு இது வீரமானதாகவும், சன்னியாசிகள், பெண்கள், குழந்தைகள் போன்ற பாத்திரங்களுக்கு ஏற்ப மென்மையாக அல்லது கம்பீரமாக அல்லது ஆவேசமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக,

வீரன் ஒருவனுக்குரிய தாளக்கட்டு:
(வடமோடி) தத்தித்தாம் தரிகிட தித்தித்தெய்யா - தெய்தெய்
தத்தித்தாம் தரிகிட தித்தித்தெய்யா

**தென்மோடி:**

தந்ததகிட தகிடதா திந்திமிர்த திகிடதெய்
தந்த தகிட திமிர்த தகிட சரிகமபதநிசா

தாளக்கட்டு பாடப்படும்போது, நடிகர் தன் திறமையை ஆட்டம் மூலம் வெளிப்படுத்துவார். இவை பாத்திரங்களுக்கேற்பவும் மோடிக்கேற்பவும், மாறுபடும். எட்டுப்போடுதல், நாலடி போடுதல், வீசாணம், தட்டி நடத்தல் என்று பல ஆட்டவகை உண்டு. பெண்களுக்குப் பிரத்தியேகமாக "குந்தியெழும்புதல்" எனும் ஆட்டவகையுண்டு. இன்னும் பலவுள்ளன. இவற்றை விரிவஞ்சி விளக்க முயலவில்லை.

## கூத்தின் பொற்காலம்:

மட்டக்களப்பு தேசமெங்கணும், பெரும்புகழோடு பயின்றுவந்த, "அலங்காரரூப நாடகம்", "வாளபிமன் நாடகம்" (இரண்டும் தென்மோடிக் கூத்துகள்) ஆகிய இரு கூத்துகள், தம்பிலுவில் பெற்றெடுத்த கணபதி ஐயர் என்பவரால்தான் இயற்றப்பட்டது என்பது இவ்வூராரில் கூட பலரும் அறியாதவிடயம். இவர் காலம் குறைந்தது, 19ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இவர் இயற்றிய அலங்காரரூப நாடகம் கொண்டிருந்த சொற்சுவை, பொருட்சுவை, இலக்கிய நயம் என்பன பல்லூரப் பெரியாராலும் போற்றப்பட்டு வந்ததிலிருந்து, 19ஆம் நூற்றாண்டில், இக்கிராமத்தின் தமிழறிவின் நிலை கண்டு புளகாங்கிதம் அடைகிறோம்.

(கூத்துக்கலைக்கொரு தொல்காப்பியமாக போற்றப்பட்ட இந்நூல், அதன் நுணுக்கமான ஆட்டம், அதிக பாடல்கள், அதிகளவு பாத்திரங்கள் போன்றவற்றால், பிற்காலத்தில், அவ்வளவாக அரங்கேறவில்லை - மட்டக்களப்புத் தமிழகம், மேலது, பக்.64) கணபதி ஐயரால் இயற்றப்பட்ட, வாளபிமன் நாடகம், அண்மைக்காலம்வரை வாழ்ந்த திரு.பெ.கந்தையா அவர்களால், மிகச்சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டது.

1908ஆம் ஆண்டு தொடக்கம் 1982ஆம் ஆண்டு வரை, இவ்வூரில் கூத்துக்கலை பெரும் புகழோடு விளங்கியது எனலாம். அக்காலத்தில் அரங்கேறிய கூத்துகளில் திரு.நாகமணி (வெடிக்காற நாகமணியர் என்பர்.) மற்றும் திரு.க.கோவிந்தப்பிள்ளை ஆகியோர் இயற்றி, அரங்கேற்றிய "நரேந்திரன் நாடகம்" எனும் தென்மோடிக் கூத்து, மிகப் பிரபல்யம்பெற்று விளங்கியது.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், உவில்லியம்பிள்ளை அவர்களால், "கண்டிராசன் கூத்து", "புவனேந்திரன் கூத்து", "பவளேந்திரன் கூத்து", "நச்சுப்பொய்கை" போன்ற கூத்துகள் இயற்றி அரங்கேற்றப்பட்டன. திரு.க.வை. சரவணமுத்து பரிசாரியாரால், "காமதேனு பர்வதம்", "சயந்தன் நாடகம்" ஆகிய வடமோடிக் கூத்துகள் அரங்கேற்றப்பட்டன.

திரு.வேலுப்பிள்ளை, திரு.மா.சின்னத்தம்பி ஆகியோரால் "வள்ளியம்மன் நாடகமும், தம்பட்டையைச் சேர்ந்த சிவஸ்ரீ.கா.நல்லதம்பிக் குருக்களால் "கஞ்சன் போர்", "சராசந்தன் போர்" ஆகியனவும், திரு.செ.தில்லைநாயகம் அவர்களால், "சத்தியவான் சாவித்திரி" நாடகமும் அரங்கேற்றப்பட்டதாக அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், திரு.பா.கந்தையா, திரு.மா.சின்னத்தம்பி, திரு.முருகமூர்த்தி, திரு.வே.கந்தசாமி போன்ற பல அண்ணாவியாரால் இயற்றப்பட்ட, "குருசேத்திரப்போர்", "லவகுசன் நாடகம்", "வைகுந்த நாடகம்", "சூது துகிலுரிதல்", "அருச்சுனன் பாசுபதம் பெறல்", "வெடியரசன் நாடகம்" போன்ற தென்மோடி - வடமோடிக் கூத்துக்கள் பற்றியும் அறியமுடிகிறது.

## கூத்தின் பிற்காலம்:

நாட்டுக்கூத்து உன்னதமான நிலையிலிருந்த காலங்களில் "இசை நாடகம்; எனும் புதுவகைக் கூத்துமரபு உருவானது. ஆங்கிலேயர் ஆட்சியாலுருவான நாடகங்களின் (Drama) தாக்கம், கூத்தோடு இணைந்து, கூத்துமற்ற, நாடகமுமற்ற, இவ்விசைநாடகம் எனும் புது மரபைத் தோற்றுவித்தது.

இது உருவாக பிரதான காரணம், தம்பிலுவிலில் தென்னிந்திய நாடகக் கம்பனிகள் வந்து, 1925 - 1930 வரையான காலப்பகுதிகளில் நடாத்திய பல இசைநாடகங்கள் ஆகும் (தம்பிலுவில் கண்ணகி வழிபாடு. நா.நவநாயகமூர்த்தி, பக்.48) இதை அடியொற்றி, இவ்வூர்ப் பெரியார் பலரும் இசைநாடகங்களை எழுதி அரங்கேற்றலாயினர்.

எமது சிறிய தந்தையாரான, தம்பிலுவில் குஞ்சித்தம்பிப் பண்டிதர் அவர்கள் எழுதிய சிறுத்தொண்டர் இசைநாடகம், அலாவுதீன் கதை மற்றும் வில்லியம்பிள்ளை அவர்கள் எழுதிய மதுரைவீரன், சுந்தரவிலாசம் என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இவற்றில், குஞ்சித்தம்பிப் பண்டிதரின் சிறுத்தொண்டர் நாடகம், தம்பிலுவிலில் மட்டுமன்றி, கிழக்கிலங்கை முழுவதும் அரங்கேற்றம் கண்டு புகழ்பெற்ற நாடகமாகும். இவ் இசைநாடகம் எனும் கலைமரபு, மேற்கூறிய பெரியார்களின் மறைவுக்குப்பின்னும், ஏறத்தாழ 1960,70 வரை பெரும் பிரசித்தியுடன் விளங்கியது எனலாம்.

## கூத்தின் வீழ்ச்சி:

தம்பிலுவிலில் இறுதியாக கூத்து அரங்கேறியது 1982இல் என அறிகிறோம். இதை அடுத்துவந்த ஆண்டுகளில் நாட்டிலேற்பட்ட வன்செயல்களையும், தொடர்ந்து நிகழ்ந்த யுத்தத்தையும் அடுத்து, இவ்வூரின் கலைப்பொக்கிஷமான கூத்துக்கலை மழுங்கி, மறைந்து மறந்து போனது.

காலமும், மக்களும் மனது வைத்தால், அமைதியான சூழ்நிலை நிலவும். இப்போது கூட, குற்றுயிராய்க் கிடக்கும் கூத்துக்கலைக்கு புத்துயிர் வழங்கமுடியும். ஆனால், அது அவ்வளவு சுலபமன்று. பல அண்ணாவியார்களை இழந்துவிட்டோம். கடற்கோளிலும், கறையானுக்கு இரையாக்கியும், அலட்சியத்தாலும் பல கூத்து ஏட்டுச்சுவடிகள், கூத்துக்கொப்பிகள் மண்ணோடு மண்ணாகிவிட்டன. ஆனால்....

மனமுண்டானால் இடமுண்டு. இருக்கும் ஓரிரு பெரியவர்களின் உதவியுடன், நிச்சயம் கூத்தை உயிர்ப்பிக்கமுடியும். பழைய கூத்துகளை நூல் வடிவில் வெளியிட வேண்டும். மரபு மாறாதவண்ணம், காலத்துக்கேற்ப சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். இது இன்றைய இளஞ்சந்ததியினரின் கரங்களிலே தான் உள்ளது என்று சொல்லித்தான் தெரியவேண்டுமென்றில்லை.

**கு. சிறிபஞ்சாட்சரம்,**
*இளைப்பாறிய பொது முகாமையாளர், செயலாளர்,*
*உகந்தமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்,*
*தம்பிலுவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள்



சமூகப் பிரிவு உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் கால் முளைக்கையில்...

மரணித்த இரண்டு மனசுகளின்
கறைபடிந்த இதயத்துடிப்பை
பறைசாற்ற எத்தனிக்கும்
உறவு முறையின் உணர்வு துறவு வாழ்க்கை...!

இரண்டு பிள்ளை பெறுகையில்
வரண்ட நிலம் செழிப்படைய
துவண்டு வந்து துன்பங்கள் சாயலாக
இருண்ட வானம் நிலமாயிற்றோ!

பாலூட்டி சீராட்டி
தொட்டிலில் இட்டுத் தாலாட்டிய
சொக்கத் தங்கங்கள் தாயை மறப்பார்களா?

தந்தையின் சாணக்கியத்தால்
நத்தையின் குடும்பம் போல் காத்து
விந்தை செய் உலகில்
நொந்ததை மறப்பாயா?

விளையும் பயிரை முளையில் தெரியும்
களையின் உயிரைக்களை நாசினி அறியும்
வளையும் தங்கத்தை நெருப்பில் அறிவோம்
பிள்ளையின் நடத்தையும் போக்கில் தெரியும்
போக்கு உம்மை காக்கும் என்றுன் வாக்கு சொல்லியதா?

முதுகு முன் தள்ள
நரம்பு வெளித்தள்ள
விழியின் பார்வை தொலைந்து போக...
மூன்றாம் கால் முளைக்க...!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிழவன் கிழவி என்று நாமம் சூட்டி
நடுத்தெருவில் விட்டது யார் குற்றம்...?
இறைவன் குற்றமா? இரு பிள்ளை ஈன்றது குற்றமா?
இமை போன்று காத்தது குற்றமா?

மூத்த பிள்ளை பார்க்கும் என்று
இளைய பிள்ளை நினைத்ததா...?
இளைய பிள்ளை பார்க்கும் என்று
மூத்த பிள்ளை நினைத்ததா...?
பெற்ற பிள்ளைகள் பார்க்கும் என்று...
பித்து மனம் நினைக்க...
பிள்ளை மனம் கல்லாகியது ஏனோ...?

உனக்கு நான் பிள்ளை
எனக்கு நீ பிள்ளை
பிள்ளை இல்லாக் குறையோ
இனி நமக்கு இல்லை...!

மதிய வெயிலில் பெரிசு இரண்டும் நடக்கையில்
பதியும் நிழல் தஞ்சம் என்று
முதியோர் இல்லத்தை நாடியது...
உறவுகளின் நாடித்துடிப்பைக் காட்டியபடி...!

**திருமதி. சுபாதினி - ரவிகரன்**
சமுர்த்தி பிரிவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோவில் பிரதேச நாட்டு வைத்தியத்தில் பரியாரிமார்களும் மருத்துவிச்சிமார்களும்

அக்கரைப்பற்றுத் தென்பகுதி என்றழைக்கப்படும் திருக்கோவில் பிரதேசம் தம்பட்டை எனும் கிராமத்தை ஆரம்பமாகவும் தாண்டியடி சங்கமன்கண்டியை முடிவாகவும் கொண்ட ஒரு செழிப்பான பிரதேசமாகும். அக்கரைப்பற்று – பொத்துவில் பிரதான பாதையில் அமைந்துள்ள இப்பிரதேசம் தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில், கள்ளியந்தீவு, விநாயகபுரம், கஞ்சிகுடியாறு, காஞ்சிரங்குடா, தாண்டியடி முதலான கிராமங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.

அவ்வாறிருந்த போதும் தம்பிலுவிலை உள்ளடக்கிய பகுதியாக முனையூர், மணல்காடு ஆகியவையும், திருக்கோவிலை உள்ளடக்கியதாக கள்ளியந்தீவும், சாகாமமும் இருந்தன. இப்பகுதிகளில் அக்காலத்தில் நாட்டு வைத்தியம் எனும் சித்த ஆயுர்வேத வைத்தியம் மேலோங்கியிருந்தது. ஆங்கில வைத்தியசாலைகள் விரல் விட்டெண்ணக்கூடியதாக இருந்த அக்காலத்தில் இப்பகுதிமக்கள் கூடுதலாக இவ்வைத்தியத்தையே நாடிநின்றனர். அது பிரபல்யமாக விளங்கியதால் முழு நம்பிக்கை கொண்ட மக்களுக்கு இவ் வைத்தியத்திலீடுபட்ட வைத்தியர்கள் மக்கள் மனதில் இடம் பிடித்ததோடு நோய்களை குணப்படுத்தும் விற்பன்னர்களாகவும் விளங்கி வந்தனர். வாதம், பித்தம், காசநோய், காயங்கள், காய்ச்சல், வயிற்றுவலி, சித்தசுவாதீனம், பிள்ளைப்பேறு, நரம்பு சம்பந்தமானது போன்றவற்றை குணப்படுத்துவதிலும் அதனை நிவர்த்தி செய்வதிலும் வல்லவர்களாக திகழ்ந்தனர். இவர்கள் வைத்தியத் துறையோடு மட்டும் நின்றுவிடாது. மாந்திரிகம், தெய்வத்திற்குரிய பூசை, சடங்கு, கலைத்துறை போன்றவற்றிலும் சிறந்து விளங்கினர். அதனோடு இவர்கள் தேவை ஏற்படும் போது பூசாரி வேலைகளையும் செய்து வந்தனர்.

தம்பிலுவில் பரம்பரை வைத்தியர்களாக கோணாமலை (ஒள்ளுப்பரியாரி), சரவணமுத்து, தியாகராசா (நரம்பு வைத்தியர்) தாமோதரம், கார்த்திகேசு, நாகமுத்து, நாச்சி கவுண்டர், வேலுப்பிள்ளை குருநாதப்பிள்ளை போன்றவர்கள் ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

திருக்கோவிலில் இளையதம்பி, கந்தையா, பூபாலப்பிள்ளை, வீரசிங்கம் ஆகியோரும், தாண்டியடியில் ஆறுமுகம், காஞ்சிரங்குடாவில் அருணாசலம் என்பவரும் பிரபல்ய வைத்தியர்களாக விளங்கி வந்தனர்.

இவர்கள் தங்களது உயிரைப் பணயம் வைத்து காடு கரம்பையேறி மூலிகைகளை கண்டு பிடித்து அவைகளைப் பெற்று வந்து மருத்துவத்தை திறம்படச் செய்து வந்தனர்.

கோணாமலை வைத்தியர் நல்ல நெடிய தோற்றம் பெற்றவர். இவரது தொனிக்கு நோயாளிகள் அடங்கிப் போவதும் இவருக்குரிய திறமையாக இருந்தது. சரவணமுத்து பரியாரி வெற்றிலை ஆருடம் சொல்வதிலும் வல்லவரானதோடு, விஷக்கடி வைத்தியராகவும், அண்ணாவியாராகவும் மேம்பட்டு விளங்கினார். அதற்குச் சான்றாக தம்பிலுவில் விஷ்ணு ஆலய வளவினுள் நடப்பட்ட விஷக்கல் அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமோதரம் வைத்தியரை இப்பகுதியிலும் வெளிப்பிரதேசத்திலும் அறியாதவர்களே இல்லை எனலாம். இது ஏனைய வைத்தியத்தோடு சித்த சுவாதீன வைத்தியத்தில் பல நோயாளிகளைக் குணப்படுத்தியதனாலேயாகும்.

தியாகராசா என்பவர் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தியவராவர். இவர் சுளுக்கு, முறிவு, நரம்புப்பிடிப்பு போன்றவற்றை எளிதில் குணப்படுத்துவதில் பிரபல்யமாக விளங்கியவர்.

நாகமுத்து எனும் நாகம் பரியாரி என்பவரும் ஏனைய வைத்தியர்களும் மிகவும் இத்துறையில் மேம்பட்டு விளங்கியவர்களாவர். இவர்கள் தூள் வகைகள், குளிசைகள் மூலம் பிரபல்யமானவராவார்.

கார்த்திகேசு என்பவர் கால்நடைகளுக்கு (ஆடு, மாடு, நாய் போன்றவை) ஏற்படும் நோய்களை, காயங்களை, முறிவுகளை குணப்படுத்துவதில் திறமையான வைத்தியராக விளங்கினார்.

இதே போன்று திருக்கோவிலில் இளையதம்பி வைத்தியரும், வைத்தியத்துறையில் சிறந்து விளங்கினார். இவரது நெற்றியில் எவ்வேளையும் திருநீற்றுப்பட்டை காணப்படும். சிரித்த முகத்தோடு வரவேற்கும் பண்புடையவர். இவரைப் போன்றே கந்தையா வைத்தியரும் விளங்கினார். விஷக்கல் பூபாலப்பிள்ளை என்றழைக்கப்படும் பூபாலப்பிள்ளை சிறிய தாடியுடன் ஒரு குறுமுனி போன்ற தோற்றத்தையுடையவராவார். இவர் திருக்கோவிலில் பிரபல்யமாக விளங்கும் விஷக்கல்லை பராமரித்து வந்ததோடு அதற்கான வைத்தியத்தையும் செய்து பிரபல்யமாக விளங்கினார்.

திருக்கோவில் சங்கீதபூஷணம் கணபதிப்பிள்ளை என்பவரின் மூத்த சகோதரரான ஆறுமுகம் வைத்தியர் தாண்டியடியில் தமது வைத்தியத்துறையிலீடுபட்டு நன்மதிப்பை பெற்றவர். இவர் ஒரு சாதுவான மனிதராக காணப்பட்டார்.

இவர்கள் வரிசையில் பரம்பரை வைத்தியத் தொழிலில் ஒரு சிலரே முன்வந்துள்ளனர். எனினும் தற்காலத்தில் அவர்களைப்போல் வைத்தியத்துறையில் முன்னேற்றங் காண்பதற்கு இன்றைய சூழல் அவர்களுக்குத் தடையாக இருந்து வருகிறது. காடுகள் அழிக்கப்பட்ட நிலை, மூலிகை வளர்ப்பின்மை, அவைகள் குறைந்தளவு காணப்படுபவை போன்றவையும், சுகாதார வைத்தியத்துறை ஓங்கி நிற்பதுவும் காரணங்களாகும்.

மேற்குறிப்பிட்ட வைத்தியர்கள் மறைந்தவர்களாகவிருந்தாலும் அவர்களது பெயர்கள் இன்றும் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றன. இதேபோன்று மருத்துவிச்சிமார்களும் பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தம்பிலுவில் சித்த வைத்தியத்தில் தனது தந்தையாகிய தாமோதரம் அவர்களின் நற்பெயரைக் காப்பாற்றி வருபவர் திருமதி.சிவமணி செல்லத்துரை (கந்தசாமி) அவருடைய சகோதரன் திரு.தா.பேரம்பலம் ஆகியோராவர். திருக்கோவில் இளையதம்பி வைத்தியரின் பரம்பரையாக திரு.தமிழ்நேசன் என்பவரும் வைத்தியத்துறையிலீடுபட்டு வருகின்றார். இத்துடன் மறைந்த சரவணமுத்து வைத்தியரின் மகனான கதிரமலையும் பரம்பரையாக வைத்தியமும் சோதிடமும் செய்து வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பட்டையிலுள்ள குருமார்களில் சிலர் மேல் உளைவு, சுரம், தலைவலி போன்றவற்றை தங்களது மந்திர சக்தியூடாக தண்ணீர் ஓதி அதனைக் குணப்படுத்துவதும் வைத்தியத்துறையில் அடங்கும் எனலாம். அதே போன்று விஷக்கடி வைத்தியத்தில் தம்பிலுவிலைச் சேர்ந்த பாலாச்சி எனும் மூதாட்டியும் சிறந்து விளங்கியவராவார். மேலும் மருத்துவிச்சிமார்களும் அக்காலத்தில் பிரசவ வைத்தியத்திலீடுபட்டு பிள்ளைப்பேற்றினை இலகுவாக்கியதும் குறிப்பிடத்தக்கது. இவர்களுள் தம்பிலுவிலைச் சேர்ந்த காளியம்மை, திருமதி.ஆறுமுகம் நேசம்மா, வள்ளியம்மை ஆகியோர் இப்பிரதேச மருத்துவிச்சிமார்களாக சிறந்து விளங்கினர்.

நாட்டு வைத்தியத்தில் எண்ணெய், தூள், லேகியம், குளிசை, ஒற்றடம், அரப்பு போன்றவைகள் மருந்தாக பயன்படுத்தப்பட்டன. இவைகள் பாவிக்கப்படும்போது பத்தியம் காத்தல் அவசியமானதாகவிருந்தது. ஒவ்வாமை உணவுகள் தவிர்க்கப்பட்டு வந்தன. இம்மருந்து வகைகளின் அளவுகள் மிக முக்கியமானதாக இருந்தது. இம்மருந்துகளைப் பாவிக்கும்போது உடற்சுத்தம், உளச் சுத்தம் பேணப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவர்களின் மருந்து வகைகளும் அளவுகளும் வித்தியாசமானவை. அவை பின்வருமாறு அமைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1 குன்றி | 130 | மி.கி. |
| 1 பணவெடை | 488 | மி.கி. |
| 1 காசெடை | 165 | மி.கி. |
| 1 துட்டெடை | 165 | மி.கி. |
| 1 வாரகனெடை | 4.2 | கிராம் |
| 1 கழஞ்சு | 5.1 | கிராம் |
| 1 பலம் | 35 | கிராம் |
| 1 சேர் | 280 | கிராம் |
| 1 வீசை | 1.4 | கிராம் |
| 1 தூக்கு | 1.7 | கி.கிராம் |
| 1 துலாம் | 3.5 | கி.கிராம் |
| 1 ஆழாக்கு | 168 | மி.லீட். |
| 1 உழக்கு | 336 | லீட். |
| 1 உரி | 1.3 | லீட். |
| 1 படி | 1.3 | லீட். |
| 1 நாழி | 5.3 | லீட். |
| 1 குறுணி | 5.3 | லீட். |
| 1 கலம் | 64.5 | லீட். |
| 1 மரக்கால் | 1 | குருணி (5.3 லீட்) |
| 1 சாமம் | 3 | மணிநேரம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூலிகைகளின் வைத்திய பெயர்கள் சில:**

| | | | |
|---|---|---|---|
| கண்டங்கத்தரி | ஆற்றுமுள்ளி, தாவணி | கீழ்க்காய்நெல்லி | தாமலகி, தாலி |
| வால்மிளகு | தக்கோலம் | வெற்றிலை | தாம்பூலவல்லி |
| ஆமணக்கு | இஸ்டம் | பொன்னாங்காணி | சித்தரி, சீதனி |
| கடுகு | தந்தபம், ஆயசூரி | வாதமடக்கி | தந்தகாரி |
| வெள்ளெருக்கு | தராசு | முடக்கொற்றான் | திரகமூலம் |
| வேலிப்பருத்தி | அச்சாணிமூலி | ஆடாதோடை | அட்டகாசம் |
| எருக்கு | அட்டதிசம் | கையாந்தகரை | அதிகும்பை, ஆப்புளண்டம் |
| குறிஞ்சா | ஆவியம் | ஆனைவணங்கி | தேள்கொடுக்கி |
| குப்பைமேனி | அண்டகம் | | |

உலகிலே எல்லா வைத்தியத்துறைகளுள்ளும் இவ் வைத்தியமே புராதனமாகும். ஆதியிலே பரத்துவாசர் எனும் முனிவர், ஏனைய முனிவர்களையும், சித்தர்களையும் இமயமலைச்சாரலில் ஒன்றுகூடி ஆயுர்வேதத்தை உபதேசித்தார். அந்த வகையில் அகத்திய முனிவரும் பல சித்தர்களும் தமிழ்மொழியில் வைத்திய சாஸ்திரத்தை எழுதினார்கள். இதனால்தான் இது சித்த வைத்தியம் எனப்பெயர் பெறலாயிற்று. இவைகள் வாகடம், ஏடுகள் போன்றவற்றிலேயே எழுதப்பட்டதாகும். சித்த வைத்தியம் தென்னாட்டிலிருந்தே கொண்டுவரப்பட்டது.

சித்த வைத்தியமான நாட்டு வைத்தியமானது பல பிரிவுகளாகக் கூறப்படுகிறது. கண் வைத்தியம், கட்டு வைத்தியம், முறிவு வைத்தியம், சிறுபிள்ளை வைத்தியம், பொது வைத்தியம் எனப்பலவகை. வைத்திய வாகடங்கள் இலேசாக எழுதிப் படிக்க முடியாததாகவிருந்ததால், பரம்பரையினர் மட்டுமே அதனைக் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இவர்களைத்தான் பரம்பரை வைத்தியர்கள் என்று சொல்வார்கள். ஆதியில் ரிஷிகளும், சித்தர்களும் நோய்களை நிவர்த்தி செய்வதற்காக உடம்பை பழுதுபடாமல் வைத்திருந்ததாகவும் தெரியவருகிறது. இவற்றுள் நாடிபார்த்தல் அவசியமாகிறது. இவை வாதமுதித்த நாடி, பித்தநாடி, ஐயநாடி, வாய்வு நாடி. பசமிகுந்தநாடி, பாம்பு கடித்த நாடி போன்றவையும் இவற்றுள் அடங்குகின்றன. மருந்து வகைகளுள் காயகல்ப முறைகள், கிரதம், சூரணம், எண்ணெய், லேகியம், செந்தூரம், பஸ்பம், மாத்திரை வகைகள், ஔடதம் போன்றவை அவற்றுள் முக்கியமானவை. இவை வைபாகம், செய்பாகம், புடபாகம், எரிபாகம் என நிர்ணயிக்கப்பட்டன. நோயாளிகளை எளிதில் உணரும் படியான நாடி சாஸ்திரமும் அறிந்து வைத்திய பண்டிதர்கள் அவ்வைத்தியத்தை மனிதர்களுக்கு செய்தார்கள். அதனால் அவர்களுக்கு நன்மதிப்பு இருந்தது.

தற்போது விஞ்ஞானம் மேலோங்கி மேல்நாட்டு நாகரிகம் மக்களிடையே பரவத்தொடங்கியதால் பரம்பரை வைத்தியப் பாரம்பரியம் படிப்படியாக அழிந்து போவது மனவருத்தத்துக்குரிய விடயமாகும். இவை அழிந்து போவதற்குக் காரணம் இதற்குரிய வைத்தியக் குறிப்புக்கள் பாக்கள் (செய்யுளில்) மூலம் இருந்தமையே எனலாம். இலக்கண அறிவு படைத்தவர்கள் சிலரே. ஏனெனில் அரைச்சீரடி பிரித்துக் காட்டாமலும், மெய் எழுத்துக்குப் புள்ளி இல்லாமலும் ஏடுகள் எழுதப்பட்டுள்ளதால், இவற்றைச் சுலபமாகக் கற்க முடியாதுள்ளது. "அங்காதிபாதம்" என்னும் நூலில், முறையாகக் கற்காதவர்கள் அரை குறையாக வைத்தியம் செய்வோரைப் பற்றி பின்வரும் பாடலில் பார்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சாஸ்திரம் அறிவிலார் சதுர்வித பண்டிதர்**
**வார்த்தையின் பலத்தினால் மருந்தை ஈன்றிடில்**
**கோத்திரம் கிளைகளொடு குலங்கள் வேரற**
**வீழ்ந்திட நரகினில் வீழ்வது திண்ணமே"**

எனவே, வைத்தியர்கள் முழுமையாக கற்ற பின்பே வைத்தியம் செய்தல் வேண்டும்.

*சில மூலிகைகளின் பயன்களைப் பார்ப்போம்:*

| | |
|---|---|
| **கீழ்காய் நெல்லி** | **இலை - மஞ்சட்காய்ச்சல், மேகப்புண், மஞ்சட்காமாளை** |
| **ஆடாதோடை** | **இலை - ஆஸ்மா, இருமல், வயிற்று நோய், வாதம்** |
| **கரிசலாங்கண்ணி** | **இலை - கண்நோய், குன்மம், புத்தி தெளிவு** |
| **ஆவாரம்பூ** | **பூ, பிசின், பட்டை - சவ்வு வெடிப்புக்கு** |

சில மூலிகைகள் பள்ளவெளி, கடற்கரையோரம், முனையூர், தாண்டியடி, ஊரக்கை போன்ற அண்மித்த இடங்களில் பெறக் கூடியதாகவிருக்கின்றன. பிரமி, காஞ்சோண்டி, துளசி, நன்னாரி போன்றவை பள்ளவெளியிலும், வீழி, அவுரி, இசங்க, கச்சக்குமட்டி போன்றவை கடற்கரையோரங்களிலும், மருக்காலை, சீந்தில், விஷ்ணுகிராந்தி, இரிவேலி, கள்ளி வகைகள், கருக்குவாச்சி போன்றவை தாண்டியடியிலும் பெறக்கூடியதாகவுள்ளது.
சில சரக்கு வகைகள், காய், மீன்வகைகளின் மகத்துவமும் இதில் அடங்குவதைக் காணலாம்.

சீரகத்தின் குணம்:

**வாந்தி யரக குன்மம் வாய்நோய் பீலிகமிரைப்**
**பேந்திருமல்கல்லடைப்பு லாஞ்சனமுட் - சேர்ந்த கம்ம**
**லாஞ்சன குடரியெனு மந்தக் கிரகணியும்**
**போஜன குடாரி யுண்ணப் போம்**



திருக்கை மீன் பயன்:

**வாதமொடு தாதுவும் வளர்ந்துள்ளே சேருமென்று**
**மோது பித்தஞ் சோபமிவை யோடுமென்றுஞ் கீதச்**
**செருக்கை யடைவாரைத் திருத்துமொழி மாதே**
**திருக்கைமீ னுண்பார்க்குச் செப்பு**



பூசணி வித்து:

**பித்தம்போ மேகம்போம் பேராவலும் போம்**
**மெத்த வுடலங்குளிரு மேனியிடு - பித்தலத்து**
**னாசினியொன் றில்லா வலர்ந்த வசனத் தனமே**
**பூசணி வித்தைத் தின்னும் போது**

இப்பிரதேசத்தில் பரம்பரை வைத்தியர்களில் தற்போது தாமோதரம் வைத்தியர் பரம்பரையில் சித்த வைத்தியமும், வைத்தியரோகமும் செய்து வருவதில் சிவமணி தாமோதரம் செல்லத்துரை என்பவரையும் இளையதம்பி வைத்தியர் பரம்பரையில் வீரசிங்கம் அவர்களையும் குறிப்பிடலாம்.

தற்போது எமது அரசாங்கமும் சுதேச வைத்தியத்துறைக்கென ஒரு அமைச்சை அமைத்து வைத்தியர்களை மதிப்பதோடு இத்துறை வளருவதற்கு ஊக்கமளித்து வருவதும் இதன் மகத்துவத்துக்கு சான்றாகும்.

இவ்வாறான நாட்டு வைத்தியம் மீண்டும் எமது பிரதேசத்தில் வளரவும் வைத்தியர்கள் உருவாகவும் காடுகளை அழிக்காது மூலிகைகளை வளரக்க இன்றுள்ளோர் முன்வர வேண்டும்.

**தயானந்தம் சசிரூபன்**
கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் விரும்பும் ஒரு நூல்

# திருக்குறள்

இறவாத புகழுடையனவும் மக்கள் வாழ்வை உயர்த்துவனவுமான பெருநூல்களை உலகிற்கு ஆக்கித்தந்து, அதன் மூலம் என்றும் வாழுந்திறன் பெற்றுவிட்ட புலவர் பெருமக்கள் மிகச் சிலரேயாவர். அவர்களே, உலக மகா கவிஞர்கள் என்னுஞ் சிறப்புப் பெறத்தக்கவர்கள். அவர்களுள் ஒருவர் திருவள்ளுவர் என்பது உலகனைத்தும் ஒப்புக் கொண்டதோருண்மை. அவர் தமிழர். தமிழ் நாட்டிற் பிறந்தவர். அவரியற்றிய நூல் திருக்குறள். அது உலகிலே வளம் பெற்று மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதனால் உலகனைத்தும் குறளொலி கேட்கிறது. உலக மக்கள் குறள் கூறும் அறங்களைப் பற்றிச் சிந்தனை செய்கின்றனர். இந்த உண்மையை அமரகவி பாரதியார், "வள்ளுவன் தன்னையுலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனக் கருத்துச் செறிவோடு பாடியிருக்கிறார். இந்த உண்மையைக் கொண்ட திருக்குறள், தமிழ் நூல்களில் இலக்கியத்திற் பெற்றுள்ள தகுதியையும் கணித்தல் முடியும்.

இதனால் தமிழ் அன்னையை அழகுபடுத்தும் எல்லா இலக்கிய அணிகளிலும் தலை சிறந்த கவின்மணியாய் விளங்குவது திருக்குறள். திருக்குறளாசிரியரான திருவள்ளுவர் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் பலவுளவேனும், அவை வரலாற்று நெறிக்குட்பட்டனவாகத் தோன்றவில்லை. அவை பகுத்தறிவுக்குப் பொருந்தாதனவாய், மனம் போன போக்கிற் புனையப்பட்டு உலவுகின்றன. அவரது பிறப்பு, வளர்ப்புப் பற்றியும் குலம் பற்றியும், சமயநெறி பற்றியும் பலவாதப் பிரதி வாதங்கள் இன்றும் நடைபெறுகின்றன. இவைகள் மூலம் திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு பற்றி உண்மைத் தகவல்களை அறிய முடியவில்லை.

அவரது பிறப்பு, வளர்ப்பு, குலம், மதம் என்பன எவையாயினும், அவர் தமிழ் நாட்டவரென்பதும், தமிழரென்பதும் அவராக்கித்தந்த அரும்பெரும் நூல் திருக்குறள் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள், உண்மை வரலாறுகளைப் போற்றிப் பாதுகாக்குந் திறனற்ற தமிழ்நாடு, கற்பனைக் கதைகள் சோடிப்பதிலும் பார்க்க, இவ்வுண்மைகளை மனத்துட்கொள்ளலே அமைவுடைத்தாகும். எனவே, இன்று திருவள்ளுவரை உணரக்கூடிய ஒரேயொரு கருவி அவரியற்றிய திருக்குறளாகும். அதனாலேதான் 'திருக்குறளுக்குத் திருவள்ளுவர்' என்ற பெயர் வழங்குவதாயிற்று. உலகிலே தோன்றும் நூல்களனைத்தையும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தோன்றிய போதே மனத்தை மயக்கிப் பின்னர் தேடுவாரற்று அழிந்து விடுவன ஒரு வகையின, நூலெழக் காரணமான சந்தர்ப்பமும் தேவையும் உள்ளவரையும் உயிர் வாழத்தகையன இன்னோர் வகையின. மூன்றாம் வகையின் காலத்தை வெல்லுந் தகுதியுடையன சிரஞ்சீவி நூல்கள். அவை எக்காலத்தில் இயற்றப்பட்டனவாயினும், அக்காலத்துக்கு மாத்திரமன்றி முக்காலத்துக்கும் பயன்தருவன.

இவ்வகை நூல்கள் மிகச் சிலவே. அவற்றுளொன்று திருக்குறள். திருக்குறள் கருத்துக்கள், பொய்யில் புலவர்களான சான்றோர்களது நாவிலும், நூலிலும் மேற்கோள்களாகப் பெரிதும் பயின்று வந்துள்ளன, வருகின்றன. அவ்வாறு பயின்று வந்தமை, வருகின்றமை. திருக்குறளுக்கு உரியதோர் தனிச் சிறப்பாகும். உதாரணமாக, "தெய்வந்தொழாஅள்" என்ற குறள், மணிமேகலை, ஆசிரியரான சீத்தலைச் சாத்தனார் சதுக்கப் பூதத்தின் கூற்றாக, 'தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள். பெய்யெனப் பெய்யும் மழை" என்னும் பொய்யில் புலவன், பொருளுரை தேராய்' என்று எடுத்தாண்டுள்ளார். எனவே புலவர் பெருமக்களின் உள்ளங்கவர்ந்த உயர்ந்த நூல் திருக்குறள். சங்க நூல்களும் பிற்காலத்தெழுந்த காவியங்களும் பெரும்பாலும் தெய்வங்களையும், அரசர்களையும் அவர்கள் நடத்திய போர்களையும் பெருங்குடி மக்களையும் பற்றியே பேசிச் செல்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், திருக்குறள் நன்றுந் தீதுங் காட்டுதல் மூலம் கொள்ள வேண்டியனவற்றை வலியுறுத்தி, மக்கள் அறநெறியில் வாழ வழி காட்டுகிறது. அதனால், அது மக்கள் நூல், உலகப்பொதுநூல், உலகனைத்துக்கும் பொருந்தும் அறநூல், அதன் கண் மிளிரும் பலவகைப் பண்புகள் காரணமாக அதற்குப் பல சிறப்புப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. உண்மைகளேயன்றி, வேறெதனையும் கூறாவியல்பினாற் பொய்யா மொழியென்றும் அறம், பொருள், இன்பம் என்னுந் முத்திறைப் பகுப்புடைமையால் முப்பால் என்றும், மனிதனுக்கு நற்கதிகாட்டித் தெய்வீக நிலைக்குயர்த்தும் பண்புடைமையாலே தெய்வநூல் என்றும் அஃது அழைக்கப்படுகிறது. உலக இலக்கியச் சோலையிலே, மணம் மிக்க மலராக விளங்குந் திருக்குறள், முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. இம்மூன்று பிரிவுகளிலும் உயிரோட்டமாக ஒளிருங் கொள்கை உலகம் ஒரு குலமாதல் வேண்டுமென்பது. அக்கொள்கை உதயமாகுமிடம் காமத்துப்பால்.

உலக வாழ்க்கை ஆண், பெண் கூட்டுறவிலே முகிழ்த்துப்பின் விரிவடைந்து செல்கிறது. காதலரிரு கருத்தொருமித்து, ஆதரவுபடுதலிலே அரும்பித் தழைக்கிறது. அங்கே அன்பு தெய்வீகமான காதலாய்ப் பிறக்கிறது. அதுவே உலகம் ஒரு குலமாதல் வேண்டும் என்னுங் கொள்கை முளை கொள்ளுமிடம் இந்தக் காதல் நெறியை அகவாழ்வை தமிழ் என்னும் அன்பு நெறியை, காமத்துப்பால் பேசிச் செல்கிறது. அன்பிலே மலர்ந்த காதல் வாழ்வு, தம்மை மறந்து மற்றவருக்காக வாழும்போது தியாக வாழ்வாகிறது. நுண்ணிய உணர்ச்சித் துடிப்புக்களை விருந்தாக்கித் தருவது. அந்த ஒருவனும் ஒருத்தியும் கணவனும், மனைவியுமாகி இல்லறம் நடத்துகின்றனர். அங்கே மக்கள் சுற்றம் எனத்தொடர்பு பெருகி, அவர்களது உலகம் விரிவடைகிறது. கடமைகள் பெருகுகின்றன. செயல்கள் பரிணமிக்கின்றன. அவைகளுக்கு அடிப்படையாக அன்பு இருக்கிறது. "மனத்துக் கண்மாசிலனாதல்" ஆகிய பண்பிருக்கிறது. அந்தப் பண்பே அறங்களனைத்தினதும் தாயாகத் தோற்றமளிக்கிறது. இதனையே,

**"மனத்துக்கண் மாசிலனாதலனைத்தறன்**
**ஆகுல நீர பிற"** என்றும்,

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா வியன்றதறம்"** என்று அருளும் இன்னதென்பதையும், அதன் பண்புகளையுந் திருவள்ளுவர் தெளிவாக விளக்குகிறார். மனமாசின்மையாகிய பண்பிலிருந்து ஏனைய அறங்கள் வளரல் வேண்டும். அன்றேல் அவையெல்லாம் மரமாகிவிடும். மனமாசின்மையின்றும் விரிவடைந்த அறங்களுள் இல்லறத்தார்க்கு வேண்டியன இல்லறவியலிலும் துறவறத்தார்க்கு வேண்டியன துறவறவியலிலும் விளக்கப்படுகின்றன. இவையிரண்டு இயல்களுஞ் சேர்ந்து அறத்துப் பாலாகிறது. இல்லறத்தான் இன்ப வாழ்வு வாழ்வதற்கு நல்லாட்சி அமைப்பு வேண்டும். பொருளீட்டும் வழிகள் வேண்டும். ஈட்டிய பொருளை நெறியோடு துய்க்கத் தெரிதல் வேண்டும். இம்மூன்றும் பொருட்பாலிற் பேசப்படுகின்றன. நாட்டை வளமாக்கிக் குடிகளைப் போற்றிக் காக்கும் நல்லாட்சி முறை, அரசியல், அமைச்சியல் என்னும் இரு பகுதிகளிலும் அமைய, ஏனையன ஒழிபியலிலுங் கூறப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் உள்ள ஒவ்வோர் அதிகாரமும் ஒவ்வொரு பொருளைப்பற்றிப் பேசுகின்றன. விளக்கப்படும் பொருள். பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மனத்திற் பதியும் வண்ணம் உடன் பாட்டாலும் எதிர்மறையாலுங் கூறப்படுகிறது.

**"கண்ணுடைார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்"** எனக் கற்றார்,

கல்லாரியல்புகளை இருவகை வாய்ப்பாட்டாலும் விளக்குகிறார். சொற்செட்டுடன் கருத்தாழமுந் தெளிவும் நிறைந்து ஒவ்வொரு குறளும் அமைகிறது. கல்வியின் பயனைப் பற்றி அறிஞர்பலர், தத்தம் நூல்களில் விரித்து விளக்குவதை,

**"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அரெனின்"** என இரத்தினச் சுருக்கமாய் விளக்கி வைக்கிறார். உலகறிந்த உவமைகளைக் கொண்டு விளக்கு மாற்றல் பெற்ற கவிஞர் சிலரே. அச்சிலரில் வள்ளுவர் தலையானவர்.

**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு"**
**"தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்**
**நிலையி னிழிந்தக் கடை"**

இக்குறளின் பொருளை விளக்க வழக்கிலுள்ள உவமைகளைப் புலவர் கையாண்டுள்ளார். திருவள்ளுவர் உலகுக்கு விலைமதிப்பரிய மாணிக்கங்கள் நிறைந்த பேழையொன்றைத் தந்துள்ளார். அதுவே திருக்குறளாகும். அப்பேழை 133 அறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவையே ஒவ்வோர் அதிகாரத்திலுமுள்ள பத்துப் பத்துக் குறள்கள். அவற்றைக் கற்றுணர்ந்து பயன்கொள்வது உலகின் தலையாய கடமையாகும்.

'கடுகைத் துளைத்தேழ் கடலைப்புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்ற ஔவையாரின் கருத்துக்கிணங்க, உலக மக்கள் யாவரும் பெருமையாகப் போற்றப்படும் தலைசிறந்த நூலாகும்.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

கற்க வேண்டிய நூல்களை தெளிவாகக் கற்று, அந்நூல் நெறிப்படி வாழ வேண்டும்.



ஆகவே, உலகம் போற்றும் திருவள்ளுவர் தந்த தமிழ் மறையாம் திருக்குறள், உலகப் பொது மறையாகவும் விளங்குகிறது. இதனைக் கற்றுணர்ந்து நல்வழி நடப்போமாக.

*- நன்றி -*

**R. வினுஜா**
*திகோ/ தம்பட்டை மகா வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருகிவரும் பண்பாட்டுக் கலைகளுடன் அழிந்து கொண்டிருக்கும்

# நாட்டுக்கூத்து

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்" என்று சொல்லுமிடமெங்கும் பெருமை சாற்றிக் கொண்டிருக்கும் எம் தமிழரின் பண்பாட்டுப் பாரம் பரியத்தினை, வேற்று நாட்டவரும் திரும்பிப் பார்த்து வியக்க வைக்கும் எமது கலாசாரப் பண்புகளை அதன் அழகியல் கோலங்களை உறவுப் பிணைப்புகளின் உன்னதங்களை வளமான வாழ்வியல் சிந்தனைகளை அதன் வற்றாத ஊற்றுக்களைத் தம் வழித் தோன்றல்களுக்காய் வடித்து வைத்துள்ளது எமது கலைகளும் கலாசாரமுமாகும்.

அந்த வகையில் நோக்குங்கால் எம்முன்னோர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில் குரலெழுப்பியும், ஆடியும், பாடியும் வந்தது நாளடைவில் வழிவழியாக வந்த விற்பன்னர்களின் சிந்தனைத் திறனுக்கு ஏற்றவாறு ஒழுங்கமைக்கப்பட்ட தாளக்கட்டுக்களுடன் பாடல்களும் வாத்திய இசையும் சேர்த்து ஒரு வரலாறு சொல்லவும், தெளிவுபடுத்தவும், இக்கூத்துக் கலைவடிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என நாம் உணர முடிகின்றது. ஏன், இந்துக்களின் முழுமுதற் கடவுளான சிவனையே கூத்தன் என்றும் ஆடலரசன், ஆடல்வல்லான் என்றும் அழைப்பதுடன், அவரை தூக்கிய காலுடன் நர்த்தனம் செய்கின்ற சிலை வடிவிலேயே நாம் வணங்குவதும் இக்கூத்து எமது பண்டைய பெரும்கலை என்பதற்கு ஆதாரம் ஆகின்றது.

தமிழன் வாழும் இடமெல்லாம் அவன் கலையும் பண்பும் வாழும் என்பதற்கு இணங்க, எமது திருக்கோவில் பிரதேசமும் தமிழ்ப்பாரம்பரியத்தின் விளைநிலமாகவும், தமிழின் தொன்மையைத் தொனிக்கின்ற கலைகளுக்கும், காவியங்களுக்கும் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் இருந்து வந்துள்ளது என்பதை யாராலும் எளிதில் மறந்து விடமுடியாது. ஆறும், கடலும் அள்ளித்தரும் நிலவளமும் தெங்கும், கமுகும் தெவிட்டாத சோலைகளும் நிறைந்து நால்வகை நிலங்களையும் உள்ளடக்கி, உழைப்பே உயிர்மூச்சாய் உரங்கொண்ட மக்களாய் வாழ்ந்த எம் முன்னோர்கள் தமது ஓய்வுநேரப் பொழுது போக்கிற்காக, உழைத்துக் களைத்த உடம்பு வலியை மறக்கவும், உறவுகளுடன் குதூகலித்து மகிழவும், தம் பெருமைகளைப் பறைசாற்றவும் விழாக்களை, விளையாட்டுக்களை உருவாக்கியும், ஈடுபட்டும் வந்துள்ளனர் என்பது வெள்ளிடைமலை.

இப்பிரதேசம் சார்ந்த கிராமங்கள் தோறும் திறன்பெற்ற சான்றோர்கள் காலத்திற்கு காலம் உருவாகி கலைவளர்த்த சான்றின் தடயங்களைக் காணக்கூடியதாக இருந்த போதிலும், நாட்டுக்கூத்துக் கலை வளர்ச்சியில் தம்பிலுவில் கிராமமே பெரும் பங்காற்றியுள்ளதென அறியக்கூடியதாக உள்ளது.

பழம்பெரும் பாரம்பரியக் கலைவடிவங்களான கும்மி, கோலாட்டம், கரகம், காவடியாட்டம், கொம்பு விளையாட்டு, குரவைக்கும்மி, வசந்தன் கூத்து, நாட்டுக்கூத்து என்பன இப்பகுதியிலே இடம்பெற்று வந்ததையும், இந்நிகழ்வுகள் பெரும்பாலும் விவசாயத்தினை பிரதான தொழிலாகக் கொண்ட இம்மக்களின் பெரும்போக அறுவடையின் பின்னர் கிடைக்கும் ஓய்வு காலமான இளவேனில், முதுவேனில் காலங்களிலே நடைபெற்று வந்துள்ளது என்பதையும் அறிய முடிகின்றது. அதிலும் குறிப்பாக வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்களும், கோவிலில் குருக்கள்மாரும், ஒரு சில ஆசிரியர்களுமே இக்கலைகள் அழியாது, வழி வழியாகப் பயிற்றுவித்து வந்ததையும் உணரக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்டவற்றினுள் பெரும்பாலானவை அழிந்து அதன் அடையாளங்களோ, சுவடுகளோ தெரியாமல் போன நிலையில் நாட்டுக்கூத்துக்கலை மட்டும் இடையிடையே இப்பகுதியில் புத்துயிர் பெறுவதும், மீண்டும் சோர்ந்து மடிவதுமான நிலையில் இருந்து கொண்டு வந்ததை அவதானிக்க முடிகின்றது.

அந்த வகையில் இதனைப்பற்றி நாம் நோக்குவோமாயின், நாகரிக வளர்ச்சியில் அதிகம் பாதிக்கப்படாததும், படிப்புக் குறைந்தவர்களுமாக கிராம மக்களுக்கு இக்கூத்துக் கலைகள் மூலம் ஆடலுடன் பாடலும் சேர்த்து பார்ப்போரையும், கேட்போரையும் கவரும் வகையில் மத்தளம் சல்லரி முதலிய வாத்தியங்களின் துடிப்பான இசையுடன் நல்ல பல கருத்துக்களையும், நீதி நெறிகளையும் புராண இதிகாசக் கதைகள் மூலம் அறிவூட்டி வந்துள்ளனர். பின் மகிழ்ச்சியும், பொழுதுபோக்கும் மற்றும் சந்தோஷம் பெறவும் செய்துள்ளனர்.

கூத்துக்களில் பலவகை உண்டு என நாம் பழந்தமிழ் இலக்கியங்களில் அறிகின்றோம்.

அதாவது,

| | |
|---|---|
| **அகக்கூத்து** | **புறக்கூத்து** |
| **புகழ்க்கூத்து** | **வசைக்கூத்து** |
| **விநோதக்கூத்து** | **சாந்திக்கூத்து** |
| **இயல்புக்கூத்து** | **தேசியக்கூத்து** |
| **ஆரியக்கூத்து** | **தமிழ்க்கூத்து** |

எனப் பலவகை கூறப்பட்டிருந்தாலும், எமது பிரதேசத்தில் சிறப்பிடம் பெற்று வந்துள்ளது ஆரியம், தமிழ் என்கின்ற வடமோடி, தென்மோடி இரண்டு வகைகளுமாகும். அதாவது, மோடி என்பது வகை அல்லது விதம் என்கின்ற சொற்பதத்தினைக் குறிக்கின்றது. வடபகுதி ஆரியர்களின் வகையைச் சேர்ந்தது வடமோடி எனவும், தென்பகுதி தமிழர்களின் வகையைச் சேர்ந்தது தென்மோடி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் திருக்கோவில் பிரதேசத்தில் வடமோடி நாட்டுக்கூத்துக்கள் தான் பிரபலமாக ஆடப்பட்டு வந்துள்ளதாகத் தெரிகின்றது. தென்மோடி ஓரிரண்டு கூத்துக்கள் தான் ஆடப்பட்டதாகவும் அதுபற்றிய விபரங்களையும் அறிய முடியாதுள்ளது.

## வடமோடி

இந்த மரபுவழிக் கூத்திலே முதன்மை பெறுபவர் அண்ணாவியார். இவர் பல கூத்துக்கள் ஆடி அனுபவம் மிக்கவராகவும், நல்ல குரல்வளம் உடையவராகவும், பெண்பாத்திரங்களை அதிகம் ஏற்று நடித்தவராகவும், ஆடல்திறன் உடையவராகவும் இருப்பார். சல்லரி இசையினாலே அனைத்து ஆட்டத்திற்கான தாளவகைகளையும் பழக்குவார். அடுத்து மத்தள அடிகாரர் இவர் அண்ணாவியாரின் சல்லரி இசைக்கேற்ப நடிகர்களின் ஆட்டத்திற்கு மத்தளத்தில் அடித்து இசை வழங்குவார். நாட்டுக்கூத்தில் மிக முக்கியமான பங்கு இவருடையதாகும். மேலும் பிற்பாட்டுக்காரர்கள் இரண்டு பேரும், கொப்பி பார்ப்பவரும் இதில் முக்கிய இடம்பெறுவர். ஒரு கூத்தினைப் பழக்கத் தொடங்கும் முன்னர் அதனை பொறுப்பேற்று நடாத்தி முடிக்க முகாமையாளர் நியமிக்கப்படுவார். இவர்தான் சகல நடைமுறைகளுக்கும் பொறுப்பாக இருப்பார்.

முதலாவது கதை தெரிவுசெய்யப்பட்டு நடிகர் தேர்வு இடம்பெறும். பொருத்தமான பாத்திரங்கள் வழங்கப்பட்டு ஆட்டம் பழக்கப்படும். நன்கு தேர்ந்தபின் சலங்கை கட்டுவிழா இடம்பெறும் இதற்கு ஊர் பிரமுகர்கள், உறவினர்கள் வெற்றிலை வைத்து அழைக்கப்பட்டு பெருவிழாவாக இடம் பெறும். அன்று அண்ணாவியாரால் சலங்கை அணிவிக்கப்படும் நடிகர்கள் அவருக்கு தட்ஷணை வழங்குவர். இதனை "அடுக்குப்பார்த்தல்" எனக்குறிப்பிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் ஒரு விஷேட நாளில் அரங்கேற்றம் நிகழும் வட்ட வடிவமான கம்புகள், சிலாகைகள் கொண்டு 'களரி' அமைத்து, சீலையினால் வெள்ளை கட்டி அலங்கரித்து, அரங்கேற்றநாள் ஊருக்கே ஒரு திருவிழா போல் இருக்கும். மக்கள் வெள்ளமாக திரண்டிருப்பர். கடைகளும் வெளிச்சமும் வாண வேடிக்கைகளுமாக ஊரே உற்சாகமாகக் காணப்படும்.

அரங்கேற்றத்தின் போது பாத்திரங்களுக்கு ஏற்றவாறு ஒப்பனைக்காரர் அலங்காரம் செய்வார். இதனை 'மாத்துப் போடுதல்' என்பார்கள். ஆட்டம் முன்னிரவு ஏழு மணிக்கே ஆரம்பமாகிவிடும். களரியில் அண்ணாவியார், மத்தளக்காரர், பிற்பாட்டு இரண்டுபேர், கொப்பி பார்ப்பவர் என்று நடுவில் நிற்பர். முதலில் மத்தளத்தில் பதினெட்டு வகையான தாளங்கள் உள்ளடக்கிய களரி அடியை வாசிப்பர். அடுத்ததாக அண்ணாவியர் காப்பு விருத்தம் பாடி இறைவணக்கம் செய்ததும், களரி விருத்தம் பாடப்படும். பின்னர் கட்டியக்காரன் முதலில் தோன்றி கூத்தின் கதைச் சுருக்கம், வரவுப் பாத்திரத்தின் மகிமை, நாட்டு வளர்ப்பம் என்பவற்றைப் பாடி ஆடியவுடன் கதைக்கேற்றவாறு பாத்திரங்கள் தோன்றி ஆடுவார்கள். ஒவ்வொரு பாத்திரமும் தோன்றும் போது முதலில் 'விருத்தம்' பாடி தம்மை அறிமுகஞ்செய்து ஆட்டத்தைத் தொடங்குவார். பின்னர் எட்டு வகையான தாளக்கட்டுக்களுடன் ஆட்டம் இடம்பெறும். குறுக்காட்டம், வலம் சுற்றியாடுதல், இடம் சுற்றியாடுதல், எட்டுப் போடுதல், நாலடி ஆட்டம், மூன்றடி ஆட்டம், பொடியடி, பாய்ச்சலடி, ஒதுக்கடி என ஆட்ட வகைகள் நடைபெறும். இதைவிடவும் தேராட்டம், குதிரையாட்டம் என்பனவும் இடம்பெறும். ஆட்டத்தின் தொடக்கத்திலும், முடிவிலும் தாளத்தீர்வு இடம்பெறும். ("தகதிகதா திமிர்தக தெய், ததீந்தா திந்தா திந்தக தோம்")

பின்னர் விருத்தம், தருப்பாட்டு பாடி மேடையைச் சுற்றி சுழன்றாடி வருவார்கள். மத்தளமும் சல்லரியும், காற்சலங்கை ஒலியும், பாடல்களும் சேர்த்து பார்வையாளர்களை விறு விறுக்கச் செய்வதாக அமையும். ஆட்டத்தின் இடையிடையே நடிகர்களின் உறவினர்கள் அவர்கள் வரவின்போது வெடிக்கொழுத்தியும், வானவேடிக்கை செய்தும், மாலை போட்டும், சால்வை கட்டியும் மற்றும் சன்மானம் வழங்கியும் கௌரவிப்பார்கள்.

இப்படியே இரவு விடிய விடிய பன்னிரெண்டு மணித்தியாலங்களுக்கு மேல் கூத்து நடக்கும். கூத்து நிறைவுற்றதன் பின்னர், எல்லாரும் அண்ணாவியாரின் வீடு சென்று ஆடி அவரை கௌரவிப்பார்கள். அங்கு விருந்தும் இடம்பெறும். பின்னர் ஒவ்வொரு நடிகரின் வீட்டுக்கும் சென்று ஆடுவார்கள். அங்கு அவர்களுக்கு கண்ணூறு கழித்தல் சடங்கும் இடம்பெறும். இப்படியே இந்நிகழ்வு ஒரு வாரத்திற்கு மேல் இடம்பெறும். கிராமமே மத்தள வாத்திய ஒலியிலும், பாட்டுச் சத்தத்திலும் எதிரொலித்த வண்ணமிருக்கும்.

இவ்வாறு மக்களின் வாழ்வுடன் இக்கலையானது பின்னிப்பிணைந்ததால் அக்காலத்தில் அதில் சிறந்து விளங்கிய ஆட்ட நாயகர்களுக்கு அப்பாத்திரங்களின் பெயரும் சேர்ந்து நிலைத்து நிற்கக் காரணமாயிற்று. உதாரணமாக, சீதை சின்னத்தம்பி, லெப்பனர் சின்னத்தம்பி , இராமன், கந்தக்குட்டி, சகுனி சாமி, சாவித்திரி கோபாலப்பிள்ளை, இயமன் கந்தக்குட்டி என்று அழைக்கப்பட்டு உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பகுதியிலே வடமோடியில் பிரபலமாக இராம நாடகம், குசலவ நாடகம், காமதேனு பர்வதம், குருசேத்திரப் போர், வீரகுமாரன் நாடகம், நச்சுப் பொய்கை, சூதுதுயிலுரிதல், வாளபிமன் நாடகம், சத்தியவான் சாவித்திரி என்பன ஆடப்பட்டு வந்துள்ளன. கடைசியாக 1969இல் தான் இங்கு களரிக்கூத்து இடம்பெற்றது.

அதன்பின்னர் இங்கு மேடை நாகத்துறையில் ஏற்பட்ட ஆர்வம், கோயில் திருவிழாக்களில் வெளியூர்களிலிருந்து வருவிக்கப்பட்ட சின்ன மேளக் குழுவினரின் ஆடல்கள், சினிமாக் கொட்டகைகளின் வரவு, ஆதிக்கம் என்பவற்றால் மக்களின் ரசனையில் மாற்றம் ஏற்பட்டதுடன், கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, பொருளாதார மாற்றங்கள், என்பவற்றினால் ஏற்பட்ட சமூக மாற்றத்தின் நிலையில் இந்த மரபுவழி நாட்டுக்கூத்து மெல்ல மெல்ல மறையத் தொடங்கியதுடன், மேலும் முப்பது வருட யுத்த சூழ்நிலையில் தமிழ்ப் பாரம்பரியம் பற்றிய எண்ணக்கருவே அழிந்துவிட்ட நிலைக்குள் தள்ளப்பட்டதுடன் சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும் என்பதற்கு அடையாளமாக எமது வளதாரிகளின் பின்னடைவு நிலை, அழகியற்கலையாக பரதக் கலைக்கு கிடைத்த அங்கீகாரம், தொலைக்காட்சி, சினிமா அறிமுகம், அதன் ஈர்ப்பு அதன் தொடராக வீட்டுக்கு வீடு சின்னத்திரை நிகழ்ச்சிகள் என மக்களின் பொழுதுபோக்குத் துறையே மாற்றமடைந்து விட்டதனால் நாட்டுக்கூத்தைப் பற்றியும், அதற்குரிய அந்தஸ்தை வழங்கவும் எமது சமூகம் மறந்து விட்டதுடன் இந்த மரபு வழிக்கலைகளை ஏற்று நடிக்கவும் பின்வாங்கும் நிலையும் ஏற்பட்ட வேளையிலேதான் 1988க்குப் பின்னர் மீண்டும் மேடைக்கூத்தாக வடிவமைக்கப்பட்டு, மக்களின் இன்றைய ரசனைக்கும், நேரத்திற்கும் ஏற்றவாறு சுருக்கப்பட்டு கோயில் விழாக்கள், பாடசாலை மட்ட நிகழ்வுகள், என நாட்டுக்கூத்தின் வடிவமே இப்போதைய அண்ணாவிமாரின் எண்ணப்போக்கிற்கு ஏற்றவாறு பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற விதத்தில் மாற்றப்பட்டு பழக்கப்பட்டு வருகின்றது. அதுவும் குற்றுயிரும், குலையுயிருமாக அழிந்துவருவதும் கண்கூடு.

எமது முன்னோர்களால் உருவாக்கப்பட்டு, அவர்கள் உயிர்மூச்சோடு கலந்த இந்தப் பண்பாட்டுக் கலையின் நிலை இன்று முற்றாக அழியும் தருவாயில் உள்ளது. இது பற்றிய எந்தத் தகவலுமே இன்னும் ஒரு தசாப்தம் கடந்தால், எம்மால் அறியக்கூட முடியாமல் போய்விடும் பரிதாப நிலை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றது. எனவே இக்கலையைப் பாதுகாக்கவும், எமது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் சொல்லவும் நாம் என்ன முனைப்பைச் செய்தோம் என்பது கேள்விக்குறி. வெறும் மேடைகளில் இதனை அரங்கேற்றி ஞாபகமூட்டல் செய்வதனால் மட்டும் இவ்அருங்கலையைப் பாதுகாக்க முடியுமா? இல்லை இதற்கான சமூக அங்கீகாரம் கிடைப்பது மட்டுமல்ல, எமது நோக்கம் அழிந்து போன நிலையில் மீதமுள்ள எச்ச சொச்சங்களை தேடி வெளிக்கொணர்வதும் அவசியமாகின்றது. எமது பாரம்பரியத்தை, பண்பாட்டை, அருங்கலைகளை அழியாமல் காப்பது நம் ஒவ்வொருத்தரினதும கடமையாகும். ஆகவே, இதற்காக நாம் என்ன செய்யப்போகின்றோம்!

**திருமதி. சிவகாமிதேவி முருகமூர்த்தி**
*விநாயகபுரம்.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்கள்



2012-02-04 சுதந்திர தினத்தன்று பிரதேச செயலாளர்
திரு.பு.கோபாலரெத்தினம் அவர்களினால் பிரதேச செயலக
உத்தியோகத்தர்களுக்கு சீருடை அறிமுகப்படுத்தப்பட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்ற பழமொழியை ஒட்டகச்சிவிங்கியைப் பார்த்துத்தான் சொல்லி இருப்பார்களோ என்னவோ! காரணம், ஒட்டகச்சிவிங்கி மிகவும் சாதுவான மிருகம். மற்ற மிருகங்களுடன் எந்த வம்பு தும்புக்கும் போகாது. ஆனால், வீணாக வம்புக்கு வந்து சீண்டினால் அவ்வளவுதான் சிங்கமாக இருந்தாலும் பின்னங்காலால் உதைத்துத் தள்ளிவிடும்.

## லிங்கன் விரும்பிய இடம்

ஒரு ஞாயிற்றுக் கிழமை அந்த மாதா கோவிலில் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. ஆபிரகாம்லிங்கனும் பிரார்த்தனையில் கலந்து கொண்டான். பிரார்த்தனை முடிந்ததும் பாதிரியார் கேட்டார், "உங்களில் யார் யார் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறீர்கள்"? கிட்டத்தட்ட எல்லோரும் கை தூக்கினார்கள். "நரகத்துக்குப் போக யார் யார் ஆசைப்படுகிறீர்கள்" கையைத் தூக்குங்கள், நாலைந்து பேர் கையைத் தூக்கினார்கள். "நீங்கள் ஏன் நரகத்துக்குப் போக விரும்புகிறீர்கள்? எங்கள் நண்பர்கள் அங்கேதான் இருப்பார்கள். லிங்கன் மாத்திரம் கையைத் தூக்காமல் அமர்ந்திருப்பதை பாதிரியார் கவனித்தார். "நீ எங்கே போக விரும்புகிறாய்"? என்று அவரிடம் கேட்டார். லிங்கன் எழுந்து சொன்னார், "வெள்ளை மாளிகைக்குப் போக விரும்புகிறேன்" வெள்ளை மாளிகை அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் மாளிகை! லிங்கன் ஆசைப்பட்டது போலவே சில ஆண்டுகளில் ஜனாதிபதியாகி அவர் வெள்ளை மாளிகைக்குப் போனார்.

## கைவைத்தியம் - எலும்பு மெலிவு

பால் மூலம் நமக்கு நன்கு கிடைப்பது கல்சியம். இதை விடக் கூடுதலான கல்சியத்தை வெங்காயம் மூலம் எளிதில் பெறலாம். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் வெங்காயமும், தயிரும் நன்கு சேர்த்து வந்தால் குறிப்பாகப் பெண்கள் எலும்பு மெலிவு நோயிலிருந்தும், மாரடைப்பு அபாயத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்.

தொகுப்பு:<br>
**இரா. தேவராசா,**<br>
தம்பிலுவில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கள் பிரதேசம் அன்றும் – இன்றும்

எங்கள் பிரதேசம்.... இன்பத் திருக்கோவில்....!
தங்குதடையின்றித் தன்னிறைவு பெற்றுளது....!
தம்பட்டையிருந்து தாண்டியடி வரைக்கும்
நீண்டுவிரிந்துள்ளது.... நிகரில்லாப் பெரும்பரப்பு...!

எங்கும் வயல்கள்...., இடையிடையே பெருந் தோட்டம்....,
காடுகளில் தேன்வதைகள்..... கானகமே தேன் வாசம்....!

பாலருந்தப் பசுச்செல்வம்... தயிருக்குக் காரெருமை....!
விதம் விதமாம் கால்நடைகள்..... பட்டிகளோ ஏராளம்....!

காடெல்லாம் வெட்டிக்காயவிட்டுத் தீவைத்து
வேலிகொத்தாலமைத்துப் புதுச் சேனை என்றிடுவோம்...!

புதுப் பயிர்கள்.... சோளன்.... நிலக்கடலை.... வத்தாளை
விதம்விதமாய் நட்டு விவசாயம் மேற்கொள்வோம்!

பழஞ் சேனை என்றால்..... மரவள்ளி... பழமரங்கள்....
கானாந்தி.... முல்லை.... முசுட்டை.... படர்குறிஞ்சா....
அழகாகவே ஆய்ந்து ஒன்றாய் சமைத்துண்போம்....!
அரைத்தலைப்புக்கடையல் சுவை நரம்பை மகிழவைக்கும்....!

நாய் வேட்டைக்காக நாய்களை நாம் பழக்கி....!
நிதமும் மான் – மரைக்குப் பொறிவைத்துப்பிடித்திடுவோம்!
காவல் பரணில் கண் மூடாமல் விழித்திருந்து....
கற்சுனையைக் குறி பார்ப்போம் கட்டுத் துவக்கோடு....!
வெடி ஓசை கேட்டால்... தப்பாது... மான் உருளும்....!

இறைச்சிக்கும் பஞ்சமில்லை...., கொலை பாவம்... கொஞ்சமில்லை...!
வற்றுக்குளம் நாடிப் பன்னாட்டுப் பறவையினம்....,
வரிவரியாய்ப் பறந்து.... வானிருந்து கீழிறங்கும்....
பறப்பழகை ரசிப்போம்.... பிடித்தடித்து விருந்துண்போம்....!

களப்பு மீன்..., குளத்து மீன்..., ஆற்று மீன் வகைகளுடன்...
இறால் நண்டும் ஏராளம்....!
வயலோரக்குட்டையிலே.... குறட்டை...., வரால்.... பனையானும்
கொக்குச்சான்...., செல்வனுடன்....
செத்தல்...., கிலிந்தி...., ஓட்டி...., ஓராவுடன்....
திரளியும் சேர்ந்து வந்து....,
மிளகு தண்ணி ஆகிவிடும்....!
உழுவை மீன் மட்டும் சுண்டலுக்குச்சுவை யூட்டும்....!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்புக் குத்தும் மீனவரும்..., அத்தாங்கில் வடிப்பவரும்....,
கப்புக்கம்பால் ஆற்று நண்டைக் கச்சிதமாய் பிடிப்பவரும்....,
தொம்பலுக்குள் கைபுதைத்து மட்டுறால் கட்டுவாரும்....,
தூண்டியிலே மண்புழுவைக்குத்தி மீன் இழுப்பவரும்....,
கண்கொள்ளாக் காட்சி இது....!
மீனவர்கள் வாழ்க்கை இது....!!

பெருந் தோட்டப் பணப் பயிராம்
தென்னை களின் சோலை....,
வாருதியின் அருகிருந்து வீணை ஒலி.... சலசலக்கும்....!

ஆன்மீகப் பசி தீர்க்கும் அருள் சொரியும் ஆலயங்கள்....,
மன்னர் பலர் செப்பனிட்ட மாண்புத் திருத்தலங்கள்...!

அம்மானை வசந்தனுடன்... வடமோடி.... தென்மோடி....
இதிகாச நாடகங்கள் இயக்குபவர் நிறைந்திருந்தார்...!
நாட்டுப் புறக் கலையின் விற்பன்னர்கள் பலர் சேர்ந்து
நாடகமும் – கூத்தும் நடத்திவந்த பிரதேசம்....!

பழங்கால வாழ்வின் சுவை நெஞ்சில் ஊர்கிறது....,
போல் மறைந்த அந்நாட்கள்....
புலம்பிடினும் திரும்பாது....!

ஏர் கொண்டு உழுதவயல்... இயந்திரங்கள் உழுகிறது....,
இயற்கை உரம் செயற்கை ஆனதனால் புது நோய்கள்....!
ஓர் போக வயல் நிலங்கள் இருபோகம் ஆயிற்று....,
நீர்த் தேக்கம் சீர்திருத்தம் பெற்றபலன் இதுவன்றோ...,

குடி சனப் பெருக்கம்போல் வயல் நிலங்கள் பெருகவில்லை...!
குடியிருப்பாய் விளைநிலங்கள் மாறிற்று ஓர் புறத்தில்...!
பள்ளிப்படிப்பின்று கட்டாய மாயிற்று....,
கல்விச் சிறப்பதனை பலரும் உணர்கிறார்....!

தகவல் தொழில் நுட்பம்... தரணியே கைகளுக்குள்...,
முகம் பார்த்துக் கதைக்கின்றோம் முகவரி தெரியாமல்...!
கணனிகளின் செயற்பாட்டால் கரைகடந்த மாற்றங்கள்...,
மனவேகம் போல் தகவல் மிதந்து வரும் சில நொடிக்குள்...!

விழிப்புணர்வடைந்த மக்கள்...,
வினோதமாம் புதிய வாழ்வில்...,
களிப்புடன் வாழ்வதோடு திருத்தமாய் வாழவேண்டும்...!

**இரா. தெய்வராஜன்,**
*திருக்கோவில்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணையமும் கிராமத்தின் வளர்ச்சியும்

இணையம் என்பது உலகளாவிய ரீதியில் பல தகவல்களைக் கொண்டு ஒன்றோடு ஒன்று இணைந்த பலகணனிகளாகும். உங்களுக்கு இணையம் குறித்து பிரவேசம் இருப்பின், உங்களுடைய கணனியிடம் இருந்தே வாசிக்கவும், கேட்கவும், பார்க்கவும் மற்றும் அனைத்துத் தகவல்களையும் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும்.

வெப் பேஜ் (Web Page) என்றழைக்கப்படுகின்றபக்கங்களை ஒவ்வொருவரும் தனது கணனியிலே வாசிக்கக் கூடியவாறு தகவல் அடங்கிய பக்கங்கள் காணப்படுகின்றன. பல பக்கங்கள் ஒரு புத்தகத்தை ஆக்கக்கூடிய பக்கங்களைப் போன்றதாகும். இதனால் தான் சிலர் இணையத்தை உலகத்தின் பெரிய வாசகசாலை என்று கூறுகின்றார்கள். ஆனால், இந்த உலக வாசகசாலை ஆனது ஏனைய சாதாரண வாசக சாலைகளைப்போல் அல்ல. ஏனெனில் அங்கு உங்களுக்குத் தேவையான உரைகள், சத்தம் (Audio), படங்கள் (Photos) வீடியோக்கள் (Videos), கடைகள் (Shops) போன்றவையும் கிடைக்கும்.

அனேகமான மக்கள் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், விநியோகம் Shopping செய்வதற்கும், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும் இணையத்தையே பயன்படுத்துகின்றனர். ஆய்வுகளின் படி பல்லாயிரக்கணக்கான மக்கள் தொலைக்காட்சி பார்ப்பதற்கும் இணையத்தையே பயன்படுத்துகின்றனர்.

**இணையத்தின் உலக வரலாறு**

*1957*இல் USSR "Sputnik" என்ற செயற்கை கோள் அனுப்பி வெற்றி கொண்டபின் இது முதன் முதலாக ஒரு இராணுவ ஆராய்ச்சி மையத்தை ஆரம்பித்தனர் (ARPANET). இந்த அமைப்பானது இராணுவ ஆய்வின் ஓர் அங்கமாக 1962 - 1967க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பமே இணையத் தொழில்நுட்பமாகும். இந்தக் கண்டுபிடிப்பினால் தகவல் தொழில்நுட்பமானது பெரும் புரட்சியை மட்டுமல்லாது, தனிமனித வாழ்விலேயே ஒரு மிகப்பெரிய மாற்றத்துக்குள் ஆக்கிரமித்துக் கொண்டது. இணையம் பல பரிமாணங்களில் பரிணாமம் அடைந்து வரலாற்றை பல நூறு பக்கங்களில் சொல்லும் அளவிற்கு அதன் சாதனைகள் விரிந்துள்ளது, இருந்த போதிலும், இந்தத் தகவல் தொழில்நுட்பத்தின் எதிர்கால வளர்ச்சியும், இதுவரை காலமும் கடந்து வந்த பாதையை மிகச் சுருக்கமாக ஆண்டுரீதியாக குறிப்பிடத்தக்க சில வரலாற்று நிகழ்வுகளுடன் கீழே பார்ப்போம்.

1969இல் இரு கணனிகளுக்கிடையில் "LOG IN" என்றசொல்லே முதலில் அனுப்பிப் பரீட்சிக்கப்பட்ட செய்தியாகும். முதலில் 23 இணைப்புக்கள் மூலமாக மிகப்பிரபல்யமான பல்கலைக்கழகங்களை இணைத்தனர் ARPANET ஆனது DARPA எனபெயர் மாற்றம் செய்ததோடு இணையம் பற்றிய பலரது கருதுகோள்கள் உயிரூட்டம் பெற்று இணையத் தொடர்புகளுக்கான நியமக் கடைப்பிடிப்புக்கள் உருப்பெற்றன (TCP/IP).

1976இல் முதலாவது மின் அஞ்சல் (E.mail) பிரித்தானிய மகாராணியினால் அனுப்பப்பட்டது.

1982இல் முதன் முதலாக "Internet" சொற் பிரயோகம் பிறந்ததுடன், டொட்(.) என்ற குறியீடு இணைக்கப்பட்டது.

1984இல் இணையத்தின் பெயர் பதிவு முறை (DNS) அறிமுகம்.

1986இல் Net அறிமுகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988இல் இணைய சந்திப்பு (CHAT) உருப்பெற்றதோடு, கணனிகளில் இணையவழி வைரஸ் தாக்கமுடன் 60000 இணைப்புக்களைத் தாண்டியது.

1990இல் பேசும் இணைய மொழியும் (HTML) வெளியிடப்பட்டதோடு www. ம் நிறுவினர்.

1991இல் சர்வதேச வலைப்பின்னல் குறியீடு "www" நடைமுறைக்கு வந்த ஆண்டாகும்.

1993இல் இணையவானொலி இணையத்தின் பேசும்மொழி பரிமாற்றம் (Http) அறிமுகமாகியது.

1995இல் புகழ்பெற்ற இணைய இயங்கி "Internet explorer" 'Mozilla' வருகையைத் தொடர்ந்து, இணையம் மிகமிக வேகமாக முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

இணையமானது ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு முக்கியமான பங்களிப்பினை வழங்கமுடியும். தொழிலாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் அவர்களின் தொழில் முயற்சியினை மேற்கொள்வதற்கும், மேம்படுத்துவதற்கும் பரந்துபட்ட பிரதேசங்களுக்கு சந்தைவாய்ப்புக்களையும் சந்தைப்படுத்தல்களையும் இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வியாபார செயற்பாடுகள், உற்பத்திகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளையும் உலகில் இணையப் பாவனையின் ஊடாக அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் செயற்படுத்த முடியும் அத்தோடு விவசாயம் சம்மந்தமான உடனுக்குடன் அறிமுகமாகும் புதிய வகையான பயிரினங்கள், அவற்றின் பயன்பாடுகள், விளைவின் அளவு, பீடைத்தாக்கங்கள் அவற்றினைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தக் கூடிய தொழிநுட்பங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்கள், குழந்தைகள் மற்றும் கல்வி பயில்பவர்களும் இணையத்தின் மூலமாக பரந்தளவிலான பயன்பாட்டினைப்பெற முடியும். பாடசாலை மாணவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்குரிய பாடவிதான செயற்பாடுகள், அவற்றுக்கான விளக்கங்கள், மாதிரி வினா விடைகள், கடந்தகால வினாவிடைகள் பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒப்படைகள் மற்றும் வீடியோ வடிவிலான விளக்கங்கள் போன்ற கல்வி சம்பந்தமான ஏராளமான சிறந்த விடயங்களைப் பெற்றுக் கொள்ளலாம் (கணனி, ஆங்கிலம், வியாபாரம், முகாமைத்துவம்) மற்றும் நேரடியான (Online) பயிற்சிகளை வீட்டிலிருந்தவாறே (Certificate, Diploma) சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் குழந்தைகளுக்குத் தேவையான கல்வியினை வழங்குவதற்கு அவர்களுக்கு ஏற்றவகையில் சிறிய சிறிய கதைகள், சிறந்த பேச்சுப் பயிற்சிகள், மொழியறிவுப் பயிற்சி போன்ற பயிற்சிகளையும், கார்டூண் வடிவில் அமைக்கப்பட்ட கதைகளையும் ஏராளமான இணையத்தளங்கள் வழங்குகின்றன. இதனை பெற்று எமது குழந்தைகளுக்கு வழங்கும் போது, எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளை எமது பிரதேசத்திற்கு வழங்கமுடியும்.

இவ்வாறாக செய்திகள், தகவல் பரிமாற்றங்களுக்கு இணையமானது மிகவும் ஒரு சிறந்த பயனைத்தருகின்றது. பத்திரிகைச் செய்திகள், சஞ்சிகைகள், நாளிதழ்கள் போன்றவை உடனுக்குடன் இணையத்தில் பிரசுரிக்கப்படுவதால் நாளாந்த விடயங்களை வீட்டில் இருந்தவாறே பார்த்துக்கொள்ளமுடியும்.

அரசாங்க அறிவித்தல்கள், வர்த்தமானிகள், அனர்த்த முன்னறிவிப்புக்கள் ஆகியவற்றை கிராம மக்கள் உடனடியாக அறிந்து கொள்ளமுடியும். எமது பிரதேசத்தில் நாளாந்தம் நடைபெறுகின்ற முக்கியமான அனைத்து விடயங்களையும் www.thambiluvil.info என்னும் இணையத்தள முகவரியூடாக பார்வையிடலாம். மேலும், எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற ஆலயங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் போன்றவற்றிற்கு வலைப்பூக்கள் (Blogs) நிறுவப்பட்டுக் காணப்படுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வலைப்பூக்களை நாம் இணையத்தில் இலவசமாகவும் பெற்றுக் கொள்ளமுடியும். இணையத்தின் ஊடாக உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு வெற்றிடங்களை அறிந்து, அதற்கு விண்ணப்பிப்பதன் மூலம் தமக்குத் தேவையான வேலைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். மற்றும் Online மூலமான வேலைவாய்ப்புக்களை வழங்கும் இணையத்தளங்களும் காணப்படுகின்றன, அதில் பதிவுசெய்து, வீட்டில் இருந்தவாறே வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இணையத்தின் மூலம் புலம்பெயர் மக்களுடன், நண்பர்களுடன், உறவினர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளலாம் இதற்காக இணையத்தில் பல சமூக வலைத்தளங்கள் காணப்படுகின்றன. மற்றும் Audio, Video தொடர்பாடல்களையும் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் வெளிநாட்டில் உள்ளவர்கள், மிக அருகில் இருந்து உரையாடுவது போல் உரையாடல்களை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு இணையத்தில் பல நன்மையான விடயங்கள் காணப்பட்டாலும், அதே போல் தீமையான பல விடயங்களும் காணப்படுகின்றன. தீமையான விடயங்களை விட்டு விட்டு, எமக்கு நன்மை தரக்கூடிய சிறந்த விடயங்களைப் பெறுவதின் ஊடாக நாம் எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு முழுமையான ஒரு பங்களிப்பினை வழங்க முடியும்.

இனிவரும் காலங்களில் நகரப்பிரதேசங்கள் மட்டுமன்றி, கிராமப் பகுதிகளுக்கும் இணையத்தின் தேவையானது மிகவும் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. தற்பொழுது உலகையே நமது உள்ளங்கையில் கொண்டுவரும் அளவுக்கு இணையத்தின் அதீதவளர்ச்சி காணப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் இன்னும் எத்தனையோ புரட்சிகளை ஏற்படுத்தப்போகும் என்பதைத் தற்பொழுது நாம் ஊகிக்கக் கூடியதாக உள்ளது.

**இணையத்தில் பயன்படுத்தப்படும் சில சொற்பிரயோகங்கள்.**


01. URL - (Unifrom Resource Locator)
02. WWW. (World Wide Web)
03. HTTP - (Hypert Text Transfer Protocol)
04. .com - Commercial
05. .org - Organization
06. .gov - Government
07. .mil - Military
08. .net - Network
09. .int - International

**தேடுபொறி (Search Engine)**

01. Google.com
02. Yahoo.com
03. bing.com
04. Ask.com

**Net Browser**

01. google.chrome
02. firefox
03. internet explora
04. safari



**பொ. கமலேஸ்வரன்**

*தம்பிலுவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேச பேச்சு வழக்கில் உறவு முறைச் சொற்கள்

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள இருபத்திரண்டு கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ள திருக்கோவில் பிரதேசம் தமிழ்மக்கள் செறிந்து வாழும் பூர்வீகமான பிரதேசமாகும். காஞ்சுரங்குடாவில் வாழ்கின்ற குறவர்கள் தவிர்ந்த ஏனையோர் தமிழை தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். மொழி என்பது ஒரு இனத்தின் தொடர்பாடலுக்கான ஊடகங்களில் முதன்மையானது. அந்தவகையில் பிரதேசரீதியில் பயன் படுத்தப்படும் பேச்சு மொழியும் அனைவருக்கும் பொதுவான எழுத்து மொழியும் கருத்துப்பரிமாற்றங்களை இலகுவாக்குகின்றன.

குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களிடையே பயின்று வந்து அருகிவிட்டதும் எதிர்காலத்தில் நாகரிகம் எனும் போர்வையால் மறைந்து விடுமோ எனும் நிலையிலும் பேச்சு மொழிகள் வழக்கொழிந்து செல்கின்றன. எமது முதுமக்களினால் அன்பும், பண்பும் நிறைந்து மண்ணின் மணம் கமழப் பேசப்பட்ட கொஞ்சும் தமிழின் இனிமையும் எளிமையும் எம் மனங்களில் நீங்காமல் நிறைந்திருக்க வேண்டும் என்பதும் என் அவா. ஒரு இனத்தின் தனித்துவமானதும் இயல்பாகவே வளர்ந்து வருவதுமான பேச்சு மொழிகள் அருகிச் செல்லும் போது எதிர்காலத்தில் அச்சொற்கள் எந்த அர்த்தத்தில் கையாளப்பட்டதென்பதை புதிய தலைமுறையினர் அறிந்திருக்க வேண்டும் என்பதனால் இக்கட்டுரையினூடாக அவற்றிற்கு உயிர்ப்பூட்ட முனைகின்றேன்.

தமிழ்மொழி பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் நுஃமான் அவர்கள் பேச்சு மொழிக்கு தனித்துவமான இடத்தை வழங்கியிருப்பது இயற்கையுடன் வாழ்ந்த மனிதனின் இயல்பான மொழிப்பிரயோகத்திலிருந்தே எழுத்து மொழியும் இலக்கணமும் வகுக்கப்பட்டது என்பதனை புலப்படுத்துவதாகும்.

திருக்கோவில் பிரதேசத்து மக்களின் பேச்சு வழக்கில் இடம் பெறும் உறவுமுறைச் சொற்களை மட்டுமே எடுத்தாண்டுள்ள இக்கட்டுரையில் குறிப்பாக உறவு என்பதில் இடம் பெறக்கூடிய குடும்பம், சமுதாயம் என்பவற்றை உள்ளடக்கிய வம்சத்து உறவுகள் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதனை மேல்வரும் சொற்கள் சொற்றொடர்கள் குறிப்பிடுகின்றன.

**குடும்பத்து உறவுமுறைச் சொற்பிரயோகங்கள்**

1. *தாய்:-* அம்மா, அம்மை, தாயே, தாயி, அம்மண்டி, கொம்மை, கொம்மா
2. *தந்தை:-* அப்பா, அப்பு, ஐயா, அப்பன், அப்பர், ஐயன், கொப்பர், கொப்பன், தகப்பன்
3. *தமையன்:-* அண்ணா, அண்ணாச்சி, அண்ணே, அண்ணர், மூத்தவன், பெரியவன், பெரியமகன், பெரியபொடியன், பெரியான், மூத்தான், அண்ணை, பள்ளி அண்ணா
4. *தமக்கை:-* அக்கா, அக்காச்சி, அக்கை, அக்காள், மூத்தவள், பெரியவள், பெரியமகள், பெரியபொடிச்சி, பெரியபுள்ளை
5. *தம்பி:-* இளையவன், சின்னவன், சின்னான், இளையபொடியன், சின்னப்பொடியன், இளையான், குஞ்சான்.
6. *தங்கை:-* தங்கச்சி, இளையவள், சின்னாள், சின்னவள், சின்னப்பொடிச்சி, இளையபொடிச்சி, சின்னி, சின்னமகள், இளையாள், குஞ்சி, தங்கச்சான், தங்காள், இளையபுள்ளை, சின்னப்புள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரயோக வழக்குகள் சில**

'புள்ள **அம்மா** எங்ககா?

'என்ட **அம்மண்டி** எவ்வளவு நாள் உன்னக் கண்டு'

'மகள் **கொம்மைய** நிக்கச் சொல்லு வாறன்'

'என்ட **தாயே**! என்னம்மா இப்படி வளஞ்சு போனாய்'

'தம்பீ **கொப்பனுக்கு** எங்கடா, வேலை' **'அப்பர்** அக்கரப்பத்து ஆஸ்பத்திரியில கங்காணியா இருக்கார்.

என்ட **அண்ணே**! எத்தன நாளாச்சு உன்னக் கண்டு'

'மகள் **மூத்தவன** வயலுக்கு வக்கடை கட்ட போகச் சொல்லு'

'புள்ள **பெரிய பொடியன்** சாப்பிட்டுட்டானோ?

'எங்கட அக்கைக்கு **மூத்தவன்** பொடியன், **இளையவள்** பொம்பிளப் பிள்ளை'

கேட்டியோ! **சின்னப்பொடியன்ட** நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கல்ல சொல்லிப் போட்டன்.

'பெரியமகள் **சின்னப்பொடிச்சி** பள்ளிக்கு போயிற்றாளோ? 'ஓம் அப்பா **சின்னி** இன்டைக்கு நேரத்துக்கு கிளம்பிற்று'

**தாய் தகப்பன்** காட்டுற வழியத்தானே புள்ளைகுட்டிகள் செய்யும்.

**அக்காச்சிர** புள்ளைய **அண்ணர்ர** மகன்தான் முடிக்கப்போறான்.

எங்கடி **தங்கச்சான்** உன்ன ஊட்டுப்பக்கம் காணல்ல எங்ககா அக்கே வெளிக்கிறங்க நேரமில்ல'

'வாடி **தங்காள்** அண்ணன்ட மச்சாளப் பாத்துட்டு வருவம்'

**வம்சத்து உறவு முறைப் பிரயோகங்கள்:**

*தாயின் தாய்:-* அம்மம்மா, ஆச்சி, பாட்டி, ஆத்தா, அம்மாச்சம்மா, அம்மாச்சம்மை, ஆச்சம்மா

*தந்தையின் தாய்:-* அப்பம்மா, அப்பாச்சி, ஆத்தா, சித்தாச்சி, அத்தையம்மா

அம்மாவின் அம்மம்மா + அப்பாவின் அம்மம்மா + அப்பாவின் அப்பம்மா + அம்மாவின் அப்பம்மா:

பெத்தா, பெத்தாச்சி, பெத்தம்மா, மூத்தாச்சி, பெரியாச்சி, மூத்தம்மா, மூத்தம்மை, பெரியாத்தா, மற்றம்மா.

*தாயின் தந்தை:-* அம்மப்பா, அப்பச்சி, தாத்தா, ஆச்சப்பா

*தந்தையின் தந்தை:-* அப்பப்பா, அப்புச்சி, அப்பச்சி, தாத்தா, பெரியப்பு, பெரியய்யா

அம்மாவின் அப்பப்பா + அப்பாவின் அப்பப்பா:- மூத்தப்பா, பெத்தப்பா, பெத்தப்பு

தாயின் உடன்பிறந்த ஒன்றுவிட்ட ஆண் சகோதரர்களும் தந்தையின் சகோதரிகளின் கணவன்மாரும்: மாமா, பெரியமாமா, பெரியம்மாச்சி, அம்மாச்சி, மூத்தமாமா, சின்னம்மாச்சி, சின்னமாமா, ஆசைமாமா, ஆசையம்மாச்சி, குஞ்சிமாமா, குஞ்சம்மாச்சி, பள்ளிமாமா, பள்ளியம்மாச்சி, சீனிமாமா, மச்சாளப்பா.

தந்தையின் உடன்பிறந்த ஒன்றுவிட்ட ஆண்சகோதரர்களும் தாயின் சகோதரிகளின் கணவன்மாரும்: பெரியப்பா, சிற்றப்பா, குஞ்சப்பா, சீனியப்பா, ஆசையப்பா, பள்ளியப்பா, ஆயப்பு, குஞ்சப்பு

*மகனின் மனைவி:-* மருமகள்,

*மகளின் கணவன்:-* மருமகன்

*மக்களது பிள்ளைகள்:-* பேரன், பேத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறையில் பிரயோகத்திலிருந்தவை

'எங்கட **அம்மாச்சம்மைக்கு** சுகமில்ல'

**'பெத்தாச்சி** எங்ககா போறாய்? வாரண்டா மனே இன்டைக்கு கிளினிக்கு

'எங்கட **பெரியய்யா** செத்து ஒரு வருசமாச்சு'

**'சீனியம்மா, சீனியப்பா** எங்க போறார்? உன்ட **பள்ளிமாமாக்கு** சுகமில்லையாம் பாக்கப் போறாரு'

**'குஞ்சம்மைய** கண்டு எத்தனை வருசமாகுது ஓன்டா **மனே குஞ்சப்பன்** போன பிறகு அங்க இஞ்சபோறதில்லடா'

**'குஞ்சப்பு, குஞ்சாத்தை**ய கேட்டதாச் சொல்லுங்க'

'தங்கச்சி **ஆயம்மாவும், ஆயப்பாவும்** எங்க போறாங்க?

**'பள்ளியப்பாட** மகளுக்கு சுகமில்லையாம் பாக்கப் போறாங்கள்'

**'ஆச்சி மூத்தப்பா** எங்க போயிற்றார்? **மூத்தமாமா** வீட்ட போறாருமனே'

'என்ட **குஞ்சப்பு** என்ன மட்டும் வரச்சொன்னாரு'

**அம்மம்மா** என்ன செய்யுறாவு? **மூத்தம்மைக்கும் மூத்தப்பாக்கும்** குளிக்க சுடுதண்ணி கலக்கிறாவு

*தாயின் உடன் பிறந்த பெண்சகோதரிகள்:-* பெரியம்மா, சின்னம்மா, குஞ்சம்மா, குஞ்சம்மை, குஞ்சாத்தை, பெரியன்ரி, சின்னன்ரி, பள்ளியம்மா, பள்ளியன்ரி, ஆசையம்மா, ஆயம்மா, சீனியம்மா, அக்காம்மா, தம்பியம்மா, பெரியம்மை

*தந்தையின் உடன் பிறந்த சகோதரிகள்:-* மாமி, அத்தை, மஞ்சாளம்மா, மூத்தமாமி, இளையமாமி, சின்னமாமி, பெரியமாமி, குஞ்சிமாமி, பள்ளியத்தை, பள்ளிமாமி

மேலும் கணவனை ஊட்டுக்காரன், மனுசன், புருசன் என்றும் மனைவியை பெண்சாதி, மனிசி, பொஞ்சாதி, பொண்டாட்டி, பொண்டில், ஊட்டுக்காரி, என்றும் அழைக்கின்றனர்.

மாமன் மகனை மச்சான், மச்சினன், அத்தான், (குழுகூக்குறி), மைத்துனன், காணும், மெச்சான் என்றும் மாமன் மகளை மச்சி, மச்சினி, மெச்சி, மச்சாள், தோழை என்றும் குறித்து அழைக்கப்படுகின்றனர்.

மேலும் பொதுவான உறவுமுறைப்பிரயோகங்களும் வழக்கிலுள்ளன. அந்தவகையில் தோழா, தோழை, காணும், மனே, கிளி, ராசா, அப்பு, ஐயா, துரே, துரை, மச்சான் முதலிய சொற்கள் குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைமுறைப் பிரயோகங்கள்

'அம்மா **மூத்தமாமிர** மகன் வந்து உங்கள கேட்டார்' நீங்கள் **பள்ளிமாமிய** பார்க்கப்போனதெண்டு சொல்லி அனுப்பினன்'

**'அத்தைக்கு** வருசத்துக்கு சாறி வாங்கப்போறதா என்ர **மனுசன்** கதைச்சுது'

'என்ட **தோழை** உன்னக்கண்டு எவ்வளவு நாளுகா? ஓங்கா **மெச்சி** முதலயப்போல அங்க இஞ்ச போறது கஸ்ரமாயிரிக்கி.

'என்ட **பெண்டாட்டி** நான் சொன்ன சொல்ல மீறமாட்டாள்' உனக்கு பறவாயில்ல என்ட **பொண்டில்** இரிக்கிறாள் அவள் வச்சதுதான்டா சட்டம்'

வா **காணும்** வயலுக்கு போய் அந்த வக்கடைய பார்த்திட்டு வருவம். வாறன் **மச்சான் மனுசிக்கு** கறி வாங்கி குடுத்துப்போட்டு'.

மாமி அத்தான் நிக்கிறாறோ? ஓண்டி கிளி அங்கால நிண்டான் பாரு'.

வாடி **மனே** அம்மா சுகமா இருக்கிறாவோ? ஓம் **அப்பு** அவக்கென்ன? இருக்காவு

அந்தக்கடைக்குப்போய் வெத்திலை அஞ்சிருவாய்க்கு வாங்கிக் கொண்டு வா **துரே'**

பெற்றோரும் உறவினரும் பிள்ளைகளை உறவுமுறைச் சொற்கள் மூலம் அழைத்தாலும் அனைவருக்கும் பொதுவான சில பிரயோக வழக்குகளும் நடைமுறையிலுள்ளன. தலைமகன், மூத்தது, இளையது, நடுவுத்தன் கடக்குட்டி, முதலாங்கால், ரெண்டாங்கால், மூணாங்கால் என்றெல்லாம் தமது பிள்ளைகளை இனங்காட்டுவர். மேலும் இளசு, இளந்தாரி, குமரு, குமர், என பொதுப்படையாகவும் பிள்ளைகளை குறிப்பிடும் வழக்கம் உண்டு. உதாரணமாக என்ட **கடக்குட்டிக்கும்** அண்ணன்ட **மூத்தவனுக்கும்** கலியாணம் பேசினாப்போல கிடக்கு.

'அக்கைக்கு **மூத்தது** பொடியன் **ரெண்டாங்கால்** பொம்புளப்புள்ளை'

'மூத்தவண்ட **இளையவள் குமராகிற்றாள்.** எனக்கிட்டையும் ரெண்டு **இளந்தாரிமார்** இரிக்கி பாப்பம்'

மேலும் ஒரே குடும்பத்தில் பெண் எடுப்பவர்கள் தாங்கள் ஒருவரை ஒருவர் பின்வரும் உறவு முறைகளால் அழைக்கின்றனர். அண்ணா, தம்பி, சகோதரம், சகலே, சகலப்பாடி உதாரணமாக **சகலே** வாங்களேன் சாப்பிடுவம்' வேண்டாம் **சகோதரம்** நான் இப்பதான் சாப்பிட்டு வாறன்.

சிலர் உரிய உறவு முறைகளைத்தவிர்த்து வேறோர் உறவின் ஊடாக குறிப்பிட்டு அழைக்கும் மரபையும் இப்பிரதேசத்தில் கொண்டுள்ளனர். குறிப்பாக **அக்காச்சம்மா** அதாவது பெரியம்மா, சின்னம்மா என்று அழைக்காது பெரியம்மா சின்னம்மாவின் மகளின் உறவை சுட்டி அழைப்பர். தங்கச்சம்மா, தம்பியம்மா, தங்கச்சப்பா, அக்காச்சப்பு, அண்ணாடம்மா, அக்காடம்மா இதே போல் அக்காவின் தம்பி அக்காம்பி ஆனதும் உண்டு. மேலும் "மணா" எனும் சொல்லும் உறவு முறைகளில் பயின்று வருவதைக்காண முடிகின்றது. மூத்த, இளையநபர்களை குறிப்பாக **பெரியமணா, சின்னமணா, குஞ்சிமணா** என்றும் அழைக்கின்றனர். மேலும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியன், பொடிச்சி, பெட்டை, பொட்டை எனும் பதங்களும் நடைமுறையிலிருந்து தற்காலத்தில் அருகிச் செல்கின்றன. அதிலும் மருமகனை **பொடியன்** என்றும் சிறப்பாக குறிப்பிடுவர். தாய் தந்தையர் மகளிடம் மருமகனை "எங்க புள்ள பொடியன்? என்று அன்பாக விசாரிப்பர். அந்தப் **பொடிச்சி** விடிஞ்சா வகுப்பு வகுப்பெண்டு ஓடித்தான் திரியுது. எங்ககா **பொட்டை** உன்ட புருசன்?

பெற்றோர் தாங்கள் பெற்ற குழந்தைகளைப் பிரியமுடன் அழைப்பதற்கு பயன்படுத்திய கொஞ்சும் தமிழ்ச் சொற்கள் காலப்போக்கில் நிரந்தரமான பெயராகி விட்டதும் உண்டு. எடுத்துக்காட்டாக மகன், மகள், கிளி, ராசா, ராசாத்தி, கண்டு, தங்கம், செல்லம், துரை, குஞ்சு, ஆசை, சீனி, பொன்னு, பொண்ணு, பொன்னா, செல்வா, செல்வி, திரு, கண்ணா, அழகு, அழகி, தேனு, சீனு, மணி, குஞ்சு, செல்லி, கண்ணி, குட்டி, சின்னா, வவா, மயில், மயிலு, ஒல்லி, கொட்டான், சிவலை, கறுவல், காப்பிலி, பாலு, தங்கா, சிங்கா, சொக்கா, சொக்கி, சங்கு, முத்து, ரெத்தினம், பவளம், சிப்பி முதலிய பல சொற்கள் பிரயோகத்திலுள்ளன.

'என்ட **அழகு** இஞ்ச வாடி **மனே**'
'எங்கட **தங்கக்கட்டி** ஓடிவா **ராசா**'

'வாடி **கண்ணி** பால குடிச்சிற்று போ **செல்லம்**'
டேய் **கறுவல்** இஞ்சவாடா'

'**சீனு**க்கண்ணு அப்பாக்குவாய் சொல்லு'
'அடியே **சிங்கி** எங்கடி போறாய்?

இவ்வாறு பயின்று வந்த அழகுதமிழ் காலவோட்டத்தில் வெவ்வேறு மொழிகளை உள்வாங்கியும் சமூகங்கள் ஒன்றிணையும் சந்தர்ப்பங்களில் எமது பிரதேசத்துத் தனித்துவங்களை விட்டுக்கொடுத்தும் நாகரிகம் எனும் போர்வையால் அலங்கரித்துக் கொண்டு சென்றாலும் காலத்தால் அழியாது கதைசொல்லும் இலக்கியங்களிலாவது இணைய வேண்டும். அதற்கான முயற்சிகளை இலக்கியப்படைப்பாளிகள் முன்னெடுப்பார்களாயின் எமது பிரதேசத்தின் மரபுகள் வழக்காறுகள் பாதுகாக்கப்பட்டு பிற்கால சந்ததியினரும் அதன் மூலங்களை அறியவகை செய்தல் வேண்டும். அந்த வாய்ப்பை நாட்டாரிலக்கியங்கள்தான் நமது பிரதேசத்திற்கு நல்க வேண்டும்.

*- சுபம் -*



**கனகசபை ஜெயானந்தமூர்த்தி**
*தம்பிலுவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயுர்வேதத்தின் வழியில் விஷ வைத்தியம்

"அத்திமுகவனை நித்தம் தொழுபவர்
சித்தம் மகிழ்வுடன் முக்திபெறுவரே"

குலவித்தை கல்லாமல் பாகம்படும், கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும் எந்தவொரு சமூகத்தினாலும் முன்னெடுக்கப்படும் அருங்கலைகள் பயிலப்பட வேண்டியவையும் அதன் இயல்பான தாக்கம் அச்சமூகத்திலுள்ளோரிடையே கைதேர்ந்திருப்பதும் கண்கூடே. அந்தவகையில் தம்பிலுவில் கதிரமலை சரவணமுத்து ஆகிய எனது தந்தையை குருவாகக் கொண்டு சரவணமுத்து கதிரமலை ஆகிய என்னாலும் தொடரப்பட்டு வரும் விஷ வைத்தியமானது திருக்கோவில் பிரதேசத்தின் தனித்துவமானதொரு வைத்திய முறையாகும். இயற்கைக்கு மாறான உபாதைகளை நோய் என்கின்றோம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயை எவ்வாறு அறிவது.

சுதேச வைத்தியத்துறையின் வளர்ச்சி பற்றி ஆராயும் போது அவ்வைத்திய முறைகளில் தெய்வீக சக்திகளின் ஆற்றல்கள் பிணைக்கப்பட்டிருப்பதனை உணரலாம். அதாவது நம்பிக்கை மனஉறுதி, விசுவாசம் எனும் அம்சங்கள் நோயாளிக்கும் நோயைக் குணப்படுத்தும் வைத்தியருக்குமிடையே பிணைக்கப்பட்டிருக்கும். சித்தவைத்தியம் என்பது சித்தர்களால் உலகுக்கு அளிக்கப்பட்ட அருங்கொடையாகும். சிவசமய சம்பந்தமுடையது. ஐம்புலன்களையும் அடக்கி இறை ஞானம் பெற்ற மகான்களே சித்தர்களாவர். அவர்கள் ஆராய்ந்து கண்டதே சித்த வைத்தியம். தலைசிறந்த அகத்தியர், தேசர், புலிப்பாணி போன்றோரது வழியில் கி.மு.3000 வருடங்களுக்கு முன்பிருந்தே இவ்வைத்திய முறைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சித்தர்கள் பதிணெண்மர் ஆவர்.

## சித்தர்களால் ஆராயப்பட்ட நோயைப்பற்றிய ஆய்வுகள்...
### அவர்கள் ஆராய்ந்து கண்ட உண்மைகள்

1. நோய் உண்டாவதற்கான காரணம்
2. பஞ்சபூதங்களும் உடலையும் சார்ந்தவை.
3. பருவகால நோய்கள்
4. கோள்களால் ஏற்படும் நோய்கள்
5. நோய்களின் குணங்குறி வகை
6. உணவு முறை கேட்டால் வருபவை
7. உடலுறவு முறைகளால் ஏற்படும் பாலியல் நோய்கள்
8. ரணம் வீக்கம்
9. பெண்நோயியல்
10. நரம்பியல் நோய்கள்
11. மரபுவழி நோய்கள்
12. குழந்தை உருவாக்கம் தொடர்பானவை
13. மேக நோய்
14. புற்று நோய்
15. இதயநோய்
16. சிறுநீரகம் தொடர்பான நோய்கள் முதலியன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நோய்களை எவ்வாறு கண்டறிந்தனர்? இதற்கு நாடி சாஸ்திரம் முதன்மையானது, முறைப்படி நாடி பிடித்துப் பார்த்தே நோய்களை இனங்கண்டனர். ஆண்களுக்கு வலதுபக்கக் கையின் மணிக்கட்டிலும், பெண்களுக்கு இடதுபக்கக் கையின் மணிக்கட்டிலும் நாடி பிடித்துப் பார்ப்பது மரபு. நாடி பார்ப்பது எப்படி? கடின வேலை செய்யும் போதும் மதிய வேளையிலும், தூங்கும் போதும், உடலுறவின் முடிவு நேரத்திலும் நாடிகள் சமமாக இல்லாதபடியால் நாடிகளின் சரியான வேகத்தை வைத்தே நாடி பார்ப்பதுண்டு.

கையின் முன்புறத்தில் கட்டை விரலுக்கு ஒரு அங்குலம் தள்ளி மணிக்கட்டுக்குக் கீழ் நாடி பார்ப்பது வழக்கம். வைத்தியர் தனது வலக்கையின் ஆட்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல் மூன்றையும் மேல்ப்பக்கம் வைத்து பெருவிரலால் மேலே தள்ளி நாடி தெரியுமளவிற்கு அழுத்திப் பார்க்க வேண்டும். முக்கியமாக பெருவிரல் பின்புறமாக வைத்து அழுத்தும் போது நாடி நடை தென்படும். அப்போது ஆள்க்காட்டி விரல்பக்கம் தெரிவது - வாதநாடி. நடுவிரல் மூலம் தெரிவது - பித்த நாடி, மோதிரவிரல் பக்கம் தெரிவது சிலேத்தும் நாடி.

வாதநாடி நடை - கோழி, செம்போத்து போன்ற நடை
பித்தநாடி - தவளை தாவுவது போன்ற நடை
சிலேத்தும நாடி - பாம்பு, அட்டை, பூரான்போல் ஊர்ந்த நடை
இவைகளின் மாற்ற அடிப்படையிலேயே நோயின் தன்மை உணரப்படும்.

காலையில் 6-10 மணிக்குமிடையில் வாதநாடி
10-12 மணி வரை பித்த நடை சிறப்பாகத் தெரியும்
02- இரவு 06 மணி வரை சிலேத்து நாடி நடக்கும்.

*வாதம்* - வயிறு மந்தம், பித்தம், மூட்டுக்கள், நோவு, தாது நாசம், கைகால் அசதி, மலபந்தம், இடுப்பு நரம்புவலி, நாக்கு கறுப்பு

*பித்தம்* - உஷ்ணம், காய்ச்சல், சிறுநீர்க்கடுப்பு, மயக்கம், சத்தி, மலம் மஞ்சள், நாக்கு மஞ்சள்

*சிலேற்பனம்* - சீதளமாகி (குளிர்), உடம்பு வியர்த்தல், சளியடைத்தல், ஜலதோஷம், அஸ்மா, மலம் வெண்மை, நாக்கு வெண்மை.

இவ்வாறான அறிகுறிகளைக் கொண்டு வாதம், பித்தம், சிலேற்பனம் என்பவற்றை அறியலாம்.

நமது புராதன ஏட்டுச் சுவடுகளில் சரீர தத்துவம் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இதில் உணவு சீரணமடைதல், இரத்த ஓட்டம் என்பன முக்கியமானது. 1628இல் வில்லியம் ஹாவே என்பவரே இரத்த ஓட்டத்தை கண்டு பிடித்தவர் என கூறப்படுகிறது. இருப்பினும் நமது ஞானிகளின் வழியே இது அறியப்பட்டது என்பதனை அவர் பல இடங்களில் சுட்டிக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. புராதன நூல்களில் ஓலைச் சுவடுகளில் இரசம் என்ற பொருள் ஓடுவதாகவே கூறப்பட்டுள்ளது. நமது இந்து சாஸ்திர அடிப்படையில் ரசம் தான் சத்து என்றும் இரத்தம் என்றும் சொல்லப்படுகிறது. அதுவே சரீரத்தை போசிப்பதாகவும், கல்லீரல் மண்ணீரல்களின் வழி நிறத்தையும் பெறுவதாக பழைய நூல்கள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தத்துவங்கள் 96 வகையாக வகுக்கப்பட்டுள்ளது. உலகம் பஞ்சபூத சேர்க்கையாகும். நம் உடலில் 72000க்கு மேற்பட்ட நரம்புகளும் 9 பிரதான துவாரங்களுடன் 4 கோடி உரோமத் துவராங்களும் உள்ளன.

இயற்கையாக கிடைக்கின்ற மரம், செடி, கொடி, விதை, காய், கனி, பூ, பட்டைகளே நம் நோய் தீர்க்கும் இயற்கை மருந்துகளாகும். இயற்கை வைத்தியத்தின் மூலமே எல்லா வகையான நோய்களையும் குணப்படுத்த முடியும். நாம் இதனைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பது நமது கட்டாய தேவைப்பாடாகும்.

செயற்கை வைத்திய முறைகளால் பல பக்க விளைவுகளையும் அடைகின்றோம். இயற்கைக்கு மாறாக கம்பி, கத்தி முதலான பல போலி சாதனங்களையும் பயன்படுத்தி பல சிரமங்களையும் நோய்களையும், திடீர் மரணங்களையும் ஏற்படுத்துகின்றன. எனவே இவ்வாறான விளைவுகளை விலைக்கு வாங்காமல் இயற்கையோடு வாழ்ந்து பலன் பெற நாம் ஒவ்வொருவரும் இயற்கையின் தத்துவங்களையும் அரிய உணவுகளையும் மருந்தாக அருந்தி நீடூழி வாழ வேண்டும்.

இக்கட்டுரை மூலம் நான் உங்களுக்கு சொல்ல விரும்புவது விஷ ஜந்துக்களால் ஏற்படும் இறப்புக்களை எவ்வாறு தடுக்கலாம் என்பதாகும். அண்மைக்காலமாக பலர் பாம்புக்கடியால் இறந்தனர். இதற்கு காரணம் நமது சுற்றுச்சூழல் விஷ ஜந்துக்கள் வாழும் பகுதியாக காணப்பட்டமையாகும். நூற்றாண்டு காலமாக திருக்கோவில் விஷக்கல் ஜெயமௌலானா என்பவரால் கட்டப்பட்டதாகவும், விஷம் தீண்டியவர் காலை விஷக்கல்லில் பிடித்தால் விஷம் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்தனர். ஆனால் அது வைத்தியமாகவில்லை. பலர் அதையும் தாண்டி மரணித்தனர். அப்போது 1962இல் எனது நண்பர்கள், உறவினர்கள் பலர் பாம்புக்கடியால் இறந்தனர். இதனை தாங்க முடியாதவனாகிய நான் எனது தந்தையும் பிரபல வைத்திய பரம்பரையில் வந்த வைத்திய மேதையுமாகிய சரவணமுத்து வைத்தியரை குருவாக ஏற்று அவருடைய குருவருளுடன் மேற்படி விஷ வைத்தியத்தை தந்தையாரின் அருளாசியுடன் பயின்று 1962 தொடக்கம் இன்று வரை திருக்கோவில் பிரதேசத்தில் விஷ வைத்தியத்தை செய்து வருகின்றேன்.

இவ்வைத்திய முறையில் பல கட்டுப்பாடுகளுண்டு.

01. கடிபட்டவரை - தன்னுயிர் போல் பாவித்தல்.
02. அவரிடமிருந்து எந்த வேதனமோ உதவியோ பெறாமை.
03. கடிபட்டவர் சுகமடையும் வரை எதுவும் உண்ணாமல் விரதம் அனுஷ்டிப்பது.
04. ஜாதி, மத, குல, பேதங்களைக் கடந்த அருள் நிலை

இவ்வாறான பல குறிப்பிடக்கூடிய நிபந்தனைகளுடன் செயற்படுவது முதன்மையானது. வைத்தியர் அடக்கம், பொறுமை, கொடை, தியானம், வாய்மை போன்ற அருங்குணங்களுடன் வாழ்தல் வேண்டும். இதனை பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

வேதியர்க்கடைவாம் ஜாதி விடத்தினால் அஞ்சுவோரை
ஓதிய மருந்து மந்திரத்தால் உபாயமாக தீர்க்க வல்லோர்
சாதியினாலும் வேதத் தலைவராய்ப் பிறந்து பின்னாலும்
ஆதியில் பிரமாவாக அமர்ந்து வீற்றிருப்பதாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புகளில் மொத்தமாக 64 வகைகளுண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| சேடன் - | 01 | சாணாக மூர்க்கன் | - | 02 |
| நாகம் - | 08 | வழலை | - | 06 |
| விரியன் - | 06 | நீர்ப்பாம்பு | - | 04 |
| புடையன் - | 04 | கண்கொத்தி | - | 03 |
| மண்ணுளியன் - | 04 | செவிட்டுப்பாம்பு | - | 02 |
| சாரை - | 03 | மயக்கரவு | - | 02 |
| சாடமை - | 02 | ஓலைப்பாம்பு | - | 01 |
| மூர்க்கன் - | 02 | பச்சோலைப்பாம்பு | - | 02 |
| மலைப்பாம்பு - | 05 | இருதலை மணியன் | - | 01 |
| பூ நாகம் - | 02 | | | |

இவற்றுள் நாகம், புடையன், வழலை, மூர்க்கன் வகை பாம்புகள் நஞ்சுடையனவாகும். நஞ்சு அபாயமானது கொல்லும் தன்மையுடையது.

இவை கடிக்கும் விதம் கடிவாய், குறி, நஞ்சின் தன்மை இவைகளை அறிந்து விடதாரி மருந்து மந்திர உபாயங்களாக தீர்க்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுபவன். "கட்டும் காலன் காலனல்ல. காலன் தானும் அவன் தானேயென்று" எச்சரிக்கிறார்கள்.

தீர்க்க முடியாத கடி.

தானே ஓடிக் கடித்தரவம் கிடக்குமாகில் சாவென்பர்
தானே ஓடிக் கடித்தரவம் புரளுமாகில் சாவென்பர்
தானே ஓடிக் கடித்தரவம் ஆடுமாகில் சாவென்பர்
தானே அரவு செய்குறிகள் கண்டும் கேட்டும் அறிவீரே.

இவ்வாறாக ஒருவருக்கு பாம்பு கடிக்குமாயின் அதனைக் குணப்படுத்த முடியாது. பாம்பு கடித்ததென வரும் தூதுவரைக் கொண்டு பாம்புக் கடியின் தன்மை அறியப்படும்.

வந்தவர் உரைத்த வார்த்தையின் எழுத்தை எண்ணி
ஐந்தினுக் கீந்த சேடம் முந்த வொன்றாகில் நாகம்
இரண்டினிற் புடையன் மூன்றாகில் வழலை
நான்கினில் மூர்க்கன் அரவிடமில்லை ஐந்தே.

இது போன்ற பல வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை அறிந்து அதற்கமைவாக. மருந்து செய்பவரே விஷ வைத்தியராவார்.
பாம்பு கடிக்கப்பட்டவர்.

வேர்க்கும் விக்கும் முதல் வேகம்
வேர்க்கும் வெதும்பும் இருவேகம்
சோரா நிற்கும் மூவேகம்
சோற்றைக் கக்கும் நால் வேகம்
ஆறம் அந்தில அறிவழிக்கும்
ஆறாம் வேகம் பற்கிட்டும்
ஏழாம் வேகம் வேர்க்கும் விருவிருக்கும்
எட்டாம் வேகம் பட்டானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர் விடமுள்ளவன் எந்த நிலையிலுள்ளார் என்பதை அறிந்து விஷம் மேல் ஏறா வண்ணம் நசியம், மருந்து, மந்திரம், ஒற்றடம் போன்றவற்றை உபயோகித்து படிப்படியாக வேக நிலையை குறைத்து சாதாரண நிலையை அடையும் வரை உடனிருந்து செயற்பட வேண்டும். வேகம் கட்டுப்பாட்டிற்குள் வந்தால் நோயாளி உயிர்தப்பி விடுவார்.

கற்பவர்கள் முன்வராவிடில் எமது பாரம்பரியக் கலைகள் அழிந்து மேலைத்தேய முறைகளையே பின்பற்ற வேண்டும். பயிற்சி நெறியில் கண்டும் பாரம்பரிய முறையே முதன்மை பெறும். அதனைப் பேணிப்பாதுகாப்பது நமது கடமையாகும்.

மேலே குறிப்பிட்டவை பொது வைத்தியம், விஷ வைத்தியம் பற்றிய சில தகவல்களாகும். விரிவான முறையில் வழிமுறையாக பயின்று அவ்வப்போது கையாளப்படும் மருந்துகளையும், அவை பாகம் பண்ணும் முறைகளையும் கற்று உபயோகித்து வெற்றியும் திருப்தியும் அடைவதே இயற்கை வைத்தியமாகும். எல்லா நோய்க்கும் மருந்து வகைகள் நம் முன்னோர்களால் பாடல் வரிகளில் சொல்லப்பட்டுள்ளது. பதார்த்தங்களின் தன்மை பற்றிய குறிப்பு பதார்த்த குண சிந்தாமணி என்னும் அரிய நூல்களிலும் பழமை வாய்ந்த ஏட்டுச் சுவடுகளிலும் காணலாம். ஆர்வமுள்ளவர்கள் அரிய சேவையை மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென செய்து நலம் பெறுவதோடு ஆதியில் பிரம்மாவாக அமர்ந்து வீற்றிருப்பதாமே.

– நன்றி –

## விஷக்கல்லின் முக்கியத்துவம்

எனது தந்தையரால் மருந்து, மந்திரம், தியானம், பாசாணம் என பல வழிமுறைகளையும் கையாண்டு உரிய முறையில் விஷக்கல் நடப்பட்டுள்ளது. இக்கல்லிப் பால், பன்னீர் போன்றவற்றை ஊற்றும் போது அக்கல்லில் சேர்க்கப்பட்ட மருந்து பாசான வகைகள் உயிர் பெற்று விடத்தை தன் வயம் ஈர்க்கும் சக்தியுள்ளது. நம்பிக்கையுடன் பாவித்து நலம் பெறுவதுடன் தேவைகளுக்கு வேண்டிய மருந்து, மந்திரம், பற்று, ஒத்து, வேது, புகை, நசியம், கலிங்கம் போன்ற வைத்திய முறைகளையும் மேற்கொண்டு விஷக்கடியிலிருந்து மீள்வோமாக.

இவற்றைப் பயின்று பேணிப்பாதுகாத்து சமூகம் பயன்பெற ஆர்வமுள்ளவர்கள் முன்வர வேண்டும். நம் முன்னோர் அளித்த அருட் கொடைகளை பயின்று பேணிப்பயன் பெறுவோமாக.

தேவைகளுக்கு ஆர்வமுள்ளவர்கள் முன்வந்தால் நன் மதிப்புடன் ஏற்று வழிகாட்ட என்றும் தயாராக உள்ள



*இயற்கை வைத்தியரும் சோதிடரும்*

**சரவணமுத்து கதிரமலை**

(ஓய்வு பெற்ற அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம சேவை உத்தியோகத்தர்கள்



சமுர்த்திப் பிரிவு உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருவி வரும் கொம்பு விளையாட்டு

வீர வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டதும், பத்தினி வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடையதுமான கொம்பு விளையாட்டு சமயம், கலை என்ற இரு துறைகளிலும் முக்கியம் வாய்ந்தது.

அறிவு அறைபோகி இறைமுறை பிழைத்த மதுரைப் பாண்டியனைப் பழிவாங்கி மதுரையை எரித்து, தணியாத கோபத்துடன் வந்த கண்ணகியைக் கோபம் தணியும்படி செய்வதற்கு இடையர்குல மகளிர் தயிர், பால், நெய்பெய்து திருமுருகாற்றியும், அம்மனை ஆடியும், கண்ணகியைக் கோபம் தணியச் செய்தது போல இடையர், குலச் சிறுவர்களும் அம்மனைச் சாந்தி செய்யக் கொம்பு விளையாட்டில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது. கண்ணகி இடையர் சேரியில் வரும்போது கொம்பு முறித்து அம்மனுக்கு வெற்றி என்று கூறி அவள் கோபம் தணிந்து உள்ளம் குளிருமாறு செய்தனர் என்றும் இவ்விளையாட்டு அங்கிருந்தே தொடங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறியக் கிடக்கிறது.

கண்ணகி வழிபாடானது சேர நாட்டிலிருந்து ஈழத்திற்குப் பரவிய போதும், அவ்வழிபாடு ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் தோன்றியது போலவே ஈழத்துச் சிங்கள மக்களிடையேயும் பத்தினி வழிபாடு மிகவும் பழங்காலந் தொட்டு நிலைத்து வந்துள்ளது. மட்டக்களப்பு மக்கள் கண்ணகி வழிபாட்டில் ஈடுபட்டதால், அவ்வழிபாட்டுடன் தொடர்புடைய பலவித கலைகளும் மக்கள் சமூக வாழ்க்கையிலும் ஏற்பட்டது என்று கூற வேண்டும்.

நெடுங் காலந்தொட்டு கண்ணகியைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வந்த தம்பிலுவில் மக்களிடையே கொம்பு விளையாட்டானது கண்ணகி வழிபாட்டின் ஓர் அங்கமாக மிளிர்ந்து வந்ததெனலாம். 1986 வரைக்கும் இவ்விளையாட்டு முறை அங்கு நிலவியிருந்தது. இவ்விளையாட்டானது மக்களிடையே பக்தி உணர்வையும், மன அமைதியையும் மகிழ்ச்சியையும் அளித்து வந்தது என்று குறிப்பிடுகின்றனர்.

கண்ணகிக்கு வைகாசி மாதத்தில் விழாவெடுக்கும் போது சடங்கு என்ற பெயரில் எடுக்கப்பட்டாலும், அவ்விழாவோடு தொடர்புடைய போர்த்தேங்காய் அடித்தல், கொம்பு முறித்தல், கொம்புத் தட்டு எடுத்தல், தேர் இழுத்தல், தேர்க்கலியாணம் வழக்குரை, குளுத்தி பாடுதல் ஆகியனவும் மிகவும் பயபக்தியுடன் ஆற்றப்படுகின்றன. எனினும் வருடந்தோறும் வைகாசி மாதத்தில் அம்மன் சடங்கு நடைபெறும் போதன்றி, மழை வளம் குன்றி நாட்டில் பஞ்சம், பிணி மிகுந்து மக்கள் கொடிய வெயிலில் அல்லற்படும் வேளையிலே மேற்கூறியவை நடைபெற்று வந்திருக்கின்றன.

நாட்டில் வெப்ப மிகுதியால் அம்மை, வைசூரி, குக்கல், வெப்பு, செங்கமாரி, கண்நோய் போன்ற நோய்கள் ஏற்படும் போது, அம்மனின் சீற்றத்தினாலே அவை ஏற்படுகின்றன என்ற அசையாத நம்பிக்கையினாலும், அவ்வியாதியைத் தணிக்கும் தெய்வம் என்று பாராட்டியும் மட்டக்களப்பு மக்கள் மிகவும் பயபக்தியுடன் இவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனுக்கு சாந்தி செய்ய வேண்டி ஊர்ப்பொது மக்கள் ஒருங்கு கூடி போர்த் தேங்காய் அடித்து, விழாவோடு இக்கொம்பு விளையாட்டைத் தொடங்குவர். முதல் நாள் போர்த் தேங்காய் அடித்தலிலும், கொம்பு முறித்தலிலும் அம்மனுக்கே வெற்றி காண்பது வழக்கம். முதல்நாள் வெற்றியின் போது அம்மனுக்கு உடுக்குச் சிந்து அல்லது ஊர்ச்சுற்றுக் காவியம் பாடுவதோடு, காவியமும் பாடி மகிழ்வர்.

கொம்பு விளையாட்டு தொடங்கியதும் ஊர் முழுவதும் இரண்டு கட்சியாக மாறிவிடுதல் உண்டு. ஒன்று கண்ணகிக்கும் மற்றையது கோவலனுக்குமான அக்கட்சிகள், முறையே தென்சேரி, வடசேரி என்று பெயர் குறிப்பிடப்படும். சேரி என்பது சொல் வழக்கில் இங்கு "வாரம்" ஆகும். பண்டுதொட்டே மருமக்கட்தாய் வழக்குடையதாதலால், தாய்வழி கொண்டே குடிப்பெயர் முதலியவற்றிற்கு இந்நாட்டு மக்கள் கருதப்படுவாராயினும், கொம்பு விளையாட்டுச் சேரி வாரத்தில் மட்டும் அவர் தந்தை வழியைச் சார்ந்து 'நிற்றல்' நோக்கத்தக்கது. இங்கு வாழும் தமிழ் மக்கள் மருமக்கட்தாயம் வளர்ந்த பண்டைச் சேர நாட்டின் தொடர்பினராதல் கூடும் என்றும், தந்தை வழிச் செல்லும் மரபினுடைய பாண்டிய நாடு மதுரையினின்றும் வந்த தொடர்பானதாக கொம்பு விளையாட்டில் அந்நாட்டு மரபை ஒட்டிய பிரிவு இங்கே இடம்பெற்றது என்றும் கொள்ளுதற்கு இந்நிலை இடம் தருகிறது.

வடசேரியாரது கொம்பு பெரும்பாலும் தொண்ணூறு பாகைக்கு மேற்பட்ட வளைவுடையதாகவும், தென்சேரியாரது அதிலும் ஒடுங்கியதாயும் இருக்க வேண்டியது பொது விதி. இயல்பாக அமைந்த வளைவுடைய இத்தகைய கொம்புகளை எல்லா மரங்களிலும் காணக்கூடியதாயினும், "கரையாக்கு" என்னும் ஒருவகை மரத்தில் இருந்து மட்டுமே. விளையாட்டுக்கான கொம்புகளை எடுப்பது மரபாகும். கருவீரம் என்றும், வெட்சியென்றும் இம்மரம் இலக்கியப் பெயர் பெறும்.

கொம்பு விளையாட்டு தொடங்கப்படுதல் வேண்டுமென்று ஊர்கூடித் தீர்மானம் செய்த பின்னர் பொதுமன்றிலே ஓர இரவு போர்த் தேங்காய் அடித்தலைக் கொம்பு முறித்தலின் முதல் விழாவாக நடத்துதல் மட்டக்களப்பு வழக்கு. கொம்பு விளையாட்டின் முதற் குறியாக ஒரு கொம்பை முறித்து அவ்விழாவினை ஆரம்பித்து வைப்பது வழக்காகும். முதல்முதல் உடைக்கும் தேங்காயிலும் போர்த் தேங்காய் உடைத்தல் நடந்த பின் முறிக்கும். முதற்கொம்பிலும் அம்மனின் (கண்ணகி அம்மாளின்) தென்சேரி வாரத்துக்கே வெற்றி கொடுத்தல் மரபு.

மறுநாளிலிருந்து கொம்பு முறித்தல் நடக்கும் இவ்வாரத்தாரது, கொம்புகளின் வளைவிலுமுள்ள 'குச்சிக்கு' அண்டிய பாதத்தின் சுற்றளவால் ஒத்த கொம்புகளே போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவன. அவை முறுக்கேறிய புரிகளால் வரிந்து கட்டப்பெற்றுப் பணிச்சங்காய்ப் பசை பூசிக் காய வைக்கப்படும்.

அவ்வாறான கொம்பினை நடுவில் வைத்துப் பசையூட்டிய புரியாற் சுற்றப்பட்ட இரண்டு கம்புகளை இருபுறமும் அணைத்துக் கட்டுதல் நியதி. கொம்புடன் அணைத்துக் கட்டப்பட்ட இரு கம்புகளும் 'பில்லி' என்றழைக்கப்படுவன. பில்லி கட்டப்பட்ட கொம்பே விளையாட்டுக்குத் தகுதியான நிறைந்த நிலையை அடைந்ததாகும். ஒரு மரத்திற் பூட்டிய 'அரிப்பு' (சிறுவடம்) எனப்படுவதான கயிற்றில் தென்சேரியான் கொம்பு தொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கொம்பில் கொளுவிய வடசேரிக் கொம்பிலே இன்னோர் அரிப்பினைப் பிணைத்து அவ்வரிப்பிலே பெரிய வடமொன்றை மாட்டுவர். அவ்வடத்தைப் பற்றிப் பலர் இருக்கும் போது இரு சேரியையும் சேர்ந்த திறமையாளர் சிலர் தத்தம் கொம்புகளிற் 'பல்வாய்' (கொம்பின் தலைப்பகுதி) 'குச்சு' (கொம்பின் வளைந்த இடத்து நடு ஆணி) 'முதுகுமரம்' (கொம்பின் தலைப்பகுதி) 'பில்லி' (கொம்பின் இரு புறமும் அணைத்துக் கட்டிய தடிகள்) என்னும் உறுப்புக்களையெல்லாம் பிடித்துக் கொள்வர்.

அரிப்பிற் பிணைந்த பெருவடத்தினை இருசேரிப் பொதுமக்களும் இழுப்பர். உடனே வென்ற பகுதியார் தமது வாரத்தின் பெயரைச் சொல்லி அதற்கு வெற்றியென்று கூவி ஆடிப்பாடிச் செல்வர். இந்த வெற்றிக்கழியாட்டத்தின் அளவு முறிக்கப்படும் கொம்பின் தரத்தைப் பொறுத்ததாகும். கொழுகொம்பு, ஏடகக் கொம்பு, கொம்புத் தட்டுக் கொம்பு, கூடாரக்கொம்பு, தண்ணீர்க் கொம்பு என்ற கொம்பு வகை ஐந்திலும் முறையே ஒன்று, ஏழு, மூன்று, ஐந்து, ஒன்று ஆகப் பதினேழு இணைக் கொம்புகள் பூட்டி இழுக்கப்படுதல் கொம்பு விளையாட்டில் ஓர் கணக்காகும். இவற்றுள் கொழுக்கொம்பென்பது போர் தேங்காய் அடித்தலைத் தொடர்ந்து தென்சேரிக்கு வெற்றியளிப்பதற்காக முறிக்கப்படும் முதற்கொம்பாகும். தண்ணீர்க் கொம்பென்பதும் விழா நிறைவில் அவ்வாறே முறிக்கப்படுவது, விழா நாளிலிருந்து கொம்புத் தட்டுக்கொம்பு என்ற இரண்டு வகைக் கொம்புகளும் முறிக்கும் போது மக்களின் கட்சிப்பற்றும் வெற்றிவிழா நிகழ்ச்சி அமைப்பு முறைகளும் வளர்ந்து கொண்டே போகும்.

ஒவ்வொரு நாளும் கொம்பு முறித்த பின் இரவு தோறும் இரு கட்சியாருக்கும் பொதுவான கொம்புத் தட்டில் (ஒரு பூம்பந்தல் அமைவுடன், கொம்புகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் பூந்தட்டில்) நன்கு அலங்கரிக்கப்பட்ட அம்மன் சிலையினையும் வைத்து ஊர்வலம் செல்ல வேண்டியது முறை. அவ்வேளையில் ஒரு கட்சியினரது வெற்றிப் பாடல்கள் அன்றி பொதுவான உடுக்குச் சிந்து எனும் ஊர் சுற்றுக் காவியம் முதலான அம்மன் காவியப் பாடல்களே படிக்கப்படுவன. ஊரின் நடுச்சந்தியில் தட்டை வைத்துவிட்டுச் சிறிது நேரம் வசந்தன் கூத்து ஆடி அம்மன் புகழ் பாடுதலும் வழக்கு. இவற்றின் இடையே மந்திரம் சொல்லப்பெறுதலும், பேயாட்டமும், விசேட உடை அணிந்தோரது ஊர்வலமும் முதலான காட்சிகளும் இடம் பெறுவன.

பின்னர் இடம்பெறும் ஏடகக் கொம்பு முறித்தலானது எல்லோராலும் பயபக்தியான ஒன்றாகக் கருதப்படுவது, மற்றைய கொம்புகளைவிட இரண்டு மடங்குக்கு குறையாத பருமனுடைய இந்த ஏடக மரங்களை முறித்ததற்கு ஊர் கூடி வடம் இழுக்க வேண்டி இருக்கும். இந்நிலைக்கு முன்னர் இருசேரியாரும் தத்தம் கொம்புகளை வைத்துப் பூசை பண்ணுவதற்காக இரு வேறு தேர் கட்டுவர். அத்தேர்களை வைக்கும் கூடம் 'தேர்ப்புரை' எனப்படும். ஏடகக் கொம்புகளை வைத்துப் பூசை செய்யும் தேரும் 'ஏடகம் என்றே குறிப்பிடப்படுகிறது. வடசேரியாரது தேர்ப்புரை, ஏடகம் என்பவற்றின் முடிகள் தென்சேரியாரதைப் பார்க்க சற்று உயர்ந்திருக்க வேண்டியது இலக்கணமாகும். தமது தேர்ப்புரைகளுள் வைத்து மற்றைய சேரியாருடையதிலும் அழகாக விளங்குதல் வேண்டுமென்ற நோக்குடன் தனித்தனியாகத் தம் ஏடகங்களை இரு கட்சியாரும் சோடனை செய்வது வழக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைக்குப் பின்னர், ஏடக மரங்களை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் வடத்திற் போட்டு இழுத்தல் வழக்கு தம் சேரிக்கொம்பு வென்றுவிட்டால் அக்காலத்தில் ஒரு திறத்தார் காட்டும் மகிழ்ச்சியின் எல்லையை கூறவே முடியாது. வென்றோரை மறுநாள் தாம் வெல்லுதல் வேண்டுமென்று வேறு கொம்பெடுத்து அதற்கு மந்திரம் சொல்லி வலுவூட்டுதல் முதலியவற்றிலே தோற்ற கட்சியார் சென்றுவிட, வென்ற கட்சியார் அன்று இரவு முழுவதும் நாட்டுக் கூத்துக்களும், வசந்தன் ஆட்டங்களும், வசைப் பாடற் போட்டிகளுமாகப் பல கழி நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். பெண்களும், பிள்ளைகளும் கூட உணர்ச்சியினாற் தம் நிலை மறந்து வெற்றி விழாவில் ஈடுபடுவதுண்டு. வேடர், குறவர், போர்வீரர், முடிமன்னர், முனிவர், ஆண்டிகள் முதலாகப் பலகோலம் புனைந்து மக்கள் அப்போது ஆடல் புரிவர். அதன் போது பல கொம்பு விளையாட்டுப் பாடல்கள் போட்டியாகப் படிக்கப்படும்.

1. *கோலப் பணிச்சேலை கொய்துடுத்து*
*கொம்பு விளையாட்டுக்குப் போகையில்*
*வேலப்பர் வந்து மடிபிடித்து*
*மெத்தவும் சிக்கிக்கொண் டாந்தோழி!*

2. *காப்பணி மங்கையர் மன்மதவேள்*
*கந்தன் குமரன் அருள்வோன்*
*சீப்புடன் மல்லிகைப் பூமாலை தந்து*
*சேர்வ மென்றாரடி தோழியரே!*

என்பன வெற்றி ஆடுவோர் குறவள்ளியும் தோழியருமாகக் கோலம் புனைந்து தம்முட் படித்தாடும் கொம்பு விளையாட்டுப் பாடல்கள்

1. *ஆற்றோரம் போறமயில் - அது*
*ஆண்மயிலோ பெண்மயிலோ*
*பார்த்துவாடா வடசேரியான் - உனக்கு*
*பாவற்பழம்போல மாலைதாறன்*

2. *ஆற்றோரம் சிறாம்பிகட்டி*
*அங்கே நின்று வடமிழுத்து*
*வேர்த்து வாறான் தென் சேரியான் - அவனை*
*வெள்ளி மடல் கொண்டு வீசுங்கடி*

3. *ஆற்றோரம் சிறாம்பி கட்டி*
*அங்கே நின்று படைபொருது*
*தோற்றுவாறான் தென்சேரியான் - அவனைத்*
*துடைப்பங் கட்டாலே அடியுங்கடி*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வகையாக இயல்பாக ஒரு சேரியாரை இன்னொரு சேரியார் பழித்தும், தம் சேரியைப் புகழ்ந்தும் பாடும் வசைப் பாடல்கள் முதல் மூன்று பாடல்களிலுமுள்ள தென்சேரியான், வடசேரியான் என்ற சொற்கள் பாடுவோரது சேரிக்கேற்ப மாற்றியமைக்கப்படுவன.

**"பால்போல் நிலவெறிக்கப்**
**படலை திறந்தவன் ஆர்தோழி**
**நான் தாண்டி தென்சேரியான் - உனக்கு**
**நாழிப்பணம் கொண்டுலாவுறண்டி"**

போன்ற வசைப் பாடல்களும் பாடப் பெறுதல் உண்டு. இவை தவிர பிற்காலத்தில் நகைச்சுவை நிரம்பிய பாடல்களும் பாடப்பட்டுள்ளன. ஊர்வலத்தின் முன் கோலம் புனைவோர் வேடன், குறவர், போர்வீரர், முடிமன்னர், முனிவர், ஆண்டி, விகடன் போன்ற தோற்றங்களில் வந்து மக்களை ஆழ்ந்த சந்தோசத்தில் ஆழ்த்துவர்.

இளம் வாலிபர்கள் வசந்தன் ஆட்டத்திலும் நாட்டுக்கூத்திலும் ஈடுபட பெண்கள் குரவை அயர்தலினும் கும்மி அடித்தலிலும் ஈடுபடுவர். கொம்புத்தட்டு வீடுதோறும், சந்தி தோறும் நிறுத்தப்பட்டு வசந்தன் ஆடலும் கும்மியும் நடைபெறும். இவை யாவும் அம்மன் புகழ் பாடுவதாகவே அமையும். ஊர்வலம், முடிந்த மறுநாள் குளுத்தி ஆடுதல் நடைபெறுவதும் அக்குளுத்தியின்போது 'கண்ணகியம்மன் குளுத்தி படிக்கப்படுவதும் வழக்காறு.

*1. ஒருமா பத்தினி வந்தாள் - உல*
*கேழுந் தழைத்திட வந்தாள் வந்தாள் (குளுத்திப்பாடல் -30)*

இதனை இருவர் நின்று அடிதோறும் மாறிமாறி இசையெழுப் படிக்கும் பாடல்களே வைகாசிப் பூரணைக் காலத்தில் நடக்கும் அம்மன் சடங்குக் குளுத்தியின் போது பாடுகின்றனர். அதனுடன் வாழிபாடும் மரபும் காணப்படுகின்றது. கொம்பு விளையாட்டின் போது படிக்கப்படும் கண்ணகை அம்மன் பள்ளு தம்பிலுவில் எனும் ஊரில் வாழ்ந்த இரு புலவர்களால் பாடப்பட்டுள்ளது.

**"பார்வதி தென் திருக்கோவில் குமரன் வாழி**
**கண்டி பார்த்திபன் நரேந்ர சிங்கமூர்த்தியும் வாழி**
**ஊர் வாழி தம்பிலுவில் ஊர் வாழ்க வரந்தரும்**
**பத்தினி கண்ணகை நீடூழி வாழ்கவே.**

இக்கிராமிய இலக்கியம் கண்டி மன்னான ஸ்ரீ வீரநரேந்திர சிங்கன் (1703 - 1739) காலத்தில் தோன்றியதாக கூறப்படுகிறது. அது அம்மன்னனையும் புகழ்ந்துரைக்கின்றது. இது கொம்பு விளையாடல் இடம் பெறும் வேளைகளில் பாடப்படுவதாக கூறப்படுகின்றது. குளுத்தியும் வாழியும் பாடி முடிதலோடு கொம்பு விளையாட்டு நிறைவெய்தி மக்கள் செய்யும் வேண்டுதல்களும் நிறைவு பெறுதல் இயல்பாயுள்ளது. பொதுவான இந்த நடைமுறை போக, மழைக்காவியம் என்னும் வகையைச் சேர்ந்த சில பாடல்களும் கொம்பு விளையாட்டு இரவுகளில் நடக்கும் சடங்குகளில் படிக்கப்படுதல் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைவளம் குன்றிக்கொடிய வெப்பமும், வெம்மை நோய்களும் மிகுந்து பயிர்வகையும் விலங்கினங்களும் வருந்துதலைத் தவிர்க்க எழுவதாக கொம்பு விளையாட்டு நடைபெறும் போது மழை குறித்த கவிகள் இடம் பெறுதல் இயல்பேயாகும். 'தம்பிலுவில் பிராமணப் பொடியன் பாடிய 'மழைக்காவியம்' என்னும் தலைப்பில் வழங்குகின்ற பாடல்கள் முதன்மை பெற்று விளங்குகின்றன. அறுசீரடியமைந்த பதினைந்து ஆசிரிய விருத்தங்களைக் கொண்டே இச்சிறு பிரபந்தம் தம்பிலுவில் கண்ணகையம்மனை வாழ்த்தி அவளருளால் மழைபெய்து வளம் சுரக்க வேண்டுவதாய் உள்ளது.

**"கப்பல் திசை கெட்டது கரைக்குள் அடையாதோ**
**கட்டையினில் வைத்தபிண மற்றுயர் கொளாதோ**
**உப்பள பதிற்பதர் விதைக்க முளையாதோ**
**உத்தரவு ஊமையன் உரைக்க அறியானோ**
**இற்செவிடு இற்குறுடு இப்பதெளி யாதோ**
**எப்பமா மழைதந்து தென்றினி திருந்தாய்**
**தப்பினால் உருகமுறு வார்கள்துயர் கண்டாய்**
**தற்பரா பரனுதவி சக்தி கண்ணகையே"**

என்பன போன்று கண்ணகை அம்மனின் அருட்சிறப்பினை வியந்து வேண்டுவன இப்பாடல்கள் நீண்டகால அருங்கோடை ஒன்றினால் மக்கள் துயருற்றபோது எழுந்த இப்பாடல்களானது கண்ணகிக்கு எடுக்கப்படும் விழாவாகவே கருதப்படுகின்றது.

கொம்பு முறித்தல் விளையாட்டு மட்டக்களப்புத் தமிழ் மக்களிடையே காணப்பட்டது போல சிங்கள மக்களிடையேயும் உண்டு. போர்த்தேங்காய் அடித்தல் 'பொல்கெலிய' என்றும் கொம்பு முறித்தல் 'அங்கெலிய' என்றும் தோடம்பழ விளையாட்டு 'தொடங்கெலிய' என்றும் பூ விளையாட்டு 'மல்கெலிய' என்றும் மிகவும் பிரசித்தமாய் வழங்கப்பட்டு வருகின்றது. குருநாகல் பகுதியில் காணக் கிடைக்கும் ஏட்டுப்பிரதியின் மூலமும் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ள பத்தினி இலக்கியங்கள் மூலமும் சிங்கள மக்களிடையே பழங்காலம் தொட்டு இக்கொம்பு விளையாடல் காணப்படுகின்றது என்றே குறிப்பிடலாம்.

நீண்ட நாள்தொட்டு மட்டக்களப்பு மக்களிடையே நிலவி வந்த இவ்விளையாட்டு தற்போது மறைந்து வருவதால் இவ்விளையாட்டினை மீண்டும் பேணிக்காத்து அதன் சிறப்பை பலரும் அறியச் செய்ய வேண்டியது எமது கடனாகும். இக்கொம்பு விளையாடல் ஆனது எமது மாவட்டத்தின் பாரம்பரிய கலைப் பொக்கிஷமாகும். இதனை மீண்டும் பேணி வளர்ப்பது எமது மட்டக்களப்பு, அம்பாரை மாவட்ட மக்களின் தலையாய கடமையாகும் என்றே கருதலாம்.

நிறைவுற்ற உடனே திடுதிடென்று இரவு பகலாக மழை பெய்து ஆறுகுளம் எல்லாம் நிரம்பப் பெற்றிருக்கின்றன என்பதை அறிந்திருக்கின்றோம். இப்பாடலைத் தெய்வீகமாகத் தோன்றிய ஒரு பிராமணப் பையன் பாடினான் என்றே பலர் கூறுகின்றார்கள். எனினும் பாடகனுடைய பெயரமைந்த செய்யுளொன்று உரிய புலவனைக் காட்டுவதாக அமைந்து நிற்கிறது.


**சதானந்தம் ராகுலன்**

*சர்வோதய வீதி, தம்பிலுவில்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சிக்கலயம் தாங்கி
காட்டுவழி போற பொண்ணே
காலுனக்கு நோகல்லையோ சொல்லு - மச்சி
காதவழி நானும் வாறேன் நில்லு - மச்சி
காதவழி நானும் வாறேன் நில்லு

காலெனக்கு நோகிற்றாலும்
கஞ்சிப்பானை பாரிச்சாலும்
காதவழி நீ வரவும் வேணா - மச்சான்
கண்டா பழி வருமே வீணா - பிறர்
கண்டா பழி வருமே வீணா

வெளஞ்ச வயலுக்குள்ள
விரைவாகப்போற புள்ள
வேகமுனக்காகாது தானே - எந்தன்
தாகமதை எண்ணிப்பாரு மானே - மச்சி
தாகமதை எண்ணிப்பாரு மானே.

வேளாண்மை வெட்டுராக
வேகமாகப் போகவேணும்
கஞ்சி கொடுத்திடத்தான் நானும் - மச்சான்
கழனி வரம்பு தாண்ட வேணும் - நானும்
கழனி வரம்பு தாண்ட வேணும்

கரடி புலியுமுண்டு
காட்டு யானை மெத்த உண்டு
உந்தனுக்கு துணையாக வாரேன் - மச்சி
எந்தனையும் கொஞ்சம் எண்ணிப்பாரேன் - மச்சி
எந்தனையும் கொஞ்சம் எண்ணிப்பாரேன்

கரடி புலி வந்தாலும்
காட்டு யானை துரத்திட்டாலும்
உள்ளத்தில் துணிவு உண்டு தானே - மச்சான்
உந்தன் துணை எந்தனுக்கு வீணே - மச்சான்
உந்தன் துணை எந்தனுக்கு வீணே

கதிரும் அறுத்த பின்பு
காலம் கனிஞ்சி வந்தா
கைப்பிடிக்க நான்வருவேன் மானே - அந்த
காலம் வரும் எந்தனுக்குத்தானே - அந்த
காலம் வரும் எந்தனுக்குத் தானே.

காலம் கனிஞ்சிவந்தா
கந்தன் துணைபுரிஞ்சா
பெத்தவங்க சம்மதங்களோட - மச்சான்
மத்தவங்க வாழ்த்துக்களும் வேணும் - மச்சான்
மாலையிடக்காத்திருப்பேன் நானும்

ஆக்கம்: **எஸ்.பி.நாதன்**
தம்பிலுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோவில் பிரதேச வனக்குறவர்களின் வாழ்க்கையும் வரலாறும்

இயற்கை எழில் கொஞ்சும் நமது ஈழமணித் திருநாட்டில் பொன்னும் மணியும் புரண்டு விளையாடும் இந்தப் புண்ணிய பூமியை நோக்கி மண்ணிலே விளையும் விளைபொருட்களை வாங்கவும் விற்கவும் வந்தவர்கள் ஏராளம். இலங்கையின் செல்வச் செழிப்பைக் கண்டு ஆசைப்பட்டோர் அதிகமானோர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றவர்களும் நம் நாட்டின் செல்வத்தை அள்ளி எடுப்பதற்காக வந்தவர்கள்தான் இச் செல்வம் நிறைந்த இலங்கைத் தீவிற்கு அக்காலத்தில் வேலைதேடி வந்தவர்கள் ஏராளமானோர். அவர்களுள் தற்பொழுது நாம் அழைக்கும் வனக்குறவர்களும் அடங்குவர்.

இவ்வாறு வேலைதேடி வந்த அந்த இனத்தவர்களுக்கு குறிப்பிட்ட வேலை ஒன்று கிடைக்காததால் தாங்கள் விரும்பியபடி காடுகளை நாடி, உணவுகளைத் தேடி எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனாலே அவர்களின் வாழ்க்கை வனப்பகுதியை அண்டியதாக இருந்தது. அதனால்தான் அவர்களை வனக்குறவர்கள் என அழைக்கின்றனர். இவர்கள் வேட்டையாடி தங்களுடைய வாழ்க்கையை நடாத்தி வருகின்றார்கள். இந்தியாவின் தெலுங்குப் பிரதேசத்தில் இருந்து வந்தபடியால் அவர்களின் பாஷை தெலுங்கு மொழியை ஒத்திருக்கிறது. ஓர் ஆய்வாளரின் கருத்துப்படி, இவர்களின் பாஷை, (பேசுகின்ற மொழி) தனித் தெலுங்கு மொழி என்று கூறமுடியாதென்றும், தெலுங்குடன் கலந்த இன்னுமொரு பாஷையும் சேர்ந்த கலப்பு மொழியாக இவர்களுடைய மொழிவழக்கு இருந்திருக்கிறது என்றும் கூறியுள்ளார். இப்போதும் கூட, எத்தனையோ மொழிகள் கலப்பு மொழியாக இருப்பது போல் இவர்கள் மொழியும் தென்படுகிறது.

திருக்கோவில் பிரதேசத்தைப் பொறுத்தவரை இந்தியாவில் இருந்து வந்த பல குறவர்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். ரெங்கன், யானைக்குட்டி, காப்புக்காரன், வெடிக்காரன், தும்மக்காராயப்பு, ராக்கண்ணா, மசக்கா, மகக்கான், ஏரண்ணா, எம்மக்கான், வெங்கிட்டன், அணுமுத்து போன்றவர்களை இங்கு நாம் குறிப்பிடலாம். இப்போது இவர்களில் அநேகமானோர் இறந்து விட்டனர். இவர்கள் வந்த ஆரம்ப காலத்தில் அநுராதபுர காட்டுப்பகுதியிலும் பின் சம்மாந்துறை, தெகியத்தகண்டி, அலிக்கம்பை, காஞ்சிரங்குடா போன்ற பகுதிகளிலும் குடியேறி வாழ்கிறார்கள். இவர்களின் சந்ததியினரே எமது காஞ்சிரங்குடா பிரதேசத்தில் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

திருக்கோவில் பிரதேசத்தில் இவர்கள் நீண்டகாலமாக சீவித்திருக்கிறார்கள். இவர்கள் வாழ்ந்த பகுதிகள் எல்லாம் காட்டுப் பகுதிகளை அண்டியதாகவே காணப்படுகிறது. நமது தமிழர் வாழ்ந்த பகுதிகளில் நெருங்கி வாழாதபடியால், குறிப்பிடத்தக்க சில வாழ்க்கை இலட்சணங்களைப் பிடித்துக் கொள்ளவில்லை. இவர்கள் வாழ்ந்த பல தலைமுறைகளை கைக் கொண்டு இலங்கை பிரஜைகளாக சேர்க்கப்படார்கள். அதனால் இவர்கள் வாக்காளர் இடாப்பில் வாக்காளர்களாகப் பதியப்பட்டுள்ளார்கள் அரசாங்கம் இவர்களுக்கு வீடு,கிணறு, மலசலகூடம், போக்குவரத்து வசதி, மாதாந்த பொதுசன உதவிப் பணம் போன்ற உதவிகளைச் செய்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழில் - வேட்டை**

இவர்களின் முக்கிய தொழில் வேட்டையாடுதல் ஆகும். வேட்டைத் தொழிலுக்கு உதவியாக நாய்களையும், கம்புதடிகளையும் பயன்படுத்தி பொறிமுறைகளையும், சுருக்குமுறைகளையும் மடுமுறைகளையும் கையாண்டு பல மிருகங்களைப் பிடித்து வாழ்க்கை நடத்துகிறார்கள். பின்னர் கம்பு தடிகளை நீக்கி அம்பு, ஈட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி போன்ற இரும்பு ஆயுதங்களையும் பயன்படுத்தி வேட்டையாடுகின்றார்கள். பல ஆண்டுகள் சென்றபின், சிலருக்கு கெப்பு துப்பாக்கி பாவிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்று வேட்டையாடி இருக்கிறார்கள். அத்துடன், காடுகளிலும் மலைப் பகுதிகளிலும் தேன் எடுத்தும் வாழ்க்கை நடாத்தியிருக்கிறார்கள். இதில் ஒரு முக்கிய விடயம் என்ன வென்றால் தேன் எடுக்கும் கூட்டில் தேன் வதைகளை எடுக்கும் போது புளுவதைகள் தென்பட்டால் அவற்றை மிக கவனமாக எடுத்து குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினருக்கும் கொடுத்து உண்டு மகிழ்வதே அதனுடைய விஷேட அம்சமாகும். இப்போது எல்லாம் அந்நிலைமாறி நாகரிக வாழ்க்கை வாழ ஆரம்பித்து விட்டார்கள்.

**மீன்பிடி**

மீன்பிடித்தலும் அவர்களது தொழிலாகும். அதிகமாக மீன்களைப் பிடித்து கருவாடாக்கி விற்பனை செய்கிறார்கள். இவர்களில் அனேகமானோர் தூண்டில் போட்டே மீன்களைப் பிடிக்கிறார்கள். ஆழமான இடங்களில் சென்று மீன் பிடிக்கும் போது முதலைகளுக்கும் பலியாகிய சம்பவங்களும் அதிகமாக இருக்கிறது.

**சாஸ்திரத் தொழில்**

சில பெண்கள் சாஸ்திரத் தொழில் செய்து பிழைக்கிறார்கள். நெற்றியிலே பெரிய பொட்டு இட்டு கை கழுத்து நிறைய வர்ணக்காப்புக்கள் அணிந்து, தலையில் மொக்காடும் இட்டு, சரியான சாஸ்திரிகளைப் போல் சாஸ்திரம் சொல்வார்கள். எங்குதான் படித்து வந்தார்களோ தெரியாது மனப்பாடமாக்கி மந்திரம் சொல்வது போல் மிக வேகமாக சொற்களை அடுக்கி ஒரு விதமான ராகத்தையும் இணைத்து சொல்லிக் கொண்டே போவார்கள். சாஸ்திரம் கேட்பவர்கள் உண்மையென நம்பக்கூடியளவிற்கு அவர்களுடைய சாஸ்திரம் சென்று கொண்டேயிருக்கும். இன்னும் சிலர் கடை கடையாகவும், வீடுவீடாகவும் சென்று பிச்சை யெடுத்துப் பிழைக்கிறார்கள். இன்னும் சிலர் பாம்புகளைப் பிடித்து தம்வசப்படுத்தி மக்கள் மத்தியிலே பாம்புகளை ஆடவைத்துப் பிழைக்கிறார்கள்.

**கல்வி**

இவர்கள் ஆரம்ப காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லை. வெறுமனே உழைப்பதும், சாப்பிடுவதுமே இவர்களுடைய வாழ்க்கையாக இருந்தது. எமது பிரதேசத்தில் உள்ள சமூக அமைப்புக்களும் சில நிறுவனங்களும், சமயப் பெரியார்களும், ஊர்ப்பிரமுகர்களும், அரசாங்கமும் இணைந்து இவர்களுடைய கல்விக்காக பல உதவிகளைச் செய்திருக்கிறார்கள். பாடசாலைகளை அமைத்து, பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்கி, கல்வியை ஊக்கப்படுத்தி இருக்கிறார்கள். இவர்களுக்கு கல்வி புகட்டுவதில் கத்தோலிக்க சமயம் அரும்பாடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு அலிக்கம்பையில் இருக்கும் பாடசாலையே முன் உதாரணமாகும். இவர்களில் பலர் படித்து முன்னேறி விட்டார்கள். இப்பொழுதும் கூட பலர் உயர்வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பிரதாய சடங்குமுறைகள்

இவர்களின் சம்பிரதாய கொண்டாட்டங்களில் மிகப் பெரிதாக கருதப்படுவதும் கொண்டாடப்படுவதுமான விழா பூப்படைதல் பெருநாளாகும். இந்தப் பெருநாள் அவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து கொண்டாடும் திருநாளாகும். இவர்களில் பலர் இப்படிப்பட்ட திருநாள் ஒன்று விரைவாக வராதா? என்று காத்திருப்போரும் உண்டு. இந்த வைபவத்தில் பல முக்கிய விடயங்கள் அடங்கியிருப்பதே இதன் சிறப்பம்சமாகும். பூப்படையும் பெண்ணை விவாகம் செய்வதற்கு காத்திருப்பவர்கள் இந்த பெருவிழாவை மிக ஆவலுடன் காத்திருப்பார்கள். கொண்டாட்ட நேரத்தில் மதுபானங்களை அருந்தி பாடியாடித் தங்களுடைய சம்பிரதாய முறைகளை காண்பிப்பார்கள். அவர்களின் பாஷையிலே அப்பாடல்கள் பாடப்படும். தாளம் போடுவதற்கென தனியாக ஒருவர் உடுக்கைகளை அடித்து (CLF) தாளத்திலே சிறப்பிப்பார். இதுவே இவ்விழாவின் சிறப்பம்சமாகும்.

பூப்படைந்த பெண்ணை உடனடியாக தனிமைப்படுத்தி விடுவார்கள். தனியான ஒரு கொட்டிலைக் கட்டி, இலைகுழைகளால் வேய்ந்து பூப்படைந்த பெண்ணை உள்ளே மறைத்து வைப்பார்கள். அப் பெண் இருக்கும் இடத்தைச் சுற்றி விஷேட சேவல் ஒன்றை வெட்டி அதனுடைய இரத்தத்தை எடுத்து பெண்ணை வளைத்து தெளித்து விடுவார்கள். தெளிக்கும் போது குறிப்பிட்ட வயது போன பெண் ஒருத்தி தங்களுடைய பாஷையில் ஏதோ மந்திரம் போன்ற ஓர் வாசகத்தைக் கூறி இந்த இரத்தத்தைத் தெளித்து விடுவார்கள். இந்நிகழ்வானது பெண்ணின் எதிர்கால பாதுகாப்பிற்காக செய்யப்படும் நிகழ்வாகும்.

கொட்டிலுக்கு வாசலில் இருந்து உட்புகும் போது மேல் தொங்கவிடப்பட்டிருக்கும் வேப்பிலைக்கு தலைவணங்கிச் செல்வது ஒரு முறையான நிகழ்வாகும். அக் கொட்டிலுக்குள் அனுபவம் வாய்ந்த வயது போன பெண்கள் மாத்திரம் செல்ல அனுமதிக்கப்படுவர். அப்பெண்ணுக்கு புளுங்கரிசிச் சோறாக்கி பல இலைகுழை வகைகளை தேர்ந்தெடுத்து, கொழுப்பில் தாளித்து வெள்ளைச் சீலை விரித்து அதில் சாப்பாடுகளைப் படைத்து உணவு ஊட்டுவார்கள். இப்படி ஐந்து நாட்கள் இக் கொட்டிலுக்குள் வைத்து குறிப்பிட்ட வேலைகள் சகலதையும் முடித்து விடுவார்கள். அடுத்துவரும் இரண்டு நாட்களுக்கும் இப் பெண்ணை மாற்றி விடுவார்கள்.

ஆறாவது நாளன்று பெண்ணை சந்திப்பவர்கள் பலரும் சந்திப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும். அடுத்த ஏழாம் நாளே இப் பூப்புநீர் வைபவம் பெரிய விழாவாகக் கொண்டாடப்படும். அவ்விழாவுக்கு குழுத்தலைவர் உட்பட சகல பிரமுகர்களும் வருகை தந்திருப்பார்கள். அந்த இடத்தில் சில பிரச்சினைகள் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படும். பின்னர் மதுபானம் அருந்துதலும் ஆடிப்பாடி மகிழ்தலும், உணவுகளை உண்டு திருப்தியடைதலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இந்த சந்தர்ப்பத்தில் இப் பெண்ணிடம் சில கேள்விகள் கேட்கப்படும்.

"நீர் எந்த மாப்பிள்ளையை விவாகம் செய்யப்போகிறீர்" என்று கேட்டால் சில பெண்கள் சிரிப்போடு அடங்கி விடுவார்கள். சில பெண்கள் 'நான் மூன்று பன்றி தூக்கும் மாமாவின் மகனைத்தான் கலியாணம் கட்டுவேன்' என்றும் 'குரக்கன் களி திண்ணும் மாமாவின் மகனைத்தான் கலியாணம் கட்டுவேன்' என்றும் பலவிதமாக சுவாரசியமான பேச்சுக்களைப் பேசி அன்றைய தினத்தை நிறைவு செய்வது வழக்கமாகும். இப்பொழுது இந்த நிலை மாறி நாகரிக வாழ்வில் ஈடுபட்டு விட்டார்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**விவாகம்**

மிகக்குறைந்த வயதில் விவாகம் செய்து விடுவார்கள். நமது சமூகத்தைப் போன்று தாய் தந்தையர் பேசியும், தானாக விரும்பியும், விவாகம் செய்வார்கள். போட்டிக்கும் விவாகம் செய்வதில் இவர்கள் கட்டுப்பாட்டுத்தன்மைகளை கடைப்பிடிப்பது மிகக்குறைவாகும். விவாகமானவுடன், கணவனின் வீட்டிற்கே அழைத்துச் சென்று விடுவார்கள். ஆண் வீட்டாரும் பெண் வீட்டாரும், மாறிமாறி ஐந்து நாட்களுக்கு இரு வீட்டுக்கும் சாப்பாடு கொடுத்து அகமகிழ்வது ஒரு விஷேட அம்சமாகும்.

**பிரச்சினை தீர்த்தல்**

அவர்களின் சமூகத்திற்குள் பிரச்சினை ஒன்று ஏற்பட்டால் தலைவருக்கு உடன் அறிவிப்பார்கள். தலைவர் சேகுவனை அழைத்து குழு அங்கத்தவர்களுக்கும் விசாரணைகளுக்கும் அறிவித்து விளங்குவார்கள். குற்றவாளியாக காணப்படுவோருக்கு தண்டனைகள் வழங்கப்படும். சிறிய குற்றம் செய்த ஒருவருக்கு நான்கு நாளைக்கு வேட்டைக்குப் போக வேண்டாம் என்று தடுத்து வைப்பார்கள். பெரிய பாரதூரமான குற்றமாயின், நிலத்தில் கிடங்குகளை வெட்டி அதில் இருத்தி வைப்பார்கள். தீர்ப்புக்களை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில், தங்களுடைய இனத்தவர் இருக்கும் பிற இடங்களில் இருந்து தீர்ப்பாளர்களை அழைத்து விளங்குவார்கள். இப்படியாக விசாரணைகளை நடத்தி முடிப்பார்கள்.

**மரண வீடு**

ஒருவர் இறந்து விட்டால் அந்த மரண வீட்டை தனிமைப்படுத்தி விடுவார்கள். அங்கு சமையல் வேலைகள் ஒன்றும் நடைபெறமாட்டாது. இறந்த பிணத்தை மடு வெட்டி புதைப்பதுதான் வழமையாகும். இறந்தவர் பெரியவரானால், அவர் அதிகமாக பாவிக்கும் சில பொருட்களையும் அவருடைய இறப்போடு போட்டுப் புதைத்து விடுவார்கள் (உதாரணமாக சாராயப் போத்தல்) பின்மூன்றாம் நாள் அவ்விடம் சென்று வணக்க முறைகளைச் செலுத்தி விட்டு, துக்கச் சாப்பாடுகளைச் சாப்பிடுவார்கள்.

**வழிபாட்டு முறை**

இவர்களின் ஆரம்பகால வணக்கமுறைகள் இயற்கையோடு ஒத்திருந்ததாக அறியப்படுகிறது. பின்னர் வள்ளியம்மை, தெய்வானையம்மாள் போன்ற தெய்வங்களோடு தங்களுடைய பக்திப்பரவசத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த வணக்கமுறையில் அநேகமானோர் பெண்களாகவேயிருந்தனர். ஆண்கள் எல்லோரும் பகல் வேளைகளில் காட்டுக்குச் சென்று தொழில்களைச் செய்யும் போது வீட்டிலுள்ள பெண்கள் இந்த வணக்கமுறைகளில் ஈடுபட்டுக் கொள்கிறார்கள். பெண் தெய்வங்களை வணங்குவதற்கு பெண்களுக்குப் பெரும் வாய்ப்பாக இருந்தது. பின்னர் படிப்படியாக தொழில் செய்வதற்கு ஈட்டிகளையும் வைத்து பூசிக்கத் தொடங்கினார்கள். பின்னர் வேல் வைத்து வணங்கத் தொடங்கினார்கள். எப்படியான வணக்கமுறைகளை எடுத்துக் கொண்டாலும், வள்ளி தெய்வானை போன்ற தெய்வங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து வாழத் தொடங்கிவிட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைத்தியம்**

ஆரம்பகால வைத்தியமாக இலைகுழை, வேர்ப்பட்டை, காய்கனி, பூபிஞ்சு போன்ற காட்டு மரங்களில் பெறும் மூகிலிவகைகளைக் கொண்டு வைத்தியங்களைச் செய்தார்கள். நோய்களைக் குணமாக்கினார்கள். இது நம்நாட்டு நாட்டுவைத்தியத்தை ஒத்திருந்தது. சிலர் நம்நாட்டு நாட்டு வைத்தியர்கள் கூட இவர்களிடம் பலவிதமான மூகிலிவகைகளை அறிந்து மருந்து செய்பவர்களும் உண்டு. இவர்களுடைய வைத்தியத்தில் பாம்புக்கடி வைத்தியமே மிகப் பிரசித்தி பெற்றதாக இருந்தது. பாம்புகளைப் பிடித்து விஷப்பற்களை பிடிங்கி நல்ல ஆகாரங்களை ஊட்டி பாம்புகளை ஆடுவதற்கு பழக்கி மக்கள் மத்தியிலே பாம்பாட்டிப் பிழைப்பவர்களும் உண்டு. சில வேர்வகைகளையும் சில இலை குழைகளையும் பாம்பு வைத்தியத்திற்கு பயன்படுத்தி வைத்தியம் செய்து வருகிறார்கள். இதனால் பாம்புக்கடியால் இவர்களின் இறப்பு வீதம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

**பொது**

பொதுவாக நோக்கும் போது இவர்களின் ஆரம்பகால வாழ்க்கைக்கும் இன்றைய வாழ்க்கைக்கும் நிறைய வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இவர்களின் இளம் சந்ததியினர் படிப்பை மேற்கொண்டு பல நல்ல காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பிள்ளை பெறுகின்ற வீதம் ஆரம்பகாலத்தைப் போலல்லாது, குறைவடைந்து வருவதைக் காணலாம். அதைப்போன்று மதுபானம் அருந்துதல், தேவையற்ற மாலை காப்புகள் போடுதல், வெற்றிலை பாக்கு மென்று துப்புதல், அழுக்கான உடுப்புக்களை உடுத்தல் போன்ற விடயங்களில் பல முன்னேற்றகரமான காரியங்கள் நடைபெறுவதை அவதானிக்கலாம்.

இறுதியாக உரலையும் உலக்கையையும் ஒரு பெண்ணுக்கு அடைக்கலமாகப் பாதுகாப்பிற்காக கொடுத்தனுப்புவது இவர்களின் சம்பிரதாயத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது. கணவன் இறந்தாலும், இருந்தாலும் அந்த உரலும் உலக்கையும் அப் பெண்ணை கடைசி வரை காப்பாற்றியே தீரும் என்ற நம்பிக்கையில் இந்த உரலையும் உலக்கையையும் பூர்வீக சொத்தாக வழங்கி வைப்பார்கள். அடுத்து நாய்களையும் சீதனமாக வழங்கி வைப்பார்கள். எனவே, வனக்குறவர்களின் வாழ்க்கையும் வரலாறும் ஆரம்பகாலத்தில் இருந்ததைவிட, மிக முன்னேற்றமான பாதையில் செல்லப்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.



**கண. இராஜரெத்தினம்**
கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைநிலத்தின் ஆன்மீக ஒளி சுவாமி நித்தியானந்தா

சுவாமி நித்தியானந்தா அவர்கள், 1949.08.24 அன்று புதன்கிழமை அம்பாரை மாவட்டத்தின் அக்கரைப்பற்று எனும் பிரதேசத்தில் திரு வி. கணபதிப்பிள்ளை, திருமதி. சின்னப்பிள்ளை கணபதிப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாக அவதரித்தார். பெற்றோர் இவருக்கு மகேஸ்வரன் என்ற நாமம் இட்டு அழைத்தனர். பாடசாலை செல்லும் பருவத்தில் பிறப்புப் பதிவில் முருகப்பன் எனும் நாமம் பெற்று, தனது ஆரம்பக் கல்வியை ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ணமிஷன் வித்தியாலயத்திலும் கற்றார். பின்பு, உயர்கல்வியை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் மேற்கொண்டார். உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற பின்பு, வவுனியா விவசாயப் பாடசாலையில் ஒருவருட விவசாயப் பயிற்சி பெற்றார். ஆங்கிலம், சிங்களம் இருமொழிகளையும் கற்று சித்தியடைந்தார்.

சிறு வயது முதல் தனது தாயாரின் ஊக்கத்தினால் தேவாரம், திருவாசகம், பிரார்த்தனைகள் ஆகியவற்றைக் கற்றுக்கொண்ட சுவாமிஜி அவர்கள், விடாமுயற்சியும், எதையும் அறியும் ஆர்வமும், ஞாபக சக்தியும், இறைபக்தியும், சுறுசுறுப்பும், எடுத்த கருமத்தை நிறைவேற்றும் திறனும், வேகமும் நிறைந்தவராக வாழ்ந்தார். இதுவே அவரது ஆன்மீக பரிணாம வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது எனலாம்.

தனது 9ஆவது வயதில் வீடு, சூழல் என்பவற்றைப் பார்க்கும் போது, தான் அந்த இடத்திற்கு உரியவனல்ல என்ற உணர்வு ஏற்பட்டது. அச்சமயத்தில் ஆலையடிவேம்பு முருகன் கோயிலுக்கு அடிக்கல் வைக்க விஜயம் செய்த போது சுவாமிஜி அவர்களின் தரிசனம் கிடைத்தது. அவரின் உந்துதலுக்கு இத்தரிசனமும் மெருகூட்டியது.

ஆரம்பத்தில் காணி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய இவர் சிங்களம், ஆங்கிலம் இருமொழியிலும் தேர்ச்சி பெற்றமையால், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக தொழில் மாற்றம் பெற்றார்.

சுவாமிஜி அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட சில அனுபவங்கள் மேலும் அவரின் உள்ளார்ந்த உந்துதலுக்கு மெருகூட்டின. ஒரு தாய் படுக்கையில் இறந்து கிடப்பதை அறியாத குழந்தை, பால் அருந்தப் போவதைக் கண்டு வாழ்வின் நிலையாமையை உணர்ந்தார்.

சுவாமிஜி அவர்களின் தாயாரின் தாய் மரணப்படுக்கையில் இருக்கும்போது தனது மடிமீது கிடத்தி அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மரணத்தறுவாயில் சிவபுராணத்தை ஓதினார். சிவபுராணவாசகம் முடிவடையும் அதே கணத்தில் அத்தாயின் உயிர் பிரிந்தமையினால் மந்திரங்கள், பிரார்த்தனைகளுக்குச் சக்தி உண்டு என்பதை உணர்ந்தார்.

இவ்வாறான பல மரணங்களைக் கண்டும், கேட்டும் அனுபவித்தும் வந்த சுவாமிஜி மரணம் என்றால் என்ன, நான் யார், கடவுள் எங்கே இருக்கின்றார்? என்ற கேள்விகளுக்கு எல்லாம் விடையைத் தேடினார். அப்போது அவ் வினாக்களுக்கு எவரும் சரியான பதில் கூறவில்லை. உண்மையைத் தேடி அவர் மனம் அலைந்தது. மனிதப் பிறவியின் நோக்கம் “மெய் அறிவை உணர்தல்” அதற்கு ஒப்ப சுவாமிஜி அவர்கள், தான் வாழ்ந்த இடத்தை விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அன்னாரின் பல பிறவிகளில் ஏற்பட்ட ஆன்மீகப் பரிணாம வளர்ச்சியின் உந்துதலால் 1974இல் தனது வீடு, தொழிலை விட்டுச் சென்றார்.

யாழ்க்கொட்டடி சிறுவர் இல்லத்தில் 6மாதமும், பின்னர் நல்லூர் ஆச்சிரமம் ஒன்றில் 6மாதமும் சேவை செய்தார். இந்தியாவிற்கு எவ்வாறு செல்வது என்ற சிந்தனை சுவாமிஜியை வாட்டியது. அப்பொழுது ஒரு பெரியார் இரு புத்தகங்களைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. In gues of God - by Swami Ramdas தெய்வத்தைத் தேடி 02. Auto Bio Graphy of yogi by Swami Paramahamsha yoganama ஒரு யோகியின் சுயசரிதை. இப்புத்தகங்களை சுவாமிஜி ஆர்வத்துடன் படித்தார். இவ்வனுபவம் சுவாமிஜிக்குத் திருப்பு முனையாக அமைந்தது.

அதன் பின் இந்தியா சென்று, மதுரை மீனாட்சியம்மனைத் தரிசித்து திருச்சி சென்றார். திருச்சியில் புழுக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார். தான் மரணிப்பதாயின், ஒரு புண்ணிய தலத்தில் தன் ஆத்மா பிரியட்டும் என்ற ஆசையோடு ஒரு பெரியவரின் வாக்கின்படி திருவண்ணாமலை சென்றார். அங்கு சென்றதும், 3நாட்களில் அவரது உடல் நிலை தேறியது. அப்போது இறைவன் திருவருளால் மகா தேவானந்தா அவர்களைச் சந்திக்கும் பாக்கியம் பெற்று, அவரின் உதவியுடன் ரிஷிகேஷ் சென்றடைந்தார்.

மிக நீண்ட பயணத்தின் பின் ரிஷிகேஷ் அடைந்ததும் அங்கு ஆன்மீகக் கல்வியைப்பெற்று யோகசாதனையில் ஈடுபட்டு 3வருடம் கடுமையான பயிற்சியை மேற்கொண்டார். அங்கு அவரின் செயற்பாடுகள் மிகவும் புனிதமானதாகவும் உண்மையானதாகவும் இருந்தது. 24மணிநேரமும் சேவையில் ஈடுபட்டார். அவர் தங்குவதற்கு கொடுக்கப்பட்ட இடம் சிறிதாக இருந்தபோதும், அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டு கருமமே கண்ணாக இருந்தார்.

கடுமையான பயிற்சியின் பின் பிரமச்சரிய தீட்சை பெற்று சிறப்பாக துறவற வாழ்வின் பயனாக 1981.07.17ஆம் திகதி புனித குரு பூர்னிமா தினத்தன்று "புனித நிவர்த்தி மார்க்க சன்னியாசியாக, ஒரு நிலைப்படுத்தப்பட்டார்." அதன் பின் சுவாமிஜி அவர்களுக்கு, நித்தியானந்த சரஸ்வதி மகராஜ் என்ற திருநாமம் கொடுக்கப்பட்டது.

சுவாமிஜி அவர்கள் ஆத்ம ஞானம் பெற்ற பின், 1988ஆம் ஆண்டு முதல் இன்றுவரை காலத்துக்குக் காலம் இலங்கைக்கு வருகை தந்து கொண்டிருக்கிறார். அவர்களின் வருகையால் கிழக்கு மாகாணம் மட்டுமன்றி, முழு இலங்கையும் பயன் பெறுகிறது. சுவாமிஜி அவர்களின் சத்சங்கம் இறு வெட்டுக்களிலும் இணையத்தளங்களின் ஊடாகவும் வெளியிடப்பட்டுள்ளது. அவைகள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத மெய்ஞானக் கருத்துக்களை விஞ்ஞானத்தோடு இணைத்து அறிவு பூர்வமாக கூறப்பட்டுள்ளன.

**உதாரணமாக:-**

01. மனிதப் பிறவியின் தன்மை
02. மனிதப்பிறவி மட்டுமே தங்கள் வாழ்க்கையைத் தாங்களே தெரிவு செய்யும் உரிமையுடையது.
03. மனிதனின் வாழ்க்கையில் இன்ப, துன்பங்களுக்கு அவனே காரணம்
04. வாழ்வாங்கு வாழும் இரகசியம்
05. வாழ்க்கைக்கு நீங்கள் தயாரா?
06. நீங்கள் நிகழ்காலத்தில் வாழப்பழகுங்கள்
07. நேரான சிந்தனை போன்றன குறிப்பிடத்தக்கன.

சுவாமிஜி அவர்கள் மனிதனின் வாழ்க்கையின் இன்ப, துன்பங்களுக்கும், வறுமை, செல்வங்களுக்கும், உயர்வு, தாழ்வுக்கும் அவனே காரணமின்றி விதியல்ல என்பார். விதியை அவனே தெரிவு செய்கின்றான் என்பதை அறிவு பூர்வமாக விஞ்ஞான விளக்கத்தோடு தெளிவாகவும், எளிய முறையிலும் பண்டிதர்களும், பாமரர்களும் விளங்கும் வகையில் சொல்வார். சத்சங்கம் நற்சிந்தனை செய்வதில் சுவாமிஜிக்கு நிகர் சுவாமிஜி அவர்களே எனக் கூறுவது மிகையாகாது.

**செல்வி. பூ. புவனேஸ்வரி**
*தம்பிலுவில்.*
*ஓய்வு பெற்ற அதிபர்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழி தமிழ்

மனித சமுதாயம் நாகரிக வளர்ச்சி பெறத் தொடங்கிய நாள்முதல் கலைகள் பல இன்பநாட்டம் கருதி வளரத் தொடங்கின. இசைக்கலை, ஓவியக்கலை, நாட்டியக்கலை, சிற்பக்கலை, பேச்சுக்கலை முதலியன இவ்வாறு குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் ஏனைய கலைகளுக்கு இல்லாத ஆற்றல் பேச்சுக் கலைக்கு மட்டுமே உண்டு. பேச்சுக் கலையால் மட்டுமே ஒருவர் கருத்தை மற்றவர் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். பேச்சுக்கலையை மொழிக்கலை என்பர்.

பழையன கழித்தும் புதியன புகுத்தியும் காலந்தோறும் தன்னைப் புதுப்பொலிவுடன் வளர்த்துக் கொண்டே வருவது தமிழ்மொழி. பலமொழிகளைத் தோற்றுவித்த போதும், தனது தனித்தன்மை கெடாமல், என்றும் இளமை குன்றாமல் வாழ்வது நம் தமிழ்மொழி. இச்சிறப்பினை அறிந்து பெ.சுந்தரம்பிள்ளை தாம் இயற்றிய மனோன்மணியத்தில் "கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் உன் உதரத்துதித்தெழுந்து, ஆரியம் போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத்திறன் வியந்து செயல்மறந்து வாழ்த்துமே" என்று தமிழைப் போற்றுகிறார்.

உலக மொழிகளைப் பற்றி பேசும்பொழுது, பக்தியின் மொழி தமிழ், விஞ்ஞானமொழி ஜேர்மனி, வியாபாரமொழி ஆங்கிலம் என்று அறிஞர் பலர் பாராட்டியுள்ளனர். எம்மொழியைக் காட்டிலும் தமிழில் அறநூல்கள் மிகுதி. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், மூதுரை என எண்ணற்ற அறநூல்களைக் கொண்டது தமிழ்.

**"தனித்தியங்கும் தன்மை தமிழினுக்குண்டு**
**தமிழே ஞாலத்தின் தாய்மொழி பண்டு"**

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பொன்மொழியும்,

**"வானம் அளந்த தனைத்தும்**
**அளந்திடும் வண்மொழி"**

என்ற பாரதியின் வாக்கும் தமிழின் சிறப்பை உணர்த்துகின்றது. தாய்மொழியை உலகமெங்கும் பரவச்செய்ய வேண்டும் என்ற ஆவல் இன்று நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றது.

**"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்"** என்பது பாரதியின் வாக்கு.

நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களுடன் ஒருங்கிருந்து ஆராய்ச்சி செய்த ஒண்தமிழ் எனத் திருவிளையாடற் புராணம் தமிழின் சிறப்பைக் கூறுகின்றது. பாரதியார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார். "இனிமைத் தமிழ்மொழி எமக்கு இன்பம் தரும்படி அமைந்திட்ட நல்லமுது" என்று வாயாரப் புகழ்கிறார் பாரதிதாசனார். புலவர் பெருமக்கள் தமிழின் எளிமை, இனிமை, வளமை கருதி இன்றமிழ், வண்டமிழ், பைந்தமிழ், பழந்தமிழ், தென்தமிழ் எனப் பலவாறு அடைமொழி கொடுத்து பாராட்டுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருத்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தாய்மொழி புகழ் செம்மொழியாம்" என்பது செம்மொழிக்குரிய இலக்கணம். இந்த வரையறை தமிழ்மொழியின் பால் அமைந்திருப்பது தெளிவு. இடர்பட்டசொல் முடிவுகளும், பொருள் முடிவுகளும் இல்லாமல் சொல்லுபவன் கருதிய பொருளைக் கேட்பவன் தெளிவாக உணரவல்லதாய், பழையன கழிதலும் புதியன புகுதலும் திருத்தம் அடைந்து நிற்பதே செம்மொழியின் சீர்மை. இச்சீர்மை தமிழ்மொழியின் பால் பொருந்தி இருப்பதால், தமிழ் "செம்மொழியே" என அறிஞர் கூறுவர்.

தமிழைச் "செம்மொழி" ஆக்கிய நாம், அதனைச் செல்வமொழியாகவும் ஆக்குதல் வேண்டும். பிறதுறை அறிவை எல்லாம் தமிழ் நூல்களாய் வடிக்க வேண்டும். முறுக்கு மீசைக் கவிஞனின் கனவான பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் எல்லாம் தமிழ்மொழியில் மொழிபெயர்த்தல் வேண்டும். நம் சந்ததியினர் அவற்றைப் படிக்க வேண்டும். அவர்கள் எதிர்காலத்தில் வணிகத்துறையை எட்டிப் பிடிக்க வேண்டும். அதற்குத் துணைபுரியும் வகையில் எண்ணுவோம். எழுதுவோம் தமிழில்! வாழ்கதமிழ் வளர்க தமிழர்!

*ஆக்கம்:*
**நா.ரூபப்பிரியகாந்தினி**



அழுபவர்களெல்லாம் சோகத்தின் சொந்தக்காரர்களும் இல்லை
ஏனெனில் ஆனந்தக்கண்ணீர் சொரிபவர்களும் உண்டு
சிரிப்பவர்களெல்லாம் மகிழ்ச்சியின் மைந்தர்களும் அல்ல
ஏனெனில் விரக்தியின் விளிம்பில் இருந்துசிரிப்பவனும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கங்கள்
நிறைந்த வாழ்வு
மணல் கிளர்ந்த பரப்பினுள்
மண் சுமந்த சுமையுடன்
புழுதிக்காற்றில் நிறம் தீட்டி
சேற்று நிலத்துள்
சுரிஊறி அப்பிய மாடாய்
செத்தே வேகும் உடலகம்
சில மாதங்கள் மட்டும்
ஈரமான பாலைவனத்தில்
ஒற்றைப்பரணுடன் வாழ்வு உறைந்து
கறையான் தின்ற கிடுகிலும்
நுளம்பின் இரத்தக்குடிப்பிலும்
வண்டரித்த மரங்களிலும்
குளிர் முறிந்த உடல்
கொள்ளித் தீனாவில் உலர்த்தும்.

எருமை மீது கொக்குகளது
இரை தேடல் ஊர்வலம்
பால் மடிவாய் வைத்து
பருகி மகிழ்வான் பட்டிக்காரன்
வாய்க்கால் நஞ்சு நீரை
குடல் நிரப்பி பசி தீர்த்த
என்னுள் பக்கத்து வயல்காரனின்
பாண் துண்டும், சீனியும்
பொழுதைக் கழித்தன
பன்றி, யானை தொந்தரவு
நடை பயணத்துள் நலிவுற்று...
செருப்புகளுள் ஊசிக்கறல்கள்
சதையை அவித்து
கால்களை கடித்து உண்ணும்
புழுத்த புண்ணில் ஊத்தை
நாறி என் உயிரின்
கடைசி வலி
வேதனையில் அழும் தாகமாய்...

இரவுக் கருமை நிறக் கலப்புடன்
துவக்கு வேட்டொலி
சப்தங்கள் தாலாட்டுப் பாடலாய்
அரவமெங்கும் விழைந்து நீள்தலில்
எழுவான் காலைக்கண்கள் திறப்பில்
சல்லடையாக்கப்பட்ட
மனித பிணங்கள் வெயிலில்
அடுக்கடுக்காய் அடுக்கி
அடையாளத்துக்காய் காயும்.
என் வறுமை மனைவி
வயல் வெளியெங்கும்
நெற்கதிர் பொறுக்கி
நாளை பொழுதுக்கான
பானை ஏற்றுவாள்.
கடவுளாக காவல்
காத்த வயலில் எனக்காய்
ஒன்றும் மிச்சமிருக்காது.
வற்றிய மடுவுக்குள்
பனையான், குறட்டை
மீன்கள் கரங்களை காயப்படுத்தின.

*இஃது,*
*உண்மையின் உணர்வுடன்,*
**கோபால் நாதன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேசத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் *செயற்பாடு*

உலகப் புகழாய் உயர்ந்த செல்வம் நற்கருப்பஞ்சாற்றிலே தேன் கலந்து, பால் கலந்து செழுங்கழுமத் தீஞ்சுவை கலந்து, இன்னமுதம் வடிக்கின்ற அரும்பெரும் செல்வமாகிய கல்வியைக் கண் எனப் போற்றி சமூகத்தின் கண்ணாடியாகவும் விழுமியத்தின் வித்துக்களாகவும், போற்றப்படும் நற் குழந்தைகளை இந்து சமய கலாசார பாரம்பரியங்களுடன் பராமரித்தும், இந்து சமயப்பண்பாட்டின் கருவூலங்களதும், ஆன்மீகச் சிறப்பினதும், விலைமதிக்க முடியாத செல்வத்தை சமூகம் அறிந்து கொள்வதற்கும், அதன் மூலம் அவர்களது உள்ளார்ந்த சக்திகளை ஒன்று திரட்டி மேலோங்கச் செய்வதற்கும், ஒன்று திரண்ட அச்சக்தியை இந்துக்களின் சமூக மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புச் செய்யும் ஆற்றலையும், மனோவலிமையையும், வளர்த்தெடுக்க அமைப்பு ரீதியான முன்னெடுப்புக்கள் காலத்தின் தேவை என உணர்ந்தறிந்த இறைபணிச் செம்மல் சுவாமிநாதர் தம்பையா அடிகளார், இலங்கைத்தீவில் நெய்தல் நிலச்சோலையில் நனிவுறும் தீஞ்சுவை கொண்ட அம்பாறை மாவட்டத்தில் இந்துக்களின் கலாசார பாரம்பரியங்கள் நிறைந்த தம்பிலுவில் கிராமத்தில் 1978-01-06 இல் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற மகுட வாக்கிற்கமைய திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தை ஸ்தாபித்தார்.

குருகுலத்தின் ஸ்தாபகர், சமய அனுட்டானம் நிறைந்த வாழ்க்கைநெறி செயற்பாடுகள், ஆற்றுகின்ற சேவைகள் எதிர்கால செயற்றிட்டங்கள் போன்றவை ஓர் காலக் கண்ணாடி. குருகுலத்தின் வளர்ச்சிப்படிகள் பரிமாணங்கள் அதன் உள்ளீடுகள் பறைசாற்ற வல்லன. திட்டமிட்ட ஒரு கருமத்தை நிறைவேற்றுதல், சுறுசுறுப்பாகப் பணிகளில் ஈடுபடல் சுயநம்பிக்கையும் பங்குபற்றுதல், சமநிலைப்படுத்தப்பட்ட ஆளுமைப் பண்புகளைக் கொண்டுள்ள இளைஞர்களை சமயத்தோடு வாழ்க்கை முறையை கடைப்பிடித்து ஒன்றித்து வாழ்க்கையின் வழிகாட்டியாகத் திகழவும், "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற முதுமொழிகளுக்கிணங்க சமயத் தொண்டுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் மட்டுமன்றி, சமூகப்பணிகளுக்கும் இந்து மதம் முக்கியத்துவமளிக்கின்றதுடன், திருத்தொண்டே தெய்வத்தை அடையும் மார்க்கம் என்பதற்கிணங்கவும், ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காணலாம் என்ற பெரியோர்களின் வாக்கிற்கமைய, திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தினை மையப்படுத்தி அரும்பணிகளை மேற்கொண்ட குருகுலஸ்தாபகர் சுவாமிநாதர் தம்பையா அடிகளார் ஓர் ஆன்மீகப் பேராளராவர்.

செல்லப்பா தேசிகர் நல்லைத் தேரடியில் நடமாடி யோகசுவாமி எனும் ஞானச்சுடர் விளக்கை ஏற்றி வைத்தார். யோகசுவாமிகள் சோதி உலகெல்லாம் இலங்கியது. இவ்அருட்சோதியால் ஈர்க்கப்பட்ட அமெரிக்கா ஹவாய் ஆதீன குருதேவர் சற்குரு சிவாயசுப்பிரமுனிய சுவாமிகளை தனது குருவாகக் கொண்ட தம்பையா அடிகளார் 1931-03-24 இல் யாழ் சுன்னாகத்தில் பிறந்து ஆங்கில ஆசானாக 1975இல் தம்பிலுவில் ம.ம.வி சேவை புரிந்த காலத்தில் எமதினிய நற்றமிழும் காலத்தால் அழியாத சனாதன தர்மமான இந்துமதமும், சமூகம் புத்துணர்ச்சி பெறவும், புதுப்பொலிவு பெற்று பெருமை பெற ஏழைக் குழந்தைகளுக்காக அன்புக்கரம் நீட்டினார். குழந்தைகளின் ஜீவனோபாயத்திற்கும் ஆன்மீகத்துடன் இணைந்த கல்விக்குமாக கிழக்கு மாகாணத்தில் முதன் முதலாக குருகுலத்தை அமைத்த பெருமையும் பெற்றார். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே குழந்தைகளுக்காக உழைத்தார். குழந்தைகளின் முல்லைச் சிரிப்பிலே இறைவனைக் கண்டார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அருள்மிக்க எதையும் ஆழ்ந்த நோக்கும், ஒளியுள்ள கண்கள் எவரையும் பணிந்து விடச் செய்யும் ஈர்த்துக்கொள்ளக் கூடிய புன்முறுவல், தான் சந்திக்கும் மனிதர்களுக்கேற்ப பழகும் பக்குவம், எதிலும் பற்றில்லை என்பதைப் பறைசாற்றும் எளிமையான தோற்றம், நேர்மையுடன் கூடிய துணிவு, விருந்தோம்பும் உயர்ந்த பண்பு, குருகுலத்தின் தொண்டர்கள், மாணவர்களிடமும் குருகுல உறுப்பினர்களிடமும் காட்டும் கண்டிப்புடன் கூடிய கனிவு என்பன அடிகளாரது போற்றத்தக்க குணாதிசயங்கள்.

இறைவன் திருவருளை நாடி கோயிலுக்குச் செல்லல், ஆலயங்களில் கூட்டு வழிபாடு, உழவாரத் தொண்டுகள், திருமுறை ஓதுதல், தண்ணீர்ப்பந்தல் நடாத்துதல், அன்னதானம், திருவாசகமுற்றோதல், சிவ சின்னங்கள் அணிதல், இறைதத்துவங்களை விளக்குதல், சிறிய கையடக்க துண்டுப் பிரசுரங்களூடாக விழாக்கள், விரதங்கள், சமய அறிவியல் என்பவற்றை வெளிப்படுத்தல், உபநியாம்சங்களை நிகழ்த்துதல், போன்ற பரிணாமங்களூடாக குருகுலப் பணிகளை நால்வர் காட்டிய நன்னெறியில் வழிநடத்திய ஓர் நற்றொண்டர் ஆவார்.

குருகுலத்தின் மகோன்னதசேவை, அறநெறிப் பாடசாலையூடாக உடல் வலுவும் மனவலுவும் ஆன்மபலமும் பெற்ற ஓர் இந்து சமுதாயத்தை உருவாக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தியமை, உகந்தை மலை ஆலயத்தினது உபதலைவராக ஏனைய அமைப்புக்களின் பணியாளராக பணியாற்றியபோது அதன் வளர்ச்சி, புதுப்பொலிவுக்கு அடிகோலியதுடன், மனித மேம்பாட்டுக்கும் சமூக நேயத்துக்கும் ஆற்றிய சேவையை கௌரவிக்கும் நோக்கில் இந்துசமய கலாசாரத் திணைக்களம் 'இறைபணிச் செம்மல்' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

உள்ளத்தில் நல்ல உள்ளம் என்றும் நிலைத்திருக்க "இதற்கு அடிகளார் ஓர் எடுத்துக்காட்டு" அவர் மறைந்தாலும், அவரது சேவைகள் அர்ப்பணிப்புக்கள் வழிகாட்டல் காத்திட திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் தொடர்ந்தும் வழிகாட்ட புதிய பரிமாணத்துடன் செயற்படுகின்றது. இறுதியாக, அழுத்தமாகக் குறிப்பிடப்பட வேண்டியது யாதெனில், எம் இந்துக்கள் அறியாமை மிக்கவர்கள், கல்விச் செல்வத்திலும் பொருட் செல்வத்திலும் பின்தங்கியவர்கள். முப்பது வருடங்களுக்கு மேலாக நசுக்கப்பட்டவர்கள். சிதைக்கப்பட்ட சமூக அமைப்பின் கீழ் வாழ்பவர்கள் பல எதிர் பார்ப்புகளுடன் அத்தகைய சூழ் நிலையிலிருந்து விடுபட அபிலாசைகள் கொண்டுள்ளனர். எனவே இவ்இந்துக்களின் நலனுக்காகப் பாடுபடும் முயற்சியை நாம் மேலும் விரிவாக்க வேண்டும். நாள்தோறும் அல்லலுறும் ஏனைய மதத்தவரின் ஆளுமைக்கு உட்படும் இந்துக்களின் நல்வாழ்வை மீட்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு. எனவே, இச்சமூகம் எழுச்சிபெற இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்து விடுபட சமயத்தொண்டு மட்டுமல்ல, சமூகத்தொண்டும் அவசியமானதாகும்.

திருநாவுக்கரசு நாயனார் குரு குலத்தினூடாக "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதை மனதிற் கொண்டு, மனங்களில் ஐக்கியப்பாடு, கூட்டுறவு, வாழ்க்கை, நல் வாழ்க்கைநெறி, இந்துக்கள் மத்தியில் வளர்த்தெடுக்க அனைவரும் இணைந்து பங்காற்றுவோமாக.

**'என் கடன் பணி செய்து கிடப்பதே'**

**கண. இராஜரெத்தினம்** – பணிப்பாளர்
**பா. சந்திரேஸ்வரன்** – பொதுச் செயலாளர்
*திருநாவுக்கரசு நாயனார் குருகுலம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள் மத்தியில்

# பல்கலைக்கழகங்களும் பாடசாலைப் படிப்பகங்களும்



இன்றைய உலகில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து சந்திர மண்டலத்திற்கும் அப்பாற் சென்று கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்திலே எதிர்கால மாணவர்களின் வளர்ச்சி கருதி உலக நாடுகளின் விஞ்ஞான உயர்ச்சியை எட்டிப் பிடிக்கும் முயற்சியில் பாடசாலைகள் தோறும் பாடசாலை நூலகங்கள் இருப்பது மிகவும் அவசியமானதொன்றாகும்.

பல்கலைக்கழகங்கள் செல்ல வேண்டும், பட்டங்கள் பலவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாரினில் உயர்ந்தவர்களாய் உயர்வான வாழ்க்கை வாழ வேண்டும் என்று திட சங்கற்பம் பூண்டு உடல்களைக் கூட நன்றாகக் கவனிக்காது அந்த வகுப்பு, இந்த வகுப்பு என்று நாளாந்தம் அலைந்து கல்வியைக் கற்றுவரும் மாணவமணிகளின் எதிர்காலம் சிறப்பானதாகத் திகழ வேண்டும். அவர்கள் புத்தி ஜீவிகளாக வாழ வேண்டும், ஒழுக்க சீலர்களாக மிளிர வேண்டும் என்பதற்காகப் பல்கலைக்கழகங்களும் பாடசாலை நூல் நிலையங்களும் எனும் தலைப்பில் இக்கட்டுரையை எழுதுகிறேன்.

### பல்கலைக்கழகங்கள்

பல்கலைக்கழகங்கள் என்று கூறும் போது, மாணவர்கள் தங்களின் திறமைகளை நுட்ப நுணுக்கங்களை ஒன்று திரட்டி ஒப்படைக்கும் ஓர் புனித பீடமாகும். மாணவர்களது எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கும் ஓர் உயர் பீடமாகும். மாணவர்களின் கற்கைநெறியின் திறமைகளை வெளிப்படுத்திக் காட்டக்கூடிய களமாகும். இப்படி உயர்வான தத்துவ பீடம் இலங்கையில் 1921ஆம் ஆண்டு கொழும்பு தேஸ்டன் வீதியில் பல்கலைக்கழக விதை ஒன்று நடப்பட்டது. அது பல்கலைக்கழக கல்லூரியாக பெயர் பெற்று, விருட்சமாக வளரும் போது பல்கலைக் கழகத்திற்கான இடம் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும் என்று பல புத்தி ஜீவிகள் ஒன்று கூடி பொருத்தமான ஒரு இடத்தைத் தெரிவு செய்தார்கள். இதன் பயனாக, 1942ஆம் ஆண்டில் கண்டி பேராதனை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பின் 1966ஆம் ஆண்டு கொழும்பு தேஷ்டன் வீதியில் நடைபெற்று வந்த பல்கலைக்கழக கல்லூரி, கொழும்பு பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்று தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவைகளே இலங்கையின் பல்கலைக்கழக ஆரம்பமாகும்.

இலங்கையில் பதினான்கு மாவட்டங்களில் பதினைந்து தேசிய பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறையில் இருக்கிறது. மாணவர்களின் நன்மை கருதி பல மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பல பிரிவுகள் மாணவர்களின் நன்மை கருதி கற்கக் கூடிய முறையில் அமைக்கப்பட்டிருப்பது விஷேட அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. கொழும்புப் பல்கலைக்கழகம்

கலைப் பீடம்

கல்விப் பீடம்

சட்ட பீடம்

முகாமைத்துவக் கணக்கியல் பீடம்

மருத்துவ பீடம்

பட்ட மேற்படிப்புப் பீடம்

நுண்கலை தொடர்பான பீடம்



02. பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையில் முதன்முதலாக தோன்றிய பல்கலைக்கழகமாகும். கண்டிமாநகரின் இயற்கைச் சூழலுக்கு அமைவாக, அழகான மரநடுகைக்கு மத்தியில் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக் கழகத்திலும் கொழும்பு பல்கலைக்கழகத்தைப் போன்று ஏழு பீடங்களும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆதிகாலம் தொட்டு இன்றுவரை வைத்தியத்துறைக்கு மாணவர்கள் கல்வி கற்பதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவாக அமைந்திருப்பதே இதன் சிறப்பம்சமாகும்.



03. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

04. களனி பல்கலைக்கழகம்

05. மொறட்டுவ பல்கலைக்கழகம்

06. யாழ் பல்கலைக்கழகம்

07. றுகுணு பல்கலைக்கழகம்

08. கிழக்குப் பல்கலைக்கழகம்

09. தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

10. ரஜரட்டப் பல்கலைக்கழகம்

11. வயம்ப பல்கலைக்கழகம்

12. ஊவா, வெல்லச பல்கலைக்கழகம்

13. கட்புலன் மற்றும் அளிக்கும் ஆற்றுக்கலைத் துறைக்கான பல்கலைக்கழகம்

14. சப்ரகமுவ பல்கலைக்கழகம்

15. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பல்கலைக்கழகம் பதினைந்தும் தங்களது பீடங்கள் சம்பந்தமான பாட நெறிகளை நடாத்தி வருகிறது. மாணவர்களின் கற்கை நெறிகள் அதிகரிக்க பல்கலைக்கழகங்களும் ஒவ்வொரு மாவட்டங்கள் தோறும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் அதிசக்தி வாய்ந்த நூலகங்களும் அமைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. யாழ் நூலகம், கொழும்பு நூலகம் போன்ற நூலகங்கள் அதனதன் பல்கலைக்கழகங்களுக்கு உதவியாக இருக்கிறது. மாணவர்களின் கற்கை நெறிகளையும் ஒழுக்க நன்நெறிகளையும் ஆசிரியர்களின் துணையின்றி, மாணவர்கள் கற்பதற்கும் பொது அறிவுகளை பெறுவதற்கும் நூலகமே பொறுப்பானதாக இருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நூலகத்தின் மூலமாக எத்தனையோ புத்தி ஜீவிகள் உருவாகி இருக்கிறார்கள். எனவே, பல்கலைக்கழகங்கள் படிப்புக்களை முடித்து, பட்டங்களைப் பெறுவதற்கு நூலகங்களே பொறுப்புள்ளதாக இருக்கிறது. மாணவர்கள் இதனை நன்கு பிரயோசனப்படுத்தினால், கல்வியில் முன்னேற்றம் அடையலாம் என்பது உறுதியாகும்.

## பாடசாலை நூலகங்கள்:

இலவசக் கல்வி வறிய மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். இலவசக் கல்வியின் மூலமாக எத்தனையோ வறிய மாணவர்கள் படித்து அறிஞர்களாகவும், புத்தி ஜீவிகளாகவும், சமூக சீர்திருத்தவாதிகளாகவும் இருந்து வருவதை நாம் அவதானிக்கலாம். இலங்கையில் இலவசக்கல்வி 1945ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இலவசக் கல்வியை போன்றே பாடசாலை நூல் நிலையங்களும் செயற்படுகின்றன. இலவசக் கல்வியை மாணவர்கள் பெறுவது போல் நூல் நிலையங்களிலும் இலவசமாய் கல்வியை கற்றுக் கொள்ளலாம். எந்தவித செலவுகளுமின்றி, யாருடைய உதவிகளுமின்றித் தாமாகவே சுதந்திரமாக சுயாதீனமாக அச்சமின்றிப், போட்டி பொறாமைகளின்றி கல்வியை கற்கக் கூடிய பொது அறிவுகளை பெற்றெடுக்கக் கூடிய சிறப்பான பொது இடமே இந்த நூலகமாகும். பாடசாலை நூலகத்தின் தன்மை பற்றி, அதன் சிறப்பு நோக்கங்கள் பற்றி விளக்க ருத் ஆன் டேவிஸ் (Ruth-Ann Davis) எனும் நிபுணர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

> **"ஒரு பாடசாலையின் முழுமையான கல்வித்திட்டத்தோடு**
> **ஒருமித்து ஆதரவளிக்கும் ஓர் அங்கமாக பாடசாலையின்**
> **நூலகம் இயங்கும் போது அது கல்வித்துறையில்**
> **அதி உன்னத நிலையை எய்த உதவும் சக்தியாக**
> **பரிணமிக்கிறது. ஒரு பாடசாலை நூலகத்தின்**
> **சேவைத் திட்டமும் அப்பாடசாலையின் கல்வித் திட்டமும்**
> **இணைபிரியாத பரஸ்பர தொடர்புடையதாகும்."**

என்று மிகத் தெளிவாக சுருக்கமாக நல்ல கருத்துக்களைக் கூறியிருப்பதன் மூலம் பாடசாலை நூலகத்தின் அவசியத்தை வெளிப்படுத்தி இருப்பது அதன் சிறப்பம்சமாகும்.

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதத்தில் வரும் நான்காவது திங்கட்கிழமை உலக பாடசாலை நூலக தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக உலகின் பல பாகங்களிலும் உலக பாடசாலை நூலக தினம் கொண்டாடப்பட்டுள்ளது. இலங்கையில் கடந்த பத்து ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகிறது. இலங்கையில் முதலாவது பாடசாலை நூலகத்தின் கொண்டாட்டம் 2001ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை குருணாகல் நகரிலுள்ள பொத்து ஹெர மகாவித்தியாலயத்தில் கொண்டாடப்பட்டது. அடுத்து 2002ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் திகதி திங்கட்கிழமை அனுராதபுரம் மத்திய கல்லூரியில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த கல்வி அமைச்சர் சுசநிமல் ராஜபக்ஷ அவர்கள், அடுத்து வரும் அக்டோபர் மாதம் நான்காவது திங்கட்கிழமையிலிருந்து தொடர்ந்து வரும் ஐந்து நாட்களையும் சேர்த்து பாடசாலை நூலக வாரமாக பிரகடனப்படுத்தி, நடைமுறைப்படுத்தினார். இப்பொழுதும் தொடர்ந்து ஒவ்வொரு பாடசாலை நூலகத்திலும் நூலக வாரமாக கொண்டாடப்பட்டு வருவது தெரிந்த விடயமே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நூலகத்தைப் பற்றி சற்று ஆழமாகப் பார்த்தால் அநேகமான பாடசாலைகளில் நூலகங்கள் இல்லை. பெரிய பாடசாலைகளில் நூலகங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. சில பாடசாலைகளின் நூலகத்திலுள்ள புத்தகங்கள் காட்சிப் பொருளாக அலுமாரியில் வைக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இன்னும் சில பாடசாலைகளில் மாணவர்களுக்கு நூலகம் ஒன்று இருப்பதே தெரிவதில்லை. சில பாடசாலைகளில் இருக்கும் நூலகப் புத்தகங்களை மாணவர்களோ, ஆசிரியர்களோ எடுத்துப் படிப்பதில்லை. இன்னும் சில பாடசாலைகளில் நூல்களிலே புழுதிகள் படிந்ததாகவும் குப்பை கூழங்கள் நிறைந்ததாகவும் காணப்படுவதை அவதானிக்கலாம். இப்படி எத்தனையோ குறைபாடுகளை இங்கு சுட்டிக் காட்டலாம். இன்றைய கல்வித் திட்டத்திற்கு அமைவாக பாடசாலைப் படிப்பு மாத்திரம் போதுமானதாக இல்லை. நூலகங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ளும் அறிவு அவசியமாக தேவைப்படுகின்றது. எனவே, ஒவ்வொரு பாடசாலைகளிலும் நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும். அவற்றுடன் மாணவர்கள் நூலகம் சென்று பொருத்தமான நூல்களைத் தெரிவு செய்து கற்க வேண்டும் எனும் அவசியத்தை ஆசிரியர்களும் பெற்றோர்களும் முக்கிய கவனம் செலுத்தி பங்கு கொள்ளச் செய்வது முக்கிய தேவையாக இருக்கிறது.

இன்றைய கல்வித்திட்டத்திற்கு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதை மட்டும் மனனம் செய்து ஒப்புவிக்கும் கிளிப்பிள்ளைகள் மாதிரி மாணவர்கள் இருந்தால் மட்டும் போதாது. பரந்த அறிவு இருந்தால்தான் மாணவர்கள் உயர்ந்த நிலையை அடையலாம். அதற்கு மூலகாரணம் பாடசாலை நூலகமேயாகும். இன்றைக்கு பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. வகுப்பறையில் ஆசிரியர்கள் இல்லாத வேளை மாணவர்கள் வீணாகக் காலத்தை கழிப்பதும், நேரத்தைப் போக்குவதும் எதிர்கால சந்ததியினருக்கு பெரும் சவாலாக அமையுமல்லவா! அதனால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நூலகங்கள் சென்று நன்மை பயக்கும் நூல்களை எடுத்து அறிவைப் பெறுதல் கட்டாய தேவையாக இருக்கிறது. மாணவர் கள் மத்தியில் வாசிப்புத்தன்மை குறைவடைவதும் விளங்கிக் கொள்ளும் தன்மையை அறிந்து கொள்வதற்கும் நூல்களை வாசிக்காத குறைபாடேயாகும். பரீட்சையில் கேள்விகளை வாசித்து விளங்கிக் கொள்ளாத் தன்மையால் கேள்விகளுக்கு விடை தெரிந்தும் எழுத முடியாது. பரீட்சையில் தோல்வியைக் காண முடிகிறது. இந்த நிலையால் மாணவர்களது உயர்படிப்பு மளுங்கடிக்கப்படுகின்றது. எனவே, மாணவர்கள் பாடசாலை நூலகம் சென்று கல்வி கற்கும் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தொடர் மதிப்பீட்டு ஒப்படை எழுதுவதற்கு நூலகங்களிலுள்ள நூல்கள் பெரும் உதவியாக இருக்கிறது. இன்றைய பாடசாலை நூலகங்கள் இந்த நோக்கத்தை முன்னிறுத்தி அமைக்கப்படுகின்றது. உலக வங்கியின் பொருளுதவியுடன் கல்வி அமைச்சு நூலக வளர்ச்சிக்காக பொதுக் கல்வித் திட்டம் இரண்டு பாடசாலை நூலக வளர்ச்சி அலகின் ஊடாக நூலகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. முதல் கட்டமாக 4000 பாடசாலைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது நாட்டின் பல பாகங்களிலும் 93%இற்கு மேல் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகையால், மாணவர்கள் இச்சந்தர்ப்பங்களை நழுவ விடாது பயன்படுத்திக் கொண்டால், கல்வி வளர்ச்சியில் மாணவர்கள் பூரண அறிவைப் பெற்று உயர்வான வாழ்க்கை வாழலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் A பிரிவில் 250 பாடசாலைகளும்

B பிரிவில் 1750 பாடசாலைகளும்

C பிரிவில் 2000 பாடசாலைகளும்

அரசிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் பாடசாலை நூலகங்களுக்குரிய உதவியைப் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வளவு உதவிகளும் மாணவர்களின் நன்மை கருதி அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக நடைபெற்று வருகின்றது.

## பாடசாலை நூலகங்களினால் ஏற்படும் நன்மைகள்

01. பாடசாலை நூலகத்தின் மூலம் மாணவர்கள் பரந்த அறிவைப் பெற்றுக்கொள்ளல்.
02. ஆசிரியர் இல்லாது அறிவைப் பெற்றுக்கொள்ளல்.
03. ஓய்வு நேரத்தை பிரயோசனப்படுத்துதல்.
04. வாசிப்புத்தன்மையை உயர்வடையச் செய்தல்
05. தாமாகவே விளங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளல்.
06. மாணவர்கட்கு திணிக்கப்படும் கட்டுப்பாடுகளை மீறி தாமாகவே சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயல்பட கற்றுணர்தல்.
07. ஒரு வகுப்பில் 40 நிமிட நேரத்தில் 40 மாணவர்கட்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கும் போது எல்லா மாணவர்களும் பாடத்தைப் புரிந்து கொள்வார்களா? மாணவர்களின் திறமைகளை ஆற்றல்களை இந்த 40 நிமிட கற்கையின் போது நெறிப்படுத்த முடியாது. நாளடைவில் மாணவர்களின் அறிவு மங்கி மழுங்கடிக்கப்படுகிறது. அவ்வறிவை நிவர்த்தி செய்ய நூலகமே அவசியம்.
08. பாடசாலையில் அல்லது வகுப்பில் ஆசிரியர்கள் பற்றாக்குறையின் மூலம் ஏற்படும் படிக்காத நேரங்களை பிரயோசனப்படுத்துதல்
09. வகுப்பறைகளில் பெரும் சத்தம் போட்டு குழப்படிகள் பண்ணுகின்ற தன்மைகள் நிறுத்தப்பட்டு அறிவைப் பெருக்கிக் கொள்ளல்.
10. இலவசமாக கொடுக்கப்படும் நூல் மாத்திரமன்றி, வேறு நூல்களையும் பெற்று அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்.
11. மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும், பாடசாலை நூலகத்தின் மூலம் தேவையான பாடத்தையும், பொது அறிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, உலகளாவிய ரீதியில் நூலகம் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. மாணவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், புத்தி ஜீவிகளாக மாற வேண்டுமானால், ஒழுக்க சீலர்களாக மிளிர வேண்டுமானால் நூலக நூல்களை கற்க வேண்டியது அவசியமான தொன்றாகும். நூலக பொறுப்பாளரும், ஆசிரியர்கள், பெற்றோர்களும் இணைந்து மாணவர்களுக்கு வாசிப்பதற்கான ஊக்கத்தைக் கொடுத்து முயற்சி செய்தால் எதிர்காலத்திலே நல்ல தலைவர்களை உருவாக்கிக் கொள்ளலாம்.

- நன்றி -

குறிப்பு: பல நூல்களிலும், கட்டுரைகளிலும், வெளியீட்டு மலர்களிலும் தொகுத்து எழுதப்பட்டவையாகும்.

**எம். கந்தப்பன்**

(ஓய்வு பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம சேவைப் பிரிவுகளுக்கான பட்டதாரி உத்தியோகத்தர்கள்



நிர்வாகப் பிரிவிற்கான பட்டதாரி உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் வாழ்வில் கிரியைகள், சடங்குகளின் முக்கியத்துவம்.



பூமியும் அதனைச் சுற்றியிருக்கின்ற கோள்களும் உயிரினங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இயங்குகின்றது. இதன் உண்மையினை ஆராயும் பொழுது இவற்றையெல்லாம் செயற்படுத்த மேலான ஒரு சக்தி இருக்க வேண்டுமல்லவா. இச்சக்தியைக் கடவுள் என்று நாம் அழைக்கின்றோம். பெறுவதற்கரிய மக்கட் பிறப்பினை எடுத்த நாம் "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்குவது" பொருந்தாது. பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை. எனவே நாம் அன்பையும், அருளையும் ஈட்ட முயல வேண்டும்.

சைவசமய கிரியை, சடங்குகள் சம்பிரதாயங்கள் பொருத்தமான காரணங்களுடன் எழுந்தவை ஆகும். அக்காரணங்களை ஒவ்வொருவரும் முயன்று அறிதல் வேண்டும். அறிவியல் வளர்ச்சி மிகுந்து வரும் இந்நாளில் எதனையும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆராய்ந்து ஏன்? எப்படி? என்று அறிதல் பொருத்தமானது. ஒரு மனிதன் பிறப்பு முதல் இறையடி சேர்வதன் வரையும் தன் வாழ்வியல் காலத்தில் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், கிரியைகளையும் பின்பற்றி வாழ்கின்ற தன்மையினையும் அதற்கான தத்துவ விளக்கங்களையும் நோக்குவோம்.

**கிரியை**

வாழ்வியல் ரீதியில் கிரியை எனும் பதத்தை நோக்கும் போது ஒரு காரியம் வெற்றிபெற வேண்டியும், அது குறைவின்றி இனிதே நிறைவுற வேண்டும் என்பதற்காக வேண்டியும் ஏதும் தோஷங்கள் ஏற்படாமலும், அல்லது ஏதாவது தோஷக்குறைபாடு இருந்தால், அவற்றை வெற்றி கொள்வதற்காகவும் மேற்கொள்ளப்படுவதே கிரியை ஆகும்.

*01. பூர்வக் கிரியை*
*02. அபரக்கிரியை*

என முக்கியமாக இருவகைக் கிரியை முறைகள் எம்மக்களிடையே நிகழ்த்தப்படுவதை நாம் காணலாம்.

பூர்வக்கிரியைகளாக மங்கல கரம் கொண்ட செய்கைகளின் கிரியை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில்:

*01. தீட்ஷைக் கிரியை / உபநயம்*
*02. பூணூல் தரித்தல் கிரியை*
*03. ஆலயக் கிரியைகள்*
*04. வீடு குடிபுகுதல் (வீடு கட்டுதல்முதல்)*
*05. முடிஎடுத்தல் கிரியை*
*06. துடக்கு நீக்குதல் கிரியை*
*07. பூப்படைதல் கிரியை*
*08. திருமணக் கிரியை*

மற்றும் பல வற்றைக் குறிப்பிட முடிகின்றது. ருது சந்தனம், கருப்பாதானம், பும்சவனம், சீமந்தம், ஜாதகன்மம், அபரக்கிரியை பொதுவாக அமங்கலக் கிரியையான ஈமக் கிரியையினையே குறிப்பிடப் படுகின்றதை நாம் நோக்கினும் மிகமுக்கியமாக திருமணக் கிரியை மற்றும் ஈமக்கிரியையினையுமே மிக விரிவாக இவ்விடத்தில் நோக்குவது அவசியமாகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விவாகக் கிரியை:-

பூர்வக்கிரியையுள் ஒன்றாகவும், இல்லக்கிரியையுள் ஒன்றாகவும் இக்கிரியை விளங்குகின்றது. வேதங்கள் என்பவை மணங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. வேதகலாசாரம் பரவிய மக்களிடையே எண்வகை மணங்களும் வழக்கிலிருந்தன. ஆனால் அரச பரம்பரையினரிடையே மாத்திரம் சுயம்பர மணம் கடைபிடிக்கப்பட்டது. சங்ககால தமிழ் மக்களிடையே உயர்ந்த மணமாக காந்தர்வம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இம்மணம் களவு மணமான காரணத்தினால் பின் கற்புமணமாக்க வழிவகை செய்தனர். இதனை தொல்காப்பியனார்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

எனக் கூறியுள்ளார். பிரமம், பிரசாபத்தி, ஆரிடம், தைவதம், காந்தர்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய எண்வகை மணங்களுள் "பிரசாபத்தியமணமே இன்று எம்மிடையே வழக்கத்திலுள்ளது.

பிரசாபத்திய மணமானது கொடுப்போரும் அடுப்போடும் கலந்து பேசிச் செய்யும் திருமணமாகும். இவை இன்றைய நிலையில் சிவ வழிபாட்டுடன் அல்லது விநாயக வழிபாட்டுடன் செய்யப்படுகின்றது. சிவ வழிபாட்டுத் திருமணம் சமய பூர்வமானது. எனச் சொல்லலாம். கணபதி வழிபாடான காணாபத்திய நெறி செல்வாக்குப் பெற்ற காலத்தில் விநாயக வழிபாட்டுத் திருமணம் இடம் பெற்றிருத்தல் வேண்டும். ஆலயங்களில் திருமணக்கிரியை நடைபெறுவது வழக்கிலுண்டு. ஆனால் வேத விதிப்படி இல்லத்திலேயே திருமணக்கிரியை நடை பெறுதல் வேண்டும்.

திருமணத்தின் ஆரம்ப நிலையானது மணமக்களின் சாதகங்கள் பொருத்தம் பார்த்தலாகும். அதன் பின் நல்லோரையில் (சுபநேரத்தில்) "பொன்னுருக்கல்" என்னும் சடங்கு மணமகனில்லத்தில் நடைபெறும். உருக்கப்பட்டே தாங்கடி மாங்கல்யம் செய்ய உதவுகின்றது.

சில இடங்களில் மணமகன் கடுக்கன்பூணல், தலைப் பாகை அணிதல் என்பனவும் இத்தினத்திலேயே இடம் பெறுகின்றன. மணமகளில்லத்தில் கன்னிக்கால் நாட்டுதலும், ருது காலத்தில் ருதுசாந்தி செய்யப்படுதல் மரபு. தவறினால் இது திருமணத்திற்கு முன் செய்யப்படுகின்றது.

சில வருடங்களுக்கு பின்நோக்கிப் பார்ப்போமானால் சாதாரண குடும்பங்களிடையே "சோறு கொடுப்பித்தல்" என்பதனோடு திருமணங்கள் நிறைவேறியுள்ளன. அத்துடன் பெரியவர் ஒருவர் முன்னின்று தேங்காய் உடைத்து மாங்கல்யம் அணிவித்தலும் வழக்கில் இருந்து வந்தது. இதுவரை வழக்காற்று முறைத் திருமணங்களைப்பற்றி கூறினேன். இனி சாத்திர முறைப்படி கிரியையின் அங்கங்களை நோக்குவோம்.

**விவாகக்கிரியை:-**

1. பஞ்சகவ்விய பூசை
2. சங்கற்பம்
3. விக்னேஸ்வர பூசை
4. மஞ்சட்காப்பு கட்டுதல்
5. சந்திர கும்ப பூசை
6. சிவகும்ப பூசை
7. நவக்கிரக பூசை
8. சிவாக்கினி வளர்த்தல்
9. கூறை கொடுத்தல்
10. மாலையிடுதல்
11. நாத்திமுக பூசை
12. கன்னிகாதானம் செய்தல்
13. மாங்கல்ய தாரணம் (தாலிகட்டுதல்)
14. பால்பழம் கொடுத்தல்
15. கோதரிசனம்
16. ஏழடி நடத்தல்
17. அம்மிமிதித்தல்
18. அருந்ததி காட்டல்
19. ஆசீர்வாதம்
20. அறுகரிசியிடல்
21. ஆரத்தி எடுத்தல் எனும் அங்கங்களைக் கொண்டுள்ளது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகம் எனும் பதத்திற்கு ஏற்றுக் கொள்ளுதல் என்றும், பாணிக்கிரகணம் என்னும் சொல்லுக்கு கைப்பிடித்தல் என்றும் அர்த்தம் கொள்ளப்படுகின்றது. திருமணத்திற்கு கிழக்கு நோக்கி மணவறையும், அதற்கெதிரில் அரசாணியும், மாவிலை தோரணங்களும் அமையப் பெற வேண்டும்.

**பஞ்சகவ்விய பூஜை:-**

பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பவற்றோடு தருப்பை சேர்த்து நீரும் கலக்கப்பட்டு பூசிக்கப்படுகின்றது. இது ஸ்தான சுத்தி, திரவிய சுத்தியின் பொருட்டும், மணமக்களின் சுத்தியின் பொருட்டும் செய்யப்படுகின்றது.

**சங்கற்பம்:-**

நடைபெறும் திருமணக் கிரியை இடையூறின்றி நிறை வேற வேண்டும் என்பதற்காக விநாயகப் பெருமானை நினைத்து சங்கற்பித்து பிரார்த்திப்பதாகும். சங்கற்பம் செய்யப்பட்டதற்கு அறிகுறியாகப் பவித்திரம் என்னும் தருப்பையாலாகிய மோதிரம் இடப்படுகின்றது.

**விக்னேஸ்வர பூசை:-**

நடைபெறும் காரியம் எத்தடையுமின்றி இனிதே நிறைவுற மஞ்சள் மாவினால் விநாயகர் உருவாக்கப்பட்டு முறைப்படி பூசை செய்து தேங்காய் உடைத்து வழிபடப்படுவர்.

**காப்புக்கட்டுதல்:-**

மணமக்கள் பார்வதி பரமேசுவரராக வீற்றிருக்க காப்புக் கட்டுதல் மூலம் விவாகக் கிரியை முடிவுறும் வரையில் அவர்கள் இரட்சிக்கப்படுகின்றனர். மந்திரிக்கப்பட்ட நூலினால் ஆகிய காப்பு வலிமையுடையது. கட்டியுள்ளவர்களை தொடக்கு முதலியன பற்றாது என்பது சாத்திர சம்மதமுமாகும். மணமகனுக்கு வலது கையிலும், மணமகளுக்கு இடது கையிலும் கட்டப்படும். கட்டும் போது தேங்காய் உடைப்பது மரபாகும்.

**சந்திர கும்பபூசை:-**

திருமணக் கிரியையின் போது நடைபெறும் அங்குரார்ப்பனம் சந்திரகும்ப பூசையாகும். சந்திரன் இங்கு அமிர்தேஸ்வரன் எனப்படுகின்றான்.

**சிவகும்ப பூசை சிவாக்கினி வளர்த்தல்:-**

சிவன் மேற்கு நோக்கிய சத்தியோசாதமுகத்துடன் வீற்றிருப்பார். இவர் மந்திர பேராகி பூசிக்கப்படுகின்றார் சிவன் கும்பத்திலும், அக்கினியிலும் பூசிக்கப்படுகிறார். இறைவனுக்கு விசேடமான இருப்பிடங்களுள் ஒன்று அக்கினி ஆகும். அக்கினி ஒரு பிராயச்சித்தப் பொருளாகும். இதன் தொழில் கொடுத்தலாகும். மனிதனால் கொடுக்கப்படும் திரவியங்களை தெய்வத்திற்கு கொடுப்பதும், தெய்வத்தால் கொடுக்கப்பட்டவற்றை மனிதனுக்கு கொடுப்பதும் இதிலடங்கும். அக்கினி ஒரு சாட்சிப்பொருளாகவும் உண்மை தவறாமல் வாழ மனிதன் அக்கினியைக் கொண்டு சத்தியம் செய்தான். இந்த மரபு திருமணக் கிரியையிலும் இடம் பெறுகின்றது. இந்து மதக்கிரியைகள் யாவற்றிலும் அக்கினி வளர்த்தல் மிக முக்கிய அங்கமாகின்றது.

**கூறை கொடுத்தலும் மாலையிடலும்:-**

திருமணக் கிரியையிலே இதனை மந்திரவாசம் வழங்கல் எனக் குறிப்பிடப்படுகின்றது. புதிய வஸ்த்திரம், மாலை, அலங்காரப் பொருட்கள், மங்களப் பொருட்களான மஞ்சள், குங்குமம், தேசிப்பழம், மஞ்சள்நிற வாழைப்பழம் போன்றன கூறையோடு இடம் பெறும். கூறையை தட்டில் வைத்து எல்லோரையும் கொண்டு தொடுவிப்பதும் நல்ல சீர்வாதம் பெறும் நோக்கமேயாகும்.

வேத விதிக்கிரியைகள் சீதனம் அளிக்கும் வழக்கத்தை குறிப்பிடுகின்றன.

"கன்யாம் கனகசம்பன்னாம்" எனும் சுலோகம் இதனை மிகத் தெளிவுபடுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வழக்கில் சீதனம் கொடுக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. இதனாலேயே கூறை கொடுத்தல் பொருத்தமாக இருக்கும். எமது சமய ரீதியாக மந்திரவாசம் வழங்கல் முக்கியமேயன்றி கூறை உடுத்தலைப்பற்றிக் குறிப்பிடவில்லை.

கூறை கொடுத்தல் கன்னிகாதானத்திற்கு முன்னும், பின்னும் இதே போல் மாங்கல்ய தாரணத்திற்கு முன் மாலை மாற்றுதல், பின் மாலையிடலும் முக்கியம் பெறுகிறது.

**கன்னிகாதானஞ் செய்தலும் நாத்தி முகமும்:-**

திருமணக் கிரியையில் மிக முக்கியம் வகிப்பது இதுவாகும். மணமகன், மணமகளின் நான்கு வகை உறவுவழி கோத்திரம் என்பன புரோகிதரால் சபையில் உரைக்கப்பட்டு இந்தப் பெண்ணை தத்தம் செய்கின்றோம் என மணமகளின் தாயும், தந்தையும் தாரைவாத்து மணமகன் கையில் மணமகளைக் கொடுப்பர். அக்கினி, சபையோர், சந்திரன், சூரியன், சிவன், அம்பாள் சாட்சியாக எந்நாளும் இனி உன்னை பிரியாமல் இருப்பேன் என்று சத்திய வாக்குச் செய்து அதனை மணமகன் ஏற்றுக் கொள்வார். இதற்கு பின்பே மாங்கல்ய தாரணம் இடம் பெற வேண்டும்.

**மாங்கல்ய தாரணம்:-**

மங்கல நாண் (கொழு) ஆதியில் மஞ்சள் கயிற்றால் ஆக்கப்பட்டிருந்தது. தற்போது பொன்னால் இழைக்கப்படுகின்றது. தாலி எனும் நாண் சுபவேளையில் தங்கக் கட்டியினை உருக்கி செய்யப்படுகிறது. தாலியில் மஹாலட்சுமி பூசிக்கப்படுகிறாள். மாங்கல்ய தாரணம் முடிந்த பின்பே மணமகள் மணமகன் இடப்பாகத்தில் இடம் பெறுகிறாள். அதற்கு முன் வலப்பாகத்தில் அமர்ந்திருப்பாள்.

மாங்கல்ய நாணில் (கொடியில்) மூன்று முடிச்சு இடம் பெறும். இதற்கு பல அர்த்தங்கள் கூறப்படுகின்றன.

**பால் பழம் கொடுத்தல், பூதாக்கலம் உண்டல்:-**

இதனை பழைய ஸ்மிருதிகள் மதுபர்க்கம் எனக் கூறப்படும். பால், தயிர், நெய், தேன் என்பவை கலந்த கலவை ஆகும். ஆனால் இன்று பாலும், பழமும் சேர்த்த கலவை மணமகள் மூலம் மணமகனுக்கு முதலிலும் மணமகனைக் கொண்டு மணமகளுக்கும் கொடுப்பிப்பர்.

இதனை அடுத்து சோறு கொடுத்தல் எனும் பூதாக்கலம் நடைபெறும். முற்காலத்தில் இருவரும் ஒரு கலத்திலே திருமணம் முடித்தவுடன் உணவுண்டனர். இது தம்பதியினரிடையே மிக நெருக்கத்தை ஏற்படுத்துவதற்காகவே ஆகும்.

**கோதரிசனம்:-**

கோதரிசனம் என்பது பசுக்கன்றை மணமக்கள் இருவரும் தரிசிப்பதாகும். அதுவும் கன்னிப் பசுவாகும். தரிசனத்திற்கு பசுவின் பின்புறமே உரியதாகும். பசுவில் தேவர்கள் உறைகிறார்கள் என்பது சாத்திரசம்பிரதாயமாகும். பசுவின் பின்புறத்தில் மஹாலட்சுமி உறைகிறாள்.

**ஏழடி நடத்தலும், அம்மிமிதித்தலும்:-**

மணமகன் வலம் வருதலின் ஆரம்பமாக ஏழடி நடந்து செல்வர். மாங்கல்ய தாரணம் நிறைவேறிய பின் மணமகள் மணமகன் வழியாகிவிடுகிறாள். இதனை "மூவேழ் சுற்றம்" எனத்திருவாசகம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு ஏழடி நடந்த இத்தம்பதிகள் கற்பு வழிப்பட்டவர்கள் என்பதனை உணர்த்த அம்மிமிதித்தல் நடைபெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகன் மணமகளின் வலது காலை அம்மியில் தூக்கி வைப்பார். அம்மி நிலையான தன்மையை உணர்த்துவதாகும். கற்பிலும் நிலையாக இருத்தல் வேண்டும். என்பதனை இது குறிக்கின்றது. சிலர் அகலிகை வரலாற்றை குறிக்கிறதென்பர். தம்பதியினர் மூன்று முறை வலம் வந்து பின் சிவாக்கினிக்குப் பூர்ணாகுதி செய்து வழிபடுவர்.

**அறுகரிசியிடல்:**

புரோகிதர் முதலில் வடமொழிச் செல்லால் சுலோகங்களைக் கூறி மணமக்களை ஆசிர்வதிப்பார். பின் மணமகன் வழியாரும் மணமகள் வழியாரும் அறுகரிசியிட்டு வாழ்த்துவர். இறைவனின் அர்ச்சனை வழிபாட்டில் அட்சதையும் (அரிசி) அறுகும் முக்கிய இடம் பெறுகின்றன. அறுகு சிறந்த மருத்துவ சஞ்சீவி அட்சதை ஆண்மீக வளர்ச்சிச்சாதனம் 16பேறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டி அறுகரிசியிட்டு வாழ்த்தப்படுகின்றனர்.

**ஆரத்தி எடுத்தல்:**

திருமணக் கிரியையில் ஆரத்தியும் மிக முக்கியம் பெறுகிறது. கண்திருஷ்டி கழிப்பதே ஆரத்தியாகும் நளதமயந்தியரின் மணவைபவத்தில் கண்திருஷ்டி கழிக்க வேண்டிக் கற்பூரத் திலக மிட்டதாக காட்டப்படுகின்றது. ஆரத்தி எடுத்த பின் பூரணகும்பம், திருவிளக்குச் சகிதமாக மணமகள் வலது காலை முன்வைத்து இல்லத்தில் புகுந்து அறவாழ்வை மேற் கொள்வர்.

**மேலதிக திருமணச் சம்பிரதாயங்கள்:**

கணையாழி நீருக்குள் இருந்து எடுத்தல் இது கிரியை இல்லாது சடங்காக இருக்கலாம். இது இடைக் காலத்தில் புகுந்ததாக கூறப்படுகின்றது.

**கிரியையும் அர்த்தங்களும்**

மணமகன் - சிவன்
மணமகள் - பார்வதி
தானியம் - உயிர்
அறுகு - வளர்ச்சி
அரசாணி - முருக்கமரம் - முள் (இந்திரன் யோனி)
ஆராத்தி - கண் திருட்டி கழித்தல்

நாந்திமுகம் - பிதிரர் மகிழ்ச்சிக்காக
கோதரிசனம் - மஹாலட்சுமி தரிசனமடைய
மஞ்சள் - மங்கலம், கிருமிநாசினி
குங்குமம் - சக்தி, (வெற்றி), இராஜத குணம்
மூன்றுமுடிச்சு - உயர்வு, தாழ்வு, சமநிலை
நவக்கிரகம் - தோஷநிவர்த்தி

**சடங்குகள்**

சடங்குகள் என்பது ஒரு நடைமுறையாகும். வழி வழியாக வரும் மரபுகளை காப்பதற்கு சடங்குகள் பயன்படுத்தப்படுகின்றது. முந்தையோர் இதனை கரணங்கள் என்றார்கள். உண்மையான உணர்வுடன் மனம் ஒன்றிச் செய்யப்பட்டால் பால் சடுதியாக பயன் தருவது என்ற கருத்திலேயே சடங்குகள் செய்யப்பட்டது என்று பெரியோர்கள் தெரிவிக்கின்றனர்.

வாழ்க்கை இன்பத்தைப் பெறவும், துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளவும் எமது கடமைகளை உணர்ந்து செயலாற்றி வெற்றி கண்டு வாழ்வைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளவும் மக்கள் ஒப்புரவு முறையில் ஒருவருக் கொருவர் உதவியும் துணை செய்தும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவும் சடங்குகள் உதவுகின்றது.

1. சமயச் சடங்குகள்
2. பிறப்பு சம்பந்தமான சடங்குகள்
3. திருமணச் சடங்குகள்
4. ஈமச் சடங்கு
5. வேளாண்மைச் சடங்கு
6. பிற சடங்குகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமயச் சடங்குகள்:**

இந்துமதம் ஒவ்வொரு மனிதனும் தினமும் மூன்று காலத்திலும் பல சடங்குகளைச் செய்ய வழிவகுக்கின்றது. பூசாரி சடங்குகளைச் நடத்துபவராகவும், பக்தர்கள் பார்வையாளர்களாகவும் காணப்படுகின்றனர்.

மிக முக்கியமாக சடங்குகளைப் பார்க்கின்ற சிறு தெய்வ வழிபாடுகளுக்கே சடங்குகள் நடைபெறுவதைக் காணமுடியும். அம்மனுக்குரிய சடங்குகள், ஏனைய அண்ணமார் கோயில்களின் சடங்குகள், ஐயனார், பெரியதம்பிரான், காளி, மாரி, கண்ணகி, கடலாச்சி அம்மன், பேச்சியம்மன், வைரவர் போன்ற தெய்வங்களுக்கே ஆலயங்களிலும், இல்லங்களிலும் சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

சடங்குகளில் மிக முக்கியமாக மடைபரவுதல், பலியிடுதல், கலையாடல், கட்டுச் சொல்லுதல், சூனியம் வெட்டுதல் ஆகிய சடங்குகளை கூற முடிகின்றது. கிராம தெய்வங்களின் ஆலயங்களில் திருவிழா உற்சவங்களின் போது உருவம் நேர்ந்து விடுதல், குழந்தைப் பேறற்ற பெண்கள் சிறு தொட்டில்களைச் செய்து கிராமத் தெய்வங்களின் கோவில்களுக்கு நேர்த்திக் கடனாகத் தருதல் இவை எல்லாம் சமயச் சடங்குகளேயாகும். உபநயனம், பூணூல் தரித்தல், காயத்திரி மந்திரம் கற்பித்தல் என்பனவும் சமயச் சடங்காகும்.

**பிறப்பு சம்பந்தமான சடங்குகள்:**

குழந்தை பிறத்தல் ஆரம்பமாவது மனித வாழ்வு. இதில் பல்வேறு சடங்குகள் நடத்தப்படுவதுண்டு. இந்திய முறையில் கரு உற்பத்தியாகி மூன்றாவது மாதத்தில் அதன் வளர்ச்சிக்காக "பும்சவனம்" எனும் சடங்கும், 07ஆம் மாதத்தில் குழந்தை, தாய் உடல் ஆரோக்கியத்திற்காக சீமந்தோந்நயனம் எனும் சடங்கும், குழந்தை பிறந்த பின்னர் கருவளை அணிவித்தல் எனும் சடங்கும் கண்ணூறு படாமல் இருப்பதற்காக வேங்கை மரப்பாலில் சாந்து இடுதல் 30ம் நாளில் துடக்குக் கழித்தற் சடங்கும், பின்னர் 30ல் முடிகளைதல், (குழந்தைக்கு நல்லநாளில்) குழந்தைக்கு பெயர் சூட்டுதல், மாமன் குழந்தையை தொட்டிலில் இடுதல் போன்ற சடங்குகள் நடாத்தபட வேண்டும்.

இதே போன்று பல்முளைத்தவுடன் முளைத்தலுக்காக கொழுக்கட்டை அவித்துக் கொடுத்தல் அல்லது சொரிதல் முதன் முதல் உணவூட்டுதல் பின்னர் பள்ளி செல்லமுன் ஏடு துவக்குதல் ஒரு சடங்காக இடம் பெறுகின்றது. பிராமணர்கள் 8வயதில் உபநயனம் எனும் சடங்கும் பெண்குழந்தை வளர்ந்து பருவம் அடைந்ததும் அப்பெண்ணுக்கு நீராட்டி சடங்குகள் செய்வது போன்ற சடங்குகள் பிறப்பு சம்பந்தமானவையாகும். இதன் பின் திருமணச் சடங்கு இடம் பெறுகின்றது.

**திருமணச் சடங்குகள்:**

திருமணச் சடங்குகள் பல சாதிகள் அடிப்படையில் நடத்தப்படுகின்ற தன்மையில் அவற்றில் வேறுபாட்டினைக் கண்டு கொள்ள முடிகின்றது. நரிக்குறவர் எனும் வகுப்பினரிடையே திருமணச் சடங்கு மணமகன் மணமகளின் உறவினருக்கு விருந்தளிப்பதுடன், பரிசுத் தொகையையும் வழங்கி மணப் பெண்ணுக்கு மாங்கனி எனும் ஆடை, ஆபரணங்கள் வழங்கி கருகமணி கோர்த்தி மஞ்சள் நூலால் மாலை மாற்றப்பட்டு, மஞ்சளில் தோய்ந்த கங்கணம் கட்டுவர்.

இலங்கையில் எமது சைவ மக்களிடையே திருமணச் சடங்குகள், நிச்சயதார்த்தம் என்ற சடங்கு பேச்சுக்கள் முதலில் மேற்க் கொண்டு வெற்றி கொண்டால் ஏனைய முன்னர் பார்த்த திருமண விடயங்கள் இனிதே நிறைவு பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈமச்சடங்கு:**

மனிதரிடையே முதன் முதலாக தொடங்கிய சடங்குகள் உயிரானது உடலை விட்டு பிரிந்தபின் ஆன்மாவுக்கு உணவு தேவையென்று கருதிப் பலவகை உணவுப் பொருட்களை படைத்து வழிபடும் சடங்கு. இன்று வரை பல்வேறு தரப்பினரிடைய காணப்படுகின்றது. "தொல்காப்பியத்தில்" குறிப்பிடப்பட்டு சிலப்பதிகாரத்தில் சிறப்பாக வர்ணிக்கப்படும் நடுகல், நீர்ப்படை, கால்கோள் என்பன இறப்புக்கு பிந்திய சடங்குகளாகும்.

இறந்த ஒரு ஆன்மா துன்பமின்றி அமைதியாக இருக்கவும். உயிரோடு இருப்போர் துன்பமின்றி வாழ்வதற்கும் பல சடங்குகள் நிறைவேற்றப்படுகின்றன. இறப்புச் சடங்கில் நீர்நிரம்பிய குடத்துக்கு மாலை அணிவித்து எடுத்து வரும் நீர்மாலைச் சடங்கு முக்கியமானதாகும்.

இதே போன்று இறந்தவரின் உடலைக் குளிப்பாட்டுதல் (அரப்பு எண்ணெய் வைத்தல்) பந்தம் பிடித்தல் சுண்ணம் இடித்தல் போன்றன காணப்படுகின்றன.

இறந்தவரின் உடலை நீர் நிரப்பிய மண்கலயத்துடன் இறுதிக்கடன் செய்பவர் மூன்று முறை சுற்றி வருதல் ஒவ்வொரு சுற்றிலும் மண்கலயம் நாவிதனால் துவாரப்பிடப்படும். அப்போது துவார வழியால் நீர் வெளியேறும். இதன் அர்த்தம் குடும்பத்தில் இவ்வுறுப்பினரின் மறைவுக்கு பின்னரும் அக்குடும்பம் செழிப்புடன் நிலைத்து நிற்கும் என்பதை இச்சடங்கு உணர்த்துகின்றது.

இறந்தவரை எரித்த பின்னர் அவரின் அஸ்தியினை மண் கலயத்திற் சேகரித்தல் அஸ்தி கலயம் எனப்படும் தகனம் செய்து முடிந்து வீட்டுக்கு திரும்பி வருவார் வாசலில் கால்கழுவி கொள்ளிவைத்தவர் உலக்கையைக் கடந்து வருதல் மரணச்சடங்கின் போது வீட்டு வேலியை வெட்டிச் செல்லுதல் மரணப்படுக்கையில் இறக்க இருப்பவரின் பாவங்களைப் போக்கி அவரைச் சொர்க்கத்திற்கு அனுப்பிய முயற்சியாக பசு தானம் செய்தல், இறந்தவரை நினைத்து எட்டாம் நாள் வரை தினம் தோறும் சிறிய செம்பு ஒன்றில் நீர் ஊற்றி விளக்கின் அருகில் வைத்தல், எட்டாம் நாள் இறந்தவருக்கு விருப்பமான உணவுகள் தயாரித்து மூன்று இலைகளில் படைத்தல், 31ஆம் நாள் அந்தியேட்டி எனும் சடங்கு நிகழ்த்துதல், ஆஸ்தி கலயம் கடலில் கலக்கப் படுதல் போன்றன மனிதனின் இறப்பு சம்பந்தமான அதாவது ஈமச் சடங்குகளாகும்.

**வேளாண்மைச் சடங்குகள்:**

பழமையான சடங்குகள் பயிர்த் தொழிலுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. மழைவேண்டிச் செய்யப்படும் சடங்குகள். வேளாண்மைச் சடங்கில் முக்கியம் வகிக்கின்றது.

மழையை வேண்டிக் கொடும்பாவி கட்டி கொளுத்துதல், மக்களினால் கொடும்பாவி உருவம் வைக்கோலினால் செய்து ஒப்பாரி வைக்கப்பட்டு கொடும்பாவி ஊர்மக்களினால் கொளுத்தப்படும். இதனுடன் தொடர்புபட்ட பாடல் பின்வருமாறு.

**"கொடும்பாவி சாகாளோ**
**கோடி மழை பெய்யாதோ**
**மா பாவி சாகாளோ**
**மாரி மழை பெய்யாதோ"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மைச் சடங்கில் இன்னுமொன்று விளைச்சல் பெருக வேண்டிச் செய்யப்படும் சடங்காகும். மனித செழிப்பின் மூலம் வேளாண்மைச் செழிப்பை அதிகரிக்கச் செய்யலாம் என்ற நம்பிக்கை பழமையான சமூகத்தில் இடம் பெற்றது இதன் மூலம் விளை நிலத்தில் மனைவியுடன் புணர்வதன் மூலம் அவ்விளை நிலத்தின் செழிப்பை அதிகரிக்கலாம்.

இதனை தற்போது மத்திய அமெரிக்காவின் பிப்பிலிஸ் என்ற இனக்குழு விதைப்புக்கு முன்னை நாளில் இத்தகைய சடங்குகளில் ஈடுபடும் இதேபோல் இந்தியாவின் தர்மபுரி மாவட்டத்திலும் இச்சடங்குகள் இடம்பெறுகின்றன.

காற்று, சூரியன், சந்திரன், விண்மீன்கள், பருவதேவதைகளுக்கு செய்யப்படுகின்ற சடங்குகள் முதல் உழவுக்கு முன் செய்யப்படும் சடங்குகள் அறுவடை முடிந்ததும் செய்யப்படும். பொங்கல், மாட்டுப் பொங்கல் போன்றவையும் வேளாண்மைச் சடங்குகளே.

**அம்மனுக்கு செய்யும் சடங்கு:-**

எமது பகுதிகளில் கிராமப்புற மக்கள் மத்தியில் இடம் பெறுவது அம்மன் சடங்கும், வைரவர் சடங்குகளுமாகும்.

இல்லங்களில் காத்தல் தெய்வமாகவும், சகல கடாட்ஷங்களை நல்கும் தெய்வமாக அம்மன் தெய்வங்களை வழிபடுவது வழக்கம். இத் தெய்வ வழிபாட்டில் பந்தலிடல் மடைசாத்துதல் அவிபாகங்கள் படைத்தல் என்பன செய்து அம்மன் துணையும், அருளும், மக்களால் பெறப்படுகின்றது. இதனை வருடம் தோறும் ஒரு பூசாரியின் மூலம் சடங்கினைச் செய்து வீட்டின் சந்தோஷம், வாழ்வில் மகிழ்ச்சி என்பனவற்றை மக்கள் பெற்று அனுபவித்து வந்தனர்.

இதே போல் காத்தல் தெய்வமாகிய வைரவர் சடங்கும் கிராம மக்களிடையே மேற்க் கொள்ளப்பட்டு வருகின்றது. இச்சடங்குகள் மூலம் மடை வைத்து புதிய பந்தலில் அம்மன் பாடல்கள், வைரவர் மான்மிகம் ஏனைய பாடல்களைப்பாடி தெய்வமாட்டி வீட்டின் குறை, நிறை, பிரச்சினை பற்றி தெய்வமாடுபவர் மூலம் அம்மனே அல்லது வைரவரே சொல்வதாகி மக்களால் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

**பிற சடங்குகள்:-**

புது ஆடை அணிகின்ற போது புத்தாடையின் கரையில் மஞ்சள் தடவி அணிவது ஒரு சடங்கு முறையே ஆகும். பிற சடங்குகளில் மந்திர வயப்பட்ட தீய சடங்குகளையும் கூறலாம். ஒருவரது நகம் அல்லது அதனை அழித்து விடுவதன் மூலம் அதன் மனிதனுக்கு உடலில் ஆபத்தான நோயையோ அல்லது மரணத்தையோ ஏற்படுத்தும் என்ற அடிப்படையிலான சடங்குகள்.

இவற்றில் வசியம் செய்தல் என்பதையும் கூற முடியும். பெண்களை வசியப்படுத்த அப்பெண்ணின் கூந்தல் மயிர், காலடி மண் என்பவற்றை எடுத்து சில மருந்து மூலிகைகளுடன் சேர்த்து கொடுப்பதன் மூலம் செய்வது ஒரு வகை சடங்கினுள் அடங்கும். ஈழத்து நாட்டார் பாடல் இது பற்றி பின்வருமாறு கூறுகின்றன.

**"கொண்டை மயிர் எடுப்பேன் மச்சி**
**உன்னைக் கொண்டுவர"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மங்கையின் காதலைப் பெறுவதற்காக அப்பெண்ணின் உருவமைப்பை களிமண்ணால் உருவாக்கி சணல் நாரினால் அமைத்த நாணோடு கூடிய வில்லைத் தாங்கி அம்பின் நுணியில் முன்னைச் செருகி ஆந்தையின் சிறகை அம்புச் சிறகாக்கி கருங்காலியினால் அம்பின் தண்டினை அமைத்து களிமண் உருவத்தின் இதயஸ்தானத்தை அம்பினால் குத்தி துளை உண்டு பண்ணி இதன் மூலம் அப்பெண்ணின் அன்பை பெற செய்யும் சடங்கு. அத்துடன் செய்வினை என்ற பெயரில் எதிரிகளைக் கொல்ல நோய்வயப்படுத்த செய்யப்படும் செயல்களும் இச்சடங்குகளில் அடங்கும்.

**கண்ணூறு கழித்தல் சடங்கு:-**

நோயுற்ற ஒருவருக்கு அல்லது கண்ணூறுபட்டு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு முட்டை அல்லது தேங்காய் கொண்டு உடலை இதனால் தொட்டு, தடவியோ மூன்று முறை சுற்றி அதனை நாற்சந்தியில் சிதறும்படி செய்தல் குழந்தையின் தலையை மிளகாய், உப்பு, வேப்பிலை கொண்டு சுற்றி எரிப்பதும் ஒரு வகைச் சடங்காகும்.

கடைகளில் மிளகாய், சீனிக்காரம், தேசிக்காய் மூன்றையும் கயிற்றாற் கட்டித் தொங்க விடுதலும் மற்றும் கடைகளின் கழிவுப் பொருட்களை கூட்டி கடையின் முன்னால் எரித்து விடுதலும் தூபம் காட்டுதல் என்பனவும், ஒருவகை கண்ணூறு கழித்தல் சடங்கினுட்பட்டதே ஆகும்.

**புது மனை புகுவிழாச் சடங்கு:-**

புது வீடு குடிபுகு முன் தச்சு கழித்தல் எனும் சடங்கு நடைபெறுகின்றது. இது வீட்டின் உள்ளே வாழை இலை பரப்பி சாணியால் பிள்ளையார் செய்து கிழக்குப் பக்கமாக பூரண கும்பம் வைத்து பஞ்சுத்திரி, வெற்றிலை, பாக்கு, மூன்று முட்டைக் காணிக்கையாக வைக்கப்படும். பொங்கல் பொங்கி, சாம்பிராணி காட்டி வழிபாடு செய்யப்பட்டு சேவல் வெட்டப்பட்டு கதவு, நிலை, யன்னல் ஆகியவற்றில் இரத்தம் பூசப்படும். நாற்சந்தியில் சேவற் படையல் வைக்கப்படும். இது கழிப்பு கழித்தல் என்ற பெயரில் பூசணிக்காய் வெட்டப்பட்டு குங்குமம் பூசி நாற்சந்தியில் வைத்தல் ஒரு வகையான சடங்காகும்.

**அபரக்கிரியை மரணக்கிரியைகள்:-**

அபரம் என்பது பின் என்ற பொருள் தருகின்றது. ஒரு மனிதன் இறப்பின் பின் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள், பிரேதக் கிரியைகள், சாம்பல் அள்ளுதல் கிரியை, அந்தியேட்டி கிரியை, மாசிகம், ஆட்டைத் திதி, திவசம் போன்ற கிரியைகள் ஆகும்.

ஒருவர் இறந்த பின்னும் அவருக்கு வாழ்வுண்டு என்ற நம்பிக்கையே அபரக்கிரியைகளுக்கு காரணமாகின்றது. இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள்வரை (அந்தியேட்டிவரை) அருவமாய் இறந்தவர் உயிர் விடும்போது இருந்த இடத்திலே அவரை நினைத்து தான தருமங்கள் செய்து வரவேண்டியது மைந்தரின் தலையாய கடமையாகும். ஒருவர் இறந்தபின் நீர்க் கடன் செய்ய வேண்டிய உரிமை ஆண்பிள்ளைக்கே உரியதாம்.

ஆன்மாக்கள் பிறந்து இறந்து, பிறந்து இறந்து கொண்டே போகின்றன. இது ஜீவயாத்திரை என்று கூறப்படும். உயிரினங்களுக்கு இவ்வுலக வாழ்க்கை பலவாறாகும்.

காகத்திற்கு 15வருட கால வாழ்க்கையும், ஆமைக்கு 300வருடகால வாழ்க்கையும் மனிதனுக்கு வயது நூறல்ல. மனிதனுக்கு மரணமானது இளமையில் வரலாம் முதுமையில் வரலாம் இன்புறு நாளில் வரலாம் துன்புறு நாளில் வரலாம் இரவில் வரலாம், பகலில் வரலாம் எவ்வேளையிலும் நிகழலாம்.

ஒருவனுக்கு மரணம் வந்ததும் உடம்மை விட்டு உயிர் பிரிந்து விட்டநிலையில் பூத உடம்பு மட்டும் மானிடர் கண்ணுக்குத் தெரியும். இதன் பிற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினால் மூழ்கி நினைப் பொழிந்தனரே"

(திருமந்திரம்)

மரணம் எப்போது வரும் எனத் தெரியாத நிலை முற்கூட்டி அறியக் கூடிய சில அறிகுறிகள் உண்டு. இதைச் சிலரால் அறியமுடியும். இது பற்றி பீஸ்மர் தன் பேரன் தருமனுக்கு எடுத்துக் கூறுவது ஒருவனுக்கு பகல் பொழுதில் நட்சத்திரங்கள் தோன்றி இரவில் தெரியாமல் போகின் மரணம் நெருங்கி வருகின்றது என்பது தெளிவாம். காது, நாசியில் நடுக்கம், கொண்டு இரண்டு விழிகளும் கறுக்குமாயின் மரணம் நெருங்குகின்றது என பல அறிகுறிகள் உண்டு.

**மரணக் கிரியை**

ஆன்மாவானது உடலை விட்டுப் பிரிந்தவுடன் பூதவுடலை நன்றாக மெழுகு அலங்கரிக்கப்பட்ட ஓரிடத்தில் மண்டபம் அமைக்க வேண்டும். அம் மண்டபத்தில் புண்ணியாகா வாசனத்தை நிறுவி மூலையிலும் ஸ்நபன கும்பங்களை மேற்கிலும் முன்பதாக சதுரக் குண்டமும் வைக்கப்பட்டுக் கிழக்கில் உரல் உலக்கையும், ஒரு கும்பமும் வடக்கில் மயானத்திற்குக் கொண்டு செல்வதற்கு மணக்லசத்தில் ஒரு கும்பமும் மண்டபத்தை ஏற்படுத்தல் வேண்டும். இதன் பின் தொடரப்டும் கிரியைகள் ஆவன.

*1. உத்கிராந்திக் கிரியை*
*2. தகனக் கிரியை*
*3. அள் திசந்சயணம்*
*4. எட்டாம் நாள் கிரியை*
*5. அந்தியேட்டிக் கிரியை*
*6. சபீண்டிகரணதின கிரியையும் ஏகோதிட்டமும்*
*7. மாசியம்*
*8. சபண்டீகரணம்*
*9. சிரார்த்தம்*

போன்றன மரணக் கிரியையில் உள்ளடக்கப்படுகின்றது. இக்கிரியைகள் உத்தரக்கிரியை சிரார்த்தக் கிரியை என இரண்டு வகைப்படும். இறந்தவுடன் இதனை பின் வடக்குத் தெற்காக அடுக்கப்பட்ட விறகில் பிரேதத்தின் தலை தெற்கே இருக்குமாறு வைக்கப்பட வேண்டும். ஆண்கள் பிரேதத்திற்கு வாய்கரிசு இட வேண்டும். இதன் பின் கொள்ளியையும், குடத்தையும் தாங்கி சிதையை 3முறை அப்பிரதட்சணமாக சுற்றி வரவும் அப்போது குடத்தில் கத்தியால் துவாரம் செய்வர் இதன் மூலம் ஒழுகும் நீரால் சிதைக்கு தெளிப்பர். மும்முறை சுற்றிய பின் தெற்கே பார்த்து தலைமாட்டில் பின்புறமாக கொள்ளியை சிதையில் வைத்து குடத்தையும் போட்டு உடைத்து விடவேண்டும். பின்னர் கால்மாட்டில் அஸ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து திரும்பிப்பார்க்காமல் நீர் நிலைக்கு சென்று ஸ்நானம் பண்ணி பிதிர்த்தர்ப்பனம் செய்ய வேண்டும்.

இதன் பின் வீட்டுக்கு வந்து துன்பத்தைக் கடத்தல் என்ற பாவனையாக உலக்கை போட்டு கடக்கச் செய்வர். பின் வேப்பிலையுடன் ஆரத்தி எடுப்பர். இறந்தவர் மரித்த இடத்தில் அன்று முதல் அந்தியேட்டி வரை இளநீர் அல்லது தண்ணீர் செம்பு வைக்கும் வழக்கம் உண்டு. சாதாரணமாக முப்பது இரவுகள் அசௌசம் காப்பர். ஆனால் துறவிகளுக்கு ஆசௌசம் இல்லை.

**அஸ்தி சஞ்சயனம், சாம்பலள்ளுதல், காடாற்றுதல்:-**

இதன் அர்த்தம் எலும்பை அள்ளுதல் அல்லது சேர்த்தல் எனப் பொருள்படும். அதாவது எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்து புண்ணிய நதியில் சேர்த்தலாகும். முதல் 5நாளில் ஒன்றிலேனும் அல்லது ஏழாம், ஒன்பதாம் நாட்களிலேனும் இது செய்யப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எட்டாம் நாள் கிரியை:-**

இறந்தவர் உயிருடன் இருந்தபோது பருகிய தின்பனவுமான பண்டங்கள் பெருமளவு தயாரித்துப் படைத்து கற்பூரம் கொளுத்தி பூரிப்பர். பலி என்ற கருத்திற்கிணங்க அன்று படைத்தவற்றில் ஒருபகுதியை பேயும், பிசாசும், ராட்சதமும் அனுபவிக்குமாறு சந்தியில் கொண்டு வைப்பர். படையலை ஆத்மா வந்து அருந்துவதாக நம்பிக்கையுடன் கதவைமூடி பல்லி அடிக்கும் வரையும் காத்திருப்பர்.

**அந்தியேட்டி:-**

அந்தி இஷ்ட என்ற இரு சொற்பதங்களின் புணர்ச்சியே அந்தியஸ்டி எனப்பட்டது. இஷ்ட என்றால் கிரியை அதாவது அந்தி காலத்தில் செய்யும் கிரியை என்பது கருத்தாகும். இக்கிரியை ஆத்மசாந்தி கருதி புண்ணிய தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்தியேட்டிக் கிரியை செய்வதில் அவரவர்களின் சமயசார ஒழுக்க நிலை பிரதானம் பெறும்.

சமய தீட்சை மட்டும் பெற்று இறந்தவர்களுக்கு இந்த அந்தியேட்டிக் கிரியையாகிய ஒரே கிரியை இரு கூறாக்கப்பட்டு இறந்த அன்று செய்யப்படும் கிரியை சவக்கிரியை எனவும் 31ஆம் நாள் நடப்பது அந்தியேட்டி கிரியை என்றும் நடைமுறையில் இருந்துவருவதை நாம் நோக்கலாம்.

அந்தியேட்டிக் கிரியைகள் பிரேதத்தில் தான் நடைபெற வேண்டும. ஆனால் பிரேதத்தை நீண்ட நாட்களுக்கு வைத்திருக்க முடியாததால் சவக்கிரியையோடு பிரேதத்தை தகிர்த்து முப்பத்தோராம் நாள் தர்பையினால் ஒரு தேகம் செய்யப்படுகின்றது. இது "புத்திலிகா" என அழைக்கப்படுகிறது இதை இறந்தவரின் சொந்ததேகமாக பாவித்து கிரியைகள் யாவும் செய்து அதனை தகிர்த்து விடுவார். அந்தியேட்டியை சுருக்கமாக தருப்பை சுடுதல் என கூறப்படுகின்றது. இதன் பின் பாஷண பூசை நடைபெறும். ஒரு செங்கல்லை வைத்து அதில் மனித வடிவம் எழுதி இறந்த ஆன்மாவை அதில் எழுந்தருளச் செய்து ஆடை அணிந்து பூசை தர்ப்பனம் செய்து பிண்டமிடுவர்.

**ஏகோதிட்டம்:-**

ஏகோதிட்டம் கபீண்டிகரணம் என்ற இரு நிகழ்வுகளிற்கு முன் சுத்த புண்ணியாகா வாசனம் இடம் பெறும். (இது துடக்கு கழிவு ஆகும்) இதைத் தொடர்ந்து அநுக்கை (உத்தரவு பெறல்) சூரிய நமஸ்காரம், நல்சிரார்த்தம், ஏகோத்த விருத்தி சங்கிதை (மந்திரம்), இசபதானம் போன்ற நிகழ்வுகள் நடை பெறும். நவசிரார்த்தம் என்பது இறந்தவரின் ஆன்மாவை நற்கதி (இறைபதம்) அடையச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் கிரியை ஆகும்.

இறந்த ஆன்மாவை சுத்தி செய்வதே ஏகோதிட்டத்தின் நோக்கமாகும். புரோகிதரில் பிரதேத சரீர சம்பந்தமான உயிரை வரித்து தானம் செய்யும் சிரார்த்தம் இதுவாகும். இதன் வேளை இறந்தவர் உயிருடன் இருந்தபோது பாவித்த பொருட்கள் புதியதாக புரோகிதருக்கு தானமாக வழங்கப்படும். ஆனால் அவற்றில் தற்போது குடை, பாதரட்சை, செம்பு, குத்துவிளக்கு, பாய், தலையணை, போசனதானம், ஆண்களாயின் வேஷ்டி, சால்வை பெண்ணாயின் சேலைகள் என்பன தானமாக வழங்கப்படுகின்றன.

**மாசியம்:-**

மாதா மாதம் இறந்த திதியில் செய்யப்படும் சிராத்தம் மாசியம் எனப்படும். இது முதல் வருடம் முழுவதும் நடைபெற வேண்டியது. மாசியத்தில் பிண்டம் இட்டு தர்ப்பனம் செய்யும் நிகழ்வு உண்டு. மாசியமானது எல்லாமாக 15 மாசியங்கள் செய்யப்பட வேண்டும் என "ஆசௌச தீபிகை" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சபிண்டீகரணம்:-**

ஆசௌச முடிவிலும் வருட முடிவிலும் செய்யப்படுவதாகும். சபீண்டி கரணம் என்பது இறந்தோர் நற்கதியை அடைவதற்காக மாவுடன், அரிசி, உழுந்து, பால், எள், தேன், பழம், சர்க்கரை போன்றவற்றைச் சேர்த்து பிண்டமிட்டு செய்யப்படும் கிரியையாகும். இது பிதிர்களின் உதவி வேண்டி செய்யும் கிரியையாகவும் அமைகின்றது.

**சிரார்த்தம்:-**

அந்தியேட்டி கிரியைக்குப் பிறகு இடம் பெறும் கிரியை சிரார்த்தம் எனப்படும். அதாவது தந்தை, தாயார் இறந்த பின் அவர்களின் புத்திரர்களால் அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், அவர்களின் தீவினைகள் நீங்கும் பொருட்டும் அவர்களை நினைத்து சிரத்தையுடன் நிறைவேற்றப்பட்டும் தான தருமங்களாகும்.

ஆண்டு தோறும் இறந்த மாதத்தில் இறந்த திதியில் சிரார்த்தம் செய்யப்பட வேண்டும். திதி, பட்சம் ஏதும் தெரியா விடத்து ஆடி அமாவாசையில் சிரார்த்தம் செய்தல் வேண்டும். சிரார்த்தம் என்றால் திதி திவசம் எனவும் அழைக்கப்படும்.

**ஸூதகமும் ஆசௌசமும்:-**

பிரசவத்தினால் ஏற்படும் தீட்டு ஸூதகம் எனப்படும். ஒருவர் இறந்ததினால் உண்டாகும் தீட்டு ஆசௌசம் எனப்படும். ஆசௌசகரியத்தில் ஸ்நானம் ஸந்தியாவந்தனம் பஞ்சாட்சர ஜெபம், சூரிய நமஸ்காரம், தேவபூசை முதலிய ஒரு காரியமும் செய்யலாகாது.

ஒருவருக்கொருவர் இரத்தசம்பந்தம் இருந்த ஒருவருக்கு ஏற்பட்ட தீட்டு ஏனைய யாவருக்கும் பொதுவாகும். தாய் வழியிலும் தந்தையின் சகோதர வகையிலும் மரணத்தில் சில தீட்டுக்கள் உண்டு. இது பற்றி தர்மசாஸ்த்திரத்தில் விஷேடமாகக் கூறப்படுகின்றது. இவற்றுக்கு மிக முக்கியம் பெறுவது "வைத்திய நாத தீஷிதம்" ஆசௌச காண்டம் என்பனவாகும்.

- சுபம் -

**திரு. ஆ. சசீந்திரன்** (இந்து பிரசாரக் குழு)
*பிரதம முகாமைத்துவ உதவியாளர்,*
*சமூகப்பிரிவு.*

**உதவி நூல்கள்:**

*1. இந்து கலைக்களஞ்சியம்*
*2. இந்துமத கிரியைகள்*
*3. சிந்தனைக்கு இந்துசமயம்*
*4. இந்துக்கள் வாழ்வில் கிரியை நெறிகள்*
*5. வாழ்வியலில் சடங்குகள் கிரியைகள்*



*முட்டாளின் இதயம் அவன் வாயில் இருந்துபிறக்கிறது.*
*அறிவாளியின் வாய் அவன் இதயத்தில் இருந்து பிறக்கிறது.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயைக் கட்டிப்போடு

அடி....
அடி....
ஓடியோடி அலைகிற நாயினை
முதலில் அடி!

கண்ட கண்ட இடங்களிலே
கை போட....
கால் போட...
முந்துகிற நினைப்புகளை முறி,
முறித்து நொறுக்கு.

இனிப்பைச் சுவைக்கலாம்,....
அது இன்னொருவரின் கையில் இருக்க
நீ வாயூறுவது செப்பமில்லை.

ஓடி அலைகிற நாயினைக் கட்டிப்போடு.
உன்மன வயலிலிருந்து
ஊறிவரும் உணர்வுகளை
வெல்லுகிற உறுதியினைப் பயிரிடு.

விதைத்த பயிருக்கு உரம்போட்டு
வளத்தை அள்ளு.
உரம்கொடுக்க முடியவில்லையே...
நீரூற்றிச் செழிப்பாக்கு.

உன்னை உனது கைகளுக்குள்
உருட்டி மடித்துச்
சுருட்டிவை.

எந்தக் கொம்பு எருமையும்
உன்னை இடித்துக் கடிக்காது.

எந்தப் புயலும் உன்னை
நெருங்க முயலாது
எந்தப் பகைவரினும்
எதையும் நீ வென்றிடலாம்

தன்னை வெல்வதுதான்
வீரத்தில் பெரும்வீரம்.

உன்னை நீவென்றால்...
உன்னை நெருங்கும்
நெருப்புக்கும் குளிரடிக்கும்.

கண்டபடி ஓடுவதைக் கைகழுவு.
எப்போதும்...
உன்னுடைய கால்களிலே
எழுந்து நிற்க நீமுயலு.

எந்தப் புழுதியும்
உன்னைக் கறைப்படுத்தாது.

நாயைக் கட்டிப்போடு
வாயைச் சுத்தப்படுத்து
நாளெல்லாம் சந்தோசம்
உனது
அயலையே சுற்றிவரும்.

உன்னை வெல்லு
உன்னிடமிருந்து.

- *கவிமணி* - **நீலாபாலன்** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பட்டையின் சிறப்பும் பிற்கால மாற்றங்களும்.

தம்பட்டைக் கிராமமானது பல நூற்றாண்டுகள் பழமையான வரலாற்றினைக் கொண்ட கிராமமாகும். இங்கு ஆதிசைவ வீரசைவக் குருமார் குடியமர்த்தப்பட்டதிலிருந்து இன்றுவரையும் அவர்களின் பரம்பரையினைச் சேர்ந்த வழித்தோன்றல்களே தம்பட்டையில் வாழ்ந்து வருகின்றனர். ஆதி காலத்தில் அரசனால் இங்கு குடியமர்த்தப்பட்ட குருமார் வேதம், ஆகமம் மட்டுமன்றி ஆயுர்வேத வைத்தியம் சோதிடம், விஷக்கடி வைத்தியம் போன்றவற்றிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்களாகவும், கூத்துப்பாடல்கள் பாடுவதில் வல்லமை மிக்கவர்களாகவும் இருந்துள்ளனர். இதன் காரணமாகவே இங்குள்ள குருமார் குருநாதர்கள் என்றும், இந்த இடம் குருநாதர் புரம் என்றும் சிறப்புப் பெயர்கொண்டு அழைக்கப்பட்டது.

தம்பட்டையில் வாழ்ந்த குருமார்கள் வாய்மையே தூய்மையாகக் கொண்டு வாழ்ந்த சில பக்தர்கள் என்பதனை விநாயகபுரம் சமாதிப்பிள்ளையார் ஆலயத்துடன் தொடர்புடைய சந்நியாசியின் செருக்கடக்கிய கதை மற்றும் சொல்வன்மை கொண்ட குருக்கள் கதை போன்ற கதைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். அத்துடன் போத்துக்கேயரால் திருக்கோவிலுக்கு வரும் ஆபத்துப் பற்றியும் திருக்கோவிலில் பூசை செய்த தம்பட்டைக் குருக்களுக்கு முருகப் பெருமான் கனவில் தோன்றி கூறியதும் அதனால் குருக்கள் முன்னேற்பாடாக கோயிலின் முக்கிய பொருட்களைப் பாதுகாத்து வைத்ததும் குருமாரின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

ஆயினும் தம்பட்டையில் மிக நீண்டகாலமாக வாழ்ந்துவருகின்ற ஆதிசைவக் குரு பரம்பரையின் முழுமையான தகவல்களை தற்போது அறிந்து கொள்ளமுடியாதுள்ளது. இதற்கான காரணம், பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றங்களும் அழிவுகளுமாகும். தம்பட்டையின் அமைவானது இயற்கை அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாததாக இருப்பதும் குருமாரின் குறிப்புக்கள் யாவும் அச்சேறாமல் ஏட்டுச் சுவடிகளுடன் உறங்கி விட்டதும் ஒரு காரணமாகும்.

கடந்த 100 வருடங்களுள் தம்பட்டையில் வாழ்ந்து சமாதி அடைந்த ஆதிசைவக் குருமார்கள்

1. சடயப்பக் குருக்கள்
2. நல்லதம்பிக் குருக்கள்
3. மாரியக் குருக்கள்
4. தில்லையக் குருக்கள்
5. துரைராசாக் குருக்கள்
6. குழந்தையக் குருக்கள்

**குருமார் பணிகள்:-**

குருமாரின் பணிகள் தொடர்பாக முழுமையாக அறிந்துகொள்ள முடியாவிடினும், இங்கு வாழ்ந்த குருமாரால் வேதம், ஆகமம், சோதிடம், வைத்தியம் போன்ற கல்விகள் குருசீட முறையில் பரம்பரை பரம்பரையாக கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. அத்துடன் கூத்துப்பாடல்கள் பாடி அரங்கேற்றம் செய்வதிலும் இவர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர். இதற்கு சிவஸ்ரீ நல்லதம்பிக் குருக்கள் சிறந்த உதாரணமாவார். இவர் பல கூத்துப்பாடல்கள் இயற்றி, அரங்கேற்றம் செய்துள்ளார். அத்துடன் பல மாணவர்களையும் கற்பித்து, குரு நிலையடைய வைத்துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அத்துடன் தற்காலத்தில் வாழ்ந்து வரும் சிவஸ்ரீ. க. லோகநாதக் குருக்கள் பல சமயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். இவரது பணிகளில் பல நூல்களை எழுதி, அச்சிட்டு வெளியிட்டுள்ளது. போற்றத்தக்க பணியாகும். இவரது நூல்களில் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் திருத்தல புராணம் சிறப்பான ஒன்றாகும். அத்துடன் இவர் பல இளம் மாணவர்களை சிறந்த முறையில் கற்பித்து குருநிலை அடையவைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்ப காலங்களில் தம்பட்டையின் குருமார் மிகவும் உயர்ந்த பொருளாதாரத்துடன் வாழ்ந்தனர் என்பதும், சமூகத்தில் அவர்களுக்கு மிகவும் உயர்ந்த அந்தஸ்து இருந்தது. அக்காலத்தில் இவர்கள் அயல் கிராமங்களுக்கு உலாப்போவதும் துஷ்ட தேவதைகளை விரட்டி மக்களைப் பாதுகாப்பதும் வழமையாகக் கொண்டிருந்தனர். அரசர்களின் ஆதரவு இவர்களுக்குக் கிடைத்தமையால் கஸ்டங்கள் ஏற்படவில்லை எனினும், பிற்காலத்தில் ஏற்பட்ட போத்துக்கேய ஆக்கிரமிப்புக்களால் சுதேச அரசர்களின் ஆட்சி வலி குன்றியதும் அதனால் அரசர்களால் வழங்கப்பட்டு வந்த ஆதரவுகள் கிடைக்காமல் போயின. அத்துடன் திருக்கோவில் பகுதிக்கு வந்த போத்துக்கேய ஆக்கிரமிப்பாளர்கள் இந்து மதத்திற்கு எதிரான போக்கினைக் கடைப்பிடித்தனர் என்றும், இவர்களால் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோவில் அழிக்கப்பட்டதுடன், பெறுமதியான பொருட்களும் கொள்ளையிடப்பட்டது. அத்துடன் இவர்களால் பல குருக்கள்மாரும் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

ஆரம்ப காலம் முதல் இலங்கை குடியரசாகும் வரையுள்ள காலப்பகுதியில் தம்பட்டையானது மிகுந்த சமூகக் கட்டுப்பாடு மற்றும் பண்பாடுகளைப் பேணிவந்த கிராமமாக விளங்கியதுடன், பின்னர் ஏற்பட்ட சோசலிச சனநாயகம் காரணமாக கிராமத்தின் கட்டுப்பாடுகள் தளர்வடையத் தொடங்கியது. கடந்த 30வருடங்களுக்கு முன்னர் தம்பட்டையில் எவரும் மீன்பிடித் தொழிலைச் செய்யவில்லை என்பதும், பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு யுத்த சூழல் காரணமாக வெளி இடங்களில் விவசாயம் செய்து வந்த தம்பட்டை கிராம மக்களுக்கு தொடர்ந்தும் விவசாயத்தினைச் செய்ய முடியாத கஸ்டமான சூழ்நிலையின் காரணமாகவே பலர் மீனவர்களாக மாறினர் என்பதும் உண்மைகளாகும்.

இந்து தர்மமும், பக்தி நெறியினையும் பேணிக்காத்த இப் புனித பூமியான தம்பட்டைக் கிராமத்தின் மீள் எழுச்சிக்கு இந்து சமயப் பெரியோர்கள், அறிஞர்கள், ஆர்வலர்கள், யாவரும் முயற்சிக்க வேண்டும் என்பதும் தம்பட்டைக் கிராமமானது சீர் கேடுகளில் இருந்து விடுபட்டு, ஆதிகாலத்தில் இங்கு உருவாகிய ஆலய தருமங்களை இந்து சமயத்தின் உயர்ந்த தத்துவங்களை மக்களுக்குப் போதிக்க வேண்டும் என்பதும் பெரியோர்களின் எதிர்பார்ப்பாகும்.

*- நன்றி -*



**பாக்கியராசா உமாகரன் (உமாபதி),**
*தம்பட்டை.*

**கல்வி கண்ணியமான சொத்து, ஒழுக்கம் ஒப்பற்ற அணிகலன்,**
**சிந்தனை தெளிவான கண்ணாடி எனவே**
**சிந்தித்து செயல்படு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி மனித விளையாட்டுக்களின் பரிணாமம்

மனிதன் ஆரம்ப காலத்தில் காடுகளில் அலைந்து திரிந்து வாழ்ந்தபோது தனது வயிற்றுப் பசியைப் போக்க மிருகங்களை வேட்டையாடிப் பிடித்து வேகவைத்து உண்ணுதல்; கிழங்குகள், காய்கனிகளை உண்ணுதல், தன்னை எதிர்க்கும் மிருகங்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்பவற்றை மேற்கொண்டிருந்தான். சிறிது சிறிதான சிந்தனைகளின் பின்னர் நிலத்தை உழுது பயிர் செய்து அதிலிருந்து அறுவடையாகக் கிடைக்கும் கிழங்கு, தானியம் என்பவற்றைப் பச்சையாகவும், தீயிலிட்டு வேக வைத்தும் உண்ணத் தொடங்கினான். தனது ஜீவனோபாயத்துக்காக மிருகங்களைப் பிடித்துப் பழக்கி தன்னுடன் வைத்துக் கொண்டான். பின்னர் தன்னுடன் தனது கூட்டத்தினரையும் இணைத்துக் கொண்டு இடம்விட்டு இடம் மாறிச் சென்று வாழ்ந்தான். இவற்றுக்கெல்லாம் தனது உடல் வலுவையே பயன்படுத்தி வந்தான். இவ்வாறு வாழ்ந்த மனிதன் தன்னுடைய வாழ்வைக் கொண்டு நடாத்தப் பலவிதமாக தன்னுடலைப் பழக்கியும் கொண்டான். கிரேக்க யுகம் தொடங்கும் வரையும் இவ்வாறு மனிதன் வாழ்ந்தபோது தனது உடல் வலிமையால் செய்தபல காரியங்கள் பின்னர் பலவித விளையாட்டுக்களுக்கு வித்திட்டது எனக் கொள்ளலாம். கி.மு 500 தொடக்கம் கி.பி 500 வரையான சுமார் 1000 வருடகாலம் உடல் வலிமையின் அவசியம் உணரப்பட்டது. அக்காலப்பகுதியில் நாடுகளுக்கிடையில் குழுக்களுக்கிடையில் சண்டை சச்சரவுகள் தோன்றியதால் மற்போர், வாட்போர் போன்றவையும் மனிதனிடையே பிரபலமடையத் தொடங்கியது.

பின்னர் ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சியின் காரணமாக உடல் வலுவின் அவசியம் உணரப்பட்டு, அவை உடற்கல்வியாகவும் பரிணமிக்கத் தொடங்கின. உடற்கல்வியின் அவசியம் பற்றி அரிஸ்டோட்டில், ஹிப்போகிறடீஸ், ஆர்கிமிடீஸ், சோக்கிரடீஸ் போன்ற சிந்தனாவாதிகளும் குறிப்பிட்டுள்ளனர்.

எது எவ்வாறாயினும், இன்று உலகெங்கும் பிரபலமடைந்துள்ள விளையாட்டுக்கள், ஆரம்பகாலத்தில் மனிதனால் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பதைப் பின்வரும் முறையில் தொகுத்துக் கொள்ள முடியும்.

| | |
|---|---|
| மனிதன் மிருகங்களைத் துரத்தினான். மிருகங்களால் துரத்தப்பட்டான். | ஓட்ட நிகழ்ச்சி உருவானது. |
| சில மிருகங்களை நீண்ட தூரம் துரத்திச் சென்றான். | நீண்ட தூர ஓட்ட நிகழ்ச்சி உருவானது. (Long Distance) |
| சில மிருகங்களைக் குறைந்த தூரத்தில் மிக விரைவாக ஓடிப்பிடிக்க வேண்டியிருந்தது. | குறுந்தூர விரைவோட்டம் (Short Distance) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓடும் போது சில தடைகளைத் தாண்டி ஓடினான். | சட்டவேலியோட்டம் உருவானது. (Hurdle) |
| தடைகளைத் தாண்டி ஓடும்போது சிலவேளை நீருள்ள பள்ளங்கள், ஓடைகளைத் தாண்டி ஓடினான். | ஸ்ரீப்பள் செஸ் உருவானது. (Steeple Chase) |
| ஓடும்போது நீண்ட பள்ளங்கள் சகதிகளைத் தாண்ட பாய்ந்து ஓடினான். | நீளம் பாய்தல் உருவானது. (Long Jump) |
| சிலவேளைகளில் உயரமான பற்றைகள் முட்புதர்களை உயர்ந்து பாய்ந்தான். | உயரம் பாய்தல் உருவானது. (High Jump) |
| ஆறுகள், பெரியபுதர், பள்ளங்கள் மரக்கொப்புகளைத் தாண்ட மரத்தின் விழுதுகளில் சென்றும், கோல்களை ஊன்றியும் கடந்தான். | கோல் ஊன்றிப் பாய்தல் உருவானது. (Pole Voult) |
| தடைகள் இருந்ததால் காலால் கெந்தியும் மிதித்தும் பாய்ந்தான். | முப்பாய்ச்சல் உருவானது. (Tripple Jump) |
| மிருகங்களைக் கூரிய தடிகள் கொண்டு எய்து வீழ்த்தினான். | ஈட்டி எறிதல் உருவானது. (Javelin) |
| பெரிய கற்களைக் கொண்டு எறிந்தும் போட்டும் தள்ளியும் மிருகங்களைக் கொன்றான். | குண்டு எறிதல் உருவானது. (Shot Put) |
| தட்டையாக அராவப்பட்ட கற்கள் மரப்பலகைகள் உலோகத்தட்டுக்கள் மூலம் மிருகங்களை எறிந்து கொன்றான். | பரிதி வட்டம் உருவானது. (Discus) |
| கற்களை அல்லது வேறு பாரங்களை கயிறுகளில் கட்டி சுழற்றி மிருகங்களுக்கு எறிதல் (கவண்) மேற்கொண்டான். | சம்மட்டி எறிதல் உருவானது. (Hammer Throw) |
| தூர இடங்களுக்கு செய்திபரிமாறுவதற்காக குறிப்பிட்ட தரிப்புக்களில் நிற்பவர்களிடம் செய்தி ஓலைகளை ஓடிச்சென்று கொடுத்தல். | அஞ்சல் ஓட்டம் உருவானது. (Relay) |

*தொகுப்பு:*
**T. மோகனராஜா**
பிரதம முகாமைத்துவ உதவியாளர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிந்திருக்க வேண்டியன

| | |
|---|---|
| ஏகமானவன் | – இறைவன் |
| ஈரறம் | – இல்லறம், துறவறம் |
| இருவினை | – நல்வினை, தீவினை |
| இருபிறப்பு | – இம்மை, மறுமை |
| மும்மூர்த்திகள் | – பிரம்மா, விஸ்ணு, உருத்திரன் |
| முத்தமிழ் | – இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் |
| மும்முரசு | – வீரமுரசு, கொடைமுரசு, மங்களமுரசு |
| மூவேந்தர் | – சேரன், சோழன், பாண்டியன் |
| மூவகைத்திருமேனி | – அருவம், உருவம், அருஉருவம் |
| மூவகை வழிபாடு | – குரு, லிங்கம், சங்கமம் |
| முப்பொருள் | – பதி, பசு, பாசம் |
| நாற்குணம் | – அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு |
| நால்வகை நிலை | – பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் |
| நால்வகை வேதம் | – இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் |
| நால்வகை முத்தி | – சாலோபம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் |
| நால்வகைத்தொண்டு | – சரியை, கிரியை, யோகம், ஞானம் |
| நால்வகைநாயன்மார் | – திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் |
| நான்கு புருடார்த்தங்கள் | – அறம், பொருள், இன்பம், வீடு |
| நான்குவர்ணத்தவர் | – பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் |
| பஞ்சதோத்திரம் | – தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் |
| பஞ்சகந்தம் | – இலவம், ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம் |
| பஞ்சகம்மாளர் | – கன்னார், கொல்லர், சிற்பர், தச்சர், தட்டார் |
| பஞ்சகௌவியம் | – பால், தயிர், நெய், கோசலம், கோமயம் |
| பஞ்சகன்னி | – அகலிகை, சீதை, தாரை, துரோபதை, பந்தோதரி |
| பஞ்சகாவியம் | – சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை |
| பஞ்சசீலம் | – கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, கள்ளாமை, காமமின்மை |
| பஞ்சபட்சி | – வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் |
| பஞ்சரத்தினம் | – சுகந்தீ, பொன், மரகதம், மாணிக்கம், முத்து |
| பஞ்சலக்கணம் | – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி |
| பஞ்சஉலோகம் | – இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி |
| பஞ்சவர்ணம் | – கருமை, செம்மை, பச்சை, மஞ்சள், வெண்மை |
| பஞ்சபாண்டவர் | – தருமர், வீமர், அருச்சுணர், நகுலர், சகாதேவர் |
| பஞ்சபுலன் | – ஒளி, சுவை, ஊறு, ஓசை, நாற்றம் |
| பஞ்சபொறி | – மெய், வாய், கண், மூக்கு, செவி |
| பஞ்சபூதம் | – நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ |
| பஞ்சநிலம் | – குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை |
| பஞ்சாங்கம் | – திதி, நட்சத்திரம், வாரம், யோகம், கரணம் |
| பஞ்சாமிர்தம் | – கற்கண்டு, சர்க்கரை, நெய், தேன், பழம் |
| பஞ்சதொழில் | – படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் |
| அறுசுவை | – கசப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கயர்ப்பு |

தொகுப்பு:
**எம்.கே. விநாயகமூர்த்தி**
முகாமைத்துவ உதவியாளர்,
பதிவுப்பிரிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரகங்கள் தரக்கூடிய நோய்களிற் சில

01. சூரியன்:- கடுமையான காய்ச்சல், கண்நோய், அசீரணம், தலைசம்பந்தமான நோய், வயிற்றுப்போக்கு, இருதய நோய்.

02. சந்திரன்:- கண்நோய், பைத்தியம், சலதோசம், இருமல், ஆஸ்த்மா, நரம்புத்தளர்ச்சி, பெண்களால் வரும் வியாதி, மனநோய், கொம்புள்ள மிருகம் - நீர்வாழ் பிராணிகளால் வரும் ஆபத்து.

03. செவ்வாய்:- ஆயுதங்களினால் வரும் காயங்கள், நாய் போன்ற மிருகங்களால் வரும் ஆபத்து, சின்னம்மை, தீக்காயங்கள், வெட்டுக்காயங்கள்.

04. புதன்:- தோல் வியாதி, காக்காய் வலிப்பு, குடல் நோய், மூலநோய் வயிற்றுக் கோளாறு

05. வியாழன்:- ஈரல் நோய், காது நோய், மயக்கம், குடல் இறக்கம், வயதானவர்களின் சாபம்.

06. வெள்ளி:- பெண்களின் பிரத்தியேக உறுப்புக்கள் தொடர்பான வியாதி, மேக நோய், நீரிழிவு, சிறுநீரக நோய், இரத்தச் சோகை.

07. சனி:- முடக்குவாதம், மூட்டுவலி, மர்மத்தானங்களில் வரும் நோய், பயம், உணர்விழந்த முழு மயக்க நிலை (ஹோமா)

08. இராகு:- வலிப்பு, ஒவ்வாமை, தூக்குத்தண்டனை, கெட்டஆவிகள் பிடித்தல், பசியின்மை, எலும்புருக்கி நோய், வாந்தி, விஷம் குடித்தல், குஷ்டம்.

09. கேது:- வலி, இடி மின்னல்களால் பாதிப்பு, எதிரி பயம், கீழானவரால் தொல்லை, எலி, பூனைக்கடி, முன்செென்மபாவ வியாதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வார நாட்களில் புத்தாடை அணியும் பலன்**

| | |
|---|---|
| சூரியன் (ஞாயிறு) | - கவலைதீரும் |
| திங்கள் | - எப்போதும் ஈரமாக இருக்கும் |
| செவ்வாய் | - பலவீனமாக்குதல் |
| புதன் | - விரைவில் கந்தலாகும் |
| வியாழன் | - மங்களம் உண்டாகும் |
| வெள்ளி | - மன மகிழ்ச்சி தரும் |
| சனி | - எப்போதும் அழுக்காகும். |

**நவக்கிரகங்கள் ஒரு ராசியில் நிற்கும்காலம்**

| | |
|---|---|
| சூரியன் | - ஒருமாதம் |
| சந்திரன் | - இரண்டே கால் நாட்கள் |
| செவ்வாய் | - நாற்பது நாட்கள் |
| புதன் | - முப்பது நாட்கள் |
| வியாழன் | - ஒரு வருடம் |
| வெள்ளி | - ஒரு மாதம் |
| சனி | - இரண்டரை வருடம் |
| இராகு / கேது | - ஒன்றரை வருடம் |

**நவக்கிரகங்கள் தொடர்புற்ற நட்சத்திரங்கள்**

| | |
|---|---|
| சூரியன் | - கார்த்திகை, உத்தரம், உத்தராடம் |
| சந்திரன் | - ரோகினி, அத்தம், திருவோணம் |
| செவ்வாய் | - மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் |
| புதன் | - ஆயிலியம், கேட்டை, ரேவதி |
| வியாழன் | - புணர்பூசம், விசாகம், பூரட்டாதி |
| வெள்ளி | - பரணி, பூரம், பூராடம் |
| சனி | - பூசம், அனுசம், உத்திரட்டாதி |
| இராகு | - திருவாதிரை, சுவாதி, சதயம் |
| கேது | - அஸ்சுவினி, மகம், மூலம் |

**சிவஸ்ரீ லோகநாதக்குருக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேசத் திருத்தலங்கள்

- ஒரு தொகுப்பு -

## 01. தம்பட்டை ஸ்ரீ ஆறுமுகசுவாமி ஆலயம்

அமைவிடம்:- கிழக்கிலங்கையின் திருக்கோவில் பிரதேசத்தின் தம்பட்டைக் கிராமத்தின் கரையோரமாக இவ்வாலயம் அமைந்துள்ளது.

தம்பட்டைக் கிராமம் மிகவும் பழமையான வரலாற்றினைக் கொண்ட வீரசைவக் குருமாரும் அவர்களது குடும்பங்களும் வாழ்ந்து வருகின்ற ஒரு கிராமமாகும் இங்கு ஸ்ரீ ஆறுமுக சுவாமி கோயில் கொண்டு நாடிவருகின்ற பக்தர்களுக்கெல்லாம் திருவருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார். இங்கு கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஆறுமுக சுவாமி தம்பட்டையில் வந்து கோயில் கொண்டது பற்றி பழமையான வரலாறு ஒன்றுண்டு.

இன்றைக்கு சுமார் 150 வருடகாலத்திற்கு முன்னர் தற்போதைய ஆலையடி வேம்பு பிரதேசத்தில் உள்ள பனங்காடு எனும் கிராமத்தின் அண்மையில் பாமங்கை என்னும் இடம் அமைந்திருந்தது. அக்காலப்பகுதியில் அங்கு மரக்கறி மற்றும் சேனைப் பயிர் செய்பவர்களே வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் அங்குள்ள விவசாயி ஒருவரின் மகள் தமது தோட்டத்தில் தண்ணீருக்காக துரவு வெட்டிக்கொண்டிருக்கும் போது கணீர் என்ற ஓசை ஒன்று எழுந்தது. வியப்படைந்த அந்தச் சிறுமி மேலும் துரவினைத் தோண்டியவுடன் ஒரு விக்கிரகம் தென்பட்டது. அப்போது மெதுமெதுவாகத் தோண்டி விக்கிரகத்தினை மண்ணிற்கு வெளியே எடுத்தபோது ஆறுமுகங்களுடன் கூடிய முருகப் பெருமானுடைய விக்கிரகம் காட்சியளித்தது. தோண்டும் போது மண்வெட்டி பட்டதன் காரணமாக பெருமானுடைய ஒரு பக்கத்தோள் பகுதியில் இருந்து இரத்தம் கசிவதனைக் கண்ட அந்தச் சிறுமி விரைந்து சென்று தன் தந்தையாரிடம் நடந்த சம்பவத்தினைக் கூறினாள். தந்தையார் அங்கு சென்று அந்த அற்புதக் காட்சியினைக் கண்டு பயபக்தியுடன் விக்கிரகத்தினை எடுத்து மனமுருகித் தொழுது மன்றாடி பந்தல் ஒன்றினை அமைத்து அதனுள்ளே விக்கிரகத்தினை வைத்துவிட்டு செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தார்.

கதிரவன் மெல்ல மெல்ல நகர்ந்து இரவாகியது. விவசாயி மனச் சஞ்சலத்துடனே பந்தலின் கீழே உறங்கிவிட்டார். அப்போது விவசாயினுடைய கனவில் முருகப் பெருமான் காட்சி கொடுத்து தன்னை தம்பட்டை எனும் இடத்தில் வைக்கும்படி ஆணையிட்டார். தூக்கம் கலைந்து திடுக்கிட்டு எழுந்த விவசாயி தாம் கண்ட கனவை எண்ணிக்கொண்டு அந்த அதிகாலை வேளையில் வண்டி கட்டிக்கொண்டு தம்பட்டை நோக்கிப் புறப்பட்டார். தம்பட்டையினை அடைந்ததும் அங்குள்ள ஆதிசைவப் பட்டர்களிடம் (வீரசைவ குருமாரிடம்) விக்கிரகத்தினை ஒப்படைத்தார். பெருமானுடைய விக்கிரகத்தினைப் பெற்றுக்கொண்ட குருமார் அதற்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து கிடுகினால் ஒரு பந்தல் அமைத்து ஆறுமுகப் பெருமானை எழுந்தருளச் செய்தனர்.

தானாக விரும்பி வந்து தம்பட்டையில் உறைந்த ஸ்ரீ ஆறுமுகப் பெருமானுக்கு இற்றைக்கு 50வருடங்களுக்கும் முன்னர் திரு சின்னத்தம்பி வைத்தியர் என்பவரால் சிறிய அளவிலான ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. அதன் பின்னர் நெடுங்காலமாக ஆலயத்திற்கான கும்பாபிஷேகம் இடம் பெறாமையினாலும், ஆலயத்தினை பெரிதாக அமைக்க ஊர் மக்கள் விரும்பியதனாலும் அப்போதைய திருக்கோவில் பிரதேச செயலாளர் திரு.V.R. வேதநாயகம் மற்றும் அப்போதைய தம்பட்டை அ.த.க. பாடசாலை ஆசிரியர் திரு. கணபதிப்பிள்ளை என்பவர்களால் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு தொடர்ச்சியாக பல நிருவாகங்களின் திருப்பணிகளால் ஆலயத்தின் கட்டுமானப் பணிகள் நடை பெற்று கடந்த 18-03-2012ம் திகதி கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது.

- ஓம் சரவணபவாய நமஹ -

வரலாற்றுத் தகவல்கள்,
**சிவஸ்ரீ. த. சிவகுரு குருக்கள்,**
தம்பட்டை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 02. தம்பட்டை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

**அமைவிடம்:** ஈழமணித் திருநாட்டின் தென்பால் திருக்கோவில் பிரதேசத்தின் தம்பட்டைக் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**ஆலய வரலாறு:** இற்றைக்கு சுமார் 19நூற்றாண்டுகளுக்கும் முன்னர் மனுநேயகஜபாகு என்ற அரசன் திருக்கோவில் (நாகர்முனை) ஆலயத்திற்குத் திருப்பணி செய்த வேளையில் தம்பட்டையில் வீர சைவ அந்தணர்கள் குடியமர்த்தப்பட்டதும் அவர்களுக்கு பட்டயம் ஒன்று வழங்கப்பட்டதுடன் மாணிக்க வைரத்தினாலான கணேச விக்கிரகம் ஒன்றும் தம்பட்டை மக்களின் வழிபாட்டிற்காக வழங்கப்பட்டதென்பது வரலாற்று உண்மைகளாகும். இந்தக் கணேச விக்கிரகமே பல நூற்றாண்டு காலமாக தம்பட்டை மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வந்தது. பின்னர் ஸ்ரீ ஆறுமுக சுவாமிக்கும் தம்பட்டையில் ஆலயம் ஒன்று உருவானது.

ஆயினும் ஆதி காலத்தில் தம்பட்டை மக்களுக்காக அரசனால் வழங்கப்பட்ட கணேச விக்கிரகமானது இற்றைக்கு சுமார் 50 வருடங்களுக்கும் முன்னர் களவாடப்பட்டது. அரசனால் தம்பட்டை மக்களுக்காக வழங்கப்பட்டதும், தமது மூதாதையர்களான வீரசங்கமக் குருமாரால் பூசிக்கப்பட்டதும், மிகவும் பழமையானதும், மிகுந்த பெறுமதியுடையதுமான இந்தக் கணேச விக்கிரகம் களவாடப்பட்டதானது தம்பட்டைக் கிராமமக்கள் மத்தியில் மிகுந்த மனக்கவலைகளை ஏற்படுத்தியது. ஆலயத்தில் விநாயகர் வழிபாடு செய்ய முடியாத நிலையில் மக்கள் தவித்தனர். அவ்வேளையில் (சுமார்40வருடங்களுக்கு முன்னர்) தம்பட்டையின் கடற்கரையிலே யானைக்கல் என்ற சிறிய மலை ஒன்று அமைந்துள்ள இடத்திலே விநாயகரின் உருவத்தினை ஒத்த யானை முகத்துடனான கருங்கல் ஒன்று தரையொதுங்கிக் கிடப்பதனைக் கிராம மக்கள் கண்டனர். மிகுந்த ஆச்சரியமடைந்தனர். விநாயகப் பெருமானின் அருளினை நினைத்து பரவசமடைந்தனர்.

நமது கிராமத்தில் விநாயகர் ஆலயம் இல்லை என்ற குறை இன்றுடன் தீர்ந்தது என எண்ணினர். அவ்வேளையில் தம்பட்டையில் வாழ்ந்த பெரியவர்களாகிய திரு. க. வேலாயுதம் (சேனாதிபதியர்), சிவஸ்ரீ. த. சிவகுருகுருக்கள் (பூபாலப்பிள்ளை), திரு.க.சிவலிங்கம், திரு.க.வடிவேல் (மூத்ததம்பி), திரு.கு.கந்தையா போன்ற பெரியவர்கள் விநாயகப் பெருமானைக் கடற்கரையில் இருந்து எடுத்துவந்து திரு. கு. கந்தையா என்பவரின் நிலத்தில் தற்காலிகமாக ஒரு பந்தல் அமைத்து விநாயகப் பெருமானை வழிபட்டுவந்தனர். சிவஸ்ரீ. த. சிவகுருக்குருக்களால் தொடர்ச்சியாக தினமும் பூசைகள் நடாத்தப்பட்டு வந்தன. இவ்வேளையில் கிராமத்தில் பல நலன்களும் சித்திகளும் வந்து சேர்ந்தமையால் விநாயகருக்கு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் என நாமம் சூட்டினர்.

அவ் வேளையில் திரு.கு. கந்தையா என்பவரின் வாழ்வில் பல இடர்பாடுகள் வந்து கொண்டிருந்தது. தாம் குடியிருக்கும் நிலத்தில் கோவில் அமைந்திருப்பதுதான் இதற்கான காரணம் என உணர்ந்த இவர் மேற்கூறிய பெரியவர்களிடம் தமது நிலையினை எடுத்துரைத்தார். உண்மையினை உணர்ந்த பெரியவர்களும் விநாயகப் பெருமானை அங்கிருந்து எடுத்துக் கடற்கரைப் பக்கமாக தனியாக ஒரு இடத்தில் பந்தல் ஒன்றினை அமைத்து விழிபாடுகளை மேற்கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அக்காலப்பகுதியில் இவ் ஆலயமானது மரம், கிடுகு கொண்டு அமைக்கப்பட்டிருந்தமையால் மழைக்காலங்களில் தாக்குப்பிடிக்க முடியாத நிலை காணப்பட்டது. இதனைக் கண்ட மேற்குறிப்பிட்ட பெரியவர்களதும் திரு. க. தாமோதரம், திரு. அ. ககனசூரியம், திரு. ஆ. கந்தையா, திரு வேலுப்பிள்ளை, திரு. காளிக்குட்டி, திரு. குழந்தையர், திரு. இராசையா, திரு. வேலாயுதம் போன்றவர்களின் முயற்சியினாலும் கடின உழைப்பினாலும் சிறிய அளவிலான ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு தொடர்ந்து பூசைகள் இடம்பெற்றன. அத்துடன் ஆகம முறைப்படி ஓர் ஆலயம் அமைந்தால் ஆலயத்தின் வெளி வீதிக்கு தற்போது இருக்கின்ற இடம் போதாமல் இருக்கும் என்பதனை உணர்ந்த சிலபெரியவர்கள் தமது சிறிய அளவிலான காணித் துண்டுகளை ஆலயத்தின் வெளி வீதி அமைப்பதற்காக அன்பளிப்பாக வழங்கினர்.

இது சிறிய அளவிலான ஆலயமாக இருந்தமையினால் ஆகம முறைப்படி பெரிய அளவிலான ஆலயம் ஒன்றினை அமைத்து கும்பாபிஷேகம் பண்ணவேண்டும் என பெரியவர்களும் ஊர் மக்களும் எண்ணம் கொண்டு முயற்சி எடுத்தனர். இதன் விளைவாக சில காலங்களுக்கும் முன்னர் சிவஸ்ரீ. க. லோகநாதக் குருக்கள் (புனங்காடு ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்தான பிரதம குரு) மற்றும் ஆலய நிருவாக சபையினரான திரு. வி. மோகன், திரு. செல்லத்துரைச்சாமி, திரு. வீ. பாக்கியராசா ஆகியோர்களால் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு தொடர்ந்து வந்த பல நிருவாகங்களின் கடுமையான உழைப்பினாலும் முயற்சியினாலும் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று மிக விரைவில் மகா கும்பாபிஷேகம் காணும் இறை நல்லாசியுடன் உள்ளது.

## தம்பட்டை ஸ்ரீ சித்தி விநாயகர் புகழ் மாலை

**சைவத் திருமறையோர் வந்துறைந்த திருவூரில்**
**வங்கக் கடலிலே நீராடி எளுந்து வந்து**
**கோவில் கொண்ட குஞ்சரமே - சக்தி திருமகனே**
**சங்கரனின் பாலகனே - சித்தி விநாயகனே**
**என் வாழ் நாள் முளுவதும் நின் பொற்பாதக் கமலம்**
**சிரம்தாழ்த்திப் பணியும் பாக்கியம் தந்தருள்வாய்**
**ஐயா பாக்கியம் தந்தருள்வாய்**

*பாடல்* - **வீ. பாக்கியராசா,**
ஆலய வண்ணக்கர்.



*தொகுப்பாக்கம்:*
**பாக்கியராசா உமாகரன் (உமாபதி)**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 03. தம்பிலுவில் - களுதாவளை ஸ்ரீ சிவலிங்கப்பிள்ளையார் ஆலய வரலாற்றுச் சிறுகுறிப்பு

திருக்கோவில் பிரதேசம் தம்பிலுவில் கிராம தென் கோடி கண்டக்குடா என்ற..., மக்கள் களிமண் அகழ்ந்தெடுத்து வந்த அந்தப்புறத்தரைப் பெருவெளியை அண்டியதான மணல்மேடு அதிலே அமைந்துள்ளது இந்தச் சிவலிங்கப்பிள்ளையார் ஆலயம். பிரதான பாதையூடே பயணம் செய்வோர் தமது பிரயாண நலனுக்காக விக்கினேஸ்வரப் பெருமானை மன்றாடித்தட்சணையும் உண்டியலில் இட்டுச் செல்லும் நடைமுறை மிகவும் பக்தி பூர்வமான நம்பிக்கையாகும்.

1931ம் ஆண்டு காலப்பகுதியில் ஓர் நாள்...! அப்போது அந்த முகத்துவாரத்தாம்போதி கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு பொறியியலாளராகச் சேவை ஆற்றிக் கொண்டிருந்தவர் ஒரு இந்தியர். இவரது பிள்ளை ஒன்று வாய்பேச முடியாதபடி பிறப்பிலே ஊமையாகும். “பேசாத பிள்ளையைப் பேச வைப்பான் களுதாவளையான்” என அந்த வேலைத்தளத்தில் தொழில் புரிந்த களுதாவளைக் கிராமத்தவர் சிலர் பேசக் கேட்ட அந்தப் பொறியியலாளரும், களுதாவளைக்குப் போய் அந்த ஆலயத்தில் பிள்ளையாருக்குப் பெரும் பூசை, பொங்கலிடுவதாக ஒரு நேர்த்திவைத்தார்.

பொறியியலாளரின் நேர்த்தி களுதாவளையில் உறைந்துள்ள பிள்ளையாரின் திருவருளால் நிறை வேறி அந்தப் பிள்ளைக்கும் பேசும் திறன் உண்டாயிற்று. தன் வேண்டுதலை நிறைவேற்றிவைத்த களுதாவளையானுக்கும் பெரும் பொங்கல் பூசை நடத்த அந்தப் பொறியியலாளர் நாள்க் குறித்து.., பழவகை முதலான பொருட்களைச் சேகரித்தார். ஆனால் இறை சித்தம் வேறு விதமாயிருந்தது. குறித்த நாளுக்கு முன் தொடங்கிய மழை தொடர்ந்து பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மக்களது போக்குவரத்தும் தடைப்பட்டது.

இதனால் மனமுடைந்த அந்தப் பொறியியலாளர் கவலையுடன் தூங்கப் போனார். அப்போது அவரது கனவில் ஒருவர் தோன்றி கவலைப்படாதே அந்த மரத்தடியில் ஒரு கல்லை நீர்ப்படை செய்து வைத்துப் பூசனை புரிந்து பொங்கலிடு..., நான் உள்ளேன்...., என்று கூறி மறைந்தார். விழித்தெழுந்த பொறியியலாளர் உளம் பூரித்து..., மற்றவர்களிடமெல்லாம் கூறி..., அந்தக் கடலோரம் உடைந்து கிடந்த பெரியகல்லைச் செப்பனிட்டு சமுத்திரத்தில் நீர்ப்படை செய்து இந்த ஆலயம் அமைந்துள்ள நிலத்திற்கு சற்றுத் தெற்குப் பக்கம் ஒரு துவரை மர நிழலில் வைத்துப் பொங்கலிட்டு பூசனை புரிந்தார். இந்த வேலைத்தளத்தில் களுதாவளை மக்கள் அநேகமானோர் வேலைசெய்ததனாலும் களுதாவளைப் பிள்ளையார் நேர்த்தி நிறை வேற்றிய இடமென்பதாலும் இந்த இடம் அன்றிருந்து களுதாவளைப் பிள்ளையார் என வழங்கலாயிற்று.

மேற்படி வரலாற்று நிகழ்வு பற்றித் தெரிவித்தவர் அமரர். கதிரேசப்பிள்ளை - பொன்னையா ஆவார். இதனைக் கேட்டவரும் எங்களுக்கு எழுதித் தந்தவரும் சிவஸ்ரீ. சோ. கணேசமூர்த்தி குருக்கள் அவர்களார்.

பின்பு மேற்படி இடத்தில் பிள்ளையாருக்கு ஓர் ஆலயம் அமைக்கப் பிரதேசப் பொதுமக்கள் முயன்றனர். அது நிறைவேறாமற் போயிற்று. இதற்கு அமைப்பு இருந்தது, மற்றொரு இந்திய மகன். அவர் தான், முதுமொந்தன் மொழி சுயம்பு நாராயணன் என்னும் திருநெல்வேலி ஜில்லா, நாலுகால் தாலுக்கா, தென்னிந்தியாவைச் சேர்ந்த கொடுத்து வைத்த ஆத்மாவுக்காகும். இவர் ஒரு சாதாரண ஆலயம் அமைத்து 26.06.1971இல் குடமுழுக்கு செய்து சில வருடங்கள் பராமரித்து வந்தார். அன்றிலிருந்து ஆனி உத்தரம் தோறும் ஆண்டு தீர்த்த உற்சவம் நடைபெற்று வருவது சிறப்பாகும்.

பின்பு அந்த நாராயணன் தனது தாய்நாடு செல்லும் போது மேற்படி ஆலயப் பராமரிப்பினை விஸ்வகுலத்தைச் சேர்ந்த திரு.சோ.பாலசுந்தரம் ஆச்சாரியிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார். தொடர்ந்து திரு. பாலசுந்தரம் ஆச்சாரி அவர்களும் கிராம மக்களின் பங்களிப்புக்களுடன் சில காலம் ஆலயத்தைப் பராமரித்து வந்தார். கடந்து போன ஆழிப் பேரலை அனர்த்தத்தின் போது அந்த ஆலயம் சேதமாயிற்று. தற்போது புதிய ஆலய மொன்று அமைக்கப்பட்டு ஸ்ரீ சிவலிங்கப் பிள்ளையார் ஆலயம் என்ற பெயரில் மிகவும் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் பூசை புணர்க்காரங்களுடன் நடந்தேறி வருகின்றது.

ஓம் விக்னேஸ்வராய...!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சற்குருபாதம்

# 04. ஸ்ரீ காயத்ரீ ஆலயமும் தபோவனமும்

*ஓம் சற்குருவே நமஹ!*

சற்குருவின் பாதார விந்தங்களில் என் உணர்வுகளைக் காணிக்கை ஆக்கி...; குருநாதரின் மானசீக அனுமதியுடன் இந்தச் சிறு குறிப்பைச் சிரம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

தம்பிலுவில் வட எல்லையில் வளம் சுரக்கும் களுதாவளை சிவலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் முன்பாக; பாரதத்தின் வடநாட்டுப்பாணி - ஆரியரது ஆலய அமைப்பு விதி முறைகளுக்கு ஏற்பப் பிரமாண்டமாக எழுந்து நிற்கும் ஆலயம் தான் காயத்ரீ ஆலயமாகும். இது அமைந்துள்ள இடம் ஒரு காலத்தில் வெங்கார வெட்டையாக விருந்து...; இன்று பூத்துக்குலுங்கிப் பூரித்து நிற்கும் காயத்ரீ தபோவனமாகும். இந்தப் பெரும் தபோவனத்துள் தென் கிழக்குக் கோடியில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ள மண்டபம்தான் குருபீடமென்கின்ற தவச் சாலையாகும்.

மகானுபவர்களான மகரிஷிகளின் கருத்தின் படியும், அவர்தம் சூக்கும வழிகாட்டலின் பாலும், சற்குருநாதர், காயத்ரீ சித்தர்முருகேசு மகரிஷியவர்கள் இந்த ஆலயத்தையும்; தபோவனத்தையும் உலக மக்களுக்காக அமைத்துத்தந்ததுடன், நித்திய ரூபியாக இங்கு வாசம் செய்கின்றார் என்பதும்; இந்த ஆசிரமக் குழந்தைகளான எம்போன்றோரது நம்பிக்கையாகும்.

கடந்த 1992ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காயத்ரீசித்தர், சுவாமி முருகேசு அவர்களின் கிழக்கிலங்கைக்கான இரண்டாவது வருகை பெரும் "ஆன்மீக விஜயமாக" நிகழ்கிறது. மட்டுநகர் இருந்து திருக்கோவில் பிரதேசம் வரை நீண்ட பெரும் பயணம் இதுவாகும். அப்போது எம்போன்ற சிலரது விருப்பத்திற்கமையத் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அதிபர்; இறைபதமெய்திய நல்லாத்மா தம்பையா அடிகளார் "திருக்கோவில் பகுதிக்கும் வந்து செல்லுங்கள்" என சுவாமியவர்களை அழைத்திருந்தார்கள்.

மேற்படி அழைப்பை ஏற்ற சுவாமி அவர்களும் இந்தப் பகுதிக்கு விஜயம் செய்தார். இரண்டு தினங்கள் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம்; மற்றும் ஏனைய ஆலயங்கள் என எங்கும் சென்று அருளுரை ஆற்றிக் "காயத்ரீ" மந்திர மகிமை பற்றி விளக்கமளித்தார். இந்த நிகழ்வுக்குப் பின்பு பல பக்தர்களுக்கு இந்தப்பிரதேசத்துள் ஒரு காயத்ரீ ஆலயம் அமைக்க வேண்டுமென்ற அவாமேலோங்கியது. இதுவே இந்தப் பிரதேசத்துள் "காயத்ரீ" ஆலயமும் தபோவனமும் அமையக் கால்கோளாயிற்று.

சுவாமி அவர்களும் தனது விஜயத்தினை நிறைவு செய்து நுவரெலியா திரும்பும் தருணத்தில்; சில பக்தர்களின் வேண்டுதலுக்கேற்ப..; தம்பிலுவில் கடற்கரை மருங்காக ஒரு காணியையும் ஆலயம் அமைக்கலாமாவெனப் பார்த்துச் சென்றார். ஆனால் முடிவு எதுவும் சொல்லவில்லை.

மேற்படி விடயத்தில் இரண்டாவதாக ஆராய்வுக்கு வந்த இடமே தற்போது ஆலயம் அமைந்துள்ள இடமாகும். தம்பிலுவில் முதலாம் குறிச்சியில் வசிக்கும் சுப்பிரமணியம் வேல்நாயகம் எனும் நல்லமனசுள்ள ஒரு ஆசிரியர்...; முருகேசு சுவாமி அவர்களின் நெருங்கிய பக்தரான பொறியியலாளர் திரு.ரவீந்திரன் ஐயா அவர்கள் அவ்வேளை தந்துதவிய ஒரு தொகைப் பணத்தினைப் பெற்றுக் கொண்டு; தனது காணியை முருகேசு சுவாமி அவர்களின் பெயரில் உறுதி முடித்துத் தந்தார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து... முருகேசு சுவாமி அவர்களது பாதையில்.....; காயத்ரீ மயவாழ்க்கைக்குத் தம் மீதிக் காலத்தை அர்ப்பணிக்கத் திடசங்கற்பம் பூண்ட பதின் மூன்று பேர்களடங்கிய ஒரு நிர்வாகக்குழு தோற்றுவிக்கப்பட்டது. சுவாமியின் அருள் நோக்கும்; இப் பதின் மூன்று பேர்களின் ஒற்றுமையுடனான தளராமுயற்சியும் இல்லாதிருந்திருந்தால்....; நிச்சயமாக இந்தப்பிரமாண்டமான காயத்ரீ ஆலயமும்; தபோவனமும் உருவாகி இருக்க முடியாது என்றால் மிகையல்ல.

திருக்கோவில் பிரதேசம் - தம்பிலுவில் ஸ்ரீ காயத்ரீ பீடத்தினதும்; காயத்ரீ தபோவனத்தினதும் தோற்றமும் - வளர்ச்சியும் - இன்றைய நிலையும் இதுவே ஆகும்.

தொடர்ந்து பல ஆத்மாக்கள் சுவாமியின் பாதைக்கு வந்தன. பதின் மூன்று பேரையும் பின்பற்றிக் காயத்ரீமயவாழ்வுக்கு பலர் தம்மை அர்ப்பணித்தனர். அனைவரதும் ஒற்றுமையான பங்களிப்புடன் சிறியதொரு ஆலயம், பக்தர்கள் தங்கிச் செல்ல ஒரு மண்டபம் முதலான பல தேவைப்பாடுகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டன. குருதேவர் முருகேசு சுவாமியவர்களும் பதின் மூன்று பேர்களையும் முன்னரங்காகக் கொண்டு அநேகம் பக்தர்களையும் அரவணைத்து பலநூறு காயத்ரீ குடும்பங்களையும் கட்டி இணைத்தார்.

தொடர்ந்து சுவாமியவர்களின் வருகையும், பற்பல ஆன்மீக செயற்பாடுகள், புதிய பல கட்டடங்கள், மிகப்பெரிய காயத்ரீ ஆலயம் என்பனவற்றுடன் இந்த இடம் மிகப்பிரபல்யம் பெற்றது. சித்த மகான்களின் தவ வலிமையும்-சுவாமியவர்களின் மனோவலிமையும் காயத்ரீ தேவியின் பேரருட்கடாட்சமும் ஒன்று சேர்ந்து சர்வதேசத்தின் இரண்டாவது மிகப் பெரிய காயத்ரீ ஆலயம் முருகேசு சுவாமியவர்களால் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது.

இங்கே வியந்து பேசத்தக்கதாக தவ சிரேஸ்டர் சிவபால யோகி மகராஜ் அவர்களால் புனிதமான நர்மதா நதியில் பெறப்பட்ட மிக மிகச் சக்தி வாய்ந்த "பாசு பதேஸ்வரர் லிங்கம்" வைக்கப்பட்டுள்ளது. மற்றும் மிகப் பழங்காலமிருந்து சித்தர்களால் பூஷிக்கப்பட்டு வந்த அக்கினிலிங்கம் இன்றும் அனல்வீசிக் கொண்டிருக்கிறது. மேலும் பல தெய்வ மூர்த்தங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன.

இங்கு மனத்துயரை மறக்கச் செய்யும் குருபீடம்; மூலஸ்தான மூர்த்தமாக காயத்ரீதேவி, முன்னிருக்கும் விக்னேஸ்வரர், இடதுபுறம் சரவணபவன்; முன்னே பாசுபதேஸ்வரலிங்கம், தொடர்ந்து வாயு புத்திரர் ஆஞ்சநேயர், சீதாவல்லபம் ஸ்ரீ இராமச்சந்திரர், முனிசிரேஸ்டர், அகத்தியமாமகரிஷி, காயத்ரீமந்திரம் அருளிய விஸ்வாமித்திரமகரிஷி, கோகுலத்தில் தவழ்ந்த தேவகிநந்தன், கிருஷ்ணபகவான் மற்றும் அமிர்தக் கலசம் தன்வந்திரிமகரிஷி முதலான பல மூர்த்தங்கள் அமையப்பெற்றுள்ளன. இதுவே ஸ்ரீ காயத்ரீ ஆலயத்தின் தோற்றமும் - வளர்ச்சியுமாகும்.

**"ஓம் பூர் - புவ - ஸ்வ - தத் ஸவிதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோ நப் பிரசோதயாத்"**

(காயத்திரி மந்திரம்)

**- திருமதி. திலகராணி வீரக்குட்டி -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. தம்பிலுவில் முனையூர் வடபத்திரகாளியம்மன் ஆலயம்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ!

வியாச பகவான் தொகுத்த நான்கு வேதங்களில்...; ரிக் வேத சங்கிதைகள் பகுத்துக் கூறும் நான்கு வருணங்களில் முதலாவது வருவது பிரமகுலமாகும். அதிலும் படைக்கின்ற ஐந்து தொழிலுக்கதிபதியான விஸ்வப்பிரம கோத்திரத்தார் முதன்மை பெறுகின்றனர். இவர்களே விஸ்வகுல மக்களாவர்.

திருக்கோவில் பிரதேசத்தில் பரந்து வாழ்கின்ற விஸ்வகுலமக்கள், முனையூரில் செறிந்து வாழ்கின்றனர். அவர்தம் குல தெய்வம் வடபத்திர காளி என்பது புராணகால வரலாறு, விரிவஞ்சி விபரிக்க இயலவில்லை. இந்த மக்கள் குல தெய்வவழிபாட்டுக்காக அமைத்துக் கொண்ட ஆலயமே முனையூர் வடபத்திரகாளியம்மன் ஆலயமாகும்.

மேற்படி ஆலயம் முதன் முதலில் களுதாவளை சிவலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வடபுறமாக 1976ம் ஆண்டு சிறியதொரு கட்டடமாக (ஒரு அறையில்) அமைக்கப்பட்டு.., 1976,1977எனும் இரு வருடங்கள் சடங்கு உற்சவம் நடைபெற்றன. பின்பு காளி தேவியின் அகோர தோற்றப்பாடுகளுக்கு பொது மக்கள் அச்சமுற நேரிடலாம் என அஞ்சி.., பிரதான வீதியை விடுத்து விஸ்வகுலமக்கள் செறிந்து வாழும் முனையூருக்கு மாற்றி அமைக்கலாமெனப் பொது மக்களது பொது அபிப்பிராயம் மேலெழுந்தது.

இந்த முடிவுக்கமைவாக முனையூரில் வட பத்திரகாளியம்மனுக்கு ஆலயம் அமைக்க உகந்த ஓர் இடம் தேடுதலுக்கானது. இந்த வேளையில் தம்பிலுவிலைச் சேர்ந்த ஓர் புனிதமான ஆத்மா, தற்போது அமரராகிவிட்ட கணபதிப்பிள்ளை, சுந்தரமூர்த்தி (Co-op Inspactor) தனக்குச் சொந்தமான ஓர் காணித்துண்டினை முனையூரில் வடபத்திரகாளியம்மன் ஆலயம் அமைப்பதற்காகக் கொடுத்தார். இந்தக்காணியில் 1978ம் ஆண்டு 8ம் மாதம் கிடுகினால் வேயப்பட்ட ஒரு அமைவிடத்தில் முறையான சடங்கு நடைமுறைகள் மூன்றுநாள் நடைபெற்றுத் தீ மிதித்தலுடன் நிறைவு பெற்றது.

தொடர்ந்து இந்த இடத்தில் ஆண்டு தோறும் ஆவணிமாத பௌர்ணமிக்கு சில நாட்கள் முன்பாக நிறைவு பெறக் கூடியவாறு வடபத்திரகாளியம்மன் சடங்கு உற்சவம் சிறப்போங்க நடைபெற்று வருகிறது, அத்துடன் இந்த ஆலய அபிவிருத்தி நடைமுறைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்த ஆலயத்தின் முதலாவது தலைவராக இருந்தவர் இறைபதமெய்திய திரு நல்லதம்பி சின்னத்தம்பி ஆசாரி அவர்களாவார். (1978) இவர் திருக்கோவில் பிரதேசத்தின் மூத்த இலக்கியவிற்பன்னர், அமரர். மேதகு. வில்லியம்பிள்ளை அவர்களிடம் புராணபடலம் நிகழ்த்தும் அருங்கலையை இலக்கண, இலக்கிய சுத்தமாகக் கற்றுத்தேர்ந்து துறை தேர்ந்த ஒரு புராணபடலராகப் பேரோடும், புகழோடும் உலாவந்த பெருமகனாவார்.

தொடர்ந்து பல அபிவிருத்திப்பணிகளை மேற்கொண்ட பல தலைவர்கள் இந்த ஆலயப் பணிகளை முன்னெடுத்துள்ளனர். விரிவஞ்சி விபரிக்க இயலவில்லை. தற்பொழுது திருவாளர் திருஞானமூர்த்தி ஜெயேந்திரன் என்பவர் தலைவராகச் சேவை புரிகின்றார்.

அத்துடன் இந்த ஆலயம் தோற்றம் பெற அன்றிருந்து இன்றுவரை அரியபல சேவைகளைச் செய்த நிரந்தர பூஷகர் மார்க்கண்டு தியாகராசா அவர்களையும் நினைவு கூரவேண்டும்.

இவ்வாறு ஆலய ஆரம்ப நாட்களிலிருந்து இன்றுவரையும் படிமுறை வளர்ச்சியினைக் காட்டி நிற்கும் இந்த ஆலய முன்னேற்றம் எதிர்காலத்தில் வியத்தகு உயர்நிலை எய்தும் என்பது திண்ணம். தக்கனது முறை தவறிய யாகத்தைச் சிதைத் தழித்த அந்தக் காளிகாதேவி மென்மேலும் திறன் நல்க வேண்டுமென மன்றாடி நிறைவு செய்கிறேன்.

– ஓம் விஸ்வப் பிரமனே நமஹ! –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. மஹா விஷ்ணு ஆலயம்

இவ் ஆலயம் மிகப்பழமையான ஒரு ஆலயமாகும். தம்பிலுவில் 1ம் பிரிவில் பிரதான பாதைக்கு மருங்கில் ஆலமர நிழலுக்கு அணித்தாக அமைந்துள்ளது. இது பற்றிய வரலாற்றுத் தகவல்கள் எம்மிடம் கிடைக்கவில்லை. இங்கு அமரத்துவமெய்திய விஷ வைத்தியர் சரவணமுத்து அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட விஷம் அகற்றும் ஒரு கல்லும் நடப்பட்டது.

ஓம் மஹா விஷ்ணுவே நமஹ!

## 07. தம்பிலுவில் சித்தி விநாயகர் ஆலயம்

இதுவும் மிகப் பழமையான ஆலயமாகும். முன்பு மூலஸ்தானத்தில் சிவலிங்க நடராஜ மூர்த்தம் இருந்ததாகவும் சிவ வாய் மொழிக் கதை உண்டு. ஆனால், கண்ணகை அம்மன் ஆலயச் சுற்றாடலில் அமைந்துள்ளதோடு, முன் நாட்களில் நடைபெற்ற கொம்பு விளையாட்டிலும் இந்த ஆலயத்திற்கு முக்கிய பங்கு உண்டு.

தென்சேரி அம்மன் பாகமாகவும், வடசேரி பிள்ளையார் பாகமாகவும் கொண்டே முன் நாட்களில் கொம்பு விளையாட்டு நடைபெற்று வந்தது யாவரும் அறிவோம்.

தற்போது ஆலயம் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு..., சங்காபிஷேகமும் நிறைவடைந்து ..., மிக்க பக்தி பூர்வமாக இந்த ஆலயம் சித்தி விநாயகரது அருளை கிராமமெங்கும்; நாடி வரும் பக்தர் இல்லங்கள் தோறும் வாரி இறைக்கிறது.

ஓம் கஜானனாய நமஹ!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. தம்பிலுவில் கண்ணகை அம்மன் வழிபாடும் பிரதேச நடைமுறைகளும்

திருக்கோவில் பிரதேச கண்ணகியம்மன் வழிபாடு என்பது, தம்பிலுவில் மக்களின் வாழ்வியலோடு ஒன்றிக் கலந்துவிட்ட ஒரு விடயமாகும். கற்புக்கரசி கண்ணகி இங்குள்ள மக்களின் காவல் தெய்வமாகவும், குலதெய்வமாகவும் வழிபடப்படுகின்றாள். இப்பிரதேசத்தின் மத்தியில் வீற்றிருக்கும் தாயவளின் கருணையாலே பெரிய பெரிய இன்னல்களில் இருந்தெல்லாம் தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசம் தப்பிப்பிழைத்தது என்பது இங்கு வாழும் மக்களின் அசையாத நம்பிக்கையாகும்.

தம்பிலுவில் கண்ணகியம்மன் வலாற்றை நோக்கின் பற்பல காதுவழிச் செய்திகள் நிலவுகின்றன. இலங்கையில் கண்ணகி வழிபாடானது கஜபாகு மன்னனால் கொண்டுவரப்பட்டது என்றும், அவனது நிர்வாகிகள் மூலம் வற்றாப்பளையிலிருந்து இங்கு வந்தது என்று ஒரு வகையான கருத்தும், பத்தினி வழிபாடானது தெற்கிலிருந்தே வடக்கு நோக்கிச் சென்றதாகச் சில கதைகளும் உலவுகின்றன.

எனினும், பட்டிமேடு அம்மன் கோவிலும் தம்பிலுவில் அம்மன்கோவிலும் பாணமை அம்மன்கோவிலும் ஒரே காலத்தில் எழுந்ததாகவே கூறப்படினும் தம்பிலுவில் கண்ணகியம்மன் ஆலயமே பழமைவாய்ந்த ஆலயமாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் இங்குள்ள கண்ணகியம்மன் சிலையானது பாரதத்திலிருந்து நேரடியாகவே கந்தபாணத் துறையில் (இன்றைய திருக்கோவில் ஊரானது தொன்மைக் காலத்தில் ஒரு துறைமுகமாக விளங்கியிருந்தது. அதுவே கந்தபானத்துறை என்று வரலாற்று ஆய்வுகள் கூறுகின்றன) வந்திறங்கியதாகவும் தமிழகத்தில் கண்ணகிக்கு விழா எடுத்த சில காலத்தினுள் அங்கிருந்து நேரடியாகவே இலங்கைக்கு இவ்வழிபாடு கொண்டுவரப்பட்டது. எனவும் இலங்கையில் மூன்று தொன்மைக்கால துறைகளில் மூன்று சிலைகள் வந்திறங்கியதாகவும் அதில் கந்தபாணந் துறைக்கு (திருக்கோவில்) வந்திறங்கிய அம்மனின் பெயர் கண்ணகியம்மன் எனவும் அவ்வம்மானுக்கு முதலில் ஊரக்கை வெளி ஆற்று முனைக்கு அண்மையில் உள்ள வீரச்சோலை என்ற இடத்தில் ஆலயம் எழுப்பி வழிபாடுகள் நடைபெற்றதாகவும், காலப்போக்கில் சில காலம் இவ்வாலயம் பரிபாலனம் செய்யப்படாமல் இருந்ததாகவும், பின் புறாவின் மூலம் அம்மனின் விக்கிரகம் மக்கள் கண்ணில் புலப்பட மீண்டும் ஆலயம் எழுப்பி வழிபட்டனர் என்றும் சில காலங்களுக்குப் பின் அது தம்பிலுவிலுக்கு இடம் மாற்றப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடுகள் தொடர்ந்ததாகவும் காதுவழிச் செய்திகளும் பொற்புறாவந்த காவியம், மழைக்காவியம் மூலம் அறியக்கிடக்கிறது.

ஆலய உற்சவமானது வருட மொன்றிற்கு ஒரு தரம் வைகாசிமாதம் வளர்பிறைத் திங்கள் குளிர்த்தி உற்சவம் நடைபெறுவதற்கு ஏற்றவாறே கதவு திறக்கப்படுகிறது. "வைகாசித் திங்கள் வருவேன்" என்ற வாக்கிற்கிணங்க மண்ணுலகில் இருந்து கண்ணகியம்மன் விண்ணுலகம் சென்றதாக கூறப்படும் குளிர்த்திப்பாடல் கூற்றுக்கு அமைவாக சில ஊர்களில் வைகாசிமாதத்து பூரணையிலும், சில ஊர்களில் வைகாசி மாதத்து வளர்பிறைத் திங்களிலும் குளிர்த்தி உற்சவங்கள் நடைபெறுகின்றன.

திருக்கதவு திறந்து தொடர்ச்சியாக ஏழு நாட்கள் சிறப்பாக பூசை நடைபெற்று 7ம் நாள் குளிர்த்தி உற்சவத்துடன் திருக்கதவு சாத்தும் வைபவம் நடைபெற்று இனிதே முடிவடையும். இக்கோயிலின் ஏழுநாள் பூசைகளும் ஆலய பரிபாலன சபையில் அங்கம் வகிக்கும் குடியினரான சிங்களக்குடி, கட்டப்பத்தான்குடி, கோரைக்களப்புக்குடி, வேடக்குடி, அறுபது முன்னங்கைச்சவடிக்குடி, குருக்கள்குடி, விஸ்வபிரம்ம கோத்திரத்தார் போன்றோர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இங்கு வண்ணக்கராக கட்டப்பத்தான் குடியினரும், தலைவராக சிங்களக் குடியினரும் வருவது காலங்காலமாக நிகழ்ந்து வரும் மரபு. ஆலயப் பூசகராக மழுவரசன் குடியைச் சேர்ந்தவர்களே இருந்து வருகின்றனர். இவரைக் கப்புகனார் என்றழைப்பது வழக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பூசைகள் யாவும் தொன்று தொட்டே பத்தாசி (அம்மன்பத்ததி) முறையில் நடைபெற்று வருகின்றன. இது அமைதியான ஒரு பூசை முறையாகும். ஆலயக் கதவு திறந்தது முதல் உற்சவம் நடைபெறும் அவ்வேழு நாட்களிலும் சில ஊர்க்கட்டுப்பாட்டு முறைகள் பேணப்பட்டு வந்துள்ளன. அவையாவன மாவு இடித்தல், மஞ்சள் அரைத்தல், எண்ணெய் உருக்குதல் என்பன செய்யக்கூடாது. புலால் உண்ணாமை, வெளியூர் பிரயாணம் மேற்கொள்வதைத் தவிர்த்தல், இந்நாட்களில் திருமணங்களை செய்யாமை போன்ற பல விடயங்கள் காணப்படினும் இவற்றுள் சில இன்று வரையும் ஊர்மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இங்கு நடைபெறும் திருவிழாக்களில் தொன்று தொட்டு வரும் சில நிகழ்ச்சிகள் முக்கியமானவை. இவற்றுள் 2ம் நாள் நடைபெறும் "காவிய ஏடு திறத்தல் வைபவம்" நடைபெறும். இக் காவிய ஏட்டுச் சுவடிகள் 1800 வருடகாலத்திற்கு முற்பட்ட பழமை வாய்ந்தவை. இங்கு பாடப்படும் காவியத்தின் சந்தமும் அதன் இனிமையும் ஏனைய கோயிற்பாடல்களை விட தனித்துவமானவை. 2ம்நாளுக்குரிய அடுத்த நிகழ்வாக "பச்சைப்பானைக்கு மண்ணெடுத்தல்" நடைபெறும். ஆரம்ப காலத்தில் ஊரக்கை வெளியில் மண்ணெடுத்து பச்சைப்பானை (சுடாதமண்பானை) செய்து அதிலே அம்மனுக்குரிய பொங்கல் செய்ததாகவும், குறிப்புக்கள் உள்ளன. எனினும் இன்று அங்குபோய் மண்ணெடுப்பதும், பச்சைப் பானையில் பொங்குவதும் நடைமுறையில் இல்லை.

ஆறாம் நாள் பூசையிலே 'கலியாணக்கால் நடுதல்' சிறப்பான நிகழ்வாகும். கலியாண மண்டபத்தில் கல்யாணக்கால் நட்டு நடுவில் உள்ள பெண்ணை அம்மனாகப் பாவித்தும் சூழவுள்ள பெண்களை சப்த கன்னிகளாய் பாவித்தும் ஆடை அலங்காரங்கள் செய்வதும் வழமை.

6ம் நாள் இரவுப் பூசை நடைபெற்று முடிய அம்மனின் கிராமப் பிரவேசம் நடைபெறும். இதுவும் தொன்று தொட்டு நடைபெறும் நடைமுறை ஆகும். ஆரம்ப காலத்தில் அம்மனைத் தோளில் சுமந்த வண்ணம் கிராமத்தினுள் வீதியுலா சென்றனர். பின் ஏடக அலங்காரம் செய்து உளவு இயந்திரத்தின் உதவியுடன் விதியுலா சென்றனர். இன்று அம்மனை தேரில் ஏந்தி வடம்பிடித்து ஆண்களும், பெண்களுமாக இழுத்துச் செல்கின்றனர். இவ்வாறு முறைகள் மாறினாலும் அம்மனின் கிராமப்பிரவேசம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றது. அம்மன் ஊர்வலம் வரும் தினம் இப் பிரதேசம் முழுவதும் கோலாகலமாக விழாக்கோலம் பூண்டிருக்கும். அம்மன் வீதிவலம் வரும் வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள மக்கள் தோரணங்கள் கட்டி இல்லங்களின் முன்னால் நிறைகுடம் வைத்து அம்மனை வரவேற்பர். இந்த நிறைகுடம் வைத்த இடங்களில் அம்மன் தேர் தரித்து நின்று தேங்காய் உடைத்து கும்பம் சொரிந்த பின் ஊர்வலம் தொடரும். ஊரில் சில சந்திகளில் அலங்காரப்பந்தலிடப்படும், இப்பந்தலானது அருகில் உள்ள குடியிருப்பு மக்களினால் போடப்படும். இதன் மூலம் மக்களிடையே உறவும் ஒற்றுமையும் பலப்படும். இவ்வலங்காரப்பந்தலில் பூமாலை விற்பனை நடைபெறும். இதன் மூலம் கிடைக்கப்பெறும் நிதி அம்மனுக்கு வழங்கப்படுவதோடு அம்மாலையும் அம்மனுக்கு சாத்தப்படும். இவ்வீதிவுலாவில் பெருந்திரளான பக்தர்கள் கூட்டம் அம்மனுடன் செல்வர். அம்மன் தேருக்குப் பின்னால் பக்தர்கள் காவியம் பாடி வருவர்.

கடைசிநாளாக 7ஆம் நாள் திங்கட்கிழமை பொங்கல் பானைகள் சுடப்பட்டதும் பொங்கலுக்கான நெல்லை கோயிலின் உள் வீதியில் கப்புகனார், பரிபாலிகர்கள் பெண்கள் சேர்ந்து குற்றுவர். மாலை வேளையானதும் அம்மனுக்குரிய பொங்கல் ஆலய உட்பிரகாரத்தில் திரை மறைக்கப்பட்டு பொங்கப்படும். அதேவேளை பக்தர்களும் தங்கள் பொங்கல்களை ஆலய வெளிவீதியில் பொங்குவர். வெளிவீதியெங்கும் பொங்கல் பானைகள் நிறைந்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலைப் பொங்கியவர்கள் வரிசையில் நின்று குறிப்பிட்டளவு பொங்கலை அம்மனுக்கு படையல் செய்து செல்வர். அதனைத் தொடர்ந்து பூசைகள் ஆரம்பமாகும். பூசைகள் முடிவுற்றதுடன் குளிர்த்திக்குரிய ஆயத்தங்கள் கோயில் முன் மண்டபத்தில் செய்யப்படும்.

பின் குளிர்த்தி பாடப்படும். இக் குளிர்த்திப் பாடல்பாடும் நேரம் இதமானது. அவ்வேளை மக்களின் மனதில் என்றுமில்லாத ஒரு அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்துவது திண்ணம்.

அம்மன் குளிர்த்தியாடிய அந்த புனித நீரான தீர்த்தம் ஆலய பூசகர் கப்புகனார் அவர்களின் கரங்களால் மக்கள் மீது தெளிக்கப்படும். அதில் நனைய எல்லோருமே விரும்புவர். இதனால் தம்மைப்பிடித்த பீடைகள், நோய்கள், பாவங்கள் தீரும் என்பது மக்களின் அசையாத நம்பிக்கையாகும். பின் எல்லோருக்கும் பொங்கற் பிரசாதம் (படையல்) வழங்கப்படும். திருக்கதவு அடைக்கப்படும்.

இவ்வாறு தம்பிலுவில் கண்ணகியம்மன் தம்பிலுவில், திருக்கோவில் பிரதேச மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துள்ள தெய்வமாகும். வைகாசிமாதம் வந்துவிட்டாலே தொழில், கல்வி, திருமணபந்தத்தின் மூலம், வெளியூர்களில் வசிக்கும் தம்பிலுவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கதவு திறப்பு எப்போது என்று விசாரிக்கத் தொடங்கிவிடுவர். உற்சவகாலத்தில் தவறாது ஊர் வந்து சேர்ந்து குளிர்த்தி வைபவம் முடிந்தவுடன்தான் தமது இடங்களுக்குச் செல்வர்.

இத்தகைய சிறப்புப் பெற்ற தம்பிலுவில் கண்ணகியம்மனின் மகிமைபற்றி 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கட்டாடிக் கண்ணப்பர் பாடியுள்ள தம்பிலுவில் மழைக்காவியப் பாடலின் மூலம் அறியலாம். இம்மழைக்காவியம் பாடி முடிந்தவுடன் மழைபெய்த அற்புதமும் அக்காலத்தில் இடம் பெற்றதாக கூறப்படுகிறது. இவர் ஆலய பூசகராகவும் இருந்ததாக இங்குள்ள முதியவர்கள் கூறுகின்றனர். இதனை இப்பாடல் வரிகளில் உறுதி செய்யலாம்.

**சோதி மதி பானுகழல் பொய்த்திடினு மேபோர்**
**சொன்ன மொழிதவறாது குறி தவறினாலும்**
**காதலுறு வேத விதி பொய்த்திடினு முனது**
**கற்பு நெறி பொய்த்ததொரு காலமதுவுண்டோ....?**
**காதலடியார்கள் பணி ஏற்றருளும் தாயே...**
**கட்டாடி கண்ணப்பனடியேனுக் கிரங்கி**
**மோது குளிர் தாரை மழை நீயருள வேண்டும்**
**கோகனகர் தம்பிலுவில் வாழும் மாதாவே...!**

*(மழைக்காவியம்)*

*உசாத்துணையும், தகவலும்*

"கண்ணகி வழிபாடு"
**திரு.நா.நவநாயகமூர்த்தி** எழுதியது.

நேரடித் தகவல் – கண்ணகியம்மன் ஆலய கப்புகனார்
**திரு.க.தங்கத்துரை அவர்கள்.**

- தொகுப்பு -
**திரு.K. சண்முகம்பிள்ளை,**
ஓய்வுபெற்ற கிராம அலுவலர்
(ஆலயத் தலைவர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. தாழையடி சிவனாலயம்

தம்பிலுவில் கிராமாட்சிமன்றக் காரியாலய வீதி கிழக்கே முடிவுறும் கடலோரமாக முன்னாளில் தாழை மரச்சோலையாக இருந்த இடத்தில் 1986ஆம் ஆண்டு கால கட்டத்தில், கண்டெடுக்கப்பட்ட ஒரு சிவ மூர்த்தத்தினால் இந்த ஆலயம் உருவாயிற்று. தற்போது இங்கே ஒரு பெரிய ஆலயம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் சிறியதான ஒரு மண்டபமும், கோயிலும் அமைக்கப்பட்டுப் பூசைகள் நடந்து வருகின்றன.

சிவராத்திரி, திருவெம்பாவை என்பன மிக்க சிறப்பாக இந்த ஆலயத்தில் கொண்டாடப்படுவது வழக்கமாகும்.

ஓம் சிவாய நமஹ!

## 10. வெட்டுக்குளத்துப் பிள்ளையார் ஆலயம்

இந்த ஆலயம், திருக்கோயில் ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயத் தேவைக்காக முன்னாளில் வெட்டப்பட்ட குளத்தின் அருகே வைக்கப்பட்ட பிள்ளையாராகும். இங்கு தலவிருட்சமாக காய்க்காத பனிச்சை மரம் உள்ளது. ஆடி அமாவாசைத் தீர்த்த காலம் இங்கு வெகு சிறப்பாகும்.

## 11. விஷம் அகற்றும் கல்லும் நாகதம்பிரான் ஆலயமும்

இது ஒரு தொன்மை வாய்ந்த அற்புதமான இடமாகும். திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயம் செல்லும் பாதையில் இது அமைந்துள்ளது. எதிரெதிராக சிறிய ஒரு ஆலயமும், விஷம் அகற்றும் லிங்கவடிவிலான நடப்பட்ட கல்லும் உள்ளன. இந்தப் பிரதேச அற்புதங்களில் இந்தக் கல்லும் ஒன்றெனில் மிகையல்ல.

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முற்பட்டதான ஒரு கால கட்டத்தில், இஸ்லாமிய ஞானமகான் ஒருவர் இந்த விஷமகற்றும் கல்லை நாட்டியதாகவும், இவரது பெயர் சேகு மௌலானா "எனவும் பல ஆண்டுகளுக்கு முன்னிருந்த இப்பிரதேச மக்கள் சொல்லி வருவது யாவரும் அறிந்ததே...!

இன்றைய கால கட்டத்தில் பாம்புக் கடிக்கான நவீன விஷத்தடுப்பு மருந்தேற்றல் முறை (Injections) கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்தகு வசதிகளற்ற முன் நாட்களில் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைப் பாம்புக்கடி விஷத்தினின்றும் பாதுகாத்து வாழ வைத்தது இந்த விஷக்கல்லே என்றால் மிகையல்ல...!

ஓம் நாகாஷனாய நமஹ!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 12. திருக்கோவிற் திருத்தலம் ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயம்

திருக்கோவில் என்னும் மேன்மைமிகு புண்ணிய திருத்தலமானது மட்டுமாநகரின் தெற்கே 46ஆம் மைல்கல் தொலைவிலே வங்காளக் கடலருகே நெய்தல் நிலத்திலே உயர்ந்த கோபுரமும் அழகிய சிற்பங்களால் அமைந்த காட்சிகளுடனும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் ஒருங்கே சிறப்புற அமைந்து வடக்கு முகமாக இருந்த வேலானது கிழக்கு முகமாகத் திரும்பிய காரணத்தினால் கோயிலுக்கும், ஊருக்கும் காரணப்பெயராகத் "திருக்கோவில்" என்னும் பெயர் அன்றிலிருந்து இன்றுவரையும் தொடர்ந்து திருக்கோவில் பிரதேசம் என வழங்கப்படுகின்றது.

இத்திருத்தலம் பல காரணங்களால் பல பெயரிட்டு அழைக்கப்பட்டு வந்தது. ஆதியிலே இப்பகுதியானது அடர்ந்த காடுகளும், வெண்நாவல் மரங்கள் நிறைந்த இடமாகவும் இருந்தது. அத்தோடு இந்தியா போன்ற இடங்களிலிருந்து வரும் வியாபாரக் கப்பல்கள் கரை சேரும் இடமாகவும் முருகப் பெருமான் சூரனைச் சங்காரம் செய்யச் செலுத்திய வேலானது சூரனை இரு கூறாகப் பிளந்து பின் மூன்று குளங்களை அகழ்ந்து நீராடி வாகூரக்கல்லைப் பிளந்து மூன்று பொறிகளாக மாறி உகந்தை மலையின் உச்சியில் ஒன்றும் திருக்கோவிலில் வெண்நாவல் மரத்திலொன்றும் மண்டூர் என்னும் இடத்தில் தில்லை மரத்தில் மற்றொன்றுமாக மூன்று பொறிகளும் அமர்ந்தன என்றும் திருக்கோவில் என்னும் இடத்தில் கந்தப் பெருமானின் பாணம் வந்து உறைந்த காரணத்தினால் "கந்தபாணந்துறை" என்றும் வெண்நாவற்பதி யென்றும் ஆதிக் குடியினரான இயக்கர், நாகர் என்போர் தாங்கள் தங்கியிருந்த கோரைக்களப்பு, காஞ்சிரங்குடா என்னும் இடங்களிலிருந்து வந்து வேட்டையாடிச் செல்வதினால் "நாகர்முனை" என்றும் பல பெயர்களால் இவ்விடம் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

அத்தோடு கல்வி கேள்விகளிற் சிறந்தும் இறை நம்பிக்கையில் பெரும் ஊக்கம் கொண்டும் வாழ்கின்றார்கள். ஆதியில் இப்பிரதேசத்தில் மக்கள் தம்பட்டை, தம்பிலுவில், முனையூர், கோரைக்களப்பு, காஞ்சிரங்குடா, தாண்டியடி, சங்கமன்கண்டி என்னும் இடங்களிலேயே ஆங்காங்கே சிறு கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்துள்ளார்கள். இங்கு வாழ்ந்தவர்கள் தங்களுக்குள் குடிமரபினை ஏற்படுத்திக் கொண்டார்கள். இப்படி கண்டங்குடி, செருவிலிகுடி, கட்டப்பத்தான்குடி, குருக்கள்குடி, வைத்தனாகுடி, வேடர்குடி, கோரைக்களப்புக்குடி, சிங்களக்குடி, மழுவரசன்குடி, விஸ்வகுலத்தார் என வகுத்துக் கொண்டனர்.

திருக்கோவில் திருத்தலமானது திருப்படைக் கோயில்களுள் முதன்மை பெற்று விளங்குகின்றது. இவ் ஆலயம் மிகவும் தொன்மை பெற்று விளங்குகிறது. தமிழரின் 2ஆம் படை எழுச்சிக் காலத்தில் சோழ நாட்டு மன்னர் எழுவர் இந்தியாவிலிருந்து பொருட்களும் ஆட்சிகளும் கொண்டுவந்து திருப்பணிகளை மேற்கொண்டு ஆலயத்தின் வளர்ச்சிக்கு மிகவும் ஊக்கம் கொடுத்தனர். பின்பு இங்கு வந்த மன்னர்கள் மீண்டும் திருப்பணிகளை மேற்கொண்டு வீதிகளையும் அமைத்தது மட்டுமன்றி ஆலயத்தின் நடைமுறைகளையெல்லாம் வகுத்து ஊழியம் செய்யும் ஊழியர்களுக்குக் கோயிலின் அருகிலே அவர்கள் வசிக்கும் இடங்களையும் அமைத்துக் கொடுத்து அவர்களுக்கென விளைநிலங்களையும் மானியமாக வழங்கினார்கள். அதன்படி நிர்வகிக்கும் பொறுப்பில் தலைவர் கரவாகுப்பற்று பணிக்கனார் குடியிலும் காரியதரிசி, கணக்குப்பிள்ளை இருவரும் அக்கரைப்பற்று மழுவரசன் குடியிலும் தர்மகத்தா, தனாதிகாரி இருவரும் கலிங்க குலத்தைச் சேர்ந்த கண்டங்குடியினருக்குமென சாசன மெழுதி தேசத்துக் கோயிலாக இருந்தமையினால் மட்டக்களப்பிலிருந்து உகந்தை வரைக்கும் இடையிலுள்ள கரையோரக் கிராமங்கள் அனைத்திற்கும் கிராமத்திற்கு ஒருவராக நியமிக்கப்பட்டு அவர்கள் வட்டாரப் பிரதிநிதிகள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் முன்கூறிய பஞ்சாயத்தாருடன் இணைந்து கூட்டங்களில் பங்குபற்றும் போது அதிகார சபையினர் என அழைக்கப்படுவார்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் விசேட அலங்கார உற்சவம் ஆடி அமாவாசைத்திதியைக் கொண்டதாகவே இருக்கும். அத்தோடு தைப்பொங்கல், மகாசிவராத்திரி, சிங்கள தமிழ்ப் புதுவருடம், கந்த சஷ்டி, கார்த்திகைத்தீபம், திருவெம்பாவை என்பனவும் சிறப்பாக இங்கு நடைபெற்று வருகிறது. ஆலயத்தின் உப விதியின் படி மாத மொரு முறை அதிகாரசபைக் கூட்டமும் வருடம் ஒருமுறை மகாசபைக் கூட்டமும் தேவை ஏற்படும் நேரங்களில் பஞ்சாயமும் கூடும். ஆனால் தேசத்துக் கோயில் என்பதனால் பல ஊர்மக்களுடைய கையொப்பத்துடன் சரியான காரணத்தைக் காட்டிப் பொதுக் கூட்ட மொன்றைக் கூட்டக் கோரினால் 15 நாட்களுக்குள் விசேட பொதுக் கூட்டமாகக் கூட்டப்பட வேண்டும். அல்லது சாதாரணமாகக் கூட்டும் மகாசபை ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவம் முடிந்து அடுத்த நாள் ஆலயத்தில் கூட்டப்பட வேண்டும். இக் கூட்டத்தில் முக்கியமாகச் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தலும் இடம் பெறும் அதன் பின் வட்டாரப் பிரதிநிதிகள் தெரிவு ஒவ்வொரு கிராமத்திற்கும் நடக்கும். இவர்களே தங்களது கிராமத்துக்கு உரிய பூசை, திருவிழாக்களை முன்னின்று நடத்துவார்கள்.

இவ்வாலயத்தின் நிர்வாக முறையிலும் உபவிதியிலும் 1980ம் ஆண்டு மாற்றம் செய்யப்பட்டு அது இன்று வரையும் நடைமுறையிலிருந்து வருகிறது. திருக்கோவில் திருக்கோவிலூரில் இருந்தும் ஆலய நிர்வாகத்தில் இங்கு வாழ்மக்களுக்கு நிர்வாகத்தில் அங்கத்துவம் இல்லை. எனவே அங்கத்துவம் வேண்டும் என மக்கள் கோரிக்கையை முன் வைத்து அது நீதிமன்றம் வரை சென்று ஆலயத்தில் ஓர் விசேட மகாசபை கூடி அதில் அம்பாறை அரச அதிபர், பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் புத்திஜீவிகள் எல்லோரும் சமூகம் கொடுத்து ஓர் தீர்மான முடிவை எடுத்து பஞ்சாயத்தில் மாற்றத்தை உபவிதிக்கமைய ஏற்படுத்தி திருக்கோவில் மக்களுக்கு காரிய தரிசி பதவியைக் கொடுத்து அக்கரைப்பற்றுக்குப் புதிதாக உபதலைவர் பதவி ஒன்றையும் வழங்கினார்கள். அதன்படி நிர்வாகத்தில் பஞ்சாயம்மாறி ஆறு பேராக்கப்பட்டது. அதன்படி இன்றுவரைக்கும் நிர்வாகம் செயற்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

அடுத்து சுனாமிப் பேரலைக்குப்பின் பெரும் தொண்டான ராஜகோபுரம் ஒன்றை அமைப்பதில் அயராமுயற்சியை எடுத்துக் கொண்டு ஆலயத்தினுள் சுற்று மதில்கள் அமைப்பதிலும் கவனம் செலுத்தி ஆலய முன்னேற்றத்திற்கும், அடியார்களின் இறை வணக்கத்திற்கும் மேலும் மேலும் வழிவகைகளை வகுத்துக் கொடுக்க எல்லாம் வல்ல திருக்கோவில் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் திருமுருகன் தெய்வயானை வள்ளியம்மை ஆகியோர் அன்பையும், அருளையும் அள்ளி வழங்க வேண்டி நிற்கின்றேன்.

**த. மகேந்திரா**
*புராண பயணிகர்*
*ஆலய முன்னாள் வண்ணக்கர்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. அக்கிராசப்பிள்ளையார் ஆலயம்

இவ்வாலயம் திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயத்தின் தென் புறமாகவுள்ள பாதையை அண்டி அமைந்துள்ளது. அக்கிராசனர் என்னும் ஒருவரினால் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக சில புத்தகக் குறிப்புக்களிலும், பதிவுகளிலும் காணக் கூடியதாகவுள்ளது.

ஆனால் "அக்கசாலைப்பிள்ளையார்" என ஐம்பது, அறுபது ஆண்டுகளின் முன்பிருந்தே அழைக்கப்பட்டு வந்ததாகவும் சில முதியவர்கள் வாயிலாக அறியக் கூடியதாகவுள்ளது. புராதனப் பெருமையும், வரலாற்றாதாரங்களும் உள்ள ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயத்தின் பக்கத்தில் உள்ள வீதியில் இது வழிப்பிள்ளையாராக முன்னாட்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். (அக்கம்=பக்கம்,சாலை=வீதி) இடவாகு பெயராக இந்த இடம் அக்கசாலைப் பிள்ளையார் என அழைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கொள்ளலாம்.

ஓம் மூஷிகவாகனாய நமஹ

## 14. திருக்கோவில் ஸ்ரீ சகலகலையம்மன் ஆலயம்

திருக்கோவில் பிரதான வீதியில் இருந்து வாக்கிரிசா வீதி ஊடாகச் சென்றால் வருவது இந்த ஆலயமாகும். தன்னை வேண்டுவோருக்கு எல்லாம் வேண்டும் தேவைகள் அனைத்தையும் அள்ளிக் கொடுத்து மக்களின் மனங்களில் நீங்காத நினைவுகளாக நின்று பரிபாலித்து வரும் இவ் ஆலயம் வடக்கே பெரிய களப்பு வற்றாத நீர் நிலைகளையும், கிழக்கே வட்டி எனும் பெயர் பெற்ற நீர் சதுப்பு நிலங்களையும், தெற்கே எல்லா விவசாயிகளுக்கும் மீன்பிடியாளர்களுக்கும் ஆடு மாடுகள் அமர்ந்திருந்து நீர் அருந்திச் செல்ல உதவும் நன் நீர் நிலமான பெரிய குளத்தையும், மேற்கே விளாவடிக்குளத்தையும், புதுக்குளத்தையும் வயல் சார்ந்த காணிகளையும், மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கான நிலங்களையும், எல்லையாகக் கொண்ட பிரதேசத்தில் அமைந்திருப்பதே கள்ளியந்தீவு ஸ்ரீ சகலகலையம்மன் ஆலயமாகும்.

இப் பகுதியில் பல ஆலயங்களுக்கு வரலாறுகள் மூலமும், கல்வெட்டு அத்தாட்சிகள் மூலமும், பண்டைக் கால அரசர்களின் ஆட்சிமுறைகள் மூலமும், அடையாளம் காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால் கள்ளியந்தீவு ஸ்ரீ சகலகலையம்மன் ஆலயத்திற்கு மாத்திரம் எந்தவிதமான கல் வெட்டுக்களோ சரித்திர சான்றுகளோ இல்லாததோர் ஆலயமாகும். அப்படி இல்லாத தன்மையே இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும். இவ்வாலயம் இன்றைக்கும் சீரோடும் சிறப்போடும் விளங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அது மக்களின் அன்பும் ஆதரவும் ஆலயத்தில் வைத்திருக்கும் பக்தித் திறமையுமேயாகும். சரித்திர சான்றுகளைக் கொண்ட ஆலயங்களில் நடை பெறுகின்ற பூசைகளுக்கு நிகராக கள்ளியந்தீவு ஸ்ரீ சகலகலையம்மன் ஆலய பூசைகளும் வழிபாடுகளும் நடைபெற்று வருகிறது என்றால் அது மக்கள் கொடுக்கும் ஆதரவும் அன்புமே ஆகும்.

ஆரம்பத்தில் ஆனி மாதத்தில் தசமி தினத்தன்று ஒருநாள் பூசை சடங்குமுறையாக நடைபெற்று வந்தது. பின்பு காலப்போக்கில் மூன்று நாட்கள் நடைபெற்று தற்போது ஆனி மாத தசமி தினத்தை உள்ளடக்கியவாறு ஐந்து பூசைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு இந்த ஆலயத்தில் பௌர்ணமி தினத்தில் விசேட பூசைகளும் நவராத்திரி தின விழாவும், கேதார கௌரி விரத பூசைகளும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. சாகாமம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

திருக்கோவில் பிரதேசத்தில் சாகாமம் எனும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. கி.பி.2ஆம் நூற்றாண்டின் பின் சாகாமம் நகரத்தை ஆட்சி செய்த புவனேயகஜபாகு மன்னனின் மகன் மேகவர்ணன் என்பவனின் ஆட்சிக் காலத்தில் சாகாமம் குளம் மண் அணையாக கட்டப்பட்டது. இவ்வணையை உருவாக்கப் பெற்றதே இக் குளத்துப்பிள்ளையார் ஆலயமாகும். அதன்பின் பிரிட்டிசாரின் ஆட்சிக்காலத்தில் 1872இல் சாகாமம் குளம் புணரமைப்பு செய்யப்பட்ட போது இப்பிள்ளையாரைக் கண்ட தமிழ்த் தொழிலாளர்கள் பிள்ளையாருக்கு பூசை செய்து தமது வேலைகளை ஆரம்பித்தனர் என்று ஆய்வாளர்கள் தமது கருத்துக்களில் குறிப்பிட்டுள்ளனர்.

அதன் பின் 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தம் காரணமாக சாகாமம் நீர்ப்பாசனத்திணைக்களக் கட்டடத்தில் இராணுவம் முகாமிட்டிருந்த போது ஆலயக் கருவறைக்கு மேல் காவலரன் அமைத்திருந்தனர். அப்போது காவலரனின் மேல் இருந்த இராணுவ வீரரை ஆலயத்திலிருந்த நாகம் தீண்டியதாகவும் உடன் காவலரன் அகற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தற்போது இவ் ஆலயமானது சிறிய மண்டபம் முன் மதிற் சுவரினைக் கொண்டு அமைந்துள்ளது. வழமைபோல் தினப் பூசைள், விசேட பூசைகள் நடைபெறுவது வழக்கம்.

## 16. திருக்கோவில் ஸ்ரீ மங்கைமாரி அம்மன் ஆலயம்.

ஆரம்ப காலத்தில் கந்தபாணந்துறை எனும் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட பிரதேசமாகிய திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்மன் ஆலயங்களில் ஒன்றாகவும் ஆரம்ப காலந் தொடக்கம் தற்காலம் வரை அனைத்து மக்களாலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் ஆலயமாகவும் அமையப் பெற்றதே திருக்கோவில் ஸ்ரீ மங்கைமாரி அம்மன் ஆலயம் ஆகும்.

இப்பிரதேச மக்கள் சிலர் தோட்ட வேலை செய்யும் காலத்தில் ஓர் பற்றைக்குள் கொத்துப் பந்தல் ஒன்று அமைக்கப்பட்டு அதனுள் ஓர் அம்மன் சிலை இருப்பதைக் கண்டுபிடித்தனர். இவர்கள் அந்தச் சிலையை பேணி உரிய முறையில் பாதுகாத்து வந்தனர். இந்த அம்மன் சிலையும் தெய்வ அம்சம் பெற்றதாக உயர்ந்து காணப்பட்டது.

இதனை அறிந்து இந்த காணி சொந்தக்காரரான மார்க்கண்டு முதலாளி செங்கல்லால் ஓர் சிறிய ஆலயத்தை தனது காணியில் கட்டுவித்து அதனுள் அம்மன் சிலையையும் வைத்து அனைவரும் வழிபடத்தக்க ஓர் வழிபாட்டுத் தலமாக அமைத்துக் கொடுத்தார்.

இதன் மூலம் மக்களிடையே மங்கைமாரி அம்மன் ஆலய வழிபாடு தொடங்கப்பட்டது பின்னர் தோட்ட வேலைக்காக நியமிக்கப்பட்ட யானையை கொண்டு மங்கை மாரியம்மன் ஆலயத்திருவிழாவினை மார்க்கண்டு முதலாளியுடன் இணைந்து சிறப்பாக மக்களும் நடத்தினர். இதுவே இவ் ஆலய முதலாவது திருவிழா எனவும் கருதப்படுகின்றது.

மேலும் ஆரம்பகாலத்தில் வைகாசிப் பூரணை தினத்தன்றே கண்ணகி அம்மன் ஆலயக் குளிர்த்தியும் மங்கைமாரியம்மன் ஆலயக் குளிர்த்தியும் ஒன்றாக நடாத்தப்பட்டது. இதனால் ஆலயங்களுக்கு மக்கள் செல்வதில் சிக்கல் தன்மை ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆரம்ப அர்ச்சகராக விளங்கிய திரு. கந்தையா வைத்தியர் என்பவர் மங்கைமாரியம்மன் ஆலயக் குளிர்த்தியை ஆணிப்பூரணைக்கு மாற்றம் செய்தார்.

இவ்வாறாக தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த அம்மன் வழிபாடானது கும்பாபிஷேகம் என்ற ரீதியிலும் சிறப்புடனும் காணப்படுகின்றது. அந்த வகையில் இவ்வாலய 1வது கும்பாபிஷேகம் 1918ம் ஆண்டும் பின்னர் 17 வருடங்களுக்கு பிறகு 1935ம் ஆண்டும் இறுதியாக 2000ம் ஆண்டும் நடாத்தப்பட்டமை இவ்வாலயத்தின் முக்கிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்

இது மிகப் பழமையான ஒரு ஆலயமாகும். இவ்வாலயம் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. திருக்கோவில், விநாயகபுரம் பிரதான வீதியில், கள்ளியந்தீவு என அழைக்கப்படும் ஓரிடத்தின் தென்புற எல்லையில், பெரிய குளத்தின் மருங்கில் இது அமைந்துள்ளது. பிரதான வீதியிலுள்ள "கறுவலடித்த முடக்கு" எனக்குறிப்பிடப்படும் வளைவுக்கு அருகில் மிகவும் பிரபலம் பெற்ற தலமாக இது விளங்குகிறது. இங்கு திருவெம்பாவை தினங்களில் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. புதிய ஆலய கட்டுமானப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேண்டித்தொழும் அடியார் வினை தீர்க்கும் விக்னெஸ்வரப் பெருமான் இங்கு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாராக அமர்ந்திருந்து அருள் பொழிகின்றார்.

ஓம் உமாசுதாய நமஹ!

## 18. ஸ்ரீ சிவனாலயம் - விநாகபுரம்

இவ்வாலயம் திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் 4ஆம் பிரிவில் அமைந்துள்ளது. பல நூற்றாண்டு காலமாக பழமை வாய்ந்த இவ்வாலயத்தில் திருவெம்பாவை விசேட தினமாகும். தற்போது இவ்வாலயத்தில் புணர்நிர்மான வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

## 19. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் - விநாயகபுரம்

இவ்வாலயமானது கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. இலங்கையில் சிறப்புற்று விளங்கும் இந்து ஆலயங்களில் ஒன்றாகவும் அருளும் அற்புதங்களும் கொண்டு ஆல், வம்மி அரச மரங்கள் குடை சூழ எழில் பொங்கி விளங்கும் இவ்வாலயத்திற்கு, பெரு விருட்சம் போல் காட்சியளிக்கும். ஆனால் விருட்சம் பெருமை சேர்க்கிறது.

இவ்வாலயமானது இற்றைக்கு 06 தசாப்தகால வரலாற்றைக் கொண்டதாக அறிய முடிகின்றது. 1962ஆம் ஆண்டு கொத்துப் பந்தலுடன் உருவாகிய இவ்வாலயம் 06-06-2011 மகா கும்பாபிஷேகம் இடம்பெற்று தற்போது நித்திய மூன்று வேளை பூசைகளுடன் ஆலயம் திகழ்வது எல்லோர் மனதையும் பூரிக்கச் செய்கின்றது.

1961ஆம் ஆண்டு கொலனித் திட்டத்தின் கீழ் இக்கிராமம் மக்களுக்கு வழங்கப்பட்டதும் அக்காலப் பகுதியில் 32குடும்பங்கள் மட்டுமே இக்கிராமத்தில் வசித்து வந்ததாகவும் இக்கிராமத்தில் வசித்து வந்த ராசதேசிங்கு என்பவரே பிள்ளையார் கல்லொன்றைக் கண்டு அதனை அவர் இக்கிராமத்திலே வைத்து விநாயகப் பிள்ளையார் என்ற பெயர் சூட்டி வழங்கி வந்ததாகவும் அதன் பெயராலேயே இக்கிராமத்திற்கு விநாயகபுரம் என்ற பெயர் சூட்டியதாகவும் வரலாறுகள் கூறுகின்றது.

## 20. காளி கோவில் - விநாயகபுரம்

விநாயகபுரம் 3ஆம் பிரிவில் அமைந்துள்ள இவ் ஆலயமானது காரைதீவைச் சேர்ந்த சக்திதாஸன் மாணிக்கசுவாமி என்பவர் வைத்துப் பாரம்பரிய சடங்கு முறைகளுடன் வணங்கிய ஆலயமாகும். ஆரம்பத்தில் வேப்பமர நிழலில் வைத்து சடங்கு செய்து வந்தனர். காலப்போக்கில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த சைவ அடியார்களால் மடாலயமாக அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. 2004ல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்த இவ்வாலயம் தற்போது புணரமைக்கப்பட்டு வருகிறது.

பரிவார தெய்வங்களாக பிள்ளையார், வைரவர், முருகன், வீரபத்திரர், காடேறி, பேச்சி ஆகிய தெய்வங்கள் வீற்றிருக்கின்றனர். வருடாந்த உற்சவம் ஆவணி மாதம் நடைபெறுகிறது. 05நாட்கள் உற்சவம் நடைபெற்று 06வது நாள் தீமிதிப்பு வைபவமும் 08ம் நாள் வைரவர் பூசையும் நடைபெறுகிறது. உற்சவ நிகழ்வில் அம்மன் வீதியுலா, நோற்புச் சோறு கட்டுதல் போன்ற விசேட நிகழ்வுகளும் விசேட தினங்களில் விசேட பூசைகளும் நடைபெறுகிறது. சடங்குமுறையிலமைந்த இவ் வாலயத்தில் அம்மன் காவியம் பாடப்படும். உற்சவகாலங்களில் தெய்வம் ஆடி அம்மன் திருவாக்கும் சொல்லப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - விநாயகபுரம்

விநாயகபுரம் – 03ஆம் பிரிவில் அமைந்துள்ள இவ்வாலயம் 1930ஆம் ஆண்டு சில பக்தர்களால் ஒரு ஆலமர நிழலில் சாதாரணமாக ஒரு சூலம் வைத்து வழிபட ஆரம்பித்து இன்று சிறப்பான முத்துமாரியம்மன் ஆலயமாக திகழ்கின்றது. விசேட உற்சவம் ஆவணிமாதம் நடைபெறுகிறது. விசேடபூசைகள், தினப்பூசைகள் என்பன வழமைபோல நடைபெறுகின்றன.

## 22. ஸ்ரீ பால விநாயகர் ஆலயம் - பாலக்குடா விநாயகபுரம்

திருக்கோவில் பிரதேசத்தில் மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்டு ஒரு பக்கம் நிலத்தோடு இணைக்கப்பட்டு செழிப்பு மிக்க அழகான பாலக்குடா எனும் அழகிய கிராமத்தில் பால் போன்று செல்வம் பொங்கும் தெய்வீக பூமியில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

1990ஆம் ஆண்டு ஒரு சிறிய கல்லை வைத்து வழிபட்டனர். பின்பு அதை கவனிப்பாரின்றி இருந்த போது சிறிது காலம் ஆலய நிர்வாகத்தினரால் பந்தல் அமைத்து பூசைகள் செய்யப்பட்டது. அதன் பின் காட்டு யானைகளால் அழிக்கப்பட்ட இவ்வாலயத்தினை இவ்வூர் மக்கள் மீளக் கட்டி ஆலயப் பணிகளை இன்றுவரை மேற்கொண்டு வருகின்றனர். ஆரம்பத்தில் சிறிய கட்டடமாக அமைக்கப்பட்டது.

படிப்படியாக ஆலய நிர்வாகத்தினரதும், இவ்வூர் மக்களினதும் பெருமுயற்சியினால் திருத்த வேலைகள் நடைபெற்று 2001ல் பிரதமகுரு நீதிநாத குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பத்து வருடம் சங்காபிசேக கிரியைகள் இடம்பெற்றது. விசேட பூசைகள், தினப் பூசைகள் நடைபெற்றுவருகிறது. இவ்வூரிலுள்ள பொது அமைப்புக்களினால் இங்கு சமயக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## 23. சின்னத்தோட்டம் ஸ்ரீ காயத்ரீ கோயில்

இது கடந்த 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் மிக்க பிரபலமாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு ஆலயமாகும். சின்னத்தோட்டம் எனும் ஊரில் இது அமைந்துள்ள பகுதியானது 'காயத்ரீ கிராமம்' எனும் இடவாகு பெயர் பெற்றுச் சிறப்பெய்தியுள்ளது. ஒரு சிறிய ஆலயமாக இது இருந்தாலும், இதன் தோற்றம் தொடர்பான நிகழ்வுகள் மிக்க சிறப்பானவை எனலாம். திருக்கோவில் பிரதேசமெங்கும் பரந்து வாழும் சில காய்த்ரீ பக்தர்களின் முயற்சியினால் இவ்வாலயம் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், பக்தர்களின் ஒற்றுமையான செயற்பாடுகள் சிதைவுற்றதால் இதன் வளர்ச்சி தடைப்பட்டுள்ளது எனலாம். இருந்தாலும் வேதமாதாவாகிய பிராணேஸ்வரி காய்த்ரீ தேவியின் நாமமும் – காயத்ரீ மந்திரத்தின் 24 அட்சரசக்தியும் நிச்சயமாக இந்த இடத்தினைப் பிரபலமடையச் செய்யும் என்று திடமாக நம்பலாம்.

**"ஓம் பூர்-புவ-ஸ்வ தத் ஸவிதுர்**
**வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ - யோ - நப்பிரஸோதயாத்"**

- காயத்ரீ மந்திரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. ஸ்ரீ சமாதிப் பிள்ளையார் ஆலயம்

இவ்வாலயம் திருக்கோவில் 04ல் கோரைக்களப்பு எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. கதிர்காம யாத்திரிகளுள் ஒருவர் சமாதியடைந்த இடமான இது பழமை வாய்ந்த ஒரு இடமாகும். கதிர்காம யாத்திரை மேற்கொள்வோர் இவ்வாலயத்தினை தரிசித்துச் செல்வது வழக்கம்.

## 25. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் - சங்கமன் கிராமம்

திருக்கோவில் பிரதேசத்தில் சங்கமன் கிராமம் எனும் இடத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் மொனராகலை, திஸமகராம போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களால் 1978ஆம் ஆண்டு காலப்பகுதியில் வணங்குவதற்காக அமைக்கப்பட்டது. மலையகப் பெண் தெய்வ வழிபாட்டுக்கு அமைவாக கரகம் பாலித்தல் முதலான சடங்கு முறைகளோடு வருடத்திற்கு ஒரு முறை திருக்கதவு திறத்தலுடன் ஒரு நாள் திருவிழாவும் எட்டாம் நாள் வைரவர் பூசையும் நடைபெற்றது.

2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்று தற்போது நடைமுறையில் உள்ள நிர்வாகசபை ஆலயத்தைப் பொறுப்பேற்றது. அதன் பின் கிழக்கு மாகாணத்திற்கான பெண் தெய்வ வழிபாட்டு சடங்கு விதிகளுக்கு அமைவாக திருவிழா நடைபெற்றது.

தற்போதைய திருவிழா முறையானது மூன்று நாட்களுக்கு இடம்பெறுகின்றது. முதல் நாள் அதிகாலை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பித்து இரவு உள்வீதி ஊர்வலத்துடன் நிறைவு பெற இரண்டாம் நாள் அம்மனின் அலங்காரத் தேரிலான கிராமப் பிரவேசம் இடம் பெறும். மூன்றாம் நாள் இரவு திருக்குளிர்த்தி உற்சவமும், எட்டாம் நாள் வைரவர் பூசையும் நடைபெற்று குறித்த ஆண்டுக்கான திருவிழா நிறைவு பெறுகிறது.

## 26. ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் ஆலயம்

ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் ஆலயம் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள பிள்ளையார் ஆலயங்களுள் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், தொன்மை வாய்ந்ததுமாகும். ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் ஆலயம், தாண்டியடி எனும் கிராமத்தில் அமைந்துள்ளது.

திராவிட இனத்தவரான பூர்வீகக் குடியினர் கி.மு.03ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் பெருமளவில் வாழ்ந்திருக்கின்றனர். நாகர் குலச்சிற்றரசனான சங்கமன் என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட இராசதாணி ஆகையினால் இப்பிரதேசம் சங்கமன் கண்டி எனப் பெற்றது. கண்டி என்னும் பதம் தலைநகரைக் குறிக்கும்.

சங்கமன் கண்டி சுமார் 2000வருடங்களுக்குமுற்பட்ட பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. திறந்த வெளிக் கோவிலாகவே அடியார்கள் நீண்டகாலம் பொங்கலிட்டுப் பூசித்து வந்துள்ளனர்.

தற்போதுள்ள ஆலயத்திற்கு மேற்கே அடர்ந்த காட்டுப்பகுதியில் பண்டைய சிவாலயம் இருந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. மேலும் சிதைந்த கற்றூண்கள், கற்படுக்கைகள், சேதமுற்ற பெரிய அளவான செங்கற்கள், கழிவறைப் பொருட்கள் போன்ற தொல்லியல் சான்றுகளைக் கொண்டு இப்பிரதேசம் பண்டைய இராசதானி என ஆய்வாளர்களால் உறுதி செய்யப்படுகிறது. பண்டைய ஆலயத்தின் தொடர்ச்சியே இப்போதைய ஆலயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரவுறு வடக்கு வரு கரம்பகமாந்
திரமுது மேற்குச் சித்தே முனி சுரந்
தரைபுகழ் தெற்குச் சங்கமன் கண்டி
உரமிகு கிழக்கு உகந்த வங்காளம்
ஒற்றுகைக் கோணை யிதைவனுக்காமென
நாற்றிசை சூலமு நாலுக காட்டி"

எனும் கோணேசர் கல்வெட்டின் மூலம் பண்டைய சிதைவுற்ற ஆலயம் சிவாலயம் என்பதை ஊகிக்க முடியும். கி.பி. 03ஆம் நூற்றாண்டு முதல் இப்பிரதேசம் கலிங்கர் எனும் திராவிட இனத்தவர் வசமாயிற்று. கி.பி. 09,10,11,12ஆம் நூற்றாண்டுகளில் சங்கமன் கண்டி நகரம் உன்னத நிலையில் இருந்தமையை தொல்லியல் சான்றுகள் உறுதி செய்வதாக ஆய்வாளர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

## உற்சவங்கள் பூஜைகள்:

சித்திரா பௌர்ணமி வருடாந்த தீர்த்தோற்சவத்தினமாகும். தீர்த்தோற்சவத்திற்கு முன்னுள்ள தினங்களில் திருவிழாக்கள் நடைபெறும். 30வருட யுத்த சூழல் காரணமாக ஆலயமும் ஆலயச் சூழலும் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தன. ஆடிப் பூரணைத்திருவோணத்தினத்திலும் தீர்த்தம் நிகழும். முந்திய தினங்களில் திருவிழாக்கள் இடம் பெறும். விசேட தினங்களில் சிறப்புப் பூசைகளும், திருவெம்பாவையும் விசேடமாக நடைபெறுகின்றன.

## அற்புதங்கள்:

சங்கமன் கண்டியில் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. ஆலயத்திற்கு மேற்குப் புறமுள்ள பிரதேசத்திற்கு ஒருவர் கொடி வெட்டச் சென்றிருந்த வேளை வழிதவறி சுற்றித் தேடியும் வழி காணாது அலைந்து களைப்புற்றார். மாலைப் பொழுது ஆனதும் இருள் சூழத் தொடங்கியது. கொடிய விலங்குகள் வாழும் காடு. 'திக்கற்றவனுக்கு தெய்வந்துணை' என்ற வாக்கு எண்ணத்துடன் களைப்புற்று ஓர் மரத்தடியில் இறைவனை நினைத்தவனாக இருந்தான். அவ்வேளையில் திடீரென ஓர் மணி ஓசை கேட்டது. மனதிலே தோன்றிய நம்பிக்கையுடன் மணி ஓசை வந்த திசை நோக்கிச் செல்லத் தொடங்கினான். மலைக்கோயிலிலே தீப ஆராதனைகளுடன் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆலய வீதிக்குச் சென்றவரை ஆலயத்தில் உள்ள ஒருவர் கண்ணுற்று வந்த விடயம் பற்றி விசாரித்தார். நடந்த விடயத்தைத் தெரிவிக்க பிரசாதம் உண்ணக் கொடுத்து அன்றிரவு படுக்கைக்கான இடமும் காட்டப்பட்டது.

அதிகாலையில் அவரை துயில் எழுப்பி ஆலயத்திலுள்ளவர்கள் வழிகாட்டி உதவினர். இங்கு நடைபெற்ற விடயங்கள் எதுவும் வெளியில் சொல்லக் கூடாது எனக் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டதாம். வழி தவறியவர் வீடு சென்றதும் மடியில் மறைத்து வைத்திருந்த உணவுப் பொட்டலத்தை மனைவி மக்களுக்குக் கொடுத்தாராம். அதனை உண்ட மனைவி தேவாமிர்தம் போன்று தித்திப்பாக இருப்பதை அறிந்து அது பெற்ற விடயம் பற்றி மனைவிக்கு சந்தேகம் எழஎவ்வளவோ மறைக்க முற்பட்டும் இரகசியத்தைக் காப்பாற்ற முடியாதவனாய் நடந்த விடயத்தைக் கூறியதும் உடன் வாய் பேச முடியாத ஊமையானான்.

ஊரவர்கள் அவ் ஆலயத்தைக் கண்டுபிடிக்க முற்பட்டும் இயலாத காரியமாகி விட்டது. இது போன்ற பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

இப்பிரதேசத்தில் தென்னைத்தோட்டம் வைத்திருந்த நிலச் சுவாந்தர் கே.வி. மார்க்கண்டன் முதலியார் சங்கமன் கண்டிப் பெருமான் மீது பக்தி கொண்டவர் எம் பெருமானுக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என எவ்வளவோ முற்பட்டும் இறைவன் திருவருள் கிடைக்காமையால், எண்ணம் நிறைவேறாது கவலையுற்றார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர், திருக்கோவில் வைத்தியசாலையில் மருந்துக் கலவையாளராகக் கடமையாற்றிய ஓடவி மா. வேலுப்பிள்ளை எனும் அன்பர் எம் பெருமானுக்கு ஆலயம் அமைக்க விரும்பி அப்பனின் அருள்பெற தன்னந்தனியாக இரவு பகலாய் பக்தி வைராக்கியத்துடன் பாடிப்பரவி இருந்த வேளையில் இரவு அன்று இரு கரடிகள் அருகே பயங்கரச் சண்டையிட்டு உறுமிக் கொண்டு பாய்ந்தனவாம். அச்சமேலீட்டினால் மரத்தடியில் பீடத்தில் இருந்த பெருமானைத் தஞ்சம் அடைந்து கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த வேளையில் சண்டை செய்யும் கரடிகளின் இடையே ஓர் உயர்ந்த வெள்ளை உருவம் தோன்றியதும் கரடிகள் ஓடி மறைந்து விட்டனவாம். அதனை அவர் பாடிய பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தனை சோதனைகளுக்கு மத்தியில் ஆலயம் அமைப்பதற்கு திருவருள் மூன்றாம் நாள் இரவுதான் கிடைத்ததாம் 1950ஆம் ஆண்டளவில் அன்பர்களின் ஆதரவோடு சிறிய கற்கோயில் உருவாக்கப்பட்டது.

ஆலயத்தை அண்டிய காடுகளை வெட்டி மாந்தோப்பும் உருவாக்கி ஆலயத்திற்கே சொந்தமாகக்கட்டப்பட்டது. தனது பிற்காலத்தில் 01.07.1978இல் பொத்துவில் தொடக்கம் அக்கரைப்பற்று வரை இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொண்டு முறையான திருவாசகமும் ஓதப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொத்துவில் இருந்து கல்முனைப் பிரதேசம் வரை அம்பாரை மாவட்டத்திலுள்ள இந்து மக்களை உள்ளடக்கிய புதிய அறங்காவலர் சபை பொறுப்பேற்று பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். 2009இல் சிறப்பான மகாகும்பாபிஷேகமும் இடம் பெற்றது. ஆலயத்தில் வள்ளி தெய்வானை சமேத முருகன் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம், ஆஞ்சநேயர் ஆலயம் என்பனவும் புதிதாக அன்பர்களினால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தை அண்டிய காட்டுப் பிரதேசத்தில் ஆயிரங்கால் மண்டபம் இருப்பதாகவும் ஐதீகம்... சில அன்பர்களுக்கு காட்சி கொடுத்ததாகவும் அறியக்கிடக்கிறது. சங்கமன் கண்டி எல்லோராலும் அறியமுடியாத பொக்கிசம்.

கதிர்காம பாதயாத்திரை மேற்கொள்ளும் அடியார்கள் திருக்கோவில் சித்திர வேலாயுதர், சங்கமன் கண்டி அப்பன், உகந்தை முருகன் ஆகியோரின் அருளாசி பெற்றே காட்டு வழிப் பாத யாத்திரையை மேற்கொள்வது வழக்கமாகும்.

**வே. சந்திரசேகரம்,**
செயலாளர்,
ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் ஆலயம்.

**உசாத்துணைகள்:**

1. தொல்லியல் சிந்தனைகள் - நா.நவநாயகமூர்த்தி
2. பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள்
3. மாகோன் வரலாறு செல்வி. க. தங்கேஸ்வரி முன்னாள் பா.உ.
4. கோணேசர் கல்வெட்டு
5. மட்டக்களப்பு சைவக் கோவில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேசத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள்

## 1. பொங்கும் பொலிவோடு பூத்துக் குலுங்கும் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை

பல ஆண்டு காலங்களாக மங்காப் புகழோடு மாநிலம் எங்கும் மக்கள் மத்தியில் பக்திப் பரவசத்தை சேவையின் அடிப்படையில் பணியாற்றி வந்த எமது திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தொடர்ந்து தனது சேவையினில் மேலோங்க வேண்டும் என்று வாழ்த்தி தனது வரலாற்றை மீட்டிப் பார்க்கிறது.

கல்முனையில் இருந்து தெற்கே 12 மைல் தொடங்கி கடற்கரை ஓரமாக 60 மைல் தூரத்திற்கு திருக்கோவில் சேகரம் பரந்து விரிந்து காணப்பட்டது. அக்கரைப்பற்று, பாணமைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களுக்குள் உட்பட்ட 05 சபைகளை தன்னுள் கொண்டது. விளாக்கீது, கருங்கொடித்தீவு, திருக்கோவில், கோமாரி, பொத்துவில் போன்ற திருச்சபைகளில் மொத்தமாக 73 அங்கத்தவரர்கள் இருந்திருக்கின்றனர். இக்காலத்தில் இஸ்லாமியர், இந்துக்கள், பௌத்தர்கள், இவர்களுக்குள்ளிருந்து மக்கள் நற்செய்திப்பணியால் ஈர்க்கப்பட்டு கிறிஸ்தவர்கள் ஆனாரர்கள். இக்காலப்பகுதியில் வேறு புரட்டஸ்தாந்து சபைகள் இப்பகுதியில் இருக்கவில்லை.

இற்றைக்கு சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் கல்முனையானது தூதுப்பணியின் மத்திய நிலையமானபோது அங்கிருந்துதான் இப்பகுதிக்குள் நற்செய்தி கொண்டு வரப்பட்டது. (கி.பி.1874-1878) இக்காலப்பகுதிகளே திருக்கோவில் சேகரத்தின் ஆரம்பகாலம். அப்போது கல்முனையில் கனம் எட்வட் ஸ்ரட், கனம் ஹென்றி டீ.சில்வா, கனம் W.M.உவால்ரன் என்போர் குருமாராக இருந்தனர்.

1874இல் கருங்கொடித்தீவில் ஒரு ஆண் பாடசாலையும், விளாக்கீதில் ஒரு கலவன் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. 1875இல் ஒரு வணக்கஸ்தலம் கருங்கொடித்தீவில் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு பயிற்றப்படாத ஊழியரும் நியமிக்கப்பட்டார்.

அடுத்த வருடத்தில் கனம். எட்வேட். ஸ்பால்டிங் என்பவர் முதல் தமிழ் குருவாக கருங்கொடித்தீவில் நியமிக்கப்பட்டார். 1877இல் தம்பிலுவில் ஒரு ஆண் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த வருடத்தில் கனம். எட்வேட். ஸ்பால்டிங் போதகரின் இடத்திற்கு கனம். றொபேட் ாண்ஸ் போதகராக நியமிக்கப்பட்டார். கல்முனையில் 1879ஆம் ஆண்டு கனம். ஜோர்ஜ் ஜேசெப்ரிறியர் நியமிக்கப்பட்டார். அதே வருடத்தில் திருக்கோவிலில் ஒரு சுவிசேஷ பணியாளன் நியமிக்கப்பட்டார். திருக்கோவிலில் ஓர் ஆண் பாடசாலையும், தம்பிலுவிலில் ஒரு பெண் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. 73 மாணவரைக் கொண்ட இந்த பெண் பாடசாலை மட்டக்களப்பு பகுதி முழுவதிலும் முதன்மையானதாகக் கருதப்பட்டது.

கனம் G.T. றிறம்மர் 15-09-1879இல் எழுதிய அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. சகோதரன் ஸ்ரட் கோமாரி எனும் கிராமத்தில் சாலிய வகுப்பினருக்குள் காணப்பட்ட எழுச்சியை பற்றி எழுதியிருக்கின்றார். இதற்குக் காரணமாய் இருந்தவர் திருக்கோவிலைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் எனக் கூறப்பட்டுள்ளது. இவரின் வரலாறு சுவாரஸ்யமானது. சுமார் 130 வருடங்களுக்கு முன் இந்தியாவிலே வாழ்ந்த செட்டியார் குலத்தைச் சேர்ந்த ஒரு முருக பக்தன் இலங்கையின் தென்னகத்தே அமைந்திருக்கும்.

1875 காலப்பகுதியில் கனம் ஸ்ரட் என்ற தூதுப்பணியாளர் திருக்கோவில் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் நற்செய்தியை குறிக்கோளாகக் கொண்டு பல மைல் கடல் கடந்து இங்கு வந்தபோது மொழி என்பது இவர் பணிக்கு பெரிய தடையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு தமிழ் தெரியாது. இங்குள்ள மக்களுக்கோ ஆங்கிலம் தெரியாது. இந்நிலையில் தான் செட்டியாரின் அறிமுகம் கிடைத்தது. ஒரே ஒரு ஆங்கிலம் தெரிந்த நபராக இவர் இருந்ததால் ஸ்ரட் போதகர் அவரின் உதவியை நாடி மொழிபெயர்ப்பிற்கு உதவி செய்யும் படியும், அதற்கான வேதனத்தைத் தருவதாகவும் வலிந்து கேட்டுக் கொண்டார். போதகரின் பேச்சைக் கேட்டதும் உரத்த சத்தமாக "என்குல தெய்வமாகிய முருகனைப் பாடித் துதிக்கும் அதே வாயால் உங்கள் இயேசுவைப் பற்றி ஒரு வார்த்தை தானும் பேச முடியாது" எனக் கூறி மறுத்து விட்டார்.

செட்டியாரின் மறுப்புரையைக் கேட்டு மனம் வருந்திய தூதுப்பணிப்பாளர் உள்ளத்துக்குள் ஊக்கமாக ஜெபித்து விட்டு செட்டியாரை நோக்கி ஐயா "நீங்கள் இயேசுவைப் பற்றி ஒரு வார்த்தையும் பேச வேண்டாம். நான் ஆங்கிலத்தில் கூறுவதை மட்டும் நீங்கள் தமிழில் மக்களுக்கு கூறினால் போதும் எனக்கூறி வருந்திக் கேட்டுக்கொண்டார்." இதன் பிரகாரம் அவர் உடன்பட்டு செயற்படலானார்.

செட்டியார் ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று கூட்டங்களில் பேச வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் வேண்டா வெறுப்பாக தன் மொழிபெயர்ப்பைச் செய்து வந்த செட்டியார் காலப்போக்கில் ஆர்வத்தோடு செய்ய ஆரம்பித்தார். அவரின் மனம் மாற்றமடையத் தொடங்கியது. சில நாட்களில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட செட்டியார் "யோசுவா" என்ற பெயருடன் திருமுழுக்குப் பெற்று இயேசு கிறிஸ்துவின் தாசனானார். அன்று தொடக்கம் மக்கள் அவரை "யோசுவா செட்டியார்" என அழைக்கலாயினர். பிற்பாடு தனது குடும்பத்தையும் மீட்பின் வழிக்குள் கொண்டு வந்ததோடு, கிராமத்து மக்களையும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் வாழ்க்கைக்குள் வழிகாட்டினார். தூதுரைப்பணியாளரோடு சேர்ந்து இருவரும் பணியை திருக்கோவிலுக்குள் மாத்திரமல்லாது ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரித்தனர். அதிலே கோமாரி, பொத்துவில், பாணமை, இந்த பகுதிகளுக்கு காட்டு விலங்குகள், பயங்கர விஷ ஜந்துக்கள், அடர்ந்த காடு, இவைகளினூடாக சென்று இப்பகுதிகளில் எல்லாம் மெதடிஸ்த கிறிஸ்தவர்கள் உருவாவதற்கு இவர்கள் பணி இன்றியமையாதன. அத்தோடு இவரின் சகோதரர்களான சந்தோச செட்டியார், சற்குணச் செட்டியார் இவர்கள் பணியும் நினைவு கூறப்பட வேண்டியதே.

அத்தோடு காலப்போக்கில் திருக்கோவில் பகுதிக்கான உபதேசியாராகவும் பாடசாலை ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். இவரின் பரம்பரையில் வந்தவர்களே இன்று திருக்கோவிலில் காணும் மெதடிஸ்தர்களின் பெரும் பகுதியினர். கனம் றிறிம்பர் மார்க்க எழுச்சி பற்றி யோசுவா செட்டியார் விட்டுச் சென்ற நாட்குறிப்பேட்டில் கூறப்பட்டதாவது, பொத்துவில், பாணமை பகுதிகளில் கனம். E.M. உவீவர், கனம்.C.S. காசிநாதர், திரு. யோசுவா செட்டியார் மூவருமே நற்செய்தியைக் கொண்டு சென்றவர்கள். **30-06-1896**இல் பாணமையில் ஒரு பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விதமாக திருக்கோவில் சேகரம் **1896**ஆம் ஆண்டிலே நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு அதன் பின் தோன்றிய பணியாளர்கள் பணிகளை உறுதிப்படுத்திச் சபைகளைக் கட்டியெழுப்புவதில் தமது முழு பிரயாசத்தையும் செலுத்தினர்.

அடுத்து செல்வி B.M. கிளெக் அம்மா அவர்களே இச்சேகரத்தில் தங்கியிருந்து பல்வேறு பணிகளை ஆற்றிய தூதுரைப்பணியாளராக விளங்குகின்றார். அவர்களுடைய காலத்திலே தான் நிரந்தரமான வணக்க ஸ்தலங்களும் கட்டிடங்களும் தோன்றின. **1922**ஆம் ஆண்டு காலப்பகுதி இச்சேகர சரித்திரத்தின் மற்றுமோர் முக்கிய காலப்பகுதியாகும். கனம் T.S. வேதநாயகம் அவர்களின் ஊக்கமான பிரயாசத்தின் பேரால் பல இந்துக் குடும்பங்களுக்குள்ளும் கிறிஸ்துவின் நற்செய்தி கொண்டு செல்லப்பட்டது. இக்காலத்தில் மனம் மாறி ஞானஸ்நானம் பெற்றவர்களில் திரு. கனரெத்தினம் என்பவர் மிக முக்கியமானவர். இவருக்கு பவுல் என்ற திருமுழுக்குப் பெயர் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனம் ஜேம்ஸ் மேதர் போதகர் 1959இல் எழுதிய அறிக்கையொன்றில் இவரைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாவது "மட்டக்களப்பிலிருந்து சுமார் 40 மைல் தெற்கேயுள்ள தம்பிலுவில் என்ற கிராமத்தில் கடும் சைவக்குடும்பத்தில் மனம் மாற்றமடைந்த ஒருவரே "பவுல்" என்ற சிறப்புப் பெயர் கொண்ட கனகரெட்ணம் ஆவார். காலம் சென்ற கனம் T.S. வேதநாயகம் போதகருடன் 30 வருடங்களுக்கு முன் இக்கிராமத்திற்குப் போயிருந்தேன். பவுலின் மனமாற்றத்தினால் அக்கிராமத்தில் காணப்பட்ட அதிர்ச்சியும் எதிர்ப்பும் எனது ஞாபகத்தில் இப்போதும் இருக்கிறது. கடும் எதிர்ப்புக்கள் மத்தியிலும் பவுலின் துணிவும் அழைத்தவரின் துணையும் அவர்மேல் இருந்ததால் பிற்காலத்தில் அநேகர் அப்பகுதியில் மெதடிஸ்தர்கள் ஆனார்கள்.

மேலும் 40 வருடங்களுக்கு மேல் வேதாகம ஸ்திரியாக முதல் முதலாக பணிசெய்த திருமதி.ஞானம்மா காத்தமுத்து அம்மாளின் அர்ப்பணிப்பான சேவையும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் செல்வி கதறின், நு.கமல்ரன், கனம். டீ. ஹொலன்ட், சகோதரி எலிசபெத் பேக்கர் என்போர் இச்சேகரத்தை அடிக்கடி சந்தித்து பணியாளரை உற்சாகப்படுத்தி வந்தனர். சேகரம் ஆன்மீகத்திலும், உறுப்பினர் தொகையிலும் முன்னேற்றம் கண்டது.

கனம்.R,W,மக்வே ஐயரே தூதுரைப்பணியாளர்களில் கடைசியாக இச்சேகரத்தின் முகாமைக்குருவாக கல்முனையில் இருந்து பணியாற்றியவர். 1942இல் கல்முனையில் நடந்த செனட் மாநாட்டில் திருக்கோவில் ஓர் "B" சேகரமாக உயர்த்தப்பட்டு அப்போது திருக்கோவிலில் பணியாற்றிய போதகரே முதல் தமிழ் முகாமைக்குருவாக நியமிக்கப்பட்டார். அன்று தொடக்கம் திருக்கோவில் சேகரமானது பொருளாதாரத்திலும், திருப்பணியிலும் நல்ல வளர்ச்சி நிலையினை எட்டியுள்ளது. இச்சேகரம் பிற்பாடு தன்னாட்டு நிர்வாகத்தின் கீழ் கையளிக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்பட்டது. அப்போது ஒரு போதகரும், 03 ஆண் திருப்பணியாளர்களும், 02 பெண் திருப்பணியாளர்களும் நியமிக்கப்பட்டனர். 1963ம் ஆண்டில் இச்சேகரத்தில் இருந்து முதல் முதலாக குருத்துவத்திற்கு பயிற்றப்பட முன்வந்தவர். திரு.K.S.வேதநாயகம், திரு.G.N.ஜெயராசசிங்கம் என்பவர்களாவர்.

மேலும் திருச்சபையின் வரலாற்றுப் பார்வையில் இன்னும் பல உபதேசிமார், சேகரக்குருமார்கள், நற்செய்திப்பணியாளர்கள், உள்ளூர் அருளுரையாளர்கள், வழிகாட்டிகள், திருச்சபை அங்கத்தவர்கள் யாவரினதும் பிரயாசமும், விசுவாச ஓட்டமுமே இன்று எம் திருச்சபைக்கு பின்னணியாய் இருக்கிறது. இந்த விசுவாசப் பயணத்தில் நெற்றி வேர்வை சிந்தி உழைத்த எத்தனையோ பேர் இவ்வுலகில் இல்லை. அவர்களுக்காக இறைவனை துதிக்கிறோம்.

திருச்சபை தனது வரலாற்றில் காலத்திற்குக் காலம் எதிர்கொண்ட சவால்கள் ஏராளம், சூறாவளி, வெள்ளப்பெருக்கு, இனக்கலவரம், ஆழிப்பேரலை, அரக்கபோர் போன்ற பல்வேறு காலகட்டங்களிலும் நிமிர்ந்து நின்று பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக குரல் கொடுக்கவும், புனர்வாழ்வு பணி செய்யவும், ஆறுதல், பணிகளில் தம்மை ஈடுபடுத்தவும், உங்களோடு நாமும் இருக்கின்றோம் என்பதில் வரையறை தாண்டி சமயம், இனம், சாதி என்ற எல்லா நிலையிலும் பணி செய்ததை இந்நேரத்தில் திரும்பிப் பார்த்து கிறிஸ்துவுக்குள் பேரானந்தம் அடைகிறது.

இத்தோடு இன்னும் பல நூற்றாண்டுகளை கண்டு கிறிஸ்துவுக்காய் இன்னும் பல வரலாறுகளை படைப்போம். பின்வரும் சந்ததிக்கு விபரமாய் கூறிட விசுவாசப் பயணத்தில் கிறிஸ்துவோடு பயணிப்போம்.


**2. கத்தோலிக்க தேவாலயம்**

**3. பெந்தேக்கோஸ்தே திருச்சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை, இலக்கியத்துறைகளில் கௌரவிக்கப்படுவோர் விபரங்கள்



## 01. கலாபூசணம் சி.வி.பி. மாணிக்கம் - கவிதை

1945ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 12ஆம் திகதி பிறந்த திரு.சி.வி.பி. மாணிக்கம் பதுளையைப் பிறப்பிடமாகவும் சாகாமம் கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர். 1963இல் வீரகேசரியில் "வெற்றி நமதே" என்ற தலைப்பில் இவரது கன்னிக் கவிதை பிரசுரமாகியது. தொடர்ந்து குறிஞ்சிவாணன், மாக்னி, மாவன்னா, அக்கரைப்பாமா, சாகாமம் மணியன் போன்ற புனைபெயர்களில் கவிதைகள் மற்றும் கட்டுரைகளை எழுதி வருகின்றார்.

மேடைப் பேச்சு, கவியரங்கு, பாட்டுப் போட்டிகளில் கலந்து சிறப்பித்து வரும் இவர் கவிதைகள் மட்டுமன்றி இசைப்பாடல்களையும் வெளியிட்டுள்ளார். 1968இல் தானே கல்லச்சு இயந்திரம் ஒன்றைத் தயாரித்து "மலைக் கீதம்", "தேனிசை" எனும் இசைப் பாடல் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்.

இவரது கவிதைகள் தினபதி, சிந்தாமணி, ராதா சுதந்திரன், செய்தி போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகின. 1991இல் ஜேர்மன் பெர்லின் நகரில் கோ. நடேசையர் நினைவுத் தமிழ் மாநாட்டில் இவரது கவிதைகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

1998இல் 'இன்னும் விடியவில்லை' எனும் மூவர் கவிதைத் தொகுதியை தம்பிலுவில் ஜெகா, முல்லை வீரக்குட்டி ஆகியோருடன் சேர்ந்து வெளியிட்டார். இவர் கலைத்துறைக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி 1996இல் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட சாகித்திய விழாவில் கௌரவிக்கப்பட்டார். அத்தோடு கவிஞன், செங்கதிர் போன்ற இதழ்களிலும் இவர் பாராட்டப்பட்டுள்ளார்.

2011இல் இவர் வெளியிட்ட 'துயரம் சுமக்கும் தோழர்களாய்...' எனும் கவிதைத் தொகுதி பலரது பாராட்டுக்களையும் நன் மதிப்பையும் பெற்றது. கடந்த 40 வருடங்களாக இவர் கலைத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி 2011ஆம் ஆண்டிற்கான கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வகையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக கலை, இலக்கியப் பணிகளில் இவர் கவிதைத் துறைக்கு ஆற்றி வரும் சேவையினைப் பாராட்டி 2012ஆம் ஆண்டிற்கான கலாசார விழா நிகழ்வில் கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 02. திருமதி யோகா யோகேந்திரன் - சிறுகதை

1946ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி பிறந்த திருமதி. யோகா யோகேந்திரன் திருக்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

1960களின் இறுதியில் சிறுகதைகள் எழுத ஆரம்பித்த இவர் தொடர்ந்து "திருக்கோவில் யோகா" என்ற புனைபெயரில் சிறுகதைகள், சிறுவர்பாடல்களை எழுதி வருகின்றார். இவரது படைப்புக்கள் சிந்தாமணி, ராதா, தினகரன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகின. 1978இல் யாழ் கோப்பாய் ஆசிரிய மாணவியாகப் பயின்றபோது, எழுத்தாக்கம் ஒன்றிற்காக பரிசு பெற்றதோடு, எழுத்துத் துறையிலிருந்து ஒதுங்கியும் இருந்தார்.

20ஆண்டுகளுக்குப் பின் இன விவகார பண்பாட்டு அமைச்சு தேசிய ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில், இவரது சிறுகதை 05ஆம் பரிசினைப் பெற்றதுடன், அவுஸ்ரேலிய தமிழ்ச் சங்கம் சர்வதேச ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசினையும் பெற்றுக் கொண்டது. மேலும் அச்சிறுகதை "விபவி" ஆய்வு அரங்கிலும் பரிசுபெற்றது. 2001இல் கிழக்குப் பல்கலைக்கழகம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் இவரது சிறுகதைக்கு 3ஆம் பரிசு கிடைத்தது. 2002இல் அவுஸ்திரேலியத் தமிழ்ச் சங்கம் சர்வதேச ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் மீண்டும் இவர் முதற் பரிசு பெற்றார். 2008இல் நீலாவணன் நினைவு குறுநாவல் போட்டியில் 2ஆம் பரிசினைப் பெற்றதுடன், 2011இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய சிறுகதைப் போட்டியிலும் பிரதேச, மாவட்ட மட்டங்களில் முதல் பரிசினைப் பெற்றார்.

இவரது படைப்புக்களில் "இன்னார்க்கு இன்னாரென்று", அவள் காத்திருக்கின்றாள்" போன்ற சிறுகதைத் தொகுதிகள் "வாருங்கள் கதைபடிப்போம்" எனும் சிறுவர் கதைகள் "மாணவர்க்கு மணிக்கவிதைகள்" என்ற சிறுவர் பாடல்கள் "புலமைக் கதம்பம்" எனும் 05ஆம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் ஆதார கை நூல் என்பவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இவர் கலை, இலக்கியப் பணிக்கு ஆற்றிய சேவையினைப் பாராட்டி, 2000ஆம் ஆண்டில் சர்வதேச பெண்கள் அமைப்பினால் "பிரதேசத்தின் சிறந்த எழுத்தாளர் விருதினையும், 2002ஆம் ஆண்டில் எழுத்துச், சேவையைப் பாராட்டி" அறப்போர் அரிய நாயகம் விருதும், 2011ஆம் ஆண்டில் கிழக்குமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் "முதலமைச்சர் விருதும்" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த 35 வருடங்களுக்கு மேலாக இவர் தொடர்ந்து கலை, இலக்கியப் பணிகளில் சிறுகதைத் துறைக்கு ஆற்றிவரும் சேவையினைப் பாராட்டி 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 03. திருமதி. இராஜகுமாரி சிதம்பரம் - நாட்டியம்

1951ஆம் ஆண்டு சித்திரை மாதம் 26ஆம் திகதி பிறந்த திருமதி. இராஜகுமாரி சிதம்பரம் திருக்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இளம் வயதிலேயே இயல்பாகப் புத்தகங்களை வாசித்து நடனம கற்ற இவர் மட்டக்களப்பு வின்சன் ராஜினி யோசப் ஆசிரியையிடமும், யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆசிரியைகளான சாந்தா பொன்னுத்துரை, கிருஷாந்தினி ரவீந்திரன், செல்வி செல்வலஷ்மி ஆகிய நடன விரிவுரையாளர்களிடமும் நடனக் கலையினைப் பயின்றார்.

தனது பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு நடன டிப்ளோமா பட்டத்தினை யாழ் இசை நடனக் கல்லூரியில் பூர்த்தி செய்தார். அதன் பின் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் மூன்று வருடங்கள் கடமையாற்றி தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் 18 வருடங்கள் நடன ஆசிரியையாகப் பணி புரிந்தார். அக்கால கட்டத்தில் தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவர்களைப் பயிற்றுவித்து, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற வழிவகுத்தார். "நடராஜர் நந்தனாலயம்" என்ற நடனப் பள்ளியை அமைத்து, அதில் அநேக மாணவர்களைக் கற்பித்தும், அவர்களை வருடந்தோறும் வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தியும் வருகின்றார்.

மேலும், அக்கரைப்பற்று, கல்முனை, களுவாஞ்சிகுடி, கல்லடி ஆகிய இடங்களில் நடன வகுப்புக்களை ஆரம்பித்து, நடன நிகழ்ச்சிகளை மேடையேற்றி பலரது பாராட்டுக்களைப் பெற்றுள்ளதுடன், ஆண்டு விழாக்களையும் நடாத்தியுள்ளார். இவரிடம் நடனம் பயின்ற மாணவர்களில் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள், நடன ஆசிரியைகளாக இன்றும் கடமையாற்றி வருகின்றனர். அண்மையில் இவ்ஆசிரியர்களையும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களையும் கொண்டு இவர் தயாரித்த 'நர்த்தனாஞ்சலி' எனும் நடன நிகழ்ச்சியை மிகவும் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் தயாரித்து நெறிப்படுத்தினார். இவரது சேவையைப் பாராட்டி 'பரதச்செல்வி' 'பரதக் கலைச் செல்வி' ஆகிய பட்டங்கள் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன், கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் நடைபெறும் பரீட்சைகளை நடாத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டு அப்பரீட்சைகளை நடாத்தியும் வருகின்றார்.

இவரது சிற்றப்பா சங்கீத பூஷணம் கணபதிப்பிள்ளை அவர்களின் விருப்பத்திற்கும், ஆசீர்வாதத்திற்கும் இணங்க இப்பிரதேசத்தில் நாட்டியத்துறைக்கு இவர் ஆற்றிவரும் பணியினைப் பாராட்டி 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 04. திரு. கந்தக்குட்டி சண்முகராஜா - இசை

1948ஆம் ஆண்டு ஆனிமாதம் 29ஆம் திகதி பிறந்த இவர் தம்பிலுவிலை பிறப்பிடமாகக் கொண்டவர். பாடசாலையின் ஆரம்ப வகுப்பு மாணவனாக இருக்கும்போதே மேடைகளில் பாடி ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் பாராட்டைப் பெற்று இசைத்துறையில் ஓர் ஆர்வத்தையும், பாடகர். சண்முகராஜா என்ற முகவரியையும் பெற்றுள்ளார். இவர் தான் கல்விகற்ற தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியராக இருந்த சங்கீத பூசணம் சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம் இசையை முறையாகக் கற்று பாடசாலையில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் பாடி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.


அதன் பின் இப்பிரதேசத்திலிருந்த "முரசொலிக் கலாமன்றம்" மூலம் ஆலயத்திருவிழாக்கள், மற்றும் கண்ணகி விழா நிகழ்வுகளில் கலந்து பொதுமக்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். 1974ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலம் மெல்லிசைப்பாடல் தெரிவுக்கு தெரிவுசெய்யப்பட்டு திருமதி கமலினி முத்துலிங்கம் என்பவரால் இயற்றப்பட்ட பாடலை இருமுறை பாடியுள்ளார். 1975இல் "தினபதி" பத்திரிகை ஆசிரியரினால் ஒழுங்குசெய்யப்பட்ட பாட்டுப்போட்டியில் கலந்து 1வது பரிசையும் ரசிகர்களது பாராட்டையும் பெற்றுள்ளார்.

எமது அயல் கிராமத்தவரான முஸ்லிம்களின் "கவிதா" இசைக்குழுவில் இணைந்து அவர்களின் கலை நிகழ்வுகளிலும் 1978இல் யாழ் வல்வெட்டித்துறை கண்ணன் இசைக்குழு, ரங்கன் இசைக்குழுவுடன் இணைந்து முத்துமாரியம்மன் கோவில் உற்சவத்திலும், 1997இல் மட்டக்களப்பு "ஜெயா" இசைக்குழுவுடன் மாமாங்கப்பிள்ளையார் ஆலய உற்சவத்திலும் 2007இல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் நடாத்திய "மதுரகானம்" நிகழ்ச்சியிலும் பங்குபற்றி ரசிகர்களது பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளார். அதுமட்டுமன்றி 1996இல் நடைபெற்ற திருக்கோவில் பிரதேச சாகித்திய விழாவில் பிரதேச செயலாளர் திரு. எஸ். அமலநாதன் அவர்களினாலும், அக்கரைப்பற்று தென்பகுதி கலைஞர் என்ற ரீதியில் கொழும்பில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களினாலும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

திருக்கோவில் பிரதேசத்தில் இவ்வாறு இசைத்துறையில் தடம்பதித்துள்ள பாடகர் சண்முகராஜா அவர்களை 2012ஆம் ஆண்டிற்கான கலாசார விழா நிகழ்வில் இசைத்துறைக்கான கௌரவிப்பினை வழங்குவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 05. திரு. இளையதம்பி விநாயகமூர்த்தி - ஓவியம்

1949ஆம் ஆண்டு மார்கழிமாதம் 19ஆம் திகதி பிறந்த திரு. இளையதம்பி விநாயகமூர்த்தி தம்பிலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறுவயதிலிருந்து ஓவியத்துறையில் ஈடுபாடு கொண்டமையால் 1965இல் 08ஆம் தரத்தில் கல்வி கற்கும் போது அம்பாரை மாவட்ட அரச, அதிபரினால் பாராட்டும், சான்றிதழும் பெற்றார். "கலைமுழக்கம்", "செண்பகம்", "ஓவியத்தாரகை" முதலிய கையெழுத்துச் சஞ்சிகைகள் மூலம் மக்கள் மனங்களில் தடம் பதித்த இவர் "ஆர்ட்டிஸ்ற் விநாயகமூர்த்தி" என்ற புனைப்பெயருடன் தொடர்ந்து ஓவியத்துறையில் ஈடுபட்டு வருகின்றார். உள்ளூரிலும், வெளியூரிலும், ஆலய திரைச்சீலைப்படங்கள் வரைதல், ஆலய கோபுர வர்ணம் தீட்டுதல், தெய்வப் படங்கள் வரைதல் போன்ற ஓவியம் சார்ந்த கலை வேலைகளையும் தனது தொழிலாகச் செய்து வருகின்றார்.

இவர் ஓவியத்துறைக்கு ஆற்றிவரும் சேவையைப் பலரும் பாராட்டிக் கௌரவித்துள்ளனர். 1995இல் கொழும்பு மோடிக் கட்டடத்தில் திரு. J. திவ்வியநாதன் (M.P) தலைமையில் நடைபெற்ற பல்துறை சார்ந்த கலைஞர்களைப் பாராட்டும் நிகழ்வில் "தூரிகை வண்ணன்" என்ற புனைபெயர் சூட்டப்பட்டு கௌரவ J.R.ஜெயவர்த்தனாஅவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அவ்வாறே குருகுல ஸ்தாபகர் தம்பையா அடிகளாலும், தற்போதைய குருகுலப் பணிப்பாளர் திரு.கண.இராஜரெட்ணம் அவர்களாலும் பலமுறை பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் 2000ஆம் ஆண்டு பிரதேச செயலாளர் திரு. அமலநாதன் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவர் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து ஓவியத் துறைக்கு ஆற்றி வரும் பணியினைப் பாராட்டி 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 06. சரவணமுத்து கதிரமலை - விஷவைத்தியம் சோதிடம்

1933 ஆம் ஆண்டு ஐப்பசிமாதம் 28ஆம் திகதி பிறந்த சரவணமுத்து கதிரமலை தம்பிலுவிலைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டவர். இவர் இப்பிரதேசத்தில் இன்றுவரை கல்வி, பண்பாடு, கலை கலாசாரங்களைப் பேணிவரும் மூத்த கல்விமான்களில் ஒருவராவார்.


விவசாயத்தில் தேர்ச்சியுடையவராகவும் 10.05.1956இலிருந்து 31.12.1990வரை அரசாங்க சேவையில் இணைந்து ஆசிரியர், அதிபர் எனும் பதவிகளை வகித்து ஓய்வுபெற்று தற்போது தன் பரம்பரையின் வழியினர் மேற்கொண்ட ஆயுர்வேத விஷவைத்தியம், சோதிடவியல் கலைகளை முன்னெடுத்துச் செல்கின்றார்.

குறிப்பாக மனையடிச் சாஸ்திரம், குறிப்பு (தெரிப்பு) எழுதுதல், குறி சொல்லுதல் (கெடுதி கூறல்) எனப் பல துறைச் சோதிட வியலாளரான இவர் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் வண்ணக்கர், முரசொலிக்கலாமன்றத்தின் தலைவர், காந்தி விளையாட்டுக் கழகத்தின் தலைவர், திருக்கோவில் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் என சமூகத்திலும் தடம் பதித்ததுடன் அக்கரைப்பற்று தெற்கு பல நோக்குக் கால் நடை அபிவிருத்திச் சங்கத்தின் தாபகரும், தலைவருமாயிருந்துள்ளார். 2010ஆம் ஆண்டில் சமூக சேவைகள் அமைச்சினால் பிரதேசசெயலக மட்டத்தில் வழங்கப்பட்ட "Best Elder" எனும் விருதினை திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் பெற்ற மாமனிதராகவும் திகழ்கின்றார்.

திருக்கோவில் பிரதேசத்தில் 50 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து ஆயுர்வேத விஷவைத்தியம், சோதிடவியல் போன்ற துறைகளில் ஈடுபட்டு வரும் சரவணமுத்து கதிரமலை அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 07. சாண்டோ ரவி - சாகசம்


1977ஆம் ஆண்டு மார்கழி மாதம் 17ஆம் திகதி பிறந்த கந்தசாமி ரவி திருக்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1999ஆம் ஆண்டிலிருந்து தனது சாகச விளையாட்டுக்களை ஆரம்பித்து வருகின்றார். முதன் முதலில் செய்த சாகச விளையாட்டு கால்களால் தேங்காய் உரித்தல் ஆகும். தொடர்ந்து உடலின் மீது உழவுஇயந்திரம் ஏற்றுதல், கழுத்தின் மீது மோட்டார் சைக்கிள் ஏற்றுதல், 100 ஆணிகளுக்கு மேல் படுத்து உழவியந்திரம் ஏற்றுதல். இயங்கிக் கொண்டிருக்கும் இரு சக்கர உழவியந்திரத்தைக் கைகளால் நிறுத்துதல், வயிற்றின் மீது பாராங்கல்லை வைத்து இரு பக்கங்களிலும் இரண்டு பேரைத் தூக்குதல் போன்ற சாகசங்களை இப்பிரதேசத்தில் நிகழ்த்தி வருகின்றார்.

கடந்த 26.10.2011அன்று 16தடவை ஒரே நேரத்தில் உழவியந்திரங்களை ஒன்றன் பின் ஒன்றாக உடலின் மீது ஏற்றி இப்பிரதேசத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். இவரது சாகச நிகழ்வுகளைப் பாராட்டி 2011ஆம் ஆண்டு எமது பிரதேச செயலகத்தினால் "சாண்டோ" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவரது சாகசங்கள் மட்டக்களப்பு மாமாங்கம், தாந்தாமலை, கொக்கட்டிச்சோலை, கதிர்காமம், உகந்தை, மண்டூர், வறக்காப்பொலை, சித்தாண்டி, கோமாரி, பொத்துவில் போன்ற பல இடங்களிலும் அம்பாரை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளிலும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல சாகச நிகழ்வுகளை நிகழ்த்தி திருக்கோவில் பரதேசத்திற்கு பெருமை பெற்றுத்தந்த சாகசக் கலைஞர் சாண்டோ ரவி அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 08. திரு. கணபதிப்பிள்ளை தம்பிராஜா - வாத்தியம்

1932ஆம் ஆண்டு ஆனி மாதம் 23ஆம் திகதி பிறந்த இவர் பிரதான வீதி தம்பிலுவில் 02 மேற்கில் வசித்துவருகின்றார். தனது 22வது வயதிலிருந்து ஆர்மோனியம் இசைத்து வரும் இவரை ஊர் மக்கள் "ஆர்மோனியம் தம்பிராஜா" என அழைக்கின்றனர்.

கர்நாடக இசை, ஆர்மோனியம் இசைப்பதில் இப்பிரதேசத்தில் மிகச் சிறந்து விளங்கும் இவர் புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்ற துணை வாத்தியங்களையும் தபேலா, மிருதங்கம், தவில் போன்ற தாளவாத்தியங்களையும் கையாளும் திறமையுடையவர் இசைத்துறையில் இவரது சேவையைப் பாராட்டி 2007ஆம் ஆண்டு தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயத்தில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் 2008ஆம் ஆண்டு இசைத்துறைக்கான "கலாபூசண விருதினையும்" பெற்றுள்ளார்.

மேலும் இப்பிரதேசத்தில் நீண்ட நேரஇசை நாடகங்களுக்கு பக்க வாத்தியக் கலைஞராகவும் (சத்தியவான் சாவித்திரி, ராஜதிலகமணி, நீதியின் மகன் போன்ற நாடகங்கள்) நாட்டுக் கூத்துக்கு பக்க வாத்தியக் கலைஞராகவும் இருந்துள்ளார்.

சுமார் 45வருட காலமாக இசைத்துறையில் சேவையாற்றி வருகின்ற இவர் தற்போது தனது மகள், ஏனைய மாணவர்களுக்கும் இக்கலையைக் கற்பித்தும், ஆலய பஜனைகளிலும் வாசித்தும் தொண்டு செய்து வருகின்றார். இவ்வாறு இப்பிரதேசத்தில் சிறந்த வாத்தியக் கலைஞராக விளங்கி வருகின்ற ஆர்மோனியம் தம்பிராஜா அவர்களை 2012ஆம் ஆண்டிற்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டி கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 09. திரு. வேலுப்பிள்ளை சோமசுந்தரம் - மரச்சிற்பம்.

1952ஆம் ஆண்டு சித்திரைமாதம் 15ஆம் திகதி பிறந்த இவர் தம்பிலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 20வருடங்களுக்கு மேலாக மரச் சிற்ப வேலையில் ஈடுபட்டுவருகின்றார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பல இடங்களில் செட்டிபாளையம், உகந்தை, ஆலையடிவேம்பு, துறைநீலாவணை போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களில் சூரன், மயில், எலி, நந்தி போன்ற உருவங்களை வடிவமைத்துள்ளார். திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலய இருதேர், தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலய தேர், உகந்தை முருகன் ஆலய சூரன் போன்ற உருவங்களை அமைத்து பலரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

இவ்வாறு மரச் சிற்பம் மூலம் தனது திறமையை வெளிக்காட்டி வருகின்ற வேலுப்பிள்ளை சோமசுந்தரம் அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டி கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 10. திரு. இளையதம்பி வீரசிங்கம் - சித்த ஆயுர்வேத வைத்தியர்

1941ஆம் ஆண்டு பிறந்த இவர் கல்முனையை பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வசிப்பிடமாகவும் கொண்டவர். பரம்பரை பரம்பரையாக தனது தந்தையின் வைத்தியமான ஆயுர்வேத வைத்தியத்தில் ஈடுபட்டு வரும் இவர் 7வது தலைமுறையாவார். திருக்கோவில் பிரதேசத்தில் வைத்திய நிலையம் அமைத்து தனது வைத்திய முறையைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார். 1974இல் இந்தியாவில் ரெங்கராஜன் வைத்தியக் கல்லூரியில் AMP டிப்ளோமாவும், 1975இல் LMM டிப்ளோமாவும் முடித்துள்ளார். அத்தோடு இலங்கையில் ஆயுர்வேத மெடிக்கல் கவுன்சில் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார்.

1977இல் உலக சுகாதார கவுன்சில் நடாத்திய குடும்பநல பாடநெறியில் சித்தியடைந்தமைக்காக கொழும்பில் கௌரவிக்கப்பட்டு சான்றிதழும் பெற்றுக் கொண்டார். மேலும் இவரது திறமையைப் பாராட்டி 1992இல் வைத்திய அதிகாரி ஜன்மவீரவினால் அம்பாரையில் மருந்துப் பெட்டகம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பலரது பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்று 50வருடங்களுக்கு மேலாகப் பரம்பரை ஆயுர்வேத வைத்தியராக சேவையாற்றி வருகின்ற இளையதம்பி வீரசிங்கம் அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டி ஆயுர்வேத வைத்தியத் துறைக்கான கௌரவிப்பினை வழங்குவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 11. திரு. தம்பிமுத்து மகேந்திரா - புராண படலம்

1944ஆம் ஆண்டு வைகாசி மாதம் 07 ஆம் திகதி பிறந்த இவர் தம்பிலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அரச எழுதுவிளைஞராக 34 வருடங்களுக்கு மேல் சேவையாற்றி தற்போது ஓய்வுதியம் பெற்றுவரும் இவர் சிறுவயது முதல் தெய்வப் பாடல்களைப் பாடுவதில் ஈடுபாடு கொண்டவர்.

மட்டக்களப்புத் தென்பகுதியில் அமைந்துள்ள ஆலயங்களில் உற்சவ காலங்களில் புராணபடலமும் கருத்தும் கூறி மக்கள் மனதில் சமய நம்பிக்கையை வலுப்படுத்துவதோடு பஞ்சபுராணம், ஊஞ்சல், குளிர்த்தி, காவியம், கண்ணகிவழக்குரை போன்றவற்றை பாடி மக்கள் மனங்களில் இடம் பிடித்துள்ளார்.

இப்பிரதேச புராணபடலக் குழுவின் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் இருந்து சமயப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவரது பணிகளைப் பாராட்டி பொத்துவில் குண்டுமடு முருகன் ஆலய நிர்வாகத்தினரால் "பல்கலை ஆசான்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேச பாடசாலைகளில் நடைபெறும் கலை, கலாசார விழா, தமிழ்மொழிதின் கவிதை, கட்டுரை, பாஓதல் போன்ற நிகழ்வுகளுக்கு பல தடவைகள் நடுவராக கடமையாற்றியுள்ளதுடன், கந்தபுராண கலாசாரம் அழிந்து போகாமல் இன்றும் அதனை மக்களிடையே பரப்பி வருவதோடு, கந்தபுராண பயன் பற்றிய வகுப்பினையும் நடாத்தி வருகின்றார்.

இப்பிரதேசத்தில் புராண படலங்களை ஓதுவதில் ஈடுபட்டு வருகின்ற தம்பிமுத்து மகேந்திரா அவர்களை 2012ஆம் ஆண்டிற்கான கலாசார விழா நிகழ்வில் கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 12. திருமதி. சுலோசனாதேவி இராஜேந்திரா - மருத்துவம்

1959இல் பிறந்த இவர் தம்பிலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1980இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று 1986இல் மாத்தளை நகர வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகவும், 1998இல் களுத்துறையில் தேசிய சுகாதார கல்விப் பயிற்சிப் பனிமனையில் சிறப்புப் பயிற்சியைப் பெற்ற வைத்திய அதிகாரியாகவும், அதன்பின் திருக்கோவில் வைத்தியசாலையிலும், 2001ஆம் ஆண்டு 2007ஆம் ஆண்டு வரை அக்கரைப்பற்று வைத்தியசாலையிலும் திருக்கோவில் வைத்தியசாலையிலுமாக மாறிமாறி கடமையாற்றி இன்று திருக்கோவில் சுகாதார வைத்திய அலுவலகத்தில் சுகாதார வைத்திய அதிகாரியாகத் தனது பணியினைத் தொடர்ந்து வருகின்றார்.

இப்பகுதியில் 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல் காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழர்கள் பாதுகாப்புக் கருதி இடம் பெயர்ந்து அடிப்படை வசதியின்றி இப்பிரதேசத்தில் வாழ்ந்த போது அம்மக்களுக்கு தனியொரு வைத்திய அதிகாரியாக இருந்து தமிழர்கள் வாழும் முகாம்களுக்குச் சென்று அவர்களுக்குச் சிகிச்சையளித்து பல உயிர்களைக் காப்பாற்றிய பெருமை இவரையே சாரும். இன, மத, பிரதேச வேறுபாடின்றி வைத்தியமே தனது உயிர் நாடி என தனது கடமைகளைச் செய்துள்ளார்.

அத்தோடு இப்பகுதியில் பின்தங்கிய கிராமங்களிலுள்ள மக்களுக்குத் தேவையான வைத்திய சிகிச்சைகளை வழங்குவதற்காக மருந்துக் குழுக்களை வரவழைத்து சிகிச்சையளித்ததுடன் லகுகலை, பொத்துவில், கோமாரி, தாண்டியடி போன்ற இடங்களில் நிரந்தர வைத்தியசாலைகளை அமைக்க வேண்டும் என உயர்மட்டக் குழுக்களோடு பேசி அப்பகுதிகளில் வைத்தியசாலைகளை அமைப்பதற்கு அரும் பாடுபட்டுள்ளார். ஒரு கர்ப்பினிப் பெண்ணிற்கு அவசர தேவையாக இரத்தம் தேவைப்பட்டபோது தனது இரத்தம் பொருந்தியமையால் இரத்ததானம் செய்து தாயையும், சேயையும் காப்பாற்றியது இவரின் மகத்தான சேவையாகும்.

இவ்வாறு வைத்தியத் துறையில் முழு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்ற திருமதி சுலோசனாதேவி இராஜேந்திரா அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டுவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 13. திரு. கலாநிதி செல்வரெத்தினம் குணபாலன்

1967ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி விநாயகபுரத்தில் பிறந்த இவர் தற்போது தம்பிலுவில் 02இல் வசித்து வருகின்றார். தனது ஆரம்பக் கல்வியினை விநாயகபுரம் அ.த.க. பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியினை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திலும், யாழ் சென் பற்றிக் கல்லூரியிலும் கற்று தனது பல்கலைக்கழக கல்வியில் தொழில் நிர்வாக இளமாணி (BBA (Hons) சிறப்பு பட்டத்தினை யாழ்பல்கலைக்கழகத்திலும், வர்த்தக முதுமாணி பட்டத்தினை (M.Com) களனி பல்கலைக்கழகத்திலும், கலாநிதி (PhD), தத்துவமானி பட்டப்பாடத்தினை மனோன்மனியம் சுந்திரனார் பல்கலைக் கழகத்திலும் (இந்தியா) பூர்த்தி செய்துள்ளார். அத்துடன் உயர்கல்வி கற்பித்தலுக்கான பாடநெறியினை (CTHE) கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்து தொழில் நிர்வாகமானி (MBA) முதுமானி பட்டப்படிப்பினை அழகப்பா பல்கலைக்கழகம் (இந்தியா) பயில்வதுடன், இலங்கை, மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் தனது ஆய்வுக் கட்டுக்களையும் சமர்பித்துள்ளார். குறிப்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், SRM பல்கலைக்கழகம், மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்.

இவ்வாறு திருக்கோவில் பிரதேசத்தில் சிறப்புப் பெற்று வருகின்ற இவர் ஆரம்பகாலங்களில் 1995இல் யாழ் பல்கலைக் கழகத்தில் தற்காலிகக் கட்டுரை ஆசிரியராக தனது பணியினை ஆரம்பித்தார். பின்னர் 1996-1997 காலப்பகுதியில் சம்மாந்துறை இணைந்த பல்கலைக்கழகத்திலும் 1997 தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமைகளைப் பொறுப்பேற்று தற்பொழுது முகாமைத்துவத்துறை தலைவராகவும், முகாமைத்துவ பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், சிரேஷ்ட மாணவ ஆலோசகராகவும், வர்த்தக முகாமைத்துவ பீடவெளிவாரி கற்கைகள் பிரிவின் இணைப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

திருக்கோவில் பிரதேசத்தில் முதலாவது கலாநிதியாக சிறப்பான முறையில் தனது கடமைகளை முன்னெடுத்துச் செல்கின்ற செல்வரெத்தினம் குணபாலன் அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசாரவிழா நிகழ்வில் பாராட்டுவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. கனகராசா சரவணன் - ஊடகம்**

யாழ்ப்பாணம் நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அக்கரைப்பற்றில் வசித்து வருகின்றார். 1992 ஆம் ஆண்டு கொழும்பு கப்பல் துறைமுகத்தில் வேலை செய்த போது கனடா நாட்டிலுள்ள செந்தாமரை பத்திரிகையின் இலங்கைக்கான செய்தியாளராக முதன் முதலாக ஊடகத்துறையில் கால் பதித்தார்.

தொடர்ந்து ஊடகத்துறையில் சேவையாற்றி வந்த நிலையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் தினக்குரல் பத்திரிகையின் திருக்கோவில் நிருபராக முழு நேர ஊடகத்துறையை ஆரம்பித்து வீரகேசரி திருக்கோவில் நிருபராகவும், சுடர் ஒளி தம்பட்டை நிருபராகவும், தமிழ் மிரர் இணையத்தளத்தின் எஸ் மாறன் - மற்றும் வெற்றி குஆ, சூரியன் குஆ போன்ற வானொலி மற்றும் சுதந்திர ஊடகங்களுக்குச் சேவையாற்றி வருகின்றார்.

ஊடகத்துறையில் லண்டன் BBC சேவையின் ஐலோன் என்ற ஊடகக் கற்கை நெறியையும், இன்றோ நியூஸ் வானொலியின் வானொலி தொடர்பான பயிற்சி நெறிகளையும் பூர்த்தி செய்துள்ள இவர் அம்பாரை மாவட்டத்தின் தமிழ் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து அம்பாரை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தை ஆரம்பித்து அதன் செயலாளராகவும், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளராக தொடர்ச்சியாக மூன்று தடவைகள் இருந்து வருகின்றார்.

திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த 10 வருடங்களாக ஊடகத்துறையில் ஒரு முழு நேர ஊடகவியலாளராக சேவையாற்றி வருகின்ற கனகராசா சரவணன் அவர்களை 2012 ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் கௌரவிப்பதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டுப் பெறுவோர்



## 01. திரு.மாரிமுத்து கந்தப்பன் - ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்

1938ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 29ஆம் திகதி பிறந்த இவர் கோமாரி கிராமத்தை பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்பகால கிராம உத்தியோகத்தர் பதவியில் DRO அவர்களின்நிர்வாகத்தில் 1963ஆம் ஆண்டு தனது சேவையினை ஆரம்பித்து, எந்த வித தடைகளுமின்றி தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து, படிப்படியாகப் பதவியுயர்வுகளைப் பெற்று கிராம சேவையாளர் பதவியில் மிக உச்சமான நிர்வாக உத்தியோகத்தர் பதவியைப் பெற்று இளைப்பாறியுள்ளார். அம்பாறை மாவட்டத்தில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் தனது கடமைகளைச் சிறப்பாகச் செய்ததாலும் சில கொலை வழக்குகளில் குற்றவாளிக்கு மரண தண்டனை பெற்றுக் கொடுத்து மட்டக்களப்பு உயர் நீதிமன்ற நீதவானால் பாராட்டையும் பெற்றுள்ளார். அதுமட்டுமன்றி கலைத்துறையிலும் ஈடுபாடுடையவராவார். பல நாடகங்களில் நடித்தும், அரங்கேற்றியும் உள்ளார். கவிதை, கட்டுரைப்போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்கள், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் உலகளாவிய ரீதியில் நடாத்திய கட்டுரைப் போட்டியில் இவரது கட்டுரை 2ஆம் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கிராம சேவையாளர்களுக்கான நிர்வாகத் துறையில் முதன் முதலாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள திரு. மாரிமுத்து கந்தப்பன் அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டுவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**02. திருமதி. திலகவதி கணேசமூர்த்தி** ஓய்வு பெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்

1952ஆம் ஆண்டு வைகாசிமாதம் 15ஆம் திகதி பிறந்த இவர் தம்பிலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் எமது பிரதேசத்தில் முதலாவது ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர் என்ற பெருமைக்குரியவர். தனது ஆரம்பக் கல்வியினை தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் கற்று 1962இல் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இடைநிலைக் கல்வியை மட்/வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் கற்றார்.

1971இல் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற இவர் பலாலி ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞானப் பயிற்சியினைப் பூர்த்தி செய்து பயிற்றப்பட்ட ஆசிரியராக தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் மீண்டும் பணியாற்றினார். அதன் பின் 1991 - 1999 ஆம் ஆண்டு வரை விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராகவும், கல்வி நிர்வாகசேவையில் சித்திபெற்றபின் 1999-2009ஆம் ஆண்டு வரை திருக்கோவில் கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும், 2010 - 2012ஆம் ஆண்டு வரை பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும், 2011 - 2012 ஆம் ஆண்டு வரை வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

இவ்வகையில் எமது பிரதேசத்தின் முதலாவது வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி, ஓய்வுபெற்ற திருமதி. திலகவதி கணேசமூர்த்தி அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டுவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக பொதுத் துறைக்கான பாராட்டுக்களைப் பெறுவோர் விபரம்



## 01. திரு. இராசையா ஜெயேந்திரா - சமூகசேவை

ஈழத்துப் புரட்சிக் கவிஞன் என அழைக்கப்படும் காசியானந்தன் அவர்கள் மதுரை தமிழ் மாநாடு ஒன்றிலே உரையாற்றும் போது "நான் ஈழத்திலே திருக்கோவில் எனும் ஊரில் வாழ்ந்த கொமியூனிஸ்ட் இராசையாவின் கவிதைகளைப் படித்து என் தமிழுணர்வை வளர்த்துக் கொண்டேன்" எனக் குறிப்பிடும் அளவிற்கு தன் ஆக்கங்களாலும் தமிழுணர்வாலும் தாக்கம் செலுத்திய இராசையா என்பவரின் இரண்டாவது மகனாக 1955.01.20 அன்று ஜெயேந்திரா அவர்கள் திருக்கோவில் எனும் ஊரில் பிறந்தார்.

சிறுவயதிலிருந்து தந்தையாரின் தமிழ்ப் பற்றையும், கொமியூனிச சிந்தனையையும் சமூகத்தின் ஆர்வத்தையும், உள்வாங்கிய இவர் இளவயதிலேயே இலங்கை வங்கியியல் கனிஷ்ட எழுது விளைஞராக 1975ல் இணைந்து கொண்ட போதிலும் சோம்பேறித்தனம் இன்றி தொடர்ந்து, படித்து வங்கியியல் பரீட்சைகளை எழுதி சித்திபெற்று 2வது முகாமையாளர் தரம் III, முகாமையாளர் தரம் II, முகாமையாளர், தரம் I, சிரேஷ்ட முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் எனப் பல பதவியுயர்வுகளைப் பெற்று இலங்கையில் பல இடங்களிலும் சேவையாற்றி வட மாகாணத்திற்கான செயற்பாட்டு முகாமையாளர் என வட இலங்கை வரை சேவையாற்றி யுள்ளார்.

தனது கடமையில் இத்தகைய உயர்நிலைக்குச் சென்ற இவரின் சமூகச் செயற்பாடுகள் போற்றத்தக்கன. இப் பிரதேசத்தில் ஒழுக்கமும், கண்ணியமும், கட்டுப்பாடும், திறமையும் ஒருங்குசேரப்பெற்ற உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிக்கு உரமிட்ட முன்னோடிகளில் இவர் முக்கியமானவராவார் இக் கழகத்தின் தலைவராக பல சமயங்களில் செயற்பட்டு வந்த இவரின் முயற்சியினாலேயே இக்கழகம் நீதி ரீதியாகவும், தம்மை வளர்த்துக் கொண்டுள்ளது. 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் இப்பிரதேசம் முற்றுமுழுதாக அழிவடைந்த போது தன் வயதையும் உடல் நிலையையும் பொருட்படுத்தாது இளைஞரோடு இளைஞராகப் பலியாகிப் போன உடல்களைத் தேடுவதில் தீவிரமாகச் செயற்பட்டார்.

அன்றுமட்டுமல்லாது தொடர்ந்து வந்த நாட்களில் இவர் தன்னுடைய தனிப்பட்ட தொடர்புகளின் மூலம் இப்பிரதேச மக்களுக்குச் செய்த சேவையைக் கௌரவப்படுத்தும் விதத்தில் இலங்கை வங்கி இவரை தாய்லாந்து நாட்டிற்கு அனுப்பி வைத்ததுடன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் eye அலைவரிசையில் இவரை நேர்கண்டதும் இப்பிரதேசத்திற்கு கிடைத்த கௌரவமாகும்.

திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்திற்கு தொடர்ச்சியாக நன்கொடைகள் வழங்கும் இவர் இப்பிரதேசத்திலுள்ள ஒரு சில ஆலயங்களில் கணக்காய்வாளராகவும் இருந்து வருகின்றார். சிறந்த குரல்வளம் பெற்றுள்ள இவர் திருக்கோவில் முருகன் மீதும், மங்கைமாரியம்மன் மீதும் பாடல்கள் இயற்றிப் பாடியும் வந்துள்ளார். அதுமட்டுமன்றி திரு திவ்வியநாதன் அவர்கள் இயற்றி இலங்கையின் பல பாகங்களிலும் கிட்டத்தட்ட 50 தடவைகள் மேடையேற்றப்பட்ட "வெற்றித்திருமணம்" எனும் நவீன நாட்டுக் கூத்தில் மலையரசன் வேடமேற்று ஆடியுமுள்ளார். அத்தோடு இப்பிரதேசத்தில் நடைபெறும் சுற்றுப் போட்டிகளில் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு உறுதியான மத்தியஸ்தராகவும், கிறிக்கற் போட்டிகளுக்கு பக்கச் சார்பற்ற நடுவராகவும் செயற்பட்டுள்ளார். மேலும் அரச அரச, சார்பற்ற நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளுக்கு வளவாளராக கலந்து கொண்டு தன் அறிவையும், அனுபவங்களையும் பகிர்ந்து மற்றவர்களையும் வளப்படுத்தும் இவர் கல்முனைப் பிரிவில் சமாதான நீதிவானாகவும் இருந்து வருகின்றார்.

இவ்வாறு ஒரு உன்னத மனிதராகவும் வாழ்ந்து வாழ்வது எப்படி என வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் சேவையாற்றக்கூடிய காலமிருந்தும் தனது உடல் நிலையைக் கருதி இளைப்பாறியுள்ளார். முழுமையான தேகாரோக்கியம் இல்லாது சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் இம் மகத்தானவர் விரைவில் பூரண குணமடைந்து எம் சமூகத்திற்கு பல்லாண்டு வழிகாட்ட வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து 2012ஆம் ஆண்டிற்கான கலாசார விழா நிகழ்வில் இவரைப் பாராட்டுவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## 02. திரு.மாரிமுத்து கணபதிப்பிள்ளை - சமூகசேவை

1935ஆம் ஆண்டு ஆடிமாதம் 11ஆம் திகதி பிறந்த இவர் தம்பிலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருக்கோவில் பிரதேசத்தில் 30 வருடகாலமாக மரணச் சடங்குகளில் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்து வருகின்றார். தன்னலம் கருதாது இப்பகுதியிலுள்ள மரண வீடுகளுக்குச் சென்று ஆறுதல் வார்த்தைகள் உரைப்பதையும், மரணக் கிரியைகளை முன்னின்று நடாத்துவதையும் ஒரு சமூக சேவையாகச் செய்து வருகின்றார்.

இவருடைய சேவையைப் பாராட்டி 2005ஆம் ஆண்டு திரு.வ. ஜெயந்தன் அதிபரினால் சான்றிதழ், பொன்னாடை, பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும், 2011இல் மட்டக்களப்பு தன்னாமுனையில் நடைபெற்ற முதியோர் தின நிகழ்வில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் தன்னலம் கருதாது சேவையாற்றி வருகின்ற திரு. மாரிமுத்து கணபதிப்பிள்ளை அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டுவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 03. திரு.சின்னத்தம்பி செல்லத்துரை - சமூகசேவை

தம்பிலுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆசிரியராகவும், அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார். இவர் இப்பிரதேச அகில இலங்கை சமாதான நீதவானாகவும், ஸ்ரீ சத்தியசாயிபாவா அமைப்பின் தலைவராகவும், அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும், அரச சேவை ஓய்வூதியச் சங்கத்தின் தலைவராகவும் பல பதவிகளைப் பெற்று சமூக அந்தஸ்த்துடன் கல்வி வளர்ச்சிக்காகவும், சமூக ஒற்றுமைக்காகவும், மதங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காகவும் தன்நலம் கருதாது செயற்பட்டு வருகின்றார். இப்பிரதேசத்தில் மத்திய சபைத் தலைவராக பல ஆண்டுகள் கடமையாற்றியமைக்காக 2009ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 25தலைவர்களுக்குள் தலைவராக தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதி அவர்களினால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் திருக்கோவில் பிரதேசத்தில் தன்நலம் கருதாது சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற சின்னத்தம்பி செல்லத்துரை அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் "சமூக சேவை" துறைக்கான பாராட்டினை வழங்குவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த பாடசாலை மாணவர்களின் விபரங்கள்



முழுப்பெயர் : **செல்வி.தர்மதாச கபிக்சினி**

பிறந்த திகதி : **24-01-2000**

பாடசாலை : **திகோ/ தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம்**

தரம் : **06**

2010ஆம் ஆண்டு நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தினைப் பெற்ற மாணவி செல்வி. தர்மதாச கபிக்சினி அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டுவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.

---



முழுப்பெயர் : **செல்வி.மாலவன் சுபதா**

பிறந்த திகதி : **05-04-2000**

பாடசாலை : **திகோ/ தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயம்**

தரம் : **05**

2010ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-05 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலத்தில் முதலாம் இடத்தினைப் பெற்ற மாணவி செல்வி. மாலவன் சுபதா அவர்களை 2012ஆம் ஆண்டுக்கான கலாசார விழா நிகழ்வில் பாராட்டுவதில் திருக்கோவில் பிரதேச கலாசார பேரவை பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலை இலக்கியப் போட்டி முடிவுகள் - 2010

## பாடசாலைமட்டம்

### 01. கனிஷ்ட பிரிவு

*கட்டுரை*

1ஆம் இடம் செல்வி. பு. கினோஜிதா திகோ/ விநாயகபுரம் மகாவித்தியாலயம்
2ஆம் இடம் செல்வி. கீ. தர்ஜிதா திகோ/ தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம்
3ஆம் இடம் செல்வி. ஜ. கனோஜியா திகோ/ தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம்

*கவிதை*

1ஆம் இடம் செல்வி. பி. நிலாஜினி திகோ/திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம்
2ஆம் இடம் செல்வி. வ. சஜிலிக்கா திகோ/திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம்
3ஆம் இடம் செல்வி. த. உஜேனித்தா திகோ/திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம்

### 02. சிரேஷ்ட பிரிவு

*கட்டுரை*

1ஆம் இடம் செல்வி. ந. கீதா திகோ/ விநாயகபுரம் மகாவித்தியாலயம்
2ஆம் இடம் செல்வி. யோ. ரேகா திகோ/ விநாயகபுரம் மகாவித்தியாலயம்
3ஆம் இடம் செல்வி. வி. விகிர்த்தா திகோ/திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம்

*கவிதை*

1ஆம் இடம் செல்வன். ச. ராகுவன் திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
2ஆம் இடம் செல்வி. ச. சதீஸ்சினி திகோ/திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம்
3ஆம் இடம் செல்வி. ப. ஆரணி திகோ/திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம்

### 03. திறந்தமட்டம்

*கவிதை*

1ஆம் இடம் திரு. கா. வீரக்குட்டி — J.P. வீதி, 3ம் குறுக்கு, தம்பிலுவில் - 01

2ஆம் இடம் திரு. C.V.P. மாணிக்கம் — 31, பிரதான வீதி, சாகாமம், திருக்கோவில்

3ஆம் இடம் திரு. தம்பிமுத்து மகேந்திரா — 'தாயகம்' அம்மன் கோவில் முன் வீதி, தம்பிலுவில் - 02 கிழக்கு

*சிறுகதை*

1ஆம் இடம் திருமதி. யோகா யோகேந்திரன் — "யோகவாசா" கடற்கரை வீதி, திருக்கோவில் - 01

*பாடலாக்கம்:*

திருமதி. ஜெகதீஸ்வரிநாதன் — கிராமசபை வீதி, தம்பிலுவில் - 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலை இலக்கியப் போட்டி முடிவுகள் - 2011

**பாடசாலைமட்டம்**

**01. கனிஷ்ட பிரிவு**

*கையெழுத்துப் போட்டி:*

1ஆம் இடம் செல்வி. சு. சதுர்ஷிகா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
2ஆம் இடம் செல்வி. க. டினோசிகா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
3ஆம் இடம் செல்வி. க. லிதுர்ஷனா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

*கட்டுரை:*

1ஆம் இடம் செல்வி. நா. கஜேந்தினி திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
2ஆம் இடம் செல்வி. அ. அநிற்றா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
3ஆம் இடம் செல்வி. இ. தனுஜா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

**02. சிரேஷ்ட பிரிவு**

*கட்டுரை:*

1ஆம் இடம் செல்வி. ம. துஷாயினி திகோ/ திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம்
2ஆம் இடம் செல்வி. ச. ஷாழினி திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
3ஆம் இடம் செல்வி. இ. நிறோஜினி திகோ/ திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயம்

*கவிதை:*

1ஆம் இடம் செல்வி. நா. நிரஞ்சனா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
2ஆம் இடம் செல்வன். ச. சலன்ராஜ் திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
3ஆம் இடம் செல்வி. ந. டிசாந்தினி திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

*கவிதை பாடல் போட்டி:*

1ம் இடம் செல்வி. இ. ஹேமகலா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
2ம் இடம் செல்வன். கி. சுகன்யா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

*இலக்கியம் நயத்தல்:*

1ஆம் இடம் செல்வி. ச. ஷாழினி திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
2ஆம் இடம் செல்வி. கீ. பிரதீபா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்
3ஆம் இடம் செல்வன். மு. தினேஷ் திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

*சிறுகதை:*

1ஆம் இடம் செல்வி. ஆ. ஜனுசியா திகோ/ தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்

**திறந்தமட்டம்**

*பாடலாக்கம்:*

1ஆம் இடம் திரு. ச. ராகுலன் சர்வோதய வீதி, தம்பிலுவில் - 01
2ஆம் இடம் திரு. பா. சுதாகரன் பிரதான வீதி, தம்பட்டை - 02

*விமர்சனப்போட்டி:*

1ஆம் இடம் கா. வீரக்குட்டி J.P. வீதி, 3ம் குறுக்கு, தம்பிலுவில் - 01

*கவிதை:*

1ஆம் இடம் செல்வி. மு. ஜயகௌரி 17, மூர்த்தி வீதி, திருக்கோவில் - 02

*சிறுகதை:*

1ஆம் இடம் திரு. பா. சுதாகரன் பிரதான வீதி, தம்பட்டை - 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் பிரதேச செயலகத்தில் உதவி அரசாங்க அதிபர்களாகவும், பிரதேச செயலாளர்களாகவும் கடமையாற்றியோரின் விபரங்கள்.



அமரர். S.V.R. வேதநாயகம் (SLAS)
உதவி அரசாங்க அதிபர்
1978.08.19 - 1990.09.01 வரை



திரு. C.T. சச்சிதானந்தம்
உதவி அரசாங்க அதிபர்
1990.10.02 - 1991.08.03 வரை



திரு. P. இராஜசெல்வகுமார் (SLAS)
பிரதேச செயலாளர்
1991.09.04 - 1996.07.24 வரை



திரு. S. அமலநாதன் (SLAS)
பிரதேச செயலாளர்
1996.12.25 - 2002.01.22 வரை



அமரர். A.K.. தவராஜா (SLAS)
பிரதேச செயலாளர்
2002.02.15 - 2005.04.15 வரை



திரு. S. கரன் (SLAS)
பிரதேச செயலாளர்
2005.04.16 - 2006.01.29 வரை



திரு. V. அழகரெத்தினம் (SLAS)
பிரதேச செயலாளர்
2006.01.30 - 2011.12.31 வரை



திரு. Dr.M. கோபாலரெத்தினம் (SLAS-1)
தற்போதைய
பிரதேச செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதேச செயலாளர் திரு.மு.கோபாலரெத்தினம் அவர்கள் முதல் முறையாக 2012-01-02ஆம் திகதி திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்தபோது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பியசேன, அமைச்சர் நவரெத்தினராசா, மாகாண சபை உறுப்பினர் செல்வராசா குழுவினர் மூலம் வரவேற்கப்படும் போது



ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் ஆலய மலைக் கோவிலில் அடிக்கல் நடும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய உத்தியோகத்தர் திருவிழாவின் போது
பிரதேச செயலாளர், அலுவலக உத்தியோகத்தர்கள் கிரிகையில் கலந்து கொண்ட காட்சி



மீள்குடியேற்ற அமைச்சரும், பிரதி அமைச்சரும்
திருக்கோவில் பிரதேசத்திற்கு வருகை தந்தபோது பிரதேச செயலாளரினாலும்
ஏனைய உத்தியோகத்தர்கள், பொது மக்களினால் வரவேற்கப்படும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெண்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி வழங்கிய போது




கிராம சேவை உத்தியோகத்தர் பாராட்டு வழங்கிய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் போது திருக்கோவில் பிரதேசத்திலுள்ள டெங்கு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டு துப்பரவு செய்யப்படுவதைக் காணலாம்.




திவிநெகும திட்டத்தின் கீழ் பயிர் விதைகள் வழங்கப்பட்ட போது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட தேவையுடையவர்களுக்கான பயிற்சி வழங்கிய போது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம் திருக்கோவில்

## அலுவலக உத்தியோகத்தர்கள் விபரம் - 2012

| | |
|---|---|
| 01. திரு. Dr.M. கோபாலரெத்தினம் | பிரதேச செயலாளர் |
| 02. திரு. K. கேசகன் | கணக்காளர் |
| 03. திரு. V. நவீரதன் | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் |
| 04. திருமதி. கமலாவதி பிறேமாங்கதன் | நிர்வாக உத்தியோகத்தர் |
| 05. திரு. D.S. றோகணபெரேரா | பதவியணி உதவியாளர் |
| 06. திரு. T. மோகனராஜா | பிரதம பொது முகாமைத்துவ உதவியாளர் |
| 07. திருமதி. G. குழந்தைவடிவேல் | பொது முகாமைத்துவ உதவியாளர் II |
| 08. திரு. A. சசீந்திரன் | பொது முகாமைத்துவ உதவியாளர் II |
| 09. திரு. S. நடேசன் | பொது முகாமைத்துவ உதவியாளர் II |
| 10. திரு. T. இராஜரெட்ணம் | பொது முகாமைத்துவ உதவியாளர் II |
| 11. திருமதி. கஜனி பேரின்பம் | பொது முகாமைத்துவ உதவியாளர் II |
| 12. திரு. K. விநாயகமூர்த்தி | பொது முகாமைத்துவ உதவியாளர் II |
| 13. திருமதி. R. உதயதாஸ் | பொது முகாமைத்துவ உதவியாளர் II |
| 14. திரு. T. சவுந்தரராஜன் | பொது முகாமைத்துவ உதவியாளர் II |
| 15. திரு. S. ஜெயாநந் | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 16. திருமதி. L. ஜெயதாஸ் | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 17. செல்வி. S. பங்கயமலர் | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 18. செல்வி. T. ரமணி | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 19. திரு. T. பிரபு | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 20. செல்வி. S. கலாஜினி | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 21. செல்வி. R. சுஹாசினி | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 22. செல்வி. M. ஜயகௌரி | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 23. திரு. K. திரிலோகநாதன் | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 24. திருமதி. S. பார்த்திபன் | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 25. திரு. R. பாலையா | பொது முகாமைத்துவ உதவியாளர் III |
| 26. திரு. S. வில்சன்சேகர் | அலுவலகப் பணியாளர் |
| 27. திரு. K. இராசதுரை | அலுவலகப் பணியாளர் |
| 28. திரு. V. ஜெயானந்தன் | அலுவலகப் பணியாளர் |
| 29. திரு. R. ரவி | அலுவலகப் பணியாளர் |
| 30. திரு. T. நித்தியானந்தன் | அலுவலகப் பணியாளர் |
| 31. திரு. A.P. துஸ்யந்தன் | அலுவலகப் பணியாளர் |
| 32. திருமதி. T. வனஜா | அலுவலகப் பணியாளர் |
| 33. திரு. S. குலோதுங்கன் | சாரதி |
| 34. திரு. S. வசந்தகுமார் | காவலாளி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிக்கள உத்தியோகத்தர்கள் விபரம் - 2012

| | |
|---|---|
| 01. திரு. S. சண்முகம் | சமூகசேவை உத்தியோகத்தர் |
| 02. திரு. A.L. ரஞ்சன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 03. செல்வி. T. ராதிகா | கலாசார உத்தியோகத்தர் |
| 04. திரு. P. கேபிகாந்த் | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 05. திரு.K. சசிகரன் | சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் |
| 06.திரு. V.மணிசிங்கம் | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் |
| 07. திரு. K. இலக்கணகுமார் | விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| 08. ஜனாப். M.H.M. பாரூக் | இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் |
| 09. திருமதி. லோஜினி கோகுலன் | குடியேற்ற உத்தியோகத்தர் |
| 10. திரு. S. சுயாந்தன் | குடியேற்ற உத்தியோகத்தர் |
| 11. திரு. G. ஜீவானந்தம் | குடியேற்ற உத்தியோகத்தர் |
| 12. திரு. S. சவரி | வீட்டுத் திட்ட உத்தியேதகர்தர் |
| 13. திரு. V. பாஸ்கரன் | விளையாட்டு உத்தியோகத்தர் |
| 14. திரு. K. சுரேஸ்குமார் | அபிவிருத்தி உதவியாளர் |
| 15. திரு. K. சாந்தகுமார் | உளவளதுணை உதவியாளர் |
| 16. திரு. L. சந்திரபவன் | மனிதவள அபிவிருத்தி உதவியாளர் |
| 17. திரு. K. பாஸ்கரன் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| 18. திருமதி. நிரோஜினி மருதமாறன் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| 19. திரு. S. மகேஸ்வரராஜா | வெளிக்களப்போதனாசிரியர் |
| 20. திரு. S. உதயகுமார் | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர் |
| 21. திரு.T. சிவகுமார் | வெளிக்கள உதவியாளர் |
| 22. திருமதி. ராதை சிவகுரு | தையல்போதனாசிரியர் |

## கிராம சேவை உத்தியோகத்தர்கள் விபரம் - 2012

| | |
|---|---|
| 01. திரு. K. இராஜரெட்ணம் | கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர் |
| 02. திரு. K. பாலசுப்ரமணியம் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 03. திரு. A. ஜீவேந்திரகுமார் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 04. திரு. V. செல்லத்துரை | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 05. திரு. A. மனோகரன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 06. திரு. A. கந்தசாமி | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 07. திரு. V. வீரமணி | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 08. திரு. P. திருத்தங்கவேல் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 09. திரு. S. பார்த்தீபன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 10. திரு. S. சுயக்குமார் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 11. திரு. U. உதயகுமார் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 12. திரு. T. பிரபாகரன் | கிராமசேவை உத்தியோகத்தர் |
| 13. திரு. T. தமிழ்வேந்தன் | கிராமசேவை உத்தியோகத்தர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி உத்தியோகத்தர் விபரம் - 2012

| | |
|---|---|
| 01. திரு. வ. அரசரெத்தினம் | சமுர்த்தி தலைமை முகாமையாளர் |
| 02. திரு. H.M. அப்துல் அலீல் | சமுர்த்தி வங்கி முகாமையாளர் |
| 03. திருமதி. த. கமலப்பிரபா | சமுர்த்தி முகாமையாளர் |
| 04. திரு. I. ஞானரெத்தினம் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (மகாசங்கம்) |
| 05. திரு. S.P. சீலன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூகப்பாதுகாப்பு) |
| 06. திருமதி. லோகாம்பிகை இராசேந்திரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 07. திருமதி. சசிகலா தர்மராசா | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 08. திரு. T. விஜிதரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 09. திரு. K. ஆனந்தராசா | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 10. திரு. K. சுதாகரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 11. திருமதி. ரமேஸ்வரன் சிவாஜினி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 12. திருமதி. ஆனந்தராணி கோணேசமூர்த்தி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 13. திரு. K. இராஜதுரை | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 14. திரு. K. தெய்வேந்திரன்பிள்ளை | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 15. திரு. K. சசுபதி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 16. திருமதி. ராஜினி சாந்தேஸ்பரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 17. திருமதி. உதேகாசமந்தி பற்குணன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 18. திருமதி. சத்தகுமாரி ஜெயச்சந்திரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 19. திருமதி. சுபாதினி ரவிகரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 20. செல்வி. கனகசபை விஜயகாந்தம் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 21. திருமதி. புவனேஸ்வரி அருள்ஜோதி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 22. திருமதி. விவேகானந்தி உதயச்சந்திரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 23. செல்வி. ஜோசப் புஸ்பவதி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 24. திருமதி. திரேசாமலர் ரவீந்தின் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 25. திருமதி. வசந்தமலர் குணபாலசிங்கம் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 26. திருமதி. நளாயினி நந்தகுமார் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 27. திரு. K. நேசநாதன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 28. திரு. S. சிவகுமார் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 29. திரு. I. பிரபாகரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 30. திரு. K. ரமேஸ்வரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 31. திரு. M. பாலகிருஸ்ணன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 32. திரு. R. சத்குருநாதன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 33. திரு. V. சிவநேசராசா | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 34. செல்வி. கிருஸ்ணப்பிள்ளை கமலேஸ்வரி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 35. திரு. P. ரவிதாசன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 36. திரு. M. சாந்தசிறி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 37. திரு. K. சிவஞானமூர்த்தி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 38. திருமதி. அமுதா சிறிகணேஸ் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 39. திருமதி. வசந்தகுமாரி ஜெயராசா | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுனர்களின் விபரங்கள் - 2012

| | முழுப்பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01. | திருமதி. சரோஜா செல்வக்குமார் | பத்மன் வீதி, தம்பிலுவில் - 2 |
| 02. | திரு. ம. கண்ணதாஸன் | தம்பிமுத்து வீதி, தம்பிலுவில் - 2 |
| 03. | திருமதி. சுமித்திரா திலீபன் | ஏ.பி.சி. வீதி, தம்பிலுவில் - 1 |
| 04. | திருமதி. இராஜேஸ்வரி குகராஜன் | கிராம வீதி, தம்பிலுவில் - 2 |
| 05. | செல்வி. க. சறோசாதேவி | சித்திவிநாயகர் வீதி, தம்பிலுவில் - 2 |
| 06. | திருமதி. உதயகுமாரி முகுந்தன் | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 07. | செல்வி. ந. கேமலதா | கலைமகள் வீதி, தம்பிலுவில் - 1 |
| 08. | திருமதி. ஸ்ரீசத்தியா ராஜபவன் | மகாவித்தியாலய வீதி, தம்பிலுவில் - 1 |
| 09. | திரு. சண்முகரெத்தினம் ரமேஸ் | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 10. | திரு. சிவகுரு கோகுலதாஸ் | முனை வீதி, தம்பிலுவில் - 1 |
| 11. | திருமதி. ஜெயந்தினி பரமெஸ்வரன் | நாவலடி வீதி, திருக்கோவில் - 2 |
| 12. | திருமதி. கவிதா கிருதாஸன் | அரியநாயகம் வீதி, திருக்கோவில் - 2 |
| 13. | திருமதி. டிசாந்தா அரசரெத்தினம் | வாக்கிராசா வீதி, திருக்கோவில் - 3 |
| 14. | திரு. தருமலிங்கம் ஜெயச்சந்திரன் | சந்தைமுன் வீதி, விநாயகபுரம் - 3 |
| 15. | திருமதி. ஜெயசிறி தவேந்திரன் | பழைய தபாலகவீதி, விநாயகபுரம் - 2 |
| 16. | திருமதி. ஜெயதர்சினி நவீந்திரராஜா | பாடசாலை வீதி, விநாயகபுரம் - 3 |
| 17. | திரு. யோகராசா பிரபாகரன் | பாடசாலை வீதி, விநாயகபுரம் - 4 |
| 18. | திரு. கதிரமலை கலைமாறன் | சந்தை மன் வீதி, விநாயகபுரம் - 3 |
| 19. | திரு. தம்பிராசா எழிலரசன் | கோம்பைக்கரச்சி கஞ்சிகுடியாறு |
| 20. | திரு. துரைராசா துசிக்குமார் | சங்கன் விதானை வீதி, தம்பிலுவில் - 2 |
| 21. | திரு. முருகமூர்த்தி சுதாகரன் | சிவன்கோவில் வீதி, விநாயகபுரம் - 4 |
| 22. | திரு. யோகராசா யோகரூபன் | சந்தை முன் வீதி, விநாயகபுரம் - 3 |
| 23. | முருகுப்பிள்ளை முரளீஸ்வரன் | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 24. | திருமதி. சுமிதா ஜெயப்பிரபா | விசி.வீதி, தம்பிலுவில் - 2 |
| 25. | திருமதி. சுமதினி சுசிதரன் | மகா வித்தியாலய வீதி, தம்பிலுவில் - 2 |
| 26. | திரு. செல்வராஜா வேலவராஜன் | விசி.வீதி, தம்பிலுவில் - 2 |
| 27. | திரு. சிவராமமூர்த்தி ஜனார்த்தனன் | கலைமகள் வித்தியாலய வீதி, தம்பிலுவில் - 2 |
| 28. | திரு.லோச்சிப்போடி விஜயன் | ஆலையடி வீதி, தம்பிலுவில் - 2 |
| 29. | திரு. இராசசுந்தரம் துதிதாஸன் | ஆலையடி வீதி, தம்பிலுவில் - 2 |
| 30. | திரு.சுப்பிரமணியம் கார்த்திகேசு | 1ம் குறுக்கு வாக்கிராசா வீதி, திருக்கோவில் - 3 |
| 31. | திருமதி. சங்கரி கிருஸ்ணகுமார் | ஆலையடி வீதி, தம்பிலுவில் - 2 |
| 32. | திருமதி. பர்மிலா தருமரெத்தினம் | ஆலையடி வீதி, தம்பிலுவில் - 2 |
| 33. | பிரான்சிஸ் யோசப்பின் கோல்ட்டா | நாவலடி வீதி, திருக்கோவில் - 2 |
| 34. | திருமதி. நளினி வாகீசன் | தியோட்டர் வீதி, தம்பிலுவில் - 2 |
| 35. | செல்வி. நடேசபிள்ளை கலைவாணி | விபுலானந்தா வீதி, திருக்கோவில் - 4 |
| 36. | திரு. கணேசானந்தரெட்ணம் சுதர்சன் | கதிர்காம வீதி, திருக்கோவில் - 1 |
| 37. | திரு. மனோகரன் விஜயமோகன் | பழைய தபாலக வீதி, விநாயகபுரம் - 2 |
| 38. | திரு. கந்தசாமி புவனேந்திரராசா | சர்வோதய வீதி, தம்பிலுவில் - 1 |
| 39. | திரு. பொன்னையா கமலேஸ்வரன் | மகா வித்தியாலய வீதி, தம்பிலுவில் - 2 |
| 40. | செல்வி. கணேசபிள்ளை வினோ | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 41. | திருமதி. கிருஸாந்தி தஜிதரன் | கொஸ்தாப்பர் வீதி, தம்பிலுவில் - 2 |
| 42. | திருமதி. சிவப்பிரியா சுதாகரன் | ஏபிசி வீதி, தம்பிலுவில் - 2 |
| 43. | திருமதி. கலைவாணி பிரதீபன் | சந்தை முன் வீதி, விநாயகபுரம் - 3 |
| 44. | திருமதி. நிஸாந்தி தயானந்தன் | சரவணமுத்து வீதி, தம்பிலுவில் - 2 |
| 45. | திருமதி. தேவதர்சினி பவன் | பிரதான வீதி, திருக்கோவில் - 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 46. | திருமதி. மயில்வாகனம் சுசாந்தன் | மத்திய வீதி, விநாயகபுரம் - 1 |
| 47. | திரு. இராசதுரை இராஜபவன் | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 48. | திரு. வன்னமணி பிரதீபன் | வீசி வீதி, தம்பிலுவில் - 2 |
| 49. | திரு. பத்மநாதன் சுரேஸ் | பழைய தபாலகவீதி, விநாயகபுரம் - 4 |
| 50. | திரு. சுந்தரலிங்கம் திலகராஜ் | திருநாவுகரசு குருகுலம் |
| 51. | திரு. மயில்வாகனம் திபாகரன் | கடற்கரை வீதி, திருக்கோவில் |
| 52. | திரு. சுப்பிரமணியம் ரவீந்திரன் | ஆலையடி வீதி, விநாயகபுரம் - 3 |
| 53. | திரு. கனகசபை தயாபரன் | சரஸ்வதி வித்தியாரய வீதி, தம்பிலுவில் - 2 |
| 54. | திரு. மயில்வாகனம் திருபரன் | சித்திவிநாயகர் வீதி, தம்பிலுவில் - 2 |
| 55. | திரு. நடராசா ருசாந்தன் | கோரைக்களப்பு வீதி, விநாயகபுரம் - 3 |
| 56. | திரு. சண்முகம்பிள்ளை சதீஸ் | இளையதம்பி வீதி, தம்பிலுவில் - 2 |
| 57. | திரு. நடேசு தயாநந்தம் | சிவன்கோவில் வீதி, தம்பிலுவில் - 2 |
| 58. | திரு. யோகராசா யோகேந்திரன் | மகாவித்தியாலய வீதி, தம்பிலுவில் - 2 |
| 59. | திரு. லோகநாயகம் சிவலோகன் | ஏ.பி.சி. வீதி, தம்பிலுவில் - 1 |
| 60. | திரு. சிவஞானசேகரம் சசிகுமார் | ஆதவன் வீதி, தம்பிலுவில் - 1 |
| 61. | திரு. மோகன் றுபேஸ் | பிரதான வீதி, தம்பட்டை - 1 |
| 62. | திரு. பசுபதி பிரதீபன் | மத்திய வீதி, விநாயகபுரம் - 1 |
| 63. | திரு. நித்தியானந்தராசா பிரசாந்த் | நீதிமன்ற வீதி, திருக்கோவில் - 1 |
| 64. | திரு. செல்வராசா சுரேஸ்காந் | பிரதான வீதி, தம்பட்டை - 1 |
| 65. | திரு. தட்சனாமூர்த்தி தஜிதரன் | கொஸ்தாப்பர் வீதி, தம்பிலுவில் - 1 |
| 66. | திரு. சுந்தரராஜன் சுதாகரன் | தியேட்டர் வீதி, தம்பிலுவில் - 2 |
| 67. | திரு. சந்தனதாஸ் நாகராஜன் | இராமசாமி வீதி, திருக்கோவில் - 4 |
| 68. | செல்வி. பேரின்பராசா நிறோஜினி | வில்லியம்பிள்ளை வீதி, தம்பிலுவில் - 1 |
| 69. | திருமதி. சந்ரகுமார் சிவப்பிரியா | கலைமகள் வித்தியாலய வீதி, தம்பிலுவில் - 2 |
| 70. | செல்வி. குழந்தைவேல் கலைவதனி | பிரதான வீதி, திருக்கோவில் - 2 |
| 71. | செவ்வி. தங்கராசா ஜீவதர்சினி | வீ.சி. வீதி, தம்பிலுவில் - 2 |
| 72. | செல்வி. கோபாலராசா வசுமதி | மண்டானை திருக்கோவில் |
| 73. | செல்வி. கந்தசாமி ஜினிதா | வீ.சி. வீதி, தம்பிலுவில் - 2 |
| 74. | செல்வி. இராமலிங்கம் சுதர்சினி | வேல்முருகு வீதி, திருக்கோவில் |
| 75. | செல்வி. நல்லதம்பி துசாந்தினி | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 76. | செல்வி. விநாயகமூர்த்தி தனுசியா | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 77. | திருமதி. சுபாஸ்கரன் ஜீவிதா | தம்பிமுத்து வீதி, தம்பிலுவில் - 2 |
| 78. | செல்வி. நவரெட்ணம் நவப்பிரியா | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 79. | திருமதி. ரூபதர்சினி விமலசேகரன் | எல்லை வீதி, தம்பட்டை - 2 |
| 80. | செல்வி. சம்புநாதன் செல்வமலர் | பழைய தபாலக வீதி, விநாயகபுரம் - 2 |
| 81. | செல்வி. சண்முகலிங்கம் தயாநிதி | தங்கவேலாயுதபுரம் |
| 82. | திருமதி. ஜெயாநிதி மயூரதன் | காயத்திரிகிராமம், திருக்கோவில் - 4 |
| 83. | செல்வி. புவிராஜகீர்த்தி விதுசலா | பிரதான வீதி, தம்பிலுவில் - 2 |
| 84. | திருமதி. நிலந்தினி கவீந்திரன் | மில்லடி வீதி, தம்பிலுவில் - 2 |
| 85. | செல்வி. ஞானேந்திரன் கார்த்திகா | பிரதான வீதி, தம்பட்டை - 2 |
| 86. | திரு. ஆறுமுகம் ஜெயச்சந்திரன் | விஷ வைத்தியர்வீதி, கோளாவில்-2, அக்கரைப்பற்று. |
| 87. | திரு. தியாகராஜா மலர்ப்பிரியன் | வில்லியம்பிள்ளை வீதி, தம்பிலுவில்-1, கிழக்கு. |
| 88. | திருமதி. ராஜினி யோகேந்திரன் | பிரதான வீதி, விநாயகபுரம்-4 |
| 89. | திரு. தியாகராஜா செல்வகுமார் | 153, பழைய தபாலக வீதி, விநாயகபுரம் |
| 90. | திருமதி. ஞானரேகா சந்திரமோகன் | சுதா வீதி, தம்பிலுவில் - 02, மேற்கு. |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட தேசிய நடமாடும் சேவையில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. அசங்க அபேவர்தன ஏனைய அதிகாரிகள் வரவேற்கப்படும் போது







அம்பாறை மாவட்டத்தில் தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு மற்றும் சாகாமம் ஆகிய கிராமங்களில் மக்களை மீள் குடியேற்றம் செய்வது சம்பந்தமான பொதுக் கூட்டம் திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம். கோபாலரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. இக் கூட்டத்திற்கு வருகை தந்த மீள் குடியேற்ற அமைச்சர் குணரெட்ன வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், பொ. பியசேன எம்.பி. மாகாண சபை உறுப்பினர் எஸ். செல்வராசா மற்றும் பிரதேச சபை தவிசாளர் பிரதேச சபை உறுப்பினர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வரவேற்று அழைத்து வரப்படுகின்றனர்.

படம் : திருக்கோவில் நிருபர் எஸ். கார்த்திகேசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் வாரமஞ்சரி
2012ம் வருடம் மே மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை



திருக்கோவில் சங்கமன்கண்டி பிள்ளையார் ஆலயத்தின் அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கிழக்கு மாகாண அமைச்சர் ரீ. நவரட்ணராஜா, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் என். செந்தீபன், மாகாண சபை உறுப்பினர் எஸ். செல்வராசா, திருக்கோவில், ஆலையடிவேம்பு, காரைதீவு ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்களான க. புவிராஜன், கே. இரத்தினவேல், சே. இராசையா திருக்கோவில் பிரதேச செயலாளர் டொக்டர் எம். கோபாலரட்ணம் ஆகியோர் ஆலயத்தின் நிர்வாக சபையினரால் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதனைப் படத்தில் காணலாம். *படம்: அக்கரைப்பற்று மத்திய நிருபர்*



மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்றபோது கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சீ. செல்வராசா, பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் ஆகியோர் உதவித் தொகையை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- காரைதீவு நிருபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் இவ்வருடம் முதன் முறையாக நடைபெறுகின்ற கலாசார விழா "விளைநிலம்" சிறப்பு மலர் வெளியீடானது சிறப்புற நடைபெற பலரும் பொருளுதவி, பணவுதவி என பல்வேறு வழிகளிலும் உதவிகளை நல்கியுள்ளனர். அந்த வகையிலே.

கலாசார விழாவினை நடாத்துவதற்கு எம்மை ஊக்கப்படுத்தி வழிநடத்திய எமது பிரதேச செயலாளர் திரு. Dr.M. கோபாலரெத்தினம் அவர்கள்.

கலாசார விழா சிறப்பான முறையில் நடைபெறும் பொருட்டு எம்மோடு பக்கபலமாய் இருந்து செயற்பட்ட கலாசார பேரவை உறுப்பினர்கள்.

சிறப்பு மலர் வெளியீட்டிற்காக தங்களை முழுமையாக ஈடுபடுத்தி ஆக்கங்களைத் தெரிவு செய்து அதனை அச்சிட வடிவமைத்துத் தந்த மலர் வெளியீட்டுக் குழுவினர்.

அனுசரணையாளர்களாக இருந்து நிதியுதவி வழங்கிய கனடாவில் வசித்து வருகின்ற திரு.S.P.கனகசபாபதி ,திரு.P.சுதாகரர், எமது பிரதேசத்திலுள்ள மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தகசங்க அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், தனிநபர்கள், நலன் விரும்பிகள்.

சிறப்பு மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெருந்தகைகள், கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் வழங்கிய கவிஞர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள்.

விழா சிறப்புற நடைபெறுதற் பொருட்டு அவ்வப்போது ஆலோசனைகள் கருத்துக்களை வழங்கிய கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், செயலக உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுனர்கள்.

விழாவிலே கலந்து சிறப்பித்த பிரதம, சிறப்பு, விசேட அதிதிகள், இலக்கிய ஆர்வலர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள்.

விழாவிற்கு சிறந்த கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துதந்த பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மகேஷாஞ்சலி நர்த்தனாலய கலாமன்றத்தினர், மற்றும் நிகழ்ச்சியில் பங்கு பற்றிய மாணவர்கள்.

சிறப்பு மலரினை உரிய காலத்திற்கு அச்சிட்டுத் தந்த கல்முனை கோல்டன் அச்சக உரிமையாளர், ஊழியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். - நன்றி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல்டன் அச்சகம், கல்முனை. 067-2223939